77A

இவ்வறிக்கையின் சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்புகள் தனித்தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பருவப்பத்திரு இல. 1 – 2000

# பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

**மார்ச்சு 2000**

—

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 115.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**1 - H 7108**

## சனாதிபதி ஆணைக்குழுவும் அதன் பிரதான உத்தியோகத்தர்களும்



இடமிருந்து வலமாக – திரு. ஜி. கே. ஜி. பெரேரா (செயலாளர்), திரு. எஸ் சி. பத்திரண (சி. பொஅ), திரு. யஸந்த கோதாகொட (அரச வழக்குரைஞர்), திரு. ஆர். ஐ. ஒபேசேகரா, ச. வ., கௌரவ நீதியரசர் டீ. ஜயவிக்கிரமா (மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி – தவிசாளர்), கௌரவ என். ஈ. திசாநாயக்கா (மேல் நீதிமன்றத்தின் நீதிபதி – உறுப்பினர்), திரு. சரத் ஜயமான்ன (அரச வழக்குரைஞர்), திரு. ரீ. வி. சுமணசேகரா (பி. பொலிசுமா அதிபர்), திரு. எச். எச். எம். ஆர். பிரேமரத்னா (பொ. அத்தியட்சகர்).

PL 15169 - 100 (2025/03)

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம் I | பதிவுக் குறிப்பு விடயங்கள் | 7 |
| அத்தியாயம் II | தனிநபர்கள் சிலர் பற்றிய அறிமுகம் | 14 |
| | * கீர்த்தி அத்நபத்து | 14 |
| | * நளின் தெல்கொட | 14 |
| | * எம். எம். ஆர் (மெரில்) குணரத்னா | 15 |
| | * அஜித் ஜயசிங்கா | 15 |
| | * ஏர்னஸ்ட் பெரேரா | 15 |
| | * டக்ளஸ் பீரிஸ் | 15 |
| | * ரோஹித பிரியதர்ஸனா | 19 |
| | * ரணில் விக்கிரமசிங்கா | 20 |
| அத்தியாயம் III | பாதுகாப்பு சீரழிதலும் வன்முறைகள் அதிகரித்தலும் | 21 |
| | * மக்கள் விடுதலை முன்னணி | 21 |
| | * ஜே. வி. பி. தடை செய்யப்படுகின்றது. | |
| | * வன்முறை ஆரம்பமாகின்றது | 25 |
| | * எதிர் நடவடிக்கை | 28 |
| | * ஜே. வி. பி. கட்டுப்படுத்தப்படுகின்றது | 30 |
| அத்தியாயம் IV | பட்டலந்த வீடமைப்புத் திட்டம் | 32 |
| அத்தியாயம் V | சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்கள் மற்றும் சித்திரவதைக் கூடங்கள் ஆகியவற்றின் நிறுவுகையும் பராமரிப்பும் | 39 |
| | * பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை ஒதுக்குதல் | 39 |
| | * சட்டரீதியற்ற நோக்கங்களுக்காக பட்டலந்த வீடுகளைப் பயன்படுத்துவதற்கான காரணம் | 50 |
| | * ஆட்களை சட்டரீதியற்ற முறையில் தடுத்து வைத்து சித்திரவதை செய்ய பட்டலந்த வீடுகளை பயன்படுத்தல் | 53 |
| | * பலியானவர்கள் – | |
| | ஏர்ல் சுஜீ பெரேரா | 55 |
| | வாசல ஜயசேகரா | 61 |
| | தலேரத்ன முதலிகே பந்துல | 66 |
| | அத்துரனகே விமல் அத்தநாயக்கா | 72 |
| | * அஜித் ஜயசிங்கா | 75 |
| | * திஸ்ஸ பலிபானே | 77 |

பக்கம்

* என்னிறந்த ஏனைய பலியானவர்கள் 77
* பொறுப்புடையவர்கள் 78
* சட்டரீதியற்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட ஏனையோர் 80
* வின்சென் பெர்னாந்து 80
* பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடைபெற்ற கூட்டங்கள் 86
* சட்டத்தரணி விஜயதாச வியனாராச்சி 92

**அத்தியாயம் VI** **சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதல்** 98

* அதைத் தொடர்ந்த புலனாய்வுகள் 101

**அத்தியாயம் VII** **உப பரிசோதகர் ரோஹித பிரியதர்ஸனா காணாமல் போதல்** 108

* பின்னணி 108
* காணமல் போதல் 110

**அத்தியாயம் VIII** **உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்காவின் கைதும், தடுத்து வைப்பும்** 119

* பிரியதர்ஸனாவை தேடுதல் 119
* ஜயசிங்கா கைது செய்யப்படுதல் 120
* ஜயசிங்காவின் தடுத்து வைப்பு ஆரம்பமாதல் 123
* ஜயசிங்கா விடுவிக்கப்படுதல் 126
* ஜயசிங்காவும் பிரியதர்ஸனாவும் நாசகாரர்களுடன் தொடர்பு 127
* ஜினேயின் முக்கியத்துவம் 127
* ஜினே கைது செய்யப்படுதல் 128
* ஜினே குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல் 129
* தாக்குதலில் பிரியதர்ஸனாவும் ஜயசிங்காவும் சம்பந்தப்பட்டிருத்தல் 130
* கலுவாவும், சாந்தலாலும் 133
* எந்நோக்கத்துக்காகக் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள் 134
* ஜினேவுக்கு என்ன நடந்தது 136
* ஜினே காணாமல் போதல் 138
* ஜினேவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு சமூகமளிக்கமுடியாமல் தீர்ப்பு வழங்கப்பெற்றவர் 141

**அத்தியாயம் IX** **காண்புகள்** 145

* காண்புகளின் சாரம்சம் 145
* கருத்துரைகளும் அவதானங்களும் 150
* முடிவுரைக் குறிப்புகள் 157

| | | பக்கம் |
|---|---|---|
| **அத்தியாயம் X** | **விதப்புரைகள்** | 160 |
| இணைப்பு அ | எழுத்தாணை | 162 |
| இணைப்பு ஆ | தகவலுக்காக அறிவித்தல்கள் கோரப்படல் | 190 |
| இணைப்பு இ | சாட்சியாளர்கள் சார்பில் தோன்றிய வழக்குரைஞர்கள் | 193 |
| இணைப்பு ஈ | புலனாய்வுக் குழுக்கள் | 194 |
| இணைப்பு உ | ஆணைக்குழுவின் பதவியினர் | 195 |
| இணைப்பு ஊ | மாதிரி அழைப்பாணைகள் | 196 |
| இணைப்பு எ | சாட்சியாளர்களின் பட்டியல் | 198 |
| இணைப்பு ஏ | ஆவணங்கள் மற்றும் சமர்ப்பிப்புகள் என்பனவற்றின் பட்டியல் | 200 |

## அத்தியாயம் I
## பதிவுக்குறிப்பு விடயங்கள்

1950 ஆம் ஆண்டின் 8 ஆம், 1953 ஆம் ஆண்டின் 40 ஆம், 1955 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கீங்களினால் திருத்தப்பட்டவாறான 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் பிரிவு 2 இன் நியதிகளின்படி, 1995 செத்தெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட எழுத்தாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள்பற்றி விசாரணைசெய்து, அறிக்கை தயாரிப்பதற்கு இவ்வாணைக்குழுவினை நியமிப்பதற்கு மேதகையீர் களிகூர்ந்துள்ளீர்கள். சம்பந்தப்பட்ட விசாரணைகளை நடாத்துதல் தொடர்பில் கிளைகள் விட்டுப் பரந்த விடயங்கள் பலவற்றினைக் கவனத்திற்கொண்டு, 1995 டிசெம்பர் 15 ஆந் தேதியிட்ட முன்குறிப்பிட்ட எழுத்தாணையை இரத்துச்செய்து, 1995 டிசெம்பர் 15 ஆந் தேதியிட்ட புதிய எழுத்தாணையொன்றை பிரகடனப்படுத்த மேதகையீர் களிகூர்ந்துள்ளீர்கள். பின்னர் இவ்வெழுத்தாணையின் உள்ளடக்கம் 902/8 இலக்கத்தைக்கொண்ட, 1995 டிசெம்பர் 19 ஆந் தேதியிட்ட அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரம் செய்யப்பட்டது.(இணைப்பு அ, அ1, அ2).

மூல எழுத்தாணையின்வண்ணம், ஆணைக்குழுவானது 1995 செத்தெம்பர் 20 ஆந் திகதியளவில், விசாரணைகளை முடித்து, ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்டவாறு 1995 டிசெம்பர் 15 ஆந் திகதியளவில் மேதகையீர் ஒரு புதிய எழுத்தாணையைப் பிரகடனப்படுத்த விரும்பினீர்கள். அவ்வெழுத்தாணையின்வண்ணம், இவ்வாணைக்குழு, 1996 மார்ச்சு 14 ஆந் திகதியளவில் விசாரணையை முடித்து, அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் ஆணைக்குழு எது தொடர்பான விடயங்களை விசாரணை செய்ய வேண்டப்பட்டுள்ளது என்பதில் உள்ள சிக்கல் மற்றும் பல காரணங்களைக் கருத்திற்கொண்டு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட காலத்தை பன்னிரண்டு(12) தடவைகள் நீடிப்பதற்கு மேதகையீர் விரும்பினீர். இயைபுடைய நீடிப்புக்கள், 1996 மார்ச்சு 13 ஆந் திகதி, 1996 மே 29 ஆந் திகதி, 1996 செத்தெம்பர் 10 ஆந் திகதி, 1996 டிசெம்பர் 14 ஆந் திகதி, 1997 பெப்புரவரி 13 ஆந் திகதி, 1997 மார்ச்சு 05 ஆந் திகதி, 1997 மே 14 ஆந் திகதி, 1997 ஜூலை 11 ஆந் திகதி, 1997 செத்தெம்பர் 12 ஆந் திகதி, 1997 நவம்பர் 13 ஆந் திகதி, 1997 டிசெம்பர் 31 ஆந் திகதி, 1998 சனவரி 28 ஆந் திகதி ஆகிய தினங்களிலிருந்து நடைமுறைக்கு வருமாறு வழங்கப்பட்டன. இறுதி நீடிப்பு வழங்கப்பட்டதற்கு ஏற்ப இவ்வாணைக்குழு 1998 மார்ச்சு 26 ஆந் திகதியளவில், மேதகையீருக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டது.

1995 டிசெம்பர் 15 ஆந் திகதியிட்ட எழுத்தாணைக்கு ஏற்ப, இவ்வாணைக்குழுவானது கீழ்வருவனபற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டது.

(அ) உதவிப் பொலிசு பரிசோதகர் ரோஹித பிரியதர்ஸனா, 1990 பெப்புரவரி 20 ஆந் திகதியன்று அல்லது அளவில் காணாமல் போனதோடு சம்பந்தப்பட்ட நிலைமைகள், அத்தோடு சொல்லப்பட்ட காணாமல்போதலுக்குப் பொறுப்புடையவர்கள்.

(ஆ) உதவிப் பொலிசு இன்ஸ்பெக்டர் அஜித் ஜயசிங்கா, 1990 பெப்புரவரி 24 ஆந் திகதியன்று அல்லது அத்திகதியளவில் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டமையோடு சம்பந்தப்பட்ட நிலைமைகள், அத்துடன் சொல்லப்பட்ட கைதுசெய்தல், தடுத்து வைத்தலுக்குப் பொறுப்புடையவர்கள்.

(இ) 1988 சனவரி 01 ஆந் திகதிமுதல் 1990 டிசெம்பர் 31 ஆந் திகதிவரையான காலத்தில், அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் தடுப்பு நிலையங்களை ஸ்தாபித்தலும், பராமரிப்புச் செய்தலும் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட நபர்கள் கொடூரமான, மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு (சித்திரவதை) உட்படுத்தப்பட்டார்களா என்பதும் சொல்லப்பட்ட சட்டரீதியற்ற நடவடிக்கைகளுக்கு யார் பொறுப்புடையவர்கள் என்பது.

(ஈ) முன்குறிப்பிடப்பட்ட எவையேனும் விடயங்களையிட்டு விசாரணை நடத்தப்பட்டதா என்பதும், அத்தகைய விசாரணையில் ஆட்கள் எவரேனும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தலையிட்டார்களா என்பது.

(உ) மேற்குறிப்பிட்ட எவையேனும் விடயங்கள் தொடர்பில் உத்தியோகத்தர் எவரேனும் அல்லது வேறு எவரேனும் ஆள் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றவியல் தவறைப் புரிவதற்கு அல்லது தகாத செல்வாக்கினை உபயோகிப்பதற்கு அல்லது தத்துவத்தின் துஷ்பிரயோகத்துக்கு இருந்தாரா என்பது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழு அத்தகைய விதப்புரைகளை ஆணைகுழுவுக்கான ஆணைப்பத்திரத்தின் கீழ் செய்வதற்கும் ஆணைக்குழுவுக்குத் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்வண்ணமும் எந்த நபரையும் ஆணையாளராக நியமிப்பதற்கு மேதகையீருக்கு தற்றுணிபு இருந்தபோதிலும் ஆணையாளர்களை நியமிப்பதற்கு முன்னர் மேதகையீர், மேதகையீரின் செயலாளரின் ஊடாக ஆணைக்குழுவுக்கு ஆணையாளர்கள் இருவரை நியமிக்கும் விடயத்தின்போது மேன்மைதங்கிய பிரதான நீதியரசரின் விதப்புரைகளை வரவழைத்தீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். மேதகையீர், மேன்மைதங்கிய பிரதான நீதியரசரின் விதப்புரைகளின்வண்ணமே எம்மை நியமித்துள்ளீர்கள்.

ஆணையாளர்கள், கொழும்பு, மேல்மாகாண உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளாக இருந்தமையாலும், முதநிலை, மேன்முறையீட்டு நியாயாதிக்கத்துடன் ஆகிய இரண்டு தொடர்புடைய அமர்வுகளை நடாத்த வேண்டியவர்களாக இருந்தமையாலும், ஆணைக்குழுவுடன் தொடர்புடைய வேலைகளை பிற்பகலில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் தொடர்புடைய இரு உயர் நீதிமன்றங்களுக்கும் குறித்துரைக்கப்பட்ட அன்றாட நீதிமுறை அலுவல்கள் தடையின்றி செயல்பட வசதியேற்பட்டது. மேலும், கௌரவ சட்டமா அதிபரைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஆணைக்குழுவுக்கு சாட்டுதல் செய்யப்பட்ட அரச வழக்குரைஞர்கள் இருவரும் அவர்களது சாதாரண அலுவலகக் கடமைகளுக்கு மேலாக ஆணைக்குழுவுக்கு உதவ வேண்டிய நிலையில் இருந்தனர். ஆணைக்குழு செயல்பட ஆரம்பித்த பின்பு, எழுத்தாணையின் விசாரணை நியதிகளுடன் சம்பந்தப்பட்ட தகவல்கள், விடயங்கள், முக்கிய விடயங்கள் பற்றிய சான்றுகள் என்பவற்றை வழங்குவதற்கு எதிர்பாராத எண்ணிக்கையான சான்றாளர்கள் முன்வந்தனர். எனவே, ஆணைக்குழுவுக்குக் சாட்டுதல் செய்யப்பட்ட புலனாய்வாளர்களால் அனைத்துமடங்கிய, விரிவான புலனாய்வுகளை நடாத்த வேண்டியிருந்தது. இத்தகைய நிலைமைகளின் கீழ், மூலஎழுத்தாணையில் குறிப்பிட்டதுபோல் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு காலநீடிப்புகள் வேண்டுவது அவசியமானது.

முன்னாள் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தரும், சட்டத்தரணியுமான திரு.எஸ்.ரி.குணவர்த்தனா அவர்கள், ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டார். குறுகியதோர் காலம் ஆணைக்குழுவின் செயலாளராகப் பணிபுரிந்த திரு.குணவர்த்தனா அவர்கள் 1996 பெப்புரவரி முதலாம் திகதியன்று இராஜினாமாச் செய்தார். உதவிச் செயலாளர் திரு.தாவீத் கீகனகே பதில் செயலாளராகக் குறுகிய காலத்துக்கு நியமிக்கப்பட்டார். அதன்பின், 1996 ஜூன் 07 ஆந் திகதியன்று, இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தரான (வகுப்பு 11, தரம் 1) திரு.ஜி.கே.ஜி.பெரேரா அவர்கள் செயலாளராக நியமிக்கப்பட்டார். திரு.பெரேரா அவர்கள் ஆணைக்குழுவின் செயலாளராக, பணியாட்டொகுதியினரின் உதவியுடன் இறுதிவரை பணிபுரிந்தார். இவர்களின் பெயர்கள் **இணைப்பு உ** இல் காணப்படுகின்றது.

சனாதிபதி வழக்குரைஞரும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் முன்னாள் முடிக்குரிய வழக்குரைஞரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் குழுவின் தலைவரும்(1996), அரசாங்கம் சார்பாகத் தோற்றியவரும் பிரபல்யமான பல குற்றவியல் வழக்குகளுக்கு எதிர்வாதம் புரிந்தவருமான திரு.ஆர்.ஐ.ஒபேசேகரா அவர்கள் ஆணைக்குழுவுக்கு உதவுவதற்காக அழைக்கப்பட்டார். ஆணைக்குழுவுக்கு உதவுவதற்காக இரு அரசப் பேரவைச் சட்டத்தரணிகளை பெயர்குறிப்பதற்கு கௌரவ முன்னாள் சட்டமா அதிபரும், சனாதிபதி சட்டத்தரணியுமான திரு.சிப்லி அஸீஸ் அவர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பின்வண்ணம், அரச வழக்குரைஞர் திரு.சரத் ஜயமான்ன, அரச வழக்குரைஞர் திரு.யசந்த கோதாகொட ஆகியோர் பெயர்குறிப்பிடப்பட்டு, அதன்வண்ணம் கடமைகள் ஒப்படைக்கப்பட்டன. பதவியிலுள்ள கௌரவ சட்டமா அதிபர், திரு.சரத் என் சில்வா, சனாதிபதி வழக்குரைஞர் ஆணைக்குழுவின் இறுதிவரை அதற்குத் தொடர்ந்து உதவி செய்வதற்கு சொல்லப்பட்ட அரச வழக்குரைஞர் இருவருக்கும் அனுமதி வழங்குவதில் பெருமனதுடன் இணங்கினார். இருப்பினும், அவசரமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்த அவர்களது ஏனைய தொழிற்றுறைக் கடமைகளும் அவ்விருவர்களிடம் சாட்டுதல் செய்யப்பட்டு இருந்தன. சான்றாளர்களின் விசாரணைகள் வழக்குரைஞர் மூவரால் மேற்கொள்ளப்பட்டன.

பிரதிப் பொலிசுமா அதிபர் திரு.ரி.வி.சுமனசேகராவினதும், சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் திரு.எஸ்.சி.பத்திரண அவர்களினதும் தலைமையிலான பொலிசு உத்தியோகத்தர்கள் அங்கம் வகிக்கும் இரு குழுக்கள் அவசியமான புலனாய்வுகளை மேற்கொள்ளுவதில் ஆணைக்குழுவுக்கு உதவி செய்தன. ஆணைக்குழு நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஆணைப்பத்திரத்திலிருந்த சில விடயங்கள் குறித்து தொடக்கநிலைப் புலனாய்வுகளை ஏலவே நடத்திய திரு.ரி.வி.சுமனசேகராவின் தலைமையிலான புலனாய்வாளர்கள் குழு(குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த) வினருக்கு பொலிசு அத்தியட்சகர் திரு.எச்.எச்.எம்.ஆர்.பிரேமரத்ன உதவினார். இவ்வாணைக்குழுவை ஸ்தாபிப்பதில் இவர்கள் காண்பித்த விடயங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதை எமக்குத் தெரிவித்தார். இவ்வாணைக்குழு நியமிக்கப்பட்டதன் பின்னரும் சொல்லப்பட்ட குழுவில், அவர்கள் ஏற்கனவே புலனாய்வு செய்த சில விடயங்கள் சம்பந்தமாக தொடர்ந்தும் புலனாய்வு நடாத்தலாயினர். சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் திரு.எஸ்.சி.பத்திரணவின் தலைமையிலான புலனாய்வாளர்கள் குழுவில், ஆணைக்குழுவுடன் நிரந்தரமாக இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் அடங்கினர். இக்குழுவின் ஆணைக்குழு எது சம்பந்தமாக அவர்களை புலனாய்வு செய்யும்படி வழிநடாத்தியதோ அது சம்பந்தமான சகல விடயங்கள்பற்றியும் புலனாய்வு செய்து, ஆணைக்குழுவுக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பித்தது. புலனாய்வுப் பிரிவில் பணிபுரிந்த பொலிசு உத்தியோகத்தர்களின் பெயர்கள், **இணைப்பு ஈ** இல் தரப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் எழுத்தாணையும், விசாரணை நியதிகளும் பொதுமக்களின் என்றுமில்லாத கவனத்தைப் பெற்றிருந்தன. இது, ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள்பற்றி அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் இரண்டின் மூலம் வழங்கப்பட்ட

பரந்த பிரசாரத்தின் காரணமாக பெருமளவு ஏற்பட்டு இருக்கலாம். ஆணைக்குழுவின் அமர்வுகளுக்கு அதிக எண்ணிக்கையானோர் வருகைதந்து, நடவடிக்கைகளை அவதானித்ததும் கவனிக்கத்தக்கது. நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கு பொதுமக்களுக்கு சுதந்திரமான, தடையற்ற வாய்ப்புகள் இருந்ததன் காரணமாக, ஆணைக்குழு நடவடிக்கைகளின் செயலெல்லைக்கு பொதுமக்களின் அக்கறை சாதகமானதாக அமைந்திருந்தது. அதன் காரணமாக, ஆணைக்குழுவானது விசாரணைக்குட்படுத்தப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக, முக்கிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியநிலை ஏற்பட்டது. விசாரணைக்குட்பட்ட விடயங்கள் தொடர்பான உண்மையினைத் தாமே அறிந்துகொள்ளும்பொருட்டு பொதுமக்கள் கொண்டிருந்த மிகுந்த அக்கறையினையும் அவாவினையினையும் சுட்டிக்காட்டும் வகையில் பொதுமக்கள் பலரது பங்குபற்றுகை இருந்ததென்பதை எடுத்துரைக்க ஆணைக்குழு விரும்புகின்றது.

ஆணைக்குழுவின் முறையான செயற்பாட்டை இயலச்செய்யும்பொருட்டும், ஆணைக்குழுமுன் தோன்றும் சான்றாளர்கள் பயமற்றவர்களாகவும், பாதுகாப்பாகவும் சான்றளிப்பதை உறுதிப்படுத்தும்பொருட்டும் சில தினங்களில், விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்கவேண்டியிருந்தது. கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் சாட்சியமளிக்க வந்த ஒரேயொரு தினத்தில் மட்டும் குறிப்பிட்ட சாட்சியை சொல்லப்பட்ட சான்றாளர்கள் ஆதரவு தெரிவிக்கும்பொருட்டு ஆணைக்குழு வளாகத்தினுள்ளும், அதைச் சுற்றியுள்ள பகுதிக்கும் வருகை தந்த சில நபர்களின் கட்டுப்படுத்த முடியாத, ஒழுங்கற்ற நடத்தைகள் சில காரணமாக, ஆணைக்குழுவின் பணிகளுக்கும், கொழும்பு உயர்நீதிமன்ற கட்டிடத்தொகுதியைச் சூழவுள்ள நீதிமன்றங்களுக்கும் இடைஞ்சல் இருந்தது என விசனத்துடன் பதிவு செய்யப்படுகின்றது. ஒரு சந்தர்ப்பத்தில், ஆணைக்குழு மன்ற அறையினுள் இருந்தவர்களுக்கு ஒழுங்கான முறையில் நடந்து கொள்ளுமாறு ஆணைக்குழு எச்சரிக்கை விடுக்கவேண்டியிருந்தது.

விசாரணை நியதிகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள்பற்றி பொதுமக்களிடமிருந்து கருத்துரைகளை அழைத்து சிங்கள, தமிழ், ஆங்கில நாளிதழ்களில் ஆணைக்குழு அறிவித்தல்கள் வெளியிடச் செய்தது.(அறிவித்தல்களின் பிரதிகள் இணைப்பு ஆ இல் இணைக்கப்பட்டுள்ளன). தமது பெயர்கள், முகவரிகள் என்பவற்றை வெளிப்படுத்தி இயைபுடைய மற்றும் எழுத்துருவிலான கருத்துரைகளை முன்வைத்த சகல நபர்களும் ஆணைக்குழுவுக்கு உதவிபுரிகின்ற பொலிசு உத்தியோகத்தர்களினால், முதலாவதாக வினவப்பட்டனர். அதன்பிறகு ஆணைக்குழுவின் விசாரணை நியதிக்குள் வரும் விடயங்களுக்கு அவர்கள் நம்பகமான தகவல்களை வழங்கலாம் என ஆணைக்குழுவினால் கருதியவிடத்து, ஆணைக்குழு அத்தகைய நபர்களுக்கு சான்றாளர்களாக ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்தது. சாட்சிகளின் கூற்றுக்களைப் பதிவுசெய்தல், அவர்களுக்கு அழைப்பாணை விடுத்தல் போன்றவற்றோடு சம்பந்தப்பட்ட எல்லாத் தீர்மானங்களும் ஆணையாளர்களால் எடுக்கப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது. மேலும் சான்றாளர் ஒருவரால் செய்யப்பட்ட வாக்குமூலத்தின் இயல்பைக் கருத்திற்கொண்டு, ஆணைக்குழு அவரது சாட்சியத்தை இரகசியமாகப் பதிவுசெய்யத் தீர்மானம் எடுத்தது. ஏனைய அனைத்துச் சான்றாளர்களதும் சான்றுரை ஆணைக்குழுவின் பகிரங்க அமர்வில் பதிவு செய்யப்பட்டது.

ஆணைக்குழுக்கள் விசாரணைச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, சாட்சியாளர்கள் சட்டத்தரணிகளால் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்கு ஆணைக்குழுவால் அனுமதி வழங்கப்பட்டது. இவ்வழக்குரைஞர்கள் தமது சேவை நாடுநர்களுக்கு எதிராக சான்றளித்த சாட்சிகளை விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். தமது சேவைநாடுநர்களுக்கு சாதகமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளவும் சான்றாளர்களின் நம்பகத்தன்மையினை குற்றமுடையது எனக் காட்டவும் வழக்குரைஞர்கள் செயல்பட்டபடியால் இந்த விசாரணை குறுக்கு விசாரணையொன்றின் இயல்பைப் பெற்றது. இரகசியமாகச்

சான்றளித்த, தனியான சாட்சிகூட அத்தகைய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில சாட்சிகளின் சிலரின் சார்பாகத் தோன்றிய குறிப்பிட்ட வழக்குரைஞர்கள் சிலர் அவர்களுக்கு எதிராகச் சாட்டப்பட்ட சார்த்துரைகளை மறுத்ததோடு, அவர்களது சேவைநாடுநர்களுக்கு எதிராக முன்னர் சான்றளித்த சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு தெரிவு செய்யவில்லை என்பதை ஆணைக்குழு அவதானித்துள்ளது. சில சான்றாளரைக் குறுக்கு விசாரணை செய்தபட்சத்திலும் விசாரணையற்ற அனுமானங்களின் அமைந்த ஓரளவிலான அடிப்படையிலமைந்த சில காண்புகளையும் இவ்வாணைக்குழு கண்டுள்ளது. பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலிருந்து இயங்கியதாகச் சார்த்தப்பட்ட களனிப் பொலிசுப் பகுதியைச் சேர்ந்த நாசகாரத் தடுப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நிறைவேற்றியதாகக் கூறப்படும் பொலிசு உத்தியோகத்தரான, சேவை இடைநிறுத்தப்பட்ட சிரேட்ட பொலிசு அத்தியட்சகரான டக்ளஸ் பீரிஸ் என்ற சான்றாளரின் நலன்களைப் பாதுபாப்பதற்குத் தோன்றிய வழக்குரைஞரான திரு.லத்துவஹெட்டி அவர்கள் ஆணைக்குழுவிடமிருந்து நியாயமான விசாரணையொன்றை எதிர்பார்க்க முடியாதெனக் குற்றம்சாட்டி ஆணைக்குழுவைச் சடுதியாக விட்டுச்சென்று கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் திரு.ரணில் விக்கிரமசிங்காவை அழைக்கும்வரை ஆணைக்குழு விசாரணை நடவடிக்கைகளுக்கு வருகை தராமல் இருந்தார் என்பது விசடேமாகக் கறிப்பிட வேண்டிய இன்னுமொரு விடயமாகும். திரு.விக்கிரமசிங்காவின் சிரேட்ட வழக்குரைஞராகத் தோன்றிய முன்னாள் சட்டமா அதிபரான திரு.திலக் மாரப்பன சனாதிபதி வழக்குரைஞரின் கனிட்ட வழக்குரைஞராக சொல்லப்பட்ட வழக்குரைஞர் இவ்வாணைக்குழுவின் முன்னிலையில் தோன்றினார். அடுத்தடுத்த இரண்டு நாட்களில் ஆணைக்குழு முன் தோன்றிய திரு.மாரப்பன ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டவில்லை. அத்தோடு பயனுள்ளதாக ஆணைக்குழுவுக்குத் தொடர்ந்தும் உதவினார். அதேநேரத்தில் முன்னர் குறிப்பிட்ட சட்டத்தரணி அவரின் கனிஷ்டராகப் பணிபுரிந்தார். மேலும் ஓய்வுபெற்ற பிரதம இன்ஸ்பெக்டர் ரஞ்சித் விக்கிரமசிங்கா (முன்னர் குறிப்பிட்ட நாசகாரத் தடுப்புப் பிரிவின் பொறுப்பு அதிகாரி) சார்பாகத் தோன்றிய சட்டத்தரணி திரு.நெவில் அபேரத்னா ஆணைக்குழு முன் தொடக்கத்திலிருந்து, தொடர்ந்தும் தோன்றினார். அத்தோடு இறுதிவரை ஆணைக்குழுவின் அமர்வுகளில் சுறுசுறுப்பாகப் பங்குகொண்டார். அவர் ஆணைக்குழுவுக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். சாட்சிகளின் சார்பில் தோன்றிய அனைத்துச் சட்டத்தரணிகளினதும் பட்டியலொன்று **இணைப்பு** இ இல் தரப்பட்டுள்ளது.

1996 பெப்புரவரி 02 ஆந் திகதியன்று சுயேட்சையாக, தானாகவே ஆணைக்குழுமுன் தோன்றிய திரு.டக்ளஸ் பீரிஸ், தன்சார்பில் சட்டத்தரணி திரு.நளின் லத்துவஹெட்டிக்கு தோன்றும்படி அறிவுறுத்தல் வழங்கினார். அதன்படி, அவரது சட்டத்தரணிக்கு, அவர் விசாரணை செய்யவேண்டிய அனைத்துச் சாட்சிகளையும் விசாரணை செய்வதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், நடவடிக்கைகளின் சில நாட்களுக்குப் பிறகு திரு.பீரிஸ், தானாகவே நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் சமுகமளிக்கவில்லை. திரு.பீரிஸ் ஆணைக்குழுமுன் அனைத்து நாட்களும் தோன்றவேண்டிய கட்டாயம் இல்லாதபடியால், அதுபற்றி ஆணைக்குழு விசாரணை செய்யவில்லை. அதன்காரணமாக, அவர் தோன்றுவதற்கு அழைப்பாணை விடுக்கப்படவில்லை. அதன்பிறகு, ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, திரு.லத்துவஹெட்டியும், 1996 ஜுலை 10 ஆந் திகதியன்று ஆணைக்குழுவை விட்டுச்சென்று, ஆணைக்குழுவின்முன் தோன்றுவதைத் தவிர்த்துக்கொண்டார். அதன்பிறகு, உடனடியாக, திரு.பீரிஸ் நாட்டைவிட்டுக் கள்ளத்தனமாகச் சென்றுவிட்டார் என்பதை ஆணைக்குழுவின் கவனத்துக்குக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொண்டுவந்தது. அதன்விளைவாக, ஆணைக்குழு திரு.பீரிஸ் எங்கே இருக்கின்றார் என்பதை புலனாய்வு செய்வதற்கு புலனாய்வாளர்களுக்கு பணித்தது. காரணம், அந்தநேரத்தில் அவரை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்யும் அவசியம் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டிருந்தமையாகும். ஆணைக்குழுமுன்னிருந்த விசாரணை நடவடிக்கைகளுக்காக அவரை விசாரணை செய்வதும்கூடத் தேவையாக இருந்தது. 1995 ஒக்தோபர் 15 ஆம்

திகதியளவில், குழுமுன் சி.பொ.அத்தியட்சகர் எச்.எச்.எம்.ஆர்.பிரேமரத்னா சான்றளித்தார். அப்புலனாய்வுகளின்படி, திரு.பீரிஸ் பொய்ப் பெயர்கொண்ட போலி கடவுச்சீட்டின் உதவியுடன், இந்தியா, தாய்லாந்து ஊடாக திரு.பீரிஸ் சுவிட்சலாந்து சென்றுள்ளார் என்பதை புலனாய்வுகள் வெளிப்படுத்தின. அவர் சுவிட்சலாந்துக்கு சென்று அரசியல் புகலிடம் கோரினார். அதன்பிறகு, சாட்சிகளினால் திரு.பீரிஸுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட அதிக எண்ணிக்கையான சார்த்துதல்கள் தொடர்பில் அவரை விசாரிப்பதற்காக, ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு அனுமதியளிப்பதற்கு, சுவிட்சலாந்தின் தகுதிவாய்ந்த அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுமாறு ஆணைக்குழு கௌரவ சட்டமா அதிபரின் உதவியைப் நாடியது. அநேகமான சார்த்துதல்கள் ஆட்கடத்தல்கள், கொலைகள், ஆட்களைச் சித்திரவதை செய்தல், ஆட்களைத் தவறான முறையில் தடுத்துவைத்தல் போன்றவை சம்பந்தப்பட்டவையாக இருந்தன. எல்லாச் சார்த்துதல்களும் மனித உரிமைகளைப் பாரதூரமாக மீறுதலாக அமைந்தன. திரு.பீரிஸ் அவர்களுக்கு எதிரான சான்றுகளின் சுருக்கமொன்று இணைக்கப்பட்ட விண்ணப்ப வேண்டுகோள் பத்திரமொன்றைப் பொருத்தமான தூதரக வழிகளின்மூலம் சுவிட்சலாந்து அதிகாரிகளுக்கு சட்டமா அதிபர் சமர்ப்பித்துள்ளார் என சட்டமா அதிபரைப் பேராண்மைப்படுத்தும் அரச வழக்குரைஞர் ஆணைக்குழுவிடம் தெரிவித்தார். அத்துடன் வேண்டுகோளுக்குச் சுவிஸ் அதிகாரிகள் பதிலளித்த சந்தர்ப்பத்தில், சுவிஸ் அதிகாரிகள் மூலம் அவரது அரசியல் புகலிடத்துக்கான விண்ணப்பம் மறுக்கப்பட்டது காரணமாக திரு.பீரிஸ் சுவிட்சலாந்திலிருந்து காணாமல் போயிருந்தார் என்பதாகும். அதன்பிறகு, ஆணைக்குழு, அதன் இறுதி அமர்வுகள்வரை, திரு.பீரிஸ் சம்பந்தப்பட்ட எந்தத் தகவல்களையும் பெறவில்லை. அதன்பிறகு, 1996 ஆகஸ்ட் 14 ஆந் திகதியன்று ஆணைக்குழு திரு.பீரிஸால் அனுப்பப்பட்டிருக்கமுடியும் எனக் கருதப்பட்ட ஓர் சத்தியக்கடதாசியை பெற்றுக்கொண்டது. இது பின்னைய வரும் ஓர் அத்தியாயத்தில் எடுத்துரைக்கப்படும்.

சாட்சியங்களின் பதிவினைச் செய்யும்போது, நபர்கள் சிலர் குற்றவியல் தவறுகளைப்(அத்தவறுகளில் சில விசாரணை நியதிகளில் குறிப்பிட்டிருந்த தவறுகளாகும்) புரிந்துள்ளனர் என்பதை ஊகித்துக்கொள்ளக் கூடிய முதல்தோற்றச் சான்றுகள் வெளியாகின. விசாரணை ஆணைக்குழுக்களிடம் வரையறுக்கப்பட்ட நியதிச்சட்ட தத்துவங்கள் உரித்தளிக்கப்பட்டுள்ள அத்தகைய நபர்களின்மீது "கட்டாய அறிவித்தல்கள்" வழங்கும் அதிகாரங்களைக் கொண்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் தத்துவங்கள் இந்த ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டிருக்கவில்லையாதலால், விசாரணை செய்யப்பட வேண்டியிருந்த அனைவர்களும் சான்றாளர்கள் என்ற அடிப்படையிலேயே அழைக்கப்பட்டனர். எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் செயல்கள் பூர்த்தியடைந்தபோது மூன்று வகுதியான நபர்கள் ஆணைக்குழுமுன் சான்றளித்துள்ளார்கள் என்பது தெளிவாகின்றது. அவர்கள்-

i. தம்மீது குற்றவியல் தவறுகள் இழைக்கப்பட்டதாக புகார் செய்த ஆட்கள் அல்லது அவர்களுக்குத் தெரிந்த ஆட்கள்.

ii. உத்தியோகபூர்வ சான்றாளர்கள்(குற்றச் சார்த்துரைகள் இல்லாதவர்கள்).

iii. குற்றத் தவறுகளைப் புரிதலோடும் விசாரணை நியதிகளில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்களோடும் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவர்கள் எனச் சார்த்துதல் செய்யப்பட்ட நபர்கள்.

(சகல சாட்சியாளர்களுக்கும் அனுப்பிய அழைப்பாணைகளின் மாதிரிப் பிரதியொன்று **இணைப்பு ஊ** இல் உள்ளது).

ஆணைக்குழுவின் பகிரங்க அமர்வுகள் 1996 சனவரி 16 ஆந் திகதியன்று ஆரம்பித்தன. ஆணைக்குழு நூற்றிஇருபத்தேழு (127) நாட்கள் பகிரங்க அமர்வுகளை நடாத்தியது. அழைப்பாணைகளின்வண்ணம் எண்பத்திரண்டு (82) பேர் ஆணைக்குழுமுன் தோற்றமளித்ததோடு, பகிரங்க அமர்வுகளில் அவர்களது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. ஆணைக்குழுமுன் சான்றளித்த சாட்சியாளர்களின் பெயர்களும், முகவரிகளும் **இணைப்பு** எ இல் காணப்படுகிறது. நூற்றிஇருபத்தாறு(126) வகையான காண்பிப்புப் பொருட்கள், ஆவணங்கள் என்பன முன்வைக்கப்பட்டு, இச்சாட்சியாளர்களினூடாக அடையாளமிடப்பட்டது. இக்காண்பிப்புப் பொருட்கள், ஆவணங்கள் போன்றவற்றின் பட்டியலொன்று **இணைப்பு** ஏ இல் காணப்படுகின்றது. ஆணைக்குழுவின் புலனாய்வாளர்கள், ஒரு சிறு எண்ணிக்கையான நபர்களிடமிருந்து பதிவு செய்த கூற்றுக்கள் மட்டுமே என்பது கவனிக்கத்தக்கது. இக்கட்டத்தில் அனுமானங்கள் மற்றும் காண்புகளுக்கு வரும்போது மேற்போந்த வாக்குமூலங்கள் உள்ளிட்ட ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பத்தகுந்த மற்றும் ஏற்புடைய சகல விடயங்களையும் குழு கருத்திற்கொண்டதென்பதை ஆணைக்குழு பதிவுசெய்ய விரும்புகின்றது. மேலும், முக்கியமான விடயங்களோடு தொடர்புகொண்ட புள்ளிவிபரங்களையும் ஏனைய தகவல்களையும் எடுத்துரைத்து அரசாங்க முகவராண்மைகளால் ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பகமான அறிக்கைகளும் கருத்திற் கொள்ளப்பட்டன.

கொழும்பு-12, புதுக்கடை மேல் நீதிமன்றக் கட்டிடத் தொடரில் அமைந்துள்ள 2 ஆம் இலக்க கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆணைக்குழுவின் சகல அமர்வுகளும் நடாத்தப்பட்டன. அந்த நீதிமன்றத்தின் தலைமைதாங்கும் நீதிபதி, அந்த ஆணைக்குழுவின் தவிசாளராகக் கடமையாற்றினார். இந்த நடவடிக்கை காரணமாக ஆணைக்குழுவின் அமர்வுகளை நடாத்துவதற்கு வளவொன்றைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படவிருந்த செலவினத்தைத் தவிர்த்துக் கொள்ளும் வசதி ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டது. புதுக்கடையிலுள்ள மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொடரைச் சேர்ந்த 301 அ இலக்க அறையில் ஆணைக்குழுவின் பிரதான செயலகம் அமைந்திருந்தது. செயலகப் பணியாட்டொகுதியினருக்கென இன்னொரு அறை மேல் நீதிமன்றத் தொடரில் பேணப்பட்டு வந்தது. சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் திரு.எஸ்.சி.பத்தினவின் நேரடி முகாமையின் கீழான நிரந்தர புலனாய்வாளர்களின் குழு கொழும்பு-07, கெப்பிட்டிபொல மாவத்தை, சமிட் தொடர்மாடிகளின் 18பீ ஆம் இலக்கத்தில் அமைந்த அலுவலகத்தில் இருந்து கடமைபுரிந்தனர். இந்த இடத்திலேயே சான்றாளர்களை ஆரம்பக் கட்டத்தில் வினாவுதலுக்கு உட்படுத்தி அவர்களுடைய வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

விசாரணை நடவடிக்கைகள் செவிப்புல நாடாவொன்றில் பதிவுசெய்யப்பட்டன. அதேநேரத்தில் சுருக்கெழுத்திலும் பதியப்பட்டன. பின்னர் அவை, தட்டச்சிலிடப்பட்ட நடவடிக்கைகளாக தயாரிக்கப்பட்டன. இந்த விசாரணை நடவடிக்கைகள் 6780 பக்கங்கள் கொண்டனவாகும். அவை, 28 பாகங்களில் பதியப்பட்டுள்ளன. அடையாளமிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் புலனாய்வாளர்களால் சான்றுகள் பெறப்பட்ட ஆட்கள் யாவரினதும் வாக்குமூலங்களுடன் அவை இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் II
## தனிநபர்கள் சிலர் பற்றிய அறிமுகம்

இவ்வறிக்கையில் ஆட்கள் சிலர் பற்றி சுருக்கமான அறிமுக உரைகளை கீழே பட்டியல் படுத்துகிறோம். முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பாக அவர்களுடைய பெயர்கள், அவர்களுடைய குடும்பப் பெயர்களின் முதலெழுத்துக்களின் அகர வரிசை ஒழுங்குக்கேற்ப பட்டியல் படுத்தப்பட்டுள்ளது. ரோஹித பிரியதர்ஸனா, அஜித் ஜயசிங்கா ஆகிய இருவருக்கும் தனியான அத்தியாயங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதன் காரணமாக இவ்வத்தியாயத்தில் அறிமுகப்படுத்தப்படவில்லை.

### I. கீர்த்தி அத்தபத்து

தகுதிகாண் உதவிப் பொலிசு இன்ஸ்பெக்டராக 1972 இல் பொலிசுத் திணைக்களத்தில் இணைந்துகொண்ட இவர் 1990 இல், பிரதம இன்ஸ்பெக்டராகத் தரமுயர்த்தப்பட்டதோடு, 1994 இல் உதவிப் பொலிசு அத்தியட்சகராகவும் தரமுயர்த்தப்பட்டார். பொலிசு இன்ஸ்பெக்டர் என்ற வகையில் அவர் 1989 ஆகஸ்ட் முதல் 1994 வரை சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் பொறுப்பு உத்தியோகத்தராகவும் பணிபுரிந்தார். அவர் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் பொறுப்பு உத்தியோகத்தராகப் பதவி வகித்தார். அப்பொலிசு நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் , உதவிப் பொலிசு உத்தியோகத்தர் ரோஹித பிரியதர்ஸனா 1990 பெப்புரவரி 20 ஆந் திகதி இரவு காணாமல் போனபோது அவர் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் பொறுப்பாளராக இருந்தமையால், அவரது சாட்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது.

### II. நளின் தெல்கொட

1961 இல் தகுதிகாண் உதவி இன்ஸ்பெக்டராக சேவையில் இணைந்து, பொலிசுத் திணைக்களத்தில் சுமார் 36 வருடங்கள் சேவையாற்றிய திரு.தெல்கொட ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தபோது பொலிசுச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றவராக இருந்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சேவையாற்றிய அவர் 1978 சனவரி 01 ஆந் திகதியன்று உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளராகத் தரமுயர்த்தப்பட்டார். 1985 இல் அவர் பொலிசு கண்காணிப்பாளராக நியமனம் பெற்றார். பொலிசுக் கண்காணிப்பாளர் என்ற வகையில் 1987 செத்தெம்பர் 15 ஆந் திகதியன்று களனி பொலிசுப் பிரிவைப் பொறுப்பேற்றார். அவர் பிரதிப் பொலிசுமா அதிபராக 1994 பெப்புரவரி 24 ஆந் திகதியன்று பதவியேற்கும்வரை, களனி பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தராக தொடர்ந்தும் பணிபுரிந்தார். அவர் களனி பிரிவில் சேவை செய்துகொண்டிருக்கும்போதே 1989 இல், சிரேட்ட பொலிசு அத்தியட்சகராக அவர் தரமுயர்த்தப்பட்டார். 1996 இல் அவர் ஆணைக்குழுவின்முன் சான்றளிக்கும்போது தென் பொலிசுப் பிரதேசத்தின் பிரதிப் பொலிசுமா அதிபராக அவர் இருந்தார்.

1989 டிசெம்பர் 12 ஆந் திகதியன்று பிரதிப் பொலிசுமா அதிபர் எம் எம் ஆர் குணரத்ன, நளின் தெல்கொடவைப் பாராட்டி, பொலிசுமா அதிபருக்குச் செய்தியொன்றை அனுப்பினார். குறிப்பிட்ட பாராட்டுரையில், திரு.தெல்கொட, சிரேட்ட பொலிசுமா அதிபர் எட்மன்ட் கருணாநாயக்காவுடன்(கம்பஹா பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர்) "சிவில் உடையில் சிறிய குழுக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள்" என்ற கோட்பாட்டைச் செயற்படுத்துவதில் உற்சாகமாகக் கலந்துகொண்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில், அத்தகைய குழுக்கள் நாசகார நபர்களைப் பிடித்து அழிப்பதற்கு ஆற்றல் வாய்ந்தவைகளாக இருந்தனவென கூறப்பட்டுள்து. **X79** என அடையாளமிடப்பட்டு இந்தப்

பாராட்டுரையின் பிரதியொன்று இவ்வாணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த பரிந்துரையின் அடிப்படையில் திரு.தெல்கொட அவர்களுக்கு இரண்டு வேதன ஏற்றங்களை வழங்கும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குச் சிபாரிசு செய்த விதப்புரையொன்றை பொலிசுமா அதிபர் சமர்ப்பித்தார். இந்த விதப்புரையின் பிரதியொன்று இவ்வாணைக்குழுவின் முன்னிலையில் **X86** என அடையாளம் இடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**III. எம் எம் ஆர் (மெரில்) குணரத்னா**

திரு.குணரத்ன ஆணைக்குழுவின்முன் சான்றளிக்கும் சந்தர்ப்பத்தில் 54 வயதினை உடையவராக இருந்தார். அவரும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பட்டதாரியொருவராவார். 1965 இல் தகுதிகாண் உதவிப் பொலிசு அத்தியட்சகராக பொலிசுத் திணைக்களத்தில் இணைந்துகொண்ட அவர், 1973 இல் ஒரு பொலிசு அத்தியட்சகரானார். பொலிசு அத்தியட்சகர் என்றவகையில் புலனாய்வுச் சேவைகள் பிரிவுக்கு அவர் இணைக்கப்பட்டார். திரு.குணரத்னா 1978 இல் சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் தரத்துக்கு உயர்த்தப்பட்டார். 1985 இல் அவர் பிரதிப் பொலிசுமா அதிபர் தரத்துக்குத் தரமுயர்த்தப்பட்டு, 1985 ஒக்தோபரில் திரு.குணரத்னா தேசிய புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 1993 இல் அவர் சிரேட்ட பிரதிப் பொலிசுமா அதிபரானார். சாட்சியமளிக்கும் சந்தர்ப்பத்தில், திரு.குணரத்னா துணைச் சேவைகளுக்கு பொறுப்பான பிரதிப் பொலிசுமா அதிபராக பொலிசுத் தலைமையகத்துக்கு இணைக்கப்பட்டிருந்தார்.

1989 ஏப்பிரல் முதல் 1993 ஆகஸ்ட்வரை களனி பொலிசுப் பிரிவானது, பிரதிப் பொலிசுமா அதிபரான திரு.குணரத்னாவின் மேற்பார்வையின் கீழ் இருந்துவந்தது.

**IV. அஜித் ஜயசிங்கா**

தயவுசெய்து அத்தியாயம் VIII ஐப் பார்க்க.

**V. திரு.ஏர்னஸ்ட் பெரேரா**

திரு.பெரேரா ஆணைக்குழுவின்முன் சான்றளிக்கும்போது 64 வயதை அடைந்தவராக இருந்தார். கொழும்பு பல்கலைக்கழகப் பட்டதாரியான அவர், ஒரு தகுதிகாண் உதவிப் பொலிசு அத்தியட்சகராக 1957 இல் பொலிசுத் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். 1968 இல் பொலிசு அத்தியட்சகராகத் தரம் உயர்த்தப்பட்ட அவர், அத்தரத்தில் 5 வருடங்கள் பணிபுரிந்தார். அதன்பின் அவர் சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் தரத்துக்கு உயர்த்தப்பட்டார். அதன்பின் 1977 ஆம் ஆண்டில் அவர் பிரதிப் பொலிசுமா அதிபர் தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டார். 1998 ஆகஸ்ட் 12 ஆந் திகதியன்று அவர் பொலிசு மா அதிபராக நியமிக்கப்பட்டார். 1993 நவம்பர் 23 ஆந் திகதிவரை அவர் பொலிசுத் திணைக்களத்தின் தலைவராக இருந்தார். 61 வயதை அடைந்ததன்பேரில் அவர் பொலிசுப்படையிலிருந்து ஓய்வுபெற்று அதற்குப்பின் உடனடியாக இலங்கையின் மலேசியத் தூதுவராக நியமிக்கப்பட்டார். 1994 ஆகஸ்ட்டில் அரசாங்கத்தின் மாற்றத்துடன் அவர் இலங்கைக்கு மீள அழைக்கப்பட்டார். அதன்பின்னர் அவர் வேலையில் இருக்கவில்லை. விசாரணை நியதிகளுக்கு ஏற்புடைய(அதாவது- 1988 சனவரி 01 ஆந் திகதிமுதல் 1990 டிசெம்பர் 31 ஆந் திகதிவரை) காலத்தின் பெரும்பகுதியில் திரு.பெரேரா இலங்கைப் பொலிசுப் படையின் தலைவராகவே பணிபுரிந்துள்ளார்.

**VI. திரு.டக்ளஸ் பீரிஸ்**

டக்ளஸ் பீரிஸ் ஒரு தகுதிகாண் பொலிசு ஊர்காவலராக 1967 இல் பொலிசுத் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். உதவிப் பரிசோதகராகத் தெரிவுசெய்யப்படுவதற்குத்

தேவையான அடிப்படைத் தகுதிகள் அவருக்கு இருந்தபடியால் 1971 இல் அவ்வாறு தெரிவு செய்யப்பட்டார். 1979 இல் அவர் பொலிசுப் பரிசோதகராக நியமிக்கப்பட்டார். அதன்பின்னர், 1985 இல் பிரதம பொலிசுப் பரிசோதகர் தரத்துக்கு உயர்த்தப்பட்டார். பிரதம பரிசோதகர் என்றவகையில் அவர் பாலியகொடை பொலிசு நிலையத்தின் தலைமை அலுவலகப் பரிசோதகராகப் பணிபுரிந்தார். 1987 யூலை 20 ஆந் திகதியன்று திரு.பீரிஸ் பதில் உதவிப் பொலிசு அத்தியட்சகராக நியமிக்கப்பட்டார். ஒரு உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்றவகையில் அவர் களனி பொலிசுப் பிரிவின் "உதவிப் பொலிசு அத்தியட்சகர் நடவடிக்கைகள்" என்ற வகையிலும் பணிபுரிந்தார். இந்த அதிகார எல்லைக்குள் அவர் களனி நாசகாரத்தடுப்புப் பிரிவின் செயற்பாடுகளுக்கு தலைமை தாங்கினார்.

உ.பொ.அ தரத்தில் உறுதிப்படுத்தும்பொருட்டு ஒருவர் குறித்த மூன்று வருட காலப்பகுதிக்குள் பரீட்சைக்குத் தோற்றி, குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். திரு.பீரிஸ் குறித்த பரீட்சைக்கு முகம் கொடுத்தார். எவ்வாறாயினும், அவர் பரீட்சையில் சித்தியடையத் தவறினார். அதற்கிணங்க, 1990 வரையிலும் திரு.பீரிஸ் தொடர்ந்தும் ஒரு உறுதி செய்யப்படாத உ.பொ.அ இருந்தார். அவர் பரீட்சையில் சித்தி அடையாமலும் உறுதி செய்யப்படாமலும் இருந்தமையால் பரீட்சையில் சித்தியடைவதற்கு வழங்கப்பட்ட காலத்தினை நீடிப்பதற்காக விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. அத்தகைய வேண்டுதல்கள் பொதுவாக அனுமதிக்கப்படும். எனினும், அங்ஙனம் அனுமதிக்கப்படுமிடத்து, நீடிப்பு வழங்கப்படும் பட்சத்தில், அவர் முதுமுறையை, பதவி முதுமுறைப் பட்டியலில் பின்னோக்கித் தள்ளப்படுவதினால் இழப்பார்.

நாசகார கிளர்ச்சியின் முடிவைக் குறிப்பிடும் ஆண்டாக 1990 இருந்ததை அவதானிக்கலாம். 1989 நவம்பர் 25 ஆந் திகதியன்று சி.பொ.அதிகாரிகளின் தெல்கொட,(பெரும்பாக கொழும்புப் பிரதேசம்) பிரதிப் பொலிசுமா அதிபர் திரு.எம்.எம்.ஆர்.குணரத்னாவுக்கு உதவிப் பொலிசு அத்தியட்சகர் திரு.பீரிஸ் பொலிசு அத்தியட்சகர் தரத்துக்கு உயர்த்தப்படவேண்டும் என்பதைச் சிபார்சு செய்து செய்தியொன்றை அனுப்பி வைத்தார். உதவிப் பொலிசு அத்தியட்சகர் திரு.பீரிஸ்சினால் தானாகவே செய்துகொண்ட ஒரு வேண்டுகோளின்பேரில் அவர் குறிப்பிட்ட சிபார்சை முன்வைத்துள்ளதாக திரு.தெல்கொட குறிப்பிட்டார். (ஆரம்பத்தில் உ.பொ.அ தரத்திலாவது அவர் உறுதி செய்யப்படாமல் அவர் எவ்வாறு தரமுயர்த்தப்படல் முடியும் என்பதை திரு.தெல்கொட தனது செய்தியில் குறிப்பிடவில்லை). திரு.தெல்கொட, நாசகார கிளர்ச்சி முடிவுறாமல் இருந்த காலப்பிரிவில் உ.பொ.அ பீரிஸ்சினால் செய்யப்பட்ட பணி சம்பந்தப்பட்ட விபரங்களை பட்டியலிடுவதன்மூலம் தனது சிபார்சை உறுதிப்படுத்தியிருந்தார். X71 எனக் குறிப்பிடப்பட்ட குறித்த சிபார்சின் ஒரு நகலும்(தொடர்புபட்ட ஆவணங்களுடன்) ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டது. *"நாசகார இயக்கத்தின் அதிகரிப்பு அழிவுண்டாக்கும் அடிப்படைகளை நீக்குதல் என்பவற்றைத் தடைசெய்வதற்கு ஏனையவற்றுக்கிடையில் அவர் பொறுப்பாக இருந்தார்"* என திரு.தெல்கொட குறிப்பிட்டுள்ளார்.(உ.பொ.அ.திரு.பீரிஸ் குறித்து). "நீக்குதல்" என்ற சொல்லின் கருத்தை நிச்சயப்படுத்திக்கொள்வதில் ஆணைக்குழு கவனமாக இருந்தது. திரு.தெல்கொட குறிப்பிட்ட சொல்லை உபயோகித்தபோது அவரின் மனதில் என்ன கருத்து இருந்தது. இது தொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டபொழுது திரு.தெல்கொட தயார் செய்யப்பட்ட ஒரு பத்திரத்திலிருந்து வாசித்துக் காட்டினார். X72 என அடையாளம் இடப்பட்ட பத்திரம் உள்ளடக்கியிருந்த ஆவணம் ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டது. திரு.தெல்கொட குறிப்பிட்ட பத்திரத்தில் நீக்குதல் என்ற சொல்லினால் கருதப்பட்டது என்ன என்பதற்கு உ.பொ.அ பீரிஸினால் *"நியாயப்படுத்தக்கூடிய கொலை"* என விளக்கம் அளிப்பதற்கு முயன்றுள்ளார். நீதிமுறைப்படுத்தக்கூடிய மனிதக் கொலைகள் (அவசரகால ஒழுங்குவிதிகளின் கண்காணிப்பின் கீழ் வந்தது) "ஒழுங்கு விதி 55FF" மரணங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலப்பிரிவில் முழு களனிப் பொலிசுப் பிரிவிலும் அத்தகைய ஐந்து மரணங்களே அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சொல்லின் சாதாரண கருத்து "தீர்த்துக்

கட்டுதல்" அல்லது "கொலைசெய்தல்" என்பதாக இருந்ததென அவரைப் பரீட்சித்த சட்டத்தரணிகளிடம் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். இந்த நிலைமைகளின் கீழ், சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் பொலிசாரின் மொழிவழக்கில் பயன்படுத்தப்பட்டவாறு இந்தச் சொல்லின் உண்மையிலும், பிரயோகமானதுமான கருத்தின் சான்றாளர்களிடமிருந்து வெளிக்கொணர வழக்குரைஞர் முயன்றார். இறுதியாக, நேர்மையான முறையில் சான்றளித்த பொலிசுமா அதிபர் ஏர்னஸ்ட் எட்வேட் பெரேரா *"நீக்குதல்"* என்பதன் உண்மையான பொருள், *"நாசகாரர்களைச் சட்டத்துக்குப் புறம்பான முறையில் கொலைசெய்தல்"* எனக் குறிப்பிட்டார். எனவே, உதவிப் பொலிசு அத்தியட்சகர் பீரிஸின் பதவி உயர்வுக்கான விதப்புரைக்குரிய பிரதான காரணம், *"நீதிக்குப் புறம்பான முறையில் நாசகாரர்களைக் கொலை செய்வதன்மூலம் நாசகார இயக்கத்தின் முன்னேற்றத்தை தடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுத்தமையாகும் "* என்பதேயாகும்.

1989 டிசெம்பர் 12 ஆந் திகதியன்று முன்குறிப்பிடப்பட்ட சிபார்சைப் பெற்ற பி.பொலிசுமா அதிபர் குணரத்னாவும் கூட உ.பொ.அத்தியட்சகர் பீரிஸ் பற்றிய ஒரு சிபார்சைத் தயாரித்து பொலிசுமா அதிபருக்குச் சமர்ப்பித்தார். **X88** என அடையாளம் இடப்பட்ட குறிப்பிட்ட சிபார்சின் நகலொன்று ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டது. இச்சிபார்சு, பொலிசுமா அதிபர் அவ்வாறு கூறியதாகக் குறிப்பிடப்பட்டிருக்க வில்லையாயினும், பொலிசுமா அதிபர் அவ்வாறு செய்ய வேண்டுமெனக் கேட்டதன்பேரில், பிரதிப் பொலிசுமா அதிபர் குணரத்னா சிபார்சைத் தயாரித்து, பொலிசுமா அதிபருக்குச் சமர்ப்பித்ததாகக் குறிப்பிடுகின்றார். குறிப்பிட்ட சிபார்சுக்கு உ.பொ.அத்தியட்சகர் பிரிஸ் தொடர்பில், சி.பொ.அத்தியட்சகர் தெல்கொடவினால் செய்த சிபார்சு இணைக்கப்பட்டு, அவருக்கு அனுப்பப்பட்டு இருந்தது. உ,பொ.அத்தியட்சகர் பீரிஸ், உ.பொ.அத்தியட்சகர் காமினி சில்வாவுடன் இணைந்து(கம்பஹா பிரிவின்) ஜே.வி.பி இற்கு எதிரான பிரசாரத்தை வழிநடாத்திச் சென்றதாகச் சொல்லப்பட்ட சிபார்சில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அது தொடர்ந்து குறிப்பிடுவதாவது, அவர்கள் ஆரம்பத்தில் ஜே.வி.பி இற்கு உதவுதல், பலவீனப்படுத்துதல், அதன்பின்பு ஜே.வி.பி.யின் வீழ்ச்சி என்பவற்றுக்கு முக்கியமான பங்களிப்புச் செய்துள்ளார்கள் என்பதாகும். கௌரவ ரணில் விக்கிரமசிங்கா, கௌரவ ஜோசப் மைக்கல் பெரேரா, கௌரவ ஜோன் அமரதுங்கா போன்றோர் இவ்விரு அதிகாரிகளினாலும் ஆற்றப்பட்ட தனித்துவமான பங்களிப்புப்பற்றி நன்கு அறிந்திருந்தனர் என அவர் மேலும் குறிப்பிடுகின்றார். சிபார்சு செய்வதன்மூலம் தான் விரும்பியதெல்லாம் உ.பொ.அத்தியட்சகர் பீரிஸுக்கு சம்பள ஏற்றங்கள் இரண்டை வழங்க வேண்டும் என்பதேயாகும் என பிரதிப் பொலிசுமா அதிபர் குணரத்னா குறிப்பிட்டுள்ளார்.

முன்குறிப்பிடப்பட்டுள்ள இரு சிபார்சுகளையும் பெற்ற பொலிசுமா அதிபர் இவ்விடயம்பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குச் செய்தியொன்றைச் சமர்ப்பித்திருந்தார். 1989 டிசெம்பர் 21 அந் திகதியிட்ட இச்செய்தி **X42** என அடையாளம் இடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. செய்யப்பட்ட சிபார்சின் அடிப்படையில் இவ்விடயம்பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓர் அமைச்சரவைக் குறிப்பைத் தயாரித்திருந்தார். இது 1990 பெப்புரவரி 06 ஆந் திகதியன்று முன்னாள் சனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த சிபார்சுகளின் அடிப்படையில், (அ) குறிப்பிட்ட உறுதிப்படுத்துகைப் பரீட்சையில் சித்தியடைவதை உ.பொ.அ பீரிஸுக்கு விளக்கம் அளிப்பதற்கும், (ஆ) 1988 யூலை 20 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கடந்த காலத்தையும் அளாவியவாறு அவரைத் தரத்தில் உறுதிப்படுத்துவதற்கும், (இ) 1990 பெப்புரவரி 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு அவரைப் பொலிசு அத்தியட்சகர் தரம் 11 இற்கு தரமுயர்த்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. **X43** என அடையாளம் இடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரதியொன்று ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டது. சான்றாளர்கள் பலரது கருத்தின்படி, இது என்றுமே நடந்திராத செயலாகும். டக்ளஸ் பீரிஸ் அடுத்தடுத்துப் பெற்ற பல பதவியுயர்வுகளின் விளைவாக, அவர் வர்த்தமானிமூலம் அறிவிப்புச் செய்யப்பட்ட பொலிசு உத்தியோகத்தர்கள்

130 பேரைத் தாண்டி சேவை முதிர்ச்சியால் உயர்வு பெற்றார். இத்தகைய பதவியுயர்வைப் பொலிசுத் திணைக்களத்தின் வரலாற்றில் வேறெந்த பொலிசு உத்தியோகத்தரும் பெறவில்லை. "இது பொலிசில் நிகழ்ந்த மிகவும் நீளமான பாய்ச்சலாகும்" என்பதைச் வழக்குரைஞர்களுடன் இணங்குவதற்கு சிரேட்ட பி.பொலிசுமா அதிபர்(நிருவாகம்) கலாநிதி தர்மதாஸ சில்வாவைத் தூண்டியது. இறுதியாக 1993 இல் பொலிசு அத்தியட்சகர் திரு.டக்ளஸ் பீரிஸ் பொலிசு அத்தியட்சகர் தரம் 1 இற்குப் பதவியுயர்த்தப்பட்டார். அதன்பின்பு அவரால் இழைக்கப்பட்டவை எனச் சொல்லப்பட்ட பாரதூரமான குறறங்கள் சம்பந்தமாக குற்றப்புலனாய்வுகள் நிலவியதன் அடிப்படையில் அவர் 1995 இல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.

அறிமுக அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டதுபோல உ.பொ.அத்தியட்சகர் பீரிஸ் திடீரென ஆணைக்குழுவிலிருந்து காணாமல் போனார். அவர் ஒழுங்காக ஆணைக்குழுமுன் தோன்றுவதற்கு எந்தக் கட்டுபாடும் இல்லாததன் காரணமாக ஆணைக்குழு இவ்விடயத்தில் எந்தப் புலனாய்வையும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. என்றாலும் திரு.பீரிஸ் கள்ளத்தனமாக நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாக பின்னர் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட புலனாய்வுகள்மூலம் 1996 யூலை 20 ஆந் திகதியன்று டக்ளஸ் பீரிஸ் நாட்டைவிட்டுச் சென்றுள்ளார் என அம்பலமாகியது. பீரிஸ் நாட்டைவிட்டுச் செல்வதற்கு முன் "தல்பாவில விதான கங்காணம்கே விமலசேன" என்ற பொய்ப்பெயரின் கீழ் போலிக் கடவுச்சீட்டொன்றைப் பெற்றிருந்தார். கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக அவரால் கொடுக்கப்பட்ட முகவரி "இல.37, கண்டி வீதி, பீரிஸ் மாவத்தை, களனி" என்பதாகும். **X53** என அடையாளம் இடப்பட்ட கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்று (இது தவறான தகவல்களைக் கொண்டிருக்கின்றது) ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட விண்ணப்பத்தில் டக்ளஸ் பீரிஸ்சின் சரியான புகைப்படம் ஒட்டப்பட்டிருந்தது.

பீரிஸ் எவ்வாறு நாட்டைவிட்டுச் சென்றார் என்பதை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. எவ்வாறாயினும் இன்டர்போல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விடயங்களின்வண்ணம், அவர், 1996 யூலை 22 ஆந் திகதியன்று பம்பாயிலிருந்து வந்த ரிஜி 970 இலக்கத்தைக்கொண்ட ஆகாயவிமானத்தில் ஏறியுள்ளார் என்பதை இது சுட்டிக்காட்டியுள்ளது. ரிஜி 970 விமானம் அவரை அதே தினத்தில் பாங்கொங் நகரத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது. அதன்பின்னர், ஆகஸ்ட் 09 ஆந் திகதியன்று திரு.பீரிஸ் சுவிட்சலாந்து நோக்கிப் புறப்பட்டுள்ளார்.

சுவிற்சலாந்தில் சூரிச் நகரத்துக்கு வந்தடைந்த அவர் அரசியல் புகலிட அந்தஸ்துக்காக விண்ணப்பம் செய்தார். அரசியல் புகலிடம் வழங்கல் சம்பந்தமாக அவர் சமர்ப்பித்திருந்த விண்ணப்பத்தை ஆராய்ந்து பாாகும் காலப்பகுதியில் சுவிற்சலாந்தில் தங்குவதற்கான அனுமதியை சுவிற்சலாந்து அதிகாரிகள் அளித்தனர். தாம் இலங்கைக்குச் சென்றால் தம்மை இம்சைக்குள்ளாக்குவார்கள் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே அவர் புகலிடம் நாடினார். சுவிஸ் அதிகாரிகள் டக்ளஸ் பீரிஸ்சுக்கு எதிராகத் தீர்ப்புரை வழங்கி அவருக்குப் புகலிடம் அளிப்பதை மறுத்தனர். பீரிஸினால் சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களையிட்டு அவர்கள் திருப்தியடையவில்லை. ஆயினும், சுவிற்சலாந்தில் உள்ள சட்டத்துக்கமைய நிராகரிப்புக் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யும்பொருட்டு 1997 சனவரி மாதம் 31 ஆந் திகதிவரை பீரிஸ்சுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது. அக்காலப்பகுதியில் அவர் மீண்டும் ஒருமுறை காணாமல் போனார். அந்தத் திகதியிலிருந்து டக்ளஸ் பீரிஸ் எங்கிருக்கின்றார் என்பதைத் தெரிவிக்கும் எந்தவிதமான தகவலும் ஆணைக்குழுவுக்கு வந்து சேரவில்லை. எவ்வாறாயினும், காலத்துக்குக் காலம் அவருடைய சட்டத்தரணியான நளின் லத்துவஹெட்டி அவர்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பற்றியதும் ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களினதும் பிரதிகளைப் பெற்றுத்தருமாறும்

ஆணைக்குழுவுக்கு விண்ணப்பம் செய்தார். இந்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு தேவைப்பட்ட விசாரணை நடவடிக்கைகள் பற்றிய பிரதிகள் சட்டத்தரணிக்கு வழங்கப்பட்டன.

எவ்வாறாயினும், 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆந் திகதியன்று டக்ளஸ் பீரிஸ் அவர்களால் அனுப்பப்பட்டதெனக் கூறப்பட்ட ஆவணமொன்று ஆணைக்குழுவிடம் வந்து சேர்ந்தது. அது, சத்தியக்கடதாசியொன்றுக்குச் சமமாக இருந்தது. இந்த ஆவணத்தின் உண்மையான நிலையினைத் தீர்மானிக்கும்பொருட்டு அந்த ஆவணத்தைச் சான்றுபடுத்தியவராக சார்த்தப்பட்ட சமாதான நீதவான் அங்ஙனம் சான்றுப்படுத்தினாரா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆவணத்தில் கூறப்பட்டிருந்த சமாதான நீதவான் அந்த ஆவணத்தைச் சான்றுப்படுத்தவில்லை என்பது புலனாய்வுகள் மூலம் அம்பலத்துக்கு வந்தது. இதன் காரணமாகச் சம்பந்தப்பட்ட ஆவணத்தில் அடங்கிய விடயங்களை ஆணைக்குழு விசாரணைக்காக எடுக்கவில்லை.

## VII ரோஹித்த பிரியதர்ஸனா

VII அத்தியாயத்தைப் பார்க்கவும்.

## VIII ரணில் விக்கிரமசிங்கா

பாராளுமன்றத்தின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரான திரு.ரணில் விக்கிரமசிங்கா ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராவார். ஒரு காலத்தில் இலங்கையின் பிரதம அமைச்சராக இருந்த திரு.விக்கிரமசிங்கா அவர்கள் 1997 ஆம் ஆண்டில் பியகம தேர்தல் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் (ஐ.தே.க) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அரசியல் களத்தில் புகுந்தார். அன்றுதொட்டு அவர் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தொடர்ந்தும் கடமைபுரிந்துள்ளார். 1978 ஆம் ஆண்டில் அவர் வெளிநாட்டு விவகாரங்கள் பற்றிய பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1993 மே மாதத்தில் சனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் படுகொலைக்குப் பின்னர், சனாதிபதி பிரேமதாசாவின் பதவிக்காலத்தில் நாட்டின் பிரதம அமைச்சராக விளங்கிய திரு.டீ.பீ.விஜேதுங்கா அவர்கள் குடியரசின் சனாதிபதியாக நியமிக்கப் பட்டார். அப்பொழுது காலியான பிரதம அமைச்சர் பதவிக்கு திரு.ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் நியமிக்கப்பட்டார். 1994 ஆகஸ்ட் 16 ஆந் திகதியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முடிவுறும்வரை அவர் பிரதம அமைச்சராகப் பணிபுரிந்தார். பாராளுமன்றத்தில் பிரதான எதிர்த்தரப்பு அரசியல் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி மாறிய பின்னர் திரு.விக்கிரமசிங்கா எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படவில்லை. அதற்குக் காரணம், 1994 ஆகஸ்ட் மாதத்தில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் இரகசிய வாக்கெடுப்பொன்றின் வாயிலாக திரு.காமினி திசாநாயக்கா அவர்கள் எதிர்க்கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமையாகும். அதன்பின்னர், 1994 டிசெம்பர் மாதத்தில் திரு.காமினி திசாநாயக்கா அவர்களது எதிர்பாராத படுகொலையின் பின்னர் திரு.ரணில் விக்கிரமசிங்கா எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். இவ்விசாரணையோடு தொடர்புகொண்ட காலப்பகுதியில் (1988 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 1990 டிசெம்பர் 31 ஆந் திகதிவரை) திரு.விக்கிரமசிங்கா இளைஞர் தொழில்வாய்ப்பு அமைச்சராகவும் (1989 சனவரி மாதம் இறுதிவரை) அதன்பின்னர் கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சராகவும் பணிபுரிந்துள்ளார். இக்காலப்பகுதியில் அவர் கம்பஹா மாவட்டத் தேர்தல் தொகுதியினைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். ஆயினும், அவருடைய உண்மையான (நடப்பின்படி உண்மையான) பிரதிநிதித்துவம், கம்பஹா மாவட்டத்துக்குள் வரும் பியகம தேர்தல்தொகுதியோடு சம்பந்தப்பட்டிருந்தது. சப்புகஸ்கந்த நகரமும் பட்டலந்த கிராமமும் பியகம தேர்தல் தொகுதியில் உள்ள பிரதேசங்களாகும்.

**IX ரஞ்சித் விக்கிரமசிங்கா**

1958 இல் பொலிசுக் கொன்ஸ்டபிள் ஒருவராகப் பொலிசுத் திணைக்களத்தைச் சேர்ந்த இவர் 1972 ஆம் ஆண்டில் பொலிசுச் சார்ஜன்டாக பதவி உயர்த்தப்பட்டார். 1982 ஆம் ஆண்டில் பொலிசு உதவிச் சோதனைகாரராகப் பதவி உயர்த்தப்பட்டார். 1988 இல் பொலிசுச் சோதனைகாரராகப் பதவி உயர்வுபெற்ற அவர் 1994 இல் பிரதான பொலிசுச் சோதனைகாரராகப் பதவி உயர்த்தப்பட்டார். அவர் இவ்வாணைக்குழுவின் முன்னிலையில் சான்றுகளை வழங்குவதற்குச் சில வாரங்களுக்கு முன்னரே பொலிசுச் சேவையிலிருந்து இளைப்பாறினார்.

1978 மார்ச்சு மாதத்தில் அவர் களனி பொலிசுப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். களனி பொலிசுப் பகுதியின் நாசகாரத் தடுப்புப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தராக திரு.விக்கிரமசிங்கா 1987 பெப்புரவரி மாதத்தில் நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியை அவர் 1990 நவம்பர் மாதம்வரை வகித்தார். களனி பொலிசுப் பகுதிக்கு வெளியே மிகக் குறுகியகாலம் பணிபுரிந்த அவர் மீண்டும் களனி பொலிசுப் பகுதிக்கு வந்து அந்தப் பொலிசுப் பகுதியில் 1994 ஆம் ஆண்டின் இறுதிவரை தொடர்ந்து சேவைபுரிந்தார். ஆரம்பத்தில் களனி பொலிசுப் பகுதியின் நாசகாரத் தடுப்புப் பிரிவானது பேலியகொடை பொலிசு நிலையத்தில் இயங்கி வந்துள்ளது.

## அத்தியாயம் III
## பாதுகாப்பு சீரழிதலும், வன்முறைகள் அதிகரித்தலும்

### மக்கள் விடுதலை முன்னணி

மக்கள் விடுதலை முன்னணி 1960 களின் பிற்பகுதியில் தோற்றம் எடுத்தது. அக்கட்சியின் தலைவரான பட்டபெந்தி தொன் நந்தசிறி ரோஹண விஜேவீர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பீக்கிங் கிளையிலிருந்து பிரிந்து வந்தவராவர். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் அங்குரார்ப்பண செயற்பாடுகள் 1967 ஆம் வருட இறுதியில் கலத்தாவாவில் இடம்பெற்றுள்ளன. அதன்பின்னர் அக்கட்சியின் பிரதான ஒழுங்கமைப்புச் செயற்பாடுகள் நாட்டின் பல்கலைக்கழகங்களை மையமாகக்கொண்டே இடம்பெற்றுள்ளன. விசேடமாக பேராதனை பல்கலைக்கழகத்தில் ஜே.வி.பி யின் செயற்பாடுகள் 1960 களின் பிற்பாகத்தில் தீவிரமாக இடம்பெற்றுள்ளன. 1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களின் பாராளுமன்ற அரசியலில் பங்கு கொள்வதற்கு மக்கள் விடுதலை முன்னணி கட்சி நேரடியான முயற்சிகள் எதுவும் எடுக்கவில்லை எனத் தெரிகின்றது. 1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல்களுக்கான தேர்தல் பிரசார இயக்கத்தின்போது மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஆர்வலர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு அளித்துள்ளனர். என்றாலும், ஆரம்பத்திலிருந்தே புலனாகிய விடயம் யாதெனில் மக்கள் விடுதலை முன்னணி பாரம்பரிய இடதுசாரி அரசியல் சக்திகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு அளிக்கவில்லை என்பதேயாகும். உண்மையில், அவர்கள் பழைய இடதுசாரிக் கட்சிகளுக்கு முற்றாகவே எதிரான போக்குடையவர்களாக இருந்தனர் என்பதைத் தெரிவிக்கும் சான்றுகள் உள்ளன.

புதிய அரசாங்கம் தாபிக்கப்பட்டவுடனேயே மக்கள் விடுதலை முன்னணி தமது பொதுக்கூட்டங்களின்போது அரசாங்கத்தைக் கண்டித்து கண்டனம் செய்யத் தொடங்கியது. அந்தக் கண்டனங்களுக்குப் பின்புறத்தில் மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்துக்கு எதிராகப் புரட்சியொன்றைச் செய்ய நடவடிக்கை எடுத்து வந்தது. 1971 ஆம் ஆண்டில் ஏப்பிரல் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து மக்கள் விடுதலை முன்னணி அன்றைய அரசாங்கத்துக்கு எதிராக மாபெரும் தாக்குதலொன்றை மேற்கொண்டது. அண்ணளவாக 100 பொலிசு நிலையங்களும் முக்கிய அரசாங்கத் தாபனங்களும் தாக்குதலுக்கு உட்பட்டன. சில பொலிசு நிலையங்கள் தாக்குநர்களால் கைப்பற்றப்பட்டன. சுதந்திர இலங்கையில் இத்தகைய கிளர்ச்சியொன்று எக்காலத்திலும் ஏற்பட்டிருக்கவில்லை. முன்னாள் பிரதம அமைச்சரான (இன்றும் அவரே தற்கால பிரதம அமைச்சராகப் பதவி வகிக்கின்றார்) திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களது தலைமையிலான அக்காலத்து ஐக்கிய முன்னணி அரசாங்கம் அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தி அக்கிளர்ச்சியை அடக்க நடவடிக்கை எடுத்தது. முழுநாடும் சிலநாட்களாக ஊரடங்குச் சட்டத்தின் கீழ் ஆளப்பட்டது. அதன்பின்னர் ஏராளமான கிளர்ச்சியாளர்களை உடனே கைதுசெய்ததன்மூலம் மக்கள் விடுதலை முன்னணியால் தொடுக்கப்பட்ட தாக்குதலை அடக்க படைதாங்கு சேவைகளும் பொலிசுப் படையும் நடவடிக்கை எடுத்தன. 1971 ஆம் ஆண்டின் மார்ச்சு மாதம் 13 ஆந் திகதியன்று கிளர்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னரே ரோஹண விஜேவீர கைதுசெய்யப்பட்டு கிளர்ச்சி முடிவுறும்வரை யாழ்ப்பாண மறியற்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இப்பொழுது கிடைத்துள்ள தகவல்களின்வண்ணம், சுமார் 16,500 பேர்கள் இத்தாக்குதலின்போது அல்லது தாக்குதல் முறியடிப்பின்போது கொல்லப்பட்டனர் அல்லது புரட்சியோடு தொடர்புடைய சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்டனர் என அறியக்கூடியதாக உள்ளது.

கிளர்ச்சிபற்றி விசாரணை செய்த விசாரணையாளர்கள் முகம்கொடுத்த பல்வேறு பிரச்சினைகளையும், நடவடிக்கை முறைச் சட்ட ஏற்பாடுகளின் தன்மையினையும், சான்றுகளின் ஏற்கத்தகுநிலை பற்றிய ஏற்பாடுகளையும், கருத்திற்கொண்டு, அன்றைய அரசாங்கம், கிளர்ச்சிக்கார சந்தேகநபர்கள் தொடர்புகொண்டிருந்த வழக்குகளைக் கேட்பதற்கும், தீர்மானிக்கவும் புதிய நியாயசபையொன்றை அறிமுகப்படுத்தியது. 1972 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் குற்றவியல், நீதி ஆணைக்குழுச் சட்டத்தை அறிமுகப்படுத்தி இந்த நியாயசபை நியமிக்கப்பட்டது. கிளர்ச்சியோடு சம்பந்தப்பட்ட முறையில் கிளர்ச்சி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்களுக்குச் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு இந்த நிலையான ஆணைக்குழுவுக்குச் சட்டமுறைப்படி தத்துவம் அளிக்கப்பட்டு இருந்தது. இக்காலப்பகுதிக்கான ஆணைக்குழுக்களைப்போல் அல்லாது, குற்றவியல் நீதி ஆணைக்குழுவுக்கு குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களின்மீது தண்டனைகளை விதிப்பதற்குத் தத்துவம் அளிக்கப்பட்டு இருந்தது. இந்தத் தன்னிகரற்ற சட்டத்தின் பிரதான ஏற்பாடுகளில் ஒன்றாக, சந்தேகநபர்களால் பதவிவரிசைகளைப் பொருட்படுத்தாமல் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குமூலங்களை (குற்றஒப்புதல்களும் உள்ளிட்டவாறு) சான்றுகளாக ஏற்றுக்கொள்ள அந்த ஆணைக்குழுவுக்குத் தத்துவம் அளிக்கப்பட்டிருந்தமை அமையும். இதே ஆணைக்குழுவால் சட்டவிரோதமாக வெளிநாட்டுச் செலாவணியை திருடி நாட்டிலிருந்து வெளியே கொண்டுசென்ற சில ஆட்களுக்கு எதிராகவும் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை மீறியவர்களாகக் குற்றம்சாட்டப்பட்ட சில ஆட்களுக்கு எதிராகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. குற்றவியல் நீதி ஆணைக்குழுவானது அதன் விசாரணைகளை 1972.07.22 ஆந் திகதியில் ஆரம்பித்து, 1974.12.20 ஆந் திகதிவரை வழக்குகளைத் தொடர்ந்தும் விசாரணை செய்தது. அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குச் சதிசெய்தல், அரசாங்கத்துக்கு எதிராகப் போர்புரிதல் முதலிய தவறுகளைச் செய்தமைக்காக நாற்பத்தொரு(41) ஆட்களுக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் 13 ஆவது குற்றம்சாட்டப்பட்டவராவார். குற்றவாளிகள் சிலர் வழக்குரைஞர்களால் ஆதரிக்கப்பட்டு எதிர்வாதம் கூறப்பட்டனர். எனினும், விஜேவீரா தம்மை ஆதரித்து தாமே எதிர்வாதம் செய்தார். சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த விசேட வழக்குத்தொடுநர் குழுவொன்றினால் வழக்குத்தொடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அக்குழுவில் அப்போதைய பகிரங்க வழக்குத் தொடுப்புகள் பணிப்பாளரான திரு.ரஞ்சித் அபேசூரியா, சிரேட்ட அரச வழக்குரைஞர் திரு.திலக் மாரப்பன, சிரேட்ட அரச வழக்குரைஞர் திரு.சரத் என் சில்வா(இவர்களுள் பின்னர் கூறப்பட்ட இருவர் இலங்கையின் சட்டமா அதிபர்களாக பின்பு பதவி உயர்த்தப்பட்டவர்கள் ஆவர்) அங்கம் வகித்தனர். 1974.12.20 ஆந் திகதி ஆணைக்குழு 36 குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றத்தீர்ப்பு அளிக்கும் கட்டளையினைப் பிறப்பித்தது. குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு 12 வருட சிறைத்தண்டனைகள் வரையான சிறைத்தண்டனைகள் விதிக்கப்பட்டன. அதன்வண்ணம், மக்கள் விடுதலை முன்னணியின் அனைத்து முக்கிய தலைவர்களும் சிறைத்தண்டனைக்கு ஆளாகினர். அவர்கள், ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் முடிவுறும்வரை தொடர்ந்து சிறையிலிடப்பட்டு இருந்தனர்.

கட்சித்தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்களெனினும் கிடைத்த சான்றுகளின்வண்ணம் 1970 களின் நடுப்பகுதியளவில் கட்சியின் மீளமைப்பு ஆரம்பமானது எனத் தெரிகின்றது. 1977 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல்கள் பிரகடனப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் சுற்றயல் அமைப்பாளர்கள் மும்முரமாகச் செயல்பட்டிருந்தனர். அத்துடன் அவர்கள், இடதுசாரி முதலாளித்துவ அரசியல் சக்தியாக அக்காலப்பகுதியில் இனங்காணப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேரடியாக ஆதரவு அளிக்கவும் முற்பட்டனர். எதிர்பார்த்தவாறு, 1977 யூலை மாதப் பொதுத் தேர்தல்களின்போது பாராளுமன்ற ஆசனங்களின் 4/5 % ஆசனங்களில் வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தவுடனே, 1977 ஆம்

ஆண்டு ஒக்தோபர் மாதத்தில், அரசாங்கம் குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டத்தினை நீக்கும் வகையில் அமைந்த சட்ட மசோதாவொன்றைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தது. இந்தச் சட்டவாக்கம் நிறைவேற்றப்பட்டதுடன், குற்றவியல் நீதி ஆணைக்குழுவின் கட்டளைகளின் கீழ் சிறைப்படுத்தப்பட்டிருந்த ஆட்கள் அனைவரும், அக்காலத்து பிரதம அமைச்சரான திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தன அவர்களது ஆலோசனையின்பேரில் செயல்பட்ட அப்போதைய மகாதேசாதிபதியால் வழங்கப்பட்ட மன்னிப்பொன்றின்மீது சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். அதன்வண்ணம், 1977 நவம்பர் 02 ஆந் திகதியில் ரோஹண விஜேவீரா சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். ரோஹண விஜேவீராவையும் அவருடைய குழுவினரையும் விடுதலை செய்தமைக்கான காரணங்கள் சம்பந்தப்பட்ட தீர்மானத்தை எடுத்தவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தன. அரசியல் பகுப்பாய்வாளரான ரோஹான் குணரத்னாவுக்கு பிரதம அமைச்சர் ஜே.ஆர்.ஜயவர்த்தனா அளித்த பேட்டியொன்றின்போது, ரோஹண விஜேவீராவும் அவருடைய குழுவினரும் "கொடுங்குற்றவாளிகளாக அல்லாமல் அரசியல் கைதிகளாக" இருந்தபடியால்தான் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கும்படி மகாதேசாதிபதிக்குத் தாம் ஆலோசனை கூறினாரென அவர் குறிப்பிட்டு இருந்தார். "நான் அவரை விடுதலை செய்யவில்லையாயின் அவர் நெல்சன் மண்டேலாவாக உருமாற்றம் அடைந்திருப்பார்" என மேலும் அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும், இச்செயலினால் நன்மைபெற்ற முக்கிய ஆள் ஒருவரால் இந்த மன்னிப்புப்பற்றி பின்வருமாறு கூறியிருந்தார்- "மாணாக்கர்களும் இளந்தலைமுறையினரும் எம்மை உறுதியாக ஆதரித்து வந்தனர். எமது விடுதலைக்கு அவர்கள் மேற்கொண்ட போராட்டங்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் சிலர் குற்றவியல் நீதி ஆணைக்குழுவால் சிறைப்படுத்தப்பட்டு இருந்தமையும் காரணமாக அமைந்தது" - ரோஹண விஜேவீரா - (த வீக்கண்ட், சன் ஆகிய பத்திரிகைகள்- 1978 யூலை 09 ஆந் திகதி). எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் திரு.அனுர பண்டாரநாயக்கா, ரோஹண விஜேவீராவையும் ஏனையோரையும் விடுதலை செய்தமைபற்றி பின்வருமாறு கூறியிருந்தார் - "நாங்கள் (1970 - 1977 காலப்பகுதிக்கான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைக் குறிக்கின்றது. சட்டத்துக்கு ஏற்புடையவாறு அவர்கள் விடயத்தில் நடவடிக்கை எடுத்தோம். சட்ட நீதிமன்றங்கள் மறியற் தண்டனையை விதித்தன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்கான தமது திறமுறை என்ற வகையில் சனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்களைச் சிறைப்படுத்தியிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக அவர்கள் "ஜே.வி.பி யினர்" செயற்படுவார்கள் எனக் கருதி ஜே.வி.பி தலைவர்களை விடுதலை செய்தார். இந்தத் திறமுறையானது மிக மோசமான வடிவத்தைக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிரான சக்தியாக உருமாற்றம் பெற்றது". (1980 களின் பிற்பகுதியில் திரு.பண்டாரநாயக்கா அவர்களால் அரசியல் பகுப்பாளரான ரோஹான் குணரத்னவுக்கு அளிக்கப்பட்ட பேட்டியிலிருந்து).

1978 ஆம் ஆண்டில் ஜே.வி.பி தலைவர்கள் விடுதலை பெற்றவுடனேயே கட்சியை மீளமைப்புச் செய்யும் பணியினை ஆரம்பித்தனர். மே தின ஊர்வலங்களைக் கொண்டும் மே தினக் கூட்டங்களைக் கொண்டும் அந்த ஒழுங்கமைப்பின் தன்மை அறியக்கூடியதாக இருந்தது. 1971 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியை அடக்குவதற்கு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களது அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள்பற்றி பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல் வாயிலாக அவர்கள் தமது தாக்குதல்களை ஆரம்பித்தனர். அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்துகொண்ட மக்கள் விடுதலை முன்னணி, பாராளுமன்ற சனநாயக அரசியலில் நேர்மையாக அக்கறை கொண்டிருந்தது என வெளிக்காட்டியது. 1979 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு அவர்கள் எடுத்த முயற்சியைக்கொண்டு இதனை அறியலாம். எவ்வாறாயினும், அவர்கள் மிகக் கடுமையான பணியினை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர். தேர்தல் ஆணையாளர் பதிவுசெய்யப்பெற்ற அரசியல் கட்சியாக மக்கள் விடுதலை முன்னணியை அங்கீகரிக்க மறுப்புத் தெரிவித்தார். பிரதான அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்து செயற்படுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி பின்தங்கியிருப்பதற்கு இத்தகைய நிறைவேற்றுத்துறையினரின்

செயல்கள் துணைபுரிந்தனவெனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. மேலும், இக்காலப்பகுதியில் அரசியல் குண்டர்கள் மேற்கொண்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலையும் மக்கள் விடுதலை முன்னணிக்கு ஏற்பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில், ஜீப்வண்டி ஒன்றிலும் இ.போ.ச வண்டியொன்றிலும் வந்த குழுவொன்று கட்சிச் செயல் வீரர்களைத் தாக்கி கொழும்பு பல்கலைக்கழகத்தின் கவின்கலை கல்வி நிறுவகத்தில் அமைந்திருந்த அவர்களது கட்சிக் காரியாலயத்தில் இருந்த ஆதனங்களையும் சேதப்படுத்தியது. வெகுசக்திவாய்ந்தவர்களின் எதிர்ப்புகள் நாளுக்குநாள் அதிகரிப்பதையும் பொருட்படுத்தாமல் முதன்முதலாக நடாத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களுக்காக 1981 யூன் மாதத்தில் மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர்களை அமர்த்தியது. கொழும்பு மாநகரத்தில் மட்டும் அவர்களுடைய வேட்பாளர்கள் அண்ணளவாக வாக்குகளின் 8% தைப் பெற்றுக்கொண்டனர். உண்மையில் சில பிரதேசங்களில் மக்கள் விடுதலை முன்னணியால் அமர்த்தப்பட்ட வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

1982 ஒக்தோபர் மாதம் 20 ஆந் திகதியன்று இலங்கையில் முதலாவது சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் அறுவர் இத்தேர்தலில் போட்டியிட்டனர். அப்போது பதவி வகித்த சனாதிபதியான திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தன, திரு.ஹெக்டர் கொப்பேகடுவா, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா, திரு.குமார் பொன்னம்பலம், திரு.வாசுதேவ நாணயக்கார, திரு.ரோஹண விஜேவீரா ஆகியோர் அந்த அறுவராவர். சனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா இத்தேர்தலின்போது வெற்றியீட்டினார். பாரம்பரிய வலதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களைத் தோற்கடித்து ரோஹண விஜேவீரா மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். ஒரு கட்சி என்ற வகையிலே மக்கள் விடுதலை முன்னணி அளிக்கப்பட்ட வாக்குகளில் 4.19% தைப் பெற்றுக்கொண்டது. இது மக்கள் விடுதலை முன்னணி பலம்கொண்ட கட்சியாக மாறிவருவதை எடுத்துக் காட்டியது.

1982 டிசெம்பர் 22 ஆந் திகதியில் இந்த நாடு கண்ட முதலாவது மக்கள் தீர்ப்பும் இடம்பெற்றது., பொதுத்தேர்தலொன்றை நடாத்தாமல் பாராளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடிப்பதற்குப் பொதுமக்கள் விரும்புகிறார்களா என்பதை அறிவதற்கு அரசாங்கத்தினால் இந்த மக்கள் தீர்ப்பு முன்வைக்கப்பட்டது. இந்த மக்கள் தீர்ப்பின்போது அரசியல் கட்சிகள் அனைத்தும் மிகத் தீவிரமாகப் போட்டியிட்டன. ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு பிரசாரம் செய்த அதேநேரத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளும் அப்பதவிக் கால நீடிப்புக்கு எதிராகப் பிரசாரம் செய்தனர். குறுகிய பெரும்பான்மையுடன் (அதாவது, 54.7% தினர் சார்பாகவும், 45.3% தினர் எதிராகவும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் 75.8% தினர் வாக்களித்து ) பொதுத் தேர்தலொன்றை நடாத்தாமல் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

1983 மே மாதத்தில் மக்கள் தீர்ப்பின்போது ஆட்சிபுரிந்த ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி கண்ட ஆசனங்களில் இடைத்தேர்தல்கள் அரசாங்கத்தினால் நடாத்தப்பட்டன. பொதுத் தேர்தலொன்று நடாத்தப்படவில்லையாதலால், இந்த இடைத்தேர்தல்கள் "சிறிய பொதுத் தேர்தலொன்றாக" கருதப்பட்டது. அரசியல் கட்சிகள் அனைத்தினாலும் இத்தேர்தல்களின்போது மிகுந்த அக்கறை காட்டப்பட்டது. மொத்தமாக பதினெட்டு(18) ஆசனங்களில் இடைத்தேர்தல்கள் நடாத்தப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி பதின்நான்கு(14) ஆசனங்களை வென்றெடுத்ததுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மூன்று (3)ஆசனங்களையும் மகஜன எக்சத் பெரமுனை ஒரு(1) ஆசனத்தையும் வென்றெடுத்தன. மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர்கள் குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்றெடுத்தனர். இடைத்தேர்தல் முடிந்தவுடனேயே அரசாங்கம் நாட்டில் அவசரகால நிலையொன்றைப் பிரகடனப்படுத்தியது.

மக்கள் தீர்ப்பு நடாத்தப்பட்ட முறையோடும் தேர்தல்களுக்கான பிரசார இயக்கத்தின்போதும் தேர்தல் இடம்பெற்ற தினத்தின்போதும் சக்திவாய்ந்த நபர்கள் சிலர் நடந்துகொண்ட விதத்தோடும் தொடர்பு கொண்ட சச்சரவின் அடிப்படையிலேயே, 1983 பெப்புரவரி மாதத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், மக்கள் தீர்ப்பின் சட்டமுறையான தன்மைபற்றியும் அதன் பிரகடனப்படுத்தப்பட்ட பெறுபேறுகள் பற்றியும் தேர்தல் ஆணையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்தார். இந்த வழக்கினை உரிய முறையில் விசாரணை செய்வதற்கு முன்னர் என்றுமே கண்டிராத பேரிடர் ஒன்றை இலங்கை எதிர்நோக்கியது.

**ஜே.வி.பி தடைசெய்யப்படுகின்றது........வன்முறை ஆரம்பமாகின்றது**

1983 யூலை, 21 ஆந் திகதி இரவு, நாடு ஒரே தீப்பிழம்பாக மாறியது. பிரிவினைவாத பயங்கரவாதிகளால் யாழ்ப்பாணத்தில் 13 ஆயுதப்படையினர் குரூரமாகக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இது நிகழ்ந்தது. பெரும்பான்மை சிங்களவர்கள் வாழ்ந்த பல பகுதிகளில் சிறுபான்மைத் தமிழர்களின் வீடுகள், வியாபாரத்தாபனங்கள், மற்றும் சொத்துக்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டன. அதிக எண்ணிக்கையான தமிழ்ப் பொதுமக்கள் குரூரமாகக் கொல்லப்பட்டனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்த அநேகமான தமிழர்கள் அகதிகளானார்கள். அகதிகளில் சிலர் வடமாகாணத்துக்கு சென்றதோடு, ஏனையோர் அண்டைநாடான இந்தியாவை நோக்கிச் சென்றனர். பின்னர், குறிப்பிடத்தக்க காலதாமதத்துக்குப் பின்னர், ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு, படிப்படியாக நாடு வழமைக்குத் திரும்பியது.

இனவாதக் கலகங்களுக்கு ஜனதா விமுக்தி பெரமுனை, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் நவசமசமாஜக் கட்சி போன்ற மூன்று கட்சிகளினதும் முன்னோடிகளே பொறுப்பானவர்கள் என்ற அடிப்படையில் குற்றம் சுமத்தி 1983 யூலை 31 ஆந் திகதியன்று சனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா அக்கட்சிகளைத் தடைசெய்தார். மிகவும் இயல்பாகவே இக்கட்சிகளின் தலைவர்கள் தலைமறைவாகினர். இக்கட்சிகளின் தலைவர்களைக் கைதுசெய்து முன்னிறுத்தும்படி சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டபோதிலும் அவர்களுக்கு அவ்வாறு செய்யமுடியவில்லை. முக்கிய தலைமைத்துவம் தொடர்ந்து தலைமறைவாக இருந்த அதேவேளை சில செயல்வீரர்களைக் கைதுசெய்வதில் பொலிசார் வெற்றி கண்டனர். 1983 ஒக்தோபர் 08 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தில் ரோஹண விஜேவீரா, யூலை இனக்கலவரத்துக்குத் தனது கட்சி உடந்தையாக இருந்ததென்பதை மறுத்ததோடு சனநாயக அரசியல் அமைப்புக்கள் ஜே.வி.பி தொழில்படுவதற்கு இயலுமான வகையில் அதன்மீது விதித்திருந்த தடையை அகற்றுமாறு சனாதிபதி ஜயவர்த்தனாவைக் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில், 1983 யூலை இனக்கலவரக் காலப்பகுதியில் நடந்த வன்முறைச் செயல்கள்பற்றி பொலிசு புலனாய்வை மேற்கொண்டது., தொடப்புடைய புலனாய்வுகளின் காண்புகளின் அடிப்படையில் சந்தேகத்துக்கு உரியவர்கள் கைது செய்யப்பட்டனர். அதன்பேரில் போதிய சான்றுகள் இருந்தவர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபர் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடுத்தார். இவ்விடயங்களின் விளைவு சுவாரசியமானது. திரு.ரணில் விக்கிரமசிங்கா, அவரை விசாரணை செய்த வழக்குரைஞரோடு இணங்கியதோடு 1983 யூலை இனக்கலவரங்கள் நடந்த வன்முறைச் செயல்கள் புரிவதில் ஜே.வி.பி அல்லது நவ சமசமாஜக் கட்சியின் ஒரு தனி செயல்வீரர் ஒருவரேனும் குற்றப்பொறுப்புடையவராக இருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொண்டார். இதிலிருந்து 1983 இனக்கலவரத்துக்கு ஜே.வி.பி யோ அல்லது நவ சமசமாஜக் கட்சியோ பொறுப்புடையது என்பதை நிரூபிக்க முடியாதுள்ளது. எவ்வாறாயினும், ஜே.வி.பி மீதான தடை விதிப்பு தொடர்ந்தது. இச்சந்தர்ப்பத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளில் ஆசனங்களை வைத்திருந்த ஜே.வி.பி இன் பிரதிநிதிகள் சபையின்

மூன்று அமர்வுகளுக்கு அதிகமாகத் தொடர்ந்தும் சமூகம் அளிக்காததன் காரணமாக அவர்களது ஆசனங்களை இழந்தனர். நடைமுறையில் ஜே.வி.பி யானது சனநாயக அரசியல் நிறுவனங்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை.

1985 அளவில் ஜே.வி.பி இன் ஒருங்கிணைந்த மீளமைப்பொன்று நாட்டில் நடந்துகொண்டிருக்கின்றது என்ற தகவல் பொலிசு உளவுத்துறை முகவராண்மைகளுக்குக் கிடைக்கப்பெற்றது. 1960 இன் பிற்பகுதியில் பல்கலைக்கழகங்களில் சுறுசுறுப்பான பிரசாரமும் அமைப்பாக்கமும் நடந்துகொண்டு இருந்தது. அரசியலரங்கில் ஜே.வி.பி இன் தோற்றத்தை நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட சுவரொட்டிப் பிரசாரம் கோடிட்டுக் காட்டியது. அநேகமான ஜே.வி.பி இன் சுவரொட்டிகள் ஆட்சியிலிருக்கும் ஐ.தே.கட்சி அரசாங்கத்தை நேரடியாகவே எதிர்ப்பதாக இருந்தது. இதன் முக்கிய கருத்துக்களாக கட்சித் தடையையும் மக்களது பொருளாதார வளங்களில் ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றமையும் மையப்படுத்தப்பட்டிருந்தது. இனநெருக்கடி தொடர்பில் அரசாங்கம் நடந்துகொள்ளும் தன்மைபற்றி அவர்களும்கூட அதிருப்தியை வெளிக்காட்டினர். இதே காலப்பகுதியில் அரசியல்ரீதியாக முனைப்படுத்தப்பட்ட குற்றங்கள் ஜே.வி.பி யின் முற்போக்கு உறுப்பினர்களால் செய்யப்பட்டு வருகின்றது என்ற தகவல் உளவுத்துறைச் சேவைகளுக்கும் கிடைத்திருந்தன. ஆரம்பத்தில் அநேகமான குற்றங்கள், களவுகள், கொள்ளைகள் என்ற வடிவத்திலேயே இருந்தன. இத்தகைய குற்றங்கள் ஜே.வி.பி யினருக்கு நிதி சேகரிப்பதற்காகவே செய்யப்பட்டு வருகின்றன என்பது தெரியவந்தது. அதன்பின்னர் வேறு வடிவிலான குற்றங்களும் நடக்கலாயின. ஆயுதங்கள் களவாடப்பட்டதோடு அரசாங்கத்தின் சொத்துக்களுக்குச் சேதமும் விளைவிக்கப்பட்டன. கட்சி உறுப்பினர்களின் சுறுசுறுப்பான அணிதிரட்டலும் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. ஜே.வி.பி. யானது ஐ.தே.கட்சி அரசாங்கத்துக்கு எதிராக மற்றுமொரு ஆயுதக் கலவரத்தை ஏற்படுத்துவதற்கு மிகக் கவனமாகத் தயாராகிக் கொண்டிருக்கின்றது என்பது தெளிவாக உணரப்பட்டபோது, ஜே.வி.பி இன் இந்த நடவடிக்கையானது, கட்சியின் நியாயமற்ற தடையின் காரணமாகவும் அதன்மூலம் ஜே.வி.பி பகிரங்கமாக தனது அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்துவது தடைசெய்யப்பட்டிருப்பதன் காரணமாகவும் ஏற்பட்டதென சில அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தனர். சனநாயக பிரதான நீரோட்டத்தில் எவ்வித கடமைப்பங்கும் அவர்களுக்கு இருக்கவில்லை. அன்று பதவியிலிருந்த அரசாங்கம் சனநாயகமற்ற முறையில் செயல்படும் நிலைக்கு ஜே.வி.பி யைத் தள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்ததோ என அரசியல் விமர்சகர்கள் வினாவினர்.

1987 யூன் 04 ஆந் திகதியன்று இந்திய விமானப்படையினரால் இலங்கையின் வடபுலத்தில் "மனிதாபிமான உதவி" என்ற பெயரில் அபகீர்த்திமிக்க வகையினைத் தேடிக்கொண்ட ஆகாயமூலம் பொதிகளை போட்டவுடனே, பிரிவினைவாதப் பயங்கரவாதிகளான எல்.ரீ.ரீ.ஈ யினருக்கு' எதிரான "வடமராட்சி நடவடிக்கையைக்" கைவிடுவதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. 1987 யூன் 29 ஆந் திகதியன்று சனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும், இந்தியப் பிரதம அமைச்சர் ராஜீவ் காந்தியும் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இந்திய இலங்கைச் சமாதான உடன்படிக்கை எனக் குறிப்பிடப்பட்ட உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதையடுத்து நாடு வன்முறைமயமாக மாறியது. அரசாங்க நிறுவனங்கள் தீமூட்டப்பட்டதோடு அரசாங்கச் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. 1983 யூலை கலவரத்தைப் போலன்றி இந்து-இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிரான ஏனைய சக்திகளுடன் ஜே.வி.பி செயல்வீரர்களும்கூட இச்செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதைக் கிடைத்த விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அப்போதைய அரசாங்கத்துக்குள்ளும் வெளியேயும் இருந்த மற்றும் சில அரசியல் சக்திகளும்கூட பகிரங்கமாகவே உடன்படிக்கைக்கு எதிராக இருந்தன என்பது கவனிக்கப்பட்டது. "சமாதான ஒப்பந்தம்" செய்துகொண்ட காலப்பகுதிக்கு உடனடி முந்தியகாலத்தில் ஜே.வி.பி யானது தேசாபிமான போராட்டமொன்றினூடாக சோசலிஷப் புரட்சியொன்றுக்குத் தீவிரமாகப் பிரசாரம் செய்துகொண்டிருந்தது. அரசாங்கம் இந்தியாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டதன் பிறகு ஜே.வி.பி யினர் அதனை இந்திய ஏகாதிபத்தியம்

என அழைத்து அதற்கு எதிராகப் பகிரங்கமாகவே கிளர்ச்சி செய்தனர். இலங்கையின் வடக்கிலிருந்து இந்திய அமைதிகாக்கும் படையை வாபஸ்பெற்றுக்கொள்ளுமாறு அவர்கள் பிரசாரம் செய்தனர். இதே சந்தர்ப்பத்தில் பிரதம அமைச்சர் ரணசிங்கா பிரேமதாசா கூட நாட்டில் இந்திய அமைதி காக்கும் படை நிலைகொண்டிருப்பதற்கு எதிராகவே இருந்தார் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இருந்தது. உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக இருந்த திரு.பிரேமதாசா சனாதிபதி தேர்தல் பிரசார காலப்பிரிவில் அவர் நாட்டின் சனாதிபதியாகத் வந்தவுடன் இந்திய அமைதி காக்கும் படையினை திருப்பி அனுப்புவதை உறுதிப்படுத்துவார் என பகிரங்கமாகக் கூறினார். பின்னர், 1988 ஏப்பிரல் மாதத்தில் "ஜே.வி.பி யினரும் எல்.ரீ.ரீ.ஈ யினரும் சமூக அரசியல் அநீதிகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதாலேயே தமது போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுகின்றனர்" என பிரதம அமைச்சர் ரணசிங்கா பிரேமதாசா கூறினார்.

1987 ஆகஸ்ட் மாதத்திலிருந்து நாட்டின் பாதுகாப்பு நிலைமை படிப்படியாகவும் இடையறாதும் சீரழிந்தது. அரசியல்வாதிகளின் உயிர்களுக்கு ஒரு பாரதூரமான அச்சுறுத்தல் ஏற்பட்டது. ஆட்சிபுரிந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல்வாதிகள் முக்கிய இலக்குகளாக அமைந்திருந்தனர். பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களும் இலக்காக்கப்பட்டிருந்தனர். உயர்நிலை அரசியல்வாதிகளைத் தவிர கிராமமட்டத்து அரசியல் உதவியாளர்களும் இலக்காக்கப்பட்டிருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அண்ணளவாக 1960 உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. அங்ஙனம் கொலை செய்யப்பட்டவர்களுள் ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுச் செயலாளர்கள் இருவரும் அடங்குவர். திரு.ஹர்ஷ அபேவர்த்தனா (1987.12.23 ஆந் திகதியிலும்) , நந்தலால் பெர்ணாந்துவும், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கொலை செய்யப்பட்டனர். மேலும், சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்களும் இலக்காக்கப்பட்டனர். அக்காலத்தில் ஜே.வி.பி செயற்பாடுகள் சம்பந்தமான உளவுத்துறை பணிகளில் ஈடுபட்டிருந்த சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் திரு.ரெரன்ஸ் பெரேராவும் படுகொலை செய்யப்பட்டார். அதன்பின்னர், "நாசகாரச் செயல்கள் சம்பந்தமான புலனாய்வுகளில் மிகுந்த அக்கறை காட்டிய உத்தியோகத்தரொருவரான" சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் பெனட் பெரேராவும் கொலை செய்யப்பட்டார். அரசாங்க ஆதனங்களுக்குச் செய்யப்பட்ட சேதம் அச்சமூட்டும் நிலையில் அமைந்திருந்தது. சுற்றயலில் அமைந்திருந்த அரசாங்க நிறுவனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அரசாங்க அமைப்பாண்மைகளில் நன்கு ஒழுங்கு செய்து மேற்கொண்ட வேலை நிறுத்தங்கள் இன்னொரு முக்கிய அமிசமாக அமைந்தன. தேசிய போக்குவரத்து ஊழியர்களால் மேற்கொண்ட வேலைநிறுத்தமொன்று காரணமாக அத்தியாவசிய சேவைகள் முற்றாகவே செயலிழந்தன. எழுத்துமூலக் கட்டளைகளைப் பிறப்பிப்பதன் காரணமாக பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் வேலை சடுதியாக இயங்காத நிலை ஏற்பட்டது. இந்த எழுத்துமூலமான கடிதங்கள் தேசப்பிரேமி சனதா வியாபாரய எனக் கூறிக்கொண்ட இயக்கத்தினால் அனுப்பப்பட்டவைகளாகும். அதே நிறுவனத்தினால் விதிக்கப்பட்டதாகக் கூறிய மெய்நடப்பில் அமைந்த ஊரடங்குச் சட்டங்களும் அத்துடன் நடைமுறைக்கு வந்தன. "தேசப்பிரேமி சனதா வியாபாரய" என்னும் இயக்கத்தின் கட்டளைகள் "கீர்த்தி விஜயபாகுவின்" பெயரில் பிறப்பிக்கப்பட்டு இருந்தன. நாட்டில் பெரும்பாலும் அரச கட்டுப்பாடற்ற நிலைமை நிலவியது.

பிரதிப் பொலிசுமா அதிபர் திரு.மெரில் குணரத்னாவின் சாட்சிகளை வைத்து நிலைமையைச் சுருக்கமாகக் கூறுவதாயின், "வழமைக்கு மாற்றமான" நிலை எனலாம். இந்த வழமைக்கு மாற்றமான நிலையை எதிர்கொள்வதற்கு "வழமைக்கு மாற்றமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தது" என அவர் மேலும் கூறுகிறார். அவர் இந்த சொற்களைப் பிரயோகித்தபோது, சாட்சி எதை நாடியிருக்கக்கூடும் என்பதை பகுப்பாய்வு செய்வதற்குக் காலக்கிரமத்தில் நாம் முயற்சி செய்வோம்.

**எதிர் நடவடிக்கை........**

பிரதிப் பொலிசுமா அதிபர்களான மெரில் குணரத்னா, நளின் தெல்கொட ஆகியோரின் கருத்துப்படி, மேற்குறிப்பிட்ட பெரும் வன்முறையின் ஆரம்பக் கட்டத்திலேயே, இவ்வன்முறை நடவடிக்கைகளின் குற்றவாளிகளுக்கு எதிராகச் செயற்றிறன் மிக்கவகையில் பதில் நடவடிக்கை எடுப்பதற்கு, பொலிசாரைத் தூண்டிவிடுதலானது, குறிப்பாக, அவர்கள் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களினால் பயமுறுத்தப்பட்டதனால், அது கடினமானதாக இருந்தது. கனிட்ட பொலிசு உத்தியோகத்தர்களின் புறத்திலிருந்து தெளிவான நடவடிக்கையின்மைகள் மற்றுமொரு காரணம் யாதெனில் அவர்கள் நாசகாரர்களது "எழுச்சிக் கருத்துக்களுடன் உடன்பட்டிருப்பதனால், அவர்களில் சிலர் ஜே.வி.பி இன்பால் குறிப்பிட்ட அளவு அனுதாபம் காட்டியதாலே ஆகும் என்பது அரசியல் விமர்சகர்கள் கருத்தாகும். "இந்திய ஏகாதிபத்தியத்தை நிறுத்துதல்" , "பொருளாதார வளங்களின் விறியோகத்தில் சமநிலையைக் கொண்டுவருதல்", "இந்திய ஆயுதப்படைகளைத் திருப்பி அனுப்புதல்" , "இனநெருக்கடியைத் தீர்த்தல்", "அடிப்படைச் சனநாயக உரிமைகளை ஸ்தாபித்தல்" போன்றன இக்கருத்துக்களில் சிலவாகும்.

1988 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், சனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா, செயற்பாட்டு அரசியலிலிருந்து ஓய்வுபெற்றதோடு, 1988 நவம்பரில் ஓர் சனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. சனாதிபதித் தேர்தலுக்கான பிரதான போட்டியாளராக திரு.ரணசிங்கா பிரேமதாசா (ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பிரதமர்), திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா(தனது சிவில் உரிமை குறிப்பிட்ட காலம் தடை செய்யப்பட்டதன்பின் அண்மையில் மீள வழங்கப்பட்ட முன்னாள் பிரதமர்), திரு.ஒஸி அபேகுணசேகரா(ஐக்கிய சோசலிச முன்னணியின் வேட்பாளர்) ஆகியோர் போட்டியிட்டனர். நாடுதழுவிய வன்முறை, பீதிச் செயல்களின் மத்தியில் சனாதிபதித் தேர்தல் நடந்தது. அளிக்கப்பட்ட வாக்குகளில் 50.43% வீதமான வாக்குகளைப் பெற்ற திரு.ரணசிங்கா பிரேமதாசா குடியரசின் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டார். அத்தேர்தலின் உடன்பின்னர், 1989 பெப்புரவரியில் பொதுத்தேர்தலொன்று நடாத்தப்பட்டது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி 196 ஆசனங்களில் 125 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றியது. திரு.டி.பி.விஜேதுங்கா அவர்கள் பிரதம அமைச்சராகவும், பிரதி தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும், திரு.ரஞ்சன் விஜேரத்ன பாதுகாப்பு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர். நாசகாரர்களினால் செய்யப்பட்டு வரும் அச்சுறுத்தலை எதிர்ப்பது திரு.விஜேரத்னாவின் பணியாக இருந்தது.

முதன்முதலாக, இக்காலப்பிரிவிலேயே எல்லா இராணுவப்படைகள், பொலிசுப்படை என்பவற்றின் அதிகாரிகளை இராஜினாமாச் செய்யும்படி வேண்டி, தேசப்பிரேமி சனதா வியாபாரவினால் வெளியிடப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்பட்ட பல்வேறு சுவரொட்டிகள் நாட்டில் தலைகாட்டின. அவர்கள் இராஜினாமாச் செய்யாவிட்டால், அவர்களும் அவர்களது குடும்பத்தைச் சார்ந்தோரும் கொல்லப்படலாம் என அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. உண்மையிலேயே, இந்தச் சுவரொட்டிகள் தோன்றிய சிறிது காலத்தின் பின்பே, பொலிசு அதிகாரிகள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிலர் கொல்லப்பட்டனர். நளின் தெல்கொடவின் கருத்துப்படி, இதன்பிறகு, நாசகாரர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக, பொலிசு உத்தியோகத்தர்களின் ஆதரவைப் பெறுவது சுலபமானதாக மாறியது. அதிகமான பொலிசு உத்தியோகத்தர்கள் கோபமூட்டப்பட்டதனாலும், கிளர்ச்சியூட்டப்பட்டதனாலும் வலியச்சென்று தொடர்ந்தும் தாக்குவதற்கு தயார் செய்யப்பட்டிருந்தனர்.

1980 இறுதியிலிருந்து பொலிசுப் பிரிவுகளில் நாசகாரத் தடுப்புப் பிரிவு அமைக்கப்பட்டதுடன், நாசகார நடவடிக்கைகள், புலனாய்வுகள் நடத்துதல், சந்தேகத்துக்குரியவர்களைக் கைதுசெய்தல், நாசகார நடவடிக்கைக்கு எதிராகச் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை ஒன்றிணைத்தல் என்பன தொடர்பான உளவுத்துறைசார் விடயங்களை

ஒன்றுசேர்க்கும் ஆரம்ப உத்தியோகபூர்வ பணி நடைபெற்றது. இப்பிரிவுகளானது, அப்பிரிவுகளின் பொறுப்பு உத்தியோகத்தர்களால் தலைமைதாங்கப் பெற்றதோடு உதவிப் பொ.அத்தியட்சகர்(நடவடிக்கைகள்) எனப் பெயரிட்ட உதவிப் பொலிசு அத்தியட்சகர்களின் அவதானத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இப்பிரிவுகள், குறிப்பிட்ட பிரிவின் பிரதான பொலிசு நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்தன. உத்தியோகத்தர்கள் வழமையான பொலிசு வாகனங்களில் மட்டுமல்லாமல் "பொதுமக்கள் தோற்றத்தினைக்கொண்ட பொதுமக்கள் பணிக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களிலும்கூட நடமாடினார்கள்". இந்த வாகனங்களில் சில, உரிய பதிவு இலக்கங்களைக் கொண்டிராததோடு அவை "பழுதுபார்ப்பகங்களின் இலக்கங்களைக்" கொண்டிருந்தமையால் நேரடியாக இனங்காண்பதற்கும் அது சிரமமாக இருந்ததென்பது அவற்றின் நடமாட்டங்களின்மூலம் தெரியவந்தது. ஆணைக்குழு முன் சான்றளித்த அனைத்து பொலிசு உத்தியோகத்தர்களினதும் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இதுவாகத்தான் இருந்தது. இவ்வாறே அந்தந்த நாசகாரத் தடுப்புப் பிரிவுகள் நாசகார அச்சுறுத்தலை பயனுறுதிமிக்க வகையில் எதிர்த்தன.

1980 களின் இறுதியில், இலங்கையில் எண்ணற்ற எண்ணிக்கையான இளைஞர்களின் காணாமல்போதல்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றில் பல விடயங்களில், இந்நபர்களைக் கடத்தியமை தொடர்பான சான்றுகள் இருந்தன. அநேகமானவற்றில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் காட்டும் தடயங்களாவது இருக்கவில்லை. அவ்வாறு கடத்தப்பட்டவர்களில் அநேகமானோர், என்றுமே காணாமல் போனவர்களாகக் கருதப்பட்டனர். மற்றும் சில விடயங்களில் குறுகிய ஒரு காலப்பிரிவின் பின், தோட்டாக்கள் துளைக்கப்பட்ட, சிதைக்கப்பட்ட அவர்களது உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த அமைப்பில் கொல்லப்பட்ட, காணாமல்போன நபர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 40,000 பேர்கள் என உத்தியோகபூர்மற்ற மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பிடத்தக்க கால எல்லையின் பின்னர் கடத்திச் செல்லப்பட்ட நபர்களில் ஒரு சிறு தொகையினர் அரசினால் நடாத்தப்படும் உத்தியோகபூர்வ தடுப்பு நிலையங்களிலும் மற்றும் சிலர் உத்தியோகபூர்வமற்ற தடுப்பு நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற தகவல்கள் குடும்ப உறுப்பினர்களுக்குக் கிடைத்தது. "பட்டலந்தயில் உள்ள அத்தகைய உத்தியோகபூர்வமற்ற சட்டரீதியற்ற தடுப்பு நிலையமொன்று "தொடர்பாகவே இவ்விசாரணையின் முக்கிய விடயம் அமைந்துள்ளது.

இக்காலப் பகுதியில் நாசகாரர்களைக் கட்டுப்படுத்தல் என்ற பெயரில் எதிர்த்தரப்பு அரசியல் குழுக்களின் நபர்களும் (ஜே.வி.பி யினர் தவிர) இலக்கு வைக்கப்பட்டு இருந்தனர் என அதிக எண்ணிக்கையான சார்த்துதல்கள் செய்யப்பட்டுள்ளன. எண்ணற்ற சந்தர்ப்பங்களில் அப்போதைய எதிர்த்தரப்பு உத்தியோகத்தர்கள் அத்தகைய ஆட்கடத்தல்கள்/காணாமல்போதல்கள் தொடர்பாகப் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர் என்பதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அரசதரப்பு அரசியல்வாதிகள் தமது எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளை ஒழித்துக் கட்டுவதற்காகப் பொலிசு உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி வந்தார்கள் என்பதுவே பிரதானமான சார்த்துதலாக இருந்தது. இந்தச் சார்த்துதல்கள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் சில அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த சில பொலிசு உத்தியோகத்தர்களினால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்பது புலனாகின்றது. பட்டலந்த வீடமைப்புத் தொகுதியில் இரு வீடுகளில் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையின் கீழ் நடைபெற்ற பல்வேறு கூட்டங்கள் சம்பந்தமாக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இங்கு திரு.சுரநிமல ராஜபக்ஸ போன்ற ஐக்கிய தேசியக் கட்சியின் சில அரசியல்வாதிகளுடன் இப்பகுதியின் தெரிவு செய்யப்பட்ட பொலிசு உத்தியோகத்தர் சிலரும் வருகை தந்திருந்தனர். மெரில் குணரத்னா, நளின் தெல்கொட, டக்ளஸ் பீரிஸ், ராஜா டயஸ் போன்ற பொலிசு உத்தியோகத்தர்களும் அக்கூட்டங்களில் கலந்து கொண்டனர் என்பது பொதுவாக அறியப்பட்ட விடயமாகும். அந்தக் கூட்டங்களின் பிரதான கருப்பொருள்பற்றி மேற்குறிப்பிட்ட எந்நபருக்கும் ஒரே மாதிரியான சாட்சியங்களை

அளிக்க முடியவில்லை. ஒவ்வொரு நபரினதும் சாட்சியம் ஏனையோரின் சாட்சியங்களுடன் முரண்படுவதாக இருந்தது. இந்தக் கூட்டங்கள் சம்பந்தமாக, எந்த அறிக்கைகளோ, குறிப்புகளோ பேணப்பட்டு இருக்கவில்லை. கூட்டங்களில் கலந்துரை யாடப்பட்ட தலைப்புக்களின் தன்மை சம்பந்தமாக சாட்சிகளும் தெளிவற்று இருப்பதோடு அவைபற்றிச் சாட்சியாளர்கள் முரண்பட்ட சான்றுகளையும் அறிவித்துள்ளனர். திரு.நளின் தெல்கொடவின் கருத்துப்படி இக்கூட்டங்களின் நோக்கம் அரசியல் தலைமைத்துவம் மற்றும் நாசகாரத் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய பிரதேசத்தின் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டல்கள் போன்றவற்றை திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு வழங்குவதற்காக இருந்தது. எவ்வாறாயினும், "கைத்தொழில் அமைச்சர்" , பொலிசு உத்தியோகத்தர்களிடமிருந்து சட்டப்படி எதை எதிர்பார்த்தார்கள் என்பதை சாட்சிக்கு விளக்க முடியாதுள்ளது. இந்த விடயம் பின்னைய அத்தியாயமொன்றில் மேலும் விளக்கப்படும். குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் ஆளும்கட்சியின் அரசியல்வாதிகள் அந்தந்தப் பகுதி பொலிசு உத்தியோகத்தர்களுடன் நெருங்கிய உறவைப் பேணிவந்திருப்பதோடு இத்தொடர்புகளின் அடிப்படையில் என்ன நிகழ்ந்ததென்பதும் தெளிவற்றதாகவே இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதும் தெளிவானதுமான ஒரு விடயமாகும்.

**ஜே.வி.பி கட்டுப்படுத்தப்படுகின்றது........**

1989 ஆரம்பப் பகுதியளவில் அரசாங்கத்தினால் முன்கொண்டு செல்லப்பட்ட நாசகாரத் தடுப்பு நடவடிக்கைகள் அதன் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தன. பொலிசு, தரைப்படையின் பல்வேறு பிரிவுகளுக்கு மேலாக வேறு சில குழுக்களும் செயற்பட்டுக்கொண்டிருந்தன. இக்குழுக்கள் "விழிப்புணர்வுக் குழுக்கள்" என்ற பொதுப்பெயரில் தோன்றியிருந்தன. "இப்ரா", "கொலகொட்டி (பச்சைப்புலிகள்)", "கறுப்புப் பூனைகள்", "திவி மக்குளுவா" மற்றும் "கஹபலல்லோ(மஞ்சல்பூனைகள்)" போன்ற தனியான பெயர்களினாலும் இக்குழுக்கள் அழைக்கப்பட்டிருக்கின்றன. இக்குழுக்களின் பிரதான தொழிற்பாடு நாசகார வேலையில் ஈடுபடும் சந்தேகத்துக்குரியோரைக் கைதுசெய்து அவர்களை அழிப்பதாகும் என்பது சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளுக்காக கைதுசெய்யப்பட்டமைபற்றிய ஒரு சந்தர்ப்பம்கூட தமக்குத் தெரியாது என்பது மெரில் குணரத்னா, நளின் தெல்கொட ஆகிய இருவரினதும் சான்றாகும். உண்மையில் இக்குழுவினர் பொலிசின் ஆதரவினைப் பெற்றனர் என்ற தெளிவான கருத்தை ஆணைக்குழு பெற்றுள்ளது. இந்தவகையில் இக்குழுக்களின் உறுப்பினர்களது அடையாளம் மிகவும் முக்கியமானதாகும். ஆணைக்குழு இக்குழுக்களின் அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களை அடையாளம் காண முயற்சித்துள்ளது. இது சம்பந்தமான குறித்தவொரு சான்று முன்னாள் அமைச்சரும் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.ஜோன் அமரதுங்காவிடமிருந்து வெளிவந்துள்ளது. திரு.அமரதுங்காவின் கருத்துப்படி, கறுப்புப்பூனைகள் இலங்கைப் பொலிசின் ஒரு உறுப்பாகும். அமரதுங்கா இவ்வாறு நம்புவதற்கு உறுதியான காரணங்கள் இருந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் அவரது அமைச்சரவைச் சகபாடிகளான திரு.ரணில் விக்கிரமசிங்கா, திரு.ஜோசப் மைக்கல் பெரேரா போன்றோர் அக்கருத்துக்களுக்கு உடன்பட மறுத்துள்ளனர். திரு.ஜோன் அமரதுங்காவின் கூற்று முற்றிலும் சரியாக இருந்திருக்கலாம். காரணம் யாதெனில், பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தை ஆணைக்குழு சோதனையிட்ட காலத்தில் திரு.டக்ளஸ் பீரிஸ் அவர்களது வீட்டுக்கு அடுத்ததாக முன்பக்கத்தில் அமைந்த வீடொன்றின் (திரு.பீரிஸின் பாதுகாப்பு ஆளணியினர் நிலைகொண்டிருந்தனர் என நிரூபிக்கப்பட்ட வீடு) யன்னல்களிலும் சுவர்களிலும் கறுப்புப் பூனைகள் என்ற சொற்றொடர் எழுதப்பட்டிருந்தது. உண்மையில் 1988-1990 காலப்பகுதியில்கூட இவ்வீடு முன்குறிப்பிட்ட பெயரையே பெற்றது என்பதற்குரிய சான்று ஆணைக்குழுமுன் கொண்டுவரப்பட்டிருந்தது. இந்த "விழிப்புக் குழுக்களின்" சட்டவிரோதமான செயற்பாடுகள் கணக்கிலெடுக்கப்படவில்லை. நாட்டின் வழமையான சட்டவினைப்படுத்துகையிலிருந்து அக்குழுக்கள் பாதிப்படையாமல் இருந்தன. இந்தக்

குழுக்களின் செயற்பாடுகளும் குறிப்பிட்ட பொலிசுப் பிரிவுகளின் செயற்பாட்டுப்பாங்கும் "ஜே.வி.பி யின் பயங்கரவாதத்துக்கு எதிராக அரசாங்க உறுப்புகளாலும், விழிப்புக்குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட அரச பயங்கரவாதம் இயங்கியது" என்ற குற்றச்சார்த்துகைக்கு ஆதாரமாக இருந்தன என அப்போதைய பொலிசுமா அதிபரும் ஒப்புக் கொண்டிருந்தார்.

1990 அளவில் சட்டச் செயற்படுத்துகை முகவராண்மைகள் ஜே.வி.பி இற்கு எதிரான தமது போராட்டத்தில் முக்கியமான முன்னேற்றத்தை அடைந்தன. கட்சியின் தலைவர் ரோஹண விஜேவீரா, அதன் செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்கா உள்ளிட்ட ஜே.வி.பி யின் தலைமைத்துவத்தை கைதுசெய்யும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டது. இரு நபர்களும் அவர்களில் கைதுசெய்யப்பட்டு பொலிசு/தரைப்படைக் கட்டுக்காப்பில் இருந்த ஒருசில மணித்தியாலங்களுக்குள்ளே அதிசயமான நிலைமையின் கீழ் இறந்தனர். தலைமைத்துவமும் மற்றும் பல கட்சி ஆர்வலர்களும் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டதன் பின்னர் ஜே.வி.பி நடவடிக்கைகள் குறையலாயின.

சில உறுப்பினர்கள் தமக்கு என்ன நடக்குமோ என்ற பயத்தினால் பொலிசில் சரணடைந்தனர். 1990 இன் பிற்பகுதியளவில் நாசகாரர்களினால் முன்கொண்டுவரப்பட்ட அச்சுறுத்தல் முடிவடைந்ததென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயமாகும். எவ்வாறாயினும், நாசகாரர்களாலும் நாசகார எதிர்ப்புக் குழுக்களாலும் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகளால் ஏற்படுத்தப்பட்ட தழும்புகள் ஆறாமல் இருந்தன. 1987-1990 காலப்பகுதி "பீஷண யுகய"(கொடுங்கோன்மை யுகம்) எனப் பெயரிடப்பட்டது. இக்காலப்பகுதியில் இடம்பெற்ற அதிக எண்ணிக்கையான காணாமல்போதல்கள் கொடூரமான கொலைகள் காரணமாக உலகில் மனிதஉரிமை மீறல்கள் புரையோடிய முக்கியமான நாடுகளில் இலங்கையும் ஒன்று என்ற சர்வதேச அபகீர்த்தியையும் பெற்றுக்கொண்டது. இக்காலப்பகுதியில்கூட அரசாங்கம் மனிதஉரிமை மீறல்களை ஊக்குவித்து சகித்துக் கொண்டிருந்தது என குற்றம்சாட்டும்பொருட்டு சர்வதேச அமைப்பாண்மைகள் நிறுவப்பட்டன. பிரசைகளுக்கு என்ன நடந்தது என்பதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. ஒரு கட்டத்தில், நிலைமையைக் கவனிப்பதற்கு மனிதஉரிமைகள் அவதானிகள் நாட்டுக்கு அனுப்பப்பட்டனர். குறிப்பாக, பொலிசுக் கட்டுக்காப்பில் இருந்த சந்தேகநபர்கள்மீது மேற்கொண்ட நடவடிக்கைகளின் தன்மைபற்றி சோதனையிடுவதற்கு அவர்கள் அனுப்பப்பட்டனர். மனிதஉரிமை ஆர்வலர்களின் இந்த விஜயங்களின் சில விளைவுகள் பின்னர் விபரிக்கப்படும்.

எழுத்தாணையில் விசாரணை நிபதிகளுக்கான புலனாய்வுகள், மேல் உள்ளவற்றுடன் ஒன்றுடன்ஒன்று இணைந்திருப்பதன் காரணமாக, மேற்குறிப்பிட்ட விடயங்களை எடுத்துரைக்க வேண்டுமென நாம் கருதினோம். விசாரணை நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், நிகழ்வுகள் நடந்த பின்னணிக்கு போதிய அவதானம் கொடுக்காமல் தனியாக விபரிப்பது சாத்தியமில்லை.

## அத்தியாயம் IV
## பட்டலந்த வீடமைப்புத் திட்டம்

1970 களின் ஆரம்பத்தில் இப்போதைய அரசாங்கம் சில அத்தியாவசியமான உரங்களை இலங்கையிலேயே உற்பத்தி செய்வதற்குத் தீர்மானித்தது. உரங்களை உள்ளூரில் உற்பத்தி செய்வதானது, உரங்களின்மீது செலவிடப்படும் பணத்தைக் குறைக்குமென்றும் அதன்மூலம் விவசாய உற்பத்திகளின் உற்பத்திச் செலவு குறையும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இந்நோக்கத்தை அடைவதற்காக அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது.

புதிதாக நிறுவப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பிரதான கருத்திட்டங்களில் ஒன்றாக, யூரியா உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையை அமைப்பதாக இருந்தது. இக்கருத்திட்டத்துக்குத் தேவையான இயந்திரங்கள் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள கெல்லொக் என்றழைக்கப்பட்ட கம்பனியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. அதே கம்பனி பொறிகளை ஒன்றிணைப்பதற்கான பணிக்குப் பொறுப்பாக இருந்ததோடு குறிப்பிட்ட காலப்பிரிவுவரை அதைப் பராமரித்தும் வந்தது. தொழிற்சாலையை அமைக்கும் நோக்கில் சப்புகஸ்கந்தையில் ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டதோடு யூரியா தொழிற்சாலையுடன் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு ஒரு விசேட ஆய்வுகூடமும் அமைக்கப்பட்டது. இலங்கையில் குறிப்பிடத்தக்க ஒரு காலப்பகுதிக்கு வெளிநாட்டுத் தொழில்நுட்ப நிபுணர்கள் வசிக்க வேண்டியிருந்ததால் அவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் வசிப்பதற்கான ஓர் வீடமைப்புத் திட்டத்தை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டது. XX ஏக்கர்கள் அளவுகொண்ட ஓர் தென்னங்காணி இந் நோக்கத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டது. இந்நிலம் பட்டலந்த கிராமத்தில் அமைந்திருக்கின்றது. பட்டலந்த, கம்பஹா நிருவாக மாவட்டத்தில் உள்ள பியகம தேர்தல் தொகுதியில் அமைந்துள்ளது. கொழும்பு-கண்டி பிரதான வீதியில் கிரிபத்கொடை சந்தியில் ஆரம்பிக்கின்ற ஒரு பாதை பியகமவை நோக்கிச் செல்கின்றது. இப்பாதை கொழும்பிலிருந்து செல்லும்போது வலதுபுறத்தில் அமைந்துள்ளது. பியகம பாதை சப்புகஸ்கந்த நகரத்தினூடாக பியகமைக்குச் . செல்கின்றது. சப்புகஸ்கந்த நகரத்துக்குச் சற்று முன்பாக இடதுபக்கமாக ஒரு திருப்பம் உள்ளது. இப்பாதை உண்மையில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு எதிர்த்திசையில் அமைந்துள்ளது. (இது கிரிபத்கொடை - பியகம பாதையின் வலதுபக்கமாக அமைந்திருக்கின்றது). திரும்பிச் செல்லும் பாதையிலிருந்து 2 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் பட்டலந்த கிராமம் அமைந்துள்ளது. வீடமைப்புத் திட்டத்தினை நிர்மாணிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட முன்னர் குறிப்பிடப்பட்ட நிலம் அக்கிராமத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இந்நிலம் அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்திலிருந்து சுமார் 2 1/2 கிலோ மீற்றர்கள் தூரத்தில் அமைந்துள்ளது. இது, யூரியா தொழிற்சாலையையும் ஆய்வுகூடத்தையும் உள்ளடக்கி இருக்கின்றது.

1970 களின் ஆரம்பத்தில் வெளிநாட்டவர்களின் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. மொத்தமாக அங்கு 64 வீடமைப்புத் தொகுதிகள் அமைந்திருக்கின்றன. அடிப்படையில் அங்கு மூன்று வகையான வீடுகள் உள்ளன. இரண்டு மாடிகள் கொண்ட 10 "A" வகை வீட்டுக் கூறுகளும் ஒரு மாடிகொண்ட 15 "B" வகை வீட்டுக் கூறுகளும் (ஒவ்வொரு கூறுகளுக்கும் இரட்டைத் தொகுதிகள்), 43 "C" வகை வீட்டுக் கூறுகளும் இதில் அடங்கியுள்ளன. எல்லா வீடுகளும் இலக்கம் இடப்பட்டுள்ளன. வீடமைப்புத் திட்டமானது தென்னந்தோப்பு முழுவதும் பரந்து கிடக்கின்றது. உண்மையில் அநேகமான பழைய தென்னமரங்கள் இன்றும் காணப்படுகின்றன. பட்டலந்த கிராமப் பாதையிலிருந்து வீட்டுத் திட்டத்துக்கு ஒரு நுழைவு/வெளிச்செல்லல் மட்டுமே காணப்படுகின்றது. வீடமைப்புத் திட்டத்தினுள் தார் இடப்பட்ட பாதைகளின் வலைப்பின்னலொன்று காணப்படுகின்றது. வீடமைப்புத் திட்டத்தின் வலது மற்றும்

X110
97.9.1

289

# HOUSING COMPLEX - BATALANDE




TC - Torture Chambers.

Duglus Pieris
89.6.30 - A1/2
89.6.30 1995 - A2/5

89 Middle to Aug. 90
1 Residence - A2/2
2 Sec. Officer - A2/1, B01
1 B Keeper - A2/3
1 Office - B02

A 2/2 - Circuit Bungalow 89.08.02 to 89.06.30
Official Residence 89.06.30 to 1990 Aug.
A 2/1 - Security Officers Temp. Res. 89 May to 90 Aug.
A 2/3 - Manpower Mobilization Min. 89.11.01 to 89.10.25.
Fernando (Keeper) 89.10.25 to 1994.
B.01 - Sec. Officers Temp. Res. 89 May to 90 Aug.
B.02 - Office of Industries Minister 89 May to 90 Aug.

இடதுபுறங்களில் பட்டலந்த கிராமம் காணப்படுகின்றது. பின்புறத்தே ஒரு பெரும் வயல்நிலம் காணப்படுகின்றது. முழுத் திட்டமும் முட்கம்பிகளால் பாதுகாக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் மத்தியில் அலுவலகத் தொகுதியொன்றும் காணப்படுகின்றது. அங்கே பொழுதுபோக்கு மனையொன்றும் நீச்சல்தடாகமொன்றும் காணப்படுகின்றது.

வீடமைப்புத் திட்டம் சம்பந்தப்பட்ட முக்கியமான சான்றை ஆணைக்குழு அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபன ஒழித்துக்கட்டுநரான திரு.அசோக் சேனநாயக்காவிட மிருந்து பெற்றுக்கொண்டது. திரு.அசோக சேனநாயக்கா ஒரு பொறியியலாளர் ஆவார். அரசாங்கத்துக்கு உடைமையாக்கப்பட்ட வியாபாரப் பொறுப்பகமான யுனைட்டெட் மோட்டோர்ஸ் கம்பனியின் தகுதிவாய்ந்த அதிகாரியாக கடமையாற்றியிருந்த அவர் அக்கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் மற்றும் முகாமைப் பணிப்பாளராக, அன்றைய கைத்தொழில் அமைச்சர் முன்னாள் திரு.சிறில் மத்தியூ அவர்களால் 1984 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டிருந்தார். நியமனம் செய்யப்பட்டபோது, அந்தக் கூட்டுத்தாபனம் இடையறாது நட்டத்தில் ஓடியபடியால் முன்னரே அக்கூட்டுத்தாபனத்தை ஒழிப்புச் செய்வதற்கு அரசாங்கம் முன்னர் தீர்மானித்திருந்ததென்பது திரு.சேனநாயாக்காவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கருத்திட்டத்துக்கு நிதி உதவிகளை வழங்கிய வெளிநாட்டு நிதிநிறுவனங்கள் அதை மூடிவிடுவதை எதிர்த்தன. இந்தவகையில் திரு.சேனநாயக்காவுக்கு, கூட்டுத்தாபனத்தை மீள உயிர்ப்பிப்பதற்கும் அதை நிலைத்திருக்கச் செய்வதற்குமான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தை மீள உயிர்ப்பிப்பதற்கான முகாமைத்துவத்தின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை. 1986 இல் மீண்டுமொருமுறை கூட்டுத்தாபனத்தை மூடிவிடுவதற்கோ அல்லது கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தைத் தனியார் நிறுவனமொன்றுக்கு விற்றுவிடுவதற்கோ தீர்மானிக்கப்பட்டது. அப்போதைய கைத்தொழில் அமைச்சர் திரு.டென்சில் பெர்ணாந்துவினால் திரு.அசோகா சேனநாயக்கா கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநராக நியமிக்கப்பட்டார். 1997 இல் திரு.சேனநாயக்கா ஆணைக்குழுமுன் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை விடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில்கூட மூடிவிடுதல் செயன்முறை பூரணம் அடைந்திருக்கவில்லை.

1980 களின் ஆரம்பத்தில் வெளிநாட்டவர்கள் திரும்பிச் சென்றனர். அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனம் வீட்டுத்திட்டத்தின் சில வீடுகளை அதன் சிரேட்ட உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கியது. மற்றும் சில வீடுகள் உத்தியோகபூர்வ ஒப்பந்தங்களின் அடிப்படையில் இலங்கை மின்சார சபைக்கு உத்தியோகபூர்வமாக ஒதுக்கப்பட்டன. இவ்வீடுகள் இலங்கை மின்சார சபையின் உத்தியோகத்தர்களினாலும் மற்றும் சில வீடுகள் "அல்பெக்ஸ் பாதுகாப்பு" என அழைக்கப்பட்ட தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்றின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உபயோகத்துக்காகவும் ஒதுக்கப்பட்டன. ஏனெனில், இக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு, இத்தனியார் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களிடம் பொறுப்பளிக்கப்பட்டமையேயாகும். கூட்டுத்தாபனம் உள்ளூர், வெளியூர் குழுக்கள் இரண்டிடமிருந்தும் வீடுகளுக்கு வாடகைக் கட்டணத்தை அறவிட்டது. 1980 களின் நடுப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சும் ஆயுதப்படைத் தலைமையகமும் ஓர் தரைப்படை முகாமை அமைப்பதற்காக வீடமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியை ஒதுக்கும்படி உத்தியோகபூர்வமாகக் கூட்டுத்தாபனத்தை வேண்டிக் கொண்டன. அதன்வண்ணம் வீடமைப்புத்திட்டத்தின் நுழைவாயிலிலிருந்து(வீடமைப்புத் திட்டத்திலிருந்து வெளிப்புறமாக நீண்டிருந்த) இடதுபுறத்தில் உள்ள ஒருபகுதி தரைப்படைக்கு வழங்கப்பட்டது. தரைப் படை அங்கு முகாமொன்றை நிறுவியது. இம் முகாமானது இவ்வாணைக்குழுவின் காலப்பகுதியிலும் தொழில்பட்டது.

கூட்டுத்தாபனத்துக்குள்ளும் வெளியேயும் உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை முறையாக ஒதுக்கியதன் பின்னரும்கூட இன்னும் சில வீடுகள் காலியாகவே இருந்தன.

**X110** என அடையாளமிடப்பட்ட பட்டலந்த விடமைப்புத் திட்டத்தின் ஓர் உருவப்படம் ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டது.

**ரணில் விக்கிரமசிங்காவின் அறிவுறுத்தல்களின்பேரில் ஒதுக்கப்பட்ட வீடுகள்**

(சட்டரீதியற்ற முறையில் தடுத்துவைத்து ஆட்களைச் சித்திரவதை செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட வீடுகளுக்கு முன்பு * என்ற அடையாளம் இடப்பட்டுள்ளது)

**(I) முன்னாள் அமைச்சரினதும் அவரது உத்தியோகத்தர்களினதும் உபயோகத்துக்குப் பயன்படுத்தப்பட்டவை**

| இலக்கம் | குடியிருப்பாளர் | காலம் |
|---|---|---|
| A 2/2 | (1) திரு.ரணில் விக்கிரமசிங்கா இளைஞர் விவகார தொழில்வாய்ப்பு அமைச்சின் சுற்றலா விடுதியகம் | 1983 மார்ச்சு 02 முதல் 1989 ஏப்பிரல் 09 வரை |
| | (11) திரு.ரணில் விக்கிரமசிங்கா கைத்தொழில் அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் | 1989 ஏப்பிரல் முதல் 1994 ஆகஸ்ட் வரை |
| A 2/1 | காலியாக இருந்தது | 1987 முதல் 1989 ஏப்பிரல் வரை |
| | திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்குக் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு | 1989 மே முதல் 1994 ஆகஸ்ட் வரை |
| A 2/3 | (1) திரு.ரணில் விக்கிரமசிங்காவின் கீழ் இயங்கிய மனிதவள இயக்க அமைச்சுக்கு குறித்துரைக்கப்பட்டது | 1988 நவம்பர் 01 முதல் 1989 ஒக்தோபர் 25 வரை |
| | (11)திரு.வின்சன்ட் பெர்ணாந்து,திரு.ரணில் விக்கிரமசிங்காவின் மாளிகையின் பொறுப்பாளர் | 1989 ஒக்தோபர் 25 முதல் 1994 ஆகஸ்ட் வரை |
| A 1/7 | திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் | சுமார் 1989 நடுப்பகுதியிலிருந்து 1994 ஆகஸ்ட்வரை |

***குறிப்பு-*** இந்த வீட்டுக்கு உடனடுத்ததாக A 1/8 ஆம் இலக்க வீடு அமைந்துள்ளது(அதன் வலதுபுறத்தில்). வீடு பாரிய பழுதுபார்த்தல்களுக்கு உட்பட்டமையின் காரணமாக காலியாக விடப்பட்டது என இவ்வீட்டின் ஒழித்துக்கட்டுநர் கூறுகின்றார். எவ்வாறாயினும் சில பொலிசு உத்தியோகத்தர்கள் இவ்வீட்டை உத்தரவின்றிக் கைப்பற்றி இருந்தனர் என்ற தகவல் அவருக்குக் கிடைத்தது. இத்திட்டமானது இதனகத்துப்பின் குறிப்பிடப்பட்டவாறு அது பொலிசு உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு வீடாக இருக்கவில்லை. இவ்வீட்டில் ஆட்கள் சட்டரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர் என அஜித் ஜயசிங்கா குறிப்பிடுகின்றார். அவர் ஆணைக்குழுவுக்கு வீட்டைக் குறித்துக் காட்டினார்.

| | | | |
|---|---|---|---|
| *B 2 | (I) | உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் சுற்றுலா விடுதியகம் | 1987 வரை |
| | (II) | காலியாக உள்ளது | 1987 முதல் 1989 மே வரை |
| | (III) | திரு.ரணில் விக்கிரமசிங்காவின் அலுவலகம் | 1989 மே முதல் 1994 ஆகஸ்ட் வரை |

குறிப்பு- சாட்சி ரி.எம் பந்துல, தாம் வீட்டில் சட்டரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டதாகத் தனது சாட்சியத்தில் கூறினார். வீடு அவரினால் ஆணைக்குழுவுக்குக் குறித்துக் காட்டப்பட்டது(ஆணைக்குழு சோதனைக்காக வீடமைப்புத் திட்டத்துக்குச் சென்றபோது). இவ்விடயம் பின்னர் விபரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| B 1 | (I) | உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் சுற்றுலா விடுதியகம் | 1987 வரை |
| | (II) | காலியாக உள்ளது | 1987 முதல் 1989 மே வரை |
| | (II) | திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்குக் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் | 1989 மே முதல் 1994 ஆகஸ்ட் வரை |
| B 7 | | திரு.சுதத் சந்திரசேகரா,பொ.சோ. திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் | 1990 மே 01 முதல் 1994 ஆகஸ்ட் வரை |

குறிப்பு- இவ்வீட்டுக்கு உடனடுத்ததாக B 8 வீடு அமைந்துள்ளது. உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ்சுக்குக் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இவ்வீட்டில் வசித்துள்ளனர்( B 8). இவ்வீட்டில் தான் சட்டரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டதாகச் சாட்சி ஏல் சகி பெரேரா சான்றளித்துள்ளார். இவ்வீடு சாட்சியாளரினால் ஆணைக்குழுவுக்குக் குறித்துக் காட்டப்பட்டது.

**(II) திரு.ரணில் விக்கிரமசிங்காவின் வழிகாட்டல்களின் கீழ் உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ்சுக்குக் குறித்துரைக்கப்பட்டவை**

| | | | |
|---|---|---|---|
| A 1/2 | (I) | டக்ளஸ் பீரிஸ் தலைமை அலுவலகச் சோதனைகாரர் பாலியகொடை | 1984 ஆகஸ்ட் 18 முதல் 1988 யூன் 20 வரை |
| | (II) | டபிள்யு.மகநாயக்கா — தலைமை அலுவலகச் சோதனைகாரர். பாலியகொடை | 1988 யூன் முதல் 1990 நடுப்பகுதிவரை |
| | (II) | எச்.ஜி.விக்கிரமசிங்கா உ.பொ.அ, களனி | 1990 நவம்பர் 15 முதல் 1996 வரை |
| A 1/4 | (I) | உ.பொ.அ, ஆர்.தர்மரத்ன | 1986 டிசெம்பர் 16 முதல் 1989 யூலை 31 வரை |
| | (II) | உ.பொ.அ,எச்.சந்திரதாச | 1989 ஆகஸ்ட் 02 முதல் 1996 வரை |
| A 1/5 | | பொ.அ. நளின் தெல்கொட | 1989 ஆகஸ்ட் 02 முதல் 1990 மே 05 வரை |

A 2/5 உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ் 1989 ஆகஸ்ட் 02 முதல் 1995 நடுப்பகுதிவரை

**குறிப்பு- இனங்காணப்பட்ட ஒரு சட்டரீதியற்ற தடுப்பு, சித்திரவதைக்கூடமொன்றின் உடன்முன்பாக அமைந்திருக்கின்றது(B8).**

A 2/12 (1) பொறுப்பு உத்தியோகத்தர் பொலிசு நிலையம், களனி (யார் வீட்டில் குடியிருந்தார் என்பது பற்றிய பதிவுகள் இருக்கவில்லை) 1989 ஆகஸ்ட் 02 முதல் 1990 நடுப்பகுதிவரை

(11) என் எம் எஸ் பீ நிஸ்ஸங்க, பொ.சோ, பொறுப்பு உத்தியோகத்தர், களனி 1990 செத்தெம்பர் 10 முதல் 1996 வரை

B 6 1989 ஆகஸ்ட் 02 ஆந் திகதியிட்ட ஓர் கடிதத்தின்மூலம் (X 65 என அடையாளம் இடப்பட்ட ஆவணம்) உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ் எ.நா.பிரிவுடன் சம்பந்தப்பட்ட ஓர் உத்தியோகத்தர் வசிக்கிறார் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். உத்தியோகத்தரின் அடையாளம் சம்பந்தமாக எந்தச் சான்றும் இல்லை

*B 8 உபொஅ.டக்ளஸ் பீரிஸ்சுக்குக் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 1988-1991 காலப் பிரிவுக்கிடையில்

**குறிப்பு- சாட்சி ஏர்ல் சுஜீ பெரேராவினால் அவர் சட்டரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட வீடு அடையாளம் காணப்பட்டது. உபொஅ.டக்ளஸ் பீரிஸ் வாழ்ந்த வீட்டின் உடன்முன்பாக அமைந்துள்ளது. இவ்வீடு திரு. ரணில் விக்கிரமசிங்காவின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர், பொலிசு சோதனைகாரர் சுதத் சந்திரசேகரா வாழ்ந்த வீட்டுக்கு உடனடுத்ததாக அமைந்துள்ளது.**

B 10 (1) ரணதுங்கா, பொ.கா களனி நாசகார தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர் 1989 ஆகஸ்ட் 03 முதல் 1990 வரை இறுதிவரை

(11) வி ஏ சுனில் பெரேரா,பொ.கா 1991 பெப்புரவரி 15 முதல் 1996 வரை

B 13 ரஞ்சித் விக்கிரமசிங்கா,பி.சோ, பொறுப்பு உத்தியோகத்தர் நா.த.பி, களனி 1989 ஆகஸ்ட் 02 முதல் 1996 வரை

B 20 காந்தி பெர்ணாந்து, பெ.பொ.கா களனி நா.த.பிரிவைச் சேர்ந்த பொறுப்பு உத்தியோகத்தர் 1989 ஆகஸ்ட் 02 முதல் 1996 வரை

B 21 லக்ஸ்மன் டயஸ், பொ.கா களனி நா.த.பிரிவைச் சேர்ந்த 1989 ஆகஸ்ட் 02 முதல் 1996 வரை

| | | |
|---|---|---|
| | பொறுப்பு உத்தியோகத்தர் | |
| B 23 | ஹீன்பண்டா,பொ.கா<br>களனி நா.த.பிரிவைச் சேர்ந்த<br>பொறுப்பு உத்தியோகத்தர் | 1989 ஆகஸ்ட் 02 முதல்<br>1996 வரை |
| *B 34 | சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு<br>குறித்துரைக்கப்பட்டது | |

குறிப்பு- சாட்சி வாசல ஜயசேகரா இவ்வீட்டை, தான் சட்டரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட வீடாக அடையாளம் காட்டியுள்ளார்.

(III) எந்த அதிகாரமுமின்றி பொலிசு உத்தியோகத்தர்களினால் உபயோகிக்கப்பட்ட வீடு

*A 1/8 .திருத்த வேலைகளின் காரணமாக கைவிடப்பட்ட வீடு.

பொலிசு உத்தியோகத்தர்கள் அடிக்கடி வருவதாக அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களினால் அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநர் அசோக சேனநாயக்கா தகவல் கொடுத்திருக்கின்றார். அவர், பாலியகொடை பொலிசுக்கு அறிவித்துள்ளார். திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கும்கூட அறிவித்துள்ளார். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நிலைமை தொடர்ந்தும் அவ்வாறே காணப்பட்டது. சாட்சி அஜித் ஜயசிங்கா ஆட்களைச் சட்டரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட வீடுகளில் ஒன்றாக இனங்காட்டியுள்ளார். திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வசித்த A 1/7 இலக்கத்துக்கு உடனடுத்ததாக அமைந்துள்ளது.

## பொலிசு உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்புசார் கட்டமைப்பு

### (ஆணைக்குழுவுடன் தொடர்புடையவர்கள்)



## அத்தியாயம் V

## சட்டரீதியற்ற தடுப்புநிலையங்கள் மற்றும் சித்தரவதைக் கூடங்கள் ஆகியவற்றின் நிறுவுகையும் பராமரிப்பும்

**பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை ஒதுக்குதல்........**

கிடைக்கப்பெற்ற சான்றுகளின்வண்ணம், 1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அப்போதைய கைத்தொழில் அமைச்சர் திரு.ரணில் விக்கிரமசிங்கா அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநரான அசோக சேனநாயக்காவை தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பட்டலந்த வீடமைப்புத்திட்டத்தில் உள்ள வீடுகள் சிலவற்றைப் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீடு செய்யுமாறு பணிப்புரை வழங்கினார். கைத்தொழில் அமைச்சின் கீழ், அக்கூட்டுத்தாபனம் நிருவகிக்கப்பட்டு வந்தமையால் முன்னாள் அமைச்சரால் முறைசார்ந்த அறிவுறுத்தல்கள் எவையேனும் எழுத்துமூலம் கொடுக்கப்படவில்லை எனத் தெரிகின்றது. ஒழித்துக்கட்டுநர் சம்பந்தப்பட்ட அமைச்சரின் பணிப்புரைகளோடு இணங்கி நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருந்தார். அதன்வண்ணம் திரு.சேனநாயக்கா வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த பல்வேறு வீடுகள் பொலிசு உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்படும்பொருட்டு வெவ்வேறு கட்டங்களில் விடுவித்துள்ளார். இந்த உத்தியோகத்தர்கள் களனிப் பொலிசுப் பிரிவைச் சேர்ந்த நாசகாரத் தடுப்புப் பிரிவுடன் வழமையாக இணைக்கப்பட்டு இருந்தவர்கள் ஆவர். களனிப் பொலிசுப் பிரிவைச் சேர்ந்த ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் வீடுகள் சில ஒதுக்கப்பட்டு இருந்தன.

பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்தல்பற்றித் தமக்குப் பயனுறுதி வாய்ந்த கட்டுப்பாடு எதுவும் இருக்கவில்லை எனத் திரு.சேனநாயக்கா சாட்சியம் அளித்தார். அவர், திரு.ரணில் விக்கிரமசிங்காவால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்கியவாறு மட்டுமே நடவடிக்கை எடுத்துள்ளார். திரு.விக்கிரமசிங்கா அத்தகைய அறிவுறுத்துரைகளை வழங்காதிருப்பின் அந்த முறையில் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த வீடுகளை அவர் ஒதுக்கீடு செய்திருக்கமாட்டார் எனத் திரு.சேனநாயக்கா சாட்சியம் அளித்தார். பொலிசு உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய சில ஆட்களுக்கும் வீடுகளை ஒதுக்கீடு செய்தல் சம்பந்தமான விபரங்கள் அடங்கிய அட்டவணையொன்றை திரு.சேனநாயக்கா சமர்ப்பித்தார். இந்த அட்டவணை X25 என அடையாளம் இடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கிடைத்துள்ள சான்றுகளின்வண்ணம் இந்த வீடுகள் முதலாவதாக பாலியகொடை பொலிசு நிலையத்தின் தலைமையகப் பரிசோதகரான பிரதான பரிசோதகர் டக்ளஸ் பீரிஸிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தன. இவ்வீடுகளின் முதலாவது வீடு (இல.A1/4), 1986 டிசெம்பர் 16 ஆந் திகதியன்று உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் ஆர். தர்மரத்னாவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. அதன்பின்னர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பல வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. கிடைத்துள்ள சான்றுகளை முழுமையாக உற்றுநோக்குமிடத்து கூட்டுத்தாபனத்திடமிருந்து இந்த வீடுகளைப் பொறுப்பேற்றவராக திரு.டக்ளஸ் பீரிஸ் இருந்துள்ளார். அதன்பின்னர் அவர் இந்த வீடுகளை வெவ்வேறு உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீடு செய்தார்.

களனி நாசகாரத் தடுப்பு பிரிவு பொலிசு உத்தியோகத்தர்களின் உபயோகத்துக்கு பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலிருந்து சுமார் 10 வீடுகள் தேவைப்படுகின்றன எனக் குறிப்பிடும் ஒரு கடிதத்தை உ.பொ.அ டக்ளஸ் பீரிஸிடமிருந்து திரு.அசோக சேனநாயக்கா 1989 ஆகஸ்ட் 02 ஆந் திகதியன்றோ அல்லது திகதியளவில் பெற்றுக் கொண்டார். குறிப்பிட்ட கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது அந்தச் சந்தர்ப்பத்திலும் (நாசகாரத் தடுப்புப் பிரிவு) பொலிசு உத்தியோகத்தர்கள் B 6, B 8, B 10, B 13, B

20, B 21, A 2/5 ஆகிய இலக்கங்கள் கொண்ட வீடுகளில் வசித்துக்கொண்டிருந்தனர். A 2/15, A 1/5 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வீடுகளும் ஒதுக்கப்பட்டு விடுவிக்கப்படல் வேண்டுமென அவர் வேண்டிக்கொண்டார். இக்கடிதத்தின் பிரதியொன்று X 65 என அடையாளம் இடப்பட்டு ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வீடுகள் விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலோ அல்லது அதன்பின்னரோ, பொலிசுத் தலைமையகத்துடனோ அல்லது தொடர்புடைய பொலிசு உத்தியோகத்தர்களுடனோ அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனமானது எவ்வித உத்தியோகபூர்வ ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவில்லை. இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது காணப்பட்ட நிலைமையானது முற்றிலும் வித்தியாசமானதொன்றாக இருந்தது. அது ஓர் உத்தியோகபூர்வ உடன்படிக்கையாக இருந்தது. பட்டலந்த வடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளில் வசிக்கின்ற பிற உத்தியோகத்தர்களைப் போலன்றி இவ்வீடுகளில் வசித்த பொலிசு உத்தியோகத்தர்கள் வாடகையைக்கூட வழங்கவேண்டியதாக இருக்கவில்லை. மின்சார, தண்ணீர் கொடுப்பனவுகளை மட்டுமே வழங்க வேண்டுமென அவர்கள் பணிக்கப்பட்டு இருந்தனர்.

பொலிசுத் திணைக்களத்தின் நிலைமையைப் பொறுத்தவரையில் அப்போதைய பொலிசுமா அதிபராக இருந்த திரு.ஏர்னஸ்ட் பெரேரா அவர்களை ஆணைக்குழு விசாரணை செய்தது. பொலிசுத் திணைக்களமும் அவரும், தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு இருக்கவில்லை என அவர் சாட்சியம் அளித்தார். குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அவரை எவரும் உசாவுதல் செய்யவும் இல்லை. அவர் அந்த விடயத்தில் ஈடுபடவும் இல்லை எனத் திரு.பெரேரா அவர்கள் குறிப்பிடுகின்றார். இவ்விடயம் சம்பந்தமாக அப்போது காணப்பட்ட சான்றுகளைக் கருத்திற்கொண்டு நோக்குகின்றபோது அது (திரு.டக்ளஸ் பீரிசுக்கும் கூட்டுத்தாபனத்தின் குறிப்பிட்ட அமைச்சருக்கும் இடையிலுள்ள பிரத்தியேகமான கொடுக்கல்வாங்கலாக) இருக்கலாம் எனத் தோன்றுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பொலிசு உத்தியோகத்தர்களின் பாவனைக்காக வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்குக் காணப்பட்ட முறையான நடைமுறைகளைக் கவனமாகப் பரீட்சிப்பதில் கௌரவ சட்டமா அதிபரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்குரைஞர்களால் ஆணைக்குழு உதவியளிக்கப்பட்டது.

குறிப்பிட்ட காலத்தில் பின்வரும் முறைகள் காணப்பட்டன-

(அ) பொலிசுத் திணைக்களம் வடமைப்பு அலகுகளை நிர்மாணித்து, பின் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீட்டுத் தொகுதிகளை ஒதுக்குகின்றது. இவ்வீடுகளில் அநேகமானவை பொலிசு நிலையங்களின் வளாகங்களிலேயே அமைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட வீட்டுத் தொகுதிகள் வெளியிடங்களில் அமைக்கப்படுகின்ற மற்றும் சில இடங்களும் காணப்படுகின்றன. இத்தகைய வீட்டுத் தொகுதியின் ஒரு தொடர் கொழும்பு-02, கொம்பனித் தெருவில் உள்ள கியூ வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) பொலிசு உத்தியோகத்தர்களின் பாவனைக்காக நிறுவனங்கள்/அமைப்புகள்/தனியார் ஆட்களுக்குச் சொந்தமான வீடுகளை வாடகைக்குப் பெற்றுக் கொடுப்பதில் பொலிசுத் திணைக்கள உத்தரவுகள் B 11 ஆல் வசதி செய்து கொடுக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்டவொரு நடைமுறை பின்பற்றப்பட வேண்டியது அவசியமாகும். குறிப்பிட்ட நடைமுறை முறையானதொரு ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட இரு பிரிவினரிடையே செய்யப்பட வேண்டியவற்றை உள்ளடக்கி இருக்கின்றது. அத்தகைய வளாகங்களை வாடகைக்குப் பெறுதல், குத்தகைக்கு விடுதல் சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பொலிசுத் திணைக்களத்தில் குறிப்பிட்ட பிரதிநிதியாக குறிப்பிட்ட பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர்

இருக்கின்றார் என்பது தெளிவானதாகும். குறிப்பிட்ட பொலிசுத் திணைக்கள உத்தரவு (B 11) **X62** என அடையாளம் இடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) குறிப்பிட்ட இவ்வாணைக்குழுவின் ஏற்பாடுகளின் கீழ் அவசரகால ஒழுங்குவிதிகளைப் பிரகடனப்படுத்தி இருக்கின்றது. 1989 யூன் 20 அந் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் 1989 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அவசரகால ஒழுங்குவிதிகளின் 8(7) ஆம் ஒழுங்குவிதி, யாராவது ஒரு நபருக்கு/அமைப்புக்கு/நிறுவனத்துக்கு உரித்துடைய அசையாச் சொத்தைக் கோருகைக்கும் அச்சொத்தை தற்காலிகமாக யாராவது நபருக்கு, அந்நபரின் உபயோகத்துக்கு உடைமையாக்குவதற்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குத் தத்துவம் அளிக்கின்றது. குறிப்பிட்ட வர்த்தமானியின் பிரதியொன்று **X83** என அடையாளம் இடப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உரித்தளிக்கப்பட்ட இத்தத்துவமானது பொலிசு உத்தியோகத்தர்களின் உபயோகத்துக்குத் துரிதமாக வீடமைப்பு அலகுகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பொலிசுத் திணைக்களத்துக்கு வசதியளித்தது என பொலிசுமா அதிபர் திரு.ஏர்னஸ்ட் பெரேரா, பி.பொலிசுமா அதிபர் எம் எம் ஆர் (மெரில்) குணரத்னா ஆகியோரினால் வாதிடப்பட்டது.

1989 இன் நடுப்பகுதியில் நாசகாரர்கள் பொலிசு உத்தியோகத்தர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் அச்சுறுத்த ஆரம்பித்தபோது பொலிசு உத்தியோகத்தர்களும் அவர்களது குடும்பங்களும் இலக்குப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில், பொலிசு உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் பாதுகாப்பான வீடமைப்பை ஏற்பாடு செய்வது அவசியமாக இருந்தது என்பது பொதுவான அடிப்படையாகும். அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தப்பட வேண்டியிருந்தனர். திரு.நளின் தெல்கொட, திரு.எம் எம் ஆர் குணரத்னா மற்றும் திரு.ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரின் கருத்துப்படி நாசகாரர்களினால் அச்சுறுத்தப்பட்ட பிரதேசத்தில் உள்ள பொலிசு உத்தியோகத்தர்களுக்குத் தற்காலிகமாக வழங்குவதற்கு பட்டலந்த வீடுகளே மிகவும் பொருத்தமான வீடுகளாக இருந்தன என்பதாகும்.

B11 என்னும் பொலிசுத் திணைக்கள உத்தரவுகளில் விதிக்கப்பட்டுள்ள முன்னர் குறிப்பிட்ட நடைமுறையானது பெரிதும் சிக்கல் வாய்ந்ததே. அத்துடன், சம்பந்தப்பட்ட நடைமுறையானது வீடுகளைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்கவில்லை. எனவே, மேலே குறிப்பிட்ட அவசரகால ஒழுங்குவிதிகள் பிரகடனப்படுத்தப்பட்டன. அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திட்டமானது, பெரிதும் பயனுறுதி வாய்ந்ததாகவும் திறன்மிக்கதாகவும் அமைந்தன என்பது சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது. குறிப்பிட்டவொரு பொலிசுப் பிரிவுக்குப் பாதுகாப்பான வீடமைப்பு வசதிகள் அவசரமாகத் தேவைப்படுமாயின், சம்பந்தப்பட்ட நோக்கத்துக்கென அடையாளம் காணப்பட்ட வீடுகளைக் கொள்வனவு செய்யும்பொருட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை (பொருத்தமான வழியினூடாக) வேண்டிக்கொள்ளாமல் இருப்பதற்கு, எந்தவித காரணங்களும் இருக்கவில்லை. வீடுகளைக் கொள்ளல் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட நடைமுறை எதுவாக அமைந்தாலும், பொலிசு உத்தியோகத்தர்களின் வதிவிடங்களாகப் பயன்படுத்தப்படும் வளாகங்களைச் (அவை பொலிசுத் திணைக்களத்துக்கு உடைமையானவை அல்லது உடைமையற்றவைகளாக இருக்கலாம்) சம்பந்தப்பட்ட பொலிசுப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரே மேற்பார்வை செய்தல் வேண்டும். வீடுகளை ஒதுக்கீடு செய்யும் கடமையும் அவரிடமே இருக்கின்றது. அரையாண்டு தனிப்பட்ட பரிசோதனையொன்றை நடாத்தவும் அவர் தேவைப்படுத்தப்பட்டு உள்ளார். சம்பந்தப்பட்ட வளாகங்களின் ஒதுக்கீடும் பயன்பாடும் பற்றிய விபரங்கள் விசேட பதிவேடொன்றில் பொலிசுப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

பொலிசு உத்தியோகத்தர்களின் வதிவிடங்களாகப் பயன்படுத்தப்படும் வீடுகளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய கடமைகள் சம்பந்தப்பட்ட பொலிசுப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களது பொறுப்பில் இருப்பது மிகத் தெளிவானதாதலால் இந்த விடயம்பற்றி திரு.நளின் தெல்கொட மிக விரிவாக வினாவுதலுக்கு உட்படுத்தப்பட்டார். சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளராக இருந்த திரு.தெல்கொட களனிப் பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றினார். பட்டலந்த வீடமைப்புத்திட்டமானது களனிப் பொலிசுப் பிரிவின் எல்லைக்குள் (சப்புகஸ்கந்த பொலிசு நிலையப் பிரதேசத்துக்குள்) அமைந்துள்ளது. அத்துடன், வீடமைப்புத் திட்டத்தில் வழ்ந்த பொலிசு உத்தியோகத்தர்கள் அனைவரும் களனிப் பொலிசுப் பிரிவோடு இணைக்கப்பட்டிருந்தவர்கள் ஆவர்.

திரு.தெல்கொடவின் கருத்துப்படி பிரதேச பொலிசு உத்தியோகத்தர்களுக்கு பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தின் வீடுகளில் சிலவற்றை விடுவிக்குமாறு திரு.டக்ளஸ் பீரிஸ்தான் திரு.ரணில் விக்கிரமசிங்காவைக் கேட்டிருந்தார் என குறிப்பிடுகின்றார். அவர், (திரு.தெல்கொட) திரு.பீரிஸின் மேல்நிலை உத்தியோகத்தராக இருந்தபோதும் வேண்டுகோள் செய்வதற்கு முன்பு திரு.பீரிஸ் அவரது அனுமதியை நாடவில்லை. பிரதேசத்தின் பொலிசு உத்தியோகத்தர்களின் பாவனைக்குப் பாதுகாப்பான ஓர் இடத்தில் வீடுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தேவையை எந்தச் சந்தர்ப்பத்திலும் திரு.பீரிஸ் கலந்துரையாடவில்லை. திரு.ரணில் விக்கிரமசிங்காவிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்ற திரு.பீரிஸ் வீடுகளைக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநரிடமிருந்து பெற்றார். வீடமைப்புத் திட்டத்திலிருந்து பாதுகாப்பான வீடுகளைப் பெற்று திரு.பீரிஸ் உடனொத்த உத்தியோகத்தர்களுக்கு தன்விருப்பப்படி வீடுகளை ஒதுக்கினார். அந்தக் கட்டத்திலும்கூட அவர் (திரு.தெல்கொட) உசாவுதல் செய்யவில்லை.

திரு.தெல்கொட மேலும் கூறுவதாவது, உடனொத்த உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை ஒதுக்கும் பணியைத் திரு.பீரிஸ் உத்தியோகபூர்வமாக பொறுப்புச்சாட்டக்கூடியவர் அல்ல என்பதாகும். அதற்குப் பதிலாக, திரு.பீரிஸ் இந்த வேண்டுகோளை திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு வழங்கியிருந்தார். திரு.டக்ளஸ் பீரிஸுக்கு வீடுகளை விடுவிப்பதற்கு முன்போ அல்லது பின்போ இந்த விடயம்பற்றி திரு.ரணில் விக்கிரமசிங்காவோ அல்லது கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநரோ அவரது அவதானங்களையோ அல்லது கருத்துக்களையோ நாடவில்லை. மேலும் சான்றுகளின்படி, பட்டலந்த வீட்டுத் திட்டத்திலிருந்து எந்தப் பொலிசு உத்தியோகத்தருக்கும் திரு.ரணில் விக்கிரமசிங்காவின் இசைவாணையின்றி வீடுகளைப் பெற்றுக்கொள்வது சாத்தியமில்லை.

வீடமைப்புத்திட்டத்தினல் தெல்கொடவின் பொலிசுப் பிரிவு உத்தியோகத்தர்கள் வசித்துக்கொண்டு இருந்தார்கள் என்பதை அவர் அறிந்து வைத்திருந்தார்(குறிப்பாக களனி பிரிவின் நாசகாரத் தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள்). குறிப்பிட்ட காலத்தில் நடைமுறையில் இருந்த குறிப்பிட்ட பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு முரணானதும் உத்தியோகபூர்வமற்றதும் வழமைக்கு மாறானதுமாகவே முழுக் கொடுக்கல்வாங்கல்களும் இருந்தன என திரு.தெல்கொட ஏற்றுக்கொண்டுள்ளார். குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின்வண்ணமும்கூட, பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தராக இருந்த அவர், பொலிசு உத்தியோகத்தர்களால் குடியிருக்கப்பட்ட அத்தகைய வீடுகளை மேற்பார்வை செய்யவும் அவற்றுக்குப் பொறுப்பாக இருக்கவும் அவர் வேண்டப்பட்டார். பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகளினால் அவருக்குச் சுமத்தப்பட்ட அத்தகைய எக்கடமைகளையும் அவர் செய்யவில்லை.

பொலிசு உத்தியோகத்தர்கள் குடியிருந்த வளாகங்கள்பற்றிய குறிப்பிட்ட பொலிசு ஒழுங்குவிதிகளை நாம் பரிசோதனை செய்தபோது அவை ஒதுக்குகளை ஒழுங்குபடுத்துவதற்கும், அத்தகைய சொத்துக்களைப் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டிருந்தன என்பது தெளிவானது. அத்தகைய வளாகங்களை சட்டரீதியற்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதில்லை என்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலுமே அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும் முறையான மேற்பார்வையின் காரணமாக அத்தகைய வளாகங்கள் சட்டரீதியற்ற நடவடிக்கையொன்றுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது எனக் குறிப்பிட்டதொரு இனங்காணத்தக்க உத்தியோகத்தர் பொறுப்புக் கூறக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட வீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு ஒதுக்கப்பட்ட முறையினைக் கருத்திற்கொண்டு இவ்வீடுகளுக்குள் என்ன நடந்தது என்பதற்கு உயர்மட்ட உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் என்பதற்கு முறையான மேற்பார்வை இருந்ததாக திரு.பீரிஸ் உறுதிப்படுத்தி இருக்கின்றார் என்பது தெளிவாகும்.

எவ்வாறாயினும், பொலிசு உத்தியோகத்தர்களின் பாவனைக்காக வீடுகளைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் பொலிசு ஒழுங்குவிதிகளை ஏற்றுக் கொள்வதற்கு மாறாக அவர் தெளிவாகவே நடந்துகொண்டபோதிலும் திரு.தெல்கொட குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளை அவர் நடைமுறைப்படுத்தவில்லை என்ற சார்த்துதலிலிருந்து முற்றாக பொறுப்பற்றவராக ஆகிவிட முடியுமா?. திரு.டக்ளஸ் பீரிஸ் குறிப்பிட்ட பொலிசு ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயற்பட்டுள்ளார் என்பது தெளிவாகும். இது, திரு.தெல்கொடவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அப்படியானால் களனி பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர் என்றவகையில் திரு.தெல்கொட என்ன நடவடிக்கைகளை எடுத்தார்? திரு.பீரிஸிடமிருந்து விளக்கங்களை அவர் பெறவில்லை. அவர் பொலிசுத் தலைமையகத்தின் ஒழுங்குவிதிகளை அவதானிக்கவும் இல்லை. விடயத்தைப் பின்னர் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அவர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவும் இல்லை.

பட்டலந்த வீடுகளிலிருந்து தன்னைத் தூரப்படுத்திக் கொள்ளவும் இது சம்பந்தமாகத் திரு.பீரிஸினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளிலிருந்து தன்னைத்தானே பிரித்துக் கொள்வதற்கும் திரு.தெல்கொட முயற்சித்தபோதும் இக் "கருத்திட்டத்தின்" மூலம் அவரும் நன்மைபடைந்துள்ளார் என்பது வியப்புக்குரியதாகும். திரு.தெல்கொடவின் கருத்துப்படி பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளில் ஒன்று அவரால் (உபொஅ, பீரிஸ்) "களனி பிரிவின் அத்தியட்சகருக்கு" ஒதுக்கப்பட்டு உள்ளது என்பதை அவர் உபொஅ.பீரிஸ்சின் மூலம் அறிந்து கொண்டார். இக்காலப்பகுதியில் களனி பிரிவின் பொலிசு அத்தியட்சகராக இருந்தவர் திரு.தெல்கொட ஆவார். குறிப்பிட்ட வீடு திரு.தெல்கொடவின் அனுமதியுடன் கூட்டுத்தாபனத்திடமிருந்து உ.பொஅ. பீரிஸினால் பெறப்பட்டு இருக்கவில்லை என அவர் கூறினார். அவர் ஒருபோதும் குறிப்பிட்ட வீட்டில் குடியிருக்கவும் இல்லை. வீட்டுக்குள்கூட அவர் செல்லவும் இல்லை எனச் சான்றளித்துள்ளார். குறிப்பிட்ட காலப்பகுதியில் திரு.தெல்கொட கிரிலப்பனையில் அமைந்துள்ள அவரது சொந்த வீட்டிலேயே வசித்தார் எனவும் குறிப்பிட்டு உள்ளார். அவர் மேலும் கூறுவதாவது, குறிப்பிட்ட வீட்டின் திறப்புகளும் அவரிடம் ஒருபோதும் இருந்ததில்லை. அவை சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்திலேயே வைக்கப்பட்டு இருந்தன. எவ்வாறாயினும், திரு.தெல்கொடவினால் வீடு பயன்படுத்தப்படாமல் இருந்தபோதிலும் அதைக் கூட்டுத்தாபனத்துக்கு மீளளித்ததற்குரிய நடவடிக்கைகளை அவர் எடுக்கவில்லை. அது அவரைப் பின்தொடர்ந்து வரும் எவராவது பொலிசு உத்தியோகத்தரின் எதிர்காலப் பயன்பாட்டுக்கு விடப்பட்டது என அவர் விளக்கம் அளித்தார். எவ்வாறாயினும், அதுதான் அப்போதைய பொலிசுமா அதிபர் திரு.ஏர்னஸ்ட் பெரேராவின் நிலைப்பாடாக இருந்தது. பட்டலந்தயில் உள்ள வீட்டில் உண்மையில் திரு.தெல்கொட ஒருபோதும் வசித்திராதிருந்தமையயால் அவர், இன்னொரு உத்தியோகத்தரின்

எதிர்கால உபயோகத்துக்காக வீட்டைக் காலியாக விட்டுவைத்திருக்க முடியாது. ஏனெனில், காலியான வளாகங்கள் முறையற்ற நோக்கங்களுக்காக வேறெவரேனும் ஒருவரால் பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்பதனால் ஆகும். மேலும் ஆணைக்குழுவுக்கு உதவி செய்த வழக்குரைஞர்கள் 1990 செத்தெம்பர் 24 ஆந் திகதியிட்ட சப்புகஸ்கந்த கிராம சேவகரினால் வெளியிடப்பட்ட ஒரு சான்றிதழுடன் திரு.தெல்கொட இதை உறுதிப்படுத்தினார். குறிப்பிட்ட சான்றிதழின் எதிர்ப்புறத்தில் பியகம உதவி அரசாங்க அதிபர் கையெழுத்திட்டு உள்ளார். இந்த ஆவணம், X91 என அடையாளம் இடப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தின் நிரந்தர வதிவாளர் ஒருவராகவே சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் என் எஸ் டபிள்யு தெல்கொட இருந்தார் என இந்தஆவணம் குறிப்பிடுகின்றது. 1990 இல் வெளியிடப்பட்ட இந்த ஆவணத்தின் நிலைமைகள்பற்றி அவர் அறியாதிருந்தார் என இந்த ஆவணத்துக்கான திரு.தெல்கொடவின் விளக்கம் அமைகின்றது. மேலும், களனி நா.த.பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தரான 4157 இலக்கம் கொண்ட பொலிசுச் சார்ஜன்ட் மஹதுரகே ரணதுங்காவை விரிவாக சோதனை செய்ததன் பின்னர் திரு.தெல்கொட அவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டுக்கு அடிக்கடி வரும் வழக்கமுடையவராகவும் சிலவேளைகளில் உடைகளை மாற்றி வரும் பழக்கம் உடையவராகவும் இருந்தார் என்பது தெளிவாகின்றது. அது அவ்வாறிருக்க, 1989 ஆகஸ்ட் 02 முதல் 1990 மே 09 வரையான காலப்பகுதியில் பொலிசு அத்தியட்சகர் திரு.நளின் தெல்கொடவுக்கு A 1/5 இலக்கம்கொண்ட வீடு ஒதுக்கப்பட்டு இருந்தது எனக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநரான திரு.அசோக சேனநாயக்காவினால் வழங்கப்பட்ட சான்றுகளின்படி ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிடைத்துள்ள சான்றுகளின்வண்ணம், 1990 ஆம் ஆண்டின் முற்பகுதியளவில், ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு முரணானவாறு சில பிரதேசங்களைச் சேர்ந்த பொலிசு உத்தியோகத்தர்கள் தற்காலிக வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர் என்ற தகவல் பொலிசுத் திணைக்களத்துக்குக் கிடைத்ததென்பது தெளிவாகும். அத்தகைய முறைசாரா நடைமுறைகளின் விளைவாக எழக்கூடிய பல்வேறு பிரச்சினைகளையும் அத்தகைய இடங்களைச் சட்டவிரோதமான செயல்களுக்குப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் எழுவதனையும் கருத்திற்கொண்டும் 1990 பெப்புரவரி 14 ஆந் திகதியன்று, ஆதாரச் சேவைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிசுமா அதிபர் கிங்ஸ்லி விக்கிரமசூரியா (பொலிசுமா அதிபரின் சார்பாக ) அவர்கள் ஒழுங்கற்ற செயற்பாடுகளை ஒழுங்குறுத்தும்நோக்கில் அமைந்த பணிப்புரைகள் சிலவற்றை பொலிசு கசெற்றில் பிரசுரித்தார். சம்பந்தப்பட்ட கசெற்றின் பிரதியொன்று X64 என அடையாளம் இடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய பணிப்புரைகள் கிடைத்த பின்னரும் களனிப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தரான திரு.தெல்கொட அல்லது சம்பந்தப்பட்ட வீடுகளைப் பெற்றுக்கொண்ட திரு.பீரிஸ், பட்டலந்த வீடுகளின் சுவீகரிப்பினை ஒழுங்குறுத்துவதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அந்தக் காலத்திலிருந்தாவது(ஏற்புடைய பணிப்புரைகளில் பணித்தவாறு) உத்தியோகத்தர் எவரும் வீடுகளுக்கான வாடகையினைக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த முன்வரவில்லை.

முன்னர் குறிப்பிட்டதைப்போன்று சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் களனிப் பொலிசுப் பிரிவு பாரிய கொழும்புப் பிரதேசத்தினுள் அமைந்திருந்தது. சம்பந்தப்பட்ட பொலிசுப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக பிரதிப் பொலிசுமா அதிபர் திரு.எம் எம் ஆர் (மெரில்) குணரத்னா விளங்கினார். ஆணையிடுகை நிரல்வரிசையின்வண்ணம், உதவிப் பொலிசு அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் நளின் தெல்கொடவுக்கும், திரு.தெல்கொட பிரதிப் பொலிசுமா அதிபர் எம் எம் ஆர் (மெரில்) குணரத்னாவுக்கும், அவர் (திரு.குணரத்னா) பொலிசுமா அதிபர் திரு.ஏர்னஸ்ட் பெரேராவுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் இருந்தனர். எனவே, பட்டலந்த வீடுகளைப் பெற்றுக்கொண்டு ஒதுக்கீடு செய்தல் குறித்து திரு.குணரத்னாவின் நிலைப்பாட்டினை உறுதியாக அறிந்துகொள்ள வேண்டிய அவசியம்

ஏற்பட்டது. பாரிய கொழும்புப் பிரதேசத்தின் பிரதிப் பொலிசுமா அதிபராக கடமையேற்றுக்கொண்டவுடனே அதாவது 1989 அளவில் , உத்தியோகபூர்வமற்ற கலந்துரையாடலொன்றின்போது சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொட, களனி நாசகாரத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்த வீடுகள் சிலவற்றில் குடிபுகுந்துள்ளனர் எனத் தமக்குத் தெரிவித்தார் எனக் கூறினார். இந்த விடயம் தொடர்பில் முறையான எழுத்துமூல அறிவிப்பு எதுவும் இருந்திருக்கவில்லை. அவ்வீடுகளில் ஒன்றைத் தாமும் பெற்றுக்கொண்டுள்ளார் எனத் திரு.தெல்கொட கூறினார். பொலிசு உத்தரவுகளில்**(B 11-62)** வழமையான நடைமுறை தரப்பட்டுள்ளதெனினும் அவை சிக்கலானவைகளாகவும் துரிதமாக நடைமுறைப்படுத்த முடியாதவைகளாகவும் இருந்தன எனவும் அவரசகால ஒழுங்குவிதிகளில் **(X93)** கொள்ளல் நடைமுறையானது பெரிதும் பயனுறுதி வாய்ந்ததொன்றாகவும் திறமைவாய்ந்ததொன்றாகவும் இருந்தனவெனவும் திரு.குணரத்னா ஒப்புக்கொண்டார். பட்டலந்த வீடுகளை சுவீகரிப்புச் செய்யும் விடயத்தில் அதனைப் பயன்படுத்துவதற்கான தடை எதுவும் இருக்கவில்லை என அவர் கூறினார்.

பட்டலந்த வீடுகள் முறைசாராதவாறு பெற்றுக் கொண்டவை எனத் திரு.குணரத்னா ஒப்புக்கொண்டார். அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருந்த பொலிசு உத்தியோகத்தர்களின் தற்காலிகப் பயன்படுத்துகைக்காக பட்டலந்தயில் வீடுகள் பெற்றுக் கொண்டமைக்கான தகுந்த காரணங்கள் இருந்தனவெனினும் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையின் காரணமாக அவ்வீடுகளைச் சட்டவிரோதமான நோக்கங்களுக்கும் பயன்படுத்துவதற்கு வழிவகுத்தது என்பது அவருடைய நிலைப்பாடாகும். உதவிப் பொலிசு கண்காணிப்பாளர் டக்ளஸ் பிரிஸ்சினால் கடைப்பிடிக்கப்பட்ட அமய நடைமுறை காரணமாகப் பிரச்சினைகள் எழக்கூடும் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார். அத்தகைய அமய முறையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்கங்கள், நடைமுறைகள் யாவற்றுக்கும் முரணானவாறும் வீட்டு வசதிகளைப் பொலிசு உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட வேறெந்த இடமும் நாட்டில் எவ்விடத்திலாவது அமைந்திருந்ததாகத் தாம் அறியவில்லை எனத் திரு.குணரத்னா குறிப்பிட்டார். அப்படியிருந்தாலும் இக்கருத்திட்டம்பற்றிய தகவல் கிடைத்தபின்னரும், இதுகுறித்து திரு.குணரத்னா என்ன நடவடிக்கை எடுத்தார்? இவ்விடயத்தை ஒழுங்குறுத்த அல்லது அதனை சரிசெய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் ஒப்புக்கொண்டார்.

முன்னர் குறிப்பிட்டவாறு, நாசகாரச் செயல்கள் அதியுச்ச கட்டத்தில் நிலவியபோது, பொலிசுப்படையினருக்கும் ஆயுதம்தாங்கிய படைகளைச் சேர்ந்த ஆளணியினருக்கும் அச்சுறுத்தலொன்று நிலவியது உண்மையாகும். 1989 ஆம் ஆண்டின் நடுப்பாகத்தில் புலனாய்வுகளோடும் நாசகாரிகளுக்கு எதிரான நடவடிக்கைகளோடும் நேரடியாகச் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மட்டுமன்றி ஏனைய உத்தியோகத்தர்கள் யாவரும் பலத்த அச்சுறுத்தலுக்கு உட்பட்டு இருந்தனர். தெற்குப் பிரதேசத்தின் பிரதிப் பொலிசுமா அதிபரான தர்மதாஸ உடுகம்பொலாவின் தாயும், நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மூவரும் சந்தேகப்பட்ட ஜே.வி.பி யினர்களால் கொல்லப்பட்டனர். அத்துடன், காலி நகரத்தில் அமைந்திருந்த பாரம்பரிய வீடும் தீக்கிரையாக்கப்பட்டது. பொலிசு உத்தியோகத்தர் பலரும் கொல்லப்பட்டனர். இவர்களுள் பொலிசுக் கண்காணிப்பாளர் ரெரன்ஸ் பெரேராவும் அடங்குவர். களனி நாசகாரத் தடுப்புப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தரான பிரதான பரிசோதகர் ரஞ்சித் விக்கிரமசிங்காவின் உயிரைப் பறிக்கவும் இரண்டு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்தச் சூழ்நிலைகளின் கீழ், அச்சுறுத்தலுக்கு உட்பட்டவர்களுக்காக பாதுகாப்பான வதிவிடங்களை ஏற்பாடு செய்தல் முற்றிலும் நியாயமானதெனக் கருதலாம். எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதனைச் செய்வதில் எவ்வாறு இறங்குதல் வேண்டும். அது, நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அது, சம்பந்தப்பட்ட வளாகங்களை தவறான முறையில் பயன்படுத்துவதற்கு வழியேற்படாதவாறு

செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். மேலும், "இரகசிய நிகழ்ச்சிநிரலொன்று" பின்பற்றப்படாமலும் இருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், வீடுகளைப் பெற்றுக்கொண்டு ஒதுக்கீடு செய்வதற்கான காரணம் மேலே குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தால் உண்மையான தேவை இருந்தபோது மட்டும் தற்காலிக வீடமைப்பு வசதிகளை ஏற்பாடு செய்திருக்கலாம். சாட்சியமளித்த பொலிசு உத்தியோகத்தர்கள் அனைவரினதும் கூற்றுப்படி, நாசகாரர்களின் நேரடியானதும் உண்மையானதுமான அச்சுறுத்தல் 1989 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவிலேயே ஆரம்பமானது. திரு.ரணில் விக்கிரமசிங்கா அளித்த சான்றின்வண்ணமும், நாசகாரிகளின் உண்மையான அச்சுறுத்தலானது 1989 யூலை-ஆகஸ்ட் அளவில் ஆரம்பமானது. கிடைத்துள்ள சான்றுகளின்வண்ணம், பொலிசு மற்றும் ஆயுதம்தாங்கிய சேவை ஆளணியினர்கள் தமது பதவிகளிலிருந்து இராஜினாமாச் செய்யும்படி பணித்த, தேசப்பிரேமி ஜனதா வியாபாரய என்னும் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டவை எனக் கூறும் சுவரொட்டிகள் நாடெங்கிலும் ஒட்டப்பட்டு இருந்தன. அங்ஙனம் பதவி விலகாதிருப்பின், அவர்களும், அவர்களுடைய குடும்பங்களும் கொலைசெய்யப்படுவார்கள் எனக் கூறப்பட்டு இருந்தது. இந்தச் சுவரொட்டிகள் 1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலும் ஒட்டப்பட்டன. எவ்வாறாயினும், அரச உர் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களின்வண்ணம், (அவை ஏனைய சான்றாளர்களால் மறுக்கப்படவில்லை) பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலிருந்து வீடொன்றைப் பெற்றுக்கொண்ட களனி பொலிசுப் பகுதியைச் சேர்ந்த முதலாவது பொலிசு உத்தியோகத்தரான உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் ஆர். தர்மரத்னா 1986 டிசெம்பர் 16 ஆந் திகதியிலேயே வீட்டைப் (இல.A1/4) பெற்றிருந்தார். 1986 இல் இந்தப் பொலிசு உத்தியோகத்தருக்கு வீடொன்றை வழங்க இருந்த அவசியம் யாது?

மேலும், நாட்டின் நிலைமை வழமையான நிலைக்கு வந்தவுடனேயே பொலிசு உத்தியோகத்தர்களின் பயன்பாட்டுக்குத் தற்காலிகமாகப் பெற்றுக்கொண்ட வீடுகள் அவற்றின் உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய நிலை இருந்ததென்பது பொலிசுத் தலைமையகம் அறிந்திருந்தது. கிடைத்துள்ள சான்றுகளின்வண்ணம், ஜே.வி.பி. இன் தலைவர்கள் கொல்லப்பட்ட பின்னர் நிலைமை படிப்படியாக வழமைக்கு மாறியது. 1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிலைமை வழமைக்கு மாறியபின்னர் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு இருந்த அச்சுறுத்தலும் இல்லாமல் போயிற்று. எனவே, 1990 பெப்புரவரி 13 ஆந் திகதியைக் கொண்ட 839/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்மூலம், பொலிசுமா அதிபரின் சார்பாக நடவடிக்கை எடுத்த சிரேட்ட பிரதிப் பொலிசுமா அதிபர் (நிருவாகம்), பொலிசுப் பிரிவுகளின் பொறுப்பு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் சுவீகரிக்கப்பட்ட சகல வீடுகளும் ஏனைய கட்டிடங்களும் அவற்றின் உடைமையாளர்களுக்கு உடனடியாக நடைமுறைக்குவருமாறு மீளக்கொடுக்கப்படல் வேண்டுமென்ற பணிப்புரையொன்று வழங்கினார். இந்தச் சுற்றறிக்கையின் பிரதியொன்று **X93** என அடையாளம் இடப்பட்டு ஆணைக்குழுவின்முன் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், களனி பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தரான நளின் தெல்கொட இதுகுறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என நாங்கள் அவதானிக்கின்றோம். பொலிசு உத்தியோகத்தர்களால் குடிபுகுந்திருந்த பட்டலந்த வீடுகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த வீடுகள் அவசரகால ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் சுவீகரிக்கப்பட்டு இருக்கவில்லையாதலால் அவை கூட்டுத்தாபனத்துக்கு திருப்பிக்கொடுக்கப்படவில்லை என எதிர்வாதத் தரப்பில் கூறிய கருத்தினை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் முக்கிய கருத்து யாதெனில், அச்சுறுத்தல் நிலவிய காலப்பகுதியில் தற்காலிகமாகப் பெற்றுக்கொண்ட சகல வீடுகளும், அச்சுறுதல்கள் இப்போது இல்லாதபடியால் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்பதாகும். அதற்கு மாறாக, சம்பந்தப்பட்ட பொலிசு உத்தியோகத்தர்கள் அவ்வீடுகளை 1994 ஆம் ஆண்டின் இறுதிவரை தொடர்ந்தும்

பயன்படுத்தினர். உண்மையில் அவர்களில் சிலர் இந்த ஆணைக்குழு தாபிக்கப்படும்வரை அவ்வீடுகளைப் பயன்படுத்தினர். இதற்கு எங்ஙனம் காரணவிளக்கம் கூற முடியும்?

கிடைத்துள்ள சான்றுகளின்வண்ணம், பட்டலந்தயின் வீடுகளைப் பெற்றுக்கொண்டு ஒதுக்கீடு செய்தலைப் பொறுத்தவரை, அப்போதைய கைத்தொழில் அமைச்சரான திரு.ரணில் விக்கிரமசிங்காவும் அப்போதைய பாலியகொடை பொலிசு நிலையத்தின் பொறுப்பு உத்தியோகத்தரான (பிற்காலத்தில் களனிப் பொலிசுப் பிரிவின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளராகப் பதவியேற்ற) திரு.டக்ளஸ் பீரிஸ்சும் பிரதான சிற்பிகளாக இருந்துள்ளனர் என்பது தெட்டத் தெளிவானதாகும். முன்னர் குறிப்பிட்டவாறு இந்த ஆணைக்குழு இயங்கிய காலப்பகுதியில் திரு.பீரிஸ் தலைமறைவாகி இலங்கையினை. விட்டுச்சென்றார். எனவே, திரு.பீரிஸ்சை வினாவுதலுக்கு உட்படுத்தி அவருடைய சான்றுகளைப் பதிவு செய்யக்கூடிய நிலையில் நாங்கள் இருக்கவில்லை. திரு.பீரிஸ்சின் சார்பில் சான்றுகள் எவையேனும் சமர்ப்பிக்கப்படவில்லையாதலால் அவர் இந்த விடயம்பற்றிச் சமர்ப்பித்த கூற்றுக்களையும் காரணவிளக்கங்களையும் ஆராயக்கூடிய நிலையில் நாங்கள் இருக்கவில்லை. எவ்வாறாயினும், -காண்புகளைக் கண்டபோது அவருடைய சட்டவரைஞரால் சான்றாளர்களிடம் கேட்ட கேள்விகளை நாங்கள் கருத்திற்கொண்டுள்ளோம். மேலும் பட்டலந்தயில் உள்ள வீடுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒதுக்கீடு செய்தல் தொடர்பில் அவர் நடந்துகொண்ட விதத்தை விளக்க முடியாமை ஏனையவற்றுள் அவர் தலைமறைவாகிப் போனமைக்குத் தூண்டுதல் அளித்த காரணமாக இருக்கலாம். எவ்வாறாயினும், திரு.ரணில் விக்கிரமசிங்காவை வினாவுதலுக்கு உட்படுத்தும் வாய்ப்பு இவ்வாணைக்குழுவுக்குக் கிடைத்தது. இவ்விடயம்பற்றிய அவருடைய கூற்றினை இப்பொழுது நாங்கள்- ஆராயக் கருதுகின்றோம்.

திரு.ரணில் விக்கிரமசிங்கா அளித்த சாட்சியங்களின்வண்ணம் 1989 ஆம் ஆண்டில் முன்னாள் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் காலஞ்சென்ற திரு.ரஞ்சன் விஜேரத்னா, பொலிசாருக்கும் தரைப்படையினருக்கும் பட்டலந்த வீடமைப்புத்திட்டத்தில் அமைந்த வீடுகள் சிலவற்றை விடுவிக்குமாறு தம்மைக் கேட்டுக்கொண்டார் எனக் கூறினார். இந்த வேண்டுகோள் தரைப்படையினரதும் பொலிசாரினதும் வேண்டுகோள்களால் ஆதரிக்கப்பட்டிருந்தது. திரு.டக்ளஸ் பீரிஸ்சும் அதற்குச் சமமான வேண்டுகோளை திரு.விக்கிரமசிங்காவுக்குச் செய்திருந்தார். கம்பஹாவில் நடந்த பாதுகாப்புக் கூட்டிணைப்புக் கூட்டமொன்றில் பொலிசு செய்த கோரிக்கையை திரு.ரணில் விக்கிரமசிங்கா நினைவுகூர்ந்தார். திரு.பீரிஸ்சைத் தவிர பொலிசின் சார்பில் அத்தகைய கோரிக்கையொன்றைச் செய்யக் குறிப்பிட்ட எந்தவொரு உத்தியோகத்தரின் பெயரையும் அவர் குறிப்பிடவில்லை. மேலும், பிரதேசப் பொறுப்பு உத்தியோகத்தர் திரு.நளின் தெல்கொட அத்தகைய ஒரு கோரிக்கையைச் செய்தாரா எனக் கேள்வி எழுப்பப்பட்டபோது திரு.ரணில் விக்கிரமசிங்கா சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ பதில் அளிக்கவில்லை. திரு.தெல்கொட அத்தகைய ஒரு கோரிக்கையைச் செய்யவில்லை என்பது அவரின் நிலைப்பாடாக இருந்தது. ஒரு பொலிசு உத்தியோகத்தரினாலோ அல்லது பொலிசுத் தலைமையகத்தினாலோ தன்னிடம் எழுத்திலான எந்தக் கோரிக்கையும் இருந்தது என்பதை திரு.ரணில் விக்கிரமசிங்கா குறிப்பிடவில்லை. உண்மையில் திரு.ரணில் விக்கிரமசிங்கா கோரிக்கைகளை வாய்மூலமாகவே செய்யும்படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் வேண்டிக் கொண்டனர் என அவர் தொடர்ந்தும் சான்றளித்தார். எவ்வாறாயினும் அவர் ஏன் எழுத்திலான கோரிக்கைகளை விடுக்கும்படி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கவில்லை என்பதைக் குறிப்பிடவில்லை. அதன்பின்னர் சில சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபன ஒழித்துக்கட்டுநருக்கு எழுத்திலும் கோரிக்கையொன்றைச் செய்தார். அதை அவர் திரு.ரணில் விக்கிரமசிங்காவின் அமைச்சுக்கு அனுப்பி வைத்தார்.(கைத்தொழில் அமைச்சு). பொலிசு,இராணுவத்தினருக்குக் கொடுக்கப்பட வேண்டியிருக்கின்ற சில வீடுகளை குறித்துரைக்குமாறு ஒழித்துக்கட்டுநர் திரு.அசோக சேனநாயக்காவுக்கு திரு.ரணில் முன்னர் கம்பஹாவில் நடந்த கூட்டத்தில் அறிவுறுத்தல்

வழங்கியதாக அவர் ஏற்றுக்கொண்டார். வீடுகள் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பேரிலேயே வழங்கப்பட்டிருந்தன அவர் கூறியுள்ளார். அதன்பின்னர் திரு.,பீரிஸ் ஒழித்துக்கட்டுநருக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார்.(X65). மேலும், கூட்டுத்தாபனம் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை விடுவித்தது. அவ்வாறு செய்யும்படி திரு.ரணில் அறிவுறுத்தல்கள் வழங்கியதால் ஒழித்துக்கட்டுநர் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்கினார் என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். நாசகாரர்களினால் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு அச்சுறுத்தல் கிடைக்க முன்பும்கூட 1986 இல் திரு.ரணில் விக்கிரமசிங்கா இளைஞர் விவகார, வேலைவாய்ப்பு அமைச்சராக இருந்தபோது அவர் அப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் என்றவகையில் உ.பொ.அ, தர்மரத்னாவுக்கு விடுவிக்கப்படவுள்ள வீடொன்றுக்கு அவர் அங்கீகாரம் வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், குறிப்பிட்ட பகுதிக்கான (பியகம) பா.உறுப்பினராக இருந்துகொண்டு கூட்டுத்தாபனத்தின் பொறுப்பான அமைச்சரல்லாமல் அத்தகையதோர் அங்கீகாரத்தை அவரால் எப்படி வழங்க முடிந்தது என்பதை திரு.விக்கிரமசிங்கா விளக்க முயற்சிக்கவில்லை.

வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக அவசரகால ஒழுங்குவிதிகள் , பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு முரணாக திரு.ரணில் விக்கிரமசிங்காவின் அறிவுறுத்தல்களின்பேரில் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு இவ்வீடுகள் விடுவிக்கப்பட்டு இருக்கின்றன என்ற நிலைமைக்கு அவர் முகம்கொடுக்க வேண்டியிருந்ததுடன் குறிப்பிட்ட காலத்தில் வீடுகளை உடைத்துக்கூட அவற்றில் நுழைவதற்கு (வசிப்பிட நோக்கத்துக்காக) அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது எனக் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், அரசாங்கத்தினால் அவ்வாறான அதிகாரம் பொலிசுக்கு உரித்தளிக்கப்பட்டிருந்தது என்பதை உள்ளடக்கிய எந்த ஆவணத்தையும் சமர்ப்பித்து திரு.விக்கிரமசிங்கா தனது நிலையை ஆதாரப்படுத்தவில்லை. அவரின் கருத்துப்படி அவ்வாறான அதிகாரம் காலஞ்சென்ற திரு.ரஞ்சன் விஜேரத்னாவின் வாய்மொழிமூலம் வழங்கப்பட்டிருந்தது என்பதாகும். முன்னாள் பொலிசுமா அதிபர் திரு.ஏர்னஸ்ட் பெரேரா பாரிய கொழும்பு பெரும்பாகத்தின் அப்போதைய பிரதிப் பொலிசுமா அதிபர், களனி பொலிசுப் பிரிவின் அப்போதைய பொறுப்பு உத்தியோகத்தர் திரு.நளின் தெல்கொட போன்றோர் இது சம்பந்தமாக விரிவான கேள்விகள் தொடர்ந்தும் பொலிசு உத்தியோகத்தருக்கு அத்தகைய "வாய்மொழிமூல அதிகாரத்"துக்கான எந்தக் குறிப்பும் வழங்கப்படவில்லை என்பது ஆச்சரியத்துக்குரியதாக உள்ளது. அவ்வாறான அதிகாரம் வழங்கப்பட்டு இருந்தால் அதுபற்றி ஏன் அவர்களில் எந்த உத்தியோகத்தரும் குறிப்பிட்டிருக்கவில்லை என்பதற்கு நாம் எந்தக் காரணத்தையும் காணமுடியவில்லை. மேலும், இவ்வாறான ஒரு முக்கியமான விடயம்பற்றி அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த எந்தவொரு அமைச்சரும் வாய்மொழிமூல அறிவுறுத்தல்களை மட்டும் வழங்கியிருக்க முடியும் என நாம் எதிர்பார்க்க முடியாது. அவசரகாலத் தேவை நிலைமையின்பொருட்டுக்கூட வாய்மொழிமூல அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இருப்பினும் பின்னர் அது (அறிவுறுத்தல்கள் ) எழுத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியும். இந்நிலைமைகளில் அத்தகையதொரு தொகுப்பிலும் முறையற்ற தன்மையிலும் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்மொழிமூல அதிகாரத்தை திரு.ரஞ்சன் விஜேரத்னா வழங்கியிருந்தார் என திரு.ரணில் விக்கிரமசிங்காவின் நிலைமையில் நாங்கள் மறுதலிக்கின்றோம்.

அவசரகால ஒழுங்குவிதிகள் அனுமதிக்காத முறையில் பொலிசு, இராணுவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரசாங்க நிறுவனமொன்றுக்குச் சொந்தமான வீடுகள் இருந்த மற்றுமொரு இடத்தையும் ஓர் உதாரணமாக திரு.விக்கிரமசிங்கா சுட்டிக்காட்டி உள்ளார். அவரின் கருத்துப்படி பட்டலந்தயில் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீடுகளைக் கொடுக்கும் அதே அமைப்பில் பொலிசு, இராணுவ உத்தியோகத்தர்களுக்கு மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான "திகன வீடமைப்புத் திட்டத்தில்" சில வீடுகள் வழங்கப்பட்டு இருந்தன என்பதாகும். இச்செயல் சம்பந்தமாக அவர் எந்த ஆவணச்

சான்றையும் சமர்ப்பிக்கவில்லை. இது சம்பந்தமாக பின்னர் நடத்தப்பட்ட புலனாய்வுகள் (திரு.விக்கிரமசிங்கா இந்தச் சாட்சியை அளித்த பின்பு) அத்தகைய முறையற்ற தன்மையில் 1989 இல் பொலிசு, இராணுவ உத்தியோகத்தர்களுக்கு திகனயில் ஒரு வீடும் ஒதுக்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டுகின்றன. மேலும், அத்தகைய அதிகாரம் அளிக்கப்படாத நடைமுறைகள் திகனயில் பின்பற்றப்பட்டாலும்கூட ஒழுங்கற்ற தன்மையில் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு பட்டலந்தயில் வீடுகளை விடுவித்தமைக்கான ஓர் மன்னிப்பாக அது செயல்பட மாட்டாது. மேலும், மேற்குறிப்பிட்ட விதத்தில் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்த எந்த உதாரணத்தையும் முழுநாட்டிலும் இருந்ததென எந்தச் சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்களும் அறிந்திருக்கவில்லை. நாசகார நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தில் இருந்த காலப்பிரிவில் பொலிசு உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் "தற்காலிக" வீடமைப்புகளை ஏற்பாடு செய்வதற்காக சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் போன்ற அரச வளாகங்களின் தற்காலிகப் பெற்றுக்கொள்கைகளே இருந்தன. எவ்வாறாயினும், அரசாங்க அமைச்சர்கள் தலையிட்டு பொலிசு உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்பு வசதிகளை ஏற்பாடு செய்த பிற சந்தர்ப்பங்கள் அவர்களது அறிவுக்கு எட்டிய வகையில் இருக்கவில்லை என்பதாகும். நீண்டகால அடிப்படையில் வீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒன்றில் அவசரகால ஒழுங்குவிதிகளில் உள்ள நடைமுறை பின்பற்றப்பட்டு இருக்கலாம் அல்லது முன்னர் குறிப்பிட்ட பொலிசுத் திணைக்கள உத்தரவுகளில் குறிப்பிடப்பட்டவாறு அவ்வளாகங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு இருக்கலாம். ஆகவே, பொலிசு உத்தியோகத்தர்களுக்கு பட்டலந்தயில் வீடுகளின் ஒதுக்கமானது "அதிவிசேடமானதும் முற்றாக வழமைக்கு மாறானதுமாகவே" அமைந்திருந்தது என இறுதியாகக் குறிப்பிடலாம்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு பொலிசு உத்தியோகத்தர்களாலும் (கம்பஹாவில் நடந்த பாதுகாப்புக் கூட்டிணைப்புக் கூட்டத்தில்) காலஞ்சென்ற ரஞ்சன் விஜேரத்னாவினாலும் செய்யப்பட்ட வேண்டுகையை தான் வெறுமனே தொகுத்தேன் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு ஆணைக்குழுவை இணங்கச் செய்ய திரு.ரணில் விக்கிரமசிங்கா முயற்சித்திருக்கின்றார். திரு.ரஞ்சன் விஜேரத்னாவின் அகால மரணத்தின் காரணமாக இந்த விடயம்பற்றி ஆணைக்குழுவினால் அவரைப் பரிசோதிப்பதற்கு முடியாதிருந்தமையாலும் திரு.ரணில் விக்கிரமசிங்காவின் சான்றின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த முடியாத ஒரு நிலையில் நாம் இருக்கின்றோம். மேலும், அத்தகைய செயல்பற்றி எந்த ஆவணங்களும் இல்லை. சாட்சியம் அளித்த எந்தச் சிரேட்ட பொலிசு உத்தியோகத்தரும் கம்பஹா கச்சேரியில் நடைபெற்ற பாதுகாப்பு கூட்டிணைப்புக் கூட்டங்களில் அவர்களும் கலந்துகொண்டுள்ளனர். அத்தகைய முறையில் சான்றளிக்கவில்லை. மேலும், அக்கூட்டத்தில் அவ்வாறான ஒரு கோரிக்கையை பொலிசு செய்திருக்கும் பட்சத்தில் அது எழுத்தில் அமைந்த கோரிக்கையாக அமைந்திருக்கலாம். வீடுகளை வேண்டி கூட்டுத்தாபனத்துக்கு திரு.டக்ளஸ் பீரிஸ்சினால் அனுப்பட்ட கடிதத்திலும்கூட கம்பஹாவில் நடத்தப்பட்ட பாதுகாப்புக் கூட்டிணைப்புக் கூட்டத்திலோ அல்லது காலஞ்சென்ற திரு.ரஞ்சன் விஜேரத்னாவினால் செய்யப்பட்ட ஒரு கோரிக்கையினாலோ குறிப்பிட்ட தீர்மானம் வந்ததாக எந்தக் குறிப்பும் இல்லை. அந்த நிகழ்வில் பொலிசுத் தலைமையகம் உத்தியோகபூர்வமாக ஈடுபட்டு இருந்திருக்கலாம். முழுக் கொடுக்கல்வாங்கல்களும் திரு.டக்ளஸ் பீரிஸ்சின் "தனிப்பட்ட" ஒரு விடயமாக இருந்தது என திரு.ஏர்னஸ்ட் பெரேரா குறிப்பிட்டதை நாம் நினைவுபடுத்துகிறோம். திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு பொலிசினால் ஓர் உத்தியோகபூர்வ வேண்டுகோள் விடுக்கப்பட்டு இருக்குமாயின் ஒன்றில் முன்னாள் பொலிசுமா அதிபரையோ அல்லது களனி பொலிசுப் பிரிவின் முன்னாள் பொறுப்பு உத்தியோகத்தரோ அந்த வகையில் சான்றளித்திருக்க வேண்டும். முன்குறிப்பிட்ட காரணங்களினால் பொலிசு உத்தியோகத்தர்களுக்குச் சில வீடுகளை விடுவிப்பதற்கு உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்துக்கு அவர் வழிகாட்டல் வழங்கியிருக்கின்றார் என்பது சம்பந்தமாகச் சார்த்துதல் செய்யப்பட்ட காரணங்களுக்கு திரு.ரணில் விக்கிரமசிங்காவின் வாசகத்தை நாம் மறுக்கின்றோம்.

**சட்டரீதியற்ற நோக்கங்களுக்காக பட்டலந்த வீடுகளை உபயோகிப்பதற்கான காரணம்..........**

நாசகாரர்களினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட அச்சுறுத்தல் துரிதமாக அதிகரித்தவேளையில் அரசாங்கமும்கூட பிரச்சினையின் செயல்வரம்புபற்றி உன்னிப்பாகவே இருந்தது. அரசாங்கத்தின் பிரதான இலக்கு மையமாக தொடர்ந்து அதிகரிக்கும் வன்முறையைத் தடை செய்வதேயாகும். ஆளும்கட்சியின் அரசியல்வாதிகளுக்கான அச்சுறுத்தல் மிகவும் பயங்கரமாக இருந்தது. தமது சாதாரண வாழ்க்கையைக்கூட நடத்துவது அவர்களில் அநேகம் பேருக்கு மிகக் கடினமானதாக மாறியது. அரசாங்கச் சொத்துக்களும்கூட பயங்கர அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டதாகவே இருந்தன. வன்முறையின் துரித வியாபகமானது நிலையற்ற ஒரு . தன்மையை அரசாங்கத்தின்மீது ஏற்படுத்தியது. அத்தோடு இது ஆட்சிச் செயன்முறையையும் பாதித்தது. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முக்கிய அச்சுறுத்தல் ஜே.வி.பி.யிடமிருந்தே வந்தது. சனநாயகக் கட்டமைப்பினுள் சட்டரீதியாகச் செயல்படுகின்ற அரசாங்கத்தின் எதிர்த்தரப்பினருக்கு ஜே.வி.பி யின் அரசியல் பிரச்சாரம் உதவியளித்துக்கொண்டு இருக்கின்றது என்பதை அன்றைய அரசாங்கம் உணர்ந்திருந்தது. ஐ.தேக.ட்சியின் ஏனைய அரசியல் எதிராளிகளுக்கும் ஜே.வி.பி.யின் செயல்வகைக்குமிடையே தெளிவான வேறுபாடு காணப்பட்டபோதிலும் ஜே.வி.பி. யினரும் சனநாயக அரசியல் கட்சிகளின் அரசியல் ஆர்வலர்களும் (ஐ.தே.கட்சிக்கு எதிரானோர்) சனநாயக அரசியல் நடவடிக்கைளிலேயே ஒன்றாகவே செயற்படுகின்றனர் என்பதை பாரிய மட்டத்தில் காட்டக்கூடிய சான்று இருந்தது. அத்தோடு ஆளும் ஐ.தே.கட்சிக்கு எதிரான சனநாயக அரசியல்கட்சிகளின் தரத்துக்கு ஜே.வி.பி. யினர் மெதுவாக ஊடுருவி இருக்கின்றனர் என்ற தகவலை ஊகிக்கும் உண்மையொன்றும் நிலவியது. அன்று, ஜே.வி.பி. யின் அரசியல் அடித்தளம் சந்தேகத்துக்கு உரியதாக இருந்தபோது ஒரு திறமுறைக் கண்ணோட்டத்தில் அது ஜே.வி.பி. ஆர்வலர்களுக்கு உதவி செய்திருக்க முடியும். இந்த வகையில் அரசாங்கமானது நாசகாரர்களினால் நிலைநிறுத்தப்பட்ட வன்முறையைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்தமைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் இருந்தன.

ஆரம்பத்தில் அரசாங்கம் நாசகாரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பொலிசாரைப் பயன்படுத்தியது. கிளர்ச்சிக்காலத்தின் பிற்பகுதியில் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு பொலிசு மட்டும் போதாதமையால் இராணுவத்தினரும் அதில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்தனர். அரசியல்வாதிகளின் பாதுகாப்பு, அரசாங்கச் சொத்துக்கள் என்பவற்றைப் பாதுகாத்தல் என்ற அமைப்பில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு மேலாக நாசகாரத் தடுப்பு நடவடிக்கைகள்பற்றி புலனாய்வுகள் செய்யுமாறு பொலிசுத் துறையினர் பணிக்கப்பட்டனர். நாசகாரர்களுக்கு எதிரான செயற்பாட்டில் தகவல் சேகரித்தல் முக்கியதோர் அம்சமாகக் கருதப்பட்டது. நாசகார இயக்கங்கள் சம்பந்தப்பட்ட தகவல் அரசாங்கத்துக்குச் சார்பாக வேலைசெய்த தகவலர்களினால் மட்டுமன்றி பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சந்தேகத்துக்குரிய நாசகாரர்களிடம் கேள்விகள் கேட்பதன் மூலமும் சேர்க்கப்பட்டன. இம்முறை, நாசகார இயக்கம் சம்பந்தப்பட்ட நம்பகமான தகவல்களையும் அதன் குற்றங்கள்பற்றியும் அறிந்துகொள்ள முடியுமான ஒரு நேரடியான வழியாக நிரூபிக்கப்பட்டது. இந்தவகையில் ஜே.வி.பி. யினருக்கு எதிரான செயற்பாட்டில் கட்டுக்காப்பில் உள்ள நாசகாரச் சந்தேகத்துக்குரியவர்களிடம் கேள்வி தொடுத்தல் முக்கிய பங்களிப்பைச் செய்தது.

அனைத்துப் பொலிசு நிலையங்களிலும் அமைக்கப்பட்ட நாசகாரத் தடுப்புப் பிரிவுகளே ஜே.வி.பி. இற்கு எதிரான செயற்பாட்டுக்குப் பொலிசின் முக்கிய கேடயமாக இருந்தன. இப்பிரிவுகள் "உ.பொ.அ நடவடிக்கை" என குறிப்பிட்ட உதவிப் பொலிசு அத்தியட்சகர்களினாலேயே வழிநடத்தப்பட்டன. குறிப்பிட்ட பொலிசுப் பிரிவுகளின் பொறுப்பு

உத்தியோகத்தர்களுக்கு இந்த உ.பொ.அத்தியட்சகர்கள் பதில் அளிக்க வேண்டியிருப்பதோடு( இவர்கள் பொதுவாக பொலிசு அத்தியட்கர்கள் பதவிகளிலோ அல்லது சிரேட்ட பொலிசு அத்தியட்சகர்கள் பதவிகளிலோ) இருந்தனர். அவர்கள் மறுபுறத்தில் குறிப்பிட்ட பொலிசு அணிகளின் பிரதிப் பொலிசுமா அதிபருக்கு பதில் அளிக்க வேண்டியும் இருந்தது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பொறுப்பு உத்தியோகத்தர் இருந்ததோடு(பொதுவாகச் சோதனைகாரர் அல்லது பிரதான சோதனைகாரர் பதவியை வகித்தனர்) 10 முதல் 15 வரையான கனிட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்றும் இருந்தது. பிரதேச பொலிசு நிலையங்களின் பொறுப்பு உத்தியோகத்தர்களின் உதவியுடன் நாசகாரத் தடுப்புப் பிரிவினர் அவற்றின் நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதற்கு வேண்டப்பட்டனர். பொலிசு நிலையத்தின் பொறுப்பு உத்தியோகத்தர்கள் நா.த.பிரிவுகளினால் கையாளப்பட்டுக் கொண்டிருந்த புலனாய்வுகளைப் பரிமாறிக் கொள்வதன்மூலமும் புலனாய்வுகளுக்கு உதவுவதன்மூலமும் நாசகாரத் தடுப்புப் பிரிவுகளுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டனர். அவர்கள் நா.த.பிரிவுகளுக்கு ஆதார சேவைகளை வழங்குவதற்கும் வேண்டப்பட்டனர். சில சந்தர்ப்பங்களில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான மேலதிக மனித சக்திகளையும் ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தனர். அநேகமான பகுதிகளில் குறிப்பிட்ட பொலிசுப் பிரிவினுள் உள்ள ஒரு பொலிசு நிலையத்தில் நா.த.பிரிவுகளுக்குத் தங்குவசதிகளும் அளிக்கப்பட்டன. நா.த.பிரிவுகளினால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் குறிப்பிட்ட பொலிசு நிலையத்தின் சிறைக்கூடங்களில் ஆரம்பத்தில் குறிப்பிட்ட நா.த. பிரிவுகளின் மேற்பார்வையாளர்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர். அநேகமான பகுதிகளில் சந்தேக நபர்களைத் தடுத்து வைப்பதற்கு நா.த.பிரிவுகள் தனக்கென சொந்தமான சிறைக்கூடத்தைப் பெற்றிருக்கவில்லை. விசேடமாக சில வழக்குகளில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம்(CID), குற்றப்புலனாய்வுப் பணியகம்(CDB) என்பன போன்ற விசேட பொலிசுக் கிளைகள் நாசகாரர்களினால் செய்யப்பட்டு இருக்கலாம் என சார்த்தப்பட்ட குற்றங்களுக்கு புலனாய்வுகளை நடத்துவதற்கு வேண்டப்பட்டன.

நாசகாரர்களுக்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கை வலுவடைந்தபோது அரசுக்கு எதிரான சார்த்துதல்கள் தலைகாட்ட ஆரம்பித்தன. பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட நபர்கள் காணாமல் போயிருக்கின்றனர் என சார்த்துதல் செய்யப்பட்டு இருந்தது. கைது செய்யப்பட்டிருந்த சந்தேகிக்கப்பட்டிருந்தவர்கள் சம்பந்தமாக, சட்டத்தில், உரிய செயன்முறை தாக்கம் செலுத்தவில்லை. நாசகார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர் என்ற சார்த்துதல்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நபர்கள், சித்திரவதையின் பாற்பட்ட குரூரமான, மனிதாபிமானமற்ற இம்சைக்கு ஆளாகியிருக்கின்றனர் என்றும்கூட சார்த்துதல்கள் செய்யப்பட்டு இருக்கின்றன. (நாசகாரியெனச் சார்த்தப்பட்ட சந்தேகநபரொருவர் சார்பில் தொடுக்கப்பட்டிருந்த குறிப்பிட்ட அடிப்படை உரிமைகள் வழக்கொன்றின்போது உயர் நீதிமன்றம், அந்தச் சந்தேகநபர் பொலிசுப் பரிசோதகர் ஒருவர் குறடொன்றைப் பயன்படுத்திச் சந்தேகநபரின் பற்களைப் பிடுங்குவதன்மூலம் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டிருந்தார் எனத் தீர்ப்பு அளித்தது.). அரச முகவர்களினால் கைதுசெய்யப்பட்ட சிலர் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் சார்த்துதல் செய்யப்பட்டுள்ளது (அவர்களைக் கடுமையாகச் சித்திரவதை செய்ததன் பின் இது நடந்திருக்கலாம்). இறந்தவர்கள் சிலரின் உடல்கள் பொது இடங்களில் வீசப்பட்டும் உடல்களின்மீது ரயர்கள் போடப்பட்ட பின் அவை எரிக்கப்பட்டுள்ளன என்றும் சார்த்துதல் செய்யப்பட்டுள்ளது. இத்தோற்றப்பாடு பொதுவாக "ரயர் குவியல்கள்" என அறியப்பட்டுள்ளது. பொது இடங்களில் எரிக்கப்பட்ட உடல்கள் பகிரங்கமாக வெளிவருவதுபற்றி அரசாங்கத்திடம் கௌரவ உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கூட கேள்வி எழுப்பினார்கள் என திரு.ரணில் விக்கிரமசிங்கா குறிப்பிட்டுள்ளார். அத்தகைய உடல்களைப் பகிரங்கமாக வெளிக்கொணரும்போது பொலிசும் இராணுவத்தினரும் பொதுமக்களினதும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளினதும் பலத்த விமர்சனத்துக்கு உட்பட்டனர். கொலைகளானது பொலிசு, இராணுவத்தினராலோ அல்லது அவை பொலிசு இராணுவத்தின் ஆதரவுடன் ஏனையவர்களாலோ செய்யப்பட்டு உள்ளன என்ற கொள்கை விமர்சகர்களினால்

நிரூபிக்கப்பட்டது. அரசின் ஆதரவைப் பெறுவதற்குத் தோன்றிய இவ்வாயுதம் தாங்கிய குழுக்கள் "விழிப்புணர்வுக் குழுக்கள்" எனக் குறிப்பிடப்பட்டன. "பரா", "கொலகொட்டி(பச்சைப் புலிகள்)", "கஹ பலலு(மஞ்சள் பூனைகள்", கறுப்புப் பூனைகள்", "திவி மக்குலுவா(தரந்துலா)" ஆகியன இக்குழுக்கள் சிலவற்றின் பெயர்களாகும். அவர்கள் பொலிசு மற்றும் இராணுவத்தினருடன் கைகோர்த்துச் செயற்பட்டனர் எனவும் சார்த்துதல் செய்யப்பட்டுள்ளது. இக்குழுக்களின் உறுப்பினர்களின் அடையாளம் சந்தேகத்துக்கு உரியதாக இருந்தது. நாட்டின் சில பகுதிகளில் பொலிசில் இருந்தவர்கள் இக்குழுக்களின் உறுப்பினர்களாகச் செயல்பட்டதுடன் விநோதமாகக் கொலைசெய்வதிலும் ஈடுபட்டிருக்கின்றனர் எனவும் சார்த்துதல் செய்யப்பட்டுள்ளது. உண்மையில் முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் கருத்துப்படி "கறுப்புப் பூனைகள்" என அறியப்பட்ட குழு பொலிசு உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்ததுடன் அது கு.பு.தி(CID). கு.பு.ப(CDB) ஆகியன போன்ற பொலிசின் ஒரு பிரிவாக இருந்தன என்ற பாதிப்பு இருந்ததாக அவர் குறிப்பிடுகின்றார். பொறுப்புடைய சிரேட்ட அரசியல்வாதியும் முன்னாள் அமைச்சருமான ஒருவர் இந்தப் பாதிப்பைப் பெறுவதற்கு அவருக்கு உறுதியான காரணங்கள் இருந்திருக்க வேண்டும் என நாம் நம்புகின்றோம். இந்தப் பாதிப்பை அவர் பெறுவதற்குப் பொருத்தமான தகவல்களை அவர் ஒன்றிணைத்திருக்க வேண்டும். இந்த வகையில் இந்த "விழிப்புணர்வுக் குழுக்களின்" நடவடிக்கைகளில் பொலிசாருக்கும் ஒரு பங்கு இருந்தது என்பதை நம்புவதற்கான தகுந்த காரணங்கள் இருந்தன என்பதையே இது காட்டுகின்றது. அவர்களின் நடவடிக்கைகள் எதுவாக இருந்தபோதிலும் மிகவும் தெளிவானதாகவும் சந்தேகத்துக்குரிய நாசகாரர்களை இலக்குப்படுத்தி அவர்களை கொலை செய்வதாகவும் இருந்தது.

பிரதிப் பொலிசுமா அதிபர் எம் எம் ஆர் (மெரில்) குணரத்னாவின் கருத்துப்படி எரிக்கப்பட்ட உடல்கள் வெளிவந்தபோதெல்லாம் அவர் குறிப்பிட்ட பகுதியில் பொறுப்பு உத்தியோகத்தர்களை நடவடிக்கை எடுப்பதற்குப் பணிக்கமர்த்துபவராக இருந்தார். அவர், பிரதேசத்தின் பொறுப்பு உத்தியோகத்தரையும் சோதனைகாரர் லாந்ராவையும் மிக மோசமாக விமர்சித்த நிட்டம்புவையில் நடந்த ஓர் உதாரணத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். அத்தகைய செயல்கள் ஆகக் குறைந்தது பொறுப்பு உத்தியோகத்தரின் அறிவுக்கு எட்டாதவகையில் நடைபெறமாட்டாது என்ற குறைந்த குற்றத் தகுதியை முன்வைப்பதாக திரு.குணரத்னாவின் நிலை இருந்தது. உண்மையான நிலைமை வேறுபட்டதாக அமைந்திருக்கலாம். நிலைமை மோசமானபோது பொலிசுமா அதிபர் விடயம்பற்றி ஒரு சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். 1990 ஆகஸ்ட் 31 ஆந் திகதியிடப்பட்ட எஸ்சிடி/சிஜஆர்/18/90 இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கையின்போக்கில் எல்லாப் பிரதிப் பொலிசுமா அதிபர்களுக்கும் சிரேட்ட பொலிசு அத்தியட்சகர்களுக்கும் உரையாற்றி அதற்கிடையில் "1990.03.02 , 1990.03.08 ஆந் திகதிகளிடப்பட்ட ரிஎம்எம் மூலம் பின்னர் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்குப் பதிலாக எரிக்கப்பட்ட அல்லது வேறுவகையில் கிடந்த உடல்கள் அநேகமாக பொலிசு நிலையப் பகுதிகளில் இன்றும் காணப்படுகின்றன. அநேகமான உடல்கள் இரவில் அவைகள் வைக்கப்பட்ட இடத்துக்கு அனுப்பப்படுகின்றன எனத் தோன்றுவதாக " அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரசைகளின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பது சம்பந்தமாக நல்லெண்ணம் கொண்ட குழுக்கள் நாட்டில் மோசமாகிச் செல்லும் நிலையை எதிர்த்து வாதிட ஆரம்பித்தன என சார்த்துதல்கள் வளர்ந்திருந்தன. இலங்கையின் நிலைமைபற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுகூட மிக உன்னிப்பாகவே கவனம் செலுத்தியது எனக் கிடைக்கப்பெறும் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆணைக்குழு ஜெனீவாவில் நடைபெற்ற அதன் ஈராண்டு அமர்வுகளில் இலங்கையின் மனிதஉரிமைகள் பற்றிக் கலந்துரையாடியது. அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இரு சட்டமா அதிபர்கள்(முதலில் திரு.சுனில் த சில்வா, சனாதிபதி வழக்குரைஞர், பின்னர் திரு.திலக் மாரப்பன, சனாதிபதி வழக்குரைஞர்) அனுப்பப்பட்டனர். இலங்கையின் நிலைமையைக்

கண்காணிப்பதற்கு அவதானிகள் குழுவொன்றை 1989 இல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தீர்மானிக்கும் அளவுக்கு நிலைமை பயங்கரமானதாக இருந்தது. தூதுவர் குழுக்கள் பொலிசு நிலையங்களுக்கும் சட்டரீதியான தடுப்பு நிலையங்களுக்கும் விஜயம் செய்து சந்தேக நபர்களின் நலன்பற்றி விசாரித்தது. பொலிசுக் கட்டுக்காப்பில் உள்ள நாசகாரச் சந்தேக நபர்கள் குரூரமான, மனிதாபிமானமற்ற, இழிவான செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனரா என்பதை உறுதிப்படுத்துவதும் விசாரிப்பதுமே முக்கிய அம்சமாக இருந்தது. குறிப்பிடத்தக்கதோர் அளவுக்கு இலங்கையின் நடைமுறையில் உள்ள நிலைமைபற்றி வெளிநாட்டு அவதானிகள் மோசமாக விமர்சித்தனர். 1990 யூன் நிலைமை சம்பந்தமாக அப்போதைய பொலிசுமா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா பொலிசு உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கை வழங்கினார். "பொலிசின் கட்டுக்காப்பில் தடுத்து வைக்கப்பட்டு இறந்தவர்கள்பற்றி இலங்கையிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மோசமாக விமர்சித்துள்ளது.........நீங்கள் ஆகக்கூடிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கும்படி அறிவுறுத்தப்படுவதோடு அதன்மூலம் உங்களிடத்தில் கட்டுக்காப்பில் உள்ள தடுத்து வைக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்........" என (1990 யூன் 26 ஆந் திகதியிட்ட எஸ்சிடி/சிஐஆர்/9/90 இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கையின்போக்கில்) பொலிசுமா அதிபர், பிரதேசத்தின் பிரதிப் பொலிசுமா அதிபருக்கும் பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கும் மத்தியில் குறிப்பிடுகையில் அறிவித்துள்ளார்(குறிப்பிட்ட ஏனைய பொலிசுத் திணைக்கள ஆவணங்களுடன் இந்தச் சுற்றறிக்கையின் ஒரு நகல் X100 என அடையாளம் இடப்பட்டு ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டது).

இந்த விடயங்களின் காரணமாக, உத்தியோகபூர்வ கட்டுக்காவலில் இருந்தபோதும் பொலிசு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோதும் நாசகாரச் சந்தேகநபர்கள்மீது சட்டரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இயலாத சூழல் நாள்தோறும் அதிகரித்திருக்கலாம். எனவே, மனிதாபிமானமற்ற, சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகளைத் தொடருவதில் நாட்டம் கொண்டவர்கள் வேறு இடங்களைத் தேடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். உண்மையில், தம்மீது அழுத்தம் ஏற்படுவதற்கு முன்னரே சாதுரியம் மிக்கவர்கள்(பொலிசு உத்தியோகத்தர்கள்) நாசகாரிகளுக்கு எதிரான "யுத்தம் " ஆரம்பித்தவுடனேயே தகுந்த இடங்களைக் கண்டுபிடித்து இருக்கலாம்.

**ஆட்களைச் சட்டவிரோதமாகத் தடுத்து வைப்பதற்கும், சித்திரவதை செய்வதற்கும் பட்டலந்த வீடுகளைப் பயன்படுத்தியமை**

ஆட்களைச் சட்டவிரோதமாகத் தடுத்து வைப்பதற்கும், அவர்களைக் கொடூரமான முறையில் மனிதாபிமானமற்ற முறையில் மிகவும் இழிவான முறையில் துன்புறுத்துவதற்கும் பொருத்தமான இடம் எதுவாக இருக்கும்? அது ஒரு பாதுகாப்பான இடமாக இருந்துவர வேண்டும். அந்த இடம் சாதாரண பொதுமக்கள் எளிதில் சென்றடையக்கூடிய_ இடமாக இருந்து வரவும் கூடாது. சம்பந்தப்பட்ட ஆட்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவரும் ஒரு இடமாகவும் அது இருக்க வேண்டும். அந்த இடத்தில் இடம்பெற்று வரும் சம்பவங்களின் இயல்பு குறித்து அதனைச் சூழ வாழ்பவர்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பும் மிக அரிதாகவே இருந்துவர வேண்டும். அது அங்கீகரிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஒரு தடுப்பு முகாமாகவும் இருந்து வந்திருக்கக் கூடாது. இந்தத் தேவைப்பாடுகளின் பின்னணியில் பொலிசு அதிகாரிகளுக்கென விடுவிக்கப்பட்டிருந்த பட்டலந்த வீடுகளை நாங்கள் கவனத்தில் எடுக்க விரும்புகின்றோம்.

பட்டலந்த வீடுகள் பொலிசு அதிகாரிகளின் வாசஸ்தலங்களாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கவில்லை. உண்மையிலேயே, பொலிசு அதிகாரிகள் அங்கு வசித்து வந்ததற்கான ஊர்ஜிதம் செய்யக்கூடிய எந்தவகையான ஆவணங்களும் பொலிசுத்

தலைமையகத்தில் காணப்படவில்லை. இந்த வீடமைப்புத் திட்டம் நன்கு பாதுகாக்கப்பட்டிருந்தது. பொதுமக்கள், அதனைத் தடையின்றி சென்றடையவும் முடியாது. தெரிவு செய்யப்பட்ட ஆட்கள் மட்டுமே இந்த வீடுகளில் வசித்து வந்தார்கள். இந்த முழு வீடமைப்புத்திட்டமும் இராணுவத்தினராலும் பொலிசாராலும் பாதுகாக்கப்பட்டு வந்தது. அதிகாரத்தில் இருந்தவர்களின் முன்அனுமதி இல்லாமல் அந்த வளவுக்குள் எவரும் பிரவேசிக்க முடியாது. இந்தக் காரணங்களினால் பட்டலந்த வீடுகள் இந்த நோக்கத்துக்கு மிகவும் பொருத்தமான இடங்களாக இருந்து வந்தன. உண்மையிலேயே பிரதி பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னாவின் சாட்சியத்திலும்கூட, களனி நாசகாரத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிசு அதிகாரிகள் சட்டவிரோதமாக ஆட்களைத் தடுத்துவைத்து, சித்திரவதை செய்வதற்கு அவசியமாக இருந்தால், அந்நோக்கத்துக்கு, பொலிசு அதிகாரிகளின் உபயோகத்துக்கென ஒதுக்கப்பட்டிருந்த பட்டலந்த வீடுகள் "மிகவும் பொருத்தமான இடமாக" இருந்து வந்தது எனக் குறிப்பிடப்பட்டது.

களனி நாசகாரத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் இந்நோக்கத்துக்காக உண்மையிலேயே இந்த வீடுகளைப் பயன்படுத்தியிருந்தால் அது குறித்த சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வது சாத்தியமாகி இருக்குமா? சட்டவிரோதமாகத் தடுத்து வைத்திருக்கக்கூடிய இத்தகைய இடத்துக்கு ஒரு சந்தேக நபர் எடுத்துச் செல்லப்பட்டால், சம்பந்தப்பட்ட பொலிசு அதிகாரிகள் அந்த நபர் தான் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தை அடையாளம் கண்டுகொள்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். சந்தேக நபர்களின் கண்களை மூடிக் கட்டுப் போடுவதே அவரை அந்த இடத்துக்கு எடுத்துச் செல்லப்படும்பொழுது பொதுவாக மேற்கொள்ளப்படும் ஒரு முறையாகும். எனவே, தனக்கு நேர்ந்த கதியைச் சொல்வதற்கு சந்தேக நபர் உயிருடன் இருந்தாலும்கூட, அவர் சில சந்தர்ப்பங்களில் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியாத நிலையில் இருந்து வரலாம். களனி பொலிசுப் பிரிவுக்குள் கைது செய்யப்பட்டு, கண்கள் கட்டப்பட்ட நிலையில் அடையாளம் தெரியாது தடுத்து வைத்திருக்கும் ஓர் இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அந்தப் பிரிவுக்குள் உள்ள பொலிசு நிலையமொன்றுக்கு மாற்றப்படுவதற்கு முன்னர் அந்த இடத்தில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த சுமார் 10 சாட்சிகளின் சாட்சியங்களை இந்த ஆணைக்குழு பெற்றுக்கொண்டுள்ளது. மேலும் சந்தேக நபரொருவர் சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் மிகவும் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டால் அந்த நபர் நீண்ட காலத்துக்கு உயிர்வாழக்கூடியவராக இருந்து வருவார் என எதிர்பார்க்க முடியாது. அத்தகைய மனிதாபிமானமற்ற கொடூரச் செயல்களை நிகழ்த்துபவர்கள் மிகவும் கடுமையாகச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் ஒரு நபர் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் உண்மையை எடுத்துக் கூறுவதற்கு இடமளிக்கும் விதத்தில் அவரை உயிருடன் விட்டுவைக்க விரும்பமாட்டார்கள். சட்டவிரோதத் தடுத்துவைப்பு மற்றும் சித்திரவதை என்பவற்றின் பின்னர் சந்தேக நபரைச் சட்டபூர்வமான தடுப்புக்காவலுக்கு பொலிசு அதிகாரிகள் நிர்ப்பந்திக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்திருக்கலாம். ஆனால், அத்தகைய சந்தர்ப்பங்கள் மிக அரிதாகவே இருக்கும்.

இந்தக் காரணங்களின் நிமித்தம் சந்தேக நபர்களைச் சட்டவிரோதமாகத் தடுத்து வைப்பதற்கும் அவர்களைச் சித்திரவதை செய்வதற்கும் பட்டலந்த வீடுகள் பயன்படுத்தப்பட்டன என்பதனை எடுத்துக்காட்டக்கூடிய சாட்சியங்கள் எளிதில் கிடைத்துவிட மாட்டாது என்ற உண்மையை ஆணைக்குழு கவனத்தில் கொண்டிருந்தது. எவ்வாறிருப்பினும், குறிப்பாக புலனாய்வுப் பிரிவின் இடையறாத முயற்சிகள் காரணமாகவும் சில சாட்சிகளின் துணிச்சல் காரணமாகவும் உண்மையிலேயே ஆட்களைச் சட்டவிரோதமாகத் தடுத்து வைப்பதற்கும் சித்திரவதை செய்வதற்கும் ஒருசில பட்டலந்த வீடுகள் பயன்படுத்தப்பட்டன என்பதனை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டக்கூடிய விதத்தில் சாட்சியங்கள் கிடைத்தன.

இந்த விடயம் தொடர்பான சம்பந்தப்பட்ட சாட்சியங்கள் சிலவற்றை இங்கு சுருக்கமாக பட்டியலிட்டுக் காட்ட விரும்புகின்றோம்.

**ஏர்ல் சுஜீ பெரேரா**

ஏர்ல் சுஜீ பெரேரா 1988 முதல் சுகாதார அமைச்சில் ஒரு தொழிலாளியாக வேலை செய்து வந்தார். பிரஸ்தாப சம்பவம் இடம்பெற்ற காலத்தின்போது அவர் ராகமை புனர்வாழ்வு மருத்துவ மனையில் பணிபுரிந்து வந்தார். களனி தளுகமையை வசிப்பிடமாகக் கொண்ட சுஜீ பெரேரா ராகமை மருத்துவமனையில் வேலைசெய்வதைத் தவிர மற்றொரு பகுதிநேரத் தொழிலையும் செய்து வந்தார். அபிவிருத்தி லொத்தர் டிக்கெட்டுகளை விற்பனை செய்வதற்காக அவர் கிரிபத்கொடை சந்தியில்(வை எம் பி ஏ கட்டிடத்துக்கு எதிரில்) "காவல் குடிசை" மாதிரியான ஒரு பெட்டிக்கடையை அவர் வைத்திருந்தார். மருத்துவமனையில் வேலைமுடிந்து திரும்பிய பின்னர் மாலை நேரங்களில் அந்த லொத்தர் விற்கும் இடத்தில் இருப்பது ஏர்ல் சுஜீ பெரேராவின் வழக்கமாகும்.

1990 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23 ஆந் திகதி பி.ப. சுமார் 7.30 மணியளவில் ஏர்ல் சுஜீ பெரேரா பெட்டிக்கடைக்குள் இருந்தபோது ஒரு வெள்ளை நிற வாகனம் திடீரென அந்த இடத்துக்கு வந்து நின்றது. முகமூடியணிந்து கையில் துப்பாக்கிகளை வைத்திருந்த இரு நபர்கள் வானிலிருந்து இறங்கி அவரை அணுகி "சிட்னி" என்ற ஆள் அவர்தானா என வினவினர். சுஜீயின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்தவர்கள் சுஜீயை "சிட்னி" என அழைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்: என்றாலும், திகலுற்ற சுஜீ ஆயுதம்தாங்கிய நபர்களிடம் தான் சிட்னி அல்ல எனக் கூறினார். இந்தப் பதிலில் திருப்தியடையாத ஆயுதபாணிகள் அவரை அந்தப் பெட்டிக் கடையிலிருந்து வெளியே இழுத்து அந்த வானுக்குள் தள்ளினார்கள். அதனையடுத்து வான் பயணத்தைத் தொடர்ந்தது. இந்த வானுக்குள் மேலும் பல ஆயுதம்தாங்கிய நபர்கள் இருந்தனர். வானுக்குள் வைத்து இரு நபர்கள் தமது முகமூடிகளை அகற்றினார்கள். அக்கட்டத்தில் தன்னைக் கடத்தியவர்களில் ஒருவர் களனி நாசகாரத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் மேஜர் ரத்நாயக்கா என்பதனை ஏர்ல் சுஜீ அடையாளம் கண்டுகொண்டார். ஏனைய கடத்தல்காரர்களை அவரால் அடையாளம் காண முடியாதிருந்தது. அந்த வான் சில நிமிடநேரம் கடவத்தையை நோக்கிக் கண்டி வீதியில் பயணம் செய்தது. அது, வேவல்துவவில் நிறுத்தப்பட்டதுடன் ஒரு நபர் வானில் ஏறினார். அந்த நபர் பொலிசு உத்தியோகத்தர் கப்பாகொட என்பதனை சுஜீ அடையாளம் கண்டுகொண்டார்(இவர் கிரிபத்கொடை பகுதியில் பணிபுரிந்து வந்தமையால் அவரை ஏற்கெனவே சுஜீ அறிந்திருந்தார்) "அந்த ஆள் (அறூ) அங்கு இருக்கின்றான்" என வானில் இருந்தவர்களிடம் கப்பாகொட கூறியிருந்தார். பின்னர் அந்த வான் சிறிதுதூரம் முன்னோக்கிச் சென்று குறிப்பிட்ட ஓர்இடத்தில் நிறுத்தப்பட்டது. சுஜீயை மற்றொரு நபரின் பாதுகாப்பில் விட்டுவிட்டு மற்றவர்கள் வானிலிருந்து இறங்கிக் கொண்டார்கள். சிறிது நேரத்தின் பின்னர் அவர்கள் சுஜீக்கு அறிமுகமான கபில என்ற இளைஞருடன் திரும்பி வந்தார்கள். கபிலவும் கடத்தப்பட்டுள்ளார் என்பதனை சுஜீ புரிந்துகொண்டார். அதன்பின்னர் சுஜீ, கபில ஆகிய இருவருடைய கண்களும் கட்டப்பட்டதுடன் மேலும் 15 நிமிடநேரம் அந்த வான் பயணம் செய்தது.

ஓர் இடத்தில் வான் நிறுத்தப்பட்டதுடன் அவ்விருவரும் வானிலிருந்து வெளியே எடுக்கப்பட்டனர். அவர்கள் ஒரு கட்டிடத்துக்குள் எடுத்துச் செல்லப்பட்டனர். அது ஒரு வீடாக இருக்கவேண்டும் என சுஜீ எண்ணினார். தொலைக்காட்சிப் பெட்டியொன்றின் சத்தம் அவருக்குக் கேட்டது. அதன்பின்னர், ஓர் அறைக்குள் அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டனர். தாமிருவரும் எடுத்துச் செல்லப்பட்டபொழுது பல்வேறு இடங்களில் தான் திரும்பியதாக சுஜீ தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். இவ்விருவரையும் வானிலிருந்து வெளியே எடுத்தபின்னர் தாம் எந்தத் திசையில் எடுத்துச் செல்லப்படுகின்றோம் என்பதனை அந்த நபர்கள்

அறிந்துகொள்வதைத் தடுக்கும்பொருட்டுக் கடத்தல்காரர்கள் இவ்விதம் செய்திருக்கின்றார்கள் என நாம் அனுமானிக்கின்றோம்.

அறைக்குள் தமது நண்பன் கபிலவுக்கு என்ன நடந்தது என்பது குறித்து சுஜியினால் அறிந்துகொள்ள முடியவில்லை. சுஜியின் கைகளில் விலங்கு மாட்டப்பட்டு இருந்ததுடன் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இருந்தன. அன்றிரவு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பல நபர்களிடம் அவர் உதை வாங்கினார். அவரது நண்பர்கள் எங்கு தங்கியிருக்கின்றார்கள் என சுஜீயிடம் கேட்கப்பட்டது. சுஜீ இந்தக் கேள்விகளுக்கு விரிவான பதில்களை வழங்கவில்லை. அந்த இரவில் வேறு ஆட்களின் அழுகைச் சத்தமும் கூக்குரலும் சுஜீக்குக் கேட்டது. "ஐயா, தயவுசெய்து என்னை மேலும் கொடுமைப்படுத்த வேண்டாம். என்னைக் கொன்றுவிடுங்கள்" என ஓர் ஆள் மன்றாடும் சத்தமும் அவருக்குக் கேட்டது. அந்த இரவில் ஏர்ல் சுஜீக்குத் தூங்குவது மிகவும் சிரமமான ஒரு காரியமாக இருந்தது.

அதற்கடுத்தநாள், கழிப்பறைக்குச் செல்வதற்கு சுஜீ தனது கடத்தல்காரர்களிடம் அனுமதி கேட்டார். அக்கட்டத்தில் அவரது கண்களை மூடிக் கட்டியிருந்த துணியும் கால்களில் பிணைக்கப்பட்டிருந்த சங்கிலியும் அகற்றப்பட்டதுடன் அதே கட்டிடத்துக்கு உள்ளேயிருந்த ஒரு கழிப்பறைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். கழிப்பறைக்குள் சென்றபின்னர் அங்கிருந்த ஒரு சிறிய யன்னலுக்கூடாக அவர் வெளியே எட்டிப் பார்த்தார். குறிப்பிட்ட ஒரு காணியின் பின்பகுதியில் அக்கட்டிடம் அமைந்திருப்பது அவருக்குத் தெரியவந்தது. அக்காணியின் பின்பகுதி முட்கம்பி வேலியைக் கொண்டிருந்தது. அந்த வேலிக்கப்பால் சிறுசிறு வீடுகள் ஒன்றுக்கொன்று தூரத்தில் அமைந்திருந்தன. யன்னலுக்கூடாக அப்பிரதேசத்தைப் பார்வையிட்ட சுஜீ அவை பட்டலந்த கிராமத்தின் வீடுகளே என்ற முடிவுக்கு வந்தார். தனது நண்பர்கள் சிலர் இந்தக் கிராமத்தில் வசித்து வந்தமையால் அவர் பலமுறை இங்கு வந்திருக்கின்றார். பட்டலந்த கிராமத்தையடுத்து அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வீடமைப்புத் திட்டம் உள்ளது என்பதனையும், அந்த வீடுகள் சிலவற்றில் ஆட்கள் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள் என்ற விடயத்தையும் சில காலமாக சுஜீ அறிந்திருந்தார். இக்காரணங்களினால் முன்தினம் இரவு பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்கு தான் எடுத்துவரப்பட்டிருப்பதாகவும் அங்கு தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாகவும் சுஜீ முடிவுக்கு வந்தார்.

அடுத்துவந்த நாட்களில் தனக்கு என்ன நடந்தது என்பது குறித்து ஏர்ல் சுஜீ விரிவாக எடுத்து விளக்கினார். ஆட்களினால் இவர் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டார். அவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டபொழுது அவருடைய கூட்டாளிகள் குறித்து மிக விரிவான முறையில் கேள்விகள் தொடுக்கப்பட்டன. இந்தக் கேள்விகளின் இயல்பிலிருந்து கிளர்ச்சி நடவடிக்கைகளின் சந்தேகத்தின்பேரிலேயே ஏர்ல் சுஜீ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது தெரியவந்தது. ஏர்ல் சுஜீயிடமிருந்து ஒரு முறையான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை. அதே கட்டிடத்துக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய நபர்கள்மீது தாக்குதல் நடத்தப்படுவதினையும் அவர் கண்டார். குறிப்பாக இரவு நேரங்களில் ஆட்கள் வேதனையில் கூக்குரலிடுவதை அவர் செவிமடுத்தார். குறிப்பிட்ட ஒருநாள் இரு நபர்கள் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு இருப்பதையும் அவர் கண்டார். அந்த நபர்களின் உடல்களிலிருந்து இரத்தம் கசிவதனையும் அவர் பார்த்திருந்தார்.

இவ்விதம் சில நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததன் பின்னர் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அக்கட்டிடத்துக்குள் உதவிப் பொலிசு அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் வந்தார். இந்தச் சம்பவத்துக்கு முன்னரேயே சுஜீ பீரிஸை அறிந்திருந்தார். கிரிபத்கொடை பிரதேசத்தில் அவர் அங்கும்இங்கும் பயணம் செய்வதை சுஜீ கண்டிருந்தார். உதவிப் பொலிசு

அத்தியட்சகர் பீரிஸ் அங்கு காவலுக்கு நின்றவர்களிடம் சிட்னி என்ற நபர் இவர்தானா(சுஜீ) எனக் கேட்டார். அதன்பின்னர், அவர் சுஜீயைத் தாக்கிவிட்டு வெளியே சென்றுவிட்டார்.

உ.பொ.அ. பீரிஸ் இக்கட்டிடத்துக்கு வந்து ஆட்கள் தடுத்து வைத்திருப்பதனைப் பார்த்துவிட்டுச் சென்றபின்னர் பல சந்தர்ப்பங்களில் பெண்கள் அணியும் ஆடைகள் சுஜீக்கு அணிவிக்கப்பட்டதுடன் அவரது தலையில் ஒரு போலிக்கூந்தலும் வைக்கப்பட்டது. சார்ஜன்ட் ரத்நாயக்கா மற்றும் அவரது குழுவினரால் சுஜீ கிரிபத்கொடை நகரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கிரிபத்கொடையில் வைத்து தனது நண்பர்களைக் காட்டுமாறு அவருக்குக் கட்டளையிடப்பட்டது. தனது நண்பர்கள் பலர் அங்கு நடமாடுவதை சுஜீ பார்த்தபோதிலும் அவர்களும்கூட கடத்தப்பட்டு பட்டலந்தவுக்கு எடுத்துச் செல்லப்படலாம் என்ற அச்சத்தில் அவர் அவர்களில் எவரையும் ரத்நாயக்காவிடம் காட்டிக் கொடுக்கவில்லை. வீடமைப்புத் திட்டத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்படும்பொழுதும் அங்கு திரும்ப எடுத்துவரப்பட்டபொழுதும் சுஜீயினால் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தைத் தெளிவாக அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. இவ்விதமான ஆடை அணிவித்து அவரை வெளியே எடுத்துச் செல்லப்பட்டதைத் தவிர அந்த வீடமைப்புத் திட்டத்துக்குள் இருந்த வேறு இரண்டு அல்லது மூன்று வீடுகளுக்கும் அவர் எடுத்துச் செல்லப்பட்டார். இந்த வீடுகளுக்குள்ளே பல்வேறு நபர்கள் காட்டப்பட்டதுடன் அவர்களில் எவரையேனும் அவர் அறிந்துள்ளாரா என்றும் கேட்கப்பட்டது. இந்த வீடுகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 60 நபர்கள் சுஜீயிடம் காட்டப்பட்டார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். பலருடைய காயங்கள் நன்கு வெளியில் தெரியக்கூடியனவையாக இருந்தன.

ஏர்ல் சுஜீ பட்டலந்தயில் 22 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார். இக்காலப்பிரிவின்போது தன்னை விடுவிக்கப்போவதில்லையா என உ.பொ.அ. பீரிஸ்சிடம் அவர் கேட்டார். இந்த விடயம் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் அமைச்சு விடுவிக்குமாறு அறிவுரை வழங்கினால் அவர் விடுவிக்கப்படுவார் என்றும் உ.பொ.அ. பீரிஸ் பதிலளித்தார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 ஆவது நாளன்று ஏர்ல் சுஜீ ஓர் ஜீப்பில் ஏற்றப்பட்டார். ரத்நாயக்காவும் வேறு இரு நபர்களும் அந்த ஜீப்பில் ஏறினார்கள். உ.பொ.அ. பீரிஸ், சாரதி ஆசனத்தில் அமர்ந்ததுடன் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலிருந்து அவரை வெளியே எடுத்துச் சென்றார். "நீங்கள் ஒரு கனவானுக்கு(மஹத்தையாவுக்கு) ஒரு கடமையை நிறைவேற்றி வைக்கவேண்டும்" என வழியில் வைத்து உ.பொ.அ. பீரிஸ் சுஜீயிடம் கூறினார். "நீங்கள் வீட்டுக்குச் செல்லும்போது அந்த வேலையை நிறைவுசெய்து வைக்கவேண்டும். அதனைச் செய்யாவிட்டால் கொலை செய்யப்படுவீர்கள்" என்றும் அவரிடம் கூறப்பட்டது. தனக்களிக்கப்பட்டுள்ள கடமை எது என சுஜீ வினவினார். அந்தக் கடமை என்ன என்பதை அவருடைய குடும்ப உறுப்பினர்கள் அறிவார்கள் என்றும் அதனை அவர்களிடம் கேட்டறிந்து கொள்ளவேண்டும் எனவும் பீரிஸ் பதிலளித்தார். அதன்பின்னர், தனது வீட்டுக்கு சுமார் அரைமைல் தூரத்தில் உள்ள இடத்தில் அவர் இறக்கிவிடப்பட்டார். சுஜீ உடனடியாக வீட்டைநோக்கி ஓடினார்.

இந்த ஆணைக்குழு, 1996 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதியன்று ஆணைக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் புடைசூழ பெருந்தொகையான சட்டத்தரணிகள் மற்றும் பொலிசு அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் பிரசன்னமாகியிருந்த நிலையில் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்கு விஜயம் செய்தது. சட்டத்தரணி திரு.நெவில் அபேரத்னாவும் அவரது இளவலும் அந்தப் பயணத்தில் சேர்ந்து கொண்டனர். தாம் கடத்தப்பட்டுச் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீடுகள் சிலவற்றுக்குள் தாம் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாக அச்சந்தர்ப்பத்தில் கூறியிருந்த சாட்சிகளில் ஒரு சிலரும்

அந்த வீடமைப்புத்திட்டத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தை வந்தடைந்த பின்னர், சாட்சிகள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீடுகளை ஆணைக்குழுவுக்குக் காட்டுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதன்பிரகாரம், ஏர்ல் சுஜீ பெரேரா ஆணைக்குழுவையும் அதன் அதிகாரிகளையும் B8 இலக்கம்கொண்ட வீட்டுக்கு அழைத்துச் சென்றார். உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ்சும் அவரது குடும்பத்தினரும் 1989 ஆகஸ்ட் 02 ஆந் திகதிதொடக்கம் 1995 இன் நடுப்பகுதிவரையில் வசித்து வந்த இலக்கம் A2/5கொண்ட வீட்டுக்கு நேரெதிரில் அமைந்த இந்த வீடு கீழ்த்தளத்தை மட்டுமே கொண்டதொரு வீடாக இருந்தது. இந்த வீட்டின் பெரிய கண்ணாடி யன்னலொன்றில் "Black Cats" என்ற வாசகம் பொறிக்கப்பட்டு இருந்தது. இந்த வீடு 1988 முதல் 1991 வரையில் உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ்சிடம் வேலையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வமாக ஒதுக்கப்பட்ட வீடாக இருந்தது. இந்த வீட்டில் பல அறைகள் இருந்தன. ஏர்ல் சுஜீ பெரேரா தான் வெளியே எட்டிப் பார்த்த கழிப்பறையை ஆணைக்குழுவுக்குக் காட்டினார். கழிப்பறையில் இருந்த சிறிய யன்னலிலிருந்து வெளியே நோக்கியபொழுது வீட்டின் பின்புறத்தில் முட்கம்பி வேலியொன்று இருப்பதனையும் சற்றுத்தொலைவில் பட்டலந்த கிராமத்தின் வீடுகள் தென்படுவதனையும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அவதானித்தனர். இந்த வீட்டின் அமைவிடம் மற்றும் பட்டலந்த வீடமைப்புத் திட்டம் என்பன குறித்து சாட்சி முன்வைத்த விடயங்கள், பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்கான விஜயத்தின்பொழுது ஆணைக்குழு அவதானித்த விடயங்களுடன் பொருந்தச் செய்வதனை நாங்கள் அவதானித்தோம்.

ஏர்ல் சுஜீ பெரேராவின் தந்தையான (65 வயதான) தியோபால்ட் பற்றிக் பெரேராவின் சாட்சியத்தின் பிரகாரம் ஏர்ல் சுஜியை அடையாளம் தெரியாத நபர்கள் எடுத்துச் சென்றுள்ளார்கள் என்ற விடயம் இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்ற அதேதினம் இரவு சுமார் 10.00 மணியளவில் அவருடைய மற்றொரு மகனின்மூலம் அவருக்குத் தெரியவந்துள்ளது. எனவே, அதே இரவில் குறித்த முறைப்பாடொன்றைப் பதிவு செய்தார். அவருடைய முறைப்பாடு இரவு 11.50 இற்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த முறைப்பாட்டின் ஒரு பிரதி **X29** எனக் குறிப்பிடப்பட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. இவ்விதம் அவருடைய முறைப்பாடு பதிவு செய்யப்பட்டபோதிலும் இந்த விடயத்தை விசாரணை செய்து ஏர்ல் சுஜீ இருக்கும் இடத்தைக் கண்டறிவதற்கு பொலிசு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

அதற்குச் சில நாட்களின் பின்னர் அவர் பொலிசுத் தலைமையகத்துக்குச் சென்று அப்போதைய பொலிசுமா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவை அவரது அலுவலகத்தில் சந்தித்தார். ஏர்னஸ்ட் பெரேரா அவருக்குத் தூரத்து உறவினராவார். பற்றிக் பெரேரா தனது மகனுக்கு நேர்ந்த கதிகுறித்து பொலிசுமா அதிபரிடம் முறைப்பாடு செய்ததுடன் ஏர்ல் சுஜீ இருக்கும் இடத்தைக் கண்டறிந்து கொள்வதற்கு தனக்கு உதவுமாறு அவரிடம் மன்றாடினார். ஏர்னஸ்ட் பெரேரா அவரை பொலிசுமா அதிபர் பிராங் சில்வாவிடம் அனுப்பி வைத்தார். அவருடைய முறைப்பாட்டுக்குச் செவிமடுத்த பிராங் சில்வா மற்றொரு உத்தியோகத்தரிடம் அவரை அனுப்பி வைத்தார். அந்த உத்தியோகத்தர் யார் என்பதனைச் சாட்சி அறிந்திருக்கவில்லை. இந்த உத்தியோகத்தர் அவருடைய முறைப்பாட்டைக் கேட்டபின்னர் பாலியகொடை பொலிசு நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ்சிடம் பேசினார். அதன்பின்னர் தொலைபேசியில் உ.பொ.அ. பீரிஸ்சிடம் இந்தச் சம்பவத்தை விளக்கிக் கூறுமாறு அந்த உத்தியோகத்தர் பற்றிக் பெரேராவிடம் கேட்டுக்கொண்டார். அதன்பிரகாரம் என்ன நடந்ததென்பதனை பற்றிக் பெரேரா உ.பொ.அ. பீரிஸ்சிடம் விளக்கியதுடன் தனது மகன் இருக்கும் இடத்தைக் கண்டறியுமாறு அவரிடம் வேண்டிக் கொண்டார். ஏர்ல் சுஜீயின் புகைப்படமொன்றைத் தன்னிடம் வழங்குமாறு உ.பொ.அ பீரிஸ் கேட்டுக் கொண்டார். அதன்பிரகாரம், பற்றிக் பெரேரா உடனடியாக வீட்டுக்குச் சென்று தனது மகனின் புகைப்படப்

பிரதியொன்றை எடுத்துக்கொண்டு பாலியகொடை பொலிசு நிலையத்துக்குச் சென்றார். அவர் அங்கு உ.பொ.அ. பீரிஸ்சைச் சந்தித்து புகைப்படத்தை அவரிடம் கொடுத்தார்.

சில நாட்களின் பின்னர் பற்றிக் பெரேரா உ.பொ.அ. பீரிஸ்சை மீண்டும் சந்தித்து ஏதாவது முன்னேற்றங்கள் உள்ளனவா என விசாரித்தார். அங்கு அத்தகைய நபர் இல்லையென பீரிஸ் அப்பொழுது கூறியிருந்தார். அவர் எதனையும் விளக்கமாகக் கூறவில்லை. எனினும் சார்ஜன்ட் ரத்நாயக்கா வந்து தனது மகனை எடுத்துச் சென்றிருப்பதாக நகரில் செய்தி உலாவிவருவதாகப் பற்றிக் பெரேரா கூறினார். இதனைக் கேட்டுக் கோபம் அடைந்த பீரிஸ் அவரிடம் உரத்துப் பேசினார். இதனை, அவர் ஏன் முன்னரே கூறவில்லை எனக் கேட்டார். உ.பொ.அ. பீரிஸ் உடனடியாக அந்தப் புகைப்படத்தை அவரிடம் கொடுத்து வெளியேறிச் செல்லுமாறு பற்றிக் பெரேராவைப் பணித்தார்.

பல நாட்களின் பின்னர் பற்றிக் பெரேரா கிரிபத்கொடை சந்தியில் உள்ள லொத்தர் விற்கும் பெட்டிக்கடையில் இருந்தபொழுது அடையாளம் தெரியாத நபரொருவர் அவரை அணுகி அவரிடம் ஒரு காகிதத்துண்டொன்றைக் கொடுத்து "உங்கள் மகனை உங்களால் கண்டுபிடிக்க முடியும். இந்த ஆளைப் போய் சந்தியுங்கள்" எனக் கூறிவிட்டுப் போனார். பற்றிக் பெரேரா அந்தக் காகிதத்துண்டைப் பார்த்தார். அதில் "சட்டத்தரணி லக்ஸ்மன் ரணசிங்கா" என்ற பெயர் இருந்ததுடன் இரு தொலைபேசி இலக்கங்களும் (502850 மற்றும் 24853) காணப்பட்டன. இந்தக் காகிதத்துண்டின் ஒரு பிரதி **X27** எனக் குறிப்பிடப்பட்டு ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பற்றிக் பெரேரா உடனடியாக ஒரு தொலைபேசியை அணுகி இந்த இலக்கங்களில் ஒன்றை அழைத்தார். இந்தத் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளித்த ஒரு பெண்மணி, சட்டத்தரணி லக்ஸ்மன் ரணசிங்கா வீட்டில் இல்லையென்றும் வேலைக்குப் போயுள்ளார் என்றும் கூறினார். லக்ஸ்மன் ரணசிங்கா எங்கு சென்றுள்ளார் எனக் கேட்டபொழுது அவர் கொழும்புக் கோட்டையில் கபூர் கட்டிடத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்துக்குச் சென்றுள்ளார் என அப்பெண்மணி பதிலளித்தார். அதனால் பற்றிக் பெரேரா இக்கூட்டுத்தாபனத்துக்குச் சென்று விசாரித்தார். சட்டத்தரணி ரணசிங்கா அக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் என்பது அவருடைய விசாரணைகளின்போது தெரியவந்தது. பின்னர் அவர், தலைவரின் அலுவலகத்துக்குச் சென்று லக்ஸ்மன் ரணசிங்காவைச் சந்தித்தார். அவர் அந்தக் காகிதத்துண்டை ரணசிங்காவிடம் காட்டி ஏர்ல் சுஜிக்கு என்ன நடந்ததென்பதை அவரிடம் விளக்கிக் கூறினார். தனது மகனை விடுவித்துத் தருமாறும் அவர் ரணசிங்காவிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டார். இது மிகவும் சிக்கலானதும் சிரமமானதுமான வேலையென ரணசிங்கா கூறினார். இதற்குப் பெருந்தொகையான பணம் செலவாகுமென்றும் அவர் சொன்னார். அவரால் ரூ.50,000/= தர முடியுமா என ரணசிங்கா கேட்டார். இந்தத் தொகையைக் குறைக்குமாறு ரணசிங்காவிடம் பற்றிக் மன்றாடினார். இந்தத் தொகையை தன்னால் குறைக்க முடியாதென ரணசிங்கா பதிலளித்தார். இறுதியில் ஒரு காணியை விற்றாகிலும் ரணசிங்காவுக்கு இத்தொகையைக் கொடுப்பதற்கு அவர் இணங்கினார். அதன்பின்னர் தானொரு தொலைபேசி அழைப்பை எடுத்து இந்த விடயம்குறித்து விசாரித்துப் பார்க்கவேண்டும் என்று கூறிய ரணசிங்கா பெரேராவை அறையிலிருந்து வெளியே சென்றிருக்குமாறு கேட்டுக் கொண்டார். சிறிது நேரத்தின் பின்னர் பெரேராவை உள்ளே அழைத்து 10,000/= ரூபாவைக் கொண்டுவந்து தன்னிடம் தரவேண்டுமென ரணசிங்கா அவரிடம் கூறினார். பணத்தைத் தருவதற்குத் தான் எங்கு வரவேண்டும் எனப் பற்றிக், ரணசிங்காவிடம் வினாவினார். ரணசிங்கா அவரிடம் மற்றொரு காகிதத்துண்டைக் கொடுத்தார். அதில் "B/3, 8 ஆவது ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03" என்ற முகவரியும் தொலைபேசி இலக்கமும் (தொலைபேசி-502750) இருந்தது. இந்தக் காகிதத் துண்டின் ஒரு பிரதி **X28** எனக் குறிப்பிடப்பட்டு ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டது.

பற்றிக் பெரேரா வீட்டுக்குத் திரும்பிவந்து சட்டத்தரணி லக்ஸ்மன் ரணசிங்கா தொடர்புபட்ட சம்பவத்தை ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். இது அவர்களை ஏமாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகத் தாம் கருதுவதாக ரணசிங்காவிடம் பணத்தைக் கொடுக்க வேண்டாம் என அவரது குடும்ப உறுப்பினர்கள் வேண்டிக் கொண்டார்கள். பொலிசுமா அதிபர் தமது உறவினராக இருந்து வருவதனால் ஏர்ல் சுஜீயை விடுவித்துக் கொள்வதற்காக பணம் கொடுக்கத் தேவையில்லை என்றும் குடும்ப உறுப்பினர்கள் கூறினார்கள்.

சில நாட்களின் பின்னர் ஏப்பிரல் 13 ஆந் திகதி ஏர்ல் சுஜீ வீடு திரும்பினார். ஒரு கனவானுக்குக் கடமை ஒன்றை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்பது குறித்து உ.பொ.அ. பீரிஸ் தன்னிடம் கூறியதை சுஜீ, பற்றிக் பெரேராவிடம் கூறினார். இது சட்டத்தரணி ரணசிங்காவை குறிப்பிடுவதாக இருக்கலாம் எனப் பெரேரா அனுமானித்தார். எனவே, அடுத்த நாள் அவர் ஏர்ல் சுஜீயையும் அழைத்துக்கொண்டு **X28** இல் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரிக்குச் சென்றார். அந்த வீட்டில் வைத்து சட்டத்தரணி லக்ஸ்மன் ரணசிங்காவை அவர்கள் சந்தித்தனர். ஏர்ல் சுஜீ ரணசிங்காவை வணங்கியதுடன், தனக்கு விடுதலை பெற்றுத் தந்தமைக்காக அவ்விருவரும் ரணசிங்காவுக்கு நன்றி தெரிவித்தனர். கேட்கப்பட்ட பணத்தொகையை உடனடியாகத் தருவதற்கு தன்னால் முடியவில்லை என்றும், பிற்பாடு பணத்தை எடுத்து வருவதாகவும் பற்றிக் பெரேரா கூறினார்.

சில நாட்களின் பின்னர், பற்றிக் பெரேரா, ஏர்னஸ்ட் பெரேராவை போய்ச் சந்தித்ததுடன், நடந்தவற்றை அவரிடம் விளக்கினார். சட்டத்தரணி ரணசிங்காவுக்கு பணம் கொடுக்க வேண்டாம் என்று கூறிய அவர் ஏர்ல் சுஜீயை தொடர்ச்சியாக வீட்டில் வைத்திருக்க வேண்டாம் என்றும் பற்றிக் பெரேராவுக்கு ஆலோசனை வழங்கினார். எந்த ஒரு கட்டத்திலும் தான் சட்டத்தரணி லக்ஸ்மன் ரணசிங்காவுக்குப் பணம் கொடுக்கவில்லை என்று பற்றிக் பெரேரா தனது சாட்சியத்தில் கூறியிருந்தார். அவர் ஏப்பிரல் 19 ஆந் திகதியன்று பாலியகொடை பொலிசு நிலையத்துக்குச் சென்று, தன்னுடைய மகன் வீடு திரும்பிவிட்டார் என்றும், அதனால் தனது முன்னைய முறைப்பாட்டை விலக்கிக்கொள்ள விரும்புவதாகவும் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். இந்த வாக்குமூலத்தின் ஒரு பிரதி **X30** என குறியிடப்பட்டு ஆணைக்குழுவின்முன் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. பற்றிக் பெரேரா மிகவும் நேர்மையான சாட்சி ஒருவரின் நடத்தையை வெளிப்படுத்திக் காட்டினார் என்பதனையும் நாங்கள் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

முன்னாள் பொலிசுமா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவிடம் ஆணைக்குழு விசாரணை நடத்தியபொழுது, பற்றிக் பெரேராவினால் எடுத்துக் கூறப்பட்ட சம்பவம் உண்மையானது என அவர் உறுதிப்படுத்தினார். பற்றிக் பெரேரா வந்து தன்னைச் சந்தித்ததும் தனது மகன் சுடப்பட்டது குறித்து முறைப்பாடு செய்ததும் அதன்பின்னர் தனது மகனை விடுவிப்பதற்காக சட்டத்தரணியொருவர் தன்னிடம் ரூபா.50,000/- கேட்டதைத் தெரிவித்ததும் நன்கு நினைவில் உள்ளது என அவர் கூறினார். இந்தச் சம்பவத்தில் டக்ளஸ் பீரிஸ் சம்பந்தப்பட்டுள்ளார் எனப் பெரேரா தன்னிடம் தெரிவித்ததனையும் அவர் நினைவுகூர்ந்தார்.

இது தொடர்பாக ஆணைக்குழு சட்டத்தரணி லக்ஸ்மன் ரணசிங்காவிடமும் விசாரணை நடத்தியது. திரு.ரணசிங்கா புதுக்கடை மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் சிரேட்ட குற்றவியல் வழக்கறிஞர் ஒருவராக தொழில்செய்து வருகின்றார். திரு.ரணசிங்கா இந்தச் சம்பவத்தை ஒட்டுமொத்தமாக மறுத்தார். எனினும், காகிதத்துண்டில் **(X28)** காணப்படும் தொலைபேசி எண்களும், மற்றொரு காகிதத்துண்டில் **(X29)** குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரியும் சரியானவை என்பதனை அவர் ஏற்றுக்கொண்டார். மேலும், சம்பந்தப்பட்ட தொலைபேசி எண்கள் உண்மையிலேயே பிரஸ்தாப காலப்பிரிவின்போது அவரால் உபயோகிக்கப்பட்டு வந்த தொலைபேசிகளின் எண்கள் என்பதனையும் அவர் ஏற்றுக்கொண்டார். இக்காலப்பிரிவின்போது

தாம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவராகச் செயற்பட்டு வந்ததனையும் அதன் அலுவலகம் கொழும்பு, கோட்டையில் கபூர் கட்டிடத்தில் அமைந்திருந்ததென்பதையும் அவர் ஏற்றுக் கொண்டார். இக்கதை முழுவதும் பொய்யானது என்பதும், தன்னுடைய எதிரிகள் சிலர் இக்கதையைக் கூறுவதற்கு பற்றிக் பெரேராவைத் தூண்டி விட்டுள்ளார்கள் என்பதும் அவருடைய நிலைப்பாடாக இருந்தது. எவ்வாறிருப்பினும், பற்றிக் பெரேரா கூறிய சம்பவம் சரியானது என ஏர்னஸ்ட் பெரேராவினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது எவ்வாறு என்பதனை அவரால் விளக்க முடியாதிருந்தது. இக்கதையை இட்டுக்கட்டுவதற்கு பற்றிக் பெரேரா மூன்றாந் தரப்பினர் ஒருவருக்கு ஏன் உதவியிருக்க வேண்டும் என்பதை விளக்குவதற்கான தனிப்பட்ட காரணம் எதுவும் தனக்குத் தெரியவில்லை என்பதையும் திரு.ரணசிங்கா ஏற்றுக்கொண்டார். மேலும், லக்ஸ்மன் ரணசிங்காவுக்கு எதிரான இத்தகைய ஒரு பொய்யான குற்றச்சாட்டை கூறிவைப்பதற்கு எவரேனும் மூன்றாந் தரப்பினர்கள் விரும்பியிருந்தால், அவர்கள், பட்டலந்த ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படக்கூடிய வாய்ப்பு எதுவும் இல்லாதிருந்த 1990 ஆம் ஆண்டிலிருந்தே சதியில் ஈடுபட்டு இருப்பார்கள்போல் தோன்றுகின்றது என்பதனை இந்த ஆணைக்குழு குறிப்பிட விரும்புகின்றது. அத்தகைய ஒரு சதி இருந்து வந்ததாக நாங்கள் நம்புவதாக இருந்தாலும்கூட, அவர்கள் 1990 ஆம் ஆண்டிலேயே இக்கதையை இட்டுக்கட்டிக் கூறுமாறு பற்றிக் பெரேராவைத் தூண்டிவிட்டு இருப்பார்கள் என்பதே அதன் பொருளாகும். ஏனென்றால், 1990 இல் சட்டத்தரணியொருவரினால் தன்னிடமிருந்து இலஞ்சம் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியை பற்றிக் பெரேரா தன்னிடம் தெரிவித்திருந்ததனை ஏர்னஸ்ட் பெரேரா ஏற்றுக்கொள்கிறார். லக்ஸ்மன் ரணசிங்காவினால் இலஞ்சம் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பான ஒரு கதையை இட்டுக்கட்டுவதற்கு அத்தகைய ஒரு கோஷ்டி சதிசெய்திருந்தால், 1990 ஆம் ஆண்டிலேயே பற்றிக் பெரேராவைக்கொண்டு அவர்கள் இலஞ்ச ஆணையாளர் திணைக்களத்தில் ஓர் முறைப்பாட்டைச் செய்திருப்பார்கள். மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களினால் லக்ஸ்மன் ரணசிங்காவின் மறுப்புரையை ஆணைக்குழுவினால் ஏற்க முடியாதுள்ளது.

**வாசல ஜயசேகரா.......**

வாசல ஜயசேகரா (வயது 38) 1990 இல் களனி மக்கள் வங்கிக் கிளையில் ஓர் எழுதுநராகப் பணிபுரிந்து வந்தார். அச்சந்தர்ப்பத்தில் அவர் மக்கள் வங்கியில் சுமார் 9 வருடகாலம் பணிபுரிந்திருந்தார். 1990 ஒக்தோபர் மாதம் 16 ஆந் திகதி வங்கி வாடிக்கையாளர்களுக்காக மூடப்பட்டு, வங்கியின் ஒருசில ஊழியர்கள் (ஒருசில ஊழியர்களைவிட்டுவிட்டு) வேலையை முடித்துவிட்டுச் சென்றபின்னர், ஆயுதம்தாங்கிய ஒரு குழு அக்கட்டிடத்துக்குள் பிரவேசித்தது. அக்கொள்ளையர்கள் வங்கி முகாமையாளரைப் பயமுறுத்திய பின்னர், வங்கியின் பணப்பெட்டியில் இருந்த சுமார் இரண்டு இலட்சம் ரூபாவை அபகரித்துச் சென்றனர். இந்தச் சம்பவம் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டதுடன், பாலியகொடை பொலிசு நிலையம் இது குறித்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்தது. விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதனை உடனடுத்து, அக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றபொழுது வங்கியில் பாதுகாப்புக்கு நின்றிருந்த இரு தனியார் பாதுகாப்பு அதிகாரிகளை பொலிசார் விசாரணைக்கென அழைத்துச் சென்றனர்.

பாலியகொடை பொலிசு நிலையத்தைச் சேர்ந்த (ஒரு பொலிசுப் பரிசோதகர் மற்றும் சுமனசிறி என்ற பெயருடைய பொலிசுச் சார்ஜன்ட் ஆகியோரை உள்ளிட்ட) பொலிசு உத்தியோகத்தர்கள், ஒக்தோபர் 18 ஆந் திகதி வங்கிக்கு வந்து வாசல ஜயசேகராவைக் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட பின்னர் அவர் பாலியகொடை பொலிசு நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அதன்பின்னர், உதவிப் பொலிசு அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் முன்னால் அவர் ஆஜர்படுத்தப்பட்டார். கொள்ளை தொடர்பாக உ.பொ.அ. பீரிஸ் தன்னிடம் விசாரித்ததாகவும், வங்கியின் கதவின் சாவியை அவர் வாசல வைத்திருந்ததனால் கொள்ளையர்கள் கதவினைப் பலவந்தமாகத் திறக்காமல் அதனை இலகுவில் திறந்துகொண்டு

வங்கிக்குள் எவ்வாறு வந்தார்கள் என்பதனை அவர் அறிந்திருக்க வேண்டும் என்பதாகக் கூறியதினையும் வாசல ஜயசேகரா தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். இதுதொடர்பான ஜயசேகராவின் நிலைப்பாடு, இந்தச் சம்பவத்தில் தனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதும், தனது பொறுப்பில் இருந்துவந்த சாவியை தான் எவருக்கும் கொடுக்கவில்லை என்பதும் ஆகும். வங்கியின் முகாமையாளரும் பிரதான கதவின் சாவியொன்றை வைத்திருந்தார் என்றும் அவர் கூறினார். கட்டிடத்துக்குள் கொள்ளையர்கள் வந்த நேரத்தில் பிரதான கதவு மூடப்பட்டு இருந்ததா என்பது தனக்குத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார். என்னவாக இருந்தபோதிலும் பாதுகாப்பு அதிகாரிகள் பிரதான கதவுக்கு அருகில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு இருந்தார்கள் என்பதனையும் அவர்கள் சுட்டிக்காட்டினார். தன்னிடம் விசாரணை நடத்தியபொழுது உ.பொ.அ. பிரிஸ் ஒரு அரைக் கச்சையினால் தாக்கியதாகவும் ஜயசேகரா கூறினார். எவ்வாறிருப்பினும், இந்தச் சம்பவத்துடனான தனது தொடர்பினை அவர் மறுத்து வந்தார்.

அதன்பின்னர், ஜயசேகரா பொலிசு நிலையக் கட்டிடத்தின் மேல்மாடிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவரை ஓர் அறையில் தள்ளியபின்னர் அவருடைய ஆடைகள் கழற்றப்பட்டன. அவர் நிர்வாணமாக இருந்தபொழுது பொலீசு ஆதிகாரிகளின் குழுவொன்று ஈவிரக்கமற்ற முறையில் அவரைத் தாக்கியது. இக்குழுவைச் சேர்ந்தவர்கள் பொலிசு கொஸ்தாப்புகளான ஹீன்பண்டா, உபாலி லக்ஹேவா, ஜயவர்த்தனா மற்றும் பொலிசுக் கொஸ்தாப்புச் சாரதி ரஞ்சித் ஆகியோர் என்பதனை அவர் பிற்பாடு தெரிந்து கொண்டார். இந்தப் பொலிசு உத்தியோகத்தர்களின் குழுவுக்கு உ.பொ.அ. பிரிஸ் தலைமைதாங்கினார். ஜயசேகரா இக்குற்றச்சாட்டைத் தொடர்ந்தும் மறுத்து வந்ததினால் அவரைத் தாக்கியவர்கள் அவரது கண்களில் மிளகாய்த்தூளைப் போட்டதுடன் அவரது நகங்களில் ஊசிகளை ஏற்றினர். இது ஜயசேகராவுக்கு சொல்லொணாத வேதனையை அளித்தது. கொள்ளை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமானவரை முயற்சி செய்தபின்னர், அறையிலிருந்த தளபாடமொன்றில் ஜயசேகராவைச் சங்கிலியினால் பிணைத்துவைத்துவிட்டு அவர்கள் அறையைவிட்டு வெளியேறினார்கள்.

வாசல ஜயசேகரா சுமார் 3 நாட்கள் இந்த அறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இந்நாட்களின்போது அவர் ஒருபோதும் பொலிசு நிலையத்தின் தடுப்புக்காவல் அறைக்குள் வைக்கப்படவில்லை. ஒரு நீதவான் முன்னிலையில் அவர் ஆஜர்படுத்தப்படவும் இல்லை. மூன்றாவது நாள் மாலையில் ஜயசேகரா இந்த அறையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டு காரொன்றில் ஏற்றப்பட்டார். உ.பொ.அ. பிரிஸ் மற்றும் பொ.கா. ஜயவர்த்தனா ஆகியோரும் இக்காரில் ஏறினர். இந்த வாகனம் பொலிசு நிலையத்திலிருந்து கிரிபத்கொடைச் சந்திவரையில் சென்றது. பொ.கா சாரதி ரஞ்சித் இக்காரைச் செலுத்திச் சென்றார். கிரிபத்கொடைச் சந்தியில் வைத்து இக்கார் வலதுபக்கத்திலிருந்த ஒரு வீதியில் திருப்பப்பட்டதுடன், சில நிமிடநேரம் பயணம் செய்தது. ஒரு இராணுவ முகாம் எனச் சாட்சி விபரித்த ஓர் இடத்துக்கு அந்த வாகனம் வந்து சேர்ந்தது. அந்தக் கட்டிடத்தின் நுழைவாயினில் இராணுவ வீரர்கள் காவலுக்கு நின்றிருந்தார்கள். பொ.கா. ஜயவர்த்தனா வாகனத்திலிருந்து இறங்கி இராணுவவீரர்களிடம் பேசினார். அவர்கள் வாயில் கதவைத் திறந்தார்கள் அதன்பின்னர் அந்தவாகனம் அந்த வளவுக்குள் சென்று இடதுபக்கம் திரும்பியது. பிறகு அது சிறிதுதூரம் சென்று இடதுபக்கம் திரும்பியது. பிறகு அது சிறிதுதூரம் சென்று பாதையிரண்டாகப் பிரிந்த ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. வாகனம் நிறுத்தப்பட்ட இடத்துக்கு வலதுபக்கத்தில் வெற்று புல்வெளியொன்றும் கோபுரம் ஒன்றில் அமைந்திருந்த நீர்த்தாங்கியொன்றும் காணப்பட்டன. அக்காணியில் ஆங்காங்கே ஒருசில தென்னைமரங்கள் இருந்தன. இடதுபக்கத்தில் ஒரு வீடு இருந்தது. அந்த வீடு சாய்வில் அமைந்திருந்தது. வாசல ஜயசேகராவுக்கு கைவிலங்குகளைப் பூட்டி அவரை வீட்டுக்குள் எடுத்துச் செல்லுமாறு உ.பொ.அ. பிரிஸ், பொ.கா ஜயவர்த்தனாவைப் பணித்தார். அதன்பின்னர் அவர்(பிரிஸ்) காரிலிருந்து அப்பால் நடந்து

சென்றார். ஜயவர்த்தனா வீட்டுக்குள் சென்று அங்கிருந்த ஒருவரிடம் பேசினார். அதன்பின்னர் அவரை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

அந்த வீட்டுக்குள் பலர் நிர்வாணமாக தரையில் வேதனையில் முனங்கிக்கொண்டிருப்பதனை ஜயசேகரா கண்டார். அவர்கள் கைவிலங்கிடப்பட்டு இருந்தனர். சிலர் தரையில் உறங்கிக்கொண்டு இருந்தனர். ஜயசேகரா ஓர் அறைக்குள் எடுத்துச் செல்லப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டார். அதன்பின்னர், அவர் அறையில் வைக்கப்பட்டு இருந்தார். விசாரணை நடத்தப்படும்பொழுது ஆட்கள் தாக்கப்படுவதனை அறைக்குள் இருந்த ஜயசேகரா செவிமடுத்தார். ஆட்கள் வேதனையில் அழுதுகொண்டிருப்பதனையும் அவர் தொடர்ந்து செவிமடுத்தார்.

அடுத்தநாள் உ.பொ.அ பீரிஸ், உ.ப. தெல்கஹகொட, பொ.கா.உபாலி லக்ஹேவா மற்றும் பொ.கா.சாரதி ரஞ்சித் ஆகியோர் அந்த வீட்டுக்குள் வந்தனர். அவர்கள் அதன்பின் ஜயசேகராவைத் தாக்கத் தொடங்கினார்கள். அதனையடுத்து அந்த வீட்டில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்தவர்களை அழைத்துவந்து, ஜயசேகராவுக்கு அவர்களைக் காட்டி, அவர்களில் எவரையேனும் அவருக்குத் தெரியுமா எனக் கேட்டனர். எவரையும் தனக்குத் தெரியவில்லை என ஜயசேகரா பதிலளித்தார். ஜயசேகரா இந்த வீட்டுக்குள் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார். இந்தக் காலப்பிரிவின்போது மேலே குறிப்பிடப்பட்ட பொலிசு அதிகாரிகள் ஜே.வி.பி நடவடிக்கைகளில் அவருக்குள்ள தொடர்புகள் குறித்து பலமுறை விசாரணைகளை நடத்தினர். ஜே.வி.பி நடவடிக்கைகளில் தனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லையெனக் கூறி ஜயசேகரா தொடர்ந்தும் மறுத்து வந்தார். தன்மீது தாக்குதல் நடத்தப்பட்ட அதேவேளை தான் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும் ஜயசேகரா கூறினார். தன்மீது தொடுக்கப்பட்ட சில தாக்குதல் காரணமாக இந்தக் காயங்கள் ஏற்பட்டதாகவும் அவர் கூறினார். விசாரணைக்குப் பின்னர், ஒரு முறையான வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. அவர் அங்கு தங்கியிருந்த காலத்தில் அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஏனையவர்களும் மேலே குறிப்பிடப்பட்ட அதிகாரிகளினாலும் பிரதான பரிசோதகர் விக்கிரமசிங்காவினாலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது தாக்கப்பட்டதனை அவர் கண்டார். ஒருசில சந்தர்ப்பங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபொழுது தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் கூறியவற்றை விசாரணை நடத்தியவர்கள் தாள்களில் குறித்துக் கொண்டதனையும் அவர் கண்டார். அங்கிருந்த சிலரின் காயங்களிலிருந்து இரத்தம் கசிந்தது. அந்த வீட்டில் தானும் மற்றவர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த காலப்பிரிவின்போது ஒரு நாளைக்கு ஒருவேளை உணவு மட்டுமே தமக்குக் கிடைத்ததாக ஜயசேகரா குறிப்பட்டார். இது மு.ப.10.00 மணியளவில் கொடுக்கப்பட்டது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த உணவு பழுதடைந்ததாக இருந்துவந்தது. ஜயசேகராவுக்கு உணவை வீசிவிடுவதற்குக் கூட நேரிட்டது. இந்த வீட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அவருக்கு வழங்கப்பட்டிருந்த வேலை, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனையவர்களின் மலத்தினைத் துப்புரவு செய்வதாகும். அவற்றைச் சேகரித்து வீட்டுக்குள் இருந்த கழிப்பறை ஒன்றுக்குள் எடுத்துச்சென்று போடுமாறு அவருக்குக் கட்டளையிடப்பட்டு இருந்தது. அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த சிலர் வெளியே எடுத்துச் செல்லப்பட்டபொழுது வேறு சிலர் உள்ளே எடுத்து வரப்பட்டனர். வெளியே எடுத்துச் செல்லப்பட்டவர்கள் அதன்பின்னர் அங்கு கொண்டுவரப்படவில்லை.

பல நாட்களின் பின்னர் ஜயசேகரா அந்த வீட்டிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்ட வாகனமொன்றில் பாலியகொடை பொலிசு நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டார். பொலிசு நிலையத்தில் மீண்டும் அவர் மேல்மாடிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். முன்னைய சந்தர்ப்பத்தில்போலவே அதே அறையில் அவர் நவம்பர் 26 ஆந் திகதிவரையில் கடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்தார். நவம்பர் 26 ஆந் திகதியின்று புதுக்கடையிலுள்ள ஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர், இல.05 ஐக்கொண்ட

நீதிமன்றத்துக்குத் தலைமைதாங்கிய நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். பாலியகொடைப் பொலிசு நிலையத்தின் குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரியான ஒக்கம்பிட்டியா அவரை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினார். அவர் ஏதேனும் கூற விரும்புகிறாரா என கௌரவ நீதவான் அவரிடம் வினாவினார். அச்சந்தர்ப்பத்தில் பொலிசாரினால் தான் தாக்கப்பட்டு இருப்பதாகவும், தனக்கு சிறுநீருடன் இரத்தம் வெளியேறுவதாகவும், தனது உடல் முழுவதும் (குறிப்பாகத் தலையில்) வலி இருப்பதாகவும் அவர் நீதிவானிடம் கூறினார்.

ஜயசேகராவை கௌரவ நீதவான் முன்னால் ஆஜர்படுத்தியதுடன் சம்பந்தப்பட்ட வழக்கின் பதிவுகளை ஆணைக்குழு கோரிப்பெற்று, பரிசீலனை செய்தது. இந்த வழக்கின் இல.B100/5 ஆகும். வழக்குப்பதிவில் உள்ள பதிவுகளின் பிரகாரம் எச் ஜி வாசல ஜயசேகரா என்ற பெயருடைய ஒரு நபர் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆந் திகதி கௌரவ நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். பொலிசார் சந்தேக நபரை நீதிமன்றத்துக்கு ஆஜர்படுத்தி இருந்ததுடன், மக்கள் வங்கி, களனி கிளையிலிருந்து பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில் சந்தேக நபர் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதனை சுட்டிக்காட்டும் ஓர் அறிக்கையையும் தாக்கல் செய்திருந்தனர். மேலும், அவசரகால ஒழுங்குவிதிகள் 19(2) இன் கீழ் வழங்கப்பட்ட தடுப்புக்காவல் கட்டளையொன்றின் ஏற்பாடுகளுக்கமைய அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்தார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட தடுப்புக்காவல் கட்டளை உ.பொ.அ டக்ளஸ் பீரிஸினால் வழங்கப்பட்டு இருந்ததுடன் சந்தேக நபார் பாலியகொடை பொலிசு நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்படல் வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், தன்னுடைய தலை தாக்கப்பட்டதாகவும், தன்னுடைய தலை வலிப்பதாகவும், முட்டுக்கால்கள் காயப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் சிறுநீருடன் இரத்தம் வெளியேறுவதாகவும் ஜயசேகரா அவரிடம் தெரிவித்தார். சந்தேகநபரை மருத்துவ அதிகாரியொருவரிடம் எடுத்துச்சென்று சிகிச்சை பெற்றுக்கொடுக்குமாறும் சட்ட மருத்துவ அதிகாரி முன்னால் ஆஜர்படுத்தி ஓர் அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுமாறும் பொ.பரிசோதகர் ஒக்கம்பிட்டியாவுக்கு நீதவான் கட்டளையிட்டார். பொலிசாரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வேண்டுகோள் ஒன்றினைக் கவனத்தில் எடுத்த நீதவான் சந்தேகநபரை மேலும் ஒரு மாத காலத்துக்குப் பொலிசுக் காவலில் வைப்பதற்கு பொலிசாருக்கு அனுமதி வழங்கினார். சந்தேக நபர் 1990 டிசெம்பர் 26 ஆந் திகதியன்று தனது முன்னிலையில் ஆஜர்படுத்தப்படல் வேண்டும் என்றும் அவர் மேலும் கட்டளை பிறப்பித்தார். எனினும், அந்தத் தினத்தில் சந்தேகநபர் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவில்லை என்பதனை நீதிமன்றப் பதிவுகள் காட்டுகின்றன. பின்னர், 1991 சனவரி 04 ஆந் திகதி அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். சந்தேகநபரை மேலும் தடுப்புக்காவலில் வைத்திருந்து மேல்விசாரணை நடாத்துவதற்குத் தமக்கு மற்றுமொரு கால அவகாசத்தை வழங்குமாறு அன்றைய தினம் பொலிசார் நீதவானிடம் கேட்டுக்கொண்டனர். அதன்பிரகாரம், சந்தேகநபர் பொலிசுக்காவலில் வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும், 1991 பெப்புரவரி 07 ஆந் திகதியன்று அவர் தன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படல் வேண்டும் என்றும் நீதவான் கட்டளையிட்டார். குறிப்பிட்ட தினத்தன்று பொலிசார் சந்தேகநபரை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தி பாதுகாப்பு அமைச்சிடம் ஒரு புதிய தடுப்புக்காவல் கட்டளையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்திருப்பதனைச் சுட்டிக்காட்டிச் சந்தேக நபரைச் சிலகாலம் தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்கு அனுமதியைக் கேட்டனர். அக்கட்டிடத்தில் சந்தேகநபர் மீண்டும் பொலிசுக் காவலில் வைக்கப்படல் வேண்டும் என்றும், மார்ச்சு 07 ஆந் தகிதி தனது முன்னிலையில் அவர் ஆஜர்படுத்தப்படல் வேண்டும் என்றும் நீதவான் கட்டளையிட்டார். பெப்புரவரி 15 ஆந் திகதியன்று மற்றுமொரு அறிக்கையுடன் பொலிசார் சந்தேக நபரை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். ஒரு புதிய தடுப்புக்காவல் கட்டளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. சந்தேகநபருக்கு எதிராகச் சாட்சியங்கள் இல்லாதிருப்பதனால் அவரை விடுவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு தமக்குத் தெரிவித்து இருப்பதாக அந்த அறிக்கையில் பொலிசார் குறிப்பிட்டிருந்தனர். அதன்பிரகாரம்,

சந்தேகநபரை விடுதலை செய்த நீதவான் அவர் வாரத்துக்கு ஒருமுறை களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவுக்குச் சமூகம் அளிக்க வேண்டுமெனக் கட்டளையிட்டு இருந்தார். மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு வழக்குத் தினத்தின்போதும் சந்தேகநபரின் சார்பில் சட்டத்தரணியொருவர் ஆஜராகி இருந்தார் என்பதனை நீதிமன்றப் பதிவுகள் காட்டவில்லை. 1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதியன்று சட்டத்தரணி அனில் குணவர்த்தனா சந்தேகநபரின் சார்பில் ஆஜராகி மேலே குறிப்பிடப்பட்ட கட்டளை தளர்த்தப்பட வேண்டுமென வேண்டிக் கொண்டார். அதன்பிரகாரம், சந்தேகநபர் வாரத்துக்கொருமுறை அன்றி மாதத்துக்கொருமுறை நாசகார நடிவடிக்கைகள் தடுப்புப் பிரிவில் ஆஜராக வேண்டுமென கௌரவ நீதவான் கட்டளை பிறப்பித்தார். மேற்குறிப்பிடப்பட்ட பதிவுகளை உள்ளடக்கிய இந்த வழக்கின் மூலப் பதிவுகள் **"X36"** எனக் குறியிடப்பட்டு ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தன.

வாசல ஜயசேகராவின் சாட்சியத்தை நோக்கும்போது பொலிசார் தன்னைத் துன்புறுத்தியது குறித்து அவர் நீதவானிடம் முறைப்பாடு செய்தபின்னர், நீதிமன்றத்திலிருந்து அவர் பொலிசு நிலையத்துக்கு எடுத்து வரப்பட்ட உடனடியிலேயே பொலிசு அதிகாரிகள் தன்னைத் தாக்கியதாக அவர் குறிப்பிட்டிருந்ததைக் காணலாம். நீதவானிடம் ஜயசேகரா கூறியவைகளைக் கேட்டுப் பொலிசு அதிகாரிகள் கோபம் அடைந்திருந்தது தெளிவாகின்றது. இத்தகைய சூழ்நிலைகளின் கீழ், பொலிசார் தன்னைத் தாக்கியது குறித்து சந்தேகநபர் கூறியபின்னரும் அவரை மீண்டும் பொலிசுக் காவலுக்குத் திருப்பி அனுப்பிவைத்த நீதவானின் செயல் எவ்வளவு தூரம் விவேகபூர்வமானதென ஒருவர் யோசிக்கலாம்.

சந்தேகநபர் பாலியகொடை பொலிசு நிலையத்துக்கு மீண்டும் எடுத்துச் செல்லப்பட்ட அதே தினத்தன்று அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ்சும் அவருடைய குழுவினரும் வந்து மீண்டும் அவரைத் தாக்கினர். ஜயசேகராவை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்ற பொலிசு உத்தியோகத்தர்கள், பொலிசாரினால் தான் தாக்கப்பட்டமை குறித்து நீதவானிடம் அவர் முறைப்பாடு செய்ததை இவர்களிடம் தெரிவித்திருக்கக்கூடும். அதனையடுத்து, நீதவானினால் கட்டளையிடப்பட்டவாறு பொலிசார் சந்தேகநபரைச் சட்ட மருத்துவ அதிகாரி ஒருவர் முன்னால் ஆஜர்படுத்தினார்கள். தனக்கு என்ன நடந்தது என்பதனை ஜயசேகரா சட்ட மருத்துவ அதிகாரிக்குத் தெரிவித்தார். அதன்பின்னர், அந்த அதிகாரி அவரைப் பரிசோதித்தார். சம்பந்தப்பட்ட சட்ட மருத்துவ அறிக்கையைத் தேடிப் பெற்றுக்கொள்வதற்காக இந்த ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட முயற்சிகள் சாதகமான பெறுபேறுகளை ஈட்டித்தரவில்லை.

பாலியகொடை பொலிசு நிலையத்தில் ஜயசேகரா தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த கடைசி மாதத்தின்போது பொலிசு நிலையத்தின் தரைத்தளத்தில் அமைந்திருந்த அறையொன்றில் அவர் வைக்கப்பட்டு இருந்தார். அவரது தந்தை வந்து ஜயசேகராவைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. அத்தகைய நாட்களில் ஒன்றின்போது பொ.கா உபாலி அவர்களிடம் வந்து, ஜயசேகரா விடுதலை பெறுவதில் ஆர்வமாக இருந்தால் களனி வராகொடை வீதியில் வசித்து வந்த அனில் குணவர்த்தனா என்ற பெயரைக்கொண்ட சட்டத்தரணியொருவரைப் போய்ச் சந்திக்குமாறு தனது தந்தையைக் கேட்டுக்கொள்ள வேண்டும் எனக் கூறினார். பொ.கா. உபாலி தன்னிடம் கூறியதை வாசல ஜயசேகரா தனது தந்தையிடம் தெரிவித்தார்.

வாசல ஜயசேகராவின் தந்தையான சாலிந்த ஜயசேகரா சட்டத்தரணி அனில் இந்திரஜித் குணவர்த்தனாவைப் போய்ச் சந்தித்தார். இந்தச் சட்டத்தரணி களனியில் வசித்து வந்தார். வாசலவுக்கு என்ன நேர்ந்தது என்பதனையும், பொலிசு அதிகாரி தன்னிடம் கூறியதையும் அச்சட்டத்தரணியிடம் அவர் தெரிவித்தார். சில நாட்களின் பின்னர் இது தொடர்பாகத் தான் சில விசாரணைகளை மேற்கொண்டிருந்ததாகவும், வாசலவை

விடுவிப்பதற்காக தனக்கு ரூபா.50,000/- வேண்டும் என்றும் அந்தச் சட்டத்தரணி வாசலவின் தந்தையிடம் கூறினார். உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ்சுக்குக் கொடுப்பதற்கு இந்தப் பணம் தேவைப்படுகின்றது என்றும் அச்சட்டத்தரணி கூறினார். அதன்பிரகாரம், சட்டத்தரணியிடம் பணம் வழங்கப்பட்டது. சில நாட்களின் பின்னர், 1989 பெப்புரவரி 15 ஆந் திகதியன்று பொலிசு உத்தியோகத்தர் உபாலியினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளின்பேரில் நீதவானால் உபாலி விடுவிக்கப்பட்டார்.

ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளிப்பதற்காகச் சட்டத்தரணி அனில் குணவர்த்தனாவுக்கு ஆணைக்குழு அழைப்பாணை அனுப்பியிருந்தது. மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் வாசல ஜயசேகராவின் சார்பில் தான் ஆஜராகி இருந்ததை ஏற்றுக்கொண்ட அவர் வாசலவின் விடுதலையைப் பெற்றுத் தருவதற்காக அவருடைய தந்தையிடமிருந்து பணம் கேட்டதனை அல்லது பெற்றுக்கொண்டதனை மறுத்தார். எவ்வாறிருப்பினும், செல்லுபடியாகத்தக்க தடுப்புக்காவல் கட்டளையொன்று இல்லாமல் வாசல ஜயசேகரா ஒரு காலப்பிரிவு தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டு இருந்தபோதிலும் வாசலவின் சார்பில் தான் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு ஆரம்பித்த உடனேயே வாசல விடுவிக்கப்பட்டார் என்ற விடயத்தை திரு.குணவர்த்தனா ஏற்றுக்கொண்டார். குணவர்த்தனா, வாசலவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகத் தொடங்கியவுடனேயே பொலிசார் வாசல குறித்த தமது மனப்பாங்கினைத் திடீரென மாற்றிக் கொண்டது ஏன் என்பதனை திரு.குணவர்த்தனாவினால் விளக்க முடியவில்லை.

**தலரத்னா முதலிகே பந்துல.......**

ரி எம் பந்துல (வயது 37) களனி தலுகமகொட என்ற இடத்தைச் சேர்ந்தவராவர். அவர் குளொக் ஓவர்சீஸ் கம்பனி என்றழைக்கப்பட்ட ஒரு தனியார் கம்பனியில் மின்சார தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றி வந்தார். இந்தக் கம்பனி சில வருடகாலம் ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் வேலைகளை உப ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வந்துள்ளது. இக்காலப்பிரிவின்போது பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் சில வேலைகளைச் செய்வதற்கு ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைக்கு வேலை ஒப்பந்தம் வழங்கப்பட்டு இருந்தது. எனவே, பந்துலவும் பட்டலந்த வீடமைப்புத் திட்ட அமைவிடத்தில் வேலை செய்திருந்தார். ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் (பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தின்) அமைவிடப் பொறியியலாளரினால் தனக்கு 1978 பெப்புரவரி மாதம் 16 ஆந் திகதி வழங்கப்பட்ட வேலை செய்தமைக்கான சான்றிதழை பந்துல ஆணைக்குழுவின் முன் சமர்ப்பித்தார். இந்தச் சான்றிதழின் பிரகாரம் பட்டலந்த வீடமைப்புத்திட்டத்தில் 14 மாத காலம் வேலை செய்திருந்தார். இந்தச் சான்றிதழ் **X38** எனக் குறியிடப்பட்டுள்ளது. பட்டலந்தயில் தான் வேலை செய்த காலப்பிரிவின்போது தனியார் கம்பனியினால் தனக்கு வழங்கப்பட்டு இருந்த அடையாள அட்டையையும் பந்துல ஆணைக்குழுவின் முன் சமர்ப்பித்து இருந்தார். இந்த ஆவணம், **"X37"** எனக் குறியிடப்பட்டு இருந்தது. 1979 முதல் மறைந்த திரு.ஒஸி அபேகுணசேகராவை அவர் அறிந்திருந்தார். திரு.அபேகுணசேகராவுடன் இணைந்து பந்துலவும் அரசியலில் ஈடுபட்டார். அவர் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் வேலைகளில் ஈடுபட்டு வந்தார். ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவர் திரு.விஜயகுமாரதுங்கா 1988 இல் படுகொலை செய்யப்பட்ட பின்னர் பந்துலவை திரு.அபேகுணசேகரா தனது பாதுகாப்பு ஊழியராகப் பணிபுரிவதற்கு அழைத்தார். இந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட பந்துல முழுநேர அடிப்படையில் திரு.அபேகுணசேகராவுக்காக வேலை செய்யத் தொடங்கினார். திரு.அபேகுணசேகரா பயணம் செய்தபொழுது பந்துல அவருக்குப் பாதுகாப்பு வழங்கும் விதத்தில் தனது மோட்டார் சைக்கிளில் சென்றார். 1988 மாகாணசபைத் தேர்தல், 1988 சனாதிபதித் தேர்தல் மற்றும் 1989 பொதுத் தேர்தல் என்பனவற்றின்போது ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பிரசார வேலையில் அவர் முனைப்புடன் பங்கேற்றார். இக்காலப்பிரிவின்போது, தனக்கு ஜே.வி.பி. யிடமிருந்து பிரச்சினைகள் வந்ததென அவர் கூறினார். தனக்குப் பொலிசுப்

பரிசோதகர் வெதிசிங்காவை நன்கு தெரியும் எனவும் ஜே.வி.பி. யிடமிருந்து தனக்கு வந்திருக்கும் அச்சுறுத்தல்களை வெதிசிங்காவிடம் தான் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

பந்துல 1990 இல் பமுனுவிலவில் வாடகை வீடொன்றில் வசித்து வந்தார். தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் அவர் அந்த வீட்டில் தங்கியிருந்தார். 1990 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி காலையில் அவர் தலுகமையில் அமைந்திருந்த தனது குடும்ப இல்லத்துக்குச் சென்றார். இதன் தூரம் சுமார் அரைமைல் அளவில் இருந்தது. அயலில் வசித்து வந்த கமல் இந்திரஜித் என்பவரைச் சந்தித்து, மீன் வாங்குவதற்காக சந்தைக்குச் செல்லும்பொருட்டு அவருடைய சைக்கிளைப் பந்துல பெற்றுக்கொண்டார். சைக்கிளை வாங்கிய அவர் அதில் ஏறிச் சென்றார். வழியில் பிரான்ஸிஸ் ஒழுங்கையில் வைத்து சைக்கிளின் ஒரு ரயரில் காற்று வெளியேறி இருந்தது. பந்துல சைக்கிளை அருகில் உள்ள பழுதுபார்க்கும் கடையொன்றுக்கு எடுத்துச்சென்று அந்த ரயரைச் செப்பனிட்டுக் கொண்டார். அதன்பின்னர், அவர் தனது பயணத்தை ஆரம்பித்தார். ஒரு சிவப்பு நிறக் கார் பின்பக்கத்திலிருந்து அவரை அணுகித் தாண்டிச் செல்லும்பொழுது ஹோர்னை அமுத்தியது. பின்னர் சில யார் தூரம் சென்றபின்னர் அது நிறுத்தப்பட்டது. இரு நபர்கள் காரிலிருந்து இறங்கி பந்துலவிடம் வந்தார்கள். அவர்களில் ஒருவர் ஆயுதம் தாங்கியிருந்தார். மற்றவர் பந்துலவின் கழுத்தில் தாக்கினார். பந்துல சைக்கிளில் இருந்து கீழே விழுந்தார். ஆயுதம்தாங்கிய நபர் தன்னுடைய ஆயுதத்தை தனது காதுக்கு நேராக நீட்டியதை பந்துல நினைவுகூர்ந்தார். இந்த நபர் உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ் என்பதனை பந்துல அறிந்துகொண்டார். அவர் டக்ளஸ் பீரிஸை நீண்டகாலம் அறிந்திருந்தார். இந்த இருவருக்கும் இடையில் எத்தகைய தொடர்பும் இல்லாதிருந்தபோதிலும், களனி பிரதேசத்தில் குறிப்பாக தேர்தல் பிரசாரக் காலங்களின்போது பந்துல அவரைப் பல சந்தர்ப்பங்களில் பார்த்துள்ளார். அவர் உ.பொ.அ பீரிஸ்தானா எனப் பந்துல கேட்டார். அதற்கு ஆம் எனப் பதிலளித் உ.பொ.அ.பீரிஸ் அவரிடம் பின்வருமாறு கூறினார்- "நீ ஒஸியின் பெரிய மெய்ப்பாதுகாவலர்தானே". அவ்வாறு கூறிவிட்டு வாகனத்தில் ஏறுமாறு அவருக்குக் கட்டளையிட்டார். அவரைச் சுடப்போவதாகவும் பந்துலவைப் பீரிஸ் அச்சுறுத்தினார். அதன்பின்னர், பந்துல காருக்குள் ஏற்றப்பட்டார். அவர் காரின் பின்ஆசனத்தில் இருத்தப்பட்டதுடன் அவருடைய இருபுறத்திலும் இரண்டு நபர்கள் அமர்ந்தனர். உ.பொ.அ பீரிஸ் முன்ஆசனத்தில் அமர்ந்தார். கொலை மற்றும் கொள்ளை போன்ற மிகக் கடுமையான கடுங்குற்றச் செயல்களில் பந்துல ஈடுபட்டிருந்ததாகவும், அதன் காரணமாக அவர் கைது செய்யப்படுகின்றார் என்றும் உ.பொ.அ பீரிஸ் பந்துலவிடம் கூறியிருந்தார். கார் பயணத்தை ஆரம்பித்தபொழுது பந்துலவின் இருபுறங்களிலும் அமர்ந்திருந்த நபர்கள் அவரைத் தாக்கத் தொடங்கினர். பந்துல தன்னைத் தாக்கியவர்களிடம் மன்றாடியதுடன், தான் ஒரு நோயாளியென்றும் குறிப்பிட்டார். தனது இதயத்தில் ஓர் துவாரம் இருப்பதாகவும், தான் மரணம் அடையக்கூடுமென்றும் அவர் கூறினார். அதற்கு அவரைத் தாக்கியவர்கள் " பிரச்சினை எதுவும் இல்லை " என்றும், எப்படியிருந்தாலும் கொல்லப்படுவதற்காகவே அவர் எடுத்துச் செல்லப்படுகின்றார் என்றும் கூறினார்கள். பின்னர் உ.பொ.அ பீரிஸின் அறிவுறுத்தலின்பேரில் பந்துலவின் கண்கள் கட்டப்பட்டன. பந்துல கைது செய்யப்பட்டவுடனேயே அவர்மீது கைவிலங்குகள் பூட்டப்பட்டன. சுமார் 10 நிமிட நேரத்துக்கு அந்த வாகனம் பயணம் செய்தது. அதன்பின்னர் அது நிறுத்தப்பட்டது. காரிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு பந்துல ஒரு கட்டிடத்துக்குள் எடுத்துச் செல்லப்பட்டார். ஆட்கள் பேசிக்கொண்டிருப்பது அவருக்குக் கேட்டது. தனக்குக் கேட்ட குரல்களிலிருந்து அது பாலியகொடை பொலிசு நிலையம் என அவர் ஊகித்தார். அக்கட்டிடத்துக்குள் பொலிசு அதிகாரியொருவர் ரேடியோ கருவிகளுக்கூடாகத் தொடர்பு கொள்வதைத் தான் செவிமடுத்ததாக அவர் விளக்கினார். "ஆம். இது பாலியகொடை பொலிசு நிலையம். பேசுங்கள்" என அதிகாரிகள் கூறுவது அவருக்குக் கேட்டது. எனவே, தான் பாலியகொடை பொலிசு நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக அவர் எண்ணினார். பொலிசு நிலையத்தில் சில நிமிடநேரம் வைக்கப்பட்டிருந்த பந்துல மற்றொரு வாகனத்தில்

ஏற்றப்பட்டார். வாகனத்தினுள்ளே இருந்தபோது குப்புறப் படுத்துக்கொள்ளுமாறு அவருக்குக் கட்டளையிடப்பட்டது. அந்த வாகனம் ஒரு வானாக இருக்கவேண்டுமென அவர் ஊகித்தார். அதன்பின்னர், அவரது உடலின்மீது பல ரயர்கள் போடப்பட்டன. வேறு பல நபர்களும் அந்த வானில் ஏறியதுடன் அவரைக் காலியில் உள்ள பூஸா தடுப்பு முகாமுக்கு எடுத்துச் செல்வதாக அவர்களில் ஒருவர் கூறினார். அதன்பின்னர், அந்த வாகனம் புறப்பட்டது. வான் சுமார் இரண்டு மைல் தூரம் சென்றது. அதன்பின்னர் அது நிறுத்தப்பட்டது. பந்துல வானிலிருந்து எடுக்கப்பட்டு ஒரு கட்டிடத்துக்குள் எடுத்துச் செல்லப்பட்டார். அந்தக் கட்டிடத்துக்குள் கைவிலங்குகளில் ஒன்று அகற்றப்பட்டதுடன் அது உறுதியான ஒரு பொருளின்மீது பொருத்தப்பட்டது. எனவே, பந்துல தப்பிச்செல்ல முடியாதிருந்தது. சிறிது நேரத்தின் பின்னர், கடத்தல்காரர்கள் வெளியேறிச் சென்றனர். அதற்குச் சிறிது நேரத்தின் பின்னர், பந்துல விடுவிக்கப்பட்டிருந்த கையின் உதவியைக்கொண்டு தனது கண்கட்டினை மேலே உயர்த்தினார். தான் ஓர் அறைக்குள் இருப்பதனையும், அந்த அறைக்குள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் வேறு இருவர் இருப்பதினையும் அவர் கண்டார். பந்துல அவர்களில் ஒருவரிடம், இந்த இடத்துக்கு அவர் எடுத்துவரப்பட்டிருப்பது ஏன் எனக் கேட்டார். சட்டவிரோதமாக மதுபானம் தயாரிப்பதாகக் குற்றம்சாட்டப்பட்டு, அது தொடர்பாக தான் முதலில் உ.பொ.அ. பீரிஸினால் கைது செய்யப்பட்டதாகவும், கைதுசெய்த பின்னர் உ.பொ.அ. பீரிஸ் தன்னைக் கடுமையாகத் தாக்கியதாகவும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் கூறினார். அதன்பின்னர், தன்னைத் தாக்கியதற்காக அந்த நபர் உ.பொ.அ. பீரிஸ்சுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். நீதிமன்றம் அவருக்குச் சாதகமாக(அதாவது உ.பொ.அ பீரிஸ்சுக்கு எதிரான வழக்கில் அவர் வெற்றி பெற்றார்) தீர்ப்பளித்ததுடன், அவர் நஷ்டஈட்டையும் பெற்றுக்கொண்டார். அதனை உடனடுத்து, பொ.கா.ரத்நாயக்கா அவரைக் கைது செய்ததுடன், அவர் இந்த வீட்டுக்கு எடுத்து வரப்பட்டிருந்தார்.

இரவில் அந்தக் கட்டிடத்துக்குள் ஆட்கள் வந்து பந்துலவின் கைவிலங்குகளை அகற்றினார்கள். அவருடைய கைகளும் கால்களும் கட்டப்பட்டன. அவருடைய உடல் கைகள் மேலே உயர்த்தப்பட்ட நிலையில் தரையிலிருந்து மேலே தூக்கப்பட்டதுடன், கூரையில் அவர் தொங்கவிடப்பட்டார். அதன்பின்னர், அவரது உடல் அங்குமிங்கும் ஆட்டப்பட்டதுடன், ஆட்கள் தடிகளைக் கொண்டுவந்து அவரைத் தாக்கினார்கள். தனது உடல் ஒரு கடிகாரத்தின் பென்டுலத்தைப்போல அங்குமிங்கும் ஆட்டப்பட்டதென அவர் கூறினார். தாக்கப்பட்டுக் கொண்டிருந்தபொழுது, குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டு இருந்ததாகவும், கிரிபத்கொடை பொலிசுப் பரிசோதகர் வெதிசிங்காவுடன் சேர்ந்து சில சந்தர்ப்பங்களில் கொள்ளைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் பந்துலமீது குற்றம் சுமத்தப்பட்டது. மேலும், ஜே.வி.பி நடவடிக்கைகளில் அவர் பங்குபற்றினாரா என்றும் அவரிடம் கேட்கப்பட்டது. இந்த அனைத்துக் கேள்விகளுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் பந்துல எதிர்மறைவாகப் பதிலளித்தார். அவர் வேதனையில் கூக்குரலிட்டார். பின்னர், அவர் கூக்குரலிடுவதனைத் தடுக்கும்பொருட்டு பந்துலவின் வாய்க்குள் துணித்துண்டுகள் திணிக்கப்பட்டன. அவர்மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது. சிறிதுநேரத்தின் பின்னர், பந்துல அநேகமாக மூர்ச்சையாகும் நிலைக்கு வந்துவிட்டார். தனது கைகள் இல்லாததுபோல அவர் உணர்ந்தார். தனது சொந்தக் கைகளை அவரால் உணர முடியாதிருந்தது. சிறிதுநேரத்தின் பின்னர் தாக்குதல் நின்றது. பந்துல தரையில் வைக்கப்பட்டார். அச்சந்தர்ப்பத்தில் தன்னைத் தாக்கியவர்களில் எவரையும் தன்னால் அடையாளம் காணமுடியாது எனப் பந்துல குறிப்பிட்டார்.

அடுத்தநாள் காலையில் அந்த வீட்டிலிருந்து வெளியே எடுத்துவரப்பட்ட பந்துல வாகனமொன்றில் மற்றொரு வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அந்த வாகனம் சிறிதுதூரம் மட்டுமே பயணம் செய்தது. அதன்பின்னர் அது நிறுத்தப்பட்டது. அவர் வெளியே எடுக்கப்பட்டு இன்னொரு வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அன்றைய தினமும் கொள்ளைச் செயல்களில்

அவருடைய சம்பந்தம் குறித்து மீண்டும் அவரிடம் கேள்வி கேட்கப்பட்டது. விசாரணை நடத்தியவர்கள் தொடர்ந்து தாக்கினார்கள். பந்துல தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. டென்ஸில், பசில், உபாலி மற்றும் குவின்ரஸ் ஆகியோர்களைப் பிடித்துவைத்து அதேவீட்டுக்குள் அவர்களைக் கொலை செய்தது தாங்கள்தான் எனக் கூறுவது மூலம் விபரங்களை வெளியிடுவதற்கு பந்துலவைத் தூண்டுவதற்கு தாக்கியவர்கள் முயன்றார்கள். எனவே, பந்துல உண்மையைக் கூறவேண்டும் என அவர்கள் கேட்டுக் கொண்டனர். உண்மையிலேயே அதே கிராமத்தில் வாழ்ந்த டென்ஸில் என்ற பெயரைக்கொண்ட நபரை பந்துல அறிந்திருந்தார். அண்மைக்காலத்தில் டென்ஸில் நிரந்தரமாக காணாமல் போய்விட்டார். இக்காரணங்களினால் பந்துல பெரிதும் அச்சம் அடைந்தார். தாக்குதல் நிறுத்தப்பட்டுத் தன்னைத் தாக்கியவர்கள் வெளியேறிச் சென்றபின்னர் பந்துல தனது கண்கட்டுக்களை மெதுவாக அகற்றி சுற்றுமுற்றும் பார்த்தார். அக்கட்டிடத்தின் சுவர்களில் இரத்தக்கறைகள் படிந்திருப்பதனையும், தரையில் சில ரயர்களும், வெற்று மதுபான போத்தல்களும் இருப்பதனையும் அவர் கண்டார். இரத்தக்கறையைப் பார்த்த பந்துல நடுக்கமடைந்தார். அவர் அந்த வீட்டில் சிறிதுகாலம் இருந்தார். தனக்கு முதுகுவலி இருந்தமையினால் அவரால் தரையில் உட்கார முடியாதிருந்தது. எனவே, அவர் முழங்காலை ஊன்றிக்கொண்டு இருந்தார்.

அன்று காலையில், முன்னர் அவரைத் தாக்கியவர்களில் ஒருவர் பந்துல தடுத்து வைக்கப்பட்டிருந்த அறைக்கு வந்ததுடன் பந்துலவுடன் பேசினார். அவர்கள்(தாக்கியவர்கள்) வீணாகவே பந்துலவைத் தாக்கியதாக அவர் கூறினார். ஒரு பொய்த்தகவலின் அடிப்படையில் பந்துல கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார். எனவே, அவர்கள் பந்துலவை விடுவிக்க இருப்பதாகக் கூறி, தனக்கு என்ன நடந்தது என்பதனை ஒஸியிடம் தெரிவிப்பதை பந்துல தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவரிடம் அந்த நபர் வேண்டுகோள் விடுத்தார். அன்றிரவு பந்துலவை வெளியே எடுத்துச்சென்று விடுவிக்கப் போவதாகவும் அந்த நபர் சொன்னார். அவ்வாறு கூறிவிட்டு அவர் போய்விட்டார். ஆனால், சிறிதுநேரத்தின் பின்னர் கட்டிடத்துக்கு வெளியே ஆட்கள் உரையாடிக்கொண்டிருப்பது பந்துலவுக்குக் கேட்டது. அந்த ஆட்கள் "இந்த ஆள் அப்பாவி" என உரையாடிக்கொண்டிருப்பது (இது தன்னையே குறித்ததாக பந்துல கருதினார்) அவருக்குக் கேட்டது. மேலும், முன்னைய தினம் தாக்கப்பட்டபோதிலும் பந்துல எத்தகைய தகவலையும் வெளிப்படுத்தவில்லை என்றும் அவர்கள் கூறினார்கள். எவ்வாறிருப்பினும், இது தங்களுடைய "தலைவரின்" ஒரு கட்டளையாக இருப்பதனால் தங்களால் வேறெதனையும் செய்ய முடியாதுள்ளது எனவும் அவர்கள் கூறினார்கள். அன்றிரவே பந்துலவை வெளியே எடுத்துச்சென்று அவருடைய காதுக்கருகில் துப்பாக்கியால் சுட்டு, அவருடைய கைவிலங்கொன்றை அகற்றியபின்னர், ரத்கஹவத்த பாலத்துக்கருகில் அவரை ஆற்றில் தள்ளிவிடப் போவதாக அவர்கள் பேசிக்கொண்டு இருப்பது தனக்குக் கேட்டதாக பந்துல கூறினார். மேலும், அந்த இடத்தில் இராணுவ வீரர்கள் நிற்பதனால் சிலவேளை தம்மால் அவ்வாறு செய்யமுடியாது போய்விடும் என்றும், அப்படியிருந்தால், அவரை வேறொரு இடத்துக்கு எடுத்துச்சென்று ரயர்களில் போட்டுக் கொளுத்தவேண்டியிருக்கும் என்றும் அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

தன்னைத் தாக்கியவர்கள் முன்னர் என்ன கூறியிருந்தபோதிலும் அன்றிரவு தன்னைக் கொலைசெய்வதற்கு முடிவு செய்துள்ளார்கள் என்பதனை அந்நேரத்தில் பந்துல புரிந்து கொண்டார். அவர் மெதுவாக அறையின் பின்பக்கத்துக்குச் சென்றார். தனது கண்கட்டுக்களை மேலே உயர்த்திவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தார். அருகில் ஒரு யன்னல் இருந்தது. அந்த யன்னலுக்கூடாக அவர் சூழவுள்ள பிரதேசத்தைப் பார்த்தார். பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தின் வீடுகளின் நிர்மாணக் கட்டத்தின்போது கணிசமான ஒரு காலப்பிரிவில் அவர் அங்கு வேலை செய்திருந்ததன் காரணமாக அந்த அமைவிடம் அவருக்குப் பரிச்சயமானதாக இருந்தது. தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீட்டிலிருந்து தப்பிச் செல்லும் ஆபத்தைத் துணிந்து ஏற்பதற்கு அவர் முடிவு செய்தார். தனது கைகள் உடலின் பின்னால் வைத்து

கைவிலங்கு மாட்டப்பட்டிருப்பதை அவர் அவதானித்தார். அவ்விதம் கைகள் கட்டப்பட்ட நிலையில் தப்பியோடுவது சிரமமாக இருக்கும் என்பதனையும் அவர் உணர்ந்து கொண்டார். அதன்பின்னர், தனக்கு கழிப்பறைக்குச் செல்ல வேண்டிய தேவை இருப்பதனால் தனது கைவிலங்குகள் அகற்றப்பட வேண்டும் எனக் கேட்டு அவர் உதவி கோரினார். வீட்டுக்கு வெளியே காவலில் இருந்த நபர் அதற்கு இணங்கினார். கழிப்பறைக்குச் சென்று வெளியே வந்தபின்னர் பந்துல தனது கைகளை உடலுக்கு முன்னால் வைத்துக்கொண்டு அவற்றின்மீது விலங்குகள் பொருத்தப்படும்வரையில் காத்திருந்தார். காவலுக்கு நின்றவர்கள் கைகள் வைக்கப்பட்டிருந்த நிலையை பந்துல தனது உடலின் பின்புறத்திலிருந்து முன்புறத்துக்கு மாற்றிக் கொண்டுள்ளார் என்பதைக் கவனிக்காமலேயே கைவிலங்குகளைப் பொருத்தினார்கள்.

காவலுக்கு நின்றவர்கள் அறையிலிருந்து வெளியே சென்ற பின்னர், பந்துல ஒரு யன்னலுக்கு அருகில் சென்று, மெதுவாக அதனைத் திறந்து வெளியே பாய்ந்தார். வெளியிலிருந்து அவர் அந்த யன்னலை மெதுவாக மூடினார். பின்னர் அந்த வீட்டின் பின்புறம் அமைந்திருந்த முட்கம்பி வேலிக்கூடாக நுழைந்து அந்த வளவிலிருந்து அவர் வெளியேறிச் சென்றார். பந்துல அவ்விதம் சென்ற பிரதேசம் பட்டலந்த கிராமமாகும். அவர் அதன்பின்னர், அருகிலிருந்த படுகேவத்த என்ற கிராமத்துக்கு ஓடினார். இந்தக் கிராமத்தில் ஈட்டின் சிங்கோ என்ற பெயரில் அவருடைய மாமா ஒருவர் வசித்து வந்தார். பந்துல ஈட்டின் சிங்கோவின் வீட்டைச் சென்றடைந்தபொழுது நேரம் பிற்பகல் 7.30 மணியளவில் இருந்தது. ஈட்டினும் அவருடைய மகன் விஜிதவும் அங்கிருந்தார்கள். தனக்கு என்ன நேர்ந்தது என்பதனையும், தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தப்பியது எப்படி என்பதனையும் பந்துல அவர்கள் இருவரிடமும் கூறினார். கைவிலங்குகளை அகற்றுவதே அவர்களின் முக்கியமான கவலையாக இருந்தது. இரு விலங்குகளையும் இணைக்கும் சங்கிலியை விஜித ஓர் இரும்புத் தடியில்வைத்து, அச்சங்கிலியின்மீது ஒரு பெரிய கத்தியினால் அடித்தார். கைவிலங்கு இரண்டாகப் பிளவுபட்டது. இரு கைகளிலும் வளையங்கள் இருந்தன. எனினும், இந்த வளையங்கள் சங்கிலியினால் ஒன்றுடனொன்று பிணைக்கப்படாதிருந்தமையால் தனது கைகளை அவரால் சுதந்திரமாக அசைக்க முடிந்தது.

ஈட்டின் சிங்கோவின் வீட்டில் இனியும் தரித்திருப்பதற்கு பந்துல விரும்பவில்லை. தன்னைக் கடத்தித் தடுத்து வைத்திருப்பதில் அக்கறை காட்டிய நபர்கள் இந்நேரத்துக்குள் தான் தப்பிச் சென்றிருப்பது குறித்து அறிந்திருப்பார்கள் என்றும், அதனால் அவர்கள் தன்னைத் தேடி வருவார்கள் என்றும் அவர் அச்சமடைந்திருந்ததே இதற்குக் காரணமாகும். விஜித, பந்துலவை தனது சைக்கிளில் வைத்து அழைத்துச் சென்றார். இருவரும் கல்வல சந்தியை நோக்கிச் சென்றனர். கல்வல சந்திக்கு அருகில் பியதாச என்ற பெயரில் பந்துலவின் மற்றொரு மாமா வசித்து வந்தார். பந்துல, பியதாசாவின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்தார். தனக்கு என்ன நடந்தது என்பதனை அவர் பியதாசாவிடம் கூறினார். அந்த இடத்தில் அயலவர் ஒருவரும் இருந்தார். பந்துலவின் கைகளில் இருந்த கைவிலங்கின் வளையங்கள் ஓர் ஆபத்தாக இருந்ததினால் அவற்றை அகற்றுவதற்கு அவர்கள் முடிவு செய்தனர். அங்கிருந்த அயலவர் தனது வீட்டிலிருந்து உலோக ரம்பம் ஒன்றை எடுத்து வந்து அந்த வளையங்களை மெதுவாக அறுக்கத் தொடங்கினார். ஒரு சந்தர்ப்பத்தில் அந்த ரம்பம் பந்துலவின் கைகளில்பட்டுக் கீறல் ஏற்பட்டு அதன்விளைவாக அவருக்குச் சிறுகாயம் ஏற்பட்டது. அவர்களால் அந்த வளையங்களை அகற்ற முடிந்தது. பந்துல கைவிலங்குகளின் துண்டுகளைப் பியதாசாவிடம் கொடுத்துவிட்டு வேறொரு பாதுகாப்பான இடத்தைத் தேடி அந்த வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றார்.

பந்துல சென்றபின்னர், பியதாசா கைவிலங்குகளின் இரு வளையங்களையும் ஒரு கழிப்பறைக் குழிக்குள் போட்டார். ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்த பின்னர், பந்துலவின் சாட்சியத்தின் உண்மை நிலையைக் கண்டறிவதற்காக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. பந்துலவின் சாட்சியத்தை ஊர்ஜிதம் செய்யும்வகையில், ஈட்டின் சிங்கோ,

பியதாசா மற்றும் பியதாசாவின் அயலவர் ஆகியோர் சாட்சியம் அளித்தனர். பியதாசாவினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பியதாசாவின் வீட்டு வளவுக்குப் பின்புறம் அமைந்திருந்த பழைய கழிப்பறைக் குழியொன்று தோண்டிப் பார்க்கப்பட்டது. ஆணைக்குழுவைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரிகள் இந்தக் குழியிலிருந்து ஓரளவுக்குத் துருப்பிடித்திருந்த இரு கைவிலங்கு வளையங்களை மீட்டெடுத்தனர். இந்த வளையங்களுடன் கைவிலங்குகளைப் பிணைக்கும் சங்கிலியின் பாகங்களும் பொருத்தப்பட்டிருந்தன. இந்த வளையங்கள், மீட்டெடுக்கப்பட்ட அதே தினத்தன்று **"X39"** எனக் குறியிடப்பட்டு ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டன. புலனாய்வு அதிகாரிகளின் சாட்சியத்தின் பிரகாரம், இப்பிரதேசத்தின் கிராம சேவகரையும் உள்ளிட்ட பெருந்தொகையான கிராமவாசிகளின் முன்னிலையிலேயே இக்குழி துப்புரவு செய்யப்பட்டு கைவிலங்கு வளையங்கள் மீட்டெடுக்கப்பட்டிருந்தன. இந்தச் சந்தர்ப்ப சாட்சியமான பொருள் பந்துலவின் சாட்சியத்தை மிகத் தெளிவாகவே உறுதிப்படுத்துகின்றது.

பியதாசாவின் வீட்டிலிருந்து வெளியேறிய பின்னர் பந்துல நடைப்பயணமாகவும் முச்சக்கர வண்டியிலும் பயணம் செய்தார். நீண்ட பயணத்தின் பின்னர் அவர் கொழும்பு-07, ஜாவத்தையில் அமைந்திருந்த மறைந்த திரு.ஒஸி அபேகுணசேகராவின் வீட்டை வந்தடைந்தார். அவர் திரு.ஒஸி அபேகுணசேகராவை அவரது வீட்டில் சந்தித்தார். முழுச் சம்பவத்தையும் பந்துல அவருக்கு விளக்கிக் கூறினார். தனக்கு இக்கதி நேர்ந்ததற்குப் பொறுப்பானவர்களில் ஒருவர் உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ் என்பதனையும் அவர் தெரிவித்தார்.

பந்துல கிராமத்தில் தனியாக வசித்து வருவது பாதுகாப்பானதாக இருக்கமாட்டாது என திரு.அபேகுணசேகராவும் பந்துலவும் உணர்ந்தார்கள். பந்துலவைத் தேடி உ.பொ.அ பீரிஸ்சும் அவரது குழுவினரும் திரு.அபேகுணசேகராவின் வீட்டுக்கு வருவதற்கு அநேகமாக வாய்ப்பில்லையாதலால், பந்துல தனது வீட்டில் சிறிதுகாலம் தங்கியிருப்பதற்கு அவர் அனுமதியளித்தார். அதன் பிரகாரம், பந்துல 4 மாத காலம் திரு.அபேகுணசேகராவின் வீட்டில் தங்கியிருந்தார். அக்காலப்பிரிவின் முடிவு அளவில், பொலிசார் இனிமேலும் பந்துலவைத் தேடி வருவதற்கான அடையாளங்கள் எவையும் தென்படவில்லை. அதனால், பந்துல, திரு.அபேகுணசேகராவின் வீட்டிலிருந்து வெளியேறி தனது வீட்டுக்குச் சென்றார். எனினும், அங்கு தங்கியிருப்பதற்கு அவருக்குப் பயமாக இருந்தது. அவர் வெளிநாட்டில் வேலை தேடியதுடன், சிறிது காலத்தின் பின்னர், அவருக்குச் சவூதிஅரேபியாவில் வேலை கிடைத்தது. பந்துல வெளிநாடு சென்றதுடன் 1993 யூலை வரையில் சவூதிஅரேபியாவில் தொடர்ந்து வேலைசெய்து வந்தார். அக்காலப்பிரிவு அளவில், அவர் இலங்கைக்குத் திரும்பிச் செல்லும் பட்சத்தில் அவரை மீண்டும் கைதுசெய்வதற்கு அநேகமாக வாய்ப்பேதும் இல்லை என்பது அவருக்கு நன்கு தெரிய வந்திருந்தது. எனவே, பந்துல இலங்கைக்குத் திரும்பி வந்தார்.

1994 ஆகஸ்ட் மாதத்தில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் பந்துல மேற்குறித்த சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஒரு வாக்குமூலத்தை அளித்தார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அவரிடம் விடுத்தவொரு வேண்டுகோளையடுத்து பந்துல அந்த அதிகாரிகளை பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்கு அழைத்துச் சென்று பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் தான் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்த இரு வீடுகளையும் அவர்களுக்குக் காட்டினார். இந்த ஆணைக்குழுவின் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டபொழுது, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பந்துலவால் வழங்கப்பட்ட வாக்குமூலத்தின் ஒரு நகலையும், இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் குறிப்புக்களையும் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கியது (பந்துலவினால் இரு வீடுகளும் அடையாளம் காணப்பட்டது தொடர்பான அவதானிப்புக் குறிப்புகளையும் உள்ளடக்கிய) இந்த விசாரணையில் சம்பந்தப்பட்ட குறிப்புக்களின் பிரகாரம் முதலில் பந்துல B7 என்ற இலக்கம்கொண்ட வீட்டிலும் அதன்பின்னர் B2 என்ற இலக்கம் கொண்ட வீட்டிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்துள்ளார். பட்டலந்த

வீடமைப்புத் திட்டத்தைச் சோதனை செய்வதற்கு ஆணைக்குழு சென்றபொழுது, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த இரு வீடுகளையும் ஆணைக்குழுவுக்குக் காட்டினார்கள். இதனைச் சூழவுள்ள பிரதேசம் பந்துல இந்த ஆணைக்குழுவுக்கு முன்னால் வழங்கிய வாய்மூலமான சாட்சியத்தின்போதும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் அவர் வழங்கிய வாக்குமூலத்தின்போதும் அவர் விவரித்தவற்றிற்கு பெருமளவுக்கு இணையான விதத்திலேயே இருந்துவந்தது என்பதனை நாங்கள் அவதானித்தோம்.

**அத்துரனகே விமல் அத்தநாயக்கா**

விமல் அத்தநாயக்கா ஒரு ஆயுள்வேத வைத்தியராவர். கம்பஹா ஆயுள்வேதக் கல்லூரியில் 1983 இல் பட்டம் பெற்றுக்கொண்ட அவர், 1984 இல் பியகம தேர்தல் தொகுதியில் உள்ள பொல்லேகலயில் தனிப்பட்ட முறையில் சிகிச்சையளிக்கத் தொடங்கினார். அவருடைய வைத்தியத்தொழில் பரவலானதாகவும் நன்கு வருமானம் ஈட்டித்தருவதாகவும் இருந்து வந்தது. அத்தநாயக்காவும் அவரது குடும்பத்தினரும் அவருடைய வைத்திய நிலையத்துக்கு அருகிலேயே வசித்து வந்தனர். அப்பிரதேசத்தைச் சேர்ந்த பொலிசு அதிகாரிகளும் கூட தன்னிடம் சிகிச்சை பெறுவதற்காக வந்திருப்பதாக அத்தநாயக்கா இந்த ஆணைக்குழுவின் முன் கூறினார். பொலிசு அதிகாரிகளுக்கு சிகிச்சையளிக்கும்பொழுது அவர் அதற்குக் கட்டணங்களை அறவிடுவதில்லை. அது அவருடைய சொந்தக் கொள்கையாக இருந்தது. இவ்விதம் சிகிச்சையளிக்கும்போது களனிப் பொலிசு நிலையத்தின் பொறுப்பதிகாரியான பரிசோதகர் சுனில் நிஸ்ஸங்க பண்டாரவை அத்தநாயக்கா தெரிந்துகொண்டார்.

1990 இல் ஒருநாள் பரிசோதகர் நிஸ்ஸங்க பொலிசு அதிகாரிகளின் ஒரு குழுவினருடன் அத்தநாயக்காவைச் சந்திப்பதற்கு வந்தார். காயமடைந்திருந்த மூன்று நபர்களையும் அவர் தன்னுடன் அழைத்து வந்திருந்தார். காயமடைந்திருந்தவர்களுக்குச் சிகிச்சையளிக்குமாறு பரிசோதகர் நிஸ்ஸங்க, அத்தநாயக்காவிடம் கேட்டுக்கொண்டார். அவர் காயமடைந்திருந்தவர்களைப் பரிசோதித்தார். அவர்களுடைய உடல்களில் அடிவாங்கிய காயங்கள் இருந்தன. சில காயங்கள் புண்ணாகி இருந்தன. காயமடைந்த நபர்களின்மீது கைவிலங்குகள் பூட்டப்பட்டு இருந்தன. அவர்கள் காயமடைந்தது எவ்வாறு என அத்தநாயக்கா அவர்களிடம் கேட்டார். காயமடைந்த நபர்கள் பரிசோதகர் நிஸ்ஸங்கவைப் பார்த்துவிட்டு மௌனமாக இருந்தனர். காயமடைந்தவர்கள் பொலிசுக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் என்பதனை அத்தநாயக்கா ஊகித்துக் கொண்டார். இந்த நபர்களுக்கு என்ன நடந்துள்ளது என்பதனைத் தான் புரிந்துகொண்டிருந்தபோதிலும், அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதைத் தவிர தன்னால் வேறு எதையும் செய்ய முடியாதிருந்தது என அவர் கூறினார். எனவே, அவர் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளித்தார். அதன்பின்னர், பரிசோதகர் நிஸ்ஸங்க அவர்களை அழைத்துச் சென்றார்(சாட்சியின் கூற்றின் பிரகாரம், பொல்லேகலயில் அமைந்துள்ள தன்னுடைய மருத்துவ நிலையத்துக்கும், களனிப் பொலிசு நிலையத்துக்கும் இடையிலுள்ள தூரம் சுமார் 2 மைல்கள் ஆகும்).

இந்தச் சம்பவத்தின் மூன்று நாட்களின் பின்னர் பரிசோதகர் நிஸ்ஸங்க பொலிசு உத்தியோகத்தரொருவருக்கு ஊடாக அத்தநாயக்காவுக்கு ஒரு தகவலை அனுப்பியிருந்தார். முன்னர் சிகிச்சை அளிக்கப்பட்ட மூன்று நபர்களுக்கு மேலும் சிகிச்சை அவசியமாக இருப்பதனால் அத்தநாயக்கா பொலிசு நிலையத்துக்கு வரவேண்டும் என அத்தகவலில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம், அத்தநாயக்கா அன்றிரவு தனது சைக்கிளில் களனிப் பொலிசு நிலையத்துக்குச் சென்றார். பொலிசு நிலையத்தில் அவர் பரிசோதகர் நிஸ்ஸங்காவைச் சந்தித்தார். அவர் அத்தநாயக்காவை பொலிசு நிலையத்தின் பின்பக்கத்துக்கு அழைத்துச் சென்றார். கட்டிடத்தின் பின்பகுதியில் முன்னைய சந்தர்ப்பத்தில்

சிகிச்சையளிக்கப்பட்டிருந்த, காயப்பட்டிருந்த நபர்களில் ஒருவர் இருந்தார். அவர் மணல்தரையில் படுத்துக்கொண்டு இருந்தார். அத்தநாயக்கா அந்த நபரைப் பரிசோதித்தார். அவருடைய நிலைமை மிகவும் மோசமானதாக இருந்தது. சில காயங்கள் புண்ணாகி இருந்தன. காயமடைந்த நபரின் நிலையை நிஸ்ஸங்கவுக்கு அத்தநாயக்கா விளக்கிக் கூறினார். காயமடைந்த நபருக்கு எப்படியாகிலும் சிகிச்சை அளிக்கும்படியும், ஆகக்குறைந்தது இன்னும் ஒருநாளைக்கேனும் அந்நபர் உயிர்வாழ்வதனை உறுதிசெய்யுமாறும் நிஸ்ஸங்க, அத்தநாயக்காவிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். அத்தநாயக்கா காயமடைந்த நபருக்குச் சிகிச்சையளித்தார். அதன்பின்னர், அவர் தனது வீட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

சில நாட்களின் பின்னர் (நிஸ்ஸங்கவின் தகவலைத் தெரிவிப்பதற்காக) முன்னர் தன்னிடம் வந்த அதே பொலிசு உத்தியோகத்தர் வந்து அத்தநாயக்காவைச் சந்தித்து காயமடைந்திருந்த மேலும் சில ஆட்களுக்கு அவர் சிகிச்சையளிக்க வேண்டியிருப்பதாகவும், காயமடைந்துள்ள நபர்கள் இருக்குமிடத்துக்குச் செல்வதற்கு மாலையில் தயாராக இருக்குமாறும் கூறினார். அன்று மாலை பொலிசு ஜீப் அந்த வைத்தியநிலையத்துக்கு வந்தது. பரிசோதகர் நிஸ்ஸங்கவும் வேறுபல பொலிசு உத்தியோகத்தர்களும் ஜீப்புக்குள் இருந்தனர். ஜீப்பில் வந்து ஏறுமாறு நிஸ்ஸங்கா, அத்தநாயக்காவை அழைத்தார். அந்த ஜீப்வண்டி " தலுகம பாமஷி " என்று அழைக்கப்பட்ட ஒரு கடைக்கு அருகில் நிறுத்தப்பட்டது. பரிசோதகர் நிஸ்ஸங்க, அத்தநாயக்காவிடம் 200/- ரூபாவைக் கொடுத்து மருந்துக்கடைக்குச் சென்று தேவையான மருந்துகளை வாங்கி வருமாறு அவரிடம் கேட்டுக் கொண்டார். அதன்பிரகாரம் அத்தநாயக்கா, மருந்துக்கடைக்குச் சென்று சில மருந்துகளை வாங்கினார். அதன்பின்னர் அவர்கள் அந்த ஜீப்பில் பயணம் செய்து கடைசியாக பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தின் பிரதான வாயிலுக்கு வந்து சேர்ந்தனர். தான் களனிப் பிரதேசத்தில் 1973 முதல் வாழ்ந்து வந்திருப்பதாகவும், அதனால் இப்பிரதேசம் முழுவதும் தனக்கு நன்கு பரிச்சயமானது என்றும் அத்தநாயக்கா விளக்கினார். மேலும், அவருடைய பல நண்பர்கள் பட்டலந்த கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். அதன்காரணமாக, பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தின் நுழைவாயிலை அவர் முன்னர் பார்த்துள்ளார். பொலிசு ஜீப் காவலரணை அணுகுவதனைக் கண்ட இராணுவக் காவல்வீரர் தடுப்பை மேலே உயர்த்தி வீடமைப்புத் திட்டத்துக்குள் ஜீப் நுழைவதற்கு இடமளித்தார். ஜீப் வீடமைப்புத் திட்டத்துக்குள் சென்று குறிப்பிட்ட ஒரு வீட்டுக்கு அருகில் போய் நின்றது. பொலிசுக் கோஷ்டி அந்த வீட்டுக்குள் பிரவேசித்தது. நிஸ்ஸங்க வீட்டுக்குள் வருமாறு அத்தநாயக்காவை அழைத்தார். வீட்டுக்குள் நுழைந்தபோது ஆயுதம்தாங்கிய பல நபர்கள் அந்த வீட்டுக்குக் காவல் நிற்பதை அவர் அவதானித்தார். வீட்டுக்குள் பிரவேசித்த பின்னர் நிஸ்ஸங்க அவரை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றார். அந்த அறைக்குள் ஒரு பெரிய இரும்புக் கட்டில் இருந்தது. அந்தக் கட்டிலின் பக்கக் கம்பின்மீது ஆறு அல்லது எட்டு நபர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தனர். அநேகமாக அவர்கள் அனைவருமே மிக மோசமாகக் காயம் அடைந்திருந்தனர். அவர்களுக்கு மத்தியில், முன்னைய சந்தர்ப்பத்தில் களனிப் பொலிசு நிலையத்தில் அத்தநாயக்கா சிகிச்சையளித்த, காயமடைந்த நபரும் இருந்தார். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளிக்குமாறு அத்தநாயக்காவிடம் நிஸ்ஸங்கா கேட்டுக்கொண்டார். அத்தநாயக்கா அவர்கள் ஒவ்வொருவரிடமும் தங்கள் பிரச்சினைகள் என்ன எனக் கேட்டார். தீயினால் பொசுக்கியதனையடுத்து தனது வாயில் வலி இருந்துவருகின்றது என ஒரு நபர் கூறினார். தனக்கு முதுகு வலிக்கின்றது என ஒருவர் கூறினார். அவர்கள் அனைவரும் கடுமையான வலியில் இருந்து வருவதனை அத்தநாயக்கா அவதானித்தார். களனிப் பொலிசு நிலையத்தில் தன்னால் சிகிச்சையளிக்கப்பட்ட காயமடைந்த நபரை அத்தநாயக்கா பரிசோதித்துப் பார்த்தார். அவருடைய நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. புண்களில் தொற்றுக்கள் பரவி இருந்தன. சில புண்களில் புழுக்கள் நெளிந்தன. காயமடைந்திருந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக அத்தநாயக்கா விரும்பியபோதிலும் அந்நபர்களிடமிருந்து வெளியேறிய மிக மோசமான துர்வாடை காரணமாக அவரால் அந்த அறையில் தொடர்ந்து இருக்கமுடியவில்லை. அதனால் அவர், அந்த அறையிலிருந்து வெளியே வந்து

கடுமையாகக் காயம் அடைந்திருப்பவர்களை வெளியே எடுக்குமாறு நிஸ்ஸங்காவிடம் கூறினார். அப்பொழுது அங்கிருந்த ஆட்கள் (தன்னால் முன்னர் சிகிச்சையளிக்கப்பட்டிருந்த) நபரை ஒரு பலகையில் வைத்து எடுத்து வந்தனர். அத்தநாயக்கா அந்நபரின் புண்களைக் கழுவித் துப்புரவு செய்தார். தொற்றுகள் பரவியிருந்த புண்களிலிருந்த புழுக்களும் அகற்றப்பட்டன. அதன்பின்னர், அவர் அந்நபரின் காயங்களுக்குச் சிகிச்சை அளித்தார். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளித்த பின்னர் அத்தநாயக்காவைத் தன்னுடன் செல்வதற்கு வருமாறு நிஸ்ஸங்க அழைத்தார். நிஸ்ஸங்க அவரை இன்னொரு வீட்டுக்கு அழைத்துச் சென்றார். கைகளைக் கழுவிக்கொள்வதற்கு அவருக்கு வசதிகள் அளிக்கப்பட்டன. அதன்பின்னர் அவருக்கு ஒரு கோப்பை தேநீர் வழங்கப்பட்டது. தான் இரண்டாவதாக அழைத்துச் செல்லப்பட்ட வீடு (அதுவும் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்குள்ளேயே அமைந்திருந்தது) பரிசோதகர் நிஸ்ஸங்கவின் வாசஸ்தலம் என்ற விடயத்தைச் சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்து அத்தநாயக்கா ஊகித்துக் கொண்டார். (அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம், A2/12 இலக்கம் கொண்ட வீடு ஆகஸ்ட் 02, 1989 தொடக்கம் 1996 வரையில் களனிப் பொலிசு நிலையப் பொறுப்பதிகாரிக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது என்ற விடயத்தை இங்கு கவனத்தில் எடுக்கவேண்டும். குறிப்பாக, 1990 செத்தெம்பர் தொடக்கம் 1996 வரையில் பரிசோதகர் நிஸ்ஸங்க இந்த வீட்டில் வசித்து வந்தார்). அதன்பின்னர் அத்தநாயக்கா மீண்டும் தனது வீட்டில் கொண்டுபோய் சேர்க்கப்பட்டார்.

அப்பொழுது களனிப் பொலிசு நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த பரிசோதகர் நிஸ்ஸங்கவின் வாக்குமூலத்தை ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவு பதிவு செய்தது. காயமடைந்திருந்த நபர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக அத்தநாயக்காவை அழைத்ததனை அவர் மறுத்தார். எனினும், அத்தநாயக்காவைத் தனக்குத் தெரியும் என்பதனையும் களனிப் பொலிசு நிலையத்தின் பொறுப்பதிகாரியாக தான் இருந்துவந்தார் என்பதனையும், சம்பந்தப்பட்ட காலப்பிரிவின்போது பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் இருந்த ஒரு வீட்டில் தான் வசித்து வந்ததையும் அவர் ஏற்றுக்கொண்டார். எவ்வாறிருப்பினும் அத்தநாயக்கா இத்தகைய விதத்திலான ஒரு சாட்சியத்தைக் கூறுவதற்கான குறிப்பான காரணத்தை பரிசோதகர் நிஸ்ஸங்காவினால் முன்வைக்க முடியவில்லை. நிஸ்ஸங்க தனது சார்பில் ஒரு சட்டத்தரணியை வைத்துக்கொள்ளவில்லை. சாட்சி அத்தநாயக்காவை விசாரிக்குமாறு தனது சட்டத்தரணிக்கு அறிவுறுத்தல் வழங்கவுமில்லை. உண்மையிலேயே, ஏனைய பொலிசு உத்தியோகத்தர்களின் சார்பில் ஆஜராகிய வழங்கறிஞரால் அத்தநாயக்கா விசாரணைக்கு உட்படுத்தப்படவும் இல்லை. ஆணைக்குழுவின ஓர் அமர்வின்போது, சத்தியப்பிரமாணம் செய்வித்து பரிசோதகர் நிஸ்ஸங்காவை விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது. எனினும் சாட்சியமளிப்பதற்காக பரிசோதகர் நிஸ்ஸங்காவுக்கு அழைப்பாணை விடுப்பதற்கு முன்னர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு அவர் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

அத்தநாயக்காவினால் வழங்கப்பட்ட சாட்சியம், காயம் அடைந்திருந்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சம்பந்தப்பட்ட வீட்டின் அடையாளத்தைத் திட்டவட்டமாக நிர்ணயித்துக் கொள்வதற்குப் போதியதாக இருக்கவில்லை. எனினும், கிடைக்கும் விடயங்களிலிருந்து இது பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளில் ஒன்றுதான் என்பது தெளிவாகின்றது. மேலும், இது பொலிசு உத்தியோகத்தர்கள் செல்லக்கூடிய ஒரு வீடாகவும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொள்ளக் கூடிய ஒரு வீடாகவும் இருந்து வந்துள்ளது என்பது தெளிவாகும். B8, B34 மற்றும் B32 இலக்கங்களைக்கொண்ட வீடுகளில் ஆட்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதனை ஏர்ல் சுஜீ பெரேரா, வாசல ஜயசேகரா மற்றும் தலரத்னா முதலிகே பந்துல ஆகியோரின் சாட்சியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அத்தநாயக்காவினால் விபரிக்கப்பட்ட வீடு B34 இலக்க வீடாக இருக்க முடியாது. ஏனெனில் இந்த வீடமைப்புத் திட்டத்துக்குள் பிரவேசிக்கும்பொழுது அந்த வீடு

பாதையின் இடதுபுறத்தில் அமைந்துள்ளது. வீடமைப்புத் திட்டத்துக்குள் பிரவேசித்த பின்னர் பொலிசு ஜீப் நேரே முன்னோக்கிச் சென்றதாக அத்தநாயக்கா குறிப்பிட்டார். எனவே, சம்பந்தப்பட்ட வீடு ஒன்றில் B34 ஆகவோ அல்லது B2 ஆகவோ இருக்கவேண்டும். அல்லது பொலிசாரின் கட்டுப்பாட்டில் இருந்த வேறொரு வீடாக இருக்கவேண்டும்.

ஏனைய வீடுகளிலும் கூட உண்மையிலேயே ஆட்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்கள் என்பதனைக் காட்டும் சாட்சியங்களையும் ஏனைய விடயங்களையும் கவனத்தில் எடுப்பதற்கு இப்பொழுது நாங்கள் முயற்சிக்கின்றோம்.

**அஜித் ஜயசிங்கா........**

பொலிசு உத்தியோகத்தரான உதவிப் பொலிசு பரிசோதகர் அஜித் ஜயசிங்கா, 1989 ஆகஸ்டில் ஜா-எல பொலிசு நிலையத்தில் பணிபுரிந்து வந்தார். (இந்த உத்தியோகத்தர் குறித்த விவரங்கள் இந்த அறிக்கையின் அத்தியாயம் VIII இல் குறிப்பிடப்பட்டுள்ளன). உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ் தலைமையிலான பொலிசு உத்தியோகத்தர்களினால் இந்தப் பொலிசு உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு சம்பவம் தொடர்பாக இந்த ஆணைக்குழு விசாரிக்க வேண்டியிருந்தது. சம்பந்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பான விவரங்கள் இந்த அறிக்கையின் VIII ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1989 ஆகஸ்ட் அளவில் ஜயந்த என்ற பெயரிலான ஒரு நபர் ஜா-எல பொலிசு நிலையத்துக்கு வந்து தன்னை ஒருவர் சுட்டுக்கொல்ல முயன்றார் என முறைப்பாடு செய்ததாக அஜித் ஜயசிங்கா தனது சாட்சியத்தில் கூறினார். ஜயந்த, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகவும் அப்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர் ஒருவராகவும் இருந்துவந்த திரு.ஜோசெப் மைக்கல் பெரேராவின் நெருங்கிய நண்பராக இருந்தார். தன்னைத் தாக்கிய நபர் இப்பிரதேசத்தில் இருக்கின்றார் என்றும், அவர் தன்னுடன் வந்தால் சந்தேக நபர் எங்கிருக்கின்றார் என்பதனைக் காட்ட முடியும் என்றும் ஜயந்த, அஜித் ஜயசிங்காவிடம் தெரிவித்தார். அந்நேரத்தில் அஜித் ஜயசிங்கா நிலையத்தின் கடமை அதிகாரியாக இருந்தார். எனவே, அவர் பொலிசு உத்தியோகத்தர் குழுவொன்றுடன் சேர்ந்து சந்தேகநபரைத் தேடி முறைப்பாடு செய்தவருடன் நேரடியாக உடனடியாக வெளியே கிளம்பிச் சென்றார். அவர்கள் ஏக்கலைக்குச் சென்றதுடன் அங்கு காமினி ஹெட்டிஆரச்சி என்ற சந்தேகநபரைக் கைது செய்தார்கள். இந்தப் பொலிசு உத்தியோகத்தர்கள் குழு சந்தேகநபருடன் பொலிசு நிலையத்துக்குத் திரும்பி வந்ததுடன் பொலிசு நிலையத்தில் சந்தேகநபரை ஒப்படைத்தார்கள். நிலையக் கட்டளைகளின் பிரகாரம் இந்தச் சந்தேகநபரின் கைது குறித்து, அப்பொழுது பாலியகொடை பொலிசு நிலையத்தில் செயற்பட்டு வந்த நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவுக்கு அறிக்கையிட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான புலனாய்வுகள் குறிப்பிடப்பட்ட அந்த நாசகார நடவடிக்கைத் தடுப்புப் பிரிவினால் நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டு இருந்தது. ஏனெனில், சம்பந்தப்பட்ட இந்தச் சம்பவம் நாசகார நடவடிக்கை இயல்பைக் கொண்டது என்றும், சந்தேகநபர் காமினி ஹெட்டிஆரச்சி ஒரு கிளர்ச்சிக்காரர் என்றும் சந்தேகிக்கப்பட்டு இருந்தது.

சந்தேகநபரை விடுவிக்குமாறு உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ் அதே தினத்தன்று ஜா-எல பொலிசு நிலையத்துக்கு அறிவுறுத்தல் அனுப்பிவைத்தார். அதுவரையில் இந்தச் சம்பவம் தொடர்பாக புலனாய்வு விசாரணைகள் எவையேனும் நடத்தப்பட்டு இருக்கவில்லை. எனினும், நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான உ.பொ. இடமிருந்து அறிவுறுத்தல்கள் வந்திருப்பதனால் அன்று மாலையே காமினி ஹெட்டிஆரச்சி பொலிசுத் தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார். சந்தேக நபர் விடுவிக்கப்பட்டமை பதிவு செய்யப்பட்டு இருந்தது. அவருடைய தந்தை பொலிசு நிலையத்துக்கு வந்து சந்தேக நபருக்கு(காமினிக்கு) "பொலிசுப் பிணை" கொடுக்க வேண்டியிருந்தது. காமினி ஹெட்டிஆரச்சி

விடுவிக்கப்படுவதற்குச் சிறிதுநேரத்துக்கு முன்னர் களனி நாசகார நடவடிக்கைத் தடுப்புப் பிரிவின் இரு பொலிசு உத்தியோகத்தர்களும் (பொ.கா.சாரதி ரஞ்சித் மற்றும் பொ.கா. லக்ஸ்மன் ஆகியோரும் ஒரு பொலிசு உத்தியோத்தராக இல்லாவிட்டாலும் கூட) நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவுக்காகப் பணிபுரிந்து வந்த ராசேந்திரா என்ற நபரும் ஜா-எல பொலிசு நிலையத்துக்கு வந்தார்கள். இந்த நபர்கள் பொலிசு நிலையத்தின் உள்ளேயிருந்தபோது பொலிசு நிலையத்துக்கு வெளியே ஒரு வெள்ளை நிற வான் நிறுத்தப்பட்டு இருப்பதையும் உப பரிசோதகர் தெல்கஹகொட அதற்குள் அமர்ந்திருப்பதனையும் அஜித் ஜயசிங்கா கண்டார். இந்த வான் களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவினால் அதன் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு வான் என ஜயசிங்கா கூறினார். நிலையத்துக்குள் வந்த பொலிசு உத்தியோகத்தர்கள் சந்தேகநபர் (காமினி) ஜா-எல பொலிசு நிலையத்திலிருந்து முறையாக விடுவிக்கப்பட்ட பின்னர் தாம் அவரைப் பின்தொடரப் போவதாகத் தெரிவித்தனர். பொலிசு நிலையத்தில் தடுப்புக்காவல் அறையில் இருந்த சந்தேகநபரை அவர்கள் கண்டார்கள். அதன்பின்னர் அவர்கள் பொலிசு நிலையத்தைவிட்டு வெளியேறினார்கள்.

காமினி ஹெட்டிஆரச்சி விடுவிக்கப்பட்ட உடனேயே அவருடைய தந்தை நிலையத்துக்கு வந்து, (பொலிசு நிலையத்தைவிட்டு வெளியேறி) அவர்கள் பாதையில் சென்று கொண்டிருந்தபொழுது தன்னுடைய மகன் கடத்தப்பட்டு மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டார் என முறைப்பாடு ,செய்தார். சந்தேகநபர் காமினி, ஜா-எல பொலிசு நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டவுடனேயே நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளார் என சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்து ஜயசிங்கா முடிவு செய்தார்.

சில நாட்களின் பின்னர், ஜயசிங்கா (களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு அதிகாரியான), பரிசோதகர் விக்கிரமசிங்காவைச் சந்தித்து நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளினால் எடுத்துச் செல்லப்பட்ட சந்தேக நபருக்கு (இது சந்தேகநபர் காமினி ஹெட்டிஆரச்சியைக் குறிப்பதாக இருந்தது) என்ன நடந்தது என விசாரித்தார். ஜயசிங்கா தன்னுடன் மற்றொரு இடத்துக்குச் செல்லவேண்டும் என பரிசோதகர் விக்கிரமசிங்கா கேட்டுக்கொண்டார். இவ்விருவரும் முன்னர் குறிப்பிடப்பட்ட வானில் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்குச் சென்றார்கள். அந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள ஒரு வீட்டுக்கு பரிசோதகர் விக்கிரமசிங்கா, ஜயசிங்காவை அழைத்துச் சென்றார்(பரிசோதகர் விக்கிரமசிங்கா அஜித் ஜயசிங்காவை அழைத்துச் சென்ற). அந்த வீடு பின்னர் ஜயசிங்காவினால் இல. A1/8 உடைய வீடென அடையாளம் காணப்பட்டது. பரிசோதனைக்காக ஆணைக்குழு பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்குச் சென்றபொழுது இந்த அடையாளம் காணல் இடம்பெற்றது. அஜித் ஜயசிங்கா வீட்டுக்குள் பிரவேசித்தபொழுது மூன்று நபர்கள் அங்கு தமது கால்களால் தொங்கவிட்டிருப்பதைப் பார்த்தார். காமினி ஹெட்டிஆரச்சியும் அவர்களில் ஒருவர். இவர் ஒரு முக்கியமான சந்தேக நபர் என்றும், இந்த நபரினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில்தான் (விக்கிரமசிங்கா ஒரு துப்பாக்கியையும் குண்டையும் மீட்டிருப்பதாகவும் விக்கிரமசிங்கா) கூறினார். இக்காரணங்களினால் சந்தேகநபர் உண்மையிலேயே ஒரு ஜே.வி.பி. காரர்தான் என ஜயசிங்கா அனுமானித்துக் கொண்டார். அதன்பின்னர் அவர் அவ்வீட்டைவிட்டு வெளியேறினார். சில நாட்களின் பின்னர் ஜயசிங்கா மீண்டும் விக்கிரமசிங்காவைச் சந்தித்தார். அந்தச் சந்தேக நபருக்கு என்ன நடந்தது என ஜயசிங்கா விசாரித்தார். அவரது கதை முடிந்துவிட்டது(வெடே துன்னா) என விக்கிரமசிங்கா பதிலளித்தார்.

**திஸ்ஸ பலிபான........**

திஸ்ஸ பலிபான 1989 சனவரி 31 ஆந் திகதியளவில் களனி, பொல்லேகல, மானெல்வத்த விகாரையில் ஒரு பௌத்த குருவாக இருந்துவந்தார். அந்த விகாரையின் பிரதம குருவான கன்குலமே தர்மகீர்த்தி என்பவர் இவருக்கு மாமா முறை உறவைக் கொண்டவராக இருந்தார். 1989 சனவரி 31 ஆந் திகதியன்று திஸ்ஸ பலிபான விகாரைக்கு அருகில் இருந்தபொழுது சாதாரண உடையில் இருந்த ஆயுதம்தாங்கிய பல நபர்கள் ஒரு வானில் அவருக்கு அருகில் வந்து அவரைக் கடத்திச் சென்றனர். அவர் அந்த இடத்திலிருந்து சுமார் நான்கு மைல்கள் தூரத்திலுள்ள பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவர் ஏற்கனவே பட்டலந்த கிராமத்திலுள்ள வீடுகளுக்குச் சென்றிருப்பதனால் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதனை அவரால் அடையாளம் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. அந்த வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடொன்றில் சில நாட்கள் அவர் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார். இக்காலத்தின்போது, ஜே.வி.பி. நடவடிக்கைகளிலான அவருடைய சம்பந்தம் குறித்து அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணைக்குட் படுத்தப்பட்டபொழுது அவர் தாக்கப்பட்டார். அந்த வீட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபொழுது அவருடைய காவி உடைகள் களையப்பட்டு, அவர் நிர்வாணமாக வைக்கப்பட்டிருந்தார். தனக்கு, உதை கிடைத்ததாகவும், தீயினால் பொசுக்கப்பட்டதாகவும் அவர் எடுத்துக் கூறினார்.

தன்னைத் தாக்கியவர்களில் ஒருவர் ஒரு பெண்மணியாக இருந்தார் எனத் திஸ்ஸ பலிபான கூறினார். தாக்குதல் நடத்திய ஏனையவர்கள் அப்பெண்மணியை "மெடம்"என அழைத்தனர். களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தபோது, அந்தத் தினத்தன்று பலிபான ஆணைக்குழுவின்முன் வைத்து இந்தப் பெண் அதிகாரியை அடையாளம் காட்டினார். அடையாளம் காணப்பட்ட அந்தப் பொலிசு உத்தியோகத்தர் பெண் உப பொலிசுப் பரிசோதகர் பிரேமலதா ஆவார். தான் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக பலிபான உறுதியாக நம்பியபோதிலும், தன்னைத் தடுத்து வைத்திருந்த வீட்டை அவரால் சரியாக அடையாளம் காண முடியாதிருந்தது.

இதேவேளையில் அந்த விகாரையின் பிரதம குரு "பலிபானவுக்கு என்ன நடந்தது" என்பது குறித்து விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர், அவரை(பலிபானவை) பொலிசார் கைது செய்துள்ளார்கள் என்பது அவருக்குத் தெரியவந்தது. பிரதம குரு இதனை சிரேட்ட அரசாங்க அரிசயல்வாதியொருவரிடம் தெரிவித்தார். அதன்பின்னர் வெகுவிரைவில் தடுப்புக் காவலிலிருந்து பலிபான விடுவிக்கப்பட்டார்.

கடும் வெறுப்பிலும் விரக்தியிலும் இருந்த பலிபான, குருத்துவத்தை விட்டுச்செல்ல முடிவு செய்தார். அதன்பின்னர் வெகுவிரைவில் அவர் விகாரையை விட்டுச் சென்றதுடன் குருத்துவத்தையும் துறந்தார் .

**பாதிக்கப்பட்ட ஏனையோர்........**

களனி பொலிசுப் பிரிவுக்குள் வசித்து வந்த ஏனைய பல நபர்களின் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட சாட்சியங்களும் ஏனைய விடயங்களும் ஆணைக்குழுவினால் கவனத்தில் எடுக்கப்பட்டன. இத்தகைய பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிப்புக்கு உள்ளானவர்கள் இந்த ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட காலப்பிரிவின்போது (1988 சனவரி 01 முதல் 1990 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையில்) களனிப் பொலிசுப் பிரிவின் நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளினால் கடத்தப்பட்டவர்களாக இருந்து வந்தனர் இவ்விதம் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கடத்தலின் பின்னர் காணாமல்

போனதுடன் ஒருசிலா் உயிருடன் இருந்தார்கள். உயிருடன் இருந்தவா்களில் சிலரை அணுகக்கூடியதாக இருந்ததுடன் சாட்சியம் அளிப்பதற்கு அவர்கள் தாமாகவே முன்வந்தனா். ஒருசில சந்தா்ப்பங்களில் தமது கடத்தல்களுக்கு பொறுப்பாக இருந்தவா்களை பாதிக்கப்பட்டவா்களால் சரியாக அடையாளம் காண முடிந்தது. பல சந்தா்ப்பங்களில் உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ்சின் பெயா் முக்கியமாக அடிபட்டது. பாதிக்கப்பட்டவா்களில் பெரும்பாலானோா் கடத்தப்பட்டு, தமக்குத் தெரியாத இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன், அத்தகைய இடங்களில் தவறான முறையில் அடைத்து வைக்கப்பட்டு இருந்தனா். இக்காலப் பிரிவின்போது பாதிப்புக்கு உள்ளானவா்கள் மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனா். அவா்களுடைய கடத்தல்கள், தடுத்து வைத்திருத்தல் மற்றும் சித்திரவதை ஆகியவை இடம்பெற்ற பாங்கு முன்னா் விவரித்த சம்பவங்களை ஒத்ததாகவே இருந்து வந்தது. எவ்வாறிருப்பினும் இந்நபா்கள் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட வீடுகளின் அடையாளம் குறித்து சரியான முடிவொன்றை எடுப்பதற்கு எமக்குப் போதிய சாட்சியங்கள் கிடைக்கவில்லை. எனவே, இந்தச் சாட்சியங்கள் இங்கு விரிவாக எடுத்து விளக்கப்படவில்லை.

**இதற்குப் பொறுப்பானவா்கள் யாா்?.......**

எத்தகைய சந்தா்ப்ப சூழ்நிலைகளின் கீழ் பொலிசு உத்தியோகத்தா்கள் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் வசிப்பதற்காக வந்தார்கள் என்பதனை நாங்கள் மேலே குறிப்பிட்டிருந்தோம். இந்த விபரிப்பின்போது பொலிசு உத்தியோகத்தா்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு செல்வதற்கும், அவற்றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் அவா்களுக்கிருந்த வாய்ப்பும் கலந்துரையாடப்பட்டது. களனிப் பொலிசுப் பிரிவைச் சோ்ந்த நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தா்களுக்குச் சம்பந்தப்பட்ட வீடுகளில் வசிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு இருந்தது என்பதனையும், இந்த வீடுகளைப் பெற்றுக்கொள்வது தொடா்பான நடைமுறை அதுவரை பொலிசுத் திணைக்களத்துக்குத் தெரியாமல் இருந்தது என்பதனையும் ஆணைக்குழுவின்முன் வைக்கப்பட்ட சாட்சியங்கள் நேரடியாகச் சுட்டிக்காட்டுகின்றன. மேலும், சம்பந்தப்பட்ட பொலிசு அதிகாரிகளுக்கு வீடுகளை ஒதுக்குவதிலும், விடுவிப்பதிலும் பொருத்தமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லையென்பதும் தெரிய வந்துள்ளது. அப்பொழுது கமத்தொழில் மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சராக இருந்த திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பணிப்புரையின்பேரில், அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநரால் சம்பந்தப்பட்ட பொலிசு உத்தியோகத்தா்களுக்கு இந்த வீடுகள் விடுவிக்கப்பட்டன என்பது தெளிவாகத் தெரிகின்றது. எவ்வாறிருப்பினும், முன்னா் குறிப்பிடப்பட்டதுபோல, திரு.ரணில் விக்கிரமசிங்கா அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பான அமைச்சராக நியமனம் செய்யப்படுவதற்கு முன்னரேயே இந்த வீடுகளைப் பொலிசு உத்தியோகத்தா்களுக்கு விடுவிப்பது தொடா்பாக அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு ஆரம்பித்திருந்தாா். மேலும், பொலிசு உத்தியோகத்தா்களின் உபயோகத்துக்கென தேவையான எண்ணிக்கையிலும் பாா்க்க அதிகளவு வீடுகள் விடுவிக்கப்பட்டன என்பதனையும் அதனால் சில சந்தா்ப்பங்களில் வீடுகள் ஒதுக்கப்பட்டு இருந்த பொலிசு உத்தியோகத்தா்கள் உண்மையில் சம்பந்தப்பட்ட வீடுகளில் வசித்து வரவில்லை என்பதனையும் ஆணைக்குழுவின்முன் வைக்கப்பட்ட சாட்சியங்கள் எடுத்துக்காட்டின. அத்துடன், சம்பந்தப்பட்ட வீடுகள் தொடா்பாக எவ்வித கண்காணிப்பும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த வீடுகள் எத்தகைய சட்டவிரோதமான நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வரவில்லை என்பதனையும் எவரும் உத்தரவாதப் படுத்தியிருக்கவும் இல்லை. அதுமட்டுமன்றி சில சந்தா்ப்பங்களில் தமக்கு விடுவிக்கப்படாத வீடுகளுக்குள்கூட பொலிசு உத்தியோகத்தா்கள் செல்லக்கூடியதாக இருந்தது என்பதும் தெரியவந்துள்ளது. எனவே, அவா்கள் குறிப்பிட்ட சில வீடுகளுக்குள் முழுவதும் அதிகாரம் அளிக்கப்படாத நிலையில் பிரவேசித்துள்ளாா்கள். இந்தச் சூழ்நிலையின் கீழேயே பிரதானமாக களனி நாசகார

நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிசு உத்தியோகத்தர்கள் பட்டலந்த வீடுகளில் வசித்து வந்தனர்.

ஆட்கள் கடத்திச் செல்லப்பட்டு அதன்பின்னர் இந்த வீடுகள் சிலவற்றில் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு இருந்தமை நிரூபணமாகியுள்ள குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களை, மேலே நாங்கள் சுருக்கமாக எடுத்துக் கூறியிருந்தோம். நிரூபணமாகியுள்ள பெரும்பாலான சம்பவங்களில், சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தின்போது சம்பந்தப்பட்ட நபர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். சட்டவிரோதமான தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைக்கூடங்களைக் கொண்ட இடங்களைப் பராமரிப்பதற்கென சம்பந்தப்பட்ட வீடுகள் பயன்படுத்தப்பட்டு வந்தன என்பதனைக் காட்டும் அனைத்துச் சாட்சியங்களும் இந்த அறிக்கையில் எடுத்துக் கூறப்படவில்லை என்பதனை இங்கு கவனத்துக்கு எடுப்பது அவசியமாகும். சம்பந்தப்பட்ட சாட்சியங்கள் ஆணைக்குழுவின் விசாரணை விவரத்தொகுப்பில் உள்ளன. அந்த விசாரணை விவரத் தொகுப்புகள் இந்த அறிக்கையின் உள்ளார்ந்த பாகங்களாக இருந்து வருகின்றன.

சம்பந்தப்பட்ட கடத்தல்கள், தவறானமுறையில் தடுத்து வைத்தல்கள் மற்றும் ஆட்களைச் சித்திரவதை செய்தமை என்பன தொடர்பாக சாட்சிகளினால் குற்றம்சாட்டப்பட்டவர்களின் நிலைப்பாடுகளைக் கண்டறிந்துகொள்ளும்பொருட்டு, சம்பந்தப்பட்ட பொலிசு உத்தியோகத்தர்கள் ஆணைக்குழுவினால் சாட்சியங்களாக அழைக்கப்பட்டனர். இது தொடர்பாக அடிக்கடி பெயர் அடிபட்டுவந்த பொலிசு உத்தியோகத்தரான திரு.டக்ளஸ் பீரிஸை, ஆணைக்குழுவுக்கு அழைத்துவர முடியவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. அவரை ஆணைக்குழுவின் முன்னால் அழைப்பதற்கு அவசியமான நேரம் வந்தபொழுது அவர் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாகத் தப்பிச் சென்றிருந்தார். எனினும், சம்பந்தப்பட்ட காலப்பிரிவின்போது, களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவுடன் சம்பந்தப்பட்டிருந்த ஏனைய பொலிசு உத்தியோகத்தர்கள் அனைவரும் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டனர். எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையிலும் தாம் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பதனை அவர்கள் அனைவருமே மறுத்தனர். அத்தகைய மறுப்பு எதிர்பார்க்கப்பட்டதே. களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் எவராலும், மேலே குறிப்பிடப்பட்ட சாட்சியங்கள், அனைவரும் மற்றும் சட்டவிரோதமாகத் தடுத்துவைத்திருத்தல் மற்றும் சித்திரவதை செய்தல் என்பவற்றுக்காக இடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தன என்பன தொடர்பாக சாட்சியமளித்த ஏனையவர்கள் அனைவரும் பொய்ச்சாட்சி சொல்ல வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதற்கான காரணங்கள் எதனையும் கூற முடியவில்லை. எனினும், இவர்கள் அனைவரும் அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் வசித்ததாகக் கருதப்படுகின்றது. தாம் அங்கு வசித்ததை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். சம்பந்தப்பட்ட வீடுகளில் வசிக்குமாறு, உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ் அல்லது அப்பொழுது நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் பிரதம பரிசோதனைகாரராக இருந்துவந்த ரஞ்சித் விக்கிரமசிங்காவினால் தாம் பணிக்கப்பட்டிருந்தனர் என்பதே அவர்களுடைய நிலைப்பாடாக இருந்தன. அவர்களுக்கு இந்த வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதில் உ.பொ.அ.பீரிஸ் முன்னின்று உழைத்தார் என்பதனை அவர்கள் அனைவரும் அறிந்திருந்தனர். உ.பொ.அ. பீரிஸ், ஒரு வீட்டை கையகப்படுத்துமாறு பிரதம பரிசோதகர் விக்கிரமசிங்காவுக்குச் சென்று கட்டளையிட்டிருந்தார். சட்ட விரோதமான தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைக்கூடங்களாக உபயோகிப்பதற்கு இடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தன என்ற விடயம் தொடர்பான ஆணைக்குழுவின் முடிவுகள் அத்தியாயம் IX இல் எடுத்து விளக்கப்படும்.

**சட்டவிரோத செயற்பாடுகளில் கரிசனை கொண்டிருந்த ஏனையவர்கள் .........**

சட்டவிரோதமான தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைக்கூடங்களாக, இடங்களை ஸ்தாபித்து பராமரித்து வருவது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் கரிசனை கொண்டவர்களும் அதற்குக் பொறுப்பானவர்களும் பலவகைகளைச் சேர்ந்த ஆட்களாக இருந்துவர முடியும். மேற்குறிப்பிடப்பட்ட இடங்களின் ஸ்தாபிதத்துக்கு நேரடியாகப் பொறுப்பாக இருந்தவர்கள் முதல் வகையினராவார். இரண்டாவது வகையினர் சம்பந்தப்பட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளை அறிந்திருந்தவர்கள் ஆவர். இதனை அறிந்திருந்தவர்களைப் பொறுத்தவரையில் இரு பிரிவுகள் இருந்தன. முதல்பிரிவைச் சேர்ந்தவர்கள் இதனை அறிந்திருந்தும் தமக்கு அதிகாரம் எதுவும் இல்லாதிருந்தபடியால் இது குறித்துப் பரிகார நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள முடியாதநிலையில் இருந்து வந்தவர்கள் ஆவர். இந்த உப குழுவில், துன்புறுத்தப்பட்டு உயிர்தப்பியவர்களையும் கூட உள்ளடக்கலாம். இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் நேரடி அதிகாரத்தில் இருந்தவர்கள் ஆவர். இவர்கள் சம்பந்தப்பட்ட சட்டவிரோத நடவடிக்கையை தாம் அறிந்துகொண்ட பின்னரும்கூட அதனை சகித்துக்கொண்டு இருந்ததுடன், சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுவதற்கு அனுமதியளித்தார்கள். இந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் சட்டவிரோதமான தடுத்துவைத்திருத்தல் மற்றும் சித்திரவதைக்கூடங்களாகப் பயன்படுத்துதல் என்பவற்றுக்காக இடங்களைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்தமைக்காக இவர்கள் மறைமுகமாகப் பொறுப்பாக இருந்து வந்துள்ளனர்.

இதனுடன் சம்பந்தப்பட்டவர்களின் குற்றச்செயல் தொடர்பாகவும் அவர்களுடைய குற்றச்செயல்களின் அளவுகள் தொடர்பாகவும் உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ், பிரதம பரிசோதகர் ரஞ்சித் விக்கிரமசிங்கா மற்றும் களனி நா. த. பிரிவைச் சேர்ந்த ஏனைய கீழ்நிலை உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இதற்கு உடந்தையாக இருந்து வந்துள்ளார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சட்டவிரேதமாகத் தடுத்து வைத்திருத்தல் மற்றும் சித்திரவதைக்கூடங்களாகப் பயன்படுத்துதல் என்பவற்றுக்கென இடங்களை ஸ்தாபிப்பதிலும் பராமரிப்பதிலும் அவர்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்டு இருந்தனர். தொடரான பல சாட்சிகளிலிருந்து இது சம்பந்தமான நேரடியான சான்று கிடைக்கின்றது. இந்தச் சாட்சிகளில் சிலர் மேலே குறிப்பிடப்பட்ட சட்டவிரோத நடவடிக்கையினால் துன்புற்றவர்களாக இருந்து வந்துள்ளனர். எனினும், ஏனைய சிரேட்ட பொலிசு அதிகாரிகள் மற்றும் திரு.ரணில் விக்கிரமசிங்கா ஆகியோர் தொடர்பான நிலை ஓரளவுக்கு வேறுபட்டதாக இருந்து வருவதுடன், அதனை மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்யவேண்டி உள்ளது.

இது தொடர்பாகச் செய்ய வேண்டியது என்னவென்றால் மேலே குறிப்பிடப்பட்ட சட்டவிரோத நடவடிக்கையில் இந்த நபர்கள் எந்த அளவில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதனைப் பரிசீலனை செய்வதாகும்.

**வின்சன்ட் பெர்ணாந்து........**

இந்த விடயம் தொடர்பாகச் சாட்சி ரெஜினோல்ட் சில்வெஸ்ரர் வின்சன்ட் பெர்ணாந்து அளித்த சாட்சியத்தை சுருக்கமாக எடுத்துக் கூறாவிட்டால் நாங்கள் இங்கு எமது கடமையில் தவறியவர்கள் ஆகிவிடுவோம். இந்தச் சாட்சியின் சாட்சியம் பொதுமக்கள் அனுமதிக்கப்படாத நிலையில் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்டது. ஆணைக்குழுவுக்கு உதவிசெய்யும் வழக்கறிஞர், ஆணைக்குழுவுக்கு உதவி செய்யும் அதிகாரிகள் மற்றும் சாட்சி ரஞ்சித் விக்கிரமசிங்காவை பிரதிநிதித்துவம் செய்யும் வழக்கறிஞர் ஆகியோர் அப்பொழுது சமூகம் அளித்திருந்திருந்தனர். இந்த ஆணைக்குழுவில் இணைக்கப்பட்டிருந்த பொலிசுப் புலனாய்வு அதிகாரிகளுக்கு இந்தச் சாட்சி வழங்கும் வாக்குமூலத்தின் முக்கியத்துவத்தைக் கவனத்திற்கொண்டு இச்சாட்சியின் சாட்சியத்தை இரகசியமாகப் பெற்றுக்கொள்வதற்கு முடிவு

செய்யப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட வாக்குமூலத்தில் அடங்கியுள்ள விடயங்களிலிருந்து, இந்தச் சாட்சியத்தின் சாட்சி தற்போதைய பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துவரும் திரு.ரணில் விக்கிரமசிங்காவின் சட்டரீதியான உரிமைகளையும் அரசியல் நிலையையும் பாதிக்குமென்பது தெளிவாகும். இந்த வாக்குமூலம் உடனடி விளைவுகளை எடுத்துவரக் கூடிய சில விடயங்களையும் உள்ளடக்கியிருந்தது. மேலும் இந்த வாக்குமூலத்தில் உள்ள விடயங்களை ஆணைக்குழு அறிந்திருந்தபோதிலும் சாட்சி இதே விடயங்களை ஆணைக்குழுவிடம் கூறுவாரா என்பதும், அல்லது இந்த வாக்குமூலத்தில் கூறப்பட்டவை தவிர ஏனைய விடயங்கள் தொடர்பாக அவர் மேலதிகமாக ஏதேனும் கூறுவாரா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. இக்காரணங்களுக்கு மேலதிகமாக, இந்தச் சாட்சியத்துக்குப் பரவலான பிரசித்தம் வழங்குவதற்கு முன்னர், சாட்சி தனது வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளவை தொடர்பாக மேலதிகப் புலனாய்வுகளை மேற்கொள்வது அவசியமாகும் என ஆணைக்குழு கருதியது. அதன்பிரகாரம் இந்தச் சாட்சியின் சாட்சியத்தை இரகசியமாக எடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. இம்முடிவு முக்கியமாக திரு.ரணில் விக்கிரமசிங்காவின் நலன்களைக் கவனத்தில்கொண்டு மேற்கொள்ளப்பட்டது. எனினும், இந்தச் சாட்சியின் சாட்சியத்தின் ஒரு சுருக்கமான விபரத்தைப் பொதுமக்களுக்கு வெளியிடுவது தமது கடமையாகும் என்பதனை இப்பொழுது ஆணைக்குழு உணர்ந்துள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவை ஆணைக்குழுவின் குறிப்பு நியதிகளின் அதிகாரத்துக்குள் வரும் சாட்சியம் மட்டுமேயாகும். இந்தச் சாட்சியத்தினால் பாதிக்கப்பட்டு இருப்பவர்களுக்கு இந்நபரை குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒரு வாய்ப்பினை அளித்தபின்னர் இந்தச் சாட்சியம் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது. திரு.ரணில் விக்கிரமசிங்காவைப் பிரதிநிதித்துவம் செய்த வழக்கறிஞரும் குறிப்பிட்ட சில பொலிசு அதிகாரிகளைப் பிரதிநிதித்துவம் செய்த வழக்கறிஞர்களும் இந்தச் சாட்சியத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. ஆணைக்குழு அதன் அமர்வுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்குச் சற்றுமுன்னர் இந்தச் சாட்சி மரணம் அடைந்தபோதிலும், சாட்சியமளித்த தினத்திலிருந்து ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலம் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யும் நோக்கத்துக்காக மீள அழைக்கப்படக்கூடிய நிலையில் அவர் வாழ்ந்துவந்தார். எவ்வாறாயிருப்பினும் மேலே குறிப்பிடப்பட்ட நோக்கத்துக்காக இச்சாட்சியை அழைக்க வேண்டுமென வழக்கறிஞரால் எத்தகைய விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. குறிப்பாக இந்தச் சாட்சி திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிராக மிக மோசமாகச் சாட்சி அளித்திருந்போதிலும் திரு.ரணில் விக்கிகரமசிங்காவின் வழக்கறிஞர் அவரைக் குறுக்குவிசாரணை செய்யவிரும்பவில்லை ஏன் என்பது ஆணைக்குழுவுக்கு வியப்பாக உள்ளது. திரு.ரணில் விக்கிரமசிங்கா ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் சாட்சி இறந்துள்ளார் என்ற செய்தி ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டு இருந்தது. மரணம் அடையும்பொழுது அவருடைய வயது 31 வருடங்களாகும். அவர் மரணமடைந்த உண்மையான சூழ்நிலைகளை, தேவைப்படும் அதிகாரம் இல்லாதிருப்பதினால் இந்த ஆணைக்குழுவினால் விசாரித்து அறிந்துகொள்ள முடியவில்லை. ஏனைய நம்பகரமான சான்றுகளின் ஆதாரம் இல்லாதிருந்தமையினால் அல்லது சம்பந்தப்பட்ட சாட்சிகளினால் இது ஏற்றுக்கொள்ளப்படாமையினால் முடிவுகளை மேற்கொள்வதில் ஆணைக்குழு இந்தச் சாட்சியின் சாட்சியத்தை கவனத்தில் எடுக்கவில்லை. எனினும், அவரது சாட்சியத்தின் பெரும்பகுதி ஒன்றில் சம்பந்தப்பட்ட சாட்சிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்லது நம்பகமான ஆதாரங்களினால் முழுமையாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். முடிவுகளை மேற்கொள்வதில் ஆணைக்குழு அத்தகைய சாட்சியங்களை உபயோகித்துக் கொண்டுள்ளது.

ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்தபோது வின்சன்ட் பெர்ணாந்து 35 வயதுடையவராக இருந்தார். அவர், திருகோணமலையில் நிலாவெளியில் அமைந்திருந்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விருந்தினர் விடுதியில் மேற்பார்வையாளராக 1980 இல் பணிபுரிந்து வந்தார். வின்சன்ட் இந்த விருந்தினர் விடுதியின் மேற்பார்வையாளராக 1980

முதல் 1982 மார்ச்சு மாதம்வரை பணியாற்றினார். இக்காலப்பிரிவின்போது அப்பொழுது இளைஞர் விவகார, வேலைவாய்ப்பு அமைச்சராக இருந்த திரு.ரணில் விக்கிரமசிங்கா(தேசிய இளைஞர் சேவை மன்றமும் அவருடைய பணிப்பின் கீழேயே இருந்து வந்தது) பல சந்தர்ப்பங்களில் இந்த விருந்தினர் விடுதிக்கு விஜயம் செய்திருந்ததுடன் இரவு அங்கு தங்கியும் உள்ளார். இந்த நிலையில் அவர் திரு.விக்கிரமசிங்காவை நன்கறிந்து கொண்டார். இவ்வாறு விஜயம் செய்தவொரு சந்தர்ப்பத்தில் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்திருக்கும் தனது விருந்தினர் விடுதியின் மேற்பார்வையாளர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு வின்சனிடம் அவர் கேட்டுக் கொண்டார். தனது தேர்தல் தொகுதியான பியகமவில் தனக்கொரு வீடுள்ளது என்றும், அவரை (வின்சனை) அங்கு வருமாறும் திரு.விக்கிரமசிங்கா கேட்டுக்கொண்டார். இந்த யோசனையை வின்சன்ட் ஏற்றுக் கொண்டார். இந்த அழைப்பு விடுக்கப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திலிருந்து புதிய பதவிக்கு நியமனம் செய்யும் முறையான நியமனக் கடிதம் அவருக்குக் கிடைத்தது. 1982 ஏப்பிரல் 01 அந் திகதிமுதல் வின்சன்ட் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள திரு.விக்கிரமசிங்காவின் விருந்தினர் விடுதி மேற்பார்வையாளர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். திரு.விக்கிரமசிங்காவின் விருந்தினர் விடுதி அமைந்திருந்த வீடு இலA.2/2 கொண்ட வீடாகும். முதலில் வின்சன்ட் 1982 ஏப்பிரல் முதல் 1985 வரையில் இந்த வீட்டின் மேற்பார்வையாளராக வேலைசெய்து வந்தார். அக்காலப் பிரிவின் பின்னர் தனது பெற்றோர் சுகயீனமுற்றிருந்ததனாலும் அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்ததனாலும் அவரது சொந்தப் பிரதேசமான நிலாவெளிக்கு அவர் மீண்டும் ஒரு இடமாற்றத்தைப் பெற்றுக்கொண்டார்.

மீண்டும் 1987 சனவரி 01 ஆந் திகதி வின்சன்ட் பட்டலந்த விருந்தினர் விடுதிக்கு நியமனம் செய்யப்பட்டார். இச்சந்தர்ப்பத்தில் அவர் 1994 சனவரி 31 ஆந் திகதிவரையில் பட்டலந்த விருந்தினர் விடுதியில் வேலை செய்தார்.

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது காலப்பிரிவின்போது வின்சன்ட் இல.A2/2 கொண்ட வீட்டின் மேற்பார்வையாளர் பொறுப்பை மட்டுமே வகித்து வந்தார். அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த உத்தியோகபூர்வ பதிவுகளும் இல.A 2/2 கொண்ட வீடு 1983 மார்ச்சு 03 முதல் 1989 ஏப்பிரல் 30 ஆந் திகதிவரையில் திரு.ரணில் விக்கிரமசிங்காவின் விருந்தினர் விடுதியாக இளைஞர் விவகார, வேலைவாய்ப்பு அமைச்சின் பொறுப்பில் விடப்பட்டு இருந்தது என்பதனைக் காட்டுகின்றன. அதன்பின்னர், 1989 ஏப்பிரல் முதல் 1994 ஆகஸ்ட் வரையில் அதே வீடு திரு.ரணில் விக்கிரமசிங்காவின் உத்தியோகபூர்வ இல்லமாக கைத்தொழில் அமைச்சின் பொறுப்பில் விடப்பட்டு இருந்தது. திரு.ரணில் விக்கிரமசிங்கா தனது சாட்சியத்தில் உண்மையிலேயே வின்சன்ட் இந்த வீட்டின்(A/2/2 இலக்க) மேற்பார்வையாளராக இருந்து வந்தார் என்பதனை ஏற்றுக் கொண்டார். வீட்டின் மேற்பார்வையாளர் என்ற முறையில் அவர் இந்த வீட்டைக் கவனித்துக்கொள்ள வேண்டியிருந்ததுடன் திரு.விக்கிரமசிங்காவுக்கான உணவுகளையும் தயாரிக்கவேண்டி இருந்தது. 1988 இற்கும் 1990 இற்கும் இடையிலான காலப்பிரிவின்போது திரு.விக்கிரமசிங்கா இந்த விருந்தினர் விடுதிக்கு அடிக்கடி வந்ததுடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அங்கு இரவு நேரங்களில் தங்கினார். குறிப்பாக வார இறுதி நாட்களில் அவர் இங்கு தங்கியிருந்தார். காலப்போக்கில் வின்சன்ட், திரு.விக்கிரமசிங்காவின் நம்பிக்கைக்குரிய ஓர் ஊழியராக ஆகியிருந்தார் என்பது தெளிவாகும்.

நாசகார நடவடிக்கைகள் இடம்பெற்ற காலப்பிரிவை வின்சன்ட் நினைவுகூர்ந்தார். இக்காலப்பிரிவின்போது பல பொலிசு அதிகாரிகள் திரு.விக்கிரமசிங்காவின் இல்லத்துக்கு வந்து அவரைச் சந்தித்து நாசகார நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் குறித்து கலந்துரையாடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என வின்சன்ட் கூறினார். இங்கு வருகை தந்த பொலிசு அதிகாரிகளில் சி.பொ.அ. நளின் தெல்கொட, உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ்

ஆகியோரும் அடங்கினர். அவர்கள் விருந்தினர் விடுதியில் கூட்டங்களை நடத்தினர். இந்தக் கூட்டங்களின்போது திரு.ரணில் விக்கிரமசிங்கா சமூகம் அளித்திருந்தார். அதில் பங்கேற்றவர்களுக்குத் தேநீர் வழங்கி உபசரிக்கும் பொறுப்பு வின்சன்ட்டுக்கு வழங்கப்பட்டு இருந்தது. அத்தகைய சந்தர்ப்பங்களின்போது சில உரையாடல்களைச் செவிமடுக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. ஜே.வி.பி.யினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பயங்கரவாதம் குறித்து கலந்துரையாடுவதையும் அவர் செவிமடுத்தார். பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளுள் சந்தேகநபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது குறித்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களின்போது நாசகார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர்களைக் குறிப்பிடும்பொழுது திரு.விக்கிரமசிங்கா பொலிசு அதிகாரிகளிடம் "அவர்களை அப்புறப்படுத்தி விடுங்கள்" எனக் கூறியுள்ளதையும் வின்சன்ட் செவிமடுத்துள்ளார். அத்தகைய சந்தர்ப்பங்களில் சந்தேக நபர்கள் ஒழிக்கப்படல் வேண்டுமென திரு.விக்கிரமசிங்கா கேட்டுக்கொண்டுள்ளார் என்பதனைத் தான் புரிந்து கொண்டதாக வின்சன்ட் கூறினார்.

வீடமைப்புத் திட்டத்தில் வசித்து வந்த பெரும்பாலான பொலிசு உத்தியோகத்தர்களையும் விருந்தினர் விடுதியில் காவலுக்கு நின்றிருந்த உத்தியோகத்தர்களையும் வின்சன்ட் அறிந்திருந்தார். அவர்கள் யார் என்பதனையும் அவர் அறிந்திருந்தார். உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ்சின் கீழ் பணிபுரிந்து வந்த பொலிசு உத்தியோகத்தர்களுக்கும், திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு பாதுகாப்பு வழங்கி வந்த பொலிசு உத்தியோகத்தர்களுக்கும் இடையில் இடம்பெற்று வந்த கலந்துரையாடல்களைச் செவிமடுப்பதற்குத் தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததெனவும் வின்சன்ட் குறிப்பிட்டார். சந்தேக நபர்கள் சிலர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதனையும் உள்ளிட்ட சந்தேகநபர்கள் தொடர்பான விபரங்களை அவர் செவிமடுத்துள்ளார். வீடுகளில் தடுப்புக் காவலில் வைக்கப்படுவதற்காக சந்தேகநபர்கள் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்குள் எடுத்து வரப்படுவதைத் தான் பார்த்திருந்ததாக வின்சன்ட் கூறினார். B8, B4, மற்றும் B1 முதலிய வீடுகள் ஆட்கள் அவ்விதம் தடுப்புக்காவலில் வைத்திருந்த வீடுகளில் சிலவாகும். ஒரு சந்தர்ப்பத்தின்போது இல.B8 ஐக் கொண்ட வீட்டின் காவலுக்கு நின்ற, உ.பொ.அ பீரிஸ்சுக்குக் கீழ் பணிபுரிந்து வந்த பொலிசு உத்தியோகத்தர்களுக்கும் ஒரு சந்தேகநபர் தப்பிச் சென்றிருப்பதாகச் சாட்சியிடம் தெரிவித்ததுடன், எவரேனும் சந்தேகத்துக்கு இடமாக இருப்பதை அவர் பார்த்தாரா என்றும் விசாரித்தார்கள்.

வின்சன்ட் பெர்ணாந்து தன்னுடைய சாட்சியத்தில் விருந்தினர் விடுதியைச் சூழ்வுள்ள வீடுகளில் வசித்தவர்கள் பற்றியும் குறிப்பிட்டார். இந்த விடுதியின் ஒரு பக்கத்தில் A2/3 இலக்கம் கொண்ட வீடு இருந்தது. அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ பதிவுகளின் பிரகாரம் இந்த வீடு, திரு.ரணில் விக்கிரமசிங்காவின் அறிவுறுத்தல்களின் கீழ், 1988 நவம்பர் 01 அந் திகதி முதல் 1989 ஒக்தோபர் 25 ஆந் திகதிவரை மனிதவலு ஒன்றுதிரட்டல் அமைச்சின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. அந்த அமைச்சு அப்பொழுது திரு.விக்கிரமசிங்காவின் கீழ், செயல்பட்டு வந்தது. அதன்பின்னர், 1989 ஒக்தோபர் 25 ஆந் திகதி முதல் 1994 ஆகஸ்ட் மாதம் வரையில் அந்த வீடு விருந்தினர் விடுதியின் மேற்பார்வையாளரான வின்சன்ட் பெர்ணாந்துவுக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது. எனினும், வின்சன்ட் பெர்ணாந்துவின் சாட்சியின் பிரகாரம் ஆணைக்குழுவிடம் சம்பந்தப்பட்ட காலப்பிரிவு முழுவதும் இந்தவீடு திரு.விக்கிரமசிங்காவின் ஊழியர்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அது திரு.விக்கிரமசிங்காவுடன் சம்பந்தப்பட்ட பிரசார வேலைகளுக்கெனப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. உதாரணமாக, இந்த வீட்டில் சுவரொட்டிகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

A 2/3 வீட்டுக்கு அடுத்ததாக, A 1/7 இலக்கமுடைய வீடு இருந்தது. வின்சன்ட் பெர்ணாந்துவின் சாட்சியத்தின் பிரகாரம் திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு

அதிகாரியொருவரான பரிசோதகர் குணசேகரா அந்த வீட்டில் வசித்து வந்தார். அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்பட்டு வந்துள்ள உத்தியோகபூர்வ பதிவுகளின் பிரகாரம் அந்த வீடு திரு.விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு ஆளணியினருக்கென ஒதுக்கப்பட்டு இருந்தது. இக்கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநரான திரு.அசோக சேனநாயக்காவின் சாட்சியத்தின் பிரகாரம், A 1/7 வீட்டுக்கு அடுத்து அமைந்திருந்த இல.A 1/8 என்ற வீடு பொலிசு அதிகாரிகளின் உபயோகத்துக்கென விடுவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதனை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். எனினும், பொலிசு அதிகாரிகள் அதிகாரம் இல்லாமல் இந்த வீட்டை உபயோகித்து வந்தார்கள் என்பதனை திரு.குணசேகரா அறிந்திருந்தார். மேலும் உப பரிசோதகர் அஜித் ஜயசிங்காவின் சாட்சியத்தின் பிரகாரம் சந்தேக நபர் காமினி ஹெட்டிஆரச்சி இந்த வீட்டுக்குள் தொங்கவிடப்பட்டு இருந்ததினை அவர் பார்த்துள்ளார்(ஆட்களைத் தடுப்புக்காவலில் வைப்பதற்கும் சித்திரவதை செய்வதற்கும் இந்த வீட்டைப் பயன்படுத்துதல் ) பொலிசார் தரப்பிலான இந்தச் செயலை திரு.விக்கிரமசிங்கா அனுமதித்து இருக்காவிட்டால், திரு.விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு அதிகாரி அத்தகைய ஒரு செயலைச் சகித்துக்கொண்டிருப்பாரா? மேலும், உத்தியோகபூர்வ விருந்தினர் விடுதிக்கு அருகில் அமைந்திருந்த வீடொன்றில் என்ன நடந்துகொண்டு இருக்கின்றது என்பதனை திரு.விக்கிரமசிங்காவுக்கு அவர் தெரிவிக்காமல் இருந்திருப்பாரா?

சாட்சி வின்சன்ட் பெர்ணாந்துவின் நம்பிக்கைத்தன்மையை மதிப்பிடுவதில் ஆணைக்குழுவினால் கவனத்தில் எடுக்கப்பட்ட இரு விடயங்கள் தொடர்பாக இங்கு நாங்கள் குறிப்பிட விரும்புகின்றோம். முதலாவதாக, சம்பந்தப்பட்ட தகவல்களைத் திரட்டிக் கொள்வதற்கான வழிமுறைகளை இச் சாட்சி கொண்டிருந்தாரா? மேலும், சம்பந்தப்பட்ட தகவல்களைத் திரட்டிக் கொள்வதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைத்ததா? வின்சன்ட் பெர்ணாந்து உண்மையிலேயே தமது விருந்தினர் விடுதியில் மேற்பார்வையாளராகப் பணியாற்றி வந்துள்ளார் என்பதனை திரு.ரணில் விக்கிரமசிங்கா ஏற்றுக்கொண்டார். எனவே, அவர் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளையும் அதற்கு அவசியமான வாய்ப்பினையும் கொண்டிருந்தார். மேலும், பெரும்பாலான விடயங்கள் தொடர்பான அவருடைய சாட்சியம் அசைக்க முடியாத ஏனைய சாட்சியங்களின் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாகக் கவனத்தில் எடுக்கப்பட்ட இரண்டாவது விடயம், வின்சன்ட் பெர்ணாந்து, திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிராகப் பொய்யான ஒரு குற்றச்சாட்டை முன்வைப்பதற்காக ஏதோ ஒரு காரணம்(உள்நோக்கம்) இருந்து வந்துள்ளதா? என்பதாகும். வின்சன்ட் பெர்ணாந்து தனக்கு எதிராக மிக மோசமான பொய்ச்சாட்சியத்தை ஏன் கூறியிருக்க வேண்டும் என்பதற்கான எவையேனும் திட்டவட்டமான நேரடிக் காரணங்களை திரு.ரணில் விக்கிரமசிங்கா முன்வைக்கவில்லை. அத்தகைய காரணங்கள் இல்லாதநிலையில் வின்சன்ட் பெர்ணாந்து ஏன் பொய் கூறியிருக்க வேண்டும். இது தொடர்பாக கிடைக்கக்கூடியதாக இருக்கும் விடயங்களின் முழுமைத் தன்மையை கவனத்தில் எடுத்த ஆணைக்குழு, வின்சன்ட் பெர்ணாந்துவின் சாட்சியத்தை நிராகரிப்பதற்கான காரணமெதுவும் இருந்துவருவதாகக் கண்டுகொள்ளவில்லை.

வீடுகள் ஒதுக்கப்பட்டமை திரு.ரணில் விக்கிரமசிங்கா வசித்து வந்த வீடு மற்றும் அவருடைய பாதுகாப்பு ஆளணியினர் வசித்து வந்த வீடுகள் என்பன தொடர்பாக அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநரால் வழங்கப்பட்ட சாட்சியத்தைப் பொறுத்தவரையில், அச்சாட்சியத்தில் எத்தகைய முரண்பாடும் இருக்கவில்லை. திரு.விக்கிரமசிங்காவும் அந்தச் சாட்சியத்தை ஏற்றுக் கொண்டார். முரண்பாடு எதுவுமற்ற சாட்சியங்களின் பிரகாரம் இந்த வீடுகளைப் பொறுத்தவரையில் நிலைமை பின்வருமாறு உள்ளது-

1. A2/2 - திரு.ரணில் விக்கிரமசிங்காவின் விருந்தினர் விடுதி.

2. A2/1 - திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு அதிகாரிகள் வசித்த வீடு.

3. A2/3 - திரு.ரணில் விக்கிரமசிங்காவின் விருந்தினர் விடுதி மேற்பார்வையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டது.

4. A1/7 - திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு ஊழியரொருவர் வசித்து வந்த வீடு.

5. B2 - திரு.ரணில் விக்கிரமசிங்காவின் அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டது. அத்துடன், திரு.விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு அதிகாரிகளினாலும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

6. B1 - திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு அதிகாரிகள் வசித்துவந்த வீடு.

இந்த வீடுகள் அனைத்தும் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்குள்ளேயே அமைந்திருந்தன என்பதைக் குறிப்பிடுதல் அவசியமாகும். இந்த வீடுகளுக்குப் பின்பக்கத்தில் வீடமைப்புத் திட்டத்தின் பின்புற வேலி அமைந்திருந்ததுடன் அதற்கடுத்ததாக பெரிய வயல்வெளியொன்றிருந்தது. திரு.ரணில் விக்கிரமசிங்கா இங்கு வசித்து வந்ததினால் இது பாதுகாப்புப் பிரதேசமொன்றாக இருந்துவந்தது. இந்த வீடமைப்புத் திட்டத்தில் வசித்துவந்த ஏனைய சாதாரண குடிமக்களும்கூட பிரதேசத்தில் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்கப்பட்டு இருக்கவில்லை. உண்மையிலேயே இதற்கு அருகில் ஒரு பாதுகாப்புத் தடுப்பு இருந்து வந்தது. எனவே, இது வீடமைப்புத் திட்டத்துக்குள் இருந்து நன்கு பாதுகாக்கப்பட்ட ஒரு சிறு வீட்டுத்தொகுதியாக இருந்து வந்தது. சித்திரவதைக்கூடங்களிலொன்று (B2-ரி.எம். பந்துலவின் சாட்சியத்தைப் பார்க்கவும். இந்தச் சிறிய வீட்டுத் தொகுதிக்கு(திரு.விக்கிரமசிங்காவின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவந்த வீட்டுத் தொகுதிக்குள்) அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ரி.எம்.பந்துல என்ற பெயரைக்கொண்ட ஒரு சாட்சி தனது சாட்சியத்தில், இலக்கம் B2 ஐக் கொண்டிருந்த வீட்டில் தான் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு இருந்ததாக கூறியிருந்தது திரு.ரணில் விக்கிரமசிங்காவிடம் சுட்டிக்காட்டப்பட்டது. பந்துலவின் சாட்சி திரு.விக்கிரமசிங்காவுக்குச் சுருக்கமாக விளக்கப்பட்டது. அத்தகைய ஒரு வீட்டில் அவ்வாறான ஒரு சம்பவம்(சட்டவிரோதமாக ஒரு நபரைத் தடுத்து வைத்திருப்பதும் சித்திரவதை செய்வதும்) இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை என அவர் விளக்கினார். மேலும் உண்மையிலேயே அத்தகையதொரு சம்பவம் இடம்பெற்றிருந்தால் தான் அந்த வீட்டை உபயோகப்படுத்தியதினால் நிச்சயமாக அது தனக்குத் தெரியவந்திருக்கும் என அவர் மேலும் சொன்னார். B2 இலக்கம்கொண்ட ஒரு வீடு எனக்குத் தெரியாமல் சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு இருக்கக்கூடும் என்ற நிலைப்பாட்டினை திரு.விக்கிரமசிங்கா ஒருகணத்துக்கேனும் கொண்டிருக்கவில்லை. இந்த ஆணைக்குழு ஏற்கெனவே (சாட்சியங்களின் முழுமை மற்றும் ஏனைய விடயங்கள் என்பவற்றை கவனத்தில் எடுத்த பின்னர்) சாட்சி ரி எம் பந்துலவின் சாட்சியத்தை உறுதியாக நம்புவதற்கு முடிவு செய்திருப்பதனால் இறுதிப் பகுப்பாய்வில் உறுதியாக மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் முடிவு மேற்கூறப்பட்ட சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு B2 வீடு பயன்படுத்தப்பட்டு வந்தது என்ற விடயத்தை திரு.விக்கிரமசிங்கா (ஆகக்குறைந்தது) அறிந்திருந்தார் என்பதாகும்.

இரண்டாவது சித்திரவதைக்கூடம் இந்தச் சிறு வீட்டுத் தொகுதியிலிருந்து சில யார் தூரத்தில்(சுமார் 100 யார்) திரு.விக்கிரமசிங்காவின் மற்றொரு பாதுகாப்பு அதிகாரி (சுதத் சந்திரசேகரா) வசித்து வந்த B7 இலக்கம் கொண்ட வீட்டுக்கு அடுத்ததாக அமைந்திருந்தது. இந்த இரண்டாவது வீட்டின் இல. B8 ஆகும். மேலும், அது உ.பொ.அடக்ளஸ் பீரிஸ்சின் வீட்டுக்கு அருகில் அமைந்திருந்தது. சிறு வீட்டுத் தொகுதிக்குச் செல்லும் வழியில் B8 வீடு அமைந்திருந்தது. உண்மையிலேயே B8 வீட்டைக் கடந்து செல்லும்போது

சிவில் உடை தரித்த ஆயுதம்தாங்கிய பொலிசு அதிகாரிகள் B8 வீட்டுக்குக் காவல் புரிந்து வருவதனைத் தான் பார்த்திருப்பதாக திரு.விக்கிரமசிங்கா தமது சாட்சியத்தின்போது ஏற்றுக்கொண்டார். சட்டவிரோத நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த மேற்குறிப்பிட்ட மூன்றாவது வீடு இச்சிறிய வீட்டுத் தொகுதியை அடுத்து அமைந்திருந்தது. அது A1/8 இலக்கம் கொண்ட வீடாகும். திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு அதிகாரியொருவர் வசித்துவந்த A1/7 இலக்கம் கொண்ட வீட்டுக்கு அடுத்ததாக அவ்வீடு அமைந்திருந்தது. முன்னர் குறிப்பிடப்பட்ட பாதுகாப்புத் தடுப்பு இந்த வீட்டுக்கு அருகில் அமைக்கப்பட்டு இருந்தது. (கூட்டுத்தாபனத்தின் ஒழித்துகட்டுநரின் சாட்சியத்தின் பிரகாரம்) அதிகாரமில்லாமல் பொலிசு அதிகாரிகள் அடிக்கடி வந்து சென்றதாகக் கூறப்பட்ட வீடு இதுவாகும். இந்த வீட்டிலேயே சந்தேக நபர் ஹெட்டிஆரச்சி தொங்கவிடப்பட்டிருந்ததைத் தான் பார்த்ததாக அஜித் ஜயசிங்கா குறிப்பிட்டிருந்தார். இந்த வீடும் ஒரு சித்திரவதைக்கூடமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்குத் தெளிவான சாட்சி இருந்தது. இத்தகைய சூழ்நிலைகளின் கீழ், இவ்விரண்டு வீடுகளிலும் கூட என்ன நடந்துகொண்டிருந்தது என்பது தனக்குத் தெரியாதிருந்ததென திரு.விக்கிரமசிங்காவால் கூற முடியுமா?

எவ்வாறாயிருப்பினும், அதிகாரத்திலிருந்த நபர்கள் சித்திரவதைக்கூடங்களில் இடம்பெற்று வந்த சம்பவங்கள் குறித்து வெறுமனே அறிந்து மட்டுமா வைத்திருந்தனர் என்பதனை நிர்ணயித்துக் கொள்வதற்காக இவ்வாணைக்குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டது.

**பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடாத்தப்பட்ட கூட்டங்கள்.......**

இந்த ஆணைக்குழுவின் முன் விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்றபோது, பட்டலந்த வீடமைப்புத் திட்டத்துக்குள் குறிப்பிட்ட சில கலந்துரையாடல்கள் அல்லது கூட்டங்கள் நடத்தப்பட்டன என்பது தெரியவந்தது. குறிப்பாக சம்பந்தப்பட்ட இந்தக் கூட்டங்களுக்கும் சட்டவிரோதமான தடுப்புக்காவல் மையங்கள் மற்றும் சித்திரவதைக்கூடங்கள் என்பவற்றின் ஸ்தாபிதத்துக்கும் பராமரிப்புக்குமிடையில் ஏதேனும் பிணைப்புகள் இருந்து வந்துள்ளனவா என்பதை நிச்சயித்துக்கொள்ளும் நோக்கத்துடன் இத்தகைய கூட்டங்களின் சரியான இயல்பினைக் கவனத்தில் எடுப்பது அவசியமாக இருந்தது. எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் குறிப்பு நியதிகளின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட தடுப்பு முகாம்களின் ஸ்தாபிதத்துக்கும் பராமரிப்புக்கும் வழிகோலக்கூடிய விதத்தில் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் ஏதேனும் சதித்திட்டம் இருந்து வந்துள்ளதா என்பது குறித்து விசாரிப்பது அவசியமாக இருந்தது. இத்தகைய கூட்டங்களில் பங்குபற்றிய சில முக்கியமான நபர்களால் இக்கூட்டங்கள் நடத்தப்பட்டமை குறித்தும் இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்படும் விடயங்கள் குறித்தும் வழங்கப்பட்டுள்ள சாட்சியங்களை இப்பொழுது நாங்கள் கவனத்தில் எடுக்க விரும்புகின்றோம்.

சி.பொ.அ நளின் தெல்கொட களனிப் பொலிசுப் பிரிவின் சிரேட்ட பொலிசு அதிகாரியாக இருந்தார். களனி பிரிவைச் சேர்ந்த சிரேட்ட பொலிசு அதிகாரிகள் அப்பிரதேசத்தில் கூட்டங்களை நடத்த இருந்தால், திரு.தெல்கொட இந்தக் கூட்டங்கள் குறித்து அறிந்து வைத்திருப்பார் என்றும் அவற்றின்மீது நேரடிக் கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பார் என்றும் எதிர்பார்க்கலாம். எனவே, இந்தக் கூட்டங்கள் குறித்து தெல்கொட கூறுவதினை கவனத்தில் எடுப்பதன்மூலம் நாங்கள் இதனை ஆரம்பிப்பது பொருத்தமானதாகும்.

நளின் தெல்கொடவின் சாட்சியத்தின் பிரகாரம் இந்த ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட காலப்பிரிவின்போது பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடத்தப்பட்ட இரண்டு

அல்லது மூன்று கூட்டத்தில் அவர் பங்கேற்றுள்ளார். இந்தக் கூட்டங்கள் நடைபெற்ற சரியான இடம் எதுவென அவரிடம் வினவப்பட்டபொழுது அவை திரு.விக்கிரமசிங்காவின் விருந்தினர் விடுதியில் நடத்தப்பட்டன என சாட்சி ஆரம்பத்தில் கூறினார். அதனையடுத்து அவர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதுடன் விருந்தினர் விடுதிக்கு எதிரில் அமைந்துள்ள வீட்டில் இந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார். கிளர்ச்சி இடம்பெற்று வந்த காலப்பிரிவின்போது இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு வழிமுறைகளை ஒருங்கிணைப்பதை இத்தகைய கூட்டங்கள் நடாத்தப்பட்டதற்கான காரணம் என அவர் சொன்னார். இக்கூட்டங்கள் திரு.ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் நடாத்தப்பட்டதாகத் தெல்கொட முறையிட்டார். திரு.விக்கிரமசிங்கா இந்தக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். வழமைக்கு மாறான இத்தகைய கூட்டங்களை நடத்தியமைக்கான சரியான காரணங்கள் குறித்து வழக்கறிஞர் விரிவாக விசாரணை செய்தார். அமைதியையும் பொது ஒழுங்கினையும் உறுதிப்படுத்துவதற்காக இக்கூட்டங்கள் நடாத்தப்பட்டதாகத் தெல்கொட முதலில் கூறினார். விரிவான அளவில் கேள்விகள் தொடுக்கப்பட்டபொழுது இத்தகைய கூட்டங்களில், இப்பிரதேசத்தில் இடம்பெற்று வரும் நாசகார நடவடிக்கைகளின் இயல்பு குறித்து அவர்கள் அறிக்கையிட்டதாக அவர் சொன்னார். இறுதியாக பெருமளவுக்குத் தயக்கம் காட்டிய பின்னர், கிளர்ச்சிக்காரர்களை ஒடுக்குவதற்காக எடுக்கப்பட வேண்டியிருக்கும் வழிமுறைகளின் இயல்பு குறித்து இக்கூட்டங்களில் தாம் கலந்துரையாடியுள்ளனர் என்பதனை வழக்கறிஞரிடம் தெல்கொட ஒப்புக்கொண்டார். பகிரங்கமாக இச்சாட்சியத்தை வழங்குவதற்குச் சாட்சி ஏன் தயக்கம் காட்டினார் என்பது எமக்குப் புரியவில்லை. "கிளர்ச்சிக்காரர்களை அடக்குதல்" என்று கூறுவதன் மூலம் பொலிசார் தமக்குச் சட்டபூர்வமாக அதிகாரம் அளிக்கப்படாத, சட்டத்துக்குப் புறம்பான முறையில் ஒழித்துக்கட்டுதல் போன்ற வேலைகளை மேற்கொள்வதனைக் குறிப்பிடுவதாக இருப்பதுதான் இந்தத் தயக்கத்துக்குக் காரணமாக உள்ளதா?

இக்கூட்டங்களில் ரணில் விக்கிரமசிங்கா தலைமைதாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது ஏன்? என வழக்கறிஞர் வினவினார். குறிப்பாக திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு அமைச்சராகவோ அல்லது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவோ இருந்துவராத நிலையில் அவர் இக்கூட்டங்களுக்குத் தலைமைதாங்க வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என நாங்கள் சாட்சியத்திடம் விசாரித்தோம். திரு.ரணில் விக்கிரமசிங்கா பொலிசு அதிகாரிகளுக்கு "அரசியல் தலைமையை" வழங்குவதற்கு வசதி செய்துகொடுக்கும்பொருட்டு, அவ்விதம் செய்யப்பட்டதென தெல்கொட கூறினார். இச்சந்தர்ப்பத்தில் சட்ட அமுலாக்கலுக்கு ஓர் அரசியல் தலைமைத்துவம் தேவைப்பட்டது ஏன்? என வழக்கறிஞர் வினவினார். இதற்குப் பதிலளித்த தெல்கொட அக்காலப்பிரிவின்போது நிலவிவந்த நிலைமை காரணமாக அரசியல் தலைமைத்துவத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருந்து வந்ததென்றும், இந்த விடயத்தில் அரசியல் பணிப்புரைகளுக்குப் பணிந்து போவதைத் தவிர தனக்கு வேறு மாற்றுவழி இருக்கவில்லை என்றும் கூறினார். தன்னால், தனது தலையை ஒரு பாறையில் கொண்டுபோய் மோதவைப்பது சாத்தியமாக இருக்கவில்லை என அவர் விளக்கினார். இந்த விடயம் தொடர்பாகத் தனக்கு மாற்று வழிகள் இருந்து வரவில்லை என்பதையும் நிலைமையை மாற்றுவதற்கு அவர் முயற்சித்திருந்தால் அல்லது அரசியல் தலைமைத்துவத்தின் பணிப்புரைகளை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தால் அது தனக்கு மிக மோசமான பின்விளைவுகளை எடுத்து வந்திருக்கும் என்பதனையும் எடுத்துக் கூறுவதற்குச் சாட்சி முயற்சித்தார். இக்கூட்டங்கள் நடத்தப்பட்டமையை நியாயப்படுத்தக்கூடிய நிலையில் தெல்கொட இருந்துவரவில்லை என்பதையும் இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை பெருமளவுக்கு அவர் மறைத்தார் என்பதையும் நாங்கள் தெளிவாகப் புரிந்துகொண்டோம்.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடத்தப்பட்ட இந்தக் கூட்டங்களில் பிரதிப் பொலிசுமா அதிபர் எம் எம் ஆர் (மெரில்) குணரத்னாவும் கலந்துகொண்டார் என நளின்

தெல்கொட தமது சாட்சியத்தில் கூறினார். எனவே, இக்கூட்டங்கள் தொடர்பாக மேலும் விபரங்களைக் கேட்டறிந்துகொள்ளும்பொருட்டு இதுகுறித்து பிரதிப் பொலிசுமா அதிபர் குணரத்னாவிடம் விசாரணை நடத்தப்பட்டது. இந்தச் சாட்சியின் சாட்சியத்தின் பிரகாரம் அவர் மூன்று கூட்டங்களில் கலந்து கொண்டிருந்தார். அதில் ஒரு கூட்டம் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடத்தப்பட்டதுடன் ஏனைய இரு கூட்டங்களும் கைத்தொழில் அமைச்சில் திரு.ரணில் விக்கிரமசிங்காவின் அலுவலகத்தில் நடாத்தப்பட்டன. சாதாரண, "பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் கூட்டங்கள்" பொதுவாக அப்பிரதேசத்தின் முதலமைச்சர் அல்லது அரசாங்க அதிபர் என்பவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் நடத்தப்பட்டு வந்தமையால் இக்கூட்டங்களைச் சாதாரண பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் எனக் கருதமுடியாதுள்ளது என்பதை திருகுணரத்னா ஏற்றுக்கொண்டார். மேலும், அத்தகைய கூட்டங்கள் கச்சேரிகளிலேயே நடாத்தப்பட்டுள்ளன. ஆனால், திரு.ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையின் கீழ் நடைபெற்ற கூட்டங்கள் வேறு இடங்களில் நடத்தப்பட்டன என்பதனையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

இத்தகைய கூட்டங்களில் சமூகம் அளித்திருந்ததை ஒப்புக்கொண்ட மற்றொரு சிரேட்ட பொலிசு அதிகாரி உ.பொ.அ. ராஜா டயஸ் ஆவார். திரு.ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் நடாத்தப்பட்ட பல கூட்டங்களுக்குத் தாம் சமூகம் அளித்திருந்ததாக அவர் சொன்னார். இந்தக் கூட்டங்கள் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகளில் நடத்தப்பட்டு இருந்தன. இவ்வீடுகளில் ஒன்றில் திரு.ரணில் விக்கிரமசிங்கா வசித்து வந்தார். மற்றைய வீடு விருந்தினர் விடுதிக்கு எதிரில் அமைந்திருந்தது. அது ஒதுக்குப்புறமான ஒரு வீடாகும். ஒதுக்குப்புறமாக அமைந்த வீட்டில் நடத்தப்பட்ட கூட்டங்களுக்கும் கூட திரு.விக்கிரமசிங்கா தலைமை தாங்கினார். பிரதிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னா, சி.பொ.அ நளின் தெல்கொட, உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ், பரிசோதகர்கள் அத்தபத்து, ரஞ்சித் விக்கிரமசிங்கா மற்றும் களனிப் பிரதேசத்தில் உள்ள பொலிசு நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டனர். திரு.விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு அதிகாரிகள் ஒதுக்குப்புறமான வீட்டில் தங்கியிருந்தனர். அது, விருந்தினர் விடுதிக்கு எதிரில் அமைந்திருந்தது. அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்பட்டு ஆணைக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட பதிவுகள் குறிப்பிட்ட சில கூட்டங்கள் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இந்த வீடு B2 இலக்கம் கொண்ட வீடாகும் என்பதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மேலும், தனக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கெனப் பொறுப்பளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் B2 என்ற இலக்கம்கொண்ட வீட்டில் வசித்து வந்தார்கள் என்பதனை திரு.ரணில் விக்கிரமசிங்காவும் ஏற்றுக் கொண்டுள்ளார். சாட்சி ரி எம் பந்துலவின் கூற்றின் பிரகாரம் அவர் தப்பியோடுவதற்கு முன்னர் இவ்வீட்டில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்துள்ளார். எனவே, நபர்கள் சட்டவிரோதமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஒரு வீட்டிலேயே இக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. அவ்விதம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நபர்களைச் சித்திரவதை செய்வதற்கெனப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள வீடுகளில் இதுவும் ஒன்றாகும். இந்தச் சூழ்நிலைகள் இக்கூட்டங்கள் நடாத்தப்பட்டமை சட்டவிரோதமான தடுப்பு மற்றும் சித்திரவதை முகாம்களைக்கொண்ட இடங்களின் ஸ்தாபிதம் மற்றும் பராமரிப்பு என்பவற்றுடன் தொடர்புபடுத்துவதனைக் காணமுடிகின்றது. மேலும், இந்த வீட்டில் (B2) நடைபெற்ற கூட்டங்களில் கலந்துகொண்ட ஒருவர், இதே வீட்டில் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வந்தனர் என்பது தனக்குத் தெரியாதிருந்தது என எப்போதாவது உரிமை கூற முடியுமா?.

விருந்தினர் மாளிகையில் நடத்தப்பட்ட கூட்டங்கள் ஒருசில பொலிசு அதிகாரிகளுக்கு மட்டுமே நடத்தப்பட்டன என்பதை உ.பொ.அ. ராஜா டயஸ் தன்னுடைய சாட்சியத்தில் குறிப்பிட்டிருந்தார். அவரும் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொண்டிருந்தார். இக்கூட்டங்களில் கலந்துகொள்வதற்கான அழைப்புக்கள் திரு.ரணில்

விக்கிரமசிங்காவினால் பொலிசு நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் கூட அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இத்தகைய விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு பொலிசு அதிகாரிகளுக்கு அழைப்புவிடுக்கும் வழமைக்கு மாறான இந்த நடவடிக்கையை திரு.விக்கிரமசிங்கா எடுத்தது ஏன் என்பது எமக்குப் புரியவில்லை. கலந்துரையாடல்களில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளும் சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்கள், ஒன்றும் பொலிசுத் தலைமையகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட பொலிசுப் பிரிவுக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரியினால் அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என ஒருவர் எதிர்பார்க்கலாம்.

கிடைக்கக் கூடியதாக இருந்துவரும் விடயங்களிலிருந்து இந்தக் கூட்டங்களைப் பொறுத்தவரையில், இரண்டு முக்கியமான நபர்கள் இருந்து வந்துள்ளனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பதுபோல் தெரிகிறது. அவர்கள் உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ் மற்றும் திரு.ரணில் விக்கிரமசிங்கா ஆகியோர் ஆவர். இது தொடர்பாக உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸின் சாட்சியத்தைக் கவனத்தில் எடுப்பதற்கான அனுகூலம் ஆணைக்குழுவுக்குக் கிடைக்காமல் போனது துரதிஷ்டவசமானதாகும். எவ்வாறிருப்பினும், திரு.ரணில் விக்கிரமசிங்கா கிடைக்கக் கூடியதாக இருந்து வந்ததுடன், அது தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

திரு.விக்கிரமசிங்காவின் சாட்சியத்தின் பிரகாரம், இரு வகைகளைச் சேர்ந்த கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. கம்பஹா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட மாவட்டப் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் இதில் முதல் வகையைச் சேர்ந்தனவையாகும். இக்கூட்டங்கள் ஒன்றில் (முன்னாள் பாதுகாப்பு பிரதி அமைச்சர்) ரஞ்சன் விஜேரத்னாவின் அல்லது திரு.ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் நடாத்தப்பட்டன. இரண்டாவது வகையைச் சேர்ந்த கூட்டங்கள் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் B2 இலக்கமுடைய வீட்டில் நடத்தப்பட்டன. முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் இக்கூட்டங்களில் கலந்து கொண்டார்கள் என்பதனை திரு.விக்கிரமசிங்கா ஒப்புக்கொண்டார். இக்கூட்டங்கள் தொடர்பாக ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்ட சில சிரேட்ட பொலிசு அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டவாறு இவற்றில் பொதுவான பாதுகாப்பு நிலைமை குறித்து கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக, அரசாங்க நிறுவனங்களுக்கான அச்சுறுத்தலும், பொது ஒழுங்குக்கு கிளர்சிக்காரர்கள் விடுத்து வந்த அச்சுறுத்தலும் இக்கலந்துரையாடல்களின் முக்கிய தலைப்புகளாக இருந்தன. தாம் இக்கூட்டங்களையும் அழைத்ததையும், அவற்றுக்குச் சமுகமளிக்குமாறு சம்பந்தப்பட்ட பொலிசு அதிகாரிகளுக்கு அறிவித்ததையும் திரு.ரணில் விக்கிரமசிங்கா ஏற்றுக் கொண்டார். மேல் மாகாண சபையின் அப்போதைய கல்வி அமைச்சராக இருந்துவந்த திரு.சுரநிமல ராஜபக்ஸவும் இக்கூட்டங்களில் கலந்துகொண்டார். இக்கூட்டங்களில் கலந்துகொண்ட இரு அரசியல்வாதிகள் இவர்கள் மட்டுமே ஆவார்கள். இந்தக் கூட்டங்களை அழைத்தமைக்கும், அவற்றுக்குத் தலைமை தாங்கியதற்கும் அடிப்படையாக இருந்திருக்கக் கூடிய ஏதேனும் திட்டவட்டமான அரசாங்கத் தீர்மானமொன்றை திரு.விக்கிரமசிங்காவினால் சுட்டிக்காட்ட முடியாதிருந்தது. மேலும், பட்டலந்தையில் இடம்பெற்ற இந்தக் கூட்டங்களில் சட்டம், ஒழுங்கு நிலையில் குறிப்பிட்ட ஒரு அம்சம் மட்டுமே (அதாவது, கிளர்சிக்காரர்களால் இப்பிரதேசத்தின் பாதுகாப்புக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் குறித்து மட்டுமே) கலந்துரையாடப்பட்டது ஏன் என்பது குறித்தும், ஆள் கடத்தல் மற்றும் இப்பிரதேசத்தில் ஆங்காங்கே சடலங்கள் காணப்பட்டமை போன்ற ஏனைய விடயங்கள் கலந்துரையாடப்படவில்லை ஏன் என்பது குறித்தும் அவரால் விளக்க முடியாதிருந்தது. மேலும், கிளர்சிக்காரர்களினால் பொலிசு அதிகாரிகளுக்கு எற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக தாம் கலந்துரையாடியதை திரு.விக்கிரமசிங்கா முதலில் ஏற்றுக்கொண்டார். ஆனால், பிற்பாடு, அத்தகைய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்பதை மறுப்பதற்கு அவர் முயற்சி செய்ததுடன், அதன்மூலம் அத்தகைய கலந்துரையாடல்களிலிருந்து தன்னைத் தூரப்படுத்திக் கொள்வதற்கும் முயன்றார்.

(B2 இல் நடத்தப்பட்ட) இக்கூட்டங்கள் முடிவடைந்த பின்னர், அக்கூட்டங்களுக்கு வந்திருந்தவர்களில் ஒரு சிலரை B2 வீட்டுக்கு எதிரில் அமைந்திருந்த விருந்தினர் விடுதிக்கு சிற்றுண்டி அருந்துவதற்காக கூறியுள்ளார். விருந்தினர் விடுதியின் பாதுகாப்பு நிலைமை குறித்து அவர்கள் விரிவாகக் கலந்துரையாடவில்லை என்றும், அவர் குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பாக திரு.விக்கிரமசிங்கா சாட்சியமளித்தபொழுது வின்சன்ட் பெர்ணாந்துவின் சாட்சியம் எமக்கு நினைவுக்கு வந்தது. இவ்விதம் வருகை தந்திருப்பவர்களுக்கு சிற்றுண்டிகளை எவர் பரிமாறியிருக்க முடியும்? சிற்றுண்டிகளைப் பரிமாறும் அந்த நபர், இதன்மூலம் அங்கு இடம்பெறும் கலந்துரையாடல்களை செவிமடுப்பதற்கு ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்க முடியுமா?(சாட்சி வின்சன்ட் பெர்ணாந்துவின் சாட்சியத்தில் "தகவல்களைப் பெறுவதற்கான வழிமுறைகள்" என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருந்தது).

திரு.விக்கிரமசிங்காவின் சாட்சியம் தொடர்பான அவருடைய பதில்கள் மழுப்பும் இயல்பினைக் கொண்டிருந்தன என்பதனை நாங்கள் அவதானிக்கின்றோம். விருந்தினர் விடுதியில் கலந்துரையாடல் நடத்தப்பட்டன என்பது குறித்த உ.பொ.அ. ராஜா டயஸின் சாட்சியத்தை திரு.விக்கிரமசிங்காவின் முன் வைத்தபொழுது, இது தொடர்பாகக் கூறுவதற்கு அவருக்கு எதுவும் இருக்கவில்லை. மேலும், இந்த விடயம் குறித்து அவருடைய வழக்கறிஞரும் உ.பொ.அ. டயஸைக் குறுக்கு விசாரணை செய்வதற்கும் முன் வரவில்லை. தனது தலையை ஒரு பாறையில் கொண்டுபோய் மோதுவதற்கு தான் விரும்பவில்லையாதலால் இக்கூட்டங்களில் கலந்துகொண்டதாகவும், சம்பந்தப்பட்ட பணிப்புரைகளை நிறைவேற்றி வைத்ததாகவும் குறிப்பிட்டிருந்த நளின் தெல்கொடவின் நிலைப்பாடு குறித்தும் திரு.விக்கிரமசிங்கா கூறுவதற்கு எதுவும் இருக்கவில்லை. தெல்கொட அத்தகைய ஒரு விடயத்தைக் கூறியிருப்பார் எனத் தாம் கருதவில்லை எனக் கருதுவதன்மூலம் தெல்கொடவின் கூற்றின்மீது நேரடியாக கருத்துத் தெரிவிப்பதனை திரு.விக்கிரமசிங்கா தவிர்த்துக்கொண்டார். ஆணைக்குழுவுக்கு உதவிவந்த வழக்கறிஞர், திரு.விக்கிரமசிங்காவுக்கு நியாயம் வழங்கும் விதத்தில், ஆணைக்குழுவின்முன் சாட்சியம் அளிக்கும்வரையில் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் அனைத்தையும் ஆராய்வதற்கான நேரடி வாய்ப்பை திரு.விக்கிரமசிங்கா பெற்றிருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களை அவருக்கு வழங்கியிருந்தார். எனவே, ஏனைய சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து நேரடியாகக் கருத்துத் தெரிவிப்பதற்கும் அவற்றை விளக்குவதற்குமான வாய்ப்பினை திரு.விக்கிரமசிங்கா பெற்றிருந்தார்.

பட்டலந்தயில் நடைபெற்ற இந்தக் கூட்டங்கள் தொடர்பாகச் சாட்சியம் அளித்த எவரும் ஆட்களைச் சட்டவிரோதமாகத் தடுத்து வைப்பதற்குப் பட்டலந்த வீடுகள் பயன்படுத்தப்பட்டமை, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களை சித்திரவதை செய்து அவர்களிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட விதம் மற்றும் இறுதியில் அத்தகைய ஆட்களின் கதையை முடித்துவிடுதல், அவ்வாறு போன்ற குற்றச்செயல் நடவடிக்கைகளை தாம் கலந்துரையாடியதை ஒப்புக்கொள்வார்கள் என இந்த ஆணைக்குழு இயல்பாகவே எதிர்பார்க்கவில்லை.

இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது என்னவென்றால், பட்டலந்தயில் இடம்பெற்ற இந்தக் கூட்டங்கள் குறித்துச் சாட்சியம் அளித்த அந்த இரு சாட்சிகளும் கூட்டம் நடைபெற்ற இடம், கூட்டங்களின் எண்ணிக்கை, கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் இயல்பு, கூட்டங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கை என்பன குறித்து ஒரேவிதமான சாட்சியத்தை முன்வைக்க முடியாதவர்களாக இருந்துள்ளனர் என்பதாகும். இக்கூட்டங்கள் முறைப்படியான கூட்டங்களாக இருந்து, அவற்றில் சட்டரீதியான விடயங்களும் பொருத்தமான ஏனைய விடயங்களும் கலந்துரையாடப்பட்டிருந்தால் இத்தகைய முரண்பாடு இருந்து வருவது ஏன்?

எனவே, மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில் நோக்கும்பொழுது பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடத்தப்பட்ட கூட்டங்களை முறைப்படியான கூட்டங்கள் என கருதமுடியாதுள்ளது என்பது தெளிவாகும். மேலும், இக்கூட்டங்கள் முறைசாராத ஒரு விதத்தில் நடத்தப்பட்டிருப்பதுபோல் தோன்றுகின்றது. இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்தும், கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்தும் குறிப்புக்கள் பராமரித்து வரப்படவில்லை என்பதனைச் சாட்சிகள் ஏற்றுக்கொண்டனர். அரசாங்க அதிபர்(அல்லது பிரதேச செயலாளர்) அலுவலகங்களில் நடத்தப்பட்ட கூட்டங்களிலிருந்து இக்கூட்டங்களை வேறுபடுத்தி நோக்க வேண்டும் என்பதனை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. கிளர்ச்சி இடம்பெற்ற காலப்பிரிவின்போது மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கென இந்த அலுவலகங்களில் விசேட கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இக்கூட்டங்களில் பொலிசு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் சிரேட்ட நிருவாக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் அவ்வப்பிரதேசங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் இக்கூட்டங்களுக்கு சமூகம் அளித்துள்ளனர். களனி பொலிசுப் பிரிவைப் பொறுத்தவரையில் இக்கூட்டங்கள் கம்பஹா கச்சேரியில் நடத்தப்பட்டன. "மாவட்டப் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் கூட்டங்கள்" எனக் குறிப்பிடப்படும் இத்தகைய முறைப்படியான கூட்டங்களை நடத்துவது தொடர்பாக எந்த ஆட்சேபணையும் இருப்பதாக ஆணைக்குழுவுக்குத் தெரியவில்லை. மேலும், இந்த முறைப்படியான "மாவட்டப் பாதுகாப்பு ஒருங்கணைப்புக் கூட்டங்களில்" சீர்குலைவடைந்து வரும் பாதுகாப்பு நிலை குறித்து ஆராயவேண்டிய தேவையும், நிலைமையைச் சமாளிப்பதற்கு வகுத்துக் கொள்ள வேண்டிய தேவையும் தடுப்பு வழிமுறைகளைச் செயற்படுத்த வேண்டிய தேவையும் வெற்றிகரமான முறையில் நிறைவு செய்யப்பட்டு இருப்பதனால் பட்டலந்தயில் வேறு கூட்டங்களை அமைப்பதற்கு திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு அவசியம் ஏற்பட்டது ஏன்? முறைப்படியான மாவட்டப் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் கலந்துரையாடியிருக்க முடியாத விடயங்களைக் கலந்துரையாடுவதற்கென இக்கூட்டங்கள் கூட்டப்பட்டனவா? முறைப்படியான கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு இருக்க முடியாத அந்த விடயங்கள் என்ன? இக்கூட்டங்களில் சட்டபூர்வமான எந்தவொரு விடயத்தையும் கலந்துரையாடாமல் இருப்பதற்குக் காரணம் எதுவும் இருந்திருக்க முடியாது. எனவே, பட்டலந்த கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் "சட்ட விரோதமானவை" என்ற முடிவுக்கு மட்டுமே எம்மால் வர முடிகின்றது.

எவ்வாறிருப்பினும், பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடாத்தப்பட்டுள்ள கூட்டங்கள் முற்றிலும் வித்தியாசமானவையாக இருந்து வந்துள்ளன. அவை முறைசாராத நிலைமைகளின் கீழ் நடத்தப்பட்டுள்ளன. திரு.ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் நடாத்தப்பட்ட இக்கூட்டங்களின் குறிக்கோள்கள் தெளிவாக இருக்கவில்லை. இக்கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் இக்கூட்டங்கள் என்ன நோக்கத்துக்காக நடத்தப்பட்டன என்பதை விளக்குவதற்கு முயற்சித்தபோதிலும் இந்த ஆணைக்குழு சம்பந்தப்பட்ட அந்த விளக்கங்களுடன் எந்த வகையிலும் திருப்தியடையவில்லை. பாதுகாப்பு நிலவரத்தை மீளாய்வு செய்வதற்கும், நிலைமையைச் சமாளிப்பதற்கான உத்திகளை வகுத்துக் கொள்வதற்கும் இக்கூட்டங்கள் நடத்தப்பட்டன என்பது பொதுவான நிலைப்பாடாகும். எனினும், சந்தேகிக்கப்பட்ட ஜே.வி.பி. காரர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நாசகார நடவடிக்கைகள் மட்டுமே இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன என்பதனை அனைத்துச் சாட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தம்மை கிளர்ச்சிக்காரர்களாகக் காட்டிக்கொண்ட சாதாரணக் குற்றவாளிகளின் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் கலந்துரையாடவில்லை. மேலும், பதிவு இலக்கங்கள் இல்லாத வாகனங்களில் நவீன ஆயுதங்களுடன் அப்பிரதேசத்தில் அங்கும்இங்கும் சுற்றிக்கொண்டிருந்த (கண்காணிப்புக் குழுக்கள் எனக் குறிப்பிடப்பட்ட) அந்த ஆயுதம்தாங்கிய குழுக்களின் நடவடிக்கைகள் குறித்தும் அத்தகைய கோஷ்டிகள் கொலை, கடத்தல் போன்ற மிக மோசமான குற்றச்செயல்களில் ஈடுபட்டு

வந்தமை குறித்தும் அவர்கள் கலந்துரையாடவில்லை. பொது இடங்களில் சடலங்கள் காணப்பட்டமை, ரயர்களில் வைத்து ஆட்கள் கொளுத்தப்பட்டமை என்பன குறித்தும் அவர்கள் கலந்துரையாடவில்லை. இத்தகைய சம்பவங்கள், சம்பந்தப்பட்ட காலப்பிரிவின்போது சாதாரண சாட்சிகளாக இருந்து வந்துள்ளன என்பதனை பெரும்பாலான சாட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இக்கலந்துரையாடல்கள் ஜே.வி.பி. நடவடிக்கைகளை மட்டும் மையமாகக்கொண்டு நடத்தப்பட்டு வந்தது ஏன்? சம்பந்தப்பட்ட இந்தக் கூட்டங்கள் முறைப்படியான கூட்டங்களாகவும், அரசாங்கத்தின் ஒரு தீர்மானத்தை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்பட்டவையாகவும் இருந்து வந்தால் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டு பொருத்தமான முடிவுகள் எடுக்கப்பட்டு இருக்கமாட்டாதா?

இந்த ஆணைக்குழு கரிசனை காட்டிய மற்றொரு விடயம் இக்கூட்டங்களுக்கு திரு.ரணில் விகிக்ரமசிங்கா தலைமை வகித்தது ஏன் என்பதாகும்? திரு.விக்கிரமசிங்கா பாதுகாப்பு அமைச்சராகவோ அல்லது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவோ இருந்துவரவில்லை. அவருடைய உத்தியோகபூர்வ கடமைப்பொறுப்புக்களைப் பொறுத்தவரையில் பொலிசு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவேண்டிய தேவை அவருக்கு இருந்துவரவில்லை. அவ்வாறானால், அவர் இக்கூட்டங்களில் கலந்துகொண்டு அவற்றுக்குத் தலைமைதாங்கியது ஏன்? பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலிருந்து களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் நடவடிக்கைகளை உண்மையில் அவர் நெறிப்படுத்திக்கொண்டிருந்தார் என்பதிலிருந்து அவருடைய இந்த நடத்தை உருவாகியதா? இது தொடர்பாக இக்கூட்டங்கள் திரு.விக்கிரமசிங்காவின் விருந்தினர் மாளிகையில் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டிருந்த வின்சன்ட் பெர்ணாந்துவின் சாட்சியம் நினைவுக்கு வருகின்றது. சட்டத்தரணி விஜயதாஸ லியனஆரச்சியின் மரணம் சம்பந்தப்பட்ட சாட்சியம் இந்தச் சாட்சியத்துடன் இணைகின்றது.

**சட்டத்தரணி விஜயதாஸ லியனஆரச்சி..........**

மறைந்த திரு.விஜயதாஸ லியனஆரச்சி ஒரு சட்டத்தரணியாக இருந்துவந்தார். சொந்த அடிப்படையில் அவர் புதுக்கடையில் வழக்கறிஞராகத் தொழில் செய்து வந்ததுடன் முன்னைய அரச வழக்குரைஞரும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவருமான சனாதிபதி சட்டத்தரணி திரு.ரஞ்சித் அபேசூரியாவின் இளவலாக அவர் செயற்பட்டு வந்தார். 1988 ஆகஸ்ட் மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்குக் கிட்டிய ஒரு தினத்தன்று சட்டத்தரணி லியனஆரச்சி திடீரெனக் காணாமல் போனார். அதனையடுத்து, திரு.அபேசூரியாவும் இந்தச் சட்டத்தரணியின் பாதுகாப்புக் குறித்து கரிசனை கொண்டிருந்த ஏனையவர்களும் மிகுந்த பதட்டத்துடன் காணாமல் போன நபரை உடனடியாகத் தேடத் தொடங்கினர். அவர்கள் முதலில் சென்ற இடம் பொலிசு என்பது தெளிவாகும். இது, சட்டத்தரணி யாரோ சிலரால் கடத்தப்பட்டு இருக்கலாம் என சந்தேகித்தமையின் காரணத்தினாலேயே அவர்கள் பொலிசு நிலையத்துக்குச் சென்றார்கள். ஆனால், அதேவேளையில், அவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு இருக்கவேண்டும் என்று சந்தேகித்திருந்ததனாலும் அவர்கள் அவ்வாறு செய்தனர். இவ்விதம் சந்தேகம் தோன்றுவதற்கான ஒரு காரணம் சட்டத்தரணி லியனஆரச்சி (பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருக்கும்) ஜே.வி.பி சந்தேகநபர்களின் சார்பில் அடிக்கடி ஆஜராகி வந்ததும், அத்தகைய சந்தேக நபர்களின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்களின் சார்பில் ஆஜராகி வந்ததும் ஆகும். இதன் காரணமாக, இந்தச் சட்டத்தரணி ஜனதா விமுக்தி பெரமுனவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொண்டிருந்தார் எனச் சிலர் நம்பினர். எனவே, அவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு இருக்கவேண்டும் எனச் சந்தேகிக்கப்பட்டது.

லியனஆரச்சி பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளாரா என அமைச்சின் செயலாளர் அப்பொழுது பொலிசுமா அதிபராக இருந்த ஏர்னஸ்ட் பெரேராவிடம் ஆகஸ்ட் 29 ஆந் திகதியன்று விசாரித்தார். பொலிசுமா அதிபர் தனிப்பட்ட முறையில் இந்த விடயம் குறித்து அறியாதவராக இருந்து வந்ததினால், பாரிய கொழும்புப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிசுமா அதிபரிடம் விசாரித்தார். தனது ஆளுகையின் கீழ் வரும் பொலிசு அதிகாரிகளினால் லியனஆரச்சியின் கைது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதனை பிரதிப் பொலிசுமா அதிபர் ஊர்ஜிதம் செய்தார். அதே தினத்தன்று சம்பந்தப்பட்ட காலப்பிரிவின்போது பாதுகாப்பு அமைச்சுக்கான பந்தோபஸ்து ஆலோசகராகக் கடமையாற்றி வந்த (முன்னாள் சனாதிபதி திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் புதல்வரான) திரு.ரவி ஜயவர்த்தனா சட்டத்தரணி லியனஆரச்சி தங்காலைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருக்கக்கூடும் என வியப்பூட்டும் விதத்தில் பொலிசுமா அதிபரிடம் யோசனை தெரிவித்திருந்தார். திரு.ரவி ஜயவர்த்தனா அத்தகைய ஒரு கருத்தை எவ்வாறு உருவாக்கிக்கொண்டார் என்பது எமக்குத் தெரியாது. எவ்வாறிருப்பினும், பொலிசுமா அதிபருக்கு தெரிவிக்கப்பட்ட திரு.ஜயவர்த்தனாவின் யோசனையை பொலிசுமா அதிபர் மிகத் தீவிரமாக கவனத்தில் எடுத்திருந்தார். அவர் உடனடியாக, தென் பிராந்தியத்துக்கான பிரதிப் பொலிசுமா அதிபரான திரு.பிரேமதாச உடுகம்பொலவை (தங்காலை, அவரின் கண்காணிப்பின் கீழே வருகின்றது) தொடர்புகொண்டு காணாமல்போன நபர்பற்றி அவரிடம் விசாரித்தார். அத்தகைய ஒரு கைது குறித்து தனக்குத் தெரியாது என உடுகம்பொல பொலிசுமா அதிபருக்குத் தெரிவித்தார். தங்காலை பொலிசு அத்தியட்சகரான திரு.கரவிட்டகே தர்மதாஸாவுடன் தொடர்புகொண்டு பொலிசுமா அதிபர் இந்த விடயம் குறித்து விசாரித்தபொழுது, சட்டத்தரணி லியனஆரச்சி தங்காலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதனைத் தர்மதாஸா "உத்தியோகபூர்வமற்ற முறையில்" ஏற்றுக்கொண்டார்.

இச்சந்தர்ப்பத்தில், லியனஆரச்சியின் பாதுகாப்பில் கரிசனை கொண்டிருந்த திரு.ரஞ்சித் அபேசூரியாவும் ஏனையவர்களும் கூட சட்டத்தரணி தங்காலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற விஷயத்தை அறிந்து கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது. எனவே, ஆகஸ்ட் 31 ஆந் திகதி காலையில் திரு.அபேசூரியா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரால் சேபால ஆட்டிகலையுடன் தொடர்புகொண்டு தென் பிரதேசத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருக்கும்பொழுது லியனஆரச்சியின் பாதுகாப்பு குறித்து சந்தேகம் உள்ளது என்ற அச்சத்தை ஒரு முறையீடாகத் தெரிவித்தார். லியனஆரச்சியின் தடுப்புக்காவலை முறைப்படி மேற்கொள்வது அவசியமாகும் என்பதனை அமைச்சின் செயலாளரும் உணர்ந்திருந்தார். சந்தேக நபர் லியனஆரச்சிமீது தடுப்புக்காவல் உத்தரவொன்றை வழங்குமாறு அவர் பிரதிப் பொலிசுமா அதிபர் உடுகம்பொலவுக்குப் பணிப்புரை வழங்கினார். தடுப்புக்காவல் முறையானதாக ஆக்கப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் லியனஆரச்சிக்கு சட்டத்துக்குப் புறம்பான முறையில் எதனையும் செய்யமாட்டார்கள் என்பதற்கான உத்தரவாதம் இருக்கும் எனத் திரு.ஆட்டிகலை கருதியிருந்ததுபோல் தெரிகிறது. எவ்வாறிருப்பினும், சந்தேகநபர் தொடர்ந்தும் தென் பிரதேசத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருப்பதனை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பொலிசுமா அதிபரும் விரும்பவில்லை. தென் பிரதேசத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும்பொழுது அவருடைய பாதுகாப்புக்குத் தம்மால் உத்தரவாதம் அளிக்க முடியாது என அவர்கள் கருதியதுபோல் தென்படுகின்றது. எனவே சந்தேகநபரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்பொருட்டு சந்தேகநபரான சட்டத்தரணியைக் கொழும்புக்கு மாற்ற வேண்டும் என அவர்கள் இருவரும் தீர்மானித்தனர். சந்தேகநபரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்பொருட்டு அவர் கொழும்புக்கு எடுத்து வரப்படுவார் என்ற உத்தரவாதத்தினை அதே தினத்தன்று திரு.அபேசூரியாவுக்கு அவர்கள் வழங்கினார்கள்.

இதேவேளையில் ஏர்னஸ்ட் பெரேராவின் சாட்சியத்தின் பிரகாரம் 31 ஆந் திகதி பகல் 12.00 மணியளவில் திரு.ரணில் விக்கிரமசிங்கா, அவருடன் தொலைபேசியில்

தொடர்புகொண்டு பொலிசுமா அதிபர் சந்தேகநபரைக் கொழும்புக்கு எடுத்து வரவேண்டும் என்றும், களனிப் பிரிவில் செயல்பட்டு வரும் விசேஷ குழுவிடம் அவரை ஒப்படைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். அதன்பிரகாரம், சந்தேகநபரை தங்காலையிலிருந்து திரு.விக்கிரமசிங்காவினால் குறிப்பிடப்பட்ட பொலிசுப் பிரிவுக்கு மாற்ற வேண்டும் என பொலிசுமா அதிபர் பொருத்தமான அறிவுறுத்தல்களை வழங்கினார். மேலும், பொலிசுமா அதிபர், உ.பொ.அ.டக்ளஸ் பீரிஸ்சை அழைத்து, லியனஆரச்சி கொழும்புக்கு எடுத்துவரப்பட்ட பின்னர் அவரைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு அவருக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். செத்தெம்பர் 01 ஆந் திகதியன்று சந்தேகநபர் லியனஆரச்சி மாத்தறைப் பொலிசைச் சேர்ந்த பரிசோதகர் கருணாரத்னாவால் தங்காலையிலிருந்து சப்புகஸ்கந்தவுக்கு மாற்றப்பட்டார். சப்புகஸ்கந்தயில் வைத்து களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியான பரிசோதகர் ரஞ்சித் விக்கிரமசிங்கா அவரைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பரிசோதகர் விக்கிரமசிங்காவினாலும் நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஏனைய அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்பட்ட குறிப்புக்களை அடிப்படையாகக்கொண்டு கிடைக்கக் கூடியதாக இருக்கும் தகவல்களின் பிரகாரம், லியனஆரச்சியின் நிலைமை அவ்வளவு நல்லதாக இருந்துவரவில்லையாதலால், அவர்களால் அவர் விசாரணைக்குட்படுத்தப்படவில்லை. செத்தெம்பர் 02 ஆந் திகதி மாலை அளவில், லியனஆரச்சியின் நிலைமை மோசமடைந்ததுடன், கொழும்பு பிரதிப் பொலிசுமா அதிபரின் அறிவுறுத்தல்களின்பேரில் செத்தெம்பர் 02 ஆந்திகதி இரவு 11.00 மணியளவில் பரிசோதகர் விக்கிரமசிங்காவினால் லியனஆரச்சி கொழும்புப் பெரியாஸ்பத்திரி விபத்துச் சேவைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அதன்பின்னர், ஆஸ்பத்திரியின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டார். நடுஇரவு தாண்டி, சுமார் 30 நிமிட நேரம் சென்றபின்னர், இந்நோயாளி மூச்சுக்குழல் அடைப்பினால் பாதிக்கப்பட்டதுடன், அவருக்கு மீண்டும் சுவாசத்தையளிக்கும் முயற்சி வெற்றியளிக்கவில்லை. அவர் மரணமடைந்திருப்பதாக இரவு 12.55 இற்கு உறுதிப்படுத்தப்பட்டது. மரணம் அடைந்தவரின் பிரேத பரிசோதனை கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியான டாக்டர்.எல்.பி.எல்.டி அல்விஸ் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவருடைய முடிவுகளின் பிரகாரம், முனை மழுங்கிய ஆயுதங்களால் முதுகுத் தண்டில் ஏற்படுத்தப்பட்ட பெருமளவிலான காயங்களையடுத்து ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கு என்பனவற்றின் காரணமாகவே விஜயதாஸ லியனஆரச்சியின் மரணம் ஏற்பட்டிருந்தது. மரணமடைந்த லியனஆரச்சியின் உடலில் (மரணத்துக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட) சுமார் 207 வெளிக்காயங்கள் இருந்ததனை டாக்டர் டி அல்விஸ் குறிப்பிட்டிருந்தார். உடல் முழுவதும் பரவியிருந்த உள் காயங்களுக்கு மேலதிகமாக இந்த வெளிக்காயங்கள் இருந்தன. சட்ட மருத்துவ அதிகாரிகளினால் திசுக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வுகளின் பிரகாரம், லியனஆரச்சியின் உடலில் அவதானிக்கப்பட்ட காயங்களில் பெரும்பாலானவை அவர் மரணமடைவதற்கு மூன்று முதல் எட்டு நாட்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட காயங்களாக இருந்து வந்தன. இது "பொலிசுத் தாக்குதலினால் ஏற்பட்ட மரணம்" குறித்த மற்றொரு சிறந்த உதாரணமாகும்.

இந்த அபிப்பிராயம், லியனஆரச்சியின் மரணத்துக்குக் காரணமான காயங்களை அவருக்கு ஏற்படுத்திய அடையாளம் காணத்தக்க நபர்களின்மீது அதற்கான பொறுப்பினைச் சாட்டுவதற்குப் புலனாய்வு அதிகாரிகளுக்கும், வழக்குத்தொடுக்கும் அதிகாரிகளுக்கும் தெளிவாகவே உதவியது. விஜயதாஸ லியனஆரச்சியின் மரணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணையின்போது, தான் வேறு இரண்டு கீழ்நிலைப் பொலிசு அதிகாரிகளுடன் கொழும்புக்கு வந்து ஆகஸ்ட் 25 ஆந் திகதி லியனஆரச்சியைக் கைது செய்ததாகவும் பின்னர் அவரைத் தங்காலைக்கு எடுத்துச் சென்று தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தடுப்புக்காவலில் வைத்திருந்ததாகவும் பொலிசு அத்தியட்சகர் கரவிட்டகே தர்மதாஸா ஒப்புக்கொண்டார். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த காலப்பிரிவின்போது லியனஆரச்சியை விசாரித்ததனை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால், சந்தேகநபரை

சித்திரவதைக்குள்ளாக்கியதை அவர்கள் மறுத்தனர். இங்கு மேலே குறிப்பிடப்பட்ட இந்த ஒப்புதலின் அடிப்படையில், சட்ட மருத்துவ அதிகாரியின் அபிப்பிராயத்துடன் இணைந்த விதத்தில் லியனஆரச்சியைக் கொலை செய்வதற்கு சதிசெய்தமைக்காகவும், கொலை செய்தமைக்காவும் பொ.அ.கரவிட்டகே தர்மதாஸா மற்றும் அவருடைய இரண்டு கீழ்நிலை அதிகாரிகள்மீது மாண்புமிகு சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு விசாரணை மூன்று உயர்நீதிமன்ற நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணை மன்றத்தில் நடைபெற்றது. வழக்கு 1989 டிசெம்பரில் ஆரம்பமாகியது. குற்றம் சுமத்தப்பட்டிருந்தவர்கள் குற்றப்பத்திரிகையில் இருந்த குற்றங்களுக்கு தாம் "குற்றவாளிகள் அல்ல" எனக் கூறியதனையடுத்து வழக்கு ஆரம்பித்தது. வழக்கின் முடிவின்போது, தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர், திடீரெனவும் வியப்பூட்டும் விதத்திலும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தவர்கள் விஜயதாஸா லியனஆரச்சியைக் கடத்தியமை மற்றும் சட்டவிரோதமாகத் தடுத்து வைத்திருந்தமை என்பன தொடர்பான தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். விசாரணை மன்றம் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள் உண்மையிலேயே லியனஆரச்சியைக் கொலைசெய்தார்கள் என்பதனை அரசதரப்பு வழக்குரைஞர் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கவில்லை எனக் கூறி அந்த அடிப்படையில் கொலைக் குற்றத்திலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்தது. இங்கு நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கும் ஒரு கேள்வி, குற்றம் சுமத்தப்பட்டவர்கள் லியனஆரச்சியை ஈவிரக்கமற்ற முறையில் தாக்கியதற்கும் அதன் விளைவாக அவருடைய மரணத்தை ஏற்படுத்தியதற்கும் பொறுப்பாக இருக்கவில்லை என்றால் அதனைச் செய்தவர்கள் யார் என்பதாகும். லியனஆரச்சியின் மரணத்துக்கு உண்மையிலேயே பொறுப்பானவர்கள் யார்? கரவிட்டகே தர்மதாஸாவையும் அவருடைய அதிகாரிகளையும் தவிர ஏனையவர்கள் லியனஆரச்சியைத் தாக்கினார்களா? அப்படியானால் அத்தாக்குதல் அவர் தங்காலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபொழுது இடம்பெற்றதா? அல்லது சப்புகஸ்கந்தயில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்தபொழுது இடம்பெற்றதா? இந்தக் கேள்விகளுக்கான விடைகளைச் சம்பந்தப்பட்ட குற்றச்செயலுக்குப் பொறுப்பாக இருந்துவந்த நபர்கள் மட்டுமே அறிந்திருப்பார்கள்.

எவ்வாறிருப்பினும், சப்புகஸ்கந்தையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பிரிவு தொடர்பாக பின்வரும் விடயங்களை நாங்கள் அவதானித்துள்ளோம். லியனஆரச்சி சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டதாகக் கூறப்படும் அதே தினத்தன்று, அதுவரை காலமும் பாலியகொடைப் பொலிசு நிலையத்தில் செயற்பட்டு வந்த நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவு சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு மாற்றப்பட்டது வியப்பளிப்பதாக உள்ளது. உண்மையிலேயே நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவு மாற்றப்பட்ட பின்னர் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த முதலாவது சந்தேகநபரும் ஒரேயொரு சந்தேகநபரும் லியனஆரச்சியாகவே இருந்துள்ளார் என்பதனை உத்தியோகபூர்வமான பதிவுகள் காட்டுகின்றன. இந்த மாற்றத்துக்கு வலுவான காரணம் எதுவும் முன்வைக்க முடியாதிருந்ததுடன், நாசகார நடவடிக்கைத் தடுப்புப் பிரிவு பாலியகொடையிலிருந்து சப்புகஸ்கந்தவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது குறித்து ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்ட நாசகார நடவடிக்கைத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அந்த இரு பொலிசு அதிகாரிகளினாலும் ஒரேவிதமான சாட்சியத்தை வழங்க முடியாதிருந்தது. நாசகார நடவடிக்கைத் தடுப்புப்பிரிவு பாலியகொடையிலிருந்து சப்புகஸ்கந்தவுக்கு மாற்றப்பட்டதன் நோக்கம் குறித்து ஆணைக்குழு கடுமையான சந்தேகங்களைக் கொண்டிருந்தது. லியனஆரச்சியின் மரணத்தின் பின்னர் மீண்டும் திருப்பிப் பார்க்கும்பொழுது இச்சந்தேகம் ஏற்படுகின்றது. முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவு ஆரம்பத்தில் பாலியகொடைப் பொலிசு நிலையத்தில் அமைந்திருந்தது. பாலியகொடை பொலிசு நிலையம் கண்டி பிரதான வீதியில் உள்ளது. நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவு பாலியகொடை பொலிசு நிலையத்தில் அமைந்துள்ளது என்பது பொதுவாக அறியப்பட்ட

விடயமாகும். லியனஆரச்சி கொழும்புக்கு மாற்றப்படும்போது அவருடைய பாதுகாப்பு குறித்து கரிசனை கொண்டிருந்தவர்களுக்கு (திரு.ரஞ்சித் அபேசூரியா போன்றவர்களுக்கு) லியனஆரச்சி களனி, நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதனை பொலிசுமா அதிபர் அறிவிக்க வேண்டியிருந்தது. அவ்வாறு செய்திருந்தால் திரு.அபேசூரியாவைப் போன்றவர்களும் ஏனைய வழக்கறிஞர்களும் நிச்சயமாக அதிகாரிகளிடமிருந்து அனுமதியைக் கோரிப்பெற்று லியனஆரச்சியைப் பார்ப்பதற்காக பாலியகொடைப் பொலிசு நிலையத்துக்குச் சென்றிருப்பார்கள். இக்கட்டத்தில் லியனஆரச்சிமீதான விசாரணைக்கும் அவர்மீது நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகளுக்கும் பொறுப்பாக இருந்த நபர்கள், எந்தவொரு வெளிநபருக்கும் லியனஆரச்சியைக் காட்டுவதற்குத் தயாராக இருக்கவில்லை. நிச்சயமாக பிறருக்குக் காட்டக்கூடிய நிலையில் லியனஆரச்சியின் நிலைமை இருந்துவரவில்லை. மேலும், இச்சந்தர்ப்பத்தில் லியனஆரச்சி உண்மையிலேயே பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் லியனஆரச்சிக்குப் பாதுகாப்பு வழங்கியதாகச் சாட்சியம் அளித்த பொலிசு உத்தியோகத்தர்களின் சாட்சியங்களைக் கவனத்தில் எடுத்த பின்னர், அந்தச் சாட்சியங்களை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம். லியனஆரச்சி சப்புகஸ்கந்த நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பதைக் காட்டும் நோக்கத்துக்காக மட்டுமே களனி நாசகார நடவடிக்கைத் தடுப்புப் பிரிவு பாலியகொடையிலிருந்து சப்புகஸ்கந்தவுக்கு மாற்றப்பட்டது என்பது எங்கள் உறுதியான முடிவாகும்.

லியனஆரச்சி கொழும்புக்கு எடுத்துவரப்பட்டு, களனி பிரிவில் செயற்பட்டு வரும் விசேட பிரிவில் அவர் ஒப்படைக்கப்பட வேண்டும் எனக் கேட்டு அதில் திரு.ரணில் விக்கிரமசிங்கா ஏன் தலையிட்டார் என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது. சந்தேக நபர் களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும் எனத் திரு.விக்கிரமசிங்கா விரும்பினார் என்பது தெளிவாகும். தான் ஒருபோதும் பொலிசுமா அதிபருடன் தொலைபேசியில் தொடர்புகொள்ளவில்லை என்பதும் இத்தகைய விதத்திலான் அறிவுறுத்தல்களை வழங்கவில்லை என்பதுமே ஆணைக்குழுவின் எதிரில் திரு.விக்கிரமசிங்காவின் நிலைப்பாடாக இருந்தது. பொலிசுமா அதிபர் தன்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு லியனஆரச்சியைத் தங்காலையிலிருந்து கொழும்புக்கு மாற்றுவது தொடர்பான தங்கள் முடிவைத் தெரிவித்தார் என்பதும் தடுப்புக்காவலுக்காக லியனஆரச்சியை சப்புகஸ்கந்தவுக்கு அனுப்பி வைப்பதற்கு அவருக்கு ஏதேனும் ஆட்சேபணைகள் உள்ளனவா என்று தன்னிடம் வினவினார் என்பதுமே திரு.விக்கிரமசிங்காவின் நிலைப்பாடாக இருந்தது. தனக்கு எத்தகைய ஆட்சேபணையும் இல்லையென அவர் கூறினார். இந்நிலைப்பாடு பொலிசுமா அதிபர் 1988 செத்தெம்பர் 06 ஆந் திகதி தன்னால் தயாரிக்கப்பட்ட ஒரு குறிப்பினை அடிப்படையாகக்கொண்டு ஆணைக்குழுவின் எதிரில் கூறிய விடயங்களுக்கு முற்றிலும் மாறானதாகும். அந்த ஆவணத்தின் ஒரு பிரதி X85 எனக் குறியிடப்பட்டு அவரால் சமர்ப்பிக்கப்பட்டது. லியனஆரச்சியின் மரணத்தையடுத்து, அந்த மரணம் குறித்துப் பாராளுமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பப்பட்டு இருந்ததினால் அக்கேள்விக்குப் பதிலளிக்கும்பொருட்டு தனக்கு லியனஆரச்சியின் கைது மற்றும் தடுப்புக்காவல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளின் காலவரன்முறையை விளக்கும் குறிப்பொன்றைத் தயாரித்துத் தருமாறு திரு.லலித் அத்துலத்முதலி பொலிசுமா அதிபரிடம் கேட்டுக்கொண்டிருந்தார். இது தொடர்பாக ஏர்னஸ்ட் பெரேரா தயாரித்த குறிப்பின் பிரதியே X85 ஆகும். சந்தேக நபர் கொழும்புக்கு எடுத்துவரப்பட்டு, களனியில் செயற்பட்டு வரும் விசேட பிரிவுக்கு கையளிக்கப்படல் வேண்டும் என திரு.ரணில் விக்கிரமசிங்காவே கேட்டுக்கொண்டுள்ளார் என்பதனை இந்தக் குறிப்பு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. 1988 வரை பின்னோக்கிய ஓர் காலத்தில், திரு.ரணில் விக்கிரமசிங்காவை மிக மோசமாகப் பாதிக்கக்கூடிய சமகால நிகழ்வொன்று குறித்த பொய்யான குறிப்பொன்றை பொலிசுமா அதிபர் ஏன் தயாரித்திருக்க வேண்டும்? உண்மையிலேயே ஆணைக்குழுவின் எதிரில் ஏர்னஸ்ட் பெரேரா கூறிய விடயம் தவறானதாக இருந்திருந்தால் திரு.விக்கிரமசிங்காவை பிரதிநிதித்துவம்

செய்த வழக்கறிஞர் ஏர்னஸ்ட் பெரேராவை குறுக்கு விசாரணை செய்ய முன்வராததது ஏன்? திரு.விக்கிரமசிங்காவின் சார்பில் அத்தகைய விண்ணப்பம் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பாக திரு.விக்கிரமசிங்கா கூறியது சரியானது என நாங்கள் கருதிக்கொண்டாலும் கூட, தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்காக லியனஆரச்சியை சப்புகஸ்கந்தவுக்கு (சப்புகஸக்நத அமைச்சரின் தேர்தல் தொகுதியில் அமைந்திருந்தது) எடுத்து வருவதில் அவருக்கு ஏதேனும் ஆட்சேபணை உள்ளனவா? என நாட்டின் பொலிசுமா அதிபர், கைத்தொழில் அமைச்சரிடம் (களனிப் பிரதேசத்தில் செயற்பட்டு வந்த இந்த விசேட பிரிவின் செயற்பாடுகளின் நெறிப்படுத்துகையை உண்மையிலேயே கைத்தொழில் அமைச்சர் கையாண்டு வந்தாலேயொழிய ) ஏன் விசாரித்து இருக்கவேண்டும்? அவ்வாறிருப்பினும் இந்த விடயம் தொடர்பாக ஏர்னஸ்ட் பெரேராவின் சாட்சியம் குறித்து ஆணைக்குழுவுக்கு எவ்வித சந்தேகமும் இல்லை என்பதனை நாங்கள் தெளிவாகக் குறிப்பட விரும்புவதுடன், அதன் அடிப்படையில் திரு.விக்கிரமசிங்காவின் சாட்சியத்தைத் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம்.

இந்த முன்னனுமானத்தின் அடிப்படையில் இங்கு பதில் காணப்பட வேண்டிய கேள்வி, பொலிசுமா அதிபர், லியனஆரச்சியை மேற்குறிப்பிடப்பட்ட விசேட பிரிவில் ஒப்படைக்க வேண்டும் என திரு.விக்கிரமசிங்கா கேட்டுக் கொண்டது ஏன்? என்பதாகும். இந்தப் "பொலிசு விவகாரத்தில்" தலையிடுவதற்கு திரு.விக்கிரமசிங்காவுக்கு என்ன அவசியம் இருந்து வந்தது? அவருடைய நடத்தை களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் நடவடிக்கைகளிலான அவருடைய தொடர்பிலிருந்து தோன்றவில்லையா? அது கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் என்ற முறையில் அவர் தரப்பிலான ஒரு உத்தியோகபூர்வமான செயலாக நிச்சயமாக இருந்து வரவில்லை. களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவு, லியனஆரச்சியை விசாரணை செய்வதில் அக்கறை கொண்டிருந்தாலும்கூட, அது உபொஅ டக்ளஸ் பீரிஸினால் மேற்கொள்ளப்பட வேண்யடிருந்த ஒரு விடயமாகவே இருந்திருக்கும். நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் நடவடிக்கைகளில் திரு.விக்கிரமசிங்கா எந்த அளவுக்கு சம்பந்தப்பட்டிருந்தார் என்பதனைத் தெளிவாகக் காட்டும் ஒரு சம்பவமாக இது உள்ளது. பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடத்தப்பட்ட சம்பந்தப்பட்ட கூட்டங்களின் பொருத்தப்பாட்டினை இப்பொழுது அவதானிக்கலாம். இந்த விசேட பிரிவு உண்மையிலேயே பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலிருந்த ஒரு வீட்டிலிருந்து செயற்பட்டு வந்ததினைத் தான் அறிந்திருந்ததாக பொலிசுமா அதிபர் கூறிய சாட்சி, இதற்கு, மேலும் வலு சேர்க்கிறது. அவ்வாறானால், உண்மையில் லியனஆரச்சி எங்கு எடுத்துச் செல்லப்பட்டார்?அவர் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு அன்றி பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதுபோல் தென்படுகின்றது. இந்த ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட புலனாய்வுகளும் ஆணைக்குழுவின் எதிரில் வைக்கப்பட்ட சாட்சியங்களும் லியனஆரச்சியின் கொலை தொடர்பாக பொலிசு அத்தியட்சகர் கரவிட்டகே தர்மதாஸா மற்றும் அவருடைய கீழ் அதிகாரிகள் ஆகியோரை குற்றவாளிகளாக்காமல் இருந்ததன் மூலம் விசாரணை மன்றத்தின் நீதிபதிகள் காட்டிய விவேகத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள வீடுகளின் நிலையை இங்கு இணைக்கப்பட்டுள்ள பட்டியல் சுருக்கமாக எடுத்துக் காட்டுகின்றது.

## அத்தியாயம் VI
## சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீதான தாக்குதல்

முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல களனிப் பிரிவில் செயற்பட்டு வந்த சப்புகஸ்கந்த பொலிசு நிலையம் சார்பு ரீதியில் ஒரு சிறிய பொலிசு நிலையமாக இருந்து வந்தது. அது, 1989 இல் "C" தரத்தைச் சேர்ந்த ஒரு பொலிசு நிலையமாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. பொலிசு நிலையத்தின் பிரதான இரு கட்டிடம் ஓரளவுக்குப் புதிய கட்டிடமொன்றாக இருந்து வந்ததுடன். அது கிரிபத்கொட - பியகம பாதையிலிருந்து சுமார் 10 மீற்றர்கள் தொலைவில் அமைந்திருந்தது. சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் பணிபுரிந்து வந்த உத்தியோகத்தர்களின் பொறுப்பில் விடப்பட்டு இருந்த பிரதானமான கடமை சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்குப் பாதுகாப்பு வழங்குவதாகும். எனினும், சுத்திகரிப்பு நிலையத்துக்கு உள்ளேயான பாதுகாப்புப்பணி சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் பொறுப்பில் விடப்பட்டு இருக்கவில்லை. வேறு எந்தவொரு பொலிசு நிலையத்திலும் போலவே, இந்த நிலையத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் சாதாரண பந்தோபஸ்து மற்றும் பொலிசுப் பணிகளில் ஈடுபடவேண்டியிருந்தது. இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஒரு முக்கியமான பாதுகாப்புக் கடமை திரு.ரணில் விக்கிரமசிங்கா அப்பிரதேசத்துக்கு வருகை தரும்பொழுதும், பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அவர் தங்கியிருக்கும்பொழுதும் அவருக்குப் பாதுகாப்பு அளிப்பதாகும். திரு.ரணில் விக்கிரமசிங்கா வசித்துவந்த சம்பந்தப்பட்ட இல்லத்துக்கும் சூழவுள்ள பிரதேசத்துக்கும் இந்தப் பொலிசு நிலையத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு வழங்கவேண்டியிருந்தது.

1989 யூலை 11ஆந் திகதி பொலிசுப் பரிசோதகர் லலித் மகாநாம, சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் பொறுப்பு அதிகாரியாகக் கடமையேற்றார். உப பொலிசுப் பரிசோதகர் ரோஹித பிரியதர்ஸனா அந்தப் பொலிசு நிலையத்தின் குற்றப்பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாக இருந்து வந்தார்.

1989 யூலை 16 அந் திகதி இரவு சப்புகஸ்கந்த பொலிசு உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் ஒரு விசேடமான நாளாக இருந்துவரவில்லை. புதிதாக நியமனம் செய்யப்பட்ட நிலையத்தின் பொறுப்பதிகாரியான லலித் மகாநாம வழமையான ஒரு கடமையை முடித்துக்கொண்டு உப பரிசோதகர் ரோஹித பிரியதர்ஸனாவுடன் நிலையத்துக்குத் திரும்பி வந்தார். அதன்பின்னர், அவர் நிலையத்தின் கீழ் மாடியில் இருந்த ஓய்வறையில் ஓய்வெடுக்கச் சென்றார். உப பரிசோதகர் பிரியதர்ஸனா தொடர்ந்தும் கடமையில் இருந்தார். அந்தப் பொலிசு நிலையத்தில் இரண்டாவது சிரேட்ட அதிகாரியாக அவர் இருந்து வந்தார். லலித் மகாநாமாவினால் பிரியதர்ஸனாவுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், பிரியதர்ஸனா 17 ஆந் திகதி இரவு 2.00 மணியளவில் வேறு நான்கு உத்தியோகத்தர்களுடன் ரோந்துப் பணிக்கென வெளியே சென்றார்.

இரவு 2.55 அளவில் திடீரென பொலிசு நிலையத்தின் மேல்மாடியின் பின்புறத்தில் உரத்த சத்தத்துடன் ஒரு திடீர் வெடிப்போசை ஏற்பட்டது. இந்த உரத்த சத்தம் காரணமாக உத்தியோகத்தர்கள் தமது ஓய்விலிருந்து திடீரென விழித்துக் கொண்டனர். இந்தக் குண்டுவெடிப்பின் சத்தத்தைப் பலமைல்கள் தூரத்துக்கு அப்பால் இருந்த நபர்களும் செவிமடுக்கக் கூடியதாக இருந்தது. உண்மையிலேயே, பல மைல் தூரம் மாவரமண்டிய அளவில், இருந்த உப பரிசோதகர் ரோஹித பிரியதர்ஸனாவுக்கும் அவருடன் சென்ற பொலிசுக் குழுவினருக்கும் கூட சத்தம் கேட்டது. ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்கலாம் எனச் சந்தேகித்த அவர்கள் பொலிசு நிலையத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். மீண்டும் புறப்படுவதற்கு முன்னர் பிரியதர்ஸனா சப்புகஸ்கந்த நிலையத்துடன் தொடர்புகொள்ள முயற்சித்தார். ஆனால் அவருடைய நடமாடும் தொடர்பு சாதனத்துக்கு ஊடாக அவரால் பொலிசு நிலையத்துடன்

தொடர்பை ஸ்தாபித்துக்கொள்ள முடியாதிருந்தது. அதன்பின்னர், அவர் கடவத்தைப் பொலிசு நிலையத்துடன் தொடர்புகொண்டு, அங்கிருந்த அதிகாரிகளுக்கு தனக்குக் கேட்ட சத்தம் குறித்து எச்சரிக்கை விடுத்ததுடன் சப்புகஸ்கந்த பொலிசு நிலையம் ஆபத்தில் சிக்கியுள்ளது எனச் சூழவிருக்கும் பொலிசு நிலையங்களுக்கு அவர் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். சப்புகஸ்கந்தயில் ரேடியோத் தொடர்புக்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர் தனது அழைப்புக்குப் பதிலளிக்காது இருந்த காரணத்தினால் அவர் இந்த முடிவுக்கு வந்திருக்கக்கூடும்.

அநேகமாக அந்த வெடிப்புச் சத்தத்துடன் இணைந்த விதத்தில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையம் மீது கட்டிடத்தின் வலது பக்கத்திலிருந்து துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கட்டிடத்தின் இந்தப் பக்கத்தில் மரண விசாரணை அதிகாரியொருவருக்குச் சொந்தமான ஒரு வெற்றுநிலம் இருந்தது. பொலிசு நிலைய வளவின் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் அமைந்திருந்த (இந்த நுழைவாயில் பிரதான கட்டிடத்துக்கு எதிரில் அமைந்திருந்தது) காவல் அறையிலிருந்து பொலிசு நிலையத்துக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த உத்தியோகத்தர்கள் வெற்றுநிலம் இருந்த பக்கத்திலிருந்து ஆட்கள் பொலிசு நிலையத்தின் பிரதான கட்டிடத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதனைக் கண்டனர். தாக்குதல் நடத்தியவர்களில் சிலர் பொலிசு நிலையத்தையும் வெற்றுநிலத்தையும் பிரித்த மதில் சுவரில் ஏறிக் குதிப்பதில் வெற்றியடைந்தனர். தாக்குதல் நடத்தியவர்களில் சிலர் பொலிசு நிலைய வளவுக்குள்ளும் பொலிசு நிலையத்தின் கட்டிடத்துக்குள்ளேயும்கூட பிரவேசித்து இருப்பதுபோல் தெரிகின்றது . விழிப்படைந்த பரிசோதகர் மகாநாம தாக்கியவர்களை நோக்கிச் சுடத் தொடங்கினார். எனினும், ஒருநபர் மகாநாம இருந்த அறைக்கு மிக அருகில் வந்ததுடன், பரிசோதகர் மகாநாமவைச் சுட்டு வீழ்த்துவதில் வெற்றிகண்டார். ஏனைய பொலிசு உத்தியோகத்தர்கள் சரணடைய வேண்டும் என இந்நேரமளவில் தாக்குதல் நடத்தியவர்கள் கட்டளையிட்டனர். பொலிசுச் சார்ஜன்ட் ரூபாநந்தவும் ஆரியரத்னாவும் ஏனைய உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து இந்தத் தாக்குதலை துப்பாக்கிப் பிரயோகத்தின் மூலம் மிகவும் துணிச்சலான முறையில் முறியடித்தனர். துப்பாக்கிப் பிரயோகம் சிறிதுநேரத்துக்குத் தொடர்ச்சியாக இடம்பெற்றது. பொலிசாரின் எதிர்த் தாக்குதலை சமாளிக்க முடியாது, தாக்குதல் நடத்தியவர்கள் பொலிசு நிலைய வளவுக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திய அதே மார்க்கத்துக்கூடாக பின்வாங்கிச் செல்லத் தொடங்கினர். துப்பாக்கிப் பிரயோகம் முடிவுக்கு வந்தபோது இராணுவவீரர் குழு அந்த இடத்துக்கு வந்திருந்தது. அநேகமாக அதேநேரத்தில் உப பரிசோதகர் பிரியதர்ஸனாவும் அவரது குழுவினரும் அங்கு வந்தனர். இந்த இரு கோஷ்டிகளும் கூட துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். எவ்வாறிருப்பினும், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்குள் ஒருசில உத்தியோகத்தர்களின் துணிச்சல் காரணமாக இந்தத் தாக்குதலை வீரத்துடன் முறியடித்த பிரதான சக்தியாக அவர்கள் இருந்து வந்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். பொலிசு நிலைய கட்டிடத்தின் உள்ளேயிருந்து இத்தாக்குதலை எதிர்த்து நின்ற அதிகாரிகளில் சிலர்- பரிசோதகர் லலித் மகாநாம, பிசேவ் கான்ஸ்டபிள் 6584 சரத்குமார மற்றும் 12336 தயானந்தா முதலியவர்கள் இத்தாக்குதலின்போது பெற்றுக்கொண்ட காயங்களின் விளைவாக மரணம் அடைந்தனர் என்பதனையும், சார்ஜன்ட் ரூபாநந்தவும் இன்னொருவரும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களைப் பெற்றிருந்தனர் என்பதையும் நோக்கும்போது அவர்கள் காட்டிய வீரம் தெளிவாகின்றது. மேலும், பொலிசு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலின் விளைவாக குறிப்பாக பிரதான கட்டிடத்துக்கு உள்ளே இருந்த பொலிசு உத்தியோகத்தர்களினாலும் கட்டித்துக்கு எதிரில் இருந்த காவல் நிலையத்திலிருந்த பொலிசு உத்தியோகத்தர்களாலும் மேற்கொள்ளப்பட்ட எதிர்த் தாக்குதல்களின் விளைவாக தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் துப்பாக்கிச் சூட்டில் மரணம் அடைந்தனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் பின்வாங்கிச் சென்ற சில கணங்களின் பின்னர், இதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் பொலிசு உத்தியோகத்தர்கள் தேடுதல் நடத்தியதுடன், முன்னர் குறிப்பிடப்பட்ட வெற்றுநிலத்தில் தாக்குதல் நடத்தி வந்த இருவரின் சடலங்கள் இருப்பதனையும் கண்டு பிடித்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக ரோஹித பிரியதர்ஸனாவால் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன், அங்கு மூன்று அதிகாரிகள் தமது காயங்கள் காரணமாக மரணமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. பொலிசு நிலையத்தில் தேடுதல் நடத்தியபொழுது தாக்குதல் நடத்தியவர்கள், 84 எஸ் வகையைச் சேர்ந்த ஒரு ரைபிள், பரிசோதகர் லலித் மகாநாமாவின் ரிவோல்வர் மற்றும் சரத் குமாரவிடம் இருந்த ரிப்பீட்டர் துப்பாக்கி ஆகிய மூன்று ஆயுதங்களை எடுத்தச் சென்றிருப்பது தெரியவந்தது. பொலிசு நிலையக் கட்டிடத்தின் மேல்மாடியின் பின்பகுதியில் அமைந்திருந்த கழிப்பறையைச் சூழவுள்ள பிரதேசம் மிக மோசமாகச் சேதமடைந்திருந்தது. உட்கூரை கீழே விழுந்திருந்தது. அருகிலிருந்த சுவர்களில் சிலவும் மிகக் கடுமையாகச் சேதம் அடைந்திருந்தன. இந்தச் சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்ட உதவிப் பொலிசு அத்தியட்சகர் ராஜா டயஸ் போன்ற அதிகாரிகள் கழிப்பறைக்குள் இருந்த ஒரு குண்டு வெடித்ததன் காரணமாகவே கட்டிடத்துக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்ற தெளிவான கருத்தைக் கொண்டிருந்தனர். மேலும், விபரிப்பதற்கு முன்னர், இந்தத் தாக்குதல் இடம்பெற்று ஒருசில மணித்தியாலத்துக்குள் இந்த இடத்தில் இருந்த அதிகாரிகள் எவரும் தாக்குதல் இடம்பெற்ற இடத்தை பரிசோதனை செய்வதற்காக அரசாங்கப் பகுப்பாய்வாளரை அழைப்பது அவசியம் எனக் கருதவில்லை என்பதனை இக்கட்டத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இப்பிரதேசத்தின் பிரதிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னா(சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பாக இருந்த) சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் நளின் தெல்கொட மற்றும் உபொஅ ராஜா டயஸ் ஆகியோர், ஏற்பட்டுள்ள சேதத்தைப் பார்ப்பதற்காகவே இருந்து வந்துள்ளதுபோல் தெரிகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக வருகைதரும் அதிகாரிகளின் பதிவுப் புத்தகத்தின் குறிப்புகளையும் குறிப்பாகச் சம்பவம் நடைபெற்ற ஒருசில மணித்தியாலங்களுக்குள் சிபொஅ நளின் தெல்கொட எழுதிய குறிப்புகளையும் கவனத்தில் எடுக்கும்பொழுது இது தெளிவாகின்றது. இந்தச் சம்பவ இடத்தைப் பரிசோதனை செய்வதற்காக அரசாங்க பகுப்பாய்வாளர் அழைக்கப்படாதது ஏன் என்பதற்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் எவராலும் திருப்திகரமான ஒரு விளக்கத்தை முன்வைக்க முடியாதிருந்தது. சம்பவம் நடைபெற்ற இடத்தில் பல வெற்றுத் தோட்டாக்கள் காணப்பட்டமையினால் அரசாங்கப் பகுப்பாய்வாளரை அந்த இடத்துக்கு அழைத்து வந்திருக்க வேண்டியது மிக முக்கியமாகும். இந்தத் தாக்குதலில் பங்குபற்றிய சந்தேக நபர்கள் கைது செய்யப்படும் சந்தர்ப்பத்திலும் இத்தாக்குதலில் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஆயுதங்கள் மீட்கப்படும் சந்தர்ப்பத்திலும் தாக்குதலில் ஒவ்வொரு சந்தேகநபரும் வகித்து வந்திருக்கும் பங்கினை நிர்ணயித்துக் கொள்வதற்கு அரசாங்கப் பகுப்பாய்வாளரின் சாட்சி மிக முக்கியமாக தேவைப்பட்டிருக்கும். அத்தகைய ஒரு இடத்துக்கு அரசாங்கப் பகுப்பாய்வாளரை வரவழைப்பது முதலாவது வேலையாக உள்ளது. இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் சமீபத்திய படுகொலையை இங்கு நினைவூட்டலாம். அப்படுகொலை இடம்பெற்றபொழுது சுமார் இரண்டு வருடங்களுக்கு சம்பவம் நடைபெற்ற இடம் (கலைக்கப்படாமல்) அவ்வாறே விடப்பட்டு இருந்தது. அந்தச் சம்பவத்துக்கு நேர்மாறான விதத்தில், இந்தச் சம்பவத்தின்போது சிரேட்ட அதிகாரிகள் என்ன செய்தார்கள்? அவர்கள் அக்கட்டிடத்தில் திருத்த வேலைகள் செய்வதற்காக உடனடியாக மேசன்மார்களை அழைத்து வந்தனர். அவ்வாறு செய்வதற்கான அவசரம்தான் என்ன? தாக்குதல் நடத்தியவர்களை அடையாளம் காண்பதற்கு உதவக்கூடிய சாட்சியங்களை மூடிமறைப்பதில் எவரேனும் அக்கறை கொண்டிருந்தனரா?

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு முதலில் வந்து சேர்ந்த சிரேட்ட அதிகாரிகள் உபொஅ ராஜா டயஸ் மற்றும் உபொஅ டக்ளஸ் பீரிஸ் ஆகியோர் ஆவர். அவர்கள் அதிகாலை 3.15 அளவில் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்திருப்பதுபோல்

தெரிகின்றது. முன்னர் குறிப்பிடப்பட்ட இடத்துக்கு அவர் அதிகாலை 3.20 அளவில் வந்துள்ளார். ஆனால், நளின் தெல்கொடவின் வாய்மூலமான சாட்சியத்தின் பிரகாரம் சம்பவ இடத்துக்கு அவர் வந்து சேர்ந்தபொழுது, பொழுது விடிந்துகொண்டு இருந்ததுடன், அப்பகுதியில் வெளிச்சம் பரவத் தொடங்கியிருந்தது. இத்தகைய சூழ்நிலைகளின்கீழ் நளின் தெல்கொடவின் வாய்மூலமான சாட்சியம் அவரது குறிப்புகளிலிருந்து முரண்பட்டதாக இருந்து வந்தது ஏன்? என்பது எமக்குப் புரியவில்லை. பிரதிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னா அதிகாலை 4.00 மணியளவில் அங்கு வந்து சேர்ந்தார்.

**அதைத் தொடர்ந்த புலனாய்வுகள்.........**

சப்புகஸ்கந்த பொலிசு நிலையம் மீதான தாக்குதல் புதிய சட்ட அமுலாக்கல் முகவரகங்களுக்கு ஒரு கடும் அதிர்ச்சியாக இருந்திருக்கலாம். அது 1971 ஏப்பிரல் ஜே.வி.பி.யினால் பொலிசு நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை நினைவூட்டக் கூடும். எனவே, இந்தத் தாக்குதல் தொடர்பாக பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகள் குறித்து நாங்கள் விரிவாக விசாரணைகளை நடத்தினோம். மேலோட்டமாகப் பார்க்கும்போது, ஒரு கோஷ்டி நன்கு திட்டமிட்டு இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருப்பதனைக் காண முடிந்தபோதிலும் இந்தத் தாக்குதலை நடாத்தியவர்கள், சதியில் ஈடுபட்டவர்கள், தாக்குதலை நடத்தியவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்கள் என்போரை அடையாளம் கண்டுகொள்ளும்பொருட்டு புலனாய்வாளர்கள் இந்த விடயத்தை விரிவாக ஆய்வு செய்வது அவசியமாக இருந்தது. மேலும், இந்தத் தாக்குதலுக்கான நோக்கத்தைக் கண்டறிந்து கொள்வதும் மிக முக்கியமாகும். இந்தத் தாக்குதல் இப்பிரதேசத்தின் பாதுகாப்பின் இயல்பையும் எடுத்துக் காட்டியது. சப்புகஸ்கந்த அமைச்சரவை அமைச்சரொருவர் வாரத்துக்கு ஆகக்குறைந்தது இரண்டு அல்லது மூன்று நாட்கள் வசித்து வந்த ஒரு பிரதேசமாக இருந்து வந்தது. மற்றொரு காரணத்துக்காகவும் விரிவான ஒரு புலனாய்வினை நடாத்துவது அவசியமாக இருந்தது. பொலிசு நிலையத்தின் மேல்மாடியில் அமைந்திருந்த கழிப்பறையில் யாரோ ஒரு நபர் அந்த வெடிக்கும் பொருளை வைத்துள்ளார் என்பது தெளிவாகும். அதனைச் செய்தவர் யார்? இதில் உள்நபர் ஒருவரின் தொடர்பு இருந்ததாக நாங்கள் இது தொடர்பாக மேற்கொண்ட புலனாய்வினை இப்பொழுது பரிசீலனை செய்வோம்.

சம்பவ இடத்துக்கு வந்த பிரதிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னாவும் சிபொஅ நளின் தெல்கொடவும் அந்த இடத்தைப் பரிசோதனை செய்து, தமது அவதானிப்புக்கள் குறித்த குறிப்புக்களை எழுதியதுடன், இது தொடர்பான புலனாய்வுகள் எவ்விதம் நடத்தப்படல் வேண்டும் என்பது குறித்தும் அறிவுறுத்தல்களை வழங்கினர். மேலும், அவர்கள் இப்புலனாய்வுகளை மேற்பார்வை செய்தனர். இப்புலனாய்வை நடாத்தும் பொறுப்பு உபொஅ ராஜா டயஸ்சிடம் விடப்பட்டு இருந்தது. ராஜா டயஸினால் மூலப் புலனாய்வுகள் குறித்த குறிப்புகள் எழுதப்பட்டு இருந்த கோப்பைத் தேடிப்பெறுவதற்காக ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சம்பந்தப்பட்ட கோப்பு களனி பொலிசுப் பிரிவிலிருந்து காணாமல் போயிருந்ததினால் வெற்றியளிக்கவில்லை. எனினும், ராஜா டயஸின் கீழ் அதிகாரி என்ற முறையில் களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் பரிசோதகர் விக்கிரமசிங்காவின் குறிப்புகள் எமக்குக் கிடைத்தன.

முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டவுடனேயே, பொலிசு நிலையத்தின் வலதுபக்கத்தில் இருக்கும் வெற்று நிலத்தில் தாக்குதல் நடத்தியவர்கள், இருவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தாக்குதல் முறியடிக்கப்பட்ட ஒருசில நிமிடங்களின் பின்னர் இச்சடலங்களின் கண்டுபிடிப்பு இடம்பெற்றுள்ளது. சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்து சேர்ந்த மெரில் குணரத்னா, நளின் தெல்கொட மற்றும் ராஜா டயஸ் ஆகியோர் உள்ளிட்ட சிரேட்ட அதிகாரிகள் அனைவரும் அச்சடலங்களின் கண்டுபிடிப்பில்

பங்கேற்றிருந்தனர். இரு சடலங்களின் கண்டுபிடிப்பை விலைமதிக்க முடியாத ஓர் ஆதாரமாகக் கருதி இந்தச் சடலங்களை அடையாளம் காண்பதற்கான விசாரணைகளை புலனாய்வாளர்கள் உடனடியாகத் தொடங்கியிருப்பார்கள் என்றும், அந்தப் புள்ளியிலிருந்து தமது நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பார்கள் என்றும் ஒருவர் எதிர்பார்த்திருக்கலாம். இந்த இரு அடையாளங்களையும் அடையாளம் காண்பதானது, இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பான குழு முழுவதையும் அடையாளம் கண்டுகொள்வதற்கு பெரும் உதவியாக இருந்திருக்கும் என்பதனையும், தாக்குதல் நடத்தியவர்களின் நோக்கம் குறித்த ஒரு உதவிக் குறிப்பை வழங்கியிருக்கும் என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை.

சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இணைந்த விதத்தில் அதில் ஒரு சடலம் களுவா என அழைக்கப்பட்ட சுமித் பெரேரா என்பவரின் சடலம் என்பதனை அப்பிரதேசத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அடையாளம் கண்டுகொண்டனர். யூலை 17 ஆந் திகதி அதிகாலையிலேயே( நாசகார நடவடிக்கைத் தடுப்புப் பிரிவின் பொறுப்பு அதிகாரியான) பரிசோதகர் விக்கிரமசிங்கா பியகம பொலிசு நிலையத்துக்கு அவசரமாகச் சென்று பொ.கா.27388 சஜீவ தம்மிகவை சப்புகஸகந்த பொலிசு நிலையத்துக்கு அழைத்து வந்தார். அவர் உபொஅ ராஜா டயஸின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். சஜீவவின் மைத்துனர் சப்புகஸ்கந்த பொலிசு நிலையம் மீதான தாக்குதலில் பங்கேற்றுள்ளதாகவும், அதனையடுத்து ஏற்பட்ட சண்டையில் கொல்லப்பட்டுள்ளதாகவும் சஜீவ தம்மிகவிடம் உபொஅ தெரிவித்தார். சடலம் வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு அவர் சென்று, சடலத்தை களுவா என்றழைக்கப்பட்ட சுமித் பெரேராவின் சடலம் என்பதனை அடையாளம காட்டினார். இக்காலப் பிரிவின்போது சஜீவ தம்மிக கைதுசெய்யப்பட்டு, 14 நாட்களுக்கு சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது. அக்காலப்பிரிவின் பின்னர், அவர் நீதவான் ஒருவர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், நீதவான் அவரை பிணையில் விடுவித்துள்ளார். இந்த வழக்கு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் மூன்று தடவைகள் அழைக்கப்பட்டு இருந்ததுடன் அதனையடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக மேலும் நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. அவர் பொலிசுச் சேவையில் தொடர்ந்து இருந்து வந்துள்ளார்.

அந்தத் தாக்குதல் இடம்பெற்ற அதேகாலையிலேயே பரிசோதகர் விக்கிரமசிங்கா தாமே களுவா என்றழைக்கப்பட்ட சுமித் பெரேராவின் மனைவியான லலானி ரேணுகா என்றழைக்கப்பட்ட சிறாணி பெரேரா என்பவரையும் கைது செய்திருந்தார். அவர் இல.50, ஜயவீர மாவத்தை, கோணவல என்ற இடத்தில் வசித்து வந்தார். அவரைக் கைதுசெய்யும்பொழுது சப்புகஸகந்த பொலிசு நிலையத்தைத் தாக்கியபொழுது அவருடைய கணவர் களுவா கொல்லப்பட்டுள்ளார் என்பதனை விக்கிரமசிங்கா அவரிடம் தெரிவித்தார். கைது செய்யப்பட்ட பின்னர் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு எடுத்துவரப்பட்ட அவர், அங்கு தனது கணவனான களுவாவின் சடலத்தை அடையாளம் காட்டினார். அவரும் ஒரு தடுப்புக்காவல் உத்தரவின் அடிப்படையில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். 1989 ஆகஸ்ட் 10 ஆந் திகதியன்று அவர் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், மேலும் விசாரணை எதுவுமின்றி விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சூழ்நிலைகளின் பின்னணியில் களுவா என்றழைக்கப்பட்ட சுமித் பெரேரா என்ற நபர் யார்? என்பதனைக் கண்டறிவதற்காக ஆணைக்குழு மேலும் விசாரணைகளை மேற்கொண்டது. சுமித் பெரேரா கோணவலயைச் சேர்ந்த பியதாஸா பெரேராவின் மகனாவார். பியதாஸா பெரேராவுக்கு ஏழு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் சமி பெரேரா, ஹரல்ட் பெரேரா, வின்சன்ட் பெரேரா, சிறில் பெரேரா, ஷெல்ரன் பெரேரா,(கொணவல சுனில் என்றழைக்கப்பட்ட) சுனில் பெரேரா மற்றும் ரியூடர் பெரேரா ஆகியோர் ஆவர். சுமித் பெரேரா பேர்கன் லங்கா என்று அழைக்கப்பட்ட ஒரு தனியார் கம்பனியின் மேற்பார்வையாளராக வேலைசெய்து வந்தார். அவர், லலானி ரேணுகா என்றழைக்கப்பட்ட

சிறானி பெரேராவை 1985 இல் மணம்புரிந்தார். கோணவலையைச் சேர்ந்த பெரேரா குடும்பம் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் என்பது நன்கு அறியப்பட்ட ஒரு விடயமாகும். அவர்களில் தீவிர அரசியலில் ஈடுபட்டவர் சுமித்தின் சிற்றப்பாவான கோணவல சுனில் என்றழைக்கப்பட்ட சுனில் பெரேரா ஆவார். திரு.ரணில் விக்கிரமசிங்காவின் கூற்றின் பிரகாரம் சுனில் அவருடைய ஒரு தீவிர ஆதரவாளராக இருந்து வந்ததுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரதேசத் தலைவராகவும் ("பிராதேசிய நாயகயா") செயற்பட்டிருந்தார். கோணவல சுனில் நீண்டகாலமாக திரு.ரணில் விக்கிரமசிங்காவுடன் நெருக்கமாகப் பழகி வந்தார். கோணவல சுனிலின் வீட்டில் இடம்பெற்ற விருந்துகளுக்கும் கூட திரு.விக்கிரமசிங்கா அழைக்கப்பட்டு இருந்தார். திரு.விக்கிரமசிங்கா வெளிநாடு சென்று இலங்கைக்குத் திரும்பி வரும்பொழுது அவரை வரவேற்பதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் செல்லும் பழக்கத்தைக் கோணவல சுனில் கொண்டிருந்தார். விமான நிலையத்தில் திரு.விக்கிரமசிங்கா கோணவல சுனிலுடனும் ஏனையவர்களுடனும் இருக்கும் ஒரு புகைப்படத்தை திரு.விக்கிரமசிங்காவிடம் காட்டியபொழுது, அவர் இந்த விடயத்தை ஏற்றுக் கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டங்களை நடாத்துவதற்காக கோணவல சுனிலின் வீடு அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. திரு.விக்கிரமசிங்கா பட்டலந்தயில் வசித்து வந்த விருந்தினர் விடுதியின் மேற்பார்வையாளரான வின்சன்ட் பெர்ணாந்துவின் சாட்சியத்தின் பிரகாரம், திரு.விக்கிரமசிங்கா விருந்தினர் விடுதியில் தங்கியிருக்கும்பொழுது கோணவல சுனில் அங்கு அடிக்கடி வந்து சென்றுள்ளார்.

தனது அரசியல் நடவடிக்கைகளைத் தவிர, கோணவல சுனில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பதும் தெரிகின்றது. 1970 களின் பிற்பகுதியில் டாக்டர் போல் என்பவரின் மகளைக் கற்பழித்துள்ளார். வழக்கின் பின்னர் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டு, 15 வருட கடுங்காவல் சிறைத்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. மேன்முறையீட்டிலும் கூட அவருடைய குற்றம் ஊர்ஜிதம் செய்யப்பட்டதுடன் அந்த முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும், மேன்முறையீட்டின் விசாரணையை உடனடுத்து அப்போதைய அரசாங்கத்தினால் கோணவல சுனில் ஒரு மன்னிப்பைப் பெற்றுக்கொண்டதுடன், அதன்பிரகாரம் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகள் இன்னமும் சந்தேகத்துக்கு இடமானவையாகவே இருந்து வருகின்றன. இந்தச் சம்பவம் தவிர, கொலன்னாவையிலிருந்து சப்புகஸ்கந்தவுக்கு தரைகீழ் குழாய் மார்க்கமொன்றுக்கூடாக, அனுப்பப்பட்டு வரும் எண்ணெய்யை கோணவல சுனில் களவாடியதாகவும் கூறப்படுகின்றது. எனினும், அவருக்கு எதிராக குற்றவழக்கு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெரிகின்றது. குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டிருந்தபோதிலும், கோணவல சுனில் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் செய்யப்பட்டு இருந்தார். இந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துச் சாட்சியங்களிலிருந்தும் இந்த ஆணைக்குழுவுக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த விடயங்களிலிருந்தும் கோணவல சுனில் அதிகாரத்தில் இருந்தவர்களின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டிருந்த ஒரு நபர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. கிளர்ச்சிக்காரர் எனச் சந்தேகிக்கப்படும் ஒரு துப்பாக்கி நபரினால் 1988 இன் தொடக்கத்தில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கோணவல சுனில் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்து வந்தமையால் கிளர்ச்சிக்காரர்களால் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். கோணவல பெரேரா குடும்பத்தின் எந்தவொரு உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர வேறு எந்தவொரு அரசியல் கட்சியினதும் உறுப்பினர்களாகவோ அல்லது ஆதரவாளர்களாகவோ இருந்து வந்துள்ளார்கள் என்பதற்கான எத்தகைய சாட்சியங்களும் இந்த ஆணைக்குழுவின் முன்னால் வைக்கப்படவில்லை. களுவா என்றழைக்கப்பட்ட சுமித் பெரேரா சம்பந்தப்பட்ட நிலைமையும் இதற்கு விதிவிலக்கல்ல.

சுமித் பெரேராவின் மற்றொரு சிற்றப்பாவான ஷெல்ரன் பெரேராவும் சப்புகஸ்கந்த பொலிசு நிலையம் தாக்கப்பட்ட தினத்தன்று உ.பொ.அ டக்ளஸ் பீரிஸால் கைதுசெய்யப்பட்டார். ஷெல்ரனின் மனைவியான முனசிறி கங்காணம்கே ரஞ்சனி என்பவர் இதனை திரு.ரணில் விக்கிரமசிங்காவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அதனை உடனடுத்து யூலை 18 ஆந் திகதியன்று ஷெல்ரன் பொலிசுக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டார். விடுவிக்கப்படுவதற்கு முன்னர் ஷெல்ரன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் பரிசோதகர் விக்கிரமசிங்காவினால் அவருடைய வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. தனது வாக்குமூலத்தில் அவர் ஜே.வி.பி.யுடனோ அல்லது வேறு எந்தக் கிளர்ச்சிக் குழுக்களுடனோ தனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்து இருந்தார். எனினும், களுவாவுடன் சேர்ந்து தான் சொத்தி உபாலி, ராஜகிரிய சுனில், (போல் பெரேராவுக்காக வேலைசெய்து வருவதாக ஷெல்ரன் குறிப்பிட்ட) கொஹுவல டென்ஸில் போன்ற குறிப்பிட்ட சில பாதாள உலக நபர்களுடன் நெருங்கிப் பழகி இருப்பதாக அவர் கூறியிருந்தார்.

இந்நபர்கள் எவரும் நாசகார நடவடிக்கைகளுடன் எத்தகைய தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை எனச் ஷெல்ரன் கூறினார். களுவா கடந்த இரு வருடகாலமாக ஜே.வி.பி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார் என்றும், இது தொடர்பாக அவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார் என்றும் ஷெல்ரன் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். அவர் மேலும் விபரங்களை வழங்கியிருக்கவில்லை. இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் விசாரணைக்கு உட்படுத்தப்படவும் இல்லை. இது தொடர்பாகப் பரிசோதகர் விக்கிரமசிங்கா, ஷெல்ரனிடம் மேலும் விசாரணை நடத்தாமல் விட்டது ஏன் என்பது ஆச்சரியம் அளிப்பதாக உள்ளது. மேலும், ஷெல்ரன் முன்னர் ஜே.வி.பி. நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தால் பொலிசார் அவரை எச்சரிக்கை செய்து விடுவித்தது ஏன்? மறுபுறத்தில் களுவா தனது சொந்த ஆதாயங்களுக்காக ஜே.வி.பி பாணியிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாரா? அல்லது யாரேனும் தரப்பினரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளாரா? ஒருவர் அவ்வாறு நினைப்பது நியாயமானதாகும். ஏனெனில், பரிசோதகர் விக்கிரமசிங்காவின் சாட்சியத்தின் பிரகாரமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வைத்திருந்த புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரமும் களுவா ஒரு ஜே.வி.பி. காரர் என்று கருதுவதற்கான எத்தகைய ஆதாரமும் அவர்களிடம் இருக்கவில்லை. பொலிசு தடுப்புக்காவலில் இருந்த வேறு எந்தவொரு சந்தேகநபரும், களுவா அவர்களைச் சேர்ந்த ஒருவரென புலனாய்வு அதிகாரிகளிடம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. அப்படியானால், களுவா என்பவர் யார்? அவருடைய தொடர்புகள் எவை? சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது தாக்குதல் நடத்திய கும்பல் அல்லது குழு எது? அவர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியது ஏன்? மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளின் பின்னணியில், இந்தச் சம்பவம் தொடர்பாகவும் விரிவான ஒரு விசாரணையை மேற்கொண்டிருக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமையாகும். உண்மையைக் கண்டறிவதற்காக எத்தகைய முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தத் தாக்குதலுக்கு முன்னரான காலப்பிரிவின்போது களுவாவும் தானும் சொத்தி உபாலி போன்ற முக்கியமான சில பாதாள உலக நபர்களுடன் நெருக்கமாகப் பழகி வந்ததாக ஷெல்ரன் கூறினார். அத்தகைய ஆட்களிடமும் விசாரணை நடத்துவது பொருத்தமானது என புலனாய்வுப் பிரிவிலிருந்த எவரும் கருதியதாகத் தெரியவில்லை. உண்மையில் அவர்கள், செய்தது என்ன? தமது காவலில் இருந்த சந்தேகநபர்கள் அனைவரையும் அவர்கள் விடுவித்தார்கள்.

எவ்வாறிருப்பினும், அந்தக் காலப்பிரிவில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் தற்காலிகத் தொழிலாளியொருவராக இருந்து வேலைசெய்து வந்த அத்தும ஹெட்டி

விதானலாகே சாந்தலால் என்ற நபரின் கைதை அடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பான மேலும் பல விபரங்கள் தெரியவந்தன. அவர் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆந் திகதி பரிசோதகர் விக்கிரமசிங்காவினால் கைது செய்யப்பட்டார். சாந்தலாலை மேலும் தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்கான உறுதியான காரணங்கள் இருந்து வருவதாக ஆகஸ்ட் 23 ஆந் திகதியளவில் விக்கிரமசிங்கா கருதியதாகத் தெரிகின்றது. அதன்காரணமாக அவர் உ.பொ.அ டக்ளஸ் பீரிஸிடமிருந்து தடுப்புக்காவல் உத்தரவொன்றைப் பெற்றுக்கொண்டார். இந்தத் தடுப்புக்காவல் உத்தரவு மூன்றுமாத காலத்துக்குச் செல்லுபடியாகக்கூடியதாக இருந்தது. சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் கழிப்பறைக்குள் குண்டு வைப்பதில் சாந்தலால் சம்பந்தப்பட்டு இருந்தார் எனப் புலனாய்வு அதிகாரிகளினால் சந்தேகிக்கப்பட்டது. எனவே, அவர் விரிவான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மீண்டுமொருமுறை 01.08.89 அன்று உ.பொ.அ டக்ளஸ் பீரிஸினால் ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இவ்விரு வாக்குமூலங்களும், அடிப்படையில் ஒப்புதல் வாக்குமூலங்களாக இருந்தன.(அவசரகால ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், வருங்காலத்தில் நடத்தப்படக் கூடிய ஒரு வழக்கில் இத்தகைய ஒரு ஒப்புதல் வாக்கமூலத்தினைச் சமர்ப்பிக்கப்படுவதற்கான இயலச் செய்யக்கூடிய விதத்தில், அத்தகைய ஒரு வாக்குமூலம் உ.பொ.அ ஒருவரினால் பதிவுசெய்யப்படுவது ஒரு சாதாரண நடைமுறையாகும்). இந்த வாக்குமூலம் X112 எனக் குறியிடப்பட்டு ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பிடப்பட்ட இந்த வாக்குமூலத்தில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குத் தானும் உடந்தையாக இருந்ததாகச் சாந்தலால் ஒப்புக்கொண்டார். விஜயதிலகா என்ற பெயரிலான ஒரு பொலிசுக் கான்ஸ்டபிளைத் தாம் அறிந்திருந்ததாக அவர் கூறினார். வேறொரு சம்பவம் தொடர்பாக இந்தத் தாக்குதலுக்கு முன்னரேயே விஜயதிலகா தற்காலிய வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தார். விஜயதிலகா மூலம் சாந்தலால் களுவாவைத் தெரிந்துகொண்டார். தாக்குதல் நடத்தப்பட்ட தினத்தன்று மாலையில் பொலிசு நிலையத்துக்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் அவர் அவ்விருவரையும் சந்தித்தார். களுவாவும் விஜயதிலகாவும் சாந்தலாலிடம் ஒரு பார்சலைக் கொடுத்து, அதனை பொலிசு நிலையத்துக்குள் எடுத்துச் சென்று பொலிசு நிலையத்தின் மேல்மாடியில் உள்ள கழிப்பறைக்குள் வைக்குமாறு கேட்டுக்கொண்டார். அவர் இப்பார்சலில் என்ன இருந்தது என்பதனை அறிந்திருந்ததாகவோ அல்லது இந்த முழுத்திட்டமும் என்ன என்பதை அறிந்திருந்ததாகவோ அவரது வாக்குமூலம் எடுத்துக் காட்டவில்லை. எனினும், சந்தர்ப்ப சூழ்நிலைகளின் பின்னணியில் சாந்தலால் இந்தச் சம்பவத்தில் விரும்பியே பங்கேற்றுள்ளார் என்பது மிகத் தெளிவாகும். அந்தப் பார்சலைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவர் அதனைப் பொலிசு நிலையத்துக்கு எடுத்துச் சென்று, சம்பந்தப்பட்ட கழிப்பறைக்குள் ஒளித்து வைத்தார். அன்றிரவு பொலிசு நிலையம் தாக்கப்பட்டதுடன் கழிப்பறைக்குள் ஒரு குண்டுவெடிப்பும் இடம்பெற்றது. அடுத்தநாள் காலையில், களுவாவின் சடலத்தை அவர் பார்த்துள்ளார். இந்தச் சம்பவத்தின் பின்னரும்கூட அவர் ஒருமுறை விஜயதிலகாவைச் சந்தித்து உள்ளார். மேலே குறிப்பிடப்பட்ட வாக்குமூலத்தில் தனக்கு ஜே.வி.பி.யுடன் தொடர்பு நிலவியது என்பதனை அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். களுவா அல்லது விஜயதிலகா ஜே.வி.பி.யில் சம்பந்தப்பட்டிருந்தார் என்று அவர் கூறவும் இல்லை.

இந்த முக்கியமான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் சாந்தலால் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் 1989 நவம்பர் 28 அந் திகதி வரையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்தார். இக்காலப் பிரிவின்போது அவர் ஒரு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவில்லை. அவருக்கு எதிராக குற்றவழக்குத் தொடுப்பதற்கு எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. சாந்தலால் தடுப்புக்காவலில் இருந்தபொழுது அவருடைய தாய் யு.விமலாவதியும், தந்தை எம்.எச்.பிரேமரத்னாவும் அவரை வந்து பார்த்துள்ளனர். சாந்தலால் தடுப்புக்காவலில் வைத்திருப்பது தொடர்பாக அவர்கள் உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ்சைச் சந்தித்து உள்ளனர். உத்தியோகபூர்வ பதிவுகளின் பிரகாரம் 1989 நவம்பர்

28 அந் திகதியளவில் காலம்தாழ்த்திய நிலையில் பரிசோதகர் விக்கிரமசிங்காவின் உத்தரவின்பேரில் நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் ரத்நாயக்கா, விஜயதிலகா எங்கிருக்கிறார்கள் என்பது குறித்த சாந்தலாலின் வாக்குமூலமொன்றைப் பதிவு செய்திருக்கிறார். (புலனாய்வு அதிகாரிகள் முதலாவது சந்தர்ப்பத்திலேயே சாந்தலாலிடம் இந்த விடயம்குறித்து விசாரணை நடத்தியிருப்பார்கள் என ஒருவர் எதிர்பார்த்திருப்பார் ). பிரஸ்தாப வாக்குமூலத்தில் அன்றைய தினம் விஜயதிலகா பியகம, ஹெய்யன்துடுவ, ரக்கஹவத்தையிலிருக்கும் தனது அறைக்குச் செல்வார் எனச் சாந்தலால் கூறியதாக கூறப்படுகின்றது. ஆகஸ்ட் 15 ஆந் திகதியிலிருந்து தொடர்ந்து பொலிசுத் தடுப்புக்காவலில் இருந்துவந்த சாந்தலால், அந்த குறிப்பிட்ட தினத்தன்று, விஜயதிலகா தனது அறைக்குச் செல்ல இருக்கிறார் என்பதனை எவ்வாறு அறிந்திருந்தார் என்பது ஆச்சரியமாக இருக்கின்றது. அதன்பின்னர், சாந்தலாலை சார்ஜன்ட் ரத்நாயக்கா தலைமையிலான பொலிசு உத்தியோகத்தர்களின் கோஷ்டி விஜயதிலகாவின் அறைக்கு அழைத்துச் சென்றுள்ளது. சாந்தலால் வழிகாட்டிய பிரகாரம் தாம் அங்கு சென்றதாக அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் அங்கு சென்றபொழுது அந்த அறை பூட்டப்பட்டு இருந்தது. மறைந்துநின்றால் அவர்களால் விஜயதிலகாவைப் பிடித்துக்கொள்ள முடியும் என சாந்தலால் அந்தப் பொலிசு உத்தியோகத்தர்களிடம் கூறினார். இரவு 10.00 மணியளவில் இரு நபர்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் அந்த இடத்துக்கு வந்தனர். வண்டியின் பின்ஆசனத்தில் அமர்ந்திருந்தவரைச் சுட்டிக்காட்டி இவர்தான் விஜயதிலகா என சாந்தலால் கூறியுள்ளார். சாந்தலால், விஜயதிலகாவை அடையாளம் காட்டியது ஆச்சரியமாக இருக்கின்றது. ஏனெனில், விஜயதிலகா சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் ஓர் உத்தியோகத்தராக இருந்து வந்தார். அவரைத் தேடிச்சென்ற ஏனைய உத்தியோகத்தர்கள் அவரை அறிந்திருக்கவில்லையா? மறைந்திருந்த பொலிசு உத்தியோகத்தர்கள் சந்தேகநபர்களைக் கைதுசெய்யும்பொருட்டு அந்த மோட்டார் சைக்கிளை நோக்கிச் சென்றனர். அந்தச் சந்தேகநபர்கள் திடீரென மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டனர். பொலிசுக் குழுவைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்ற திசையைநோக்கி இருமுறை துப்பாக்கியால் சுட்டதாக ரத்நாயக்கா கூறுகின்றார். எனினும், அவர்களால் அச்சந்தேகநபர்களைக் கைதுசெய்ய முடியவில்லை. மேலும் அதற்குள் தமது பாதுகாப்பில் இருந்துவந்த சாந்தலால் காணாமல் போயிருப்பதனையும் அவர்கள் உடனே அவதானித்தனர்.

அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டபொழுது சாந்தலால்மீது கைவிலங்குகள் பூட்டப்பட்டிருக்கவில்லை என்பதனை ரத்நாயக்கா ஏற்றுக்கொண்டார். அந்நேரத்தில் இருட்டாக இருந்தபோதிலும் அவர்கள் ஒரு டோர்ச் லைற்றை எடுத்துச் செல்லவில்லை. மிகக் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியிலும்கூட சாந்தலால் எப்படித் தப்பிச் சென்றார் என்பதனை ரத்நாயக்காவால் விளக்க முடியவில்லை. இவ்விதம் தப்பியோடியதன் பின்னர் சாந்தலாலை மீண்டும் கைதுசெய்வதற்கு நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்பதனையும் அவரால் விளக்க முடியவில்லை. அதன்பிறகு எவரும் சாந்தலால் குறித்து எதனையும் கேள்விப்படவும் இல்லை. அவரைக் காணவும் இல்லை. இத்தகைய விதத்தில் ஒரு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார் என்றும், அவர் எங்கிருக்கின்றார் என்பது குறித்த தகவல்களைத் தமக்கு வழங்குமாறும் பொதுமக்களிடம் கேட்டுக் கொள்ளும் ஒரு பத்திரிகை அறிவித்தலைத் தாம் வெளியிடவில்லை என்பதனையும் ரத்நாயக்கா ஒப்புக்கொண்டார். மேலும் ஒரு சந்தேகநபர் தப்பிச் செல்லும்போது மேற்கொள்ளப்படும் சாதாரண சட்ட நடைமுறைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக உத்தியோகபூர்வமான விசாரணையொன்றும் இடம்பெறவில்லை. தனது நடத்தை தொடர்பாக ரத்நாயக்காவுக்கு எச்சரிக்கை விடுக்கப்படவுமில்லை. அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. விஜயதிலகாவின் தொடர்பு குறித்து சாந்தலால் செத்தெம்பர் 01 ஆந் திகதியளவிலேயே கூறியிருந்தபோதும் நவம்பர் 28 அந் திகதிவரையில் விஜயதிலகாவைத் தேடி அவர்கள் ஏன் செல்லவில்லை என்பதற்கான விளக்கத்தை எந்தவொரு சாட்சியினாலும் முன்வைக்க முடியாதிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட சம்பவத்தின் பின்னர் விஜயதிலகாவைக்

கைது செய்வதிலும் அவர்கள் ஆர்வம் இழந்திருந்தார்கள்போல் தெரிகின்றது. அவரைக் கைது செய்வதற்கு அவர்களால் எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறிருப்பினும், பிரதிப் பொலிசுமா அதிபர் நளின் தெல்கொடவின் பணிப்புரையொன்றின்பேரில் 1990 ஒக்தோபர் 22 ஆந் திகதி விஜயதிலகா மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அவர் இன்னமும் பொலிசுச் சேவையில் இருந்து வருவதுடன் ஆணைக்குழுவைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரிகள் 1996 பெப்புரவரி 17 ஆந் திகதி அவரிடம் விசாரணைகளை நடாத்தி, அவருடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர். சப்புகஸ்கந்த பொலிசு நிலையம் மீதான தாக்குதலில் அவருக்கு இருந்ததாகக் கூறப்படும் தொடர்பு குறித்து அதுவரையில் எந்தவொரு புலனாய்வு அதிகாரியும் அவரிடம் விசாரணை நடாத்தியிருக்கவில்லை. ஆணைக்குழுவுக்கு வழங்கிய வாக்குமூலத்தில் எதிர்பார்க்கப்பட்டது போலவே அவர் இந்தச் சம்பவத்துடனான தனது தொடர்பினை மறுத்தார்.

மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகள் காரணமாக, பொலிசுத் தடுப்புக்காவலிலிருந்து சாந்தலால் தப்பிச் சென்றது தொடர்பாக ரத்நாயக்காவினாலும் ஏனைய பொலிசுச் சாட்சிகளினாலும் வழங்கப்பட்ட சாட்சியங்களை இந்த ஆணைக்குழு முழுவதுமாக நிராகரிக்கின்றது. எவ்வாறிருப்பினும், 1989 நவம்பர் 28 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர், சந்தேகநபர் சாந்தலால் பொலிசுக் காவலிலிருந்து நிரந்தரமாகக் காணாமல் போயுள்ளார் என்ற முடிவுக்கு நாங்கள் வருகின்றோம். மேலும், சாந்தலால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அல்லது அவர் காணாமல் போனபின்னர் அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தால், சப்புகஸ்கந்த பொலிசு நிலையத் தாக்குதலில் சம்பந்தப்பட்டு இருந்தவர்கள் யார் என்பதும், இந்தத் தாக்குதலின் நோக்கம், அதற்குத் தயார் செய்யப்பட்ட இயல்பு மற்றும் இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்த ஏனையவர்கள் தொடர்பான முக்கியமான தகவல்கள் போன்ற விபரங்களும் வெட்ட வெளிச்சமாகத் தெரிய வந்திருக்கும்.

சாந்தலால் பொலிசுக் காவலிலிருந்து தப்பிச் செல்லாவிட்டால், அவருக்கு நடந்தது என்ன? சட்டத்துக்குப் புறம்பான முறையில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளாரா? அவ்வாறு இல்லாவிடில் அவருக்கு என்ன நடந்திருக்க முடியும்? அவர் அவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்தால் அத்தகைய கொலைக்கான நோக்கம் என்னவாக இருந்திருக்கும்? பொலிசு நிலையத் தாக்குதல் தொடர்பாக சாந்தலாலினால் முக்கியமான தகவல்கள் வெளியிடப்பட்ட பின்னர் இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்த நபர்கள் குறித்தும் அதற்கான காரணம் குறித்தும் புலனாய்வு அதிகாரிகள் முற்றிலும் திருப்தியடையாதிருந்தார்களா? சாந்தலாலின் வாயை நிரந்தரமாக மூடுவதற்கு விரும்பியவர்கள் யாராக இருக்கக்கூடும்? அது பொலிசு அதிகாரிகளாக இருக்க முடியுமா? அல்லது களனி நாசகார நடவடிக்கைகள் தடுப்புப் பிரிவின் நடவடிக்கைகளையும், சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்திலிருந்த ஏனைய உத்தியோகத்தர்களையும் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரத்தைக் கொண்டிருந்த உயர் பதவியிலிருந்த ஒரு நபராக இருக்க முடியுமா? இத்தகைய சில கேள்விகளுக்கு ஒருபோதுமே பதில் கிடைக்காது போகலாம்.

## அத்தியாயம் VII
## உப பரிசோதகர் ரோஹித பிரியதர்ஸனா - காணாமல்போதல்

**பின்னணி**

ரோஹித பிரியதர்ஸனா கொழும்பு நாலந்த வித்தியாலயத்தில் தனது கல்வியைத் தொடர்ந்ததுடன் 1986 ஆம் ஆண்டில் அவர் ஒரு தகுதிகூர் நிலை உப பொலிசுப் பரிசோதகராகச் சேவையில் இணைந்தார். நாலந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர்களில் ஒருவரான அஜித் ஜயசிங்காவும் ரோஹித பிரியதர்ஸனாவுடனேயே பொலிசுச் சேவையில் இணைந்தார். அவர்கள் இருவரிடையேயான தொடர்பு, அவர்கள் நாலந்த வித்தியாலய கிரிக்கெட் அணிக்காக விளையாடிய காலம்வரை செல்கின்றது.

களுத்துறை பொலிசுப் பயிற்சிப் பாடசாலையில் தமது ஆரம்பப் பயிற்சியைப் பூர்த்தி செய்தபின்னர் அவர்கள் இருவரும் பொலிசு விசேட அதிரடிப்படைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு இருந்தனர். அத்துடன், அவர்களுக்கு மேலதிகப் பயிற்சியும் வழங்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ரோஹித, திருக்கோவில் விசேட அதிரடிப்படை முகாமில் இணைக்கப்பட்டு இருந்தார். இலங்கைக்கான இந்திய அமைதிகாக்கும் படையினரின் வருகையுடன் திருக்கோவில் முகாமில் கடமையாற்றிய அனைத்து விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்களும் வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு இருந்தனர். அத்துடன், 1987 நவம்பர் மாதமாகும்போது ரோஹித பிரியதர்ஸனாவும் வெள்ளவத்தைப் பொலிசு நிலையத்துக்கு இடமாற்றப்பட்டிருந்தார். பொலிசு கிரிக்கெட் அணியில் விளையாடுவதற்கான வாய்ப்பை அவருக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே இவ்விடமாற்றலுக்கான முக்கிய காரணம் எனப் புலப்படுகின்றது. அத்துடன், அவர் 1988 ஆம் ஆண்டு இறுதிவரை கொழும்பிலேயே இருந்துள்ளார். 1989 சனவரி மாதம் 02 ஆந் திகதி அவர் களனிப் பொலிசுப் பிரிவுக்கு இடமாற்றப்பட்டு பாலியகொடை பொலிசுத் தலைமையலுவலகத்தில் இணைக்கப்பட்டு இருந்தார். 1989 யூன் மாதத்தில் ரோஹித பிரயதர்ஸனா சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு இடமாற்றப்பட்டு இருந்தார். அவர் அங்கு பொலிசு நிலையக் குற்றவியல் பிரிவிலேயே கடமையாற்றினார். சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு இடமாற்றப்பட்டு ஒரு மாதத்துக்குள்ளே மேல் விபரிக்கப்பட்ட பொலிசு நிலையத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இக்காலப்பிரிவில் உபாலி பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த பந்துல தினபூர்ண என்ற பத்திரிகையாளர், குற்றங்கள் மற்றும் சட்டவினைப்படுத்துகையுடன் தொடர்பான செய்திகளைத் திரட்டுவதில் ஈடுபட்டு இருந்தார். அவரது காண்புகள் திவயின, தி ஐலண்ட் ஆகிய பத்திரிகைகளில் இடம்பெற்றிருந்தன. தேவையான தகவல்களைத் திரட்டும்போது அவர் கையாண்ட ஒரு முறை, பொலிசு அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும் நேர்காணல்கள் மூலமும் தேவையான தகவல்களைத் திரட்டுவதாகும். ரோஹித பிரியதர்ஸனா அத்தகைய ஒரு பொலிசு உத்தியோகத்தராகவே காணப்பட்டார். பத்திரிகையாளர் பந்துல தினபூர்ணவின் கருத்துப்படி ரோஹித இளமையும் திடகாத்திரமும் கொண்ட ஓர் உத்தியோகத்தராகவே காணப்பட்டார். மேலும், தனது புலன்விசாரணைகளின்போது மிக்க தைரியத்துடனும் அச்சமின்றியும் செயல்பட்டார். அவர் கடமைப்பொறுப்பேற்றிருந்த களனிப் பிரதேசத்தில் நிலவிய அதிகளவிலான கொள்ளைச் சம்பவங்களையும், பாரதூரமான குற்றச் செயல்களையும் வெளிக்கொணர்வதில் வெற்றிகரமாக ஈடுபட்டு இருந்தார். அதிகளவான சாட்சியாளர்களின் கூற்றுப்படி கொடுங்குற்றவாளிகள் சிலர் நாசகாரிகளாகத் தம்மை இனங்காட்டிக்கொண்டு களவுகளையும் ஏனைய கொடூர குற்றச்செயல்களையும் புரிந்து வந்துள்ளனர்.

இவ்வாறு செயல்வகைமுறையை எளிதில் புரிந்து வைத்திருந்த ஓர் உத்தியோகத்தராகவே அவர் செயற்பட்டுள்ளார். மேலும், அதுபோன்ற நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கான தயார் நிலையில் அவர் இருந்ததில்லை. நியாயப்படுத்தத்தக்க விதத்தில் நாசகாரிகளையும் பொதுவான குற்றவாளிகளையும் அவர் சரிசமமாகவே நடத்தியிருக்கின்றார் என்பதை கிடைக்கத்தக்க சான்றுகளிலிருந்து அனுமானிக்க முடிகின்றது. கோணவல சுனிலின் பெரிய குடும்பமும்கூட, அவர்களது பல்வேறு வகைப்பெயரெடுத்த குற்றவியல் நடவடிக்கைகள் காரணமாக பிரியதர்ஸனாவின் விழிப்பான கண்களுக்கு உட்பட்டு இருக்கக்கூடும். அப்பிரதேசத்தில் உலாவிவந்த பொதுவான குற்றவாளிகளுக்கு அரசியல் ரீதியான ஆதரவு கிடைத்து வந்தமைமீது அவர் கவனம் செலுத்தவில்லை. பொதுக் குற்றவாளிகளை கைதுசெய்வதில் உள்ள வெற்றிகரமான செயன்முறைகள், குற்றங்களுக்கான பரிகாரம் காணல் ஆகிய விடயத்திலும் அவர் சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் நளின் தெல்கொட போன்ற பிரதேசத்தின் சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்களின் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றார். ஆணைக்குழுவினர் முன் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக ரோஹித பிரியதர்ஸனா வெற்றிகரமாகக் கையாண்ட புலன்விசாரணை முயற்சிகள் சிலபற்றி ஆணைக்குழுவின்முன் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தன. இந்தப் பின்புலத்தில் ரோஹித பிரியதர்ஸனா காணாமல்போனமை பற்றியும், குறிப்பாக சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்களால் அவருக்கு எதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றியும் ஒருவர் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

இமிதியாகே சந்திரலதா பெரேராவின் கருத்துப்படி, 1990.02.08 அன்று அவரது கணவரான ரியூடர் பெரேரா (கோணவல சுனிலின் சகோதரர் ஒருவர்) உருமறைப்புச் செய்யப்பட்ட போலிச் சீருடை தரித்த ஒரு குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டு இருந்தார். அவ்வேளை, தனது கணவரைக் கடத்திச் செல்ல வந்தவர்களுள் எவரையேனும், அவரால் இனங்காண முடியாமல் போய்விட்டது. பெப்புரவரி 20 ஆந் திகதி சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்திலிருந்து பிரியதர்ஸனா காணாமல்போனமை பற்றிய செய்திகளுடன் அவரது புகைப்படமும் பெப்புரவரி கடைசிவாரம் பல்வேறு பத்திரிகைகளில் பிரசுரமாகி இருந்தது. அவ்வேளை தனது கணவரைக் கடத்திச் செல்ல வந்தகோஷ்டியில் ஒருவராக ரோஹித பிரியதர்ஸனாவும் இருந்ததை சந்திரலதா பெரேரா இனங்கண்டிருந்தார். பெப்புரவரி மாதம் 09 ஆந் திகதி இடம்பெற்ற ரியூடரின் கடத்தல் தொடர்பாக திரு.ரணில் விக்கிரமசிங்காவை சந்திக்கவென தனது சகோதரருடன் சந்திரலதா சென்றிருந்தார். ரணில் விக்கிரமசிங்காவிடம், சந்திரலதா இதுதொடர்பாக முறைப்பாடு செய்ததுடன், ரியூடரைப் பாதுகாப்பாக மீட்டெடுப்பதற்காக அவரது உதவியையும் நாடியிருந்தார். சந்திரலதாவின் நடத்தையிலிருந்து புலப்படுவது யாதெனில், ரியூடரைக் கடத்திச் செல்ல வந்தோரை அவர்களால் இனங்காண முடியாமல் சென்றவிடத்தும், கடத்துவதற்காக வந்தவர்கள் பொலிசு உத்தியோகத்தர்கள் என நம்பத்தக்க சான்றுகள் இருந்துள்ளன என்பதாகும். திரு.விக்கிரமசிங்காவைச் சந்தித்தபோது இதுபற்றி களனிப் பொலிசு நிலையத்துக்குச் சென்று முறைப்பாடொன்றைப் பதிவுசெய்யுமாறும் அவர் அச்சப்பட வேண்டியதில்லை எனவும் கூறியதற்கு இணங்க அவர் தனது கணவரின் கடத்தல் சம்பவம்பற்றி களனி பொலிசு நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்தார். பெப்புரவரி 13 ஆந் திகதி உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ் தன்னை பியகம பொலிசு நிலையத்தில் வந்து சந்திக்குமாறு சந்திரலதாவுக்குத் தகவல் அனுப்பி இருந்ததால் சந்திரலதாவும் அவ்வாறே செயல்பட்டார். உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸின் அறிவுறுத்தலின்பேரில் சந்திரலதாவின் வாக்குமூலங்களை ஒரு பெண் பொலிசு உத்தியோகத்தர் பதிவு செய்தார். சந்திரலதா அங்கு அளித்த வாக்குமூலத்தின்படி ரியூடரைக் கடத்திச் செல்வதில் உண்மையாகவே பிரியதர்ஸனா சம்பந்தப்பட்டு இருந்தால் பெரும்பாலும் உ.பொ.அ. பீரிஸ்சுக்குக் கூறப்பட்ட சம்பவம், ரியூடர் கடத்தப்பட்டவுடனேயாவது தெரிந்திருக்கக்கூடும். எவ்வாறாயினும், ரியூடர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட விடயம்பற்றி சப்புகஸ்கந்த பொலிசு நிலைய உத்தியோகபூர்வ பதிவேடுகளில் எதுவித பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. இச்சம்பவத்தை உடனடுத்து குற்றவியல் நடவடிக்கைகளில் ரியூடர்

உடந்தையாக இருந்தமையால் ஏனைய பொலிசு உத்தியோகத்தர்களுடன் இணைந்து, தான் ரியூடரைக் கைது செய்யதாக அஜித் ஜயசிங்கவிடம் ரோஹித கூறியிருந்தார். இவ்வகைச் சாட்சிக்குப் புறம்பாக, ரோஹித பிரியதர்ஸனா உள்ளிட்ட பொலிசு அணியினரால் ரியூடர் கைதுசெய்யப்பட்ட பின்னர், ரியூடருக்கு என்ன நேர்ந்தது என்பதுபற்றி இவ்வாணைக்குழுவால் உறுதியாகக் கூறமுடியாதுள்ளமையும் நோக்கற்பாலது. இக்காலப்பிரிவில் இடம்பெற்ற அதிகளவிலான காணாமல்போதல் சம்பவங்கள் காரணமாக, பொலிசுக் கட்டுக்காப்பிலேயே ரியூடர் கொல்லப்பட்டு இருக்கவேண்டும் என முடிவு செய்வதைத் தவிர வேறு காரணங்கள் இருக்கவில்லை. கோணவல "பெரேரா" வின் குடும்பத்துக்கு நெருக்கமானவர்களுக்கும், அவர்களால் போஷிக்கப்பட்டு வந்தோருக்கும் இது மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் ஐயமில்லை. அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பிருந்த ஒரு நபர், பொலிசாரால் கொலை செய்யப்பட்டமை முதல்முறையாக இருக்க முடியாதெனத் தோன்றுகின்றது. ரோஹித பிரியதர்ஸனா காணாமல்போன நிகழ்வும் இந்தப் பின்னணியிலிருந்தே நோக்கப்பட வேண்டியுள்ளது. முன்கூறிய நிகழ்வின் விளைவால், குறித்தசாரார் பிரியதர்ஸனாவை "இல்லாதொழிக்க" சதித்திட்டம் தீட்டினரா? தனக்கு மேலுள்ள பொலிசு படிநிலை மேலாண்மையின் அங்கீகாரம், அல்லது அவர் அறியாத நிலையில் ரோஹிதவின் நிகழ்வில், அவர் ரியூடருக்கு இழைத்தவையே அவருக்கும் ஏற்பட்டு இருக்கலாம். அவரது நடத்தை அவர்களைக் கோபமூட்டச் செய்ததா? அல்லது அவரது நடத்தைமூலம் அவர்கள் சங்கடத்துக்கு உள்ளாகினரா? அல்லது ரோஹித தான் இழைத்தவற்றுக்குத் "தண்டிக்கப்பட வேண்டும்" என்பதை அதிகாரங்கள் சுட்டிக்காட்டுகின்றனவா?

**காணாமல்போதல்.......**

1990 பெப்புரவரி மாதமாகும்போது பொலிசுச் சோதனைகாரர் கீர்த்தி அத்தபத்து சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் பொறுப்பு உத்தியோகத்தராக அமர்ந்தார். ரோஹித பிரியதர்ஸனா அதே நிலையத்தின் குற்றவியல் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தரானார்.

சுவித்தானாகொட மனன்னலகே தினேஸ் எனும் பிரியதர்ஸனாவின் மூத்த சகோதரர், பிரியதர்ஸனா நலமாக இருக்கிறாரா, என்பதை விசாரித்து அறியும்பொருட்டு அடிக்கடி அவருடன் தொலைபேசிமூலம் தொடர்புகொள்வது பொதுவான வழக்கமாக இருந்தது. அதற்கான முக்கிய காரணமாக அமைந்தது யாதெனில், ரத்தொளுவ வீடமைப்புத் திட்டத்தில் பிரியதர்ஸனாவின் குடும்பம் வாழ்ந்து வந்தபோதும், பிரியதர்ஸனாவோ சப்புகஸ்கந்த பொலிசு நிலைய, மேல்மாடியில் அமைந்த உத்தியோகத்தர்களுக்கான விடுதியிலேயே தங்கியிருந்தமையாகும்.

பி.ப.5.30 மணியளவில் தினேஸ் இளைய சகோதரருடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டிருக்கின்றார். பிரியதர்ஸனாவும் தனது சகோதரர் தினேஸ்சுடன் பொதுவான விடயங்கள் சிலபற்றி அளவளாவியுள்ளார். அத்துடன் ரத்தொளுவையில் உள்ள தையல்காரர் ஒருவரிடம் தான் தைப்பதற்காகக் கொடுத்திருந்த சில உடைகளை எடுத்துவந்து மறுநாள் பொலிசு நிலையத்தில் தன்னிடம் ஒப்படைக்கும்படி வேண்டியிருந்தார்.

பி.ப.6.00 மணியளவில் பிரியதர்ஸனா நிலையக் கடமை உத்தியோகத்தராகக் கடமைப்பொறுப்பேற்றார். வழமையான பொறுப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் இல்லாதவேளைகளில் அப்பதவியில் கடமையாற்றும்பொருட்டு அவர்கள் அமர்த்தப்படுவதுண்டு. அத்தகைய உத்தியோகத்தர்கள் இரவுநேரம் முழுதும் கடமைபுரிவது வழக்கம். அத்துடன் இந்த நியமனங்கள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களாலேயே மேற்கொள்ளப்படுவதுண்டு. குறித்த நிகழ்விலும்கூட பொலிசுப் பரிசோதகர் கீர்த்தி அத்தபத்துவினால் நிலையக் கடமை உத்தியோகத்தராக பிரியதர்ஸனா அமர்த்தப்பட்டு இருக்கின்றார்.

மாலைவேளையானதும் கீர்த்தி அத்தபத்து நிலையத்திலிருந்த பொலிசுக் கான்ஸ்டபிள் சாரதியொருவருடன் பியகமையில் அமைந்துள்ள "பியகம விலேஜ் ஹோட்டலில்" நடைபெறும் ஒரு மாநாட்டில் கலந்து கொள்ளவெனச் சென்றிருந்தார். இவ்வாறான சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்களுடனான ஒன்றுகூடல்கள், அவர்களது பரிபாஷையில் "மாநாடுகள்" என அழைக்கப்பட்டு வந்தது. இந்த உணவகத்தின் உரிமையாளர் காமினி ஜெயரத்னா என்பவராவார். இந்த இடம் சட்டரீதியானதும், சட்டரீதியற்றதுமான பல்வேறு தேவைகளின் நிமித்தம் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதை இது உறுதிப்படுத்துகின்றது. உண்மையில் இந்த "இடம்" சோடிகளால் பல்வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதாக ஒருவர் சாட்சி பகன்றார். இத்தகைய ஓர் இடம் தமது கலந்துரையாடல்களுக்கு பொருத்தமானதென இவர்கள் ஏன் கண்டார்கள்? என்பதை ஊகித்துணர முடியாதுள்ளது.

சப்புகஸ்கந்த பொலிசு நிலைய பிரதான கருமபீடத்தில் இருந்தவர் பொலிசு சார்ஜன்ட் 11343 சிறிவர்த்தனா என்பவராவார். அவரது நியமனம் "ஒதுக்குநிலை கடமை உத்தியோகத்தர்" என்பதாகும். இவ்வகை உத்தியோகத்தர்களின் பணிகளில், பொலிசு நிலையத்துக்குக் கொண்டுவரப்படும் ஐயத்துக்கிடமான ஆள்கள், பொருள்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதும் உள்ளடங்கும்.(அத்துடன் தொலைபேசி இயக்குநர் இல்லாத சந்தர்ப்பங்களில்) தொலைபேசி அழைப்புகளுக்குப் பதில் அளிப்பது, முறைப்பாடுகளை ஏற்பது ...... முதலியனவும் அவர்களது பணிகளாகும். அன்றைய தினம், சிறிவர்த்தனா பி.ப.2.00 முதல் 10.00 மணிவரையும் கடமையில் இருந்தார். மேலும் அவர் அந்த நிலையத்துக்குப் புதியவரல்லர். 1990 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம்வரையில் அவர் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் சுமார் ஓராண்டுகாலம் கடமையாற்றி இருந்தார். எனவே, சகல பொலிசு உத்தியோகத்தர்களுக்கும் அவர் நன்கு பரிச்சயமானவராக இருந்தார். மேலும், தொலைபேசியில் கதைக்கும் சகல உத்தியோகத்தர்களினதும் குரல்தொனிகளை எளிதில் இனங்காணக்கூடியவராகவும் இருந்தார்.

சுமார் பி.ப.7.30 மணியாகும்போது அந்த நிலையத்தின் குற்றவியல் பிரிவில் கடமையிலிருந்த பிரியதர்ஸனா பத்திரிகையாளர் பந்துல தினபூர்ண மற்றும் நாஜி, காமினி எனும் இருவருடனும் கலந்துரையாடிக்கொண்டு இருந்தார். குற்றவியல் நடவடிக்கைகள் மற்றும் பிரதேசத்தின் புலனாய்வு நடவடிக்கைகள் போன்றவற்றிலான முன்னேற்றங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும்பொருட்டே தினபூர்ண அங்கு சென்றிருந்தார். நாஜி, காமினி ஆகிய இருவரும் அவர்களது தனிப்பட்ட விவகாரங்கள் தொடர்பாக உதவிகோரிச் சென்றிருந்தனர்.

பி.ப.8.00 மணியளவில் பொறுப்பு உத்தியோகத்தரின் மேசைமீது இருந்த தொலைபேசி அலறத் தொடங்கியது. அந்த அழைப்புக்கு சிறிவர்த்தனாவே பதிலளித்து இருந்தார். அவரது கருத்துப்படி, பொறுப்பு உத்தியோகத்தர் அத்தபத்துவே தொலைபேசி அழைப்பொன்றை விடுத்திருந்தார். அவரது குரல்தொனியை எதுவித சிரமமுமின்றி சிறிவர்த்தனா இனங்கண்டு இருந்தார். மேலும் பொறுப்பு உத்தியோகத்தரின் குரலையும் அவர் இனங்கண்டு இருந்தார். அழைத்த குரல், பிரியதர்ஸனாவை அழைக்குமாறு சிறிவர்த்தனாவை வேண்டிக்கொண்டது. அவர் பிரிதர்ஸனாவை அழைத்துவரச் சென்றபோது, முன்கூறிய மூன்று நபர்களுடனும் பிரியதர்ஸனா கதைத்துக்கொண்டு இருந்தார். பின்னர், அவரை பொறுப்பு உத்தியோகத்தர் தொலைபேசியில் அழைத்ததாகவும், பிரியதர்ஸனாவுடன் அவர் கதைப்பதற்காக அழைப்பில் இருப்பதாகவும் தெரிவித்தார். அதன்படியே, பிரியதர்ஸனா தொலைபேசி இருந்த இடத்துக்குச் சென்று, அவ்வழைப்புக்குப் பதில் அளித்தார். பொறுப்பு உத்தியோகத்தர்-பிரியதர்ஸனா ஆகியோரிடையே நடந்த தொலைபேசி உரையாடலைத் தான் செவிமடுத்ததாக அவர் கூறவில்லை. எவ்வாறாயினும், தொலைபேசி உரையாடல் முடிந்ததும், பிரியதர்ஸனா தன்னோடு முன்னர் கதைத்துக்கொண்டு இருந்தவர்கள் இருந்த இடத்துக்கு மீண்டும் ஒருமுறை சென்றிருந்தார். அங்கு சென்ற பிரியதர்ஸனா, தற்போது, பொறுப்பு உத்தியோகத்தர்

தன்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்ததாகவும் அவர் பியகம விலேஜ் ஹோட்டலில் இருப்பதாகக் கூறியதாகவும், ஹோட்டலுக்குத் தன்னை வரும்படி அழைத்ததாகவும், அவருக்காக வாகனமொன்றை அனுப்பி வைப்பதாகக் கூறியதாகவும் பந்துல தினபூர்ண மற்றும் இருவரிடமும் பிரியதர்ஸனா கூறினார். இதிலிருந்து, பொறுப்பு உத்தியோகத்தர், பிரியதர்ஸனாவை தொலைபேசிமூலம் அழைத்தமை உறுதியாகின்றது. மேலும், அவர் பியகம விலேஜ் ஹோட்டலிலிருந்து அழைத்தமையும், முன்கூறியிருந்த ஹோட்டலுக்கு "செல்ல" வேண்டாம் எனக் கூறியமையும் தெளிவாகின்றது. மேலும், "பொறுப்பு உத்தியோகத்தரை" மிகத் தெளிவாக அடையாளம் காண முடிந்ததுடன், அதுவரை பிரியதர்ஸனா தவிர்ந்தவிடத்து அப்பகுதியில் (குற்றவியல் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர் அவர்) கீர்த்தி அத்தபத்து தவிர வேறு பொறுப்பு உத்தியோகத்தர்கள் இருந்திருக்கவும் இல்லை.

பிரியதர்ஸனா பின்னர் பொலிசு நிலைய மேல்மாடிக்குச் சென்று 8577 பொலிசுச் சார்ஜன்ட் நந்தசேன ஓய்வாக இருந்த அறையை அடைந்தார். தற்போது பொறுப்பு உத்தியோகத்தர் தன்னை பியகம விலேஜ் ஹோட்டலில் நடைபெறும் ஒரு கலந்துரையாடலில் பங்குபற்ற வருமாறு அழைத்ததாக, நந்தசேனவிடம் தெரிவித்தார். அத்துடன், தான் அவரைச் சந்திப்பதற்காக வெளியேறிச் செல்வதற்கு முன்னர், நிலையக் கடமை உத்தியோகத்தர் பொறுப்பை நந்தசேனவுக்கு ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டவே, அவரும் அப்பொறுப்பை ஏற்றிருந்தார்.

சுமார் பத்து நிமிடங்களுக்குள் தயாரான பிரியதர்ஸனா ஆரம்பத்தில் தனது பொலிசுச் சீருடையில் இருந்ததுடன், அவர் திரும்பி வரும்போது மேற்சட்டையுடனும், காற்சட்டையுடனும் காணப்பட்டார். மேலும், அப்போது இருந்த "கடமை உத்தியோகத்தரிடத்திலிருந்த" உரிய உத்தியோகபூர்வ பதிவேட்டில் ஒரு பதிவை மேற்கொண்டார். (நடைமுறைமாறாத் தகவல் பதிவேடு) அலுவலகப் பாவனைக்கான கைத்துப்பாக்கி, அவரது கட்டுக்காப்பில் இருந்தமைக்கு அதுவே சாட்சியாக உள்ளது. பின்னர் பிரியதர்ஸனா, பந்துல தினபூர்ணவும் சந்திக்க வந்திருந்த மற்றையவர்களும் இருந்த இடத்துக்குச் சென்று அவர்களிடமிருந்து விடைபெற்று இருந்தார். பொலிசு நிலைய வாயில்வரை பிரியதர்ஸனாவைத் தொடர்ந்து தினபூர்ணவும் வந்திருந்தார். அவர் வெளியேறிச் செல்லுகையில், பிரியதர்ஸனா தன்னுடன் பியகம ஹோட்டலுக்கு வருமாறு தினபூர்ணவுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். இந்த விடயமும் முன்கூறிய பிரியதர்ஸனா மேற்கொண்ட பதிவில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. தான் பொலிசு நிலையத்திலிருந்து வெளியேறிச் சென்றமைக்குக் காரணம் கூறவும், நியாயப்படுத்தவுமே முன்கூறிய பதிவு பிரியதர்ஸனாவால் மேற்கொள்ளப்பட்டது என்ற உண்மையை இது சுட்டிக்காட்டுகின்றது. இந்த வகைப் பதிவுகள் பொலிசுப் பரிபாஷையில், "பட்டா அவுட்ஸ்" எனக் குறிப்பிடப்படுவதாக பொலிசுச் சாட்சியங்களிலிருந்து தெரிகின்றது. மேலும், பணம் பெறுவதற்காகவும், வெளிச் செல்வதற்கான அலுவலக காரணமாக காண்பிக்கவுமென இந்த வகைப் பதிவுகள் மேற்கொள்ளப்படும். அவ்வேளை பந்துல தினபூர்ண, பிரியதர்ஸனாவுடன் செல்ல மறுத்திருந்தார். எவ்வாறாயினும், பொலிசு நிலையத்துக்கு வெளியே வெள்ளை நிறக் காரொன்று நிறுத்தப்பட்டு இருந்ததையும், காருக்கு அருகே இதற்கு முன்னர், தான் சந்தித்திராத ஒரு நபர் நிற்பதையும், தினபூர்ண கண்ணுற்றிருக்கிறார். அவ்விடம் சென்ற பிரியதர்ஸனா, காரின் முன் ஆசனத்தில் அமர்ந்ததுமே, அந்தக் கார் பியகம ஹோட்டலை நோக்கிச் சென்றது. முன்கூறிய இனந்தெரியாத நபரே காரைச் செலுத்திச் சென்றார். அப்போது நேரம், சுமார் 8.30 மணியளவில் இருக்கும். இது ஆணைக்குழுவினர்முன் தோன்றிச் சாட்சியமளித்தவர்கள் யாவரும் பிரியதர்ஸனாவைக் கடைசித்தடவையாக உயிருடன் பார்த்ததாகக் கூறிய சந்தர்ப்பம் ஆகும். பிரியதர்ஸனாவின் குடும்ப அங்கத்தவர்களுக்கு மட்டுமன்றி இந்தச் சந்தர்ப்பம் முதல் பிரியதர்ஸனா உயிருடன் இருந்தாரா என்பது பற்றிய எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

கீர்த்தி அத்தபத்து பொலிசு நிலையத்துக்குத் திரும்பும்போது, இரவு 11.00 மணியளவில் இருக்கும். அவர் திரும்பி வந்தவுடனே, தான் கடமையிலிருந்து ஓய்வெடுக்கச் செல்வதற்கான ஓர் பதிவை மேற்கொண்டிருந்தார். எவ்வாறாயினும், குறித்த அந்த நேரத்திலாவது பிரியதர்ஸனா ஏன் நிலையத்தில் இருக்கவில்லை என்பதுபற்றி எவ்வித விசாரணையும் அவர் மேற்கொள்ளவில்லை. பிரியதர்ஸனாவின் இடத்தில் நிலையத்தின் பிறிதொரு உத்தியோகத்தர் கடமையாற்றியதுபற்றி விசாரித்திருக்கவும் இல்லை. சம்பந்தப்பட்ட தொலைபேசி அழைப்பினை அவர் மேற்கொள்ளவில்லையாயின், அத்துடன் பியகம விலேஜ் ஹோட்டலுக்கு வரும்படி அவரைப் பணிக்கவில்லையாயினும் நிலையக் கடமை உத்தியோகத்தராக பிரியதர்ஸனா ஏன் பொலிசு நிலையத்தில் இருக்கவில்லை என்பதுபற்றி அவர் வியப்படைந்திருத்தல் வேண்டும்.

மறுநாட்காலை ( பெப்புரவரி 21 ஆந் திகதி) பொலிசு நிலைய அதிகாரிகள் யாவரும் பிரியதர்ஸனாவுக்கு நடந்தவற்றைக் கேள்வியுற்று ஆச்சரியப்படலாயினர். அத்தபத்து தொலைபேசிவாயிலாக சிறிவர்த்தனாவை அழைத்ததைத் தொடர்ந்து பிரியதர்ஸனா வெளியேறிச் சென்றதாக சிறிவர்த்தனா தெரிவித்தார். இவ்வேளை, பிரியதர்ஸனாவை அத்தபத்து தொலைபேசி வாயிலாக அழைத்து, அவரைப் பியகம ஹோட்டலில் வந்து சந்திக்குமாறு கூறியமைக்காக, முதற்தடவையாக அத்தபத்துமீது யாரோ குற்றம் சாட்டியபோதும், அதுதொடர்பாக எவ்வித உத்தியோகபூர்வ பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. மொத்தச் சாட்சியங்களை வைத்து நோக்குமிடத்து, அவர்(அத்தபத்து) தொலைபேசி வாயிலாக அழைத்தமைபற்றி மறுத்தமைக்கான, எந்த உத்தியோகபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கவில்லை. அவர் அவ்வாறானதொரு பதிவை மேற்கொண்டிருந்தால், முந்திய நாளிரவில் அத்தபத்து அவ்வாறான தொலைபேசி அழைப்பு விடுத்தமைபற்றி அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டு இருக்கவேண்டுமென சிறிவர்த்தனா கூறுகின்றார். அவ்வாறானதொரு பதிவு மேற்கொள்ளப்பட்டு இருந்தால், சிறிவர்த்தனாவின் ஒப்புதலின் நம்பகத்தன்மையை அது மேலும் அதிகரித்திருக்கும். அவருடைய சாட்சியத்தில்கூட, தொலைபேசி வாயிலாக, அழைப்பு விடுத்தமையை மறுத்துரைத்தார் மட்டுமன்றி, சிறிவர்த்தனா தமக்கு எதிராக ஏன் பொய்ச் சாட்சியம் வழங்கியிருக்க வேண்டும் என்பதுபற்றி அத்தபத்துவினால் குறிப்பான காரணங்கள் எவற்றையும் முன்வைக்க முடியவில்லை. மாறாக ஆரம்பத்திலேயே குறிப்பிட்ட நிகழ்வு தொடர்பாகத் தெட்டத்தெளிவாகக் கூறியமையால் அவரை அத்தபத்து நச்சரிக்கலாம் என சிறிவர்த்தனா ஒப்புக் கொள்கின்றார். எவ்வாறாயினும், அன்றைய தினமே, பிரிதர்ஸனா காணாமல் போன நிகழ்வுபற்றி புலன்விசாரணை மேற்கொள்ள ஏனைய தனது மேற்பார்வையின் கீழுள்ள அதே நிலையத்தில் கடமைபுரிந்த உப பொலிசுப் பரிசோதகர் ஜமால்டீன் என்பவரை உடனடியாக நியமிப்பது பொருத்தமானது என அவர் கருதினார். இதுதொடர்பாக, ஆரம்ப விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. இவ்வேளை அத்தபத்துவின் தொலைபேசி அழைப்புடனேயே, பிரியதர்ஸனா நிலையத்தைவிட்டு வெளியேறிச் சென்றதாக, சிறிவர்த்தனா அத்தபத்து மேல் குற்றம் சார்த்துகிறார். எனினும், அவ்வாறு தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டமையை அத்தபத்து மறுக்கின்றார். இவ்வேளை, பிரியதர்ஸனா காணாமல்போன விடயத்தில் அத்தபத்து கருத்தில் கொள்ளப்பட வேண்டியவராகின்றார். எவ்வாறாயினும், இந்த விடயத்தை அத்தபத்து உடனடியாக தனது சிரேட்ட அதிகாரியொருவரின் கவனத்துக்குக் கொண்டுவரவில்லை. இதுதொடர்பான புலனாய்வுகள் ஜமால்டீனால் மேற்கொள்ளப்பட்ட விதம் மிகவும் சிக்கல் வாய்ந்தது. அவ்வேளை, எதிர்பார்த்திருந்தமைபோல ஜமால்டீன் அத்தபத்துவின் வாக்குமூலத்தைப் பதிவு செய்திருக்கவில்லை. மேலும், அவர் பியகம விலேஜ் ஹோட்டலுக்குச் சென்றிருக்கவில்லை. முந்திய நாள் இரவு மாநாடொன்றுக்காக அத்தபத்து அங்கு வருகை தந்திருந்தாரா? என்பது பற்றியோ, அதனைத் தொடர்ந்து பிரியதர்ஸனாவும் அங்கு வருகை தந்திருந்தாரா? என்பது பற்றியோ, விசாரித்தறியவும் இல்லை. பிரயதர்ஸனா வீட்டுக்கு வந்தாரா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவரது பெற்றோரும் தொடர்பு கொண்டிருக்கவில்லை. பிரியதர்ஸனா கொலை செய்யப்பட்டுள்ளாரா? என்பதுபற்றி

உறுதிப்படுத்திக்கொள்ள எவ்வித பிரயாசையும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், உரிமை கோரப்படாததும், அடையாளம் காணப்படாததுமான சடலங்கள் வைக்கப்பட்டுள்ள பொலிசுச் சவச்சாலைக்கு அவரது உடல் அனுப்பப்பட்டுள்ளதா? என்பதுபற்றி உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அன்றைய தினம் இரவு, பிரியதர்ஸனா பொலிசு நிலையத்துக்கு வெளியே ஏதும் புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தாரா? என்பதுபற்றி இறுதியாக அறிந்துகொள்ளும்பொருட்டும் எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. பிரிதர்ஸனாவுக்கு என்ன நடந்தது? என்பதுபற்றி அறிந்திருந்தும்கூட, ஜமால்டீன், பிரியதர்ஸனாவின் காணாமல்போனமை பற்றிய தொடக்கப் புலனாய்வு விசாரணைகளை நடத்தவில்லை என்ற கருத்துப்பதிவு ஒருவருக்கு ஏற்பட முடியும்.

இதற்கிடையே, தனது சகோதரர் காணாமல்போனமைபற்றி எதுவித தகவலும் அறியாத நிலையில், 21 ஆந் திகதி மு.ப.8.00 மணியளவிலேயே, அவர் தைப்பதற்காகக் கொடுத்திருந்த உடைகள்பற்றி கதைப்பதற்காக தொலைபேசி வாயிலாக பொலிசு நிலையத்துடன் தினேஸ் தொடர்புகொண்டுள்ளார். அத்தபத்துவே அவரது அழைப்புக்குப் பதில் அளித்திருந்தார். அவ்வேளை பிரியதர்ஸனா பொலிசு நிலையத்தில் இருக்கவில்லை என்றும், அலுவலகக் கடமையொன்றின் நிமித்தம் தான் அவரை வெளியே அனுப்பியுள்ளதாகவும் அவர் (அத்தபத்து) தெரிவித்தார். முந்திய தினம் இரவு பொலிசு நிலையத்திலிருந்து வெளியே சென்ற பிரியதர்ஸனா இதுவரை திரும்பி வரவில்லை என்ற உண்மையை அத்தபத்து தினேஸிடம் கூறியிருக்கவில்லை. பிரியதர்ஸனா வீடுவந்து சேர்ந்தாரா? என்பதுபற்றியும் அவரிடம் விசாரித்திருக்கவில்லை. பிரியதர்ஸனா காணாமல்போனமைபற்றி எந்தத் தகவலையும் தினேஸ்சுக்கு வழங்கியிருக்கவில்லை. நண்பகலுக்கு முன்னர் தினேஸ்சைப் பொலிசு நிலையத்துக்கு வரும்படி அத்தபத்து அறிவுறுத்திக் கூறியிருந்தார். எனினும், தினேஸ் அதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. தினேஸ் நண்பகலில் பொலிசு நிலையத்துக்குச் சென்றுள்ளார். அவ்வேளை பிரியதர்ஸனா வீடு வந்து சேர்ந்தாரா? எனச் சடுதியாக அத்தபத்து பிரியதர்ஸனாவிடம் கேட்டுள்ளார். தினேஸ்சின் பதிலோ, எதிர்மறையாக இருந்திருக்கின்றது. சிலமணி நேரத்துக்கு முன்னர் தான் அலுவலகக் கடமையின் நிமித்தம் பிரியதர்ஸனாவை வெளியே அனுப்பியதாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது கூறிவிட்டு, ஏன் அத்தபத்து இவ்வாறு சடுதியாக விசாரித்திருக்க வேண்டும். தினேஸ்சின் கருத்துப்படி, அத்தபத்துவிடம் அதற்குரிய பதில் இருக்கவில்லை. எதுஎவ்வாறாயினும், இங்கு ஏதோவொன்று நடந்திருப்பதாக தினேஸ்சுக்கு ஐயம் எழுந்திருக்கின்றது. தினேஸ் பொலிசு நிலையத்தில் வைத்து நாஜி என்பவரைச் சந்தித்தமையும் அதற்கொரு காரணமாக இருந்திருக்கக்கூடும்.

மேலும், முந்தியதினம் இரவு பொறுப்பு உத்தியோகத்தர் அத்தபத்துவிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்தே பிரியதர்ஸனா பொலிசு நிலையத்தைவிட்டு வெளியே சென்றதாக நாஜியும், தினேஸ்சிடம் ஒப்புவித்தார். எனவே, அத்தபத்துவை மீண்டும் ஒருதடவை சந்திப்பதற்காக தினேஸ் உடனே சென்றிருந்ததுடன், அவரைச் சந்தித்தும் இருக்கின்றார். எனினும், தினேஸ்சுக்குக் கிடைத்த தகவல் தவறென்றும் சற்றுநேரத்தில் பிரியதர்ஸனா திரும்பி வருவார் என்றும் அந்நேரத்தில் அத்தபத்து கூறியிருக்கின்றார்.

மறுநாட்காலை, தினேஸ்சும் அவரது தந்தையும் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்குச் சென்றதுடன், அங்கு ஜமால்டீனைச் சந்தித்தனர். அவ்வேளை, பிரியதர்ஸனா கிட்டிய இடம் ஒன்றுக்குச் சென்றுள்ளதாகவும், அதுபற்றிப் பயப்படத் தேவையில்லை எனவும், அவர் விரைவிலேயே திரும்பிவிடுவார் எனவும் ஜமால்டீன் அவர்களிடம் கூறியிருக்கின்றார். அவர்கள் அத்தபத்துவைச் சந்தித்திருந்தபோதும்கூட, அவரும் அவ்வாறே கூறியிருந்தார்.

அதேதினம் தினேஸ், சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொடவைச் சந்தித்து இதுதொடர்பாகப் பேசியிருந்தார். அதற்கு தெல்கொட, இச்சம்பவத்தைத் தான் அறிந்துள்ளதாகவும் இதுதொடர்பில் தான் அவரைத் தேடும்பணியில் ஒரு குழுவைப் பணிப்பதாகவும் உறுதியளித்து இருந்தார். உண்மையில் அவர்(பிரியதர்ஸனா) ஒரு நேர்மையான உத்தியோகத்தர் எனவும், சட்டத்தைச் சிறிதும் பிசகாமல் செயற்படுத்துபவர் எனவும் குறிப்பிட்டு "நற்சாட்சிப்பத்திரம்" வழங்கவும் தெல்கொட தயாராக இருந்தார். அதன்பின்னர், தினேஸ்சும் அவரது தந்தையான எஸ். எம். அமரசேனாவும், பிரியதர்ஸனாவுக்கு என்ன நேர்ந்தது, என்பதைத் திட்டவட்டமாக உறுதிப்படுத்துவதில் தெல்கொட கரிசனை அற்றவர் என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டனர். இதற்குள் பிரியதர்ஸனாவின் நெருங்கிய நண்பர்களும் அண்மைய பொலிசு நிலையங்களில் கடமையாற்றியவர்களும் அவரைத் தேடலாயினர். அவர்களுள் அஜித் ஜயசிங்கா, சுபசிங்கா(பாலியகொடை பொலிசு நிலையத்தைச் சேர்ந்தவர்) மற்றும் வெதிசிங்கா (கிரிபத்கொடை பொலிசு நிலையத்தைச் சேர்ந்தவர்) ஆகியோரும் உள்ளடங்குவர்.

பெப்புரவரி மாதம் 23 ஆந் திகதி மாலையில், தனக்குக் கிடைத்த தகவலொன்றினையடுத்து, தினேஸ் பாலியகொடை பொலிசு நிலையத்துக்குச் சென்றிருந்தார். அவர் பொலிசு நிலையத்தை அடையும்போது அந்தி சாய்ந்திருந்தது. இந்த நிலையத்தை மிக அண்டியதாகவே களனி கங்கை ஓடிக்கொண்டு இருந்தது.. அத்தினம் சுபசிங்கா, வெதிசிங்கா ஆகியோரைத் தினேஸ் சந்தித்திருந்தார். வெதிசிங்காவும் மற்றையோரும் தினேஸ்சை ஆற்றங்கரையருகே அழைத்துச் சென்று, பிரியதர்ஸனாவின் உடல்சாயலை ஒத்த ஓர் உடல் ஆற்றில் மிதந்து வருவதைக் காண்பித்ததுடன், அந்த உடல் பிரியதர்ஸனாவுடையதுதானா என்பதை உற்றுப்பார்த்து உறுதிசெய்யுமாறு வேண்டினர். அவ்வேளை, தினேஸ் ஆற்றங்கரைவரை சென்றிருந்தார். அவ்வுடல் அப்போது ஆற்றின் மத்தியில் மிதந்து கொண்டிருந்தது. பொலிசு உத்தியோகத்தர்கள் அந்த உடலை ஆற்றங்கரையோரமாக இழுத்து வந்தனர். அந்த உடல் சிதைந்து சேதமுற்றிருந்தமையை தினேஸ் அவதானித்திருக்கிறார். முகத்தின் ஒருபகுதி இல்லாமல் இருந்தது. கைகள்கூடச் சேதமுற்றிருந்தது. இதனால், முகத்தை அவரால் அடையாளம் காண முடியாமல் இருந்தது. மேலும், அவ்வுடல் ஊதிப் பெருத்திருந்தது. எவ்வாறாயினும், பிரியதர்ஸனாவின் உடம்பில் இருந்த ஒரு முக்கிய அடையாளம் தெரிய வந்தது. அதாவது, பிறப்பிலேயே பிரியதர்ஸனாவின் மார்பில் காணப்பட்ட நான்கு முலைக்காம்புகளே அவை ஆகும். மார்பின் இருபக்கங்களிலும் இவ்விரண்டாக அவை அமைந்திருந்தன. அந்த நான்கு முலைக்காம்புகளில், அந்த உடலின் ஒரு பக்கத்தில் இரண்டு முலைக்காம்புகளும், மற்றைய பக்கத்தில் ஒரு முலைக்காம்பும் இருந்ததை தினேஸ் அவதானித்துள்ளார். தனியொரு முலைக்காம்பு மாத்திரம் தெரிந்த பக்கத்தில் தோல் சிறிது சேதமுற்றிருந்தது. பொதுவான அடையாளங்களுடன், அந்த உடலில் காற்சட்டையொன்றும் அணியப்பட்டு இருந்தது. அது தினேஸ், பிரியதர்ஸனா ஆகிய இருவருமே பாவித்து வந்ததாகும். உடல்தோற்றத்திலும் அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் ஒத்திருந்தார்கள் மட்டுமன்றி, உடைகளைப் பரிமாறிக் கொள்வதும் அவர்களின் பொதுவான பழக்கமாக இருந்தது. இத்தகைய காரணங்களால், தினேஸ்சும் அவ்விடத்தில் இருந்த உத்தியோகத்தர்களும் முகச்சாயலைக்கொண்டு அவ்வுடலை அடையாளம் காண முடியாதிருந்தபோதிலும், உண்மையிலேயே அவ்வுடல் பிரியதர்ஸனாவுடையதுதான், என்பதையிட்டு அவர்கள் திருப்திப்பட்டு இருந்தனர். பொலிசுப் பயிற்சிப் பாடசாலையில் பிரியதர்ஸனாவின் நண்பர்கள் கூறிய அத்தாட்சிகள் மூலமும், பிரியதர்ஸனாவுக்கு நான்கு முலைக்காம்புகள் இருந்தமை உறுதியானது. பிரியதர்ஸனாவுக்கு நான்கு முலைக்காம்புகள் இருந்தமை நன்கறியப்பட்டவோர் உண்மையாகும். இந்த விடயம் தொடர்பில் செயலாற்ற மறுநாள் தினேஸ்சுக்கு வருமாறு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தல் வழங்கியிருந்தனர். பொதுவான சூழ்நிலைகளில் இத்தகைய விசாரணைகள் இடம்பெறுவது எவரும் எதிர்பார்க்கக்கூடியதொன்றாகும்.

அவ்வுடல் அடையாளம் காணப்படும்வரை அவ்வுடலை(ஆற்றில் மிதந்து கொண்டிருந்தபொழுதே) அருகிலிருந்த ஒரு மரத்தில் கயிறொன்றின் துணைகொண்டு கட்டினார்கள். பொலிசாரின் இந்த நடத்தையானது நிச்சயமாக வழமைக்கு மாறானதாகும். எவ்வாறாயினும், இந்த வழக்கத்துக்கு மாறான நடத்தை, முழுவிடயம்பற்றியும் பொருத்தமான புலனாய்வொன்றை நடத்தாமல் இருப்பதற்கு பொலிசு படிநிலையாளர்களின் விருப்பமே மூலமாக இருந்ததெனத் தோன்றுகின்றது.

மறுநாட்காலை, தினேஸ் தனது தந்தையுடன் பொலிசு நிலையத்துக்குச் சென்றார். அங்கு பிரியதர்ஸனாவுக்கு என்ன நேர்ந்தது என்பதை உறுதிப்படுத்துவதற்கு உண்மையாகவே அக்கறையுள்ள நண்பர்களைச் சந்தித்திருந்ததுடன், அவர்களுடன் ஆற்றங்கரைவரையும் சென்றார். எனினும், அவர்கள் அங்கு சென்று பார்த்தபொழுது குறித்த உடல் இல்லாமையைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். அந்த உடலை ஆற்றங்கரை மரத்தில் வரிந்து கட்டியிருந்த கயிறுகூட வெட்டப்பட்டு இருந்தது. அன்றைய தினம் இரவு முழுவதும் பாலியகொடை பொலிசு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களால்கூட அந்த உடலுக்கு என்ன நடந்தது என்பதுபற்றி விபரிக்க முடியவில்லை. இது, பாலியகொடை பொலிசு நிலையம் சிறந்த பாதுகாப்புடைய பொலிசு நிலையமாக விளங்கியது என்பதற்குச் சான்றாகும். உண்மையில், அந்தப் பொலிசு நிலையப் பின்பக்கச் சுற்றுவட்டாரம்கூட நன்கு ஒளியூட்டப்பட்டு இருந்தது. அவ்வாறாயின், பிரியதர்ஸனாவின் உடலுக்கு யாது நேர்ந்தது? பாலியகொடை பொலிசு நிலையத்தில் இருந்தவர்களின் உடன்பாடின்றி யாரோ வெளியார் அந்த உடலைச் எடுத்துச் சென்றிருந்தனரா? அல்லது அவ்வுடல் ஆற்றிலே மிதந்து சென்று கடலை அடையுமாறு, உடலைக் கட்டியிருந்த கயிற்றை வெட்டியுள்ளனரா? என்பதைக் குறிப்பிடுவது இங்கு நியாயமானதா?

இதற்கிடையில், பிரியதர்ஸனாவின் காணாமல்போதல் விடயத்தில், பொலிசு அதிகாரிகள் தமது புலனாய்வு நடவடிக்கைகளின்போது நன்கு கரிசனை காண்பிக்கவில்லை என்பது பிரியதர்ஸனாவின் குடும்பத்துக்குத் தெளிவாகியது. இதனால், 1990.02.24 அன்று பி.ப.7.00 மணியளவில் பிரியதர்ஸனாவின் தந்தை பொலிசுத் தலைமையகத்துக்குச் சென்று பிரியதர்ஸனா காணாமல்போனமை சம்பந்தமாக முறைப்பாடொன்றை மேற்கொண்டிருக்கின்றார்.

சரியாக அந்த நேரம் அல்லது அதற்குள் வெதிசிங்காவும், சுபசிங்காவும் பொறுப்பு உத்தியோகத்தர் அத்தபத்துவைச் சந்தித்து, பிரியதர்ஸனாவுக்கு என்ன நேர்ந்துள்ளது? என்பதுபற்றி விசாரித்துள்ளனர். இவ்விடயம் கையாளப்பட்ட விதம்குறித்து அவர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். உண்மையில், ஏதும் பொருள் காணாமல் போயிருந்தாலும்கூட சிறந்தமுறையில் தேடுதல்கள் இடம்பெறும். எனினும், காணாமல் போனதற்கான விடயத்தை நீங்கள் ஏன் விசாரிக்கவில்லை? என அவர்கள் வினவியுள்ளனர். அதற்கு அவர், என்ன நேர்ந்தது என்பதுபற்றி நான் அறியேன். அவர் எங்கு சென்றிருந்தாலும் மீளத் திரும்பிவருவார் என அத்தபத்து அவர்களை அச்சுறுத்தும் பாங்கில் பதிலளித்துள்ளார்.

சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தை விட்டு வெளியேறி இரண்டு மணித்தியாலயங்கள் கடந்திருக்கும். அப்போது அவர்கள் இருவருக்கும் சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் தெல்கொடவிடமிருந்து உத்தியோகபூர்வ செய்தியொன்று கிடைத்தது. மறுநாட்காலை அவர்களிருவரும் தம்மை வந்து சந்திக்குமாறும், பிரதிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னாவின் முன்னிலையில் அவர்களை நிறுத்த இருப்பதாகவும், அச்செய்தியில் குறிப்பிடப்பட்டு இருந்தது. மறுநாட்காலையில், இருவரும் சென்று தெல்கொடவைச் சந்தித்தபோது, முந்திய தினம் அவர்கள் இருவரும் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு ஏன் சென்றிருந்தனர் எனவும் அந்தப் பொலிசு நிலையத்தைத் தகர்க்கப்போவதாக ஏன் அச்சுறுத்தினர் எனவும் விசாரித்திருக்கின்றார். அவர்கள் இருவருமே தாம் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை என மறுத்திருக்கின்றனர். எவ்வாறாயினும், தெல்கொட அவர்கள்

இருவரையும் பிரதிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னா முன்னிலையில் தோன்றும்படி கூறியிருக்கின்றார். அப்போது பிரதிப் பொலிசுமா அதிபரும் வெதிசிங்காவை அச்சுறுத்தி இருக்கின்றார். "காணாமல்போனோரைத் தேடிச்சென்று வீணாகச் சிக்கலில் மாட்டிக் கொள்ளாதீர்கள்" என அச்சுறுத்தியுள்ளார். அத்துடன், அவர் (குணரத்னா), பிரியதர்ஸனாவைத் தேடும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டால், உம்மை (சுபசிங்காவை) யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றிவிடப் போவதாகவும் எச்சரித்துள்ளார். உதவிப் பொலிசுமா அதிபர் குணரத்னாவின் அலுவலகத்தைவிட்டு அவர்கள் இருவரும் வெளியேறி வரும்போதே அத்தபத்துவைச் சந்தித்தனர். உடனே "நாம் பொலிசு நிலையத் தகர்ப்புக்குத் திட்டம் தீட்டியுள்ளதாக ஏன் நீங்கள் உயர்அதிகாரிகளிடம் பொய் உரைத்தீர்கள்" என வினவியுள்ளனர். உண்மையில், அவர் தம்முடன் வந்து பிரதிப் பொலிசுமா அதிபர் குணரத்னாவைச் சந்தித்து அவர் முன்னிலையில் சவாலுக்கு நிற்குமாறு அத்தபத்துவை வேண்டியிருக்கின்றனர். எவ்வாறாயினும், இதுவிடயமாக தான் உயர் அதிகாரிகளிடம் எதுவும் கூறவில்லை என அத்தபத்து அவ்வேளை மறுத்திருந்தார். அத்துடன், சி.பொலிசுமா அதிபர் குணரத்னாவின் அலுவலகத்துக்குத் தம்முடன் வருமாறு வெதிசிங்கா, சுபசிங்கா ஆகியோர் அவரை அழைத்தபோது, அவர் அவர்களுடன் செல்ல மறுத்திருக்கின்றார்.

இதனையடுத்து, பாலியகொடை பொலிசு நிலையத்தின் உதவிப் பொலிசு அத்தியட்சகர் டக்ளஸ் பிரிஸ்சைச் சந்தித்தபோது அவர்(பீரிஸ்) பிரியதர்ஸனா காணாமல்போன விடயத்தில் அதிக சிரத்தை காண்பிக்க வேண்டாம் எனவும், அவ்வாறு அவர் தொடர்ந்தும் அதேநிலைப்பாட்டில் இருப்பின் பிரியதர்ஸனாவுக்கு நேர்ந்தவையே அவரது விதியாகவும் அமையும் என்றும் வெதிசிங்காவை டக்ளஸ் பீரிஸ் அதட்டியிருக்கின்றார். எவ்வாறாயினும், வெதிசிங்கா ,சுபசிங்கா ஆகியோர் காணாமல் போன பிரியதர்ஸனாவைத் தேடும் பணியில் சளைக்காமல் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தனர். அதற்கிடையில், அஜித் ஜயசிங்காவும் பிரியதர்ஸனாவைத் தேடும் பணியில் இணைந்து கொண்டார். அவர் அதன்பொருட்டு விடுமுறை பெற்றிருந்ததுடன், பிரியதர்ஸனாவைத் தேடச் செல்வதில் தனது முழுநேரத்தையும் ஒதுக்கியிருந்தார். இவ்வேளையில் உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ்சிடமிருந்து வெதிசிங்காவுக்குத் தகவலொன்று கிடைத்தது. காணாமல்போன பிரியதர்ஸனாவைத் தேடிப்பிடிப்பதில் அஜித் ஜயசிங்கா கொண்டுள்ள உண்மையான அக்கறையாலும், ஜயசிங்காவைத் தொடர்ந்து இரு அணிகள் தேடும் பணியில் இறங்கியிருந்தமையாலும், அவர் (டக்ளஸ் பீரிஸ்) கோபம் அடைந்துள்ளதாகவும் அந்தத் தகவலிலிருந்து தெரியவந்தது. இதனால், ஜயசிங்கா கடத்தப்பட்டு இன்னலுக்கு ஆளாக்கப்படலாம் என்பதையிட்டு, வெதிசிங்கா அச்சம் கொண்டார். இதனால் அவர் ஜயசிங்காவைக் கவனமாக இருக்கும்படி அறிவுறுத்தினார்.

எவ்வாறாயினும், தன்னிடம் ஒரு கைத்துப்பாக்கியும் கிரனைட்டும் இருக்கும்வரை தான் அச்சம்கொள்ளப் போவதில்லை எனவும், தனது தேடல் முயற்சியைத் தொடர்ந்தும் மேற்கொள்ளப்போவதாகவும் ஜயசிங்கா கூறியிருந்தார். ஜயசிங்காவின் நடவடிக்கையின் விளைவால் அவருக்கு என்ன நேர்ந்தது என்பதுபற்றி, அடுத்த அத்தியாயத்தில் எடுத்தாளப்படும்.

பிரியதர்ஸனா காணாமல்போனதைத் தொடர்ந்துவந்த காலப்பகுதியின் முதல்கட்டத்தில் அவர் (பிரியதர்ஸனா) துர்நடத்தைகளிலோ, சட்டத்துக்குப் புறம்பான விடயங்களிலோ சம்பந்தப்பட்டு இருந்ததாக பிரியதர்ஸனாவுக்கு எதிராக எந்த ஒருவராலும் குற்றம் சார்த்தப்பட்டு இருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. உண்மையில், பிரியதர்ஸனா ஒரு விதிவிலக்கான உத்தியோகத்தர் எனவும், அவரது ஒருங்கிணைப்பும் ஆற்றலும் சந்தேகமின்றி எவ்விதக் கேள்விகளுக்கும் அப்பாற்பட்டதெனவும் அந்த விடயத்தில் கருத்தொருமைப்பாடு நிலவியது.

பிரியதர்ஸனா காணாமல்போனதிலிருந்து அவரது உடலைத் தேடுவதில் நீண்டகாலம் சென்றிருந்தமையால்(7 ஆண்டுகள்) (உரிய உடலின் அடையாளங்கள், சட்ட உறுதிப்பாடு பெற்றிருக்கவில்லையெனினும்) கிடைக்கப்பெற்ற காண்புகளிலிருந்து, பிரியதர்ஸனா பியகம விலேஜ் ஹோட்டலில் வைத்துக் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் அல்லது அந்தக் ஹோட்டலிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு வேறொரு இடத்தில் கொலைசெய்யப்பட்டு இருக்கலாம் என்ற முடிவுக்கு ஆணைக்குழு வந்துள்ளது. குறிப்பாக, 20 ஆந் திகதி இரவு பொலிசு பரிசோதகர் அத்தபத்து குறிப்பிட்ட தொலைபேசி அழைப்பின்மூலம் பிரியதர்ஸனாவைக் ஹோட்டலுக்கு வரும்படி அழைத்திருந்தமைபற்றி மறுத்திருக்கின்றமை வரையிலான காண்புகளிலிருந்து நாம் இந்த முடிவுக்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். எவ்வாறாயினும் அன்றைய தினம் மாலையில் கலந்துரையாடலொன்றில் பங்கேற்பதற்காக அவர் ஹோட்டலுக்குச் சென்றதாக ஒப்புக்கொண்டுள்ளார். புலன்விசாரணைகளை மேற்கொள்ளவென ஆணைக்குழுவில் அமர்த்தப்பட்டிருந்தவர்களுக்கு பிரியதர்ஸனா நிலையத்தைவிட்டு வெளியேறியமை யிலிருந்து அவருக்கு என்ன நேர்ந்தது என்பதை உறுதிப்படுத்தப் போதிய சாதகமான சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில், சில முக்கிய துப்புகள் வழங்கியிருந்த யாவருமே ஒன்றில் ஏதும் தமக்குத் தெரியாது எனக் கூறியிருந்தனர் அல்லது மௌனம் சாதித்திருந்தனர். பிரியதர்ஸனாவுக்கு என்ன நேர்ந்தது? எவ்வாறாயினும் பிரியதர்ஸனா காணாமல்போதல்பற்றி அவர்கள் மாத்திரம் அறிந்து வைத்துள்ள சம்பந்தப்பட்டோர் யாராக இருப்பினும் (அவர்களுக்கு மனச்சாட்சியொன்றிருந்தால்) அந்திமகாலம்வரை அவர்கள் உறுத்துகின்ற மனச்சாட்சியுடனே வாழவேண்டியிருக்கும்.

## அத்தியாயம் V111
## உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்காவின் கைதும் தடுத்து வைப்பும்

பின்னணி............

பிரியதர்ஸனாவைத் தேடுதல்........

களனிப் பொலிசுப் பிரிவில் வேலைசெய்யும் பிரியதர்ஸனாவின் நெருங்கிய நண்பர்கள் அவர் காணாமல் போனபின்னர் ஏற்பட்ட சம்பவங்களின் இயல்புபற்றி திருப்தியடையவில்லை என்பது தெளிவானதாகும். பொலிசுப் பதவிநிலையாளர்கள் இவ்விடயம்பற்றி ஏன் தீவிர அக்கறை கொள்ளவில்லை என்பதுபற்றி அவர்கள் விசனம் அடைந்திருந்தனர். சம்பந்தப்பட்ட புலனாய்வுக்கென விசேட புலனாய்வுப் பிரிவொன்றாவது நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. அத்தபத்துவின் ( இவர், குற்றச்சார்த்துரையொன்று செய்யப்பட்டிருந்த நபர்களுள் ஒருவராவர்) மேற்பார்வையின் கீழ், ஜமான்டீனால் மேற்கொள்ளப்பட்ட மேலெழுந்தவாரியான புலனாய்வுகள்பற்றி அவர்கள் நிச்சயமாகத் திருப்தியுறவில்லை. எனவே, பொலிசைச் சேர்ந்த பிரியதர்ஸனாவின் நண்பர்கள் அவருக்கு என்ன நடந்தது என்பதை அறுதியிடும்பொருட்டு உத்தியோகப்பற்றற்ற முறையில் புலனாய்வுகளை ஆரம்பித்து இருந்தனர். அஜித் ஜயசிங்காவும் அவர்களோடு சேர்ந்து செயற்பட்டார்.

பிரியதர்ஸனாவுக்கு என்ன நடந்தது என்பதை சிலநாட்களுக்குப் பின்னராவது கண்டுபிடிக்க இயலாத நிலையில் இருந்த அஜித் ஜயசிங்காவினதும் ஏனையோரினதும் மனதில் ஏமாற்றம் ஏற்படத் தொடங்கியது என்பது புலனாகின்றது. பெப்புரவரி மாதம் 23 ஆந் திகதியளவில் அஜித் ஜயசிங்கா பாலியகொடை பொலிசு நிலையத்தில் அமைந்த குற்றம் சமர்ப்பித்தல் அறையில் பிரியதர்ஸனாவின் காணாமல்போனமைபற்றி பலமாகச் சத்தமிட்டுப் பேசியிருந்தார். பிரியதர்ஸனாவைக் கொலைசெய்த ஆள் எவராக இருந்தாலும், அவர் கண்டுபிடிக்கப்பட்டுக் கொலைசெய்யப்படல் வேண்டுமென அவர் கூறியிருந்தார். 23 ஆந் திகதியளவில் பிரியதர்ஸனா உயிருடன் இருக்கவில்லை என ஜயசிங்காவுக்குச் சந்தேகம் ஏற்பட்டு இருந்தது என்பது இந்தக் கூற்றினால் புலனாகும். அந்தக் காலகட்டத்தில் பிரியதர்ஸனாவின் சகோதரரான தினேஸ் என்பவர் பிரியதர்ஸனாவின் பிரேதத்தைக் கண்டுபிடித்த செய்தியைத் தெரிவித்தமை, இதற்குக் காரணமாக இருக்கலாம். பொலிசுச் சேவையின் உயரதிகாரிகள் இந்த விடயம்பற்றி எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததென்பது அம்பலமாகியபோது ஜயசிங்காவும் அவருடைய நண்பர்களும் இச்சம்பவத்தில் பொலிசார் சம்பந்தப்பட்டிருந்தனர் என ஐயமுற்றனர் என்பது புலனாகும். 20 ஆந் திகதி இரவில் பிரியதர்ஸனா பொலிசு நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் செல்வதற்கு அத்தபத்துவினால் கொடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்பு காரணமாக இருந்தது என அவர்கள் அறிந்திருந்தமை இந்தக் கருத்துக்கு ஆதாரமாக இருந்திருக்கலாம். உண்மையில் சம்பவத்தினையடுத்து உடனடியாக பிரிதர்ஸனாவை ஏன் தேடாமல் இருக்கிறீர்கள் என ஜயசிங்கா, அத்தபத்துவைக் கேட்டபொழுது அவர் சற்றுக் குழப்பமடைந்து பதிலளிப்பதைத் தவிர்த்துக்கொண்டார். பொலிசு நிலையத்தில் பலமாகச் சத்தமிட்டு பேசுவதற்கு ஜயசிங்கா ஏன் முற்பட்டார் என்பதை, இந்தப் பின்னணியைக்கொண்டு உணரலாம். சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு தம்மைச் சுற்றியிருந்தவர்களின் மூலம் இந்தச் செய்தியைப் பரப்ப அவர் கருதியிருக்கலாம். அது, நிறைவேறியதெனத் தெரிகின்றது.

இந்தத் திகதியளவில் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸ் ஜயசிங்காவைச் சந்தித்தபோது பிரியதர்ஸனாவைத் தேடி ஏன் அவர் செல்லவில்லை என சற்று ஏளனக் குரலில் ஜயசிங்காவிடம் வினாவியிருந்தார். ஓரிரு தினங்களில் அவருக்கு (ஜயசிங்கா) "தகவல்கள் சில கிடைக்குமெனவும்" அவர் மேலும் கூறியிருந்தார். உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் அங்ஙனம் கூறியபோது அவருடைய மனதில் எதை வைத்துக்கொண்டிருந்தார்? பிரியதர்ஸனாவின் நெருங்கிய நண்பர் யாரென்பதை வினாவவும்

பீரிஸ் முற்பட்டிருந்தார். பிரியதர்ஸனாவின் நெருங்கிய நண்பர் தாம் எனப் பதிலளித்த ஜயசிங்கா, அதனால்தான் நான் பிரியதர்ஸனாவைத் தேடுவதற்குச் சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றேன் எனக் கூறினார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று ஒன்று அல்லது இரண்டு தினங்களுக்குள் உதவிப் பரிசோதகர் தெல்கஹகொட (இவரும் களனிப் பொலிசுப் பிரிவைச் சேர்ந்தவராவார்) ஜயசிங்காவைச் சந்தித்து, தெகிவளையில் வசித்த நபரொருவர், அந்த நபரின் மனைவியோடு காதல்பண்ணிக் கொண்டிருந்த நேரத்தில், பிரியதர்ஸனாவைப் பிடித்து, அந்த நபர் பிரியதர்ஸனாவின் ஆணுறுப்புகளை வெட்டினார் எனவும், அவர் எவருக்கும் தெரியாத ஓர் இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் உதவிப் பொலிசு அத்தியட்சகர் பீரிஸ் தமக்குக் கூறியதாக ஜயசிங்காவுக்குத் தெரிவித்தார். பிரியதர்ஸனாவின் நெருங்கிய நண்பர் தம்மைச் சந்திக்க பட்டலந்தைக்கு வருகை தருவாராயின் இந்த விடயம்பற்றிய முக்கியமான தகவல் சிலவற்றைத் தாம் அவருக்குக் கூறலாம் எனவும் உதவிப் பொலிசு அத்தியட்சகர் பீரிஸ் அவர்கள் தெல்கஹவிடம் கூறியிருந்தார். ஜயசிங்கா இதுபற்றி தனது நண்பர்களுடன் கலந்துரையாடினார். ஜயசிங்காவின் நண்பர்கள் பட்டலந்தைக்குப் போகவேண்டாம் என அவருக்கு ஆலோசனை கூறியிருந்தனர். எவ்வாறாயினும், தாம் அஞ்சப்போவதில்லை எனவும், இதுதொடர்பில் பட்டலத்தைக்குச் செல்லத் தாம் தயாராக இருப்பதாகவும் ஜயசிங்கா கூறியிருந்தார். எனினும், அதனையடுத்து ஏற்பட்ட சம்பவங்கள் ஜயசிங்கா பட்டலந்தைக்குச் செல்வதைத் தடுத்துவிட்டது.

இக்காலப்பகுதியில், பாலியகொடை பொலிசு நிலையத்தில் அமைந்த திருமணம் முடிக்காத உத்தியோகத்தர்களது விடுதியில் ஜயசிங்கா தங்கியிருந்தார். பெப்புரவரி 22 ஆந் திகதியிலிருந்து ஜயசிங்கா தமது பகல் நேரமெல்லாம் பிரியதர்ஸனாவைத் தேடுவதில் ஈடுபட்டு இருந்தார் எனக் கிடைத்துள்ள சான்றுகளின்வண்ணம் புலனாகும். சில நேரங்களில் அவர் பாலியகொடை பொலிசு நிலையத்தில் இருக்கவில்லை. எவ்வாறாயினும் இரவுநேரங்களில் தமது விடுதிக்கு வர அவர் தவறவில்லை. இங்ஙனம், பிரியதர்ஸனா காணாமல் போன பின்னர் தலைமறைவாகிப் போவதற்கு ஜயசிங்கா எத்தனிக்கவில்லை என்பது புலனாகும். இந்த வாக்குமூலத்தின் முக்கியத்துவமானது ஜயசிங்காவின் கைதுசெய்தல் மற்றும் தடுப்புவைப்புக் குறித்து அதிகாரிகளின் கூற்றினை நாங்கள் கூர்ந்து ஆராயுமிடத்து தெளிவுறும். இரவு நேரங்களில் ஜயசிங்கா பாலிகொடை பொலிசு நிலையத்தின் உத்தியோகத்தர் விடுதியில் இருந்தபடியால் அவரைச் சந்திக்க விரும்பிய எவரும் அவரைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியம் எற்படவில்லை.

ஜயசிங்கா கைதுசெய்யப்படல்..........

25 ஆந் திகதி மாலையில், பொலிசு மருத்துவமனையிலிருந்து மருத்துவக்கவனிப்பு வேண்டி நிற்பதற்கான எழுத்துமூல அனுமதி வழங்குமாறு பொலிசுப் பரிசோதகர் மாரசிங்காவை (அக்காலத்து பாலியகொடை பொறுப்பு உத்தியோத்தராக இருந்தவர்) ஜயசிங்கா வேண்டிக்கொண்டார். அதன்படியே, ஜயசிங்காவுக்குத் தேவைப்பட்ட அனுமதியை மாரசிங்கா வழங்கினார். மறுநாட்காலை, ஜயசிங்கா தனது நண்பர் சரத் பண்டாவுடன் பொரளையில் இருந்த பொலிசு மருத்துவமனைக்குச் சென்றார். அவர்கள் சரத் பண்டாரவின் மோட்டார் சைக்கிளிலேயே பொரளையை நோக்கிச் சென்றனர். அதனை பண்டாரவே செலுத்திச் சென்றார். அவர்கள் பேஸ்லைன் பாதை வழியாகச் சென்று தெமட்டக்கொடை புகையிரதக் கடவைவரை வந்தனர். புகையிரதக் கடவையை அண்மித்தபோது, உபொஅ பீரிஸ் தனது நீல நிற லான்சர் காரில் எதிர்த்திசையில் வருவதை அவர் அவதானித்தார். அந்த மோட்டார் கார் வண்டியை பொலிசுக் கான்ஸ்டபிள் ரஞ்சித் ஓட்டிவந்தார். உபொஅ பீரிஸ் பொலிசுச் சீருடையில் இருந்தார். அவர் ஜயசிங்காவைக் கண்ணுற்றதுமே, அவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சமிக்ஞை

கொடுத்தார். அதன்படியே மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு ஜயசிங்கா பண்டாரவை வேண்டியதுடன் அவர் நிறுத்தினார். உபொக பீரிஸ்சும் தனது காரைவிட்டு இறங்கியதுடன், இருவருமே கிட்ட வந்து நின்றனர். ஜயசிங்கா நிமிர்ந்து நின்று உபொஅ பீரிஸ்சுக்கு மரியாதை செலுத்தினார். உபொஅ பீரிஸ் தனது ஆயுதத்தை(ஒரு கைத்துப்பாக்கியை) வெளியே இழுத்தெடுத்து ஜயசிங்காவின் கழுத்துக்கு நேரே குறிவைத்தார். அத்துடன் பிரிஸ்சின் மற்றைய கரம் ஜயசிங்காவின் மேற்சட்டையின் கழுத்துப்பட்டையைப் பற்றி இருந்தது. ஜயசிங்கா அச்சம் கொண்டதுடன் தன்னை ஏதோ அபாயம் சூழப்போவதாக ஐயமுற்றார். பிரயதர்ஸனாவுக்கு என்ன நேர்ந்தது என்பதோடும் பிரியதர்ஸனாவுக்கு என்ன நடந்தது என்பதை அறுதியிட்டு அறிய அவர்(ஜயசிங்கா) எடுத்த முயற்சிகளோடும் இது தொடர்புடையதாக இருக்கலாம், என அவர் புரிந்துகொண்டார்.

ஜயசிங்கா ஒருசில அடிகள் பின்னோக்கி வைத்ததுடன் அருகில் இருந்த மின்கம்பமொன்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டார். அதேநேரத்தில் பாலியகொடை நாசகாரத் தடுப்புப் பிரிவின் வான் வண்டி (அதுபற்றி அத்தியாயம் V இல் விபரிக்கப்பட்டுள்ளது) உபொஅ பீரிஸ்சின் கார் அருகே தரித்து நிற்பதை ஜயசிங்கா அவதானித்திருந்தார். பாலியகொடை நாசகாரத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் அருகில் நின்றனர். பொலிசுச் சார்ஜன்ட்களான ஜயரத்னா, லக்ஸ்மன், ரணதுங்கா, ரத்நாயக்கா ஆகியோரும் ராஜேந்திரா என்றழைக்கப்பட்ட சிவில் நபரும் அங்கு இருந்தனர். ஜயசிங்கா அளித்த சாட்சியத்தின் பிரகாரம், தூரத் தெற்கில் அமைந்த ஊருகஸ்மங்ஹந்திய என்ற கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திரா என்பவர் உபொஅ பீரிஸ்சின் சகாவாக இருந்தார். அவர் நாசகாரிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும்பொருட்டு திரு.பீரிஸ்சால் பயன்படுத்தப்பட்டவராவர். ஜயசிங்காவைப் பிடித்துப் பலவந்தமாக வான்வண்டியில் ஏற்றுமாறு அங்கிருந்த நாசகாரத் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு உபொஅ பீரிஸ் பணித்தார். ஜயசிங்கா தனது இருகைகளாலும், அருகிலிருந்த மின்கம்பத்தைப் பற்றிப்பிடித்துச் சிறிது நேரம் எதிர்த்து நின்றார். நாசகாரத் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஜயசிங்காவின் இடுப்பில் மறைத்து வைத்திருந்த உத்தியோகபூர்வக் கடமைக்கான ஆயுதத்தைத் பலவந்தமாகப் பறித்து எடுத்தனர். அதன்பின்னர், நாசகாரத் தடுப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள் ஜயசிங்காவைக் கட்டிப்பிடித்து ஒருவாறு சமாளித்தவண்ணம் அவரைப் பலவந்தமாகத் தூக்கிச் சென்று வானில் போட்டனர். ஜயசிங்காவின் நண்பர் பண்டாரவும் அவ்வறே வானில் ஏற்றப்பட்டார்.

ஜயசிங்கா அதற்குள்ளாகவே தான் அப்போது அணிந்திருந்த மோட்டார் சைக்கிள் ஜக்கெட் பைக்குள் வைத்திருந்த கைக்குண்டை வெளியே எடுத்ததுடன் தனது பற்களின் உதவியைக்கொண்டு குண்டின் காப்பூசியை அகற்றினார். கைக்குண்டின் வெடிக்கச் செய்யும் காப்பூசியை அகற்றியதைக் கண்ட மாத்திரத்தில், வானுள் இருந்த உத்தியோகத்தர்கள் வெளியே குதித்தனர். உபொஅ பீரிஸ் அவரிடம் வந்து கையில் வைத்திருந்த கைக்குண்டைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டார். தனக்குப் பயங்கரமான விளைவேதும் நடக்குமோ என அஞ்சினார். அதனால், பாலியகொடைப் பொலிசு நிலையத்துக்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறும் அவ்வேளை தன்னிடம் உள்ள கைக்குண்டை கையளிப்பதாகவும் ஜயசிங்கா கூறினார். இந்தவகையில் அவர் நடத்தப்படுவதற்கு அவர், திரு.பீரிஸ்சுக்குத் தவறாக எதனையும் செய்ததில்லை என மேலும் கூறினார்.

உ.பொ.அ. பீரிஸ், ஜயசிங்காவின் முயற்சியைக் கைவிடச்செய்யும்படி எத்தனித்தார். ஒரு தடவை, அவர் ஜயசிங்காவுடன் கைகுலுக்கவும் எத்தனித்தார். ஜயசிங்கா பின்னர் வானை விட்டு இறங்கியதும், திரு.பீரிஸ் தம்மை வாபஸ்பெற்றுக் கொண்டார். அக்கட்டத்திலேயே, சம்பவம் நடந்த அவ்விடத்துக்கு ஒரு பாதுகாப்புப் படை வாகனம் வந்தடைந்ததை ஜயசிங்கா அவதானித்தார். அருகில் 7-8 தரைப்படை உத்தியோகத்தர்கள் நின்றனர். ஜயசிங்கா பாய்ந்துசென்று அவர்களிடம் தனது பொலிசு அடையாள அட்டையைக் காண்பித்ததுடன் நடந்தவற்றை அவர்களிடம் விபரித்தார். தான் ஒரு ஜே.வி.பி. உறுப்பினர் அல்லது, சாதாரண

திருடன் அல்ல எனவும் கூறினார் அத்துடன், களனிப் பிரிவு சிபொஅ அவர்களிடம் தன்னை ஒப்படைக்குமாறு மன்றாடினார். உபொஅ பீரிஸ்சின் கட்டுக்காப்பின் கீழ் செல்வதற்கு ஜயசிங்கா அஞ்சினார் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. உபொஅ பீரிஸ்சும் தரைப்படை உத்தியோகத்தர்களுடன் கதைத்தார். அக்கட்டத்தில், பொலிசு உத்தியோகத்தர்களால் ஜயசிங்கா கைதுசெய்யப்படுவதைத் தடுக்கும்பொருட்டு, தரைப்படை உத்தியோகத்தர்கள் ஜயசிங்காவைச் சூழ்ந்து கொண்டனர். அத்துடன் ஜயசிங்காவைத் தரைப்படையினரின் வாகனம்வரை அழைத்துச் சென்று, அதில் ஏற்றிக் கொண்டனர். ஜயசிங்கா, தன்னிடம் இருந்த கைக்குண்டைத் தரைப்படை உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தார். அந்த உத்தியோகத்தர் அதனை அருகிலிருந்த ஏகாந்தமான ஓரிடத்துக்குக் கொண்டு சென்று, அதனை வெடிக்கச் செய்தார். ( அப்போது, ஜயசிங்கா கைக்குண்டின் காப்பூசியைக் கழற்றியிருந்தபடியால்) ஜயசிங்காவின் பாதுகாப்பில் இன்னொரு கைக்குண்டும் இருந்துள்ளது. அதனையும் அவர் தரைப்படை உத்தியோகத்தர்களிடம் ஒப்படைத்தார். உபொஅ பீரிஸ், ஜயசிங்காவை எடுத்துச் செல்லும் அவரது முயற்சிகளைக் கைவிடவில்லை. அவர் (பீரிஸ்) தனது கைத்துப்பாக்கியை கையில் ஏந்தியவாறு தரைப்படையின் டிரக் வண்டியில் ஏறியதுடன் ஜயசிங்காவைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு வற்புறுத்தினார். எவ்வாறாயினும், தரைப்படை உத்தியோகத்தர்கள் அதனை மறுத்ததுடன், தாம் முன்னர் வாக்களித்தமைபோல களனிப் பிரிவு சி.பொ.அத்தியட்சகரிடம் தாம் ஜயசிங்காவை கையளிக்கப் போவதாகக் கூறினர். திரு.பீரிஸ் அவர்களது உறுதிமொழியில் திருப்தி கொள்ளவில்லை. டிரக்வண்டியில் ஏறிய அவர், ஒருசோடிக் கைவிலங்குகளை எடுத்தார். அதில் ஒன்றை ஜயசிங்காவின் காலுடன் சேர்த்துப் பூட்டியதுடன், மற்றையதை டிரக்வண்டியின் ஓர் பாகத்துடன் சேர்த்துப் பூட்டினார்.

பின்னர், தரைப்படை உத்தியோகத்தர்கள் ஜயசிங்காவைப் பாலியகொடை பொலிசு நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். நாசகாரத் தடுப்புப் பிரிவில் ஜயசிங்காவை ஒப்படைத்த தரைப்படை உத்தியோகத்தர் எவரினதும் வாக்குமூலங்கள் ஒன்றும் பதிவு செய்யப்படவில்லை. அன்றி, ஜயசிங்காவை ஒப்படைத்த தரைப்படை உத்தியோகத்தர்களின் ஆளடையாளங்கள் பற்றிய எதுவித குறிப்புகளையும் அவர்கள் பதிவு செய்திருக்கவில்லை. நாசகாரத் தடுப்புப் பிரிவில் ஜயசிங்காவை ஓர் ஆசனத்தில் அமருமாறு பணித்தனர். பின்னர், ஆசனத்துடன் சேர்த்து அவரது கைகளுக்கு விலங்கிடப்பட்டது. பிரஸ்தாப சம்பவம் நடந்த இடத்தில் ஜயசிங்கா கைதுசெய்யப்படவில்லையாதலால் நாசகாரத் தடுப்புப் பிரிவில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த நேரத்தில் கைதுசெய்யப்பட்டார் என்ற ஊகத்துக்கு வரவேண்டியுள்ளது. அங்கு அவரது "கைதுசெய்தல்" பற்றியோ அல்லது "தடுத்துவைத்தல்" பற்றியோ எந்தவொரு பொலிசு உத்தியோகத்தரும் எந்நேரத்திலேனும் உரிய காரணம் கூறத் தவறிவிட்டனர். இச்சம்பவம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட அவரது கூற்றுக்கள் தொடர்பாக உடனடியான குறிப்பு எவற்றையும் மேற்கொண்டிருக்கவில்லை. உடனடியாக, ஜயசிங்கா வினாவுதலுக்கு உட்படுத்தப்படவும் இல்லை. அத்துடன், அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு இருக்கவும் இல்லை. பிரஸ்தாப சம்பவம் தொடர்பாகவோ பாலியகொடை நாசகாரத் தடுப்புப் பிரிவில் ஜயசிங்கா தடுத்து வைக்கப்பட்டு இருப்பது தொடர்பாகவோ எவ்வித தகவலும் அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டு இருக்கவில்லை.

மாலையானதும் ஜயசிங்காவைச் சந்திக்க விருந்தினர் ஒருவர் வந்திருந்தார். களனிப் பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தராக இருந்த சிபொஅ தெல்கொடவே அங்கு வந்திருந்தவர் ஆவார். அவர் ஜயசிங்காவை திட்டித்தீர்த்ததுடன் தனது கைத்துப்பாக்கியின் உதவிகொண்டு ஜயசிங்காவின் கன்னத்தில் அறைந்தார். பி.ப.7.00 மணியளவில் பொலிசுப் பரிசோதகர் விக்கிரமஆரச்சி, பொலிசு சார்ஜன்ட் உபாலி உட்பட இன்னும் பொலிசு உத்தியோகத்தர்கள் இருவரும் ஜயசிங்காவை எடுத்துக்கொண்டு ஜீப்வண்டியில் பியகம பொலிசு நிலையம் நோக்கிச் சென்றனர். பொலிசுப் பரிசோதகர் விக்கிரமஆரச்சியால் மேற்கொள்ளப்பட்ட உரிய பதிவேடுகளில் இந்த இடமாற்றலுக்கான காரணம் அவரால் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. ஜயசிங்காவை வேறோர் இடத்துக்கு

மாற்றியதையடுத்து(அவர் தங்கியிருந்த விடுதி/வீடு போன்ற இடங்களில் தேடுதல் நடத்துவதைப் போன்ற) எதுவித புலன்விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

**ஜயசிங்காவின் தடுத்துவைப்பு ஆரம்பமாதல்.........**

களனிப் பிரதேசத்தின் ஜே.வி.பி படைப்பிரிவு தலைவரைக் கைதுசெய்வதில், களனிப் பிரிவு வெற்றி கண்டிருப்பதாக மறுதினம் தொடர்புசாதனங்களின் வாயிலாக அறிவிக்கப்பட்டது. பாலியகொடை நாசகாரத் தடுப்புப் பிரிவினால் "ஜினே" என்ற நபரின் குற்றம் சார்த்தப்பட்ட கைது செய்தலை இது குறித்துநின்றது.( பிரியதர்ஸனாவின் காணாமல்போதல், ஜயசிங்காவின் கைது மற்றும் தடுத்துவைப்பு என்பவற்றோடு சம்பந்தப்பட்டவாறு முக்கியத்துவம் கொண்ட இவ்விடயத்துடன் சம்பந்தமுடைய நிகழ்வுகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்).

ஜயசிங்கா "கைது" செய்யப்பட்ட மறுநாட் காலை, பியகம பொலிசு நிலையச் சிறைக்கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் அவர் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரின் அலுவலகத்துக்குக் கொண்டுவரப்பட்டார். அந்த அலுவலகத்தில் உபொஅ.களான திரு.பீரிஸ், ராஜா டயஸ் ஆகியோரும், பொலிசுப் பரிசோதகர் விக்கிரமஆரச்சியும், பெண் பொலிசுக் கான்ஸ்டபிள் சேபாலிகாவும் இருந்தனர். உபொஅ பீரிஸ் தம்வசம் கைத்துப்பாக்கியொன்றை வைத்திருந்தார். ஆயுதம்தாங்கிய பொலிசு உத்தியோகத்தர் பலரும் அந்த நிலையத்தை மிக்க அண்டியதாக வெளியில் நின்றிருந்தனர். அங்கு ஜயசிங்காவின் வாக்குமூலங்களை பதவுசெய்யப் போவதாக உபொஅ பீரிஸ் ஜயசிங்காவிடம் கூறிநின்றார். உபொஅ பீரிஸ்சின் அறிவுறுத்தல்களின்பேரில் பிறிதொரு பொலிசு உத்தியோகத்தர் அறையைவிட்டு வெளியேறிச் சென்று, சிறிது நேரத்துள் இன்னொரு நபரையும் அழைத்துக்கொண்டு திரும்பிவந்தார். அந்த நபர் நடுத்தர வயதுடையவராகவும் வழுக்கைத்தலை கொண்ட ஆணாகவும் மிக்க பலவீனமான நிலையில் இருந்தவராகவும் தோற்றம் அளித்தார். அவர், தனது கையில் ஒரு பையும் வைத்திருந்தார். அத்துடன், அந்த நபரின் கைகளுக்கு விலங்கிடப்பட்டும் இருந்தது. ஆணைக்குழுவினர் முன் ஜயசிங்கா சாட்சியம் அளித்தபோது 1989 செத்தெம்பரில் பிரியதர்ஸனாவுக்கு அறிமுகமாக இருந்த ஒரு நபராக தான் அவரைச் சந்தித்து இருந்ததாகத் தெரிவித்தார். திவுலப்பிட்டியாவைச் சேர்ந்த "திலக்" என்றறியப்பட்டிருந்த அந்த நபர் கார் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த ஒருவராகவே அறியப்பட்டு இருந்தார். அவரை மற்றொரு தடவை சிறிது காலத்துக்குள்ளேயே ஜா-எல பொலிசு நிலையத்தில் சந்தித்து இருந்ததுடன் மற்றொரு தடவை வெள்ளவத்தையிலும் சந்தித்து இருந்தார். ஜயசிங்காவின் கருத்துப்படி அந்த நபருடன் அவர் மொத்தமாக 15 நிமிடங்களுக்கு மேல் கதைத்திருக்கவும் இல்லை. மற்றைய பொலிசுச் சாட்சியாளர்களின் சான்றுகளின்வண்ணம் ஜயசிங்கா, "திலக்" என அறியப்பட்டிருந்த இந்த நபர் குறிப்பிட்ட காலப்பகுதியில் பாலியகொடை நாசகாரத் தடுப்புப் பிரிவில் கட்டுக்காப்பில் இருந்தவரும் களனிப் பிரதேசத்தின் ஜே.வி.பி.யின் படைப்பிரிவின் தலைவரென கூறப்பட்டவருமான "ஜினே" என்பவராவார்.

உ.பொ.அ பீரிஸ், "ஜினே" யிடம் அவரது "கதையை" கூறிவிடும்படி வேண்டிநின்றார். அதற்கு அவர்,(ஜினே) ,"அவர் (ஜயசிங்கா) எனக்கு பதினேழு (17) தோட்டாக்களை வழங்கியிருந்தார்" என ஜயசிங்காவை நோக்கியவண்ணம் தயங்கித்தயங்கிக் கூறியதுமே ஜயசிங்கா பதிலுக்கு, "நான் உமக்குத் தந்தேனா?" என வினாவினார். அதற்கு ஜினே, மௌனம் சாதித்தார். உபொஅ பீரிஸ் உடனே ஜினேயை எடுத்துச் செல்லுமாறு மற்றைய பொலிசு உத்தியோகத்தர்களுக்குக் கட்டளையிட்டார். இதனால், ஜினேக்கு ஜயசிங்காவுடன் இருந்ததாகக் கூறப்படும் தொடர்பை மற்றைய பொலிசு உத்தியோகத்தர்களால் அறுதியிட்டு விளங்கிக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டவில்லை. அன்றி, எந்தச் சட்டரீதியற்ற தொடர்புகளிலிருந்து ஜயசிங்கா தன்னை விடுவித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டு இருக்கவில்லை. ஜினே என்பவருடன் ஜயசிங்கா கொண்டிருந்ததாகக் கூறப்படும்

சட்டவிரோதமான எந்த உறவிலிருந்தும் தம்மை நீக்கிக்கொள்வதற்கு ஜயசிங்காவுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. இக்குறுகியகால "நேருக்கு நேரான சந்திப்பை" உடனடுத்து , உபொஅ பீரிஸ் ஜயசிங்காவிடம் குறுக்கு விசாரணை மேற்கொள்ள ஆரம்பித்தார். திரு.பீரிஸால் வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின்படி பெண் பொலிசுக் கான்ஸ்டபிள் சேபாலிகா, திரு.பீரிஸால் வாசிக்கப்பட்டவண்ணம இருந்த வாக்குமூலமொன்றைத் தட்டச்சு செய்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் உபொஅ ராஜா டயஸ் அருகில் நின்றவண்ணம் இருந்தார். அப்போது, ஜயசிங்கா தனக்கு ஜினேயுடன் எவ்வித சட்டத்துக்குப் புறம்பான வகையிலான தொடர்புகள் இருந்தன என்பதை மறுத்ததுடன் குறிப்பாக தான் ஜே.வி.பி.யினருடன் இணைந்து செயற்படவில்லை என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். எவ்வாறாயினும், (உத்தியோகபூர்வ பதிவேட்டில் ராஜா டயஸிடம் செய்யப்பட்ட உத்தியோகபூர்வ பதிவின்படி) உபொஅ பீரிஸிடம் ஜயசிங்கா அளித்த வாக்குமூலத்தை வாசிக்கும்போது "பதிவு செய்யப்பட்டவை" ஜயசிங்காவால் பிரஸ்தாபிக்கப்பட்டவற்றுக்கு முற்றிலும் முரண்பட்டவை என்பது ஆணைக்குழுவினருக்கு தெளிவாயிற்று. இந்த வாக்குமூலத்தின் நகலொன்று XX என்ற பெயரில் குறியிடப்பட்டு ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வாக்குமூலப் பதிவுகளில் குறிப்பிடப்பட்டிருந்தவற்றின் பிரகாரம் ஜயசிங்கா (தெமட்டக்கொடையில் வைத்து அவர் பிடிக்கப்பட்ட வேளையில்) உபொஅ பீரஸ்சை அவர் கொலைசெய்ய எத்தனித்தார் என்பதுவே அவருக்கு எதிராகச் சார்த்தப்பட்டிருந்த பிரதான குற்றச்சாட்டாகும். ஜினேயுடன் அவர் கொண்டிருந்ததாகக் கூறப்படும் தொடர்பு அதனோடு இடைநேர் விளைவானது மாத்திரமேயாகும். ஜயசிங்கா உபொஅ ' பீரிஸ்சைக் கொலை செய்ய எத்தனித்தார் எனச் சார்த்தப்பட்டிருந்தால் அவர் (திரு.பீரிஸ் )முறைப்பாட்டாளராகவோ அல்லது பலியானவராகவோ தோன்றுவார். அவ்வாறானால் தொடர்புபட்ட சம்பவம் குறித்த புலன்விசாரணையில் அவரால் எவ்வாறு பங்கேற்க முடியும்? ஜினே என்பவருக்கு ஜயசிங்கா (வெடிமருந்துகளை வழங்கியதாகச் சார்த்தப்பட்ட) சம்பவம் குறித்து உபொஅ பீரிஸ் அவரை வினாவியபோது தான் ஜினேக்கு வெடிமருந்துகள் வழங்கியமையை மறுத்தார் என்ற கருத்தும் புலப்படும் வகையில் ஜயசிங்கா ஆணைக்குழு முன்னிலையில் சான்றளித்தார். எவ்வாறாயினும் அவரது வாக்குமூலப் பதிவுகளின்வண்ணம் வெடிமருந்துகளை வழங்கியிருந்தமை பற்றிய விடயத்தை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். தொடர்புபட்ட பதிவேட்டின் முதல்பக்கத்தை மாத்திரமே தனக்கு வாசிக்க அனுமதியளிக்கப்பட்டது என ஜயசிங்கா மேலும் கூறினார். அதற்குமேல் வாசிப்பதை அவர்கள் தடுத்து நிறுத்தியதுடன் உபொஅ பீரிஸ் அவரைத் திட்டத் தொடங்கினார். அத்துடன் அவரது கைகளிலிருந்து அப்பதிவேட்டை திருப்பி எடுத்துவிட்டார். எவ்வாறாயினும் பதிவேட்டின் இறுதிப்பகுதியில் கையொப்பம் இடுமாறும் அவர் கட்டளையிடப்பட்டார்.

1990 பெப்புரவரி மாதம் 26 அந் திகதிமுதல் ஒக்தோபர் 27 ஆந் திகதிவரை தொடர்ச்சியாக ஜயசிங்கா பியகம பொலிசு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார். இக்காலப்பிரிவில் அவர்மீது தடுத்துவைத்தல் கட்டளைகள் எவையேனும் வழங்கப்பட்டு இருக்கவில்லை. எவ்வாறாயினும், மே மாதம் 25 ஆந் திகதி புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஜயசிங்கா ஆஜர்செய்யப்பட்டிருந்தார். அச்சந்தர்ப்பத்திலேயே ஜினேயும் நீதிமன்றத்தின் முன் ஆஜர்செய்யப்பட்டு இருந்தார். ஜயசிங்காவின் கருத்துப்படி அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தின் முன் தோன்றச் செய்த பாலிகொடை நாசகாரத் தடுப்புப் பிரிவின் பொலிசுச் சார்ஜன்ட் உபாலி அவர்கள் இருவரையும் ஒருவருடன் ஒருவர் கதைப்பதற்கு இடமளித்து இருக்கவில்லை. மேலும், அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் வழக்குரைஞர்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பும் அளிக்கப்பட்டு இருக்கவில்லை. அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டமைபற்றி அவர்கள் இருவருடைய குடும்பத்தினருக்கு பொலிசாரால் தகவல் அனுப்பப்பட்டு இருக்கவில்லை. நீதவான் நீதிமன்றத்தின் முன் அவர்கள் இருவரும் நிறுத்தப்பட்டதன்பேரில் அந்தந்தப் பொலிசுத் தடுப்பிடங்களில் அவர்களை பொலிசுக் கட்டுக்காப்பில் வைப்பதற்கென அவர்களை மீளவும் பொலிசு எடுத்துக்கொண்டது என்பது கிடைக்கத்தக்க சான்றுகளிலிருந்து புலனாகின்றது. மே

மாதம் 25 ஆந் திகதியே ஜயசிங்கா கடைசித்தடவையாக ஜினேயைக் கண்டிருந்தார். உண்மையில், அதன்பின்னர், ஜினேயை நீதவான் ஒருவரது முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு இருக்கவில்லை.

மே மாதம் 26 ஆந் திகதியன்று பியகம பொலிசு நிலையத்தில் ஜயசிங்கா தடுத்து வைத்திருக்கும்போது பொலிசுக் கட்டுக்காவலில் இருந்து ஜினே தப்பிச் சென்றுவிட்ட செய்தியை அவ்வேளை பரிமாறப்பட்டுக் கொண்டிருந்த பொலிசுத் தொடர்பாடல் தொகுதியின் உதவியால் அவர் செவிமடுக்க நேர்ந்தது. இந்த சார்த்தப்பட்ட தப்பியோட்டத்துக்கு காரணமாக அமைந்த மேலதிக விபரங்கள் பின்னர் எடுத்தாளப்படும்.

ஜயசிங்கா தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த காலப்பிரிவில் உபொஅ பீரிஸ் ஜயசிங்காவிடம் வந்திருந்த ஒருசமயத்தில் நாலந்தாவைச் சேர்ந்தவர்கள் யாவருமே ஜே.வி.பி.யினர்தான் எனக் கூறியிருந்தார். பிரியதர்ஸனா, ஜயசிங்கா ஆகிய இருவரும் 'நாலந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. "பியாட்ட(பிரியதர்ஸனாவுக்கு வழங்கப்பட்ட பிறிதொரு பெயர்) வெடே துன்னா" (பிரியதர்ஸனா ஒழித்துக் கட்டப்பட்டார்) என்றும் உபொஅ பீரிஸ் மேலும் கூறியிருந்தார். மேலும் பிறிதொரு தடவை "ரோஹித பிரியதர்ஸனா யப்பான் தேசம் சென்றுள்ளதாகவும், அங்கிருந்து அவரது குடும்பத்தினருக்குக் கடிதம் அனுப்பியிருப்பதாகவும் அவர் உங்களுக்குக் கடிதங்களேதும் அனுப்பியிருக்கவில்லையா? " எனவும் பொலிசுப் பரிசோதகர் விக்கிரமசிங்கா அங்கு வந்திருந்தபோது அவரிடம் கூறியிருந்தார்.

1990 ஒக்தோபர் 27 அந் திகதியன்று பாலியகொடை நாசகாரத் தடுப்புப் பிரிவின் பொலிசுக் கான்ஸ்டபிள் சாரதி ரஞ்சித், அப்போது ஜயசிங்கா தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்த இடத்துக்கு வந்து, பெலவத்த தடுப்புக்காவல் நிலையத்துக்கு ஜயசிங்காவை மாற்ற வேண்டிய தேவை பிரதிப் பொலிசுமா அதிபருக்கு இருந்ததாகத் தகவல் கூறினார். (இக்காலப்பிரிவில் நாசகார நடவடிக்கைகள் தொடர்பான சந்தேகநபர்கள் இந்தத் தடுப்புக்காவல் நிலையத்திலேயே தடுப்பில் வைக்கப்பட்டு இருந்தனர். அந்த நிலையம் தரைப்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தது) அதே தினத்தன்று, ஜயசிங்கா பெலவத்த தடுப்புக்காவல் முகாமுக்கு இடமாற்றப்பட்டார். 1990 ஒக்தோபர் மாதம் 27 முதல் 1992 சனவரி மாதம் 07 ஆந் திகதிவரை ஜயசிங்காவை அந்த நிலையத்தில் தடுப்புக்காவலில் வைத்திருந்தனர். அக்காலப் பிரிவில் ஜயசிங்காவின் குடும்ப அங்கத்தவர்கள் அவரைக் காண வருவதையும் அனுமதித்து இருந்தனர். அவ்வாறு அவரைக் காண வருகின்ற பெற்றோரின் உதவியால் ஜயசிங்கா தனது நிலைப்பாடு என்ன? என்பது குறித்து அறிந்துகொள்ளும் முயற்சிகளை மேற்கொண்டார். அவர் எப்போது விடுதலை செய்யப்படுவார் என்பதனை அறிந்து கொள்வதில் மிக்க கரிசனையுடன் இருந்தார். தான் விடுதலை செய்யப்படுவேனா அல்லது பொலிசார் அவருக்கு எதிரான நிறுவனரீதியான நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்ளக் கருதுகின்றனரா? என்பதனை உறுதியாக அறிந்துகொள்வதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். தேவைப்பட்ட சான்றாவணங்களை பொலிசார் முன்வைக்கும்போது சட்டமா அதிபராலேயே வழக்குத் தொடரப்படல் வேண்டும் என்ற உண்மையை அவர் அறிந்திருந்தார். இந்த விடயம்பற்றி தேடிப் பார்ப்பதற்காக அவர் தனது தாயாரின் உதவியை நாடினார். அவருடைய தாயார் சில விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சம்பந்தப்பட்ட புலனாய்வு பற்றிய ஆலோசனைகளைப் பெறும் வகையிலோ தமக்கு எதிராக வழக்குத் தொடரும்படி சட்டமா அதிபரைக் கேட்டுக்கொள்ளும் வகையிலோ அமைந்த தேவையான சான்றுகள் பொலிசாரினால் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதை பின்னர் அவருக்கு தாயார் அறிவித்திருந்தார். ஜயசிங்காவுடன் சம்பந்தப்பட்டிருந்த புலனாய்வு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியை எக்காலத்திலும் நாடவில்லை என்பது தெளிவாகும். சிபொஅ நளின் தெல்கொடவும் இந்தத் தவிர்ப்பு நிகழ்ந்ததற்கான காரணத்தை விளக்க முடியாத நிலையில் இருந்தார்.

புலனாய்வாளர்கள் ஜயசிங்காவுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்ற அடிப்படையில் அவரை இடையறாது தடுத்து வைத்திருந்தமையால் இது பாரதூரமான தன்மையை அடைகின்றது. பொலிசாரின் தெளிவான செயலின்மைக்கான காரணத்தை விளக்கக்கூடிய ஒரு வழி யாதெனில் ஜயசிங்காவுக்கு எதிராகவிருந்த குற்றச்சார்த்துரைகள் நீதிமன்றமொன்றில் எளிதில் நிரூபிக்கப்பட முடியாதவை என்பதை அவர்கள் அறிந்திருந்தபடியால் ஜயசிங்காவுக்கு எதிராக வழக்கொன்றைத் தொடுப்பதற்கு அவர்கள் எவ்வகையிலும் அக்கறை கொள்ளவில்லை என்பதாகும். தமது சார்த்தப்பட்ட கைதுசெய்தலுக்கு இட்டுச்சென்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளை விபரிப்பதில் பின்வாங்கமாட்டார் என்பதுடன் அவர் மேலும் பிரியதர்ஸனாவுக்கு யாது நேர்ந்தது என்பதை விசாரித்துக் கூறுவார் என்ற ஐயமும் இருந்துவந்தது. ஜயசிங்கா களனி நாசகாரத் தடுப்புப் பிரிவு சார்ந்த செயற்பாடுகள்பற்றி அறிந்திருந்தவர் ஆகையால் நீதிமன்றமொன்றின் முன்னிலையில் தமது சார்பில் சாட்சியமளிக்கும் வாய்ப்பை அவருக்கு அளித்திருப்பின் அவர் இரகசியங்களை அம்பலப்படுத்துவார் என்ற விடயமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிந்ததாக இருக்கக்கூடும்.

**ஜயசிங்கா விடுவிக்கப்படுதல்.........**

திலங்க சுமதிபால என்னும் வர்த்தகர் ஜயசிங்காவின் நெருங்கிய நண்பராக இருந்தார். அவர் தனது நெருங்கிய நண்பர் ஜயசிங்காவை விடுதலை செய்துகொள்வதில் அதிக கரிசனை கொண்டிருந்தார். அதனாலேயே அவர், அவ்விடயம் குறித்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நாசகாரச் சந்தேக நபர்கள் அனைவரையும் பராமரிக்கும் பொறுப்பு உத்தியோகத்தராக பிரிகேடியர் நந்த வீரசேகரா விளங்கினார். ஜயசிங்காவை விடுதலை செய்துகொள்ளும் நோக்கத்துடன் பிரிகேடியர் வீரசேகராவை, சுமதிபால பல்வேறு சமயங்களில் சந்தித்துப் பேசினார். கிடைக்கத்தக்க சான்றுகளிலிருந்து தெரிவது யாதெனில், ஜயசிங்கா விடுதலை செய்யப்பட்டவுடன் அவரை வெளிநாடொன்றுக்கு அழைத்துச் செல்வதாக சுமதிபால வாக்களித்திருந்தார் என்பதாகும். இந்த வாக்குறுதியானது, ஜயசிங்காவின் சிறந்த அக்கறைநலன்களைப் பாதுகாக்கும் நோக்குடனேயே வழங்கப்பட்டு இருந்ததாகத் தெரிகின்றது. ஜயசிங்கா விடுதலையாவதற்கு முந்திய தினம் ஜயசிங்கா ஓர் ஆவணத்தில் கையொப்பமிட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தார். சுமதிபாலவும்கூட அதில் கையொப்பம் இட்டிருந்தார். இது எத்தகையதோர் ஆவணம் என்பது அவ்வளவு தெளிவானதன்று. இந்த ஆவணத்தை இனங்காண ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் மூலம் சாதகமான பலன் கிட்டவில்லை. எவ்வாறாயினும், கிடைக்கத்தக்க சான்றுகளிலிருந்து இந்த ஆவணமானது சுமதிபாலவை உத்தரவாதியாக/பிணையாளியாகக் கொண்ட ஒருவகை "நிபந்தனையின்பாற்பட்ட விடுவிப்பு" என்பது தெரிகின்றது.

1992 சனவரி மாதம் 07 ஆந் திகதியன்று ஜயசிங்கா இறுதியாக தடுப்புக்காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். அதனையடுத்து சனவரி மாதம் 11 ஆந் திகதியன்று சுமதிபால ஜயசிங்காவை இங்கிலாந்துக்கு அழைத்துக்கொண்டு சென்றுவிட்டார். அந்நாள்முதலாக, ஜயசிங்காவின் "நிகழ்நிலை நாடுகடத்தல்" ஆரம்பமானது. இங்கிலாந்து சென்ற ஜயசிங்கா அங்கு அச்சுத் தொழிற்றுறையில் பாடநெறியொன்றைப் பின்பற்றலானார். 1992 யூன் 28 ஆந் திகதியன்று ஜயசிங்கா இலங்கைக்குத் திரும்பினார். அவர் இலங்கை திரும்பியதிலிருந்து தலைமறைவாகவே இருந்து வந்தார். சுமதிபாலவின் பல்வேறு வர்த்தக நிறுவனங்களில் அவர் தங்கியிருந்ததோடு அவரது நெருங்கிய நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இடங்களில் கூட அவர் தங்கியிருந்துள்ளார். 1994 ஏப்பிரல் 08 ஆந் திகதியன்று ஜயசிங்கா எகிப்து நோக்கிப் பயணமானார். ஜயசிங்காவின் கருத்துப்படி அவர் இலங்கையில் தங்கியிருந்த நாட்களில் உபொஅ பிரிஸாலும் அவரது அணியினராலும் கைதாக்கப்படலாம் என்ற அச்சம் அவருள் தொடர்ந்தும் குடிகொண்டு இருந்தது என்றார் ஜயசிங்கா. மேலும், ஜயசிங்கா 1994 ஆகஸ்ட் மாதம் புதிய அரசாங்கம் பதவிக்கு

வரும்வரை(1994 ஆகஸ்ட் பொதுத் தேர்தலுடனான ஆட்சி மாற்றம்வரை) எகிப்திலேயே தங்கியிருந்தார்.

1995 சனவரி மாதத்தில் இலங்கைக்குத் திருப்பியவுடனே அவர் தனது மீள்சேவைக்கமர்த்தல் தொடர்பாக பொலிசுமா அதிபருக்கு மேன்முறையீடொன்றைத் தாக்கல் செய்தார். அவரது மேன்முறையீட்டில் தனது சேவை முடிவுறுத்தப்பட்டிருந்த நிலைமைகள் குறித்து விளக்கம் அளித்திருந்தார். இந்த மேன்முறையீடு கிடைக்கப்பெற்றபின், அதில் உள்ளடங்கிய விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தியதுடன் மாத்திரமன்றி அவரது மீள்சேவைக்கமர்த்துகை விடயம்பற்றி பிரதிப் பொலிசுமா அதிபர் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைத்தார். சம்பந்தப்பட்ட கடிதத் தொடர்பின்போது பொலிசுமா அதிபர், ஜயசிங்காவின் ஆரம்ப சேவை இடைநிறுத்தம் நியாயமற்றது எனக் கண்டமையால் அவர் மீளச்சேவைக்கு அமர்த்தப்படல் வேண்டும் என்ற கருத்தைத் தான் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். அவரது விதப்புரையானது பொருத்தமான விசாரணைகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. ஜயசிங்காவின் மேன்முறையீடு, பொலிசுமா அதிபரின் விதப்புரை ஆகிய இரண்டும் ஆணைக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டன. இந்தப் புதிய நிலவரங்கள் காரணமாக 1995 ஆகஸ்ட் மாதம் 16 ஆந் திகதியன்று பொலிசு உதவிப் பரிசோதகர் பதவியில் மீளச் சேவைக்கு அமர்த்தப்பட்டார். இந்த ஆணைக்குழு முன்னிலையில் ஜயசிங்கா சாட்சியம் அளித்தபோது அவர் ஓர் அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவோடு இணைந்த உத்தியோகத்தராக இருந்தார்.

### ஜயசிங்காவும் பிரியதர்ஸனாவும் நாசகாரிகளுடன் தொடர்பு.....?

இந்த அத்தியாயத்தின் இப்பகுதியில் நாங்கள் ரோஹத பிரியதர்ஸனாவுடனும் அஜித் ஜயசிங்காவுடனும் தொடர்புற்ற சம்பவங்கள் சிலவற்றையும், சார்த்துரைகள் சிலவற்றையும் எடுத்துரைத்து, பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தக் கருதுகின்றோம். சுருக்கமாக, பிரதிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னா, சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் நளின் _ தெல்கொட, உ.பொ.அ(இளைப்பாறிய) ராஜா டயஸ், பிரதம பரிசோதகர் ரஞ்சித் விக்கிரமசிங்கா ஆகியோர் அளித்த சான்றுகளின்வண்ணம்(அவர்கள் அளித்த முழுதும் அளாவிய சான்றுகளின் அடிப்படையில்) பிரியதர்ஸனா, ஜயசிங்கா ஆகிய இருவரும் கதுருவஹேனகே ஜினதாச அல்லது ஜினே (சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதலைத் திட்டமிட்டு நடாத்திய) நாசகாரியொருவருடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதுவும், தரைப்படையினரால் ஜினே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்ற தகவல் அறிந்துகொண்டவுடனே 1990 பெப்புரவரி 20 ஆந் திகதி பிரியதர்ஸனா தலைமறைவாகி உள்ளார் என்பதும் தெளிவாகின்றது. மேலும், ஜினேயுடன் நட்புக் கொண்டிருந்தார் எனச் சார்த்தப்பட்ட நட்புறவுபற்றி வினாவுதலுக்காக அவர் தேவைப்பட்டிருந்தபடியால் உபொஅ பீரிஸால் ஜயசிங்கா கைது செய்யப்பட்டார். மேலும், பீரிஸ் அவரைக் கைது செய்வதற்கு முயன்றபொழுது உ.பொ.அ பீரிஸைக் கொலைசெய்ய ஜயசிங்கா எத்தனித்தார், என்ற மேலதிக காரணம் அவர் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதற்கு இன்னொரு காரணமாக அமைந்தது.

### ஜினேயின் முக்கியத்துவம்..........?

பிரியதர்ஸனா, ஜயசிங்கா ஆகிய இருவருக்கும் எதிரான மேற்கூறப்பட்ட சார்த்துரைகள் காரணமாக கதுருவஹேனகே ஜினதாச அல்லது ஜினே என்பவரின் கைதுசெய்தல், தடுத்துவைத்தல் , புலனாய்வுகள், பிற்பட்ட காணாமல்போதல் ஆகியன தொடர்பிலான சந்தர்ப்பசூழ்நிலைகளும், அத்துடன் ஆணைக்குழுவின் விசாரணை நியதிகளோடிணைந்த விடயங்களும் ஏற்புடையனவாய் அமைந்திருந்தன. பிரியதர்ஸனாவுக்கும் ஜயசிங்காவுக்கும் எதிராக அதிகாரிகளால் சுமத்தப்பட்ட குற்றச்சார்த்துதல்களின் உண்மையினை அல்லது வேறாந்தன்மையினைத் தீர்மானிக்குமிடத்து ஜினேயின் கைதுசெய்தல்,

தடுத்துவைத்தல், புலனாய்வுகள், அவர் இறுதியாகக் காணாமல்போதல் பற்றிய உத்தியோகபூர்வ கூற்றுக்கள்மீது ஒருவர் வைக்கும் நம்பிக்கையும், மதிப்பும் முக்கியத்துவம் பெறுகின்றன. நாசகார மற்றும் பயங்கரவாதச் செயல்களுடன் ஜினே கொண்டிருந்தார் எனக் கூறப்படும் உறவின் இயல்பினையும் பிரியதர்ஸனா, ஜயசிங்கா ஆகிய இருவருடனும் அவர் கொண்டிருந்தார் எனக் கூறப்படும் நட்புறவினையும் கூர்ந்து நோக்குமிடத்து ஜினேயின் கைதுசெய்தல், தடுப்புவைப்பு, அவற்றோடு இணைந்த புலனாய்வுகள்மீது பிரதிப் பொலிசுமா அதிபர் குணரத்னா, சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் நளின் தெல்கொட, உதவிப் பொலிசு அத்தியட்சகர் பீரிஸ் ஆகியோர் போன்ற சம்பந்தப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்களின் கவனம் ஈர்க்கப்பட்டிருத்தல் மிகவும் பொருத்தமானதும் தவிர்க்கமுடியாததாகவும் அமையும். குறிப்பாக, சப்புகஸ்கந்த பொலிசு நிலையம் மீதான தாக்குதலில்(களுவாவைப்போன்ற) நாசகாரிகளுடன் எவ்விதமான தொடர்பும் இல்லாதிருந்த நபர்கள் சிலர் தாக்குதலில் பங்குபற்றினார்கள் என்பதற்கான "முதல்தோற்றச் சான்றுகள்" இருப்பதனால் ஜினேயும் அவருடைய நாசகாரக் குழுவினரும் (ஜே.வி.பி.யைச் சேர்ந்த) சொல்லப்பட்ட தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்ற முடிவுக்கு வருமுன்னர் ஏற்புடைய புலனாய்வாளர்களால் பொருத்தமானதும் விரிவானதுமான புலனாய்வுகள் மேற்கொள்ளபட்டிருக்கவேண்டும் என எதிர்பார்க்கலாம். மேலும், அந்தக் காலம்வரை அப்பிரதேசத்து சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தவர்களும் மிகவும் சிறந்த முறையில் பொலிசுக் கடமைகளைப் புரிந்தவர்களுமான பொலிசு உத்தியோகத்தர்கள் இருவர் குற்றம் இழைத்தவர்கள் என ஜினே கூறியபொழுது, நாசகார சந்தேகநபரொருவரால் சுமத்தப்பட்ட அக்குற்றச்சார்த்துகையின் உண்மைத்தன்மையினை அல்லது வேறாந்தன்மையினை அறுதியிடும்பொருட்டு புலனாய்வாளர்களால் முழுநிறைவான புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பிரியதர்ஸனா, ஜயசிங்கா ஆகியோருக்கு எதிராக ஜினே என்பவரால் சார்த்தப்பட்டதாகக் கூறப்படும் சார்த்துரைகளுக்கு ஆதாரமாக அல்லது அவற்றை நிராகரிப்பதற்காகக் துணைபுரியும் மேலும்பல சான்றுகளைச் சேகரிப்பதற்கும் தொடர்ந்தும், புலனாய்வாளர்கள், புலனாய்வுகளை நடாத்தியிருக்கலாம் என எதிர்பார்த்திருக்க முடியும்.

**ஜினே கைது செய்யப்படுதல்......**

1990 பெப்புரவரி மாதம் 25 ஆந் திகதி காலை தரைப்படையினரால் ஜினே என்ற பெயருடைய நாசகாரச் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் மத்தேகொடை தரைப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் உபொஅ பீரிஸ், பிரதான பரிசோதகர் விக்கிரமசிங்காவிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது. மத்தேகொடை முகாமுக்குச் சென்று ஜினே என்பவரைக் கட்டுக்காப்புக்கு எடுத்து அவரை களனி, நாசகாரத் தடுப்புப் பிரிவுக்கு கொண்டுவருமாறு உ.பொ.அ பீரிஸ், பி.ப. விக்கிரமசிங்காவுக்குப் பணிப்புரைகளை வழங்கியிருந்தார். எவ்வாறாயினும் சார்த்தப்பட்ட பணிப்புரைகள் உ.பொ.அ பீரிஸ் மூலம் எழுத்துமூலம் வழங்கப்படவில்லை என்பதை ஆணைக்குழு அவதானித்துள்ளது. நாசகாரத் தடுப்புப்பிரிவில் உள்ள தகவல் புத்தகத்தில் இந்தச் செய்திபற்றி பி.ப. விக்கிரமசிங்காவினால் செய்யப்பட்ட குறிப்பு மட்டுமே அவர் தெரிவித்த நிலைப்பாட்டினைச் செவ்வை பார்ப்பதற்குத் துணைபுரியும் ஒரேயொரு விடயமாகும்.

ஜினே என்பவர் எவரிடமிருந்து கட்டுக்காப்புக்கு எடுக்கப்பட்டார் என்ற விடயம் சம்பந்தமாக சான்றளிக்க இயலாதவராக பி.ப. விக்கிரமசிங்கா இருந்தார். சம்பந்தப்பட்ட தரைப்படை உத்தியோகத்தரின் பெயரையாவது குறித்துக்கொள்ள பொலிசு உத்தியோகத்தர் நடவடிக்கையை எடுத்திருக்கலாம் என எவரும் எதிர்பார்க்க முடியும். உண்மையில் பி.ப.விக்கிரமசிங்காவைப் போன்ற அனுபவம் வாய்ந்த பொலிசு உத்தியோகத்தர் ஒருவர் சம்பந்தப்பட்ட தரைப்படை உத்தியோகத்தரிடமிருந்து வாக்குமூலமொன்றை எடுத்திருப்பார் என எவரும் எதிர்பார்ப்பது இயல்பானதே. கைது செய்தல் திகதி, ஜினே என்பவரைக் கைது

செய்வதற்கு இட்டுச்சென்ற சந்தர்ப்ப சூழ்நிலைகள், மத்தேகொடை தரைப்படை முகாமில் அல்லது ஏனைய விடயங்களில் ஜினே தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்ற விடயம், சந்தேக நபரைத் தடுத்து வைப்பதற்குரிய அதிகாரமளிக்கும் தடுத்துவைத்தல் கட்டளையொன்று இருந்ததா என்ற விடயம் முதலியனவற்றைப்பற்றி தரைப்படையிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளவில்லை என பி.ப.விக்கிரமசிங்கா மேலும் ஒப்புக்கொண்டார். மேலும், சந்தேகநபர் தரைப்படை வினாவுதல்களுக்குத் தெரிவித்த விடயங்கள்பற்றி குறிப்பொன்றைச் செய்துகொள்ளவோ, நிச்சயமாக அறிந்துகொள்ளவோ பி.ப.விக்கிரமசிங்காவிடமிருந்து எந்தக் குறிப்பை எடுக்கவில்லை. தம்மைத் தரைப்படையினர் கைது செய்தமை பற்றியும் தடுத்துவைத்தல் பற்றியும் ஜினே என்பவர் ஆட்சேபணை தெரிவிக்க முன்வந்திருப்பின் பி.ப. விக்கிரமசிங்கா எதனையும் விளக்கிக் கூறக்கூடிய நிலையில் இருந்திருக்க மாட்டார். ஜினே என்பவரைக் கைது செய்த தரைப்படை உத்தியோகத்தரின் அடையாளத்தை அவர் அறிந்திருக்கவில்லை என்பதுடன், அவர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகள்பற்றியும் அறிந்திருக்கவில்லை. மேலும், பிற்காலத்தில் ஜினே என்பவர் நீதிமன்றத்தின் முன்னிலையில் தரைப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தரைப்படை உத்தியோகத்தர்களால் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு அல்லது வேறுவிதமாகத் தொந்தரவு செய்யப்பட்டார் என்று குற்றச்சாட்டுகை செய்திருப்பின் அத்தகைய குற்றச்சார்த்துகையொன்றை நிராகரிக்கும்பொருட்டு அவசியமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலும் பி.ப. விக்கிரமசிங்கா இருக்கவில்லை. இந்த விடயம்பற்றி விளக்கம் அளிக்கப்படாத விடுபாடுகள் சில பொலிசுப் புலனாய்வாளர் எவரும் எடுத்திருக்கக்கூடிய எளிமையான நடவடிக்கையாகும். ஏற்புடைய சகல விடயங்களையும்(மேலே குறிப்பிட்ட விடுபாடுகள் ,ஒழுங்கற்ற செயல்கள் சம்பந்தப்பட்ட சந்தேகத்துக்கு இடமான சூழ்நிலைகள் ஆகியவற்றை) கருத்திற் கொள்ளுமிடத்து மத்தேகொடை தரைப்படை முகாமிலிருந்து ஜினே என்னும் சந்தேகநபரைப் பாரம் எடுத்ததுபற்றி பி.ப.விக்கிரமசிங்கா அளித்த சான்றின்மீது நம்பிக்கை வைக்க முடியாதென நாங்கள் முடிவு செய்கின்றோம். அத்தகைய சம்பவம் எக்காலத்திலும் நிகழவில்லை என நாங்கள் கூறுகின்றோம், இதனை ஆராயும்போது இந்த விடயம்பற்றி பி.ப.விக்கிரமசிங்கா மிகவும் செயற்கையான முறையில் சான்றளித்தார் என்பதை விசேடமாகக் குறிப்பிட விரும்புகின்றோம்.

**ஜினே "குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்"........**

பி.ப.விக்கிரமசிங்காவின் கருத்துப்படி ஜினே என்பவரைக் கட்டுக்காப்புக்கு எடுத்தபின்னர், அவர் பாலியகொடை பொலிசு நிலையத்தில் அக்காலகட்டத்தில் நிறுவப்பட்ட களனி நாசகாரத் தடுப்புப் பிரிவுக்குக் கொண்டுவரப்பட்டார். நாசகாரத் தடுப்புப் பிரிவுக்கு ஜினே கொண்டுவரப்பட்டு, சில மணித்தியாலங்களுக்குள் உபொஅ ராஜா டயஸின் அலுவலகத்துக்குச் சந்தேகநபர் அழைத்துச் செல்லப்பட்டு உபொஅ முன்னிலையில் அவர் நிறுத்தப்பட்டார். சந்தேக நபர் நிறுத்தப்பட்ட பின்னர், பி.ப.விக்கிரமசிங்கா சந்தேகநபரின் "குற்றஒப்புதலொன்றைப்" பதிவு செய்யுமாறு உபொஅ டயஸிடம் வேண்டிக் கொண்டார்.

இளைப்பாறிய உபொஅ ராஜா டயஸ் அளித்த சான்றின்வண்ணம் சந்தேகநபரான ஜினே சுமார் பி.ப.1.00 மணியளவில் தமது முன்னிலைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார். பி.ப.விக்கிரமசிங்கா தாம் சந்தேக நபரை மத்தேகொடை தரைப்படை முகாமிலிருந்து அழைத்து வந்தாரென அவருக்குத் தெரிவித்தார். அத்துடன், சந்தேகநபரின் "குற்றஒப்புதலொன்றை" பதிவு செய்யும்படி அவரிடம் வேண்டினார். அத்தகைய குற்றஒப்புதலொன்றைப் பதிவு செய்ய முன்னர் அறுதியிட வேண்டிய முக்கியமான விடயங்களில் ஒன்று யாதெனில் சந்தேக நபர் பொருத்தமான கட்டுக்காப்பில் அமர்த்தப்பட்டுள்ளார் என்பதை அறிந்துகொள்வதாகும். அதாவது சந்தேக நபர் செல்லுபடியான தடுப்புக் கட்டுக்காப்பு கட்டளையொன்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து கொள்வதேயாகும். கட்டளையொன்றின் அதிகாரத்தின் கீழ், தடுத்து வைக்கப்பட்டுள்ளாரா என பி.ப. விக்கிரமசிங்காவிடம் வினவவில்லையென

உபொஅ டயஸ் ஒப்புக்கொண்டார். மேலும், இதனையொத்த ஏனைய கைது செய்தல்களின்போது செய்வதுபோன்று விக்கிரமசிங்கா அல்லது ஏனைய பொலிசு உத்தியோகத்தர் ஒருவரால் சந்தேகநபரிடமிருந்து ஆரம்ப வாக்குமூலமொன்று பதிவு செய்யப்பட்டதா என பிப.விக்கிரமசிங்காவிடம் தாம் விசாரிக்கவில்லை எனவும் உபொஅ டயஸ் ஒப்புக்கொண்டார்.

உ.பொ.அ டயஸின் கூற்றுப்படி சந்தேகநபர் தமது முன்னிலையில் நிறுத்தப்பட்ட பின்னர் தமது அலுவலகத்திலிருந்து வெளியே செல்லுமாறு அவர் பி.ப.விக்கிரமசிங்காவுக்குக் கட்டளையிட்டு இருந்தார்(சந்தேகநபரொருவரைக் கொண்டு வருகின்ற உத்தியோகத்தர் குற்ற ஒப்புதலொன்றைச் செய்வதற்குச் சந்தேகநபரைத் தூண்டவில்லை அல்லது எந்தவிதமான தூண்டுதலொன்றும் இடம்பெறவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக வழமையாக இந்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது). சந்தேக நபர் தமது விசாரணைக்கு கொண்டு வந்து ஐந்து நிமிடத்துக்குள்ளே குற்றஒப்புதலை அளிக்கத் தொடங்கினார் என உபொஅ டயஸ் ஆரம்பத்தில் சாட்சியம் அளித்தார். எவ்வாறாயினும் அரச வழக்குரைஞர் அவரைத் திரும்பத் திரும்ப வினாவுதலுக்கு உட்படுத்தியதன் பின்னர் உபொஅ டயஸ் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு சந்தேகநபர் 15 நிமிடங்களின் பின்னர் குற்றஒப்புதலை அளிக்கத் தொடங்கினார் எனக் கூறினார். ஆறஅமரச் சிந்தித்துத் தாம் குற்றஒப்புதலொன்றைச் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கப் போதுமான கால அவகாசத்தை சந்தேகநபருக்கு வழங்கினார் என்பதை விளக்க உபொஅ டயஸ் முயன்றார். எவ்வாறாயினும் இச்சம்பவத்தோடு தொடர்புகொண்ட உத்தியோகபூர்வ பதிவேட்டில் ஆறஅமரச் சிந்திக்கும்பொருட்டுச் சந்தேகநபருக்கு அத்தகைய வாய்ப்பொன்றைத் தாம் அளித்தார் என்பதற்கான எவ்விதக் குறிப்பொன்றையும் உபொஅ டயஸ் செய்திருக்கவில்லை. அந்தப் பதிவேட்டின்வண்ணம் தமது அலுவலகத்துக்குச் சந்தேகநபர் கொண்டுவரப்பட்ட நேரத்திலிருந்தே பி.ப.1.00 மணியிலிருந்தே அவர் குற்றஒப்புதலைச் செய்யத் தொடங்கியிருந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. உபொஅ டயஸின் வாய்மூலச் சான்றின்வண்ணம் வாக்குமூலத்தைச் செய்த நேரத்தில் சந்தேகநபர் சிறந்த உடல்நலம் மற்றும் மனநலம் உடைவராக இருந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. மீண்டும் ஒருமுறை உபொஅ எடுத்துரைக்கும் முகமாகக் குறிப்பெதுவும் செய்திருக்கவில்லை.

ஜினேயின் குற்றஒப்புதலைத் தட்டச்சில் பதிவுசெய்யும்பொருட்டு பெண் பொலிசுக் கான்ஸ்டபிள் 2021 விமலாவதி என்பவரை உபொஅ டயஸ் வரவழைத்து இருந்தார். வாக்குமூலத்தின் பதிவானது இரவு பி.ப.7.00 மணிவரை இடம்பெற்றது. வாக்குமூலத்தின் பிரதியொன்று ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது. வாக்குமூல்த்தின் இறுதியில் கையொப்பம் ஒன்று இருந்தது. உபொஅ டயஸின் கருத்துப்படி அந்தக் கையொப்பம் சந்தேகநபருடையதாகும்.

**தாக்குதலில் பிரியதர்ஸனாவும் ஜயசிங்காவும் சம்பந்தப்பட்டிருத்தல்.....**

ஜினேயின் சார்த்துதல் செய்யப்பட்ட குற்றஒப்புதலின்படி 1977 இன் இறுதியிலிருந்து அவர் ஜே.வி.பி.யின் ஓர் உறுப்பினராக இருந்துள்ளார். அதன்பின்பு அவர் அதில் ஒரு தீவிர ஆர்வலராக மாறினார். 1989 ஏப்பிரலில் அவர் கம்பஹா மாவட்டத்துக்கான ஜே.வி.பி.யின் இராணுவப்பிரிவு அமைப்பாளராக இருந்தார். அக்காலப் பகுதியில் அமரே அல்லது அனுராத என்பவர் கம்பஹா மாவட்டத்துக்கான இராணுவப்பிரிவுத் தலைவராக இருந்தார். ஜினேயும் அனுராதவும் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது தாக்குதலொன்றை தொடுப்பதன் சாத்தியப்பாடு சம்பந்தமாகவும், குறிப்பிட்ட பொலிசு நிலையத்தில் அச்சந்தர்ப்பத்தில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி.யினரை பாதுகாப்பாக விடுவிப்பது பற்றியும் கலந்துரையாடி இருந்தனர். தாக்குதல் திறமுறையினைச் செயற்படுத்துவதற்கு உள்ளேயிருந்த ஒருவரின் உதவியைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி அனுராத ஜினேயிக்கு அழுத்தமாக எடுத்துக் கூறினார். சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தைச் சேர்ந்த

பொலிசு உத்தியோகத்தரின் உதவியைப் பெறுவதை ஜினே பொறுப்பேற்றுக் கொண்டார். சுமார் இரு மாதத்துக்கு முன்னர், அச்சந்தர்ப்பத்தில் ரோஹித பிரியதர்ஸனாவினை அறிந்த அப்போதை ஜே.வி.பி.யின் நிருவாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவரான ஜயசூரிய என்ற பெயர் கொண்டவரினூடாக அவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இக்கலந்துரையாடல் நடைபெற்று சிறிது நாட்களுக்குப் பின்னர் ஜினே, ரோஹித பிரியதர்ஸனாவை அவரது ரத்தொளுகம வாசஸ்தலத்தில் சந்தித்து ஜே.வி.பி.இன் அரசியல் தத்துவம்பற்றி அவருக்கு விளக்கிக் கூறினார். பிரியதர்ஸனா இந்திய அமைதி காக்கும் படை விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு சம்பந்தமாகத் தனக்கு உடன்பாடு இல்லை எனவும் ஜே.வி.பி.இன் நடவடிக்கைகளில், அதற்கு ஆதரவு அளிப்பதற்கு அவர் சம்மதிப்பதாகவும் ஜினேயிடம் கூறினார். ஜே.வி.பி.இன் வேலைகளுக்கு அவரது பெயரையுடைய ஜயசிங்கா என்ற நண்பர் ஒருவரின் (ஜா-எல பொலிசு நிலையத்தில் வேலை செய்தகொண்டிருந்தவர்) உதவியை அவர் பெற்றுக் கொள்வார் என பிரியதர்ஸனா மேலும் கூறினார். ஜினேயின் குற்றஒப்புதலின்படி அவர் பிரியதர்ஸனாவை அவரது வீட்டில் சந்தித்த தினத்தில் அவரது தந்தையும் சகோதரியும் அங்கு பிரசன்னமாக இருந்தனர். அதன்பின்பு நான்கு அல்லது ஐந்து சந்தர்ப்பங்களில் ஜினே பிரியதர்ஸனாவையும் ஜயசிங்காவையும் பிரியதர்ஸனாவின் வீட்டில் வைத்துச் சந்தித்து இருக்கின்றார். அச்சந்தர்ப்பங்களில் இருமுறை அவர் (ஜினே) பிரியதர்ஸனாவின் வீட்டில் உணவும் சாப்பிட்டுள்ளார். அத்தகையவொரு சந்தர்ப்பத்தில் அவருக்குப் பிரியதர்ஸனா 20 புதியரக துப்பாக்கித் தோட்டாக்களையும் 60 84S ஆயுதத் தோட்டாக்களையும் வழங்கியிருந்தார். ஜினே இந்தத் தோட்டாக்களைத் தனது தலைவர் அனுராதவுக்கு வழங்கினார்.

தாக்குதல் தினமன்று ஜினேயும் அமரேயும் ஜினேயின் வாடகைவீட்டில் பிரியதர்ஸனாவைச் சந்தித்தனர். அமரே சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் உருவப்படமொன்றைப் பிரியதர்ஸனாவுக்குக் காட்டியிருந்தார். அது, பொலிசு நிலையத்தினதும் பாதுகாப்பு முனைகளதும் தளக்கோலத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. முந்திய நாளன்று நிலையத்தின் பிற்பகுதியிலிருந்து, (ஒரு கிணற்றுக்கு அருகிலிருந்து) நிலையத்தைப் பார்த்து வரைந்திருக்கின்றார் என அமரே குறிப்பிட்டுள்ளார். அமரே உருவப்படம் சரியானதுதானா என பிரியதர்ஸனாவை விசாரித்துள்ளார். உருவப்படம் சரியானது எனப் பிரியதர்ஸனா பதில் அளித்துள்ளார். அவர்கள் அன்றைய இரவு சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தைத் தாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் நிலையத்தினுள் குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும் குண்டொன்றை எடுத்துச்செல்ல முடியுமா என்றும், மேலும் அதை நிலையத்தினுள் நகர்த்த முடியுமா என்றும் அவரை, அவர்(பிரியதர்ஸனா) விசாரித்துள்ளார் என அமரே அப்போது பிரியதர்ஸனாவுக்குக் கூறியுள்ளார். பிரியதர்ஸனா அதற்கு ஒப்புக்கொண்டார். அமரே அப்போது மாலையில் ஒரு பையுடன் (குண்டை எடுத்துச் செல்வதற்கு) திரும்பி வரும்படியும் பிரியதர்ஸனாவுக்குக் கூறியுள்ளார். அதன்பின்னர் அவர்களில் மூன்றுபேர் கலைந்து சென்றுள்ளனர். மாலையில் அவர்கள் மூவரும் சந்தித்துக்கொண்டனர். மாலையில் பிரியதர்ஸனா அவருடன் ஒரு பையையும் எடுத்து வந்துள்ளார். அமரே பிரியதர்ஸனாவுக்குக் குண்டைக் கையளித்துள்ளார். இக்குண்டு சதுரவடிவமாக அமைந்திருந்தது. அது, மு.ப.3,00 மணிக்கு வெடிக்கும் வகையில் நேரம் குறிக்கப்பட்டு இருந்தது. பொருத்தமான இடத்தில் குண்டை வைக்குமாறு பிரியதர்ஸனாவுக்குக் கூறப்பட்டது. தாக்குதலின் நோக்கம் யாதெனில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் பிரியந்த என்ற பெயருடைய தடுத்துவைத்திருக்கின்ற ஒரு ஜே.வி.பி.நபரைப் பாதுகாப்பாக விடுவிப்பதும் (அவர் கம்பஹா பிரதேசத்துக்கான ஜே.வி.பி.இன் பிரச்சார செயலாளர் ஒருவராகத் தொழிற்பட்டுக்கொண்டு இருந்தவர்) அமைப்புக்காக ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதுமெனப் பிரயதர்ஸனாவுக்குக் கூறப்பட்டுள்ளது. அதன்பின்னர், ஜினே பிரியதர்ஸனாவை அவரது காரில் கிரிபத்கொடைச் சந்திவரை அழைத்துச்சென்று அவரை அங்கு இறக்கியுள்ளார்.

குற்றஒப்புதலின் உத்தியோகபூர்வ பதிலில் பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதல்பற்றி மேலதிக விபரங்கள் பற்றியும் ஜினே குறிப்பிட்டு இருக்கவில்லை. அவர் குறிப்பிட்டது யாதெனில், சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது ஜே.வி.பி தாக்குதலொன்றைத் தொடுத்துள்ளனர் என்பதை தாம், வானொலியினூடாக, அடுத்தநாள் அறிந்தார் என்பதாகும். அவரோ அல்லது அமரேயோ குறிப்பிட்ட தாக்குதலில் உண்மையாகப் பங்குபற்றியதாக அவர் குறிப்பிடவில்லை. தாக்குதல் எப்படித் திட்டமிடப்பட்டது, தாக்கியவர்களின் அடையாளங்கள், தாக்குதல்காரர்கள் எவ்வாறு பின்வாங்கினர் என்பதுபற்றியும் அவர் குறிப்பிடவில்லை. இது சம்பந்தமாக உபொஅ டயஸ் ஒரு வினாவுதலையேனும் வினவவில்லை என்பது ஆச்சரியத்துக்குரியதாகும். உபொஅ டயஸ் மிக முக்கியமான விபரங்களை அறுதியிடுவதற்கு விரும்பவில்லையா? உண்மையில் ஜினே தாக்குதல் சதித்திட்டத்திலும் குறிப்பிட்ட தாக்குதலிலும் ஈடுபட்டு இருக்கவில்லை என்பதை உபொஅ டயஸ் அறிந்திருந்தாரா? பிரியதர்ஸனாவின் தொடர்பு சம்பந்தப்பட்ட விபரங்களை எடுப்பதற்கு கடும்முயற்சி செய்த உபொஅ அதனுடன் திருப்தியடைந்தாரா? அல்லது குற்றஒப்புதலின் பதிவானது உபொஅ பீரிஸ்சினதும் ஏனைய அதிகாரிகளினதும் முனைப்பான கற்பனையின் ஒரு பகுதியாக இருந்ததா?

எவ்வாறாயினும், குற்றஒப்புதலின்படி சம்பவம் நடந்த பல நாட்களுக்குப் பின் ஜினே அமரேயைச் சந்தித்திருக்கின்றார் என அவர் கூறுகின்றார். தாக்குதல்காரர்கள், குண்டுகளை எடுத்துச் செல்வதற்கு முடியாமல், இருந்த காரணத்தினால் தாக்குதல் வெற்றியடையவில்லை என அமரே குறிப்பிட்டுள்ளார். தாக்குதலில் ஒரு ஜே.வி.பி.யும் மூன்று பொலிசு உத்தியோகத்தரும் இறந்ததோடு பொலிசு நிலையத்திலிருந்து தாக்குதல்காரர்களுக்கு எந்த ஆயுதத்தையும் வெளியே எடுத்துவர முடியவில்லை என அவர் மேலும் கூறியுள்ளார். பல நாட்களுக்குப் பின்னர் ஜினே, பிரியதர்ஸனாவையும் ஜயசிங்காவையும் பிரியதர்ஸனாவின் வீட்டில் சந்தித்தார். பிரியதர்ஸனாவும் ஜயசிங்காவும் தாக்குதலின் வெற்றியின்மைபற்றி தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர். இரு வாரங்களுக்குப் பின் ஜினே ஜா-எல பொலிசு நிலையத்தில் ஜயசிங்காவைச் சந்தித்துள்ளார். அச்சந்தர்ப்பத்தில் ஜயசிங்கா 17 ,9 MM புதிய தோட்டாக்களை ஜினேக்கு வழங்கியுள்ளார். கொழும்பு வலயம்-01 இற்கு ஜே.வி.பி.யின் அரசியல் தலைவராக இருந்த ராஜா என்பவருக்கு ஜினே தோட்டாக்களை வழங்கியிருக்கின்றார்.

1989 டிசெம்பரில் ஜினே கண்டி மாவட்டத்துக்கான ஜே.வி.பி.இன் மாவட்டச் செயலாளராக இடமாற்றப்பட்டுள்ளார். குருவிட்டவில் ஜே.வி.பி.ஆர்வலரொருவரின் வீட்டில் இருந்துகொண்டு அவர் ஜே.வி.பி.க்கான வேலைகளைச் செய்துகொண்டிருக்கும்போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். எந்தத் திகதியில் அவர் அவ்வாறு கைது செய்யப்பட்டார் என்பதை விசாரிப்பதற்கு உபொஅ டயஸ் அலட்டிக் கொள்ளவில்லை. குறிப்பிட்ட ஆர்வலரின் அடையாளம் பற்றியும் அவர் விசாரிக்கவில்லை. எந்தநிலைமைகளின் கீழ், அவர் கைது செய்யப்பட்டார் என்பதுபற்றிய விபரங்களெதுவும் பெற்றுக்கொள்ளபடவில்லை. இராணுவத்தின் கீழ் அவரது தடுப்புப்பற்றியும் அவர் வினாத் தொடக்கவில்லை. இதுபோன்ற சந்தர்ப்பசூழ்நிலைகளில் தடுப்புக் காலப்பிரிவில் சந்தேகநபர் கொடுமைப்படுத்தப்பட்டாரா என்று உபொஅ ஒருவர் கேட்கவேண்டிய அடிப்படைக் கேள்வியொன்றாகும். ஜினே இராணுவத்தின் கட்டுக்காப்பிலிருந்து பொலிசின் கட்டுக்காப்புக்கு எவ்வாறு மாற்றப்பட்டுள்ளார் என்பதுபற்றி அவரிடம் எந்தக் கேள்வியும் கேட்கப்படவில்லை. அவர், அவ்வாறு எப்போது மாற்றப்பட்டுள்ளார் என்பது பற்றியும் வினவப்படவில்லை. இடமாற்றத்துக்குப்பின்பு அவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டு இருந்தார் என்பதும் வினவப்படவில்லை. குற்றத்தினைச் சுயமாகவே ஒப்புக்கொள்வதை நிறுவுவதற்காக இது சம்பந்தமாக விசாரணை செய்வது மிக முக்கியமாகும். எவ்வாறாயினும், உபொஅ டயஸ் இந்தக் கேள்விகளைக் கேட்டிருக்கவில்லை. ஜினே ஏதாவது முன்வாக்குமூலங்களை இராணுவத்துக்கு அல்லது பொலிசு உத்தியோகத்தர்களுக்குச் செய்திருந்தாரா அல்லது பி.ப.விக்கிரமசிங்காவுக்கு அல்லது ஏனைய ஏதாவது உத்தியோகத்தர்களுக்கு, தான் ஒரு

உபொஅ விற்கு குற்றஒப்புதலைச் செய்ய விரும்புவதாக அறிவித்திருந்தாரா என்பதுபற்றி உபொஅ டயஸ் விசாரணை செய்யவில்லை.

**களுவாவும் சாந்தலாலும்..........**

சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதலில் களுவாவினதும் சாந்தலாலினதும் பங்களிப்புப்பற்றி குறிப்பிட்ட அத்தியாயத்தில் விளக்கப்பட்டு இருக்கின்றது. ஏற்கனவே, குறிப்பிட்டதை சுருங்கக் கூறுவதாயின், களுவா (கோணவல சுனிலின் மைத்துனர்) சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதலில் நிச்சயமாகப் பங்கெடுத்துள்ளார். அவர் பொலிசின் எதிர்தாக்குதலின் விளைவாக இறந்ததோடு தாக்குதலுக்குச் சிறிது பின்னர் அவரது உடம்பு பொலிசு நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. சாந்தலால் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தைச் சேர்ந்த ஒரு ஊழியராவார். அவர் பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதலின் சிறிது நாட்களின் பின்னர், தாக்குதலில் அவரது தொடர்பு சம்பந்தமாகச் செய்யப்பட்ட சார்த்துதலினால் கைது செய்யபப்பட்டார். கட்டுக்காப்புக் காலப்பிரிவின் தாக்குதலின் அவரது குற்றத்துணைமையை ஒப்புக்கொள்வதில் பிரதம பரிசோதகர் விக்கிரமசிங்காவுக்கு அவரது வாக்குமூலத்தை அளித்தார். கட்டிடத்தின் முதல்மாடியில் அமைந்துள்ள கழிப்பறையொன்றினுள் குண்டொன்றை வைப்பதற்கு களுவா அவருக்கு அதை வழங்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 1989 யூலை 16 ஆந் திகதியன்று சுமார் மு.ப.3.00 மணியளவில் தாக்குதல் தொடங்கிச் சிறிது நேரத்தின் பின்னர் வெடித்த குண்டு இதுவாகத்தான் இருத்தல் வேண்டும். இதற்கு எற்பவே சாந்தலாலும் உபொஅ பீரிஸ்சுக்கு ஒரு குற்றஒப்புதலைச் செய்துள்ளார். சொல்லப்பட்ட குற்றஒப்புதலானது சிறிது நாட்களின் பின்னர் களனி நாசகாரத் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களின் கட்டுக்காப்பிலிருந்த சந்தேகத்துக்குரியதும் அபூர்வமானதுமான சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் சாந்தலால் காணாமல் போயுள்ளார். பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதல் பற்றிய புலனாய்வை மேற்பார்வை செய்யும் பணிக்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர் உபொஅ ராஜா டயஸ் என்பவராகும். தாக்குதலோடு தொடர்புடைய நிகழ்வு சம்பந்தப்பட்ட தகவல்களையும் அனைத்துத் தாக்குதல்காரர்களதும் மற்றும் குறித்த நாசகாரர்களது அடையாளங்கள் பற்றிய தகவல்களைப் புலனாய்வு செய்து உறுதிப்படுத்துவதற்கும் அவர் பி.பொலிசுமா அதிபர் குணரத்னாவினாலும் சி.பொலிசு அத்தியட்சகர் தெல்கொடவினாலும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தார்.

சாந்தலால், களுவா சம்பந்தப்பட்ட சாட்சியத்தின் பின்னணியில் சம்பவத்தில் தனது தொடர்பை குற்றஒப்புதலாக ஒப்புக்கொள்ளும் சார்த்துதல் செய்யப்பட்ட சதி நாசகாரர்(ஜினே)பற்றி உபொஅ டயஸ் என்ன நடவடிக்கை எடுத்தார்? அவர் களுவா அல்லது சாந்தலால் சம்பந்தமாக ஜினேயிடம் ஒரு கேள்வியையேனும் வினவுவதற்கு விரும்பவில்லை. குறிப்பிட்ட விசாரணைகளைச் செய்யாதமைபற்றி நியாயமானதொரு விளக்கத்தை உபொஅ டயஸ்சினால் வழங்க முடியவில்லை. தாக்குதலில் சாந்தலாலின் தொடர்புபற்றி அவர் அறியாதிருந்ததால் குறிப்பிட்ட விளக்கங்களை அவர் கேட்கவில்லை என விளக்கம் அளிப்பதற்கு அவர் முயற்சித்துள்ளார். சாந்தலால் கைதுசெய்யப்பட்டு அவர் குற்றஒப்புதலைச் செய்துள்ளார் என்ற உண்மையை அவரது கவனத்துக்கு பிரதம பரிசோதகர் விக்கிரமசிங்கா கொண்டுவரவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். சாந்தலால் என்ற பெயரைக்கூட ஆணைக்குழு அமர்வுகளிலேயே அவர் முதல்தடவையாக அறியவந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ஒருபுறத்தில் உபொஅ டயஸ்சினால் எடுக்கப்பட்ட இந்த நிலைப்பாடு பூரணமாக ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று என்ற கருத்திலேயே நாம் உள்ளோம். அவர் ஒரு பிரதம புலனாய்வாளராக இருந்துகொண்டு அவரது கைதினையும் அவர் குற்றஒப்புதல் செய்தவற்றையும் அறியாது இருந்தேன் என அவர் கூறமுடியாது. மறுபுறத்தில் வாதாட்டத்துக்காக சாந்தலால் பற்றிய உபொஅ டயஸ்சின் நிலைப்பாட்டை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பினும் அதிலிருந்து என்ன தெளிவாகின்றது. சாந்தலால்

தொடர்பான நிகழ்வை பிரதம புலனாய்வாளரிடமிருந்து உபொஅ பீரிஸ்சும் பி.ப.விக்கிரமசிங்காவும் தடுத்துள்ளனர் என்பதே அதன் கருத்தாகும். அப்படியானால், அது ஏன்? சாந்தலாலின் விடயத்தை இவ்விரு உத்தியோகத்தர்களும் ஏன் மறைத்தல் வேண்டும். தாக்குதலில் களுவா மட்டும் பங்குபற்றியிருக்கவில்லை. மாறாக, அவர் சாந்தலாலுக்கும் குண்டொன்றைக் கொடுத்திருக்கின்றார் என்ற உண்மை அவர்களைத் தடுத்துவைக்க வேண்டப்பட்டதா?

இது ஓர் அப்பாவித்தனமான நீக்குதல் என்று உபொஅ டயஸ்சினால் கூறிவிட முடியாது. அந்த வாதாட்டத்தை அவர் கொண்டிருக்க வேண்டும் என்றால் இலங்கைப் பொலிசில் எந்தத் தரத்தையும் வகிப்பதற்குத் தகுதியற்ற ஒருவராகவே உபொஅ டயஸ் இருக்கின்றார் என்ற முடிவை நாம் எடுக்கவேண்டியுள்ளது. எவ்வாறாயினும், பொலிசுப்படையில் உபொஅ டயஸ்சின் தொழிலையும் அவரது கடந்தகால அனுபவத்தையும் வைத்து நோக்கும்போது எந்தளவுக்குத் தகுதியற்ற ஓர் உத்தியோகத்தராக அவர் இருந்திருக்கின்றார் என்ற முடிவுக்கு எமக்கு வர முடியாதுள்ளது. ஆதலால், முழு நிகழ்வுக்கும் பொறுப்பானவர்கள் அனைவர்களதும் சரியான அடையாளங்களைத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட உண்மை நிலைமைகளை அவர் பதிவு செய்யவில்லையானால், ஜினேயிடமிருந்து களுவா, சாந்தலால் பற்றியும் விசாரிப்பதிலிருந்து உபொஅ டயஸ் வேண்டுமென்றும் கருத்தொன்றிய விதத்திலும் அதை தவிர்த்துக்கொண்டிருத்தல் வேண்டும் என்ற உறுதியான கருத்தை நாம் கொண்டுள்ளோம்.

உபொஅ டயஸ்சின் கருத்துப்படி நீக்குதல்பற்றிய மிகவும் நீளமானதாகையால் இங்கு அவை முழுவதையும் அட்டவணைப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமல்ல. எவ்வாறாயினும், சார்த்துதல் செய்யப்பட்ட குற்றஒப்புதல் எந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டது என்பதையும் பதிவின் தன்மையை கவனத்தில் கொள்ளும்போதும் அத்தகைய குற்றஒப்புதலொன்று என்றுமே பதிவு செய்யப்படவில்லை என்ற நிலையை மறுப்பதற்குரிய மிகவும் தெளிவான அடிப்படைகள் உள்ளன என்பதைக் குறிப்பிட முடியும்.

**எந்த நோக்கத்துக்காகக் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள்.......**

பி.ப. விக்கிரமசிங்காவை மீளநோக்குகின்றபோது அவர் ஜினேயை உபொஅ பீரிஸ்சின் முன்னர் நிறுத்துவதற்கு ஏன் நடவடிக்கை எடுத்தார். ஜினேயின் குற்றஒப்புதலை செய்வதற்கு ஒரு உபொஅ முன்னால் அவரை சமர்ப்பிக்குமாறு மத்தேகொடைக்குப் போகும்வழியில் அவரிடம் வேண்டிக்கொண்டார் என்ற செயற்பாட்டுக்கு விக்கிரமசிங்கா சான்றளிக்கவில்லை. மேலும் இந்த வழமைக்கு மாறான நடவடிக்கையை விக்கிரமசிங்கா எடுத்த சந்தர்ப்பத்தில் அவர் (விக்கிரமசிங்கா) ஜினேயைக் கேள்வி கேட்கவும் இல்லை. அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்யவும் இல்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் வழமையானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான நடைமுறை யாதெனில் ஆரம்பத்தில் சந்தேகத்துக்குரிய நாசகாரரை கனிட்ட உத்தியோகத்தரொருவர் வினாத்தொடுத்து வாக்குமூலமொன்றைப் பதிவுசெய்வதும் அதன்பின்னர் சந்தேகநபரை ஓர் உபொஅ. விடம் குற்றஒப்புதலைச் செய்ய விரும்பினால் அந்த நோக்கத்துக்காக உபொஅ முன் சந்தேகநபரை சமர்ப்பிப்பதும் ஆகும் என்பது ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்த அனைத்துப் பொலிசு உத்தியோகத்தர்களினதும் ஏகமனதான கருத்தாக இருந்தது.

அத்தகைய செயற்பாடொன்றினது நோக்கம் யாதெனில், சந்தேக நபரினால் செய்யபட்டதெனச் சொல்லப்பட்ட குற்றங்கள் தொடர்பில் அத்தகைய சந்தேகநபரொருவருக்கு எதிரான வழக்கொன்றில் சந்தேகநபரினால் செய்யப்பட்ட அத்தகைய குற்றஒப்புதலொன்றை உபொஅ ஒருவருக்கு பயன்படுத்துவதற்கேயாகும். இந்தக் குற்றஒப்புதலானது பயங்கரவாதத் தடுப்புச் சட்ட ஏற்பாடுகளின் வண்ணமும் பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்

ஏற்பாடுகளில் செய்யப்பட்ட ஒழுங்குவிதியின் வண்ணமும் (அவசரகால ஒழுங்குவிதிகள் எனப் பொதுவாகக் குறிக்கப்படுகின்றன) சான்றாக ஏற்கத்தக்கதாகும். அத்தகைய ஒப்புதல்கள் அவைகள் சந்தேகநபர்களினால் மனமொப்பியே செய்யப்படுவதால் சான்றாக ஏற்கத்தக்கவைகள் ஆகும்.(வாக்குறுதி, தூண்டுதல் அல்லது அச்சுறுத்தல் இன்றி). குறிப்பிட்ட சட்ட ஏற்பாடுகளின்வண்ணம் உ.பொ.அ ஒருவருக்குச் செய்யப்பட்ட அத்தகைய ஒரு குற்றஒப்புதல் உள்ளடக்கங்களின் சான்றை சமர்ப்பிப்பதற்கு வழக்குத்தொடுநர் நாடும்போது குற்றஒப்புதல் மனமொப்பிச் செய்யப்படவில்லை என்பதை எண்பிக்கும் பொறுப்பு குற்றம் சாட்டப்பட்டவர் மீது அமைக்கின்றது. சாதாரண சட்டத்தின் கீழ் முதலாவது பொலிசு உத்தியோகத்தர்களிடம் பதவியைப் பொருட்படுத்தாமல் செய்யப்பட்ட அனைத்துக் குற்றஒப்புதல்களும் ஏற்கத்தக்கவையல்ல(நீதவான் மன்றத்துக்குச் செய்யப்பட்டவைகள் தவிர). இரண்டாவது அதிகாரத்தில் உள்ள வேறு ஏதாவதொரு உத்தியோகத்தருக்குச் சந்தேக நபரொருவரால் குற்றஒப்புதலொன்று செய்யப்பட்டு இருப்பின்' குறிப்பிட்ட குற்றஒப்புதல் மனமொப்பியே செய்யப்பட்டது என்பதை எண்பிக்கும் பொறுப்பு வழக்குத் தொடுநர்மீதே அமைகின்றது. அத்தகைய நடைமுறை நீதவான் மன்றத்துக்குச் சந்தேகநபர் வாக்குமூலம் செய்யும் சந்தர்ப்பத்தில் கைக்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் தோன்றிப் பிரசன்னமாகும் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு மட்டுமே தமது வழக்குரைஞருக்குப் பொருத்தமான அமைப்பில் அறிவுறுத்தல் வழங்கிச் சார்த்துதல் செய்யப்பட்ட மனமொப்பிய குற்றஒப்புதலின் ஏற்கத்தக்க தன்மைபற்றி ஆட்சேபனை தெரிவிக்க முடியும். இது அவரது சார்பில் சாட்சி வழங்கும், பொலிசு உத்தியோகத்தர்களைக் குறுக்கு விசாரணை செய்வதன் மூலமும் அவரது சார்பில் சான்றளிப்பவர்களின் சாட்சிகளைச் சமர்ப்பிப்பதன்மூலமும் செய்ய முடியும். வித்தியாசமின்றி அத்தகைய எல்லா வழக்குகளிலும் தங்களால் உபொஅ வுக்குச் செய்யப்பட்டது எனச் சொல்லப்படும் குற்றஒப்புதலின் ஏற்கத்தக்க தன்மைபற்றி குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஆட்சேபனை தெரிவிக்க முடியும்.

விசாரணையில் குற்றம்சாட்டப்பட்டவர் சமூகம் அளிக்காது இருக்கும் பட்சத்தில், அவர் பிரதிநித்துவப்படுத்தப்படாத பட்சத்தில் இந்த விடயங்கள் பரீட்சிக்கப்பட முடியாது. அத்தோடு நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டவை பொலிசினால் சாட்சியளிப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்க முடியாதனவாகும். இந்தவகையில் வித்தியாசமின்றி குற்றஒப்புதலானது விசாரணை நீதிபதியினால் அவரது நிலைப்பாட்டை அவருக்கு பொலிசுச் சாட்சியங்களின் மறுப்புக்கு வேறு எந்தச் சான்றுகளும் இல்லாததினால் சான்றாளரே ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. மேலும், விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர் இருந்திருப்பரானால் சார்த்தப்பட்ட குற்றஒப்புதல் உண்மையானதா அல்லது பொய்யானதா என ஒரு முடிவுக்கு விசாரணை நீதிமன்றம் வரமுடியும். குற்றம் சாட்டப்பட்டவர் இருந்திருக்காவிட்டால் இது சம்பந்தமாகவும் நீதிமன்றம் எதுவும் செய்யமுடியாது. எனவே நீதி முறையான நிருவாகத்துக்கு விசாரணையில் குற்றம்சாட்டப்பட்டவர் இருக்கவேண்டியது மிக முக்கியமானதாகும்.

குற்றப் புலனாய்வுத்துறையில் போதிய கையாளுகையும் அனுபவமும் மிக்க பொலிசு உத்தியோகத்தரொருவராக பி.ப. விக்கிரமசிங்கா இருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் அதிக எண்ணிக்கையான குற்றவியல் வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளார். இங்கு, உ.பொ.அத்தியட்சகர்களுக்கு நாசகார சந்தேகநபர்களினால் செய்யப்பட்ட குற்றஒப்புதல்களின் ஏற்கத்தகுதன்மை ஆட்சேபணை செய்யப்பட்டது. இந்தவகையில் அவர் குறிப்பிட்ட அனைத்து நடைமுறைகள் பற்றியும் அறிந்திருக்கின்றார் என்ற முடிவுக்கு வரலாம். வழக்குரைஞர்களால் அவர் பரிசோதிக்கப்பட்டதன்பேரில் உ.பொ.அத்தியட்சகர் ஒருவரினால் முடிவுறுத்தப்படும் குற்றஒப்புதலின் குறிப்பிட்ட நடைமுறையை எவ்வாறு ஆரம்பிப்பது என்பதுபற்றி பி.ப.விக்கிரமசிங்கா நன்றாக அறிந்திருந்தார் என்பது ஆணைக்குழுவுக்குத் தெளிவானது. ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட நடைமுறைகள் பின்பற்றப்படாவிட்டால் குறிப்பிட்ட குற்றஒப்புதல் சான்றில் சந்தேகநபர் வெற்றிகரமாக வழக்குத் தொடருவதும் அதை ஒப்புக்கொள்வதும் சாத்தியம் இல்லை என்பதை அவர் அறிந்திருந்தார். இது தொடர்பில் சில

அடிப்படைப் புலனாய்வு நடைமுறைகள் பி.ப.விக்கிரமசிங்காவினால் ஆதரவு தெரிவிக்கப்படவில்லை. இந்த வகையில் ஜினே உ.பொ.அ.ராஜா டயஸ் முன் எப்போதாவது கொண்டுவரப்பட்டிருந்தாலும் ஒன்றில் ஜினே தான் குற்றஒப்புதல் செய்திருக்கலாம் என்று சாட்டுதல் செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகளின் அனைத்தையும் அல்லது ஒரு பகுதியைக் குற்றஒப்புதல் செய்திருந்தாலோ சட்டமன்றமொன்றின் முன் சமர்ப்பிப்பதற்கோ அவரது (ஜினே) முன்னிலையில் வழக்கொன்றில் அவருக்கு வழக்குத் தொடுப்பதற்கோ பி.ப.விக்கிரமசிங்கா நோக்காகக் கொண்டிருக்க முடியும் என்பது தெளிவாகின்றது. ஜினே (அவரது முன்னிலையில்) சந்தேகமின்றி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அவசியமான புலனாய்வு நடவடிக்கைகளுக்கு உட்பட்டு இருக்கவேண்டும் என்ற அவரின் வழக்குத்தொடுப்பின் இறுதிநோக்கத்தை திரு.விக்கிரமசிங்கா மேற்கொண்டாரா? ஆரம்பத்திலே பி.ப.விக்கிரமசிங்கா அறிந்திருந்தது யாதெனில், உ.பொ.அ.டயசுக்கு சார்த்தப்பட்ட அவரது குற்றஒப்புதலை ஆட்சேபிப்பதற்கு ஜினே எதிர்காலத்தில் இருக்கமாட்டார் என்பதாகும். அவ்வாறானால் குறிப்பிட்ட அதிகாரிகள் ஜினேயை விசாரணைக்கு முகம்கொடுப்பதற்கு அனுமதிப்பதில்லை என ஏன் தீர்மானித்தனர். அது, ஜினே சார்த்துதல் செய்யப்பட்ட குற்றஒப்புதலின் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் பொலிசின் கூற்றுக்கு முற்றாக வித்தியாசமானதாக இருக்கின்றது என்பதனாலா? அது சார்த்துதல் செய்யப்பட்ட குற்றஒப்புதலானது பொய்யானது என்பதன் காரணமாகவா? அது ஜினே அப்பாவி என்பதன் காரணமாகவா? அது பிரியதர்ஸனாவும் ஜயசிங்காவும் சம்பந்தப்பட்ட ஜினேயின் சார்த்துதல் செய்யப்பட்ட குற்றஒப்புதலின் பகுதியை விக்கிரமசிங்காவும் ஏனையோரும் அறிந்திருந்தார்கள் என்ற காரணத்தினாலா?

**ஜினேவுக்கு என்ன நடந்தது.......**

ஜினேயின் "குற்றஒப்புதலைப்" பதிவுசெய்ததன்பின் தடுத்துவைப்புக்காக அவர் மீண்டும் ஒருமுறை சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு அனுப்பப்பட்டார். இத்தடுத்துவைத்தலின் நோக்கம் யாதெனில் மேலதிகப் புலனாய்வுகளுக்கு வசதியளிப்பதும், நடைபெறும் வழக்கில் சந்தேகநபரைத் தடுத்துவைப்பதுமேயாகும் என ஒருவர் எதிர்பார்க்க முடியும். எவ்வாறாயினும், சார்த்துதல் செய்யப்பட்ட குற்றஒப்புதலைப் பதிவுசெய்ததன் பின்னர் இது சம்பந்தமாக நாசகாரத் தடுப்புப் பிரிவு எந்தப் புலனாய்வுகளையும் நடாத்தவில்லை. ஜினே தொடர்ந்தும் தடுத்துவைப்பிலேயே இருந்திருக்கின்றார்.

நாசகாரத் தடுப்புப் பிரிவின் பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயாக்காவின் கருத்துப்படி 1990 மே 23 ஆந் திகதியன்று சந்தேகநபரிடமிருந்து ஓர் இரகசிய வாக்குமூலத்தைப் பதிவுசெய்யுமாறு உ.பொ.அ பீரிஸ் அவருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். ஆதலால், ரத்நாயக்கா சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்குச் சென்று ஜினேயைப் பொலிசு நிலையத்தின் போக்குவரத்துக் கிளைக்கு அழைத்துச் சென்றார். போக்குவரத்துக் கிளையில் சந்தேகநபரின் 8 வரிகள்கொண்ட வாக்குமூலமொன்றை ரத்நாயக்கா பதிவுசெய்துள்ளார். ஜினே அந்தச் சார்த்துதல் செய்யப்பட்ட சுருக்கமான வாக்குமூலத்தில் அவருக்கு அப்போதைய ஜே.வி.பி.யின் தலைவர் சோமவம்ச அமசிங்காவைத் தெரியும் என்றும் அவருடன், அவர் மிக நெருக்கமாக தொடர்பு கொண்டிருந்ததாகவும் அதில் குறிப்பிட்டுள்ளார். அவர் சோமவம்ச அமரசிங்காவைக் கண்டால் அவரால், அவரை சார்த்துதல் செய்யப்பட்ட வாக்குமூலத்தின்படி அடையாளப்படுத்த முடியும் என்றும் ஜினே சோமவம்ச அமரசிங்கா எங்கு வாழ்ந்துகொண்டிருக்கின்றார் என்பதையோ அல்லது அந்தத் தினத்தில் அவர் எங்கு தங்கியுள்ளார் என்பதையோ குறிப்பிடவில்லை என அவரும் சாட்டுதல் செய்திருக்கின்றார். மேலும், அவர் தான் எந்த இடத்துக்கு அடிக்கடி சென்றுவருகின்றார் என்பதைக்கூட குறிப்பிடவில்லை. சோமவம்ச அமரசிங்காவைப்பற்றி ஜினேயை வினாவுதல் செய்யும்படி உ.பொ.அ பீரிஸினால் பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்காவுக்கு வேண்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இவ்வாக்குமூலத்தின் உத்தியோகபூர்வ பதிவானது சோமவம்ச அமரசிங்காபற்றி ரத்நாயக்கா, ஜினேயை வினாவுதல் செய்தார் என்பதைக் குறிப்பிடவில்லை.

அவரிடம் கேட்கப்பட்ட வினாக்கள் சிலவற்றை அனுசரித்து சந்தேகநபர் வாக்குமூலத்தை அளித்தார் என பதிவு செய்வதற்கு ரத்நாயக்காமீது நிர்ப்பந்தம் ஏற்பட்டு இருந்தது. அங்ஙனம் கேட்கப்பட்ட வினாக்களின் தன்மையினையும் அவர் செய்திருத்தல் வேண்டும். அத்தகைய பதிவு இல்லாதபட்சத்தில் ஜினே தமது சொந்த விருப்பத்தின்பேரில் சார்த்தப்பட்ட வாக்குமூலத்தை அளித்தார் என நாங்கள் முடிவுசெய்தல் வேண்டும். அங்ஙனமாயின் உ.பொ.அ டயஸிடம் செய்த சார்த்தப்பட்ட குற்றஒப்புதலின்போது அவர், ஏன் இந்த வெளித்தரவுகளைச் செய்யவில்லை. மேலும், அத்தகைய வெளிப்படுத்துகைகளைச் செய்யாதவிடத்து 1990 மே 23 ஆந் திகதியளவில் அத்தகைய முக்கியமான தகவல்களை வெளிப்படுத்த ஜினே ஏன் முடிவு செய்தார்? மறுபுறம் இந்த வாக்குமூலத்தின் சார்த்தப்பட்ட பதிவுசெய்தலானது அதன்பின்னர், கூறப்பட்ட சம்பவத்தை விளக்கும்பொருட்டு உ.பொ.அ பீரிஸினதும் பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்காவினதும் கற்பனையின் பாற்பட்ட இன்னொரு நடவடிக்கையாகும். ஜினேயின் இவ்வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கு வழமைக்கு மாறான ஓர் இடத்தை பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்கா தெரிவு செய்திருக்கின்றார் என நாங்கள் காண்கின்றோம். சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தில் அமைந்திருந்த நாசகாரத் தடுப்புப் பிரிவிலேயே வாக்குமூலத்தை ரத்நாயக்கா ஏன் பதிவு செய்யவில்லை? அவ்வாக்குமூலத்தைப் பதிவு செய்யும்பொருட்டு பொலிசு நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவிலிருந்து போக்குவரத்துக் கிளைக்கு ஜினே கொண்டு வரப்பட்ட காரணத்தை ஆணைக்குழு திருப்தியுறும் வகையில் விளக்கும்நிலையில் ரத்நாயக்கா இருக்கவில்லை.

அதன்பின்னர், சோமவம்ச அமரசிங்காவை எதிர்பார்த்து சந்தேகநபர் ஜினே காரொன்றை எடுத்துவந்திருந்தார் என்பது பொ.சா.ரத்நாயக்காவினதும் அவருடன் இருந்த பொ.கா.சாரதி 15175 ரஞ்சித், பொ.சா.19605, பொ.கா.20963 ஆகியோர் உள்ளிட்ட பொலிசு உத்தியோகத்தர்களின் கருத்தாகும். இந்தக் கட்டத்திலேயே ரத்நாயக்கா ஏன் இந்த நடவடிக்கையை எடுத்தார் என்ற கேள்வியை எழுப்ப விரும்புகின்றோம். ஜினே தனக்கு சோமவம்ச அமரசிங்கா எங்கு ஒளிந்திருக்கின்றார் அல்லது வாழ்ந்துகொண்டிருக்கின்றார் அல்லது குறிப்பட்ட அந்தத் தினத்தில் எங்கு செல்ல வேண்டியுள்ளது என்பதுபற்றி புலனாய்வாளருக்கு காண்பிக்க முடியும் என்பது சம்பந்தமாகத் தனது வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. அவர், அத்தகைய தகவலை வழங்கியிருந்தால் ஜினேயின் வாக்குமூலத்தில் அத்தகைய முக்கிய தகவல்களை இணைக்கவேண்டியிருப்பது ரத்நாயக்காமீது நிர்ப்பந்தமாக அமைந்துவிடும். ரத்நாயக்கா தனது வழமைக்கு மாறான நடத்தைக்கு திருப்திகரமான பதிலை மீண்டுமொருமுறை வழங்க முடியவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் நிகழ்வுபற்றிய அவரது உத்தியோகபூர்வ குறிப்பு அவர் செய்த அனைத்தும், அவற்றுக்கான காரணங்களும் அடங்கியிருக்கக்கூடுமென ரத்நாயக்கா கூறினார். இதைபற்றி அரச வழக்குரைஞர், அச்சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட நிகழ்வு சம்பந்தப்பட்ட அவரது உத்தியோகபூர்வ குறிப்புகளைச் சாட்சிக்குக் காட்டினார். எவ்வாறாயினும், சாட்சியாளர், தனது குறிப்புக்களின் ஜினேயை வெளியில் எடுத்ததற்கான காரணங்களை உள்ளடக்கிய அவரது குறிப்புப் பகுதியை ஆணைக்குழுவுக்கு காண்பிக்க முடியவில்லை. மேலும், இந்த முக்கிய பணியின்பொருட்டு, ஜினேயை அவர் வெளியில் எடுத்திருக்கின்றார் என்பதை எந்த சிரேட்ட உத்தியோகத்தருக்கும் ரத்நாயக்கா அறிவித்ததாகக் குறிப்புகள் குறிப்பிடவில்லை. ஜினேயின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கு அவருக்கு ஆரம்பத்தில் அறிவுறுத்தல் செய்திருந்தார் எனச் சார்த்தப்பட்ட உ.பொ.அ பீரிஸுக்கும் அவர் அறிவித்து இருக்கவில்லை. ஒரு சிரேட்ட உத்தியோகத்தரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் அத்தகைய முக்கியமான சந்தேகநபரை தடுப்புநிலையத்துக்கு வெளியே ஒரு கனிட்ட உத்தியோகத்தரான பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்காவினால் எடுத்துச் செல்லும் முடியும் என எதிர்பார்க்கலாமா?

**ஜினே காணாமல்போதல்........**

ஜினே பொலிசு நிலையத்திலிருந்து கைவிலங்கு போடப்பட்டு வெளியே கொண்டுவரப்பட்டார். சுமார் மு.ப.8.55 அளவில் கூட்டத்தினர் கலைந்து சென்றிருந்தனர். அவர்கள் அப்போது நீர்கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். மு.ப.9.30 முதல் நண்பகல் 12.00 மணிவரை கூட்டத்தினர் திருப்பத்துக்கு அருகில்(கொழும்பு-நீர்கொழும்பு பிரதான பாதையில்) கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து வாகனமொன்றில் சோமவம்ச அமரசிங்கா செல்கின்றாரா என்பதைப் பார்ப்பதற்கு எதிர்பார்த்துக் காத்து நின்றனர். சோமவம்ச அமரசிங்கா கடந்து செல்வதை எதிர்பார்த்து நிற்கும்வேளையில் உத்தியோகத்தர்கள் ஜினேயின் கைவிலங்கை அகற்றினர். இந்த வழமைக்கு மாறான நடத்தைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க எக்காரணமும் வழங்கப்படவில்லை. ஜினே தப்புவதற்கு வசதியளிப்பதற்காக அவர்கள், கைவிலங்குகளை அகற்றினாரா? அதன்பின்னர், கூட்டத்தினர் ஜா-எல நகரத்தை நோக்கித் திரும்பிவந்து பி.ப.1.00 மணிமுதல் 3.00 மணிவரை சோமவம்ச அமரசிங்கா கடந்து செல்வதைப் பார்ப்பதற்கு ஜா-எல சிறப்புச் சந்தைக்கு முன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். பி.ப.4.00 மணியளவில் அவர்கள் வத்தளைக்குச் சென்று சமுத்திரா திரைப்பட அரங்குக்கு அருகிலிருந்து மீண்டும் சோமவம்ச அமரசிங்கா கடந்து செல்வதைப் பார்ப்பதற்கு எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்கா வாகனத்திலிருந்து வெளியே வருவதற்கு அனுமதியளித்ததோடு வெளியே காத்து நிற்கவும் சந்தர்ப்பம் வழங்கினார். வாகனத்துக்கு வெளியே வருவதற்கு ஜினேயுக்கு ஏன் அவர் அனுமதியளித்தார் என்ற வினாவுக்கு ரத்நாயக்கா மீண்டும் திருப்தியான பதிலொன்றை அளிக்கவில்லை. மேலும், அவர்கள் ஜினேக்கு எந்தத் தகவலையும் வழங்காமல் இவ்வெல்லா இடங்களுக்கும் சென்றிருக்கின்றார்கள் என்பதுவே மிக முக்கியமானதாகும். அவ்வாறெனில், ஏன் ரத்நாயக்கா இவ்வெல்லா இடங்களுக்கும் சென்றார்? அந்தந்த தினத்தில் இந்த இடங்களுக்குச் சோமவம்ச அமரசிங்கா வரலாம் என்ற சேணிலை உணர்வாட்சி(ரெலிபதி) அவருக்கு இருந்ததா?

ஜினே இரு உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் நின்றுகொண்டிருந்திருக்கிறார். உத்தியோகத்தர்கள் ஆயுதம் தரித்திருந்தனர். திடீரென சுமார் பி.ப.6.00 மணியளவில் ஜினே மாயமாக காணாமல் போயிருந்தார். இது நடக்க முடியுமா? ஜினேயுக்கு என்ன நடந்தது என்பதனை ரத்நாயக்காவும் பிற உத்தியோகத்தர்கள் எவருமே காணவில்லை என்பதை அறியவில்லை. அவர்கள், ஜினே தப்பிச் செல்வதைக்கூட கண்டிருக்கவில்லை. இந்த நவீன உலகத்தில் ஒரு நபர் " காணாமல் போனார்" என்று சொல்வதை நம்ப முடியுமா? அதன்பின்னர், எந்தப் பயனுமின்றி சந்தேகத்துக்காக சுற்றுப்புறத்தை உத்தியோகத்தர்கள் மேலோட்டமாகத் தேடிப் பார்த்தனர். பொ.சா.ரத்நாயக்காவின் உத்தியோகபூர்வ குறிப்புப்படி பி.ப.6.45 மணியளவில் கூட்டத்தினர் இடத்தைவிட்டு சப்புகஸ்கந்த நாசகாரத் தடுப்புப் பிரிவுக்குச் சென்றிருந்தனர். எவ்வாறாயினும், தேடுதலின் பின்னர், அவர் அருகிலுள்ள வத்தளைப் பொலிசு நிலையத்துக்குச் சென்று ஜினேயைத் தேடுவதற்கு அவர்களது உதவியை நாடியதாகவும் ஆணைக்குழு முன் அவர் சாட்சியம் அளிக்கும்போது கூறினார். அவருடன் காணாமல்போன இடத்துக்குச் சென்று ஜினே சுற்றுப்புறத்தில் இருக்கின்றாரா? என்பதைத் தேடிப் பார்த்தனர். அவர் அப்பகுதியில் இருக்கவில்லை. அதன்பின், ரத்நாயக்கா வத்தளைப் பொலிசு நிலையத்துக்குத் திரும்பிச் சென்று ஜினேயின் காணாமல்போதல் சம்பந்தமாகச் செய்தியொன்றை உ.பொ.அ. பீரிஸ்சுக்குக் கொடுத்திருக்கின்றார். குறிப்பிட்ட தேடுதலை, ரத்நாயக்கா வத்தளைப் பொலிசு நிலைய உத்தியோகத்தரின் உதவியுடன் செய்திருந்தால் அதுபற்றிய பதிவுகளை அவர் செய்திருக்க வேண்டும். நிகழ்வுபற்றிய அவரது குறிப்புகள் அந்த அமைப்பில் எந்தப் பதிவையும் உள்ளடக்கி இருக்கவில்லை.

மேலும், ஒன்றில் பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்காவோ அல்லது வேறெந்த உத்தியோகத்தரோ அவரது பொலிசு நிலையத்துக்கு வந்து, அவருக்கோ அல்லது வத்தளைப் பொலிசு நிலையத்துக்கோ ஜினே காணாமல் போய்விட்டார் என்றும், சந்தேகநபரைத் தேடுவதற்காக அவர்களது உதவியை நாடுவதாகவும் எச்சந்தர்ப்பத்திலும் அறிவிக்கவில்லை என்ற வாக்குமூலத்தை ஆணைக்குழுவின் புலனாய்வுகள் பிரிவுக்கு, வத்தளைப் பொலிசு நிலையத்தின் அப்போதைய பொறுப்பு உத்தியோகத்தரான பரிசோதகர் நீல் ஹெட்டிஆரச்சி குறிப்பிட்டுள்ளார். மேலும், ஜினேயை அப்பிரதேசத்தில் தேடுவதற்கு குறிப்பிட்ட இடத்துக்கு வத்தளைப் பொலிசு நிலையத்தின் உத்தியோகத்தர்கள் சென்றிருக்கவில்லை. அப்படியானால், சம்பவத்தின் கூற்று பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்காவினால் அறிவிக்கப்பட்டவாறு நம்பமுடியுமானதொன்றா?

பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்காவின் வாய்மூலச் சான்றின்படி அந்த இரவு அவர்கள் புறக்கோட்டை பஸ்நிலையத்துக்குச் சென்று அப்பகுதியில் ஜினேயைத் தேடினார் என்பதாகும். இருப்பினும், அந்த இரவில் ஜினே எங்கிருந்தார்? என்பதுபற்றி எந்த விசாரணைகளையும் சப்புகஸ்கந்த தடுப்பு நடவடிக்கைப் பிரிவு செய்யவில்லை. ஜினே நிரந்தரமாகவே காணாமல் போனார். இன்றுவரை ஜினேயுக்கு என்ன நடந்தது என்பதுபற்றி எந்தச் சான்றும் இல்லை. அன்றிலிருந்து அவரது குடும்ப உறுப்பினர்கள் அவர்பற்றி கேட்கவும் இல்லை.

ஜினே எங்கிருக்கின்றார் என்பதுபற்றிய தகவல்களை வழங்குவதற்கான பொது மக்களை அழைப்பதற்குரிய எந்த நடவடிக்கைகளையும் பொலிசு எடுக்கவில்லை. தகவல் பெற்றுக்கொள்வதற்கான அறிவித்தல்களும் வெளியிடப்படவில்லை. சந்தேகநபர் ஜினேயின் காணாமல்போனமை பற்றியோ அல்லது தப்புகை பற்றியோ நாட்டில் எந்தவொரு பொலிசு நிலையத்துக்கும் அறிவிக்கப்படவில்லை. பாதுகாப்புக் கூட்டிணைப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பணியகம், குற்றப் புலனாய்வுப் பிரிவு போன்ற பொலிசுப் பிரிவின் விசேட அலகுகள்கூட இதுபற்றி விழிப்பூட்டப்படவில்லை. உண்மையில், இந்த நிகழ்வு பொலிசின் கட்டுக்காப்பில் இருந்து தப்பிச்சென்ற சந்தேகநபர் ஒருவர் விடயத்தில் உத்தியோகத்தர்கள் எடுக்கவேண்டும் என்று பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகள் வரையறுக்கின்ற எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இச்சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்காவினால் அறிவிக்கப்பட்ட ஜினேயின் சார்த்தப்பட்ட காணாமல்போதல் கூற்றை இவ்வாணைக்குழு முற்றாக ஆட்சேபிக்கின்றது.

இந்த நிகழ்வின் பின்னர், எந்த உயர் உத்தியோகத்தரின் அனுமதியின்றி, பொலிசுச் சார்ஜன்ட் மேற்கொண்ட ஒரு பணியில் ஜினே காணாமல் போயுள்ளார் என்பதும், பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்காவின் கட்டுக்காப்பிலிருந்து தப்பிய முக்கியமான நாசகாரச் சந்தேகநபரொருவர் என்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழும் ரத்நாயக்காவுக்கு எதிராக எந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்ற உண்மை குறிப்பிடத்தக்கதாகும். மேலும், நிகழ்வு சம்பந்தமான எந்தப் புலனாய்வுகளும் நடத்தப்படவில்லை. நடைபெறும் விசாரணையில் பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்கா இடைநிறுத்தம் செய்யப்படவும் இல்லை. ஆகக் குறைந்தது, நாசகாரத் தடுப்புப் பிரிவுக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென ஒருவர் எதிர்பார்த்திருக்கக் முடியும். பொலிசுப் படிநிலை அமைப்பு இது சம்பந்தமாக எடுத்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்த நிகழ்வுபற்றி பொலிசு நிலையத்தின் சிரேட்ட உத்தியோகத்தர்களான, சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் நளின் தெல்கொ, உ.பொ.அ.ராஜா டயஸ் மற்றும் களனிப் பிரிவு எந்த சிரேட்ட உத்தியோகத்தரின் கீழ் இருக்கின்றதோ அவரின் கீழ் வரும் பிரதிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னா போன்றோர் இதுபற்றி பூரணமாக அறியாதிருந்தனர். எவ்வாறாயினும், இதுதொடர்பில் அவர்கள் உண்மையாக எடுத்த எந்தப் பயன்மிக்க அல்லது முறையான நடவடிக்கையும் ஆணைக்குழுவுக்கு விளக்கம் அளிப்பதற்கு அவர்களால் முடியவில்லை.

இந்தக் காரணங்களைக் கருத்திற்கொண்டு பொலிசுச் சார்ஜன்ட் ரத்நாயக்காவினால் அறிவிக்கப்பட்ட நிகழ்வின் கூற்றை மறுப்பதற்கு மேலாக ஜினேயுக்கு உண்மையாக என்ன நடந்தது? என்பதை பி.பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னா, சி.பொ.அ. நளின் தெல்கொட மற்றும் உ.பொ.அ.ராஜா டயஸ் போன்றோர் அறிந்திருந்தனர் என்பதையும் அவர்கள் அதை மன்னித்து விட்டனர் என்பதையும் நாம் உணர்கின்றோம். பட்டலந்த விவகாரம்பற்றிய முன்னைய அத்தியாயமொன்றில் நாம் குறிப்பிட்டபோது குறிப்பிட்ட காலப்பகுதியில் "சந்தேகநபரின் ஒழிப்பு" என குறிப்பீடு செய்யப்பட்டிருந்தது சந்தேகநபரின் "கருத்தொன்றிய காணாமல்போதல்" ஒன்றாகவே ஜினேயுக்கு நடந்ததும் காணப்படுகின்றது. அதை விதிமுறையான அமைப்பில் முன்வைப்பதற்கு நாசகாரத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களினால், ஜினே சட்டத்துக்குப் புறம்பான முறையில் கொல்லப்பட்டு இருக்கின்றார் என்ற முடிவுக்கு நாம் வருகின்றோம். எவ்வாறாயினும், ஜினேயின் கொலையில் பொ.சா.ரத்நாயக்காவும் தொடர்புற்றிருக்க முடியும் எனத் தோன்றுகின்றது என்பதைக் குறிப்பிடுவதற்கு மேலாக கொலையில் பங்கெடுத்துக்கொண்ட உத்தியோகத்தர்களின் அடையாளங்களை உறுதிசெய்து கொள்வதற்கு எம்மால் முடியாமல் இருக்கின்றது.

ஜினேயை ஒழிப்பதற்கான உள்நோக்கம்மீது சுருக்கமாக கருத்துரையளிப்பதற்கு நாங்கள் இப்போது நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். பிரியதர்ஸனாவையும், ஜயசிங்காவையும், ஜினே என்பவர் மட்டுமே ஆவணப்பத்திரத்தில் இருந்தவாறு குற்றத்தில் மாட்டினார் எனச் சார்த்தப்பட்டுள்ளது. உ.பொ.அ.பீரிஸ், பி.ப.விக்கிரமசிங்கா ஆகியோரினதும் மெரில் குணரத்னா, நளின் தெல்கொட ஆகிய சான்றாளர்களின், நலன்களைப் பேணிக்காத்த வழக்குரைஞரின் நிலைப்பாடு யாதெனில், தரைப்படையினால் ஜினே என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பிரியதர்ஸனா அறிந்துகொண்டபடியாலும், ஜினே என்பவர் கூறப்போனால், இரகசியத்தை வெளியிடுவார் எனத் தாம் அச்சமுற்றபடியாலும், பிரியதர்ஸனா மற்றும் பிரியதர்ஸனாவின் செயல்முறை விருப்பத்தின்பேரில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்திலிருந்து 1990 பெப்புரவரி 20 தேதியளவில் காணாமல் போயுள்ளார் என்பதாகும். சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீதான தாக்குதலில் அவர் ஈடுபட்டிருந்தார் என ஜினே குற்றத்தை ஒப்புக்கொள்வார் எனவும், அங்ஙனம் செய்யும்போது பிரியதர்ஸனாவும் குற்றத்தில் சிக்கிவிடுவார் என்பதுவும் அதன் தாற்பரியமாகும். மேலும், ஜினே, ஜயசிங்காவையும் குற்றத்தில் மாட்டிவிடுவார் எனவும் அதனால் ஜயசிங்காவின் கைது செய்தலும் தடுத்துவைத்தலும் நியாயப்படுத்தப்படலாம் என்பதும் அதன் தாற்பரியமாகும்.

ஜினே (சார்த்தப்பட்ட அவரது குற்றஒப்புதலின் அடிப்படையில்) குற்றவியல் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு உயிருடன் இருந்திருப்பின் குறிப்பிட்ட ஒப்புதல் சம்பந்தப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகள்பற்றி வழக்கு விசாரணையில் அவர் நிச்சயமாகச் சான்றளித்திருப்பார். அவர், அத்தகைய ஒரு குற்றஒப்புதலைச் செய்தாரா இல்லையா என்பதையும் சான்றளித்திருப்பார். சார்த்தப்பட்ட குற்றஒப்புதலின் உண்மைத்தன்மை அல்லது அதன் மறுபக்கம் பற்றியும் அவர் சுட்டிக்காட்டியிருக்க முடியும். விசாரணை நீதிமன்றம்(குற்றம்சாட்டப்பட்ட ஜினேயின் சாட்சியை மற்றும் அவர் சமர்ப்பித்திருக்கக்கூடிய ஏனைய சான்று) ஜினேயின் சார்த்தப்பட்ட குற்றஒப்புதல் உண்மையல்ல என்றும் அல்லது ஜினே அத்தகைய குற்றஒப்புதலை என்றுமே செய்யவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தால், நிலைமை எவ்வாறு அமைந்திருக்கும்? பிரியதர்ஸனா, ஜயசிங்கா சம்பந்தப்பட்ட உத்தியோகபூர்வ நிலைமை தொடர்பான நிலைப்பாடு எவ்வாறு அமைந்திருக்கும்?

மேலும், ஜினே தனது கூற்றை அளிப்பதற்கு நீதிமன்றமொன்றின் முன் செல்வதற்கு உயிருடன் இருந்திருப்பின் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத் தாக்குதலில் அவரது தொடர்பை அவர் மறுத்திருப்பார். சாந்தலால் என அழைக்கப்படும் இன்னொரு சந்தேகநபர் தாக்குதலில் தனது பங்களிப்பை ஏற்கனவே குற்றஒப்புதல் செய்துள்ளதோடு தாக்குதலில்

களுவாவின்(கோணவல சுனிலின் மைத்துனர்) பங்கும் வெளிச்சத்துக்கு வந்திருக்கும். அதில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதலில் களுவாவினதும் (ஜே.வி.பி.யின் அடையாளத்தைப் பெறாத ஒருவர்) அவரது குழுவினரதும் (சாந்தலால் உட்பட) சம்பந்தத்தை அதிகாரிகள் மூடிமறைத்திருக்கின்றனரா? என்பதை அது அம்பலப்படுத்தி இருக்கலாம். களுவாவுடன் சம்பந்தப்பட்ட கூற்று வெளிச்சத்துக்கு வந்தால் (இப்போது அது இறுதியாக வெளிவந்துள்ளது போல) சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதல் ஜே.வி.பி.யினரால் எடுத்துச்செல்லபட்டது என்பதை பொதுமக்களுக்குக் கூறி அவர்களைத் திருப்திப்படுத்துவது அதிகாரிகளுக்குச் சிரமமானதாக அமைந்துவிடும். ஜினே என்பவருடன் சம்பந்தப்பட்ட பின்னர் நடந்த நிகழ்வுகள், குறிப்பிட்ட அதிகாரிகள் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதில் குறிப்பிட்டவொரு அளவுக்கு வெற்றியடைந்துள்ளனர் என்பதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

**ஜினேக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு ........ சமூகம் அளிக்காமல் தீர்ப்பு வழங்கப்பட்டது ..........**

ஜினேயின் காணாமல்போதலின் பின்னர் ஜினே சம்பந்தப்பட்ட தகவல்களின் தொகுப்புப் புத்தகத்தை (அது உ.பொ.அ.ராஜா டயஸ்சுக்கு அவரது சார்த்தப்பட்ட குற்றஒப்புதலை மட்டும் கொண்டுள்ளது) நாசகாரத் தடுப்பு பிரிவு, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு நிகழ்வுகளின் சாதாரண ஒழுங்கில் முன்வைத்தது. சட்டமா அதிபர் 1993 கொழும்பு - கம்பஹா உயர்நீதிமன்றங்களில் ஜினேயை எழுத்தில் குற்றம் சாட்டினார். கம்பஹா உயர் நீதிமன்றத்தில் தொடக்கப்பட்ட வழக்கின் இலக்கம். 161/93 ஆகும். குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 2(1)(உ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் பயங்காரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 3(ஆ) கீழ், கதுருவஹேனகே ஜினதாசா அல்லது ஜினே என்பவர் 1989 யூலை 01 முதல் 1989 யூலை 17 வரையான காலப்பகுதியில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையம் என அழைக்கப்படும் பொதுச் சொத்துக்குத் தீங்கு விளைவிப்பதற்கு அமரே, பிரியதர்ஸனா, ரணசிங்கா ஆகிய பெயர்கள் கொண்ட நபர்களுடன் சதித்திட்டம் தீட்டியுள்ளார் என எழுத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் இல.6049/93 ஆகும். இந்த வழக்கில் ஜினே என்பவர் அவசரகால ஒழுங்குவிதிகளின் 23 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் (பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளில் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டது) 1987 யூலை 01 முதல் 1988 சனவரி 06 வரையான காலப்பகுதியில் நாரஹேன்பிட்டியைச் சேர்ந்த பந்து என்பவருடன் சட்டரீதியற்ற வழிகள்மூலம் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எத்தனித்தார் என்பதற்காக எழுத்துமூலம் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

வழக்கு இலக்கம். 161/93, 1995 யூலையில் ஆரம்பிக்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்ட ஜினே என்பவர் சமூகம் அளிக்கவில்லை. அவர் பிரதிநிதித்துவப்படுத்தப்படவும் இல்லை. பொலிசினால் பூர்த்தி செய்யப்பட்ட சான்றுகளின்படி ஜினே பொலிசுக் கட்டுக்காப்பிலிருந்து தப்பிவிட்டார் என்பதை நிறுவுவதற்கு வழக்குத்தொடுநர் ஆரம்பத்தில் சான்று சமர்ப்பித்துள்ளார். காணப்படும் சான்றுகளின் அடிப்படையில் ஜினே என்பவர் அவரது சமூகம் இன்மையால் வழக்குத் தொடருவதற்கு(விசாரிப்பதற்கு) விசாரணை நீதிபதிகள் உத்தரவளித்துள்ளனர். இவ்வாறான விசாரணை "வராமையில் விசாரணை செய்தல்" எனக் குறிப்பிடு செய்யப்படுகின்றது. வழக்குத்தொடுநர் அதன்பின் உ.பொ.அ ராஜா டயஸின் முன் சாட்சியத்தைச் சமர்ப்பித்தார். குற்றஒப்புதலின் பதிவின் சான்றை அவர் வழங்கினார். வழமையான அனைத்து விசாரணைகளுக்கும் மாற்றமாக குற்றம்சாட்டப்பட்டவரால் உபொஅத்தியட்சகருக்கு சார்த்தப்பட்டிருக்கின்ற குற்றஒப்புதலில் சான்றைச் சமர்ப்பிப்பதற்கு வழக்குத்தொடுநர் வேண்டப்படுகிறார். அனைத்து வழமையான விசாரணைகளுக்கும் மாற்றமாக இந்த வழக்கில், வழக்குத்தொடுநர் சார்த்தப்பட்ட குற்றஒப்புதலில் உத்தியோகபூர்வ பதிவைச் ...ன்றாக அடையாளப்படுத்த நாடியபோது அதை ஒருவரும் ஆட்சேபிக்கவில்லை. ஏனெனில்

அங்கு குற்றம்சாட்டப்பட்டவர் சமூகம் அளித்திருக்கவில்லை. அத்தோடு அவர், வழக்குரைஞரினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படவும் இல்லை என்பதனாலேயாகும். சாதாரண வழக்கில் குறிப்பிட்டவகையான சான்றுகளை முன்வைப்பதற்கு குற்றம் சாட்டப்பட்டவர் ஆட்சேபணை தெரிவிப்பதற்கு வழக்குரைஞர்பேரில் குற்றஒப்புதலின் ஏற்கத்தக்க தன்மையை விசாரணை நீதிபதி ஏற்கத்தக்க தன்மையில் ஓர் விசாரணை(உண்மை விளம்பல் விசாரணை எனக் குறிப்பிடு செய்யப்படுகின்றது) நடைபெறுதல் வேண்டும். முன்குறிப்பிட்டதுபோல இத்தகைய நிலைமைகளில் குற்றஒப்புதலின் தன்னிச்சையில்லாத் தன்மையை நிரூபிக்கும் பொறுப்பு(அதாவது ஒன்றில் அச்சுறுத்தல், தூண்டுதல் அல்லது வாக்குறுதியின் கீழ் அது பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம்) பயங்கரவாதத் தடுப்புச் சட்ட ஏற்பாடுகளின்வண்ணம், அவசரகால ஒழுங்குவிதிகளின்வண்ணமும் எதிர்வாதியின்மீதே அமைகின்றது. குறிப்பிட்ட சட்டத்தின் கீழ், சட்டக்கடமை அல்லது பொறுப்பு, குற்றமசாட்டப்பட்டவர்மீது (குற்றஒப்புதலின் சாட்சியில் உள்ளவற்றை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு) குற்றஒப்புதலானது தன்னிச்சையில்லா முறையில் செய்யப்பட்டிருக்கலாம் என்பது "நீதிமன்றத்தில் தோன்றுதல்" செய்யப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட காரணங்களால் இந்த வழக்கில் எந்த "உண்மை விளம்பல் விசாரணையும் இல்லை" சமர்ப்பிக்கப்பட்ட ஒரேயொரு சான்று உ.பொ.அ. ராஜா டயஸின் சார்த்துதல்களாகும். காணப்படும் சான்றுகளை மட்டும் கருத்தில்கொண்டு சாட்டப்பட்ட குற்றஒப்புதலின் உள்ளடக்கங்களின் சான்றில் உள்ளவற்றை ஒப்புக்கொள்வதாக வழக்கு விசாரணை நீதிபதி உத்தரவு வழங்கினார். "ஏனையவற்றுக்கிடையில் இவ்வகையான வாக்குமூலத்தினைச் சமர்ப்பிப்பதன்பொருட்டு (சார்த்தப்பட்ட குற்றஒப்புதலின் எழுத்துமூலமான பதிவு சம்பந்தமாக) குற்றஒப்புதலின் தன்னிச்சையில்லாத் தன்மையை வழங்கும் பொறுப்பு குற்றம்சாட்டப்பட்டவர் மீது அமைகின்றது என்பதை அறிவார்ந்த விசாரணை நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். விசாரணையில் குற்றம்சாட்டப்பட்டவர் தோன்றவில்லை. அவரது சார்பில் எந்த பிரதிநிதித்துவமும்கூட இருக்கவில்லை. ஆதலால், இந்தக் குற்றஒப்புதல் சாட்சியத்தை நான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது". அறிவார்ந்த விசாரணை நீதிபதி அதன்பின் குற்றம்சாட்டப்பட்டவர் குற்றமிழைத்ததாகத் தீர்ப்பளித்துத் அவருக்குத் தண்டனைத் தீர்ப்பும் வழங்கினார்.

1995 சனவரியில் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்கு இல.6049/93 ஆரம்பமானது. இந்த வழக்குடன் தொடர்புடைய சூழ்நிலைகள் மேற்குறிப்பட்ட வழக்கை ஒத்ததாகும். குற்றம்சாட்டப்பட்டவர் வராமல் இருந்ததுடன் அவர் பிரதிநிதித்துவப்படுத்தப்படவும் இல்லை. குற்றம் சாட்டப்பட்டவர் பொலிசின் கட்டுக்காப்பிலிருந்து தப்பிக்கொண்டார் என்ற அடிப்படையில் வாக்குத் தொடுநர் சான்றைச் சமர்ப்பித்தார். பின் விசாரணை ஆரம்பமானது. சார்த்தப்பட்ட குற்றஒப்புதல் பதிவுடன் சம்பந்தப்பட்ட விசாரணையின் சான்று சமர்ப்பிக்கப்பட்டது. தட்டச்சாளரினதும் உ.பொ.அ.ராஜா டயஸினதும் சார்த்தப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தை பெண் பொ.கா. 2021 நிமலாவதி ரணசிங்கா சான்றளித்தார். சார்த்தப்பட்ட குற்றஒப்புதலின் உள்ளடக்க சான்றில் உள்ளவற்றை அறிவார்ந்த விசாரணை நீதிபதி அவரது உத்தரவில் ஏற்றுக்கொண்டு, ஏனையவற்றுக்கிடையில் "சார்த்தப்பட்ட குற்றஒப்புதல் ஏற்கத்தக்கதன்று என நிறுவும் பொறுப்பு சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் நியதிகளின்படி குற்றம்சாட்டப்பட்டவர் மீது அமைகின்றது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் அந்தப் பொறுப்பை விடுவிக்கவில்லை. ஆதலால், வாக்குமூலத்தின் உள்ளடக்கத்தின் சான்றை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன்". சொல்லப்பட்ட குற்றஒப்புதலின் அடிப்படையில் அறிவார்ந்த விசாரணை நீதிபதி குற்றம்சாட்டி அவருக்கு 20 வருடக் கடூழியச் சிறைத்தண்டனையை தீர்ப்பளித்து குற்றம் இழைத்தவராகத் தீர்ப்பளித்தார்.

ஆணைக்குழுவினால் விசாரணை செய்த காலப்பிரிவில் மேற்குறிப்பிட்ட விசாரணைகளை உ.பொ.அ.ராஜா டயஸினால் வழகங்கப்பட்ட சான்றிதழுடன் , ஒப்பிட்டு எங்களுக்கு வழங்கப்பட்ட அவரது சான்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களது நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் தற்போதைய விசாரணையில்

அவரது சான்று மட்டுமன்றி பி.ப.விக்கிரமசிங்கா, பொ.சா.ரத்நாயக்கா ஆகியோரது சான்றுகளும் வழக்குரைஞரால் விரிவான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட அறிவார்ந்த விசாரணை நீதிபதிகள் சாட்சிகளினால் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட சான்றுகளின்மீது சட்டத்தினால் நீதி காண்பதற்கு மட்டுமே அவர்கள் வேண்டப்பட்டனரேயன்றி கண்டுபிடிப்புப் பயணம் செய்வதற்கல்ல. (வழக்குத் தொடுநரினால் மட்டுமே இரண்டு வழக்குகளும் குறிப்பிடப்பட்டுள்ளன). எவ்வாறாயினும், நடைபெறும் விசாரணையில் நடவடிக்கைகளுக்கு எதிரான இந்த விசாரணையின் நடவடிக்கையை நாம் உண்மையாக உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்துள்ளோம். ஆட்சேபணையற்ற வெறும் ஒருதலைப்பட்சமான சான்றை எதிர்த்தவாறு விரிவாக பரீட்சிக்கப்பட்ட சான்றின் நன்மை எமக்குக் கிடைத்தது. ஆதலால், (தற்போது ) காணப்படும் சான்றின் அடிப்படையில் இவ்வாணைக்குழுவின் தீர்ப்பு மேற்குறிப்பிட்ட இரு விசாரணை நீதிபதிகளையும் (தகுதியான காரணங்களுக்காக) வேறுபடலாம் என்பது குறிப்பாக சொல்லப்பட வேண்டியதில்லை.

சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீதான சார்த்தப்பட்ட நம்பகமான சான்றின் முழுமைத்தன்மையை நாங்கள் கவனமாகக் கருத்திற் கொண்டுள்ளோம். ஜினேயினால் சார்த்தப்பட்ட குற்றஒப்புதலின் உள்ளடங்களில் உள்ள சொல்லப்பட்ட சான்றை நாங்கள் ஒப்பிட்டு, மதிப்பீடு செய்து, பகுப்பாய்வு செய்துள்ளோம். ஜினேயின் சார்த்தப்பட்ட குற்றஒப்புதலைத் தவிர சான்றின் அனைத்து விடயங்களும் ஒன்றுடனொன்று பூரணமாக ஒத்திசைகின்றன. எவ்வாறாயினும், குற்றஒப்புதலானது, பூரணமாக ஒப்புறுதிப்படுத்தப்படாததாலும், நிரூபிக்கத்தக்க பொய்மைகளைக் கொண்டதாகவும் இருப்பதாகத் தெரியவந்தது. ஆதலால், குறிப்பிட்ட குற்றஒப்புதலானது, சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீதான தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளின் பொய்யான ஒரு கூற்றென நாம் உறுதியான கருத்தைக் கொண்டுள்ளோம். ஆதலால், ஜினேயின் சார்த்தப்பட்ட குற்றஒப்புதலின் உள்ளடக்கங்கள் புனையப்பட்டவையாகும். குறிப்பிட்ட சட்டரீதியற்ற நடத்தையில் உ.பொ.அ.பீரிஸ்; உ.பொ.அ.ராஜா டயஸ், பி.ப.விக்கிரமசிங்கா போன்றோர் நேரடியாகச் சம்பந்தப்பட்டு இருக்கின்றனர்.

குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு இத்தகைய சட்டரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏன் அவசியமாக இருந்தது? ரோஹித பிரியதர்ஸனா பற்றிய அத்தியாயத்தின் முடிவுப் பகுதியில் குறிப்பிட்டதுபோல பிரியதர்ஸனாவின் காணாமல்போதல், அவரது மரணம் ஆகியவற்றுக்குப் பின், களனிப் பிரிவின் நாசகாரத் தடுப்புப் பிரிவின் முகாமைத்துவ அதிகாரங்களைக் கொண்டவர்கள் தமது சுயவிருப்பத்தின்பேரில் சப்புகஸ்கந்த பொலிசுப் பிரிவிலிருந்து பிரியதர்ஸனா காணாமல் போனார் என்ற வகையில் வாக்குமூலமொன்றைப் புனைவதற்குச் சதித்திட்டம் தீட்டினர். அவ்வாறு காணாமல் போவதற்கு திருட்டுத்தனமாக பிரியதர்ஸனாவுக்கு உள்நோக்கமொன்று அல்லது காரணமொன்று இருந்ததென்பதை அவர்கள் இறுதியில் அடையாளம் கண்டு சுட்டிக்காட்டியுள்ளனர். பிரியதர்ஸனா நம்பிக்கையில்லாத நபர் என்றும் முறையற்ற நடத்தை கொண்டவர் என்றும் அத்தோடு பொலிசுச் சேவையில் பதவி வகிப்பதற்குக்கூடத் தகுதியற்றவர் என்றும் மேலும் அவர்களுக்கு சுட்டிக்காட்ட வேண்டிய தேவையொன்றிருந்தது. பிரியதர்ஸனாவின் காணாமல்போதலுடன் சம்பந்தப்பட்ட அவர்களது தெளிவான செயலின்மை தொடர்பில் பொலிசின் உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் பொலிசு உயர்படிநிலைப் பதவியினருக்கு எதிராக எழுகின்ற விமர்சனத்தையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பொலிசுப் படிநிலைப் பதவியினருடன் தொடர்புகொண்டிருந்த நபர்கள் மற்றும் காணாமல்போதலுடன் சம்பந்தப்பட்ட ஏனைய செல்வாக்கு மிக்க நபர்களுக்கு எழுகின்ற சந்தேகத்தை மறைக்க வேண்டியதும் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு தேவையாக இருந்தது. ஆதலால், முற்றிலும் வித்தியாசமானதொரு தோற்றத்தைச் சித்தரிக்க வேண்டியது அவசியமானதாக மாறியது. அதிகாரிகள், ஜினே (அவருக்கு யாருடன் தொடர்பு இருந்ததோ அவர்களுடன்) கைது செய்யப்பட்டு இருக்கிறார் என்பதை அறிந்தபோதிலும் பிரியதர்ஸனா சுயஉள்நோக்கத்தின்பேரில்

திருட்டுத்தனமாகச் சென்றுள்ளார் என அவ்வாறு சித்தரித்துக் காட்ட வேண்டிய அடிப்படை யாதெனில் அவர் (ஜினே) காலக்கிரமத்தில் அவரை(பிரியதர்ஸனாவை) சிக்கலில் மாட்டிவிட முடியும் என்ற பயத்தினாலேயாகும். சம்பந்தப்பட்ட பிரியதர்ஸனாவின் காணாமல்போதலிலும் கொலையிலும் உண்மையாகத் தொடர்புடையவர்கள் பொலிசின் உள்ளேயும் வெளியேயும் இருந்தவர்கள் என்பது பூரணமாக மறைக்கப்பட்டு இந்தச் சித்தரிக்கப்பட்ட தோற்றம் அவசியமானதாக அமைந்திருக்கலாம்.

# அத்தியாயம் IX
## காண்புகள்

ஆணைப்பத்திரத்தில் தரப்பட்டுள்ளவாறு விசாரணை நியதிகளின்வண்ணம் எமது காண்புகளைக் கீழே பட்டியல் படுத்தியுள்ளோம். இந்தக் காண்புகள் இவ்வாணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட சகல சான்றுகளையும் விசாரணையின்போது ஆணைக்குழுவால் ஆராயப்பட்ட நம்பகமான ஏனைய விடயங்களையும் பாரதூரமாகக் கவனத்துக்கு எடுத்த பின்னரே செய்யப்பட்டுள்ளன. முன்னைய அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள யாவும் இந்த காண்புகளைப் பெறுவதற்கு கருத்திற் கொள்ளப்பட்ட முக்கியமான சான்றுகளினதும் விடயங்களினதும் பொழிப்பாகும். இந்தக் காண்புகளைச் செய்வதற்கான காரணங்களை முற்றாகப் புரிந்துகொள்ளும்பொருட்டு, இந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட விசாரணை நடவடிக்கைகள் முழுவதையுமே ஆராய்ந்து பார்க்கும்படி மேதகையீரைப் பணிவாகக் கேட்க விரும்புகின்றோம்.

**(அ) 1990 பெப்புரவரி 20 ஆந் திகதியன்று அல்லது அத்தேதியளவில் சப்புகஸ்கந்த பொலிசு நிலைய உதவிப் பரிசோதகர் ரோஹித பிரியதர்ஸனா மறைந்துபோனமை தொடர்பான சந்தர்ப்ப சூழ்நிலைகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அத்தகைய மறைவுக்குப் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும், அதற்கு ஒத்தாசையாகவும் உடந்தையாகவும் இருந்த ஆளும் அல்லது ஆட்களும்.**

மேலே 6, 7 ஆகிய அத்தியாயங்களில் உதவிப் பொலிசுச் சோதனைகாரர் ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல்போனமைக்கு இட்டுச்சென்ற சந்தர்ப்ப சூழ்நிலைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. எனவே, இதனகத்தில் சொல்லப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளை மீளவும் எடுத்துரைக்க கருதமாட்டோம்.

எவ்வாறாயினும், ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல்போனமையோடு தொடர்புகொண்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளின் முழுமையான விபரத்தைப் புரிந்துகொள்வதற்கு சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது மேற்கொண்ட தாக்குதலின் பின்னணியினையும் சொல்லப்பட்ட தாக்குதல் தொடர்பில் மேற்கொண்ட புலனாய்வுகள் பற்றியும் கதுருவஹேனகே ஜினதாச அல்லது ஜினே என்பவரின் தடுத்துவைப்பு புலனாய்வோடும் அவர் காணாமல் போனமையைக் குறிப்பிட விரும்புகின்றோம்.

சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது மேற்கொண்ட தாக்குதல்குறித்து நாங்கள் பின்வரும் அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளோம்-

(I) ஆட்களின் குழுவொன்று 1989 யூலை 16 ஆந் திகதி விடியற்காலையில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது தாக்குதலொன்றை ஆரம்பித்தது.

(II) சொல்லப்பட்ட பொலிசு நிலையத்தின் மேல் மாடியில் அமைந்திருந்த மலசலகூடமொன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டொன்றை வெடிக்கச் செய்வதன்மூலம் ஏற்பட்ட வெடிப்புடன் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான வெளிப்புறத் தாக்குதல் ஆரம்பமானது.

(III) சொல்லப்பட்ட தாக்குதலின்போது ஏற்பட்ட காயங்கள் காரணமாக சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்த பொலிசுச் சோதனைகாரர் லலித் மகாநாம உள்ளிட்ட மூன்று(03) பொலிசு உத்தியோகத்தர்கள் மரணம் அடைந்தனர்.

(IV) சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தைச் சேர்ந்த பொலிசு உத்தியோகத்தர்கள் தாக்குதலை நடாத்தியவர்கள்மீது மேற்கொண்ட எதிர்த்தாக்குதலின்போது ஏற்பட்ட காயங்கள் காரணமாக சுமித் பெரேரா அல்லது களுவா எனப் பெயருடைய உள்ளிட்ட இரண்டு தாக்குதல்காரர்கள் மரணம் அடைந்தனர்.

(V) மேல் சொல்லப்பட்ட சுமித் பெரேரா என்பவர் சுனில் பெரேரா அல்லது கோணவல சுனில் என்பவருடைய மருமகனாவார். களனிப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமித் பெரேரா மற்றும் சுனில் பெரேரா ஆகிய இருவர் அங்கம் வகித்த முழுக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அப்போது ஆட்சிபுரிந்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

(VI) சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதல் சம்பந்தமாக அதன்பின்னர் மேற்கொண்ட புலனாய்வுகள் மிகவும் அவசரமான நிலையில் மேற்கொள்ளப்பட்டனவேயன்றி உண்மையாகக் குற்றத்தைப்புரிந்தவர்களை நீதியின் முன்னிலையில் கொண்டுவரும் உண்மையான நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டனவல்ல.

(VII) தாக்குதலின் பின்னர் தப்பித்துச் சென்ற ஏனைய தாக்குநர்களின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை.

(VIII) ஆரம்பப் புலனாய்வாளர்கள் சுமித் பெரேரா அல்லது களுவாவின் அடையாளத்தை வெளிப்படுத்துவதை வேண்டுமென்றே தடுத்திருந்தனர்.

(IX) ஆரம்பப் புலனாய்வு மேற்கொண்டபோது, களனி பிரதேச நாசகாரத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களால் சாந்தலால் என்றழைக்கப்பட்ட சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டார். முன்னர் குறிப்பிட்ட சுமித் பெரேரா அல்லது களுவா என்பவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட வெடிகுண்டொன்றை பொலிசு நிலையத்தில் வைப்பதன்மூலம் முன்னர் கூறிய குற்றத்தில் தமக்குச் சம்பந்தம் உண்டென்பதை வினாவுதலின்போது அவர் ஒப்புக்கொண்டார்.

(X) ஆரம்பப் புலனாய்வாளர்கள் இந்தச் சான்றினை வெளிக்கொணர்ந்த பின்னர் அதனை மறைத்தனர். பின்னர் சொல்லப்பட்ட சந்தேகநபர் பொலிசுக் கட்டுக்காப்பில் இருந்தபோது மிகவும் ஐயத்துக்கிடமான சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் காணாமல் போனார்.

(XI) சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது தாக்குதல் நடத்தியவர்களின் சரியான அடையாளங்களை மறைத்தடக்கும் நோக்கம் காரணமாகவும் ஏனைய ஆட்களை அதில் சம்பந்தப்படுத்த அவர்கள் கருதிய காரணத்தினாலும் ஆரம்பப் புலனாய்வாளர்கள் சாந்திலால் என்பவருக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடுப்பதை வேண்டுமென்றே கைவிட்டனர்.

இந்தப் பின்னணியேலேயே உதவிப் பொலிசுச் சோதனைகாரர் ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல்போனமையோடு தொடர்புகொண்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளை நேரடியாக எடுத்துரைக்க நாங்கள் விரும்புகின்றோம்-

(I) ரோஹித பிரயதர்ஸனா இலங்கைப் பொலிசுப் படையைச் சேர்ந்த உற்சாகமுள்ள இளைய உத்தியோகத்தரொருவராவர். அவர், நேர்மையானவராகவும் அஞ்சாநெஞ்சம் கொண்டவராகவும் இருந்தார். களனிப் பிரதேசத்தில் தீர்க்கப்படாத

குற்றச்செயல்களுக்குத் தீர்வுகளைக் காண்பதில் அவர் வெற்றி கண்டார். தமது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றும்போதும் சந்தேகநபர்களைக் கைதுசெய்யும்போதும் கொடுங்குற்றவாளிகளின் அரசியல் உறவுகளை மதிக்காதவராகவே அவர் விளங்கினார்.

(II) சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது தாக்குதல் நடாத்தப்பட்ட காலத்திலும் 1990 பெப்புரவரி மாதம் 20 ஆந் திகதி அவர் காணாமல்போன காலம்வரை ரோஹித பிரியதர்ஸனா சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு இணைக்கப்பட்டிருந்தார்.

(III) சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீது தாக்குதல் இடம்பெற்ற நேரத்தில் ரோஹித பிரியதர்ஸனா ஏனைய உத்தியோகத்தர்களுடன் உத்தியோகபூர்வ கடமையின்பேரில் பொலிசு நிலையத்துக்கு வெளியே சென்றிருந்தாரெனினும், வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தைக் கேட்டவுடனேயே பொலிசு நிலையத்துக்குத் திரும்பி வந்துள்ளார்.

(IV) சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதலிலும் அதனுடன் சம்பந்தப்பட்ட சதித்திட்டத்திலும் எவ்விதத்திலாவது ரோஹித பிரியதர்ஸனா சம்பந்தப்பட்டிருந்தார் என்பதற்கான சான்றுகள் எவையேனும் இல்லை.

(V) 1990 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதத்தின் முற்பகுதியில், ஒரு குறிப்பிட்ட திகதியன்று பாரதூரமான குற்றங்களைப் புரிந்தவரான ரியூடர் பெரேரா என்னும் பெயரைக்கொண்ட சந்தேகநபரொருவரை ஏனைய பொலிசு உத்தியோகத்தர்களோடு ரோஹித பிரியதர்ஸனா கைதுசெய்தார். ரியூடர் பெரேராவும் மேலே குறிப்பிட்ட சுனில் பெரேரா அல்லது கோணவல சுனில் என்பவரின் மருமகனொருவராவர்.

(VI) மேலே குறிப்பிட்ட ரியூடர் பெரேரா அவர்கள் கைதுசெய்யப்பட்டு சில தினங்களுக்குள்ளே சொல்லப்பட்ட சந்தேகநபர் பொலிசுக் கட்டுக்காப்பில் இருந்தபோது காணாமல் போனார். எவ்வாறாயினும், சந்தேகநபர் காணாமல் போன சரியான சூழ்நிலைகள் நிலைநாட்டப்படவில்லை. சொல்லப்பட்ட சந்தேக நபர் காணாமல் போனமையையடுத்து ரியூடர் பெரேராவின் காணாமல்போனமைக்கு ரோஹித பிரியதர்ஸனா பொறுப்பானவர் என சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அக்கறைகொண்ட மற்றும் விசனமடைந்த ஆட்களால் குற்றச்சார்த்துரைகள் செய்யப்பட்டன.

(VII) ரியூடர் பெரேராவின் நெருங்கிய உறவினர்கள் ரியூடர் கைது செய்யப்பட்டுள்ளார் என திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு முறைப்பாடு செய்தனர்.

(VIII) 1990 பெப்புரவரி மாதம் 20 ஆந் திகதி இரவில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பான பொலிசுச் சோதனைகாரர் கீர்த்தி அத்தபத்து பியகம விலேஜ் ஹோட்டலில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பங்குகொள்வதற்குப் பொலிசு நிலையத்தை விட்டுச் சென்றிருந்தமையால் ரோஹித பிரியதர்ஸனா சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் நிலையக் கடமை உத்தியோகத்தராகக் கடமைபுரிந்தார்.

(IX) பெப்புரவரி 20 ஆந் திகதி இரவில் பி.ப.8.00 மணியளவில் மேலே குறிப்பிட்ட பொலிசுச் சோதனைகாரர் அத்தபத்து சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்திலிருந்த ரோஹித பிரியதர்ஸனாவுடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பியகம விலேஜ்

ஹோட்டலுக்கு வரும்படி ரோஹித பிரியதர்ஸனாவுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

(X) உடனே அதன்பின்னர் ரோஹித பிரியதர்ஸனா பியகம விலேஜ் ஹோட்டலுக்குச் செல்லும்போது சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். அப்போதுமுதல், ரோஹித பிரியதர்ஸனா சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்கு அல்லது தமது வதிவிடத்துக்குத் திரும்பி வரவில்லை.

(XI) காணாமல் போன ரோஹித பிரியதர்ஸனாவை எங்கு உள்ளார் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அல்லது அவருக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்குப் பொலிசு அதிகாரிகள் எவரும் பொருத்தமான முயற்சி எதையும் எடுக்கவில்லை.

(XII) பெப்புரவரி 23 ஆந் திகதியில் அல்லது அதற்கு அண்மித்த காலத்தில் பாலியகொடை பொலிசு நிலையத்துக்குப் பின்னால் களனி கங்கையில் மிதந்து கொண்டிருந்த ரோஹித பிரியதர்ஸனாவின் பிரேதம் கண்டுபிடிக்கப்பட்டது.

(XIII) ரோஹித பிரியதர்ஸனாவின் மரணம்பற்றிய புலனாய்வுகளை மேற்கொள்ளுவதற்குப் பொருத்தமான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. என்றாலும், பொலிசுச் சேவையைச் சேர்ந்த அவருடைய நண்பர்கள்(அஜித் ஜயசிங்கா உள்ளிட்டவர்கள்) அவரைக் கண்டுபிடிக்கவும் அவருடைய மரணத்துக்குப் பொறுப்பானவர்கள் யாவர் என்பதை உய்த்தறியவும் பெருமுயற்சிகள் எடுக்கப்பட்டன.

(XIV) ரோஹித பிரியதர்ஸனா படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதற்கு களனி பிரதேசத்தைச் சேர்ந்த பொலிசு அதிகாரிகள் மறுத்தனர்.

(XV) அதற்குமாறாக, பிரியதர்ஸனா காணாமல்போனமைக்கும் அடுத்தபடியாக மரணம் அடைந்தமைக்கும் ஏதுவான உண்மையான சந்தர்ப்ப சூழ்நிலைகளை மறைத்தடைக்கும்நோக்கில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மறைப்புச் செயற்பாடுகளை ஆரம்பித்தனர்.

(XVI) ரோஹித பிரியதர்ஸனா "பதவிநீக்கம்" செய்யப்பட்டுள்ளார் என்பதைக் குறிக்கும் நடவடிக்கைகளும் அந்த மறைப்புச் செயற்பாடுகளில் அடங்கின.

(XVII) ரோஹித பிரியதர்ஸனா தமது விருப்பத்தின்பேரிலேயே காணாமல் போயுள்ளார் என்பதற்குப் பொலிசு அதிகாரிகள் பலத்த பிரசாரம் கொடுத்தனர். அக்காலத்தில் பொலிசுக் கட்டுக்காப்பில் இருந்த கதுருவஹேனகே ஜினதாச என்னும் சந்தேகநபரொருவர் தம்மைச் சம்பந்தப்படுத்தும் சான்றுகளை அம்பலப் படுத்துவார் என்ற பயத்தினால் அவர் காணாமல் போனார் என்பதை எடுத்துரைக்க அவர்கள் முயன்றனர்.

(XVIII) கதுருவஹேனகே ஜினதாச அல்லது ஜினே என்பவர் களனிப் பிரிவுக் குற்றத்தடுப்புப் பிரிவின் கட்டுக்காவலில் 1989 ஆண்டிலிருந்து 1990 வரையான குறிப்பிட்டவொரு காலப்பகுதியில் இருந்தார் என்பதைக் கிடைத்துள்ள சான்றுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

(XIX) குற்ற ஒப்புதல் பான்மையைக்கொண்ட ஜினதாசவின் வாக்குமூலம் பற்றிய சார்த்தப்பட்ட பதிவுக்கு இட்டுச்சென்ற சம்பவங்களின் வரன்முறையோடு தொடர்புகொண்டவாறு கிடைத்துள்ள விடயங்கள் பொய்யானவைகளாகும்.

(XX) சொல்லப்பட்ட குற்றஒப்புதலானது தன்விருப்பத்தின்பேரில் செய்யப்பட்ட தொன்றென்பதை நிலைநாட்டுவதற்கு, சார்த்தப்பட்ட குற்றஒப்புதல் பதிவுடன் தொடர்பில் கிடைத்துள்ள சான்றுகள் முற்றிலும் போதாதவைகளாகும்.

(XXI) சொல்லப்பட்ட வாக்குமூலத்தில் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின்மீதான தாக்குதல்பற்றிய சந்தர்ப்பசூழ்நிலைகளோடு தொடர்புகொண்ட, நடந்தவற்றுக்கு மாறான பொய்கள் அடங்குகின்றன.

(XXII) ரோஹித பிரியதர்ஸனா, அஜித் ஜயசிங்கா ஆகிய உதவிப் பொலிசுச் சோதனைகாரர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக எத்தகைய சட்டவிரோதமான அல்லது தகாத செயற்பாடுகளோடு சம்பந்தப்பட்டு இருந்தார் அல்லது தொடர்பு கொண்டிருந்தார் என்ற முடிவுக்கு வருவதற்கு சொல்லப்பட்ட வாக்குமூலம் முற்றாகவே நம்பமுடியாத நிலையில் அமைந்துள்ளது. சொல்லப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் • சப்புகஸ்கந்த பொலிசு நிலையத் தாக்குதலில் எவ்விதத்திலேனும் சம்பந்தப்பட்டிருந்தனர் அல்லது வெடிகுண்டொன்றை வைப்பதன்மூலம் அல்லது/அத்துடன் ஜே.வி.பி தீவிரவாதியொருவருக்கு வெடிமருந்துகள் கொடுப்பதன் மூலம் வேண்டுமென்றே அல்லது வேறுவிதமாக உதவிபுரிந்தனர் அல்லது உடந்தையாக இருந்தனர் எனவும் அல்லது ஜே.வி.பி யின் செயற்பாடுகளுக்கு உதவினர் எனவும் நாம் முடிவுக்கு வரக்கூடிய நம்பத்தகுந்த சான்றுகள் எவையேனும் இல்லை.

(XXIII) பொலிசு உதவிச் சோதனைகாரர் ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல் போனமைக்குரிய உத்தியோகபூர்வமான கூற்று பொய்யானதாகும். சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதல்பற்றி விசேடமாக பிரியதர்ஸனாவைச் சம்பந்தப்படுத்தும் சான்றுகளைப் பொலிசாருக்கு சந்தேகநபர் கதுருவஹேனகே ஜினதாச அம்பலப்படுத்துவார் என்ற அச்சம் காரணமாக, 1990 பெப்புரவரி மாதம் 20 ஆந் திகதி இரவில் ரோஹித பிரியதர்ஸனா சடுதியாக பொலிசுச் சேவையை விட்டகன்றார் என்ற கோட்பாட்டுக்கு ஆதாரமான எந்தவித அடிப்படையும் இல்லை.

(XXIV) சொல்லப்பட்ட ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல்போதலைச் செய்தலோடு உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் கீர்த்தி அத்தபத்து நேரடியாகவே சம்பந்தப்பட்டுள்ளார்.

(XXV) உதவிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னா, சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொட, உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் ராஜா டயஸ், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் கீர்த்தி அத்தபத்து ஆகியோர் சொல்லப்பட்ட ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல்போதலோடு தொடர்புடைய சரியான நிகழ்வுகளை, சொல்லப்பட்ட உத்தியோகத்தர் காணாமல் போனமைக்கு உடனடி பிற்பட்ட காலப்பகுதியிலும் சொல்லப்பட்ட காணாமல்போனமைபற்றி இவ்வாணைக்குழுவால் விசாரணை நடாத்தப்பட்ட காலப்பகுதியிலும் மறைத்தடக்கியுள்ளனர்.

(XXVI) பிரதிப் பொலிசுமா அதிபர் மெரில் குணரத்னா, சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொட, உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் ராஜா டயஸ் ஆகியோர் சொல்லப்பட்ட ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல்போனமை குறித்து

சட்டத்தினால் தேவைப்பட்ட பொருத்தமானதும் சட்டமுறையானதுமான நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர்.

(XXVII) உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸ், ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல்போனமையோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டு உள்ளார். இதற்கான சான்றுகள் பிரதானமாக, மேலே குறிப்பிட்ட ரோஹண பிரியதர்ஸனா காணாமல் போனதன் பின்னர் அவர் எங்கிருக்கின்றார் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு நேரான நடவடிக்கைகளை எடுத்த அஜித் ஜயசிங்காவை கடத்திச் சென்று தடுத்துவைத்த காரணத்தைக்கொண்டு அறியப்படலாம்.(அடுத்த விசாரணை நியதியின் கீழ் இந்த விடயம் ஆராயப்படும்).

**(ஆ) 1990 பெப்புரவரி 24 ஆந் திகதியன்று அல்லது அத்தேதியளவில் பாலியகொடை பொலிசுநிலைய உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்கா கைதுசெய்யப்பட்டமை அத்துடன் அதனையடுத்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டமை என்பன தொடர்பிலான சந்தர்ப்ப சூழ்நிலைகளும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவ்வாறு கைதுசெய்யப்படுவதற்கும் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதற்கும் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும் சொல்லப்பட்ட அஜித் ஜயசிங்கா கைதுசெய்யப்படுவதற்கும் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதற்கும் ஒத்தாசையாகவும் உடந்தையாகவும் இருந்த ஆட்கள்.**

(I) 1990 பெப்புரவரி மாதம் 24 ஆந் திகதிக்கு முந்திய காலப்பகுதியில் உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்கா தவறாக அமையக்கூடிய எந்தவிதச் செயலையும் புரிந்திருக்கவில்லை அல்லது அத்தகைய செயலோடு சம்பந்தப்படிருக்கவில்லை. அதன்வண்ணம், 1990 பெப்புரவரி 24 அந் திகதியிலிருந்தவாறு சொல்லப்பட்ட அஜித் ஜயசிங்காவை கைதுசெய்வதற்கான எவ்வித நியாயமும் இருக்கவில்லையென இந்த ஆணைக்குழு அபிப்பிராயப்படுகின்றது.

(II) 1990 பெப்புரவரி 24 ஆந் திகதிக்கு உடனடி முந்திய காலப்பகுதியில் உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்கா, உதவிப் பரிசோதகர் ரோஹித பிரயதர்ஸனா திடீரெனக் காணாமல் போனமைக்கு இட்டுச்சென்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் 1990 பெப்புரவரி 20 ஆந் திகதியன்று சொல்லப்பட்ட ரோஹித பிரியதர்ஸனா காணாமல்போன பின்னர் அவருக்கு என்ன நடந்தது என்பதை அறியவும் தீவிரமானதும் உண்மையானதுமான அக்கறையைக் காட்டினார்.

(III) மேற்போந்த பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்காவின் நடத்தையை, பொலிசுமா அதிபர் எம் எம் ஆர்(மெரில்) குணரத்னா, சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொட, உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸ், பரிசோதகர் கீர்த்தி அத்தபத்து ஆகியோர் உள்ளிட்ட சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்கள் குரோத மனப்பான்மையுடன் நோக்கினர்.

(IV) களனிப் பிரதேசத்தில் உள்ள பொலிசுப் படிநிலையத்தாரின் அறிவுறுத்தல்கள்மீது அல்லது அறிவுறுத்தல்கள் காரணமாக, ரோஹித பிரியதர்ஸனாவை காணாமல்போகச் செய்துள்ளனர் என்பது உதவிப் பரிசோதகர் ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல்போனமைபற்றி அஜித் ஜயசிங்கா கொண்டிருந்த நம்பிக்கையாகும். 1990 பெப்புரவரி மாதம் 20 ஆந் திகதிமுதல் 24 ஆந் திகதிவரையான காலப்பகுதியில் அஜித் ஜயசிங்கா தாம் கொண்டிருந்த

நம்பிக்கைபற்றி களனி பிரதேசத்தைச் சேர்ந்த பொலிசு உத்தியோகத்தர்களுக்குத் தெரிவித்தார்.

(V) 1990 பெப்புரவரி 24 ஆந் திகதியன்று தெமட்டக்கொடை புகையிரப்பாதைக் கடவைக்கு அருகில் உள்ள இடத்தில் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸ்சின் தலைமையிலான பொலிசு உத்தியோகத்தர்கள் குழுவொன்று உதவிப் பொலிசுப் பரிசோதகர் அஜித் ஜயசிங்காவைக் கடத்தி(இது சட்டவிரோதமான கைதுசெய்தலுக்கு ஒப்பானதாகும்) அவரைப் பாலியகொடை பொலிசு நிலையத்துக்குக் கொண்டு சென்றது. இந்த ஆட்கடத்தலில் பங்குகொண்ட ஏனைய பொலிசு உத்தியோகத்தர்களாக பொலிசு சார்ஜன்ட் ஜயரத்னா, பொலிசு சார்ஜன்ட் லக்ஸ்மன், பொலிசு சார்ஜன்ட் ரணதுங்கா, பொலிசு சார்ஜன்ட் ரத்நாயக்கா, பொலிசுக் கொன்ஸ்டபிள் ரஞ்சித் ஆகியோர் இருந்தனர். மேலே குறிப்பிட்ட பொலிசு உத்தியோகத்தர்களைத் தவிர ராசேந்திரா என்ற பெயருடைய குடிமகன் ஒருவரும் ஆட்கடத்தலில் பங்குபற்றினார். ஆட்கடத்தல் இடம்பெற்ற காலத்தில் அல்லது அதன்பின்னர் அஜித் ஜயசிங்காவைக் கைதுசெய்வதற்கான எதுவித நியாயமும் இருக்கவில்லை என நாங்கள் உறுதியாகக் கருதுகின்றோம். அரசியலமைப்பின் 13(1) உறுப்புரையினால் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள அஜித் ஜயசிங்காவின் அடிப்படை உரிமைகள் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸினால் மீறப்பட்டிருந்தன.

(VI) 1990 பெப்புரவரி 24 ஆந் திகதியில் உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்கா பாலியகொடை பொலிசு நிலையத்தில் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸின் உத்தரவின்பேரில் சில மணித்தியாலயங்கள் வரை தவறாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இக்காலப்பகுதியில் அஜித் ஜயசிங்காவைத் தடுத்து வைப்பதற்கான எந்தவொரு நியாயமும் இருக்கவில்லை.

(VII) 1990 பெப்புரவரி 24 ஆந் திகதியிலிருந்து ஒக்தோபர் 27 ஆந் திகதிவரை உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸின் உத்தரவின்பேரில் உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்கா எந்தவித நியாயமும் இன்றி பியகம பொலிசு நிலையத்தில் தவறாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்தத் தவறான சிறைப்படுத்தலானது சொல்லப்பட்ட அஜித் ஜயசிங்காவைச் சட்டவிரோதமாகத் தடுப்புக்காவலில் இடுவதற்குச் சமமானதாகும். அரசியலமைப்பின் 13(2) ஆம் உறுப்புரையின் கீழான அவருடைய அடிப்படை உரிமைகள் இக்காலப்பகுதியில் நேரடியாகவே மீறப்பட்டிருந்தன.

(VIII) மேலே குறிப்பிட்ட உதவிப் பரிசோதகர் ஜயசிங்காவின் சட்டவிரோதமான கைதுசெய்தலுக்கும் சட்டவிரோதமான தடுப்புக்காவலில் வைத்தலுக்கும் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸ் நேரடிப் பொறுப்புடையவராக இருந்தார்.

(IX) மேற்சொல்லப்பட்ட உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்காவின் சட்டவிரோதமான தடுப்புக்காவலுக்கு சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொட, உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் ராஜா டயஸ், பிரதான பரிசோதகர் ரஞ்சித் விக்கிரமசிங்கா ஆகியோர் நேரடிப் பொறுப்புடையவர்களாக இருந்தனர்.

மேலே (அ), (ஆ) ஆகிய விசாரணை நியதிகளோடு தொடர்புகொண்ட வகையில் இந்த ஆணைக்குழு பின்வரும் மேலதிகக் காண்புகளையும் கண்டுள்ளது. இந்தக் காண்புகள் மேலே குறிப்பிட்ட இரண்டு விசாரணை நியதிகளோடும் நேரடித் தொடர்புள்ளவைகளாகும்-

(I) உதவிப் பரிசோதகர் ரோஹித பிரியதர்ஸனாவின் காணாமல்போனமையைச் செய்வித்த பின்னரும் உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்காவின் சட்ட விரோதத் தடுப்புக்காவலினைச் செய்வித்த பின்னரும் சொல்லப்பட்ட சட்டவிரோதச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் பின்வரும் கருத்துக் களைத் தெரிவிக்க முயன்றுள்ளனர்-

(அ) ரோஹித பிரியதர்ஸனா தமது சுயாதீன கருத்தின்படியே காணாமல் போனார் என்பதும், அத்துடன்,

(ஆ) அஜித் ஜயசிங்கா நாசகாரச் செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்த மைக்காகக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பதுமே.

அதன்வண்ணம், சொல்லப்பட்ட ஆட்கள் ரோஹித பிரியதர்ஸனா ஏன் காணாமல் போனார் என்பதற்குக் காரண விளக்கம் அளிக்கும் வகையிலும் அஜித் ஜயசிங்காவின் கைதுசெய்தல் மற்றும் தடுத்து வைத்தலை நியாயப்படுத்தும் வகையிலும் சான்றுகளைப் புனைவதற்குச் சதிசெய்துள்ளனர்.

(II) 1990 பெப்புரவரி 25 ஆந் அல்லது அதே திகதியளவில் பிரதான பரிசோதகர் ரஞ்சித் விக்கிரமசிங்காவினதும் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸினதும் உத்தரவின்பேரில், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் ராஜா டயஸ் கதுருவஹேனலாகே ஜினதாச என்னும் சந்தேகநபரொருவரின் பொய்க் குற்றஒப்புகை வாக்குமூலமொன்றைப் பதிவுசெய்தார். குற்றஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சொற்கள் உண்மையில் மேலே குறிப்பிட்ட ஜினதாச கூறினார் என்பதை நிரூபிப்பதற்கு நம்பகமான சான்று எதுவும் இல்லை. இந்த வாக்குமூலம் உதவிப் பரிசோதகர்களான ரோஹித பிரியதர்ஸனா-வையும், சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மீதான தாக்குதலைத் திட்ட மிடுவதில் மேலே குறிப்பிட்ட ஜினதாசாவுக்கு உதவினார் என்ற கோதாவில் குற்றத்தில் சிக்குவதற்கு வழிவகுக்கின்றது. சப்புகஸ்கந்தையின்மீதான தாக்குதல்பற்றி ஆரம்பத்தில் புலனாய்வு செய்தவர்களால் பெற்றுக்கொண்ட சான்றுகளுக்கு முரணான விடயங்கள் மேலே சொல்லப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தில் அடங்குகின்றன.

(III) மேலே குறிப்பிட்ட ஜினதாசாவின் குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் பதிவானது ரோஹித பிரியதர்ஸனாவையும் அஜித் ஜயசிங்காவையும் குற்றத்தில் மாட்டச் செய்யும்பொருட்டு நன்கு திட்டமிடப்பட்ட திறமுறை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டும் போதுமான விடயங்கள் உள்ளன என்பது இவ்வாணைக்குழுவின் அபிப்பிராயமாகும். உதவிப் பரிசோத்கர்களான ரோஹித பிரியதர்ஸனாவையும், அஜித் ஜயசிங்காவையும் குற்றத்தில் சிக்கிவைக்கத் துணைபுரியும் சொல்லப்பட்ட விடயங்கள் பொய்யானவை என இந்த ஆணைக்குழு நிராகரிக்கும் அதேவேளையில் அவற்றின்மீது எவ்விதமான நம்பிக்கையும் வைக்கவில்லை.

**(இ) அரச உரக் கூட்டுத்தாபனத்தின் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் தடுத்துவைக்கும் இடமொன்றை அல்லது இடங்களைத் தாபித்துப் பேணுதலும் 1989 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 1990 திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது அத்தகைய இடத்தில் அல்லது இடங்களில் இடம்பெற்ற**

சூழ்ச்சியின் விளைவாக அத்தகைய இடத்தில் அல்லது இடங்களில் எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் மனிதாபிமானமற்ற முறையில் அல்லது இழிவாக நடாத்தப்படுவதற்கு அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் தவறொன்றாக அமையும் நடாத்துகைக்கு உட்படுத்தப்பட்டாரா என்பதும், நேரடியாகவோ மறைமுகமாகவோ அவற்றிற்குப் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும்.

(I) 1986 ஆம் ஆண்டிலிருந்து, பல்வேறு கட்டங்களில், சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் அமைச்சரவை அமைச்சராகப் பதவி வகித்த திரு.ரணில் விக்கிரமசிங்கா, களனி பொலிசு பிரிவைச் சேர்ந்த பொலிசு உத்தியோகத்தர்களுக்கு அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்த வீடுகளை ஒதுக்கீடு செய்து விடுவிக்குமாறு அக்கூட்டுத்தாபனத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

(II) விசேடமாக, ,1988 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 1990 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில், திரு.ரணில் விக்கிரமசிங்காவின் பணிப்புரைகளின்வண்ணம், அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநராகிய திரு.அசோக சேனநாயக்கா (களனி பொலிசுப் பிரிவைச் சேர்ந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உதவி பொலிசுக் கண்காணிப்பாளரான) உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ்சுக்கு முன்கூறப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தின் அண்ணளவாகப் பதின்மூன்று(13) வீடுகளை ஒதுக்கீடு செய்து விடுவித்துள்ளார். அந்த வீடுகளைப் பெற்றுக்கொண்ட திரு.டக்ளஸ் பீரிஸ் சொல்லப்பட்ட வீடுகளை களனி நாசகாரத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளார். சொல்லப்பட்ட உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் மேற்சொல்லப்பட்ட வீடுகளை சொல்லப்பட்ட பொலிசு உத்தியோகத்தர்களுக்குப் திரு.ரணில் விக்கிரமசிங்காவினூடாகப் பெற்றுக் கொடுப்பதற்கு பொறுப்புக் கூறவேண்டியவராக இருந்தார்.

(III) பொலிசு உத்தியோகத்தர்களுக்கென முன்னர் கூறியவாறு வீடுகளைக் பெற்றெடுத்தலானது, சம்பந்தப்பட்ட பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகளில் அடங்கியவாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட பொலிசுத் திணைக்கள நடைமுறைகளுக்கு முரணாணவாறும் பொலிசுத் திணைக்களத்திலிருந்து எவ்வித அதிகாரத்தைப் பெறாமலும் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸ்சினால் செய்யப்பட்டுள்ளது.

(IV) பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்த மேற்கூறிய வீடுகளை பொலிசு உத்தியோகத்தர்களுக்கு விடுவிக்கும்படி அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநருக்குப் பணிப்புரை வழங்கியதன்மூலம் திரு.ரணில் விக்கிரமசிங்கா கைத்தொழில் அமைச்சர் என்றவகையில் தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

(V) அப்போது களனி பொலிசுப் பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தரான சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளரான நளின் தெல்கொட, பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்த வீடுகளைப் பொலிசு உத்தியோகத்தர்களுக்குப் பெற்றுக்கொடுக்க ஆரம்பித்த நேரத்திலிருந்தே சொல்லப்பட்ட வீடுகள் பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு முரணானவாறும் அவற்றை மீறியவாறும் பெற்றெடுக்கப்பட்டனவென்பதை அறிந்திருந்தார். சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொட, சொல்லப்பட்ட மீறுகைக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை வேண்டுமென்றே எடுப்பதைத் தவிர்த்துக்கொண்டார். சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொட இது தொடர்பில் ஏற்புடைய

பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகளை வினைப்படுத்தாமைக்காக பொறுப்பு ஏற்க வேண்டிய நிலையில் உள்ளார்.

(VI) களனி பொலிசுப் பிரிவைச் சேர்ந்த பின்வரும் பொலிசு உத்தியோகத்தர்கள் சொல்லப்பட்ட வீடமைப்பு வசதிகள் ஏற்புடைய பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகளை மீறியவாறு பெற்றெடுக்கப்பட்டவை என்பதை அறிந்து அல்லது அங்ஙனம் கருதுவதற்குக் காரணங்கள் இருந்தபோது பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தின் வீடமைப்பு வசதிகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

(அ) சி.பொ.க. நளின் தெல்கொட
(ஆ) உ.பொ.க. டக்ளஸ் பீரிஸ்
(இ) பி.ப. ரஞ்சித் விக்கிரமசிங்கா
(ஈ) பொ.கா. ரணதுங்கா
(உ) பொ.சா. ரத்நாயக்கா
(ஊ) பொ.கா.சுனில் பெரேரா
(எ) பெ.பொ.கா. காந்தி பெர்ணாந்து
(ஏ) பொ.சா. லக்ஸ்மன் டயஸ்
(ஐ) பொ.கா. ஹீன்பண்டா
(ஒ) பொ.ப. சுதத் சந்திரசேகரா
(ஓ) பி.ப. டபிள்யு மகாநாயக்கா
(ஔ) உ.பொ.க. எச் ஜி விக்கிரமசிங்கா
(க) உ.பொ.க. ஆர் தர்மரத்ன
(ங) உ.பொ.க எச் சந்திரதாச
(ச) பொ.ப. என் எம் எஸ் பி நிஸ்ஸங்கா

(களனி பொலிசுப் பிரிவைச் சேர்ந்த வேறு பொலிசு உத்தியோகத்தர் சிலரும் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் வாழ்ந்தனர் எனக் கருதுவதற்கான காரணங்கள் உள்ளன. எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்டவர்கள் சம்பந்தமாக, அவர்கள் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைப் பெற்றிருந்தனர் என்பதற்கு உறுதியானதும் தெளிவானதுமான சான்றுகள் உள்ளன).

(VII) பாரிய கொழும்புப் பிரதேசத்தில் பிரதிப் பொலிசுமா அதிபராகக் கடமைகளை ஏற்றுக்கொண்ட பொலிசுமா அதிபர் எம் எம் ஆர் (மெரில்) குணரத்னா, களனி பொலிசுப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளில் குடிபுகுந்துள்ளனர் என்பதை அறிந்து கொண்டார். பொலிசுமா அதிபர் குணரத்னா, மேலே குறிப்பிட்ட வீடுகள் பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு முரணானவாறு பெற்றெடுக்கப்பட்டவை என அறிந்திருந்தார் அல்லது அங்ஙனம் கருதுவதற்கான நியாயமான காரணங்கள் இருந்தன. எவ்வாறாயினும் அவர், இதுதொடர்பில் அவசியமான நடவடிக்கை எடுக்கும்பொருட்டு சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொடவுக்கும் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸுக்கும் பொருத்தமான அறிவுறுத்தல்களை வழங்குவதைத் தவிர்த்துக் கொண்டார். பிரதிப் பொலிசுமா அதிபர் குணரத்னாவின் இத்தவறுகையானது மேற்சொல்லப்பட்ட பொலிசு உத்தியோகத்தர்கள் பட்டலந்த வீடுகளில் தொடர்ந்து குடியிருப்பதற்குக் காராணமாயிற்று.

(VIII) சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொட சட்டவிரோதமான நோக்கங்கள் எவற்றுக்கேனும் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்த

வீடுகளைப் பொலிசு உத்தியோகத்தர்கள் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுப்பதை வேண்டுமென்றே தவிர்த்துள்ளார்.

(IX) 1988 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 1990 டிசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதியில் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலிருந்த வீடுகள் சில ஆட்களைச் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கவும் சித்திரவதை செய்யவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பின்வரும் வீடுகள் இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்டன என்பதை நிரூபிக்கும் உறுதியான சான்றுகள் உள்ளன.

| | வீடுகளின் நிலைமை (உத்தியோகபூர்வ பதிவுகளின்வண்ணம்) |
|---|---|
| (1) B2 | (அ) 1987 முதல் 1989 மே வரை காலியாக இருந்தது<br>(ஆ) 1989 மேமுதல் 1994 ஆகஸ்ட்வரை திரு.ரணில் விக்கிரமசிங்காவின் அலுவலகம் |
| (2) B8 | 1988 முதல் 1991 வரை<br>- உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸ்சுக்குச் சாட்டுதல் செய்யப்பட்டிருந்த ஏம உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்டது |
| (3) B 34 | இவ்வாணைக்குழுவுக்கு ஏற்புடைய காலப்பகுதி முழுவதிலும் சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்துக்குச் சாட்டுதல் செய்யப்பட்டு இருந்தது. |
| (4) A 1/8 | இந்த வீடு விசேட பொலிசு உத்தியோகத்தர்கள் எவருக்கும் ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த வீட்டை பொலிசு உத்தியோகத்தர்கள் அதிகாரம் இல்லாமல் அணுகும் வசதி இருந்தது என்பது கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநரால் அவதானிக்கப்பட்டு இருந்தது. |

(X) 1988 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 1990 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில், முந்திய பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வீடுகளில் ஆட்களைத் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்தமைக்காக பின்வரும் பொலிசு உத்தியோகத்தர்கள் நேரடிப் பொறுப்புடையவர்களாக உள்ளனர்.

(1) உ.பொ.க. டக்ளஸ் பீரிஸ்
(2) பி.ப. ரஞ்சித் விக்கிரமசிங்கா
(3) பொ.சா. ரத்நாயக்கா
(4) பொ.சா. ரணதுங்கா
(5) உ.ப. தெல்கஹகொட
(6) பொ.சா. உபாலி லக்ஹேவா
(7) பொ.கொ.சா. ரஞ்சித்
(8) பொ.கா. ஜயவர்த்தனா
(9) பொ.கா. ஹின்பண்டா
(10) பொ.ப. கப்பாகொட
(11) பெ.பொ.கா. பத்மினி பிரேமலதா
(12) பொ.கா. லக்ஸ்மன்
(13) பொ.பி. சுனில் பண்டார நிஸ்ஸங்கா(இப்போது மரணம் அடைந்துள்ளார்)

மேலே குறிப்பிட்ட உத்தியோகத்தர்களால் இழைக்கப்பட்ட சட்ட விரோதமான செயல்கள் இலங்கை அரசியலமைப்பின் 11, 13(1), 13(2) ஆகிய உறுப்புரைகளின் மீறல்களுக்கு ஒப்பானதாகும்.

1988 சனவரி 01 அந் திகதியிலிருந்து 1990 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில், பெரும்பாலும் பொலிசு உத்தியோகத்தர்கள் சமூகம் அளித்த கலந்துரையாடல்கள் சில பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. இந்தக் கூட்டங்கள் பொலிசுத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றவை அல்ல என்பதுடன் அவை பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரைகளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டவைகளும் அல்ல. இக்கூட்டங்களுக்குச் சமூகம் அளித்த சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்களுள் சிலர் பின்வருவோர் ஆவர்.

(1) பி.பொலிசுமா அதிபர் எம் எம் ஆர் (மெரில்) குணரத்னா
(2) சி.பொ.க. நளின் தெல்கொட
(3) உ.பொ.க. டக்ளஸ் பீரிஸ்
(4) உ.பொ.க. ராஜா டயஸ்

இந்தக் கலந்துரையாடல்கள் (திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு அவருடைய அலுவலகமாகப் பயன்படுத்த சாட்டுதல் செய்யப்பட்டிருந்த) **B2** என்ற வீட்டிலும் (திரு.ரணில் விக்கிரமசிங்காவின் சுற்றுலா வங்களாவாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்த) **A 2/2** என்ற வீட்டிலும் இடம்பெற்றன. சொல்லப்பட்ட கலந்துரையாடல்களுக்கு திரு.ரணில் விக்கிரமசிங்கா தலைமை தாங்கினார். இந்தக் கூட்டங்களை அழைத்தவரான திரு.ரணில் விக்கிரமசிங்காவுக்கு இக்கூட்டங்களை அழைப்பதற்கான அதிகாரம் எதுவும் இருக்கவில்லை. திரு.ரணில் விக்கிரமசிங்கா இக்கூட்டங்களை அழைத்ததன் காரணமாகத் தமது அதிகாரத்தைத் தெளிவாகத் துஷ்பிரயோகம் செய்துள்ளார். மேலும், மேலே குறிப்பிட்ட பொலிசு உத்தியோகத்தர்கள் இக்கூட்டங்களில் பங்குபற்றுவதன் காரணமாக அதிகாரம் அளிக்கப்படாத செயற்பாடொன்றில் பங்குபற்றியுள்ளனர்.

(XI) மேலே குறிப்பிட்ட அதிகாரமற்ற கூட்டங்களின்போது, (அப்போதைய கைத்தொழில் விஞ்ஞான அமைச்சராக விளங்கிய) திரு.ரணில் விக்கிரமசிங்கா நாசகாரத் தடுப்புச் செயற்பாடுகள் சம்பந்தமாக பொலிசாரின் நடத்தை குறித்து பணிப்புரைகளை வழங்கியுள்ளார். திரு.விக்கிரமசிங்காவுக்கு அத்தகைய பணிப்புரைகளை வழங்கச் சட்டமுறையான அதிகாரம் இருக்கவில்லை எனவும் இந்த விடயத்திலும் அவர் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனவும் ஆணைக்குழு கருதுகின்றது. அத்தகைய பணிப்புரைகளை வழங்குவதன் காரணமாக திரு.விக்கிரமசிங்கா பொலிசுக் கடமைகளினதும் சட்டவினைப்படுத்து கையினதும் வழிமுறையில் தலையீடு செய்துள்ளார்.

(XII) மேற்சொல்லப்பட்ட அதிகாரமற்ற கூட்டங்கள் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் சட்டவிரோதமான தடுத்துவைப்பிடங்களையும் சித்திரவதைகூடங்களையும் பேணுகையுடன் மீற முடியாதவாறு பின்னிப்பிணைந்துள்ளது.

(XIII) அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநருக்கு பட்டலந்த வீடமைப்புத்திட்டத்தில் உள்ள வீடுகளை ஒதுக்கீடு செய்து விடுவிக்கும்பொருட்டு திரு.ரணில் விக்கிரமசிங்காவால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் காரணமாக **B2, B8,**

B34, A 1/8 ஆகிய இலக்கங்களைக்கொண்ட வீடுகளில் சட்டத்துக்கு முரணான தடுப்பிடங்களை நிறுவுவதற்கு அது துணைபுரிந்தது.

(XIV) பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்த B2, B8, B34, A 1/8 ஆகிய இலக்கங்களைக்கொண்ட வீடுகளில் சட்டத்துக்கு முரணான தடுப்பிடங்களையும் சித்திரவதைகூடங்களையும் பேணுகைக்கு, திரு.ரணில் விக்கிரமசிங்காவும் சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் நளின் தெல்கொடவும் மறைமுகமாகப் பொறுப்புடையவர்கள் ஆவர்.

(XV) பிரதிப் பொலிசுமா அதிபர் எம் எம் ஆர் (மெரில்) குணர்த்னா, முன்னைய பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சட்டமுரணான செயல்கள் இடம்பெற்று வந்தன என்பதை அறிந்திருந்து அல்லது அங்ஙனம் நடைபெறுவதை நம்புவதற்குக் காரணங்கள் இருந்தபோதிலும், அத்தகைய சட்டமுரணான செயல்கள் தொடருவதை நிறுத்தும்பொருட்டு பொருத்தமானதும் சட்டமுறையானதும் அவசியமானதுமான நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்த்துக்கொண்டார்.

(XVI) உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் டக்ளஸ் பீரிஸ்சும் பிரதான பரிசோதகர் ரஞ்சித் விக்கிரமசிங்காவும், பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் மேலே குறிப்பிட்ட சட்டவிரோதமான தடுப்பிடங்களையும் சித்திரவதைகூடங்களையும் தாபித்துப் பேணுகைக்கு நேரடிப் பொறுப்புடையவர்கள் ஆவர். (சொல்லப்பட்ட சட்டமுரணான தடுப்பிடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆட்களுட் பலர் களனி நாசகாரத் தடுப்புப் பிரிவினைச் சேர்ந்த பொலிசு உத்தியோகத்தர்களால் முன்னர் கடத்திச் செல்லப்பட்டவர்கள் ஆவர்).

(XVII) களனி பொலிசுப் பிரிவைச் சேர்ந்த நாசகாரத் தடுப்புப் பிரிவானது இவ்வாணைக்குழுவுக்கு ஏற்புடைய காலப்பகுதியிலும் அதன் நடவடிக்கை பலவற்றை பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலிருந்தே மேற்கொண்டது.

(XVIII) அப்போதைய பொலிசுமா அதிபரான ஏர்னஸ்ட் பெரேரா அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்படாத இடங்களான பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்த வீடுகளில் களனி நாசகாரத் தடுப்புப் பிரிவு இயங்கியதென்பதை அறிந்திருந்தார். அங்ஙனம் அறிந்திருந்தும் திரு.ஏர்னஸ்ட் பெரேரா அதுதொடர்பில் பொருத்தமானதும் அவசியமானதுமான நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்த்துக் கொண்டார்.

## முடிவுரைக் குறிப்புகள்

அறிமுக அத்தியாயத்தில் கூறியவாறு, 1988 முதல் 1990 வரையான காலப்பகுதியானது, பயங்கரவாதம் கோலோச்சிய காலப்பகுதியாகும். ஜனதா விமுக்தி பெரமுனை பாரதூரமான பயங்கரச் செயல்களில் ஈடுபட்ட அதேநேரத்தில் அப்போதைய அரசாங்கத்துக்குள்ளேயும் அதற்கு வெளியேயும் உள்ள சக்திகளால் அதேநிகரான குற்றச்செயல்களைக்கொண்டு அவற்றை தடுத்தன. ஜே.வி.பி யின் பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்த அரசாங்கத்துக்கு வெளியேயிருந்த சக்திகள் (விழிப்புணர்வுக்குழுக்கள் போன்றவை) பொலிசுப் படையினதும் படைதாங்கிய சேவைகளினதும் ஆசீர்வாதத்துடன் அந்த நடவடிக்கைகளை எடுத்தன. சில சந்தர்ப்பங்களில், பொலிசுப் படையைப் போன்ற அரச படைகளுடன் ஒன்றிணைந்து அவை செயல்பட்டன. நாசகாரிகளைக் கைதுசெய்து ஒழிப்பதில் மட்டுமே அரசாங்கம் அக்கறை கொண்டிருந்ததேயொழிய அந்த நோக்கங்கள் எங்ஙனம் எய்தப்பெற்றன என்பதில் அக்கறை கொண்டிருக்கவில்லை. அரச படைகளால் கையாளப்பட்ட

தடுப்புத் திறமுறைகளில் ஆட்கடத்தல், படுகொலை ஆகியவைபோன்ற நீதித்துறைக்குப் புறம்பான செயற்பாடுகளும் அடங்கியிருந்தன. அன்றைய அரசாங்கம் அரச படைகள் இழைத்த நீதித்துறைக்குப் புறம்பான செயற்பாடுகளைத் தடுப்பதற்குப் போதுமான நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்த்துக் கொண்டது. நீதிக்குப் புறம்பான செயற்பாடுகளைப் புரிந்தவர்களாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தின் பாதுகாப்புக் கிடைத்தது. நீதிநிருவாகம் சார்ந்த வழமையான நெறிமுறையிலும் சட்டத்தை வினைப்படுத்துகையிலும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரொருவர் தலையீடு செய்த சந்தர்ப்பம் ஒன்றைப்பற்றி அப்போதைய பொலிசுமா அதிபர் சாட்சியம் அளித்தார். பத்திரிகையாளர் ரிச்சட் த சொய்சாவின் கொலையோடு சம்பந்தப்பட்டிருந்தமை காரணமாக கைதுசெய்யும் ஆணையொன்று நீதவான் ஒருவரால் வழங்கப்பட்டிருந்த சிரேட்ட பொலிசு உத்தியோகத்தரொருவரைக் கைதுசெய்ய வேண்டாம் எனப் பொலிசார்மீது சொல்லப்பட்ட அமைச்சர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தினார் என அவர் குறிப்பிட்டார். இந்த ஆணைக்குழுவுக்கு இன்னொரு சம்பவம் பற்றிய தகவல் கிடைத்தது. சட்டத்தரணி விஜயதாசா லியனஆரச்சியின் கொலையினைப் புரிந்தமைக்காக சட்டமா அதிபர் பொலிசு உத்தியோகத்தர் மூவரின்மீது குற்றப்பத்திரமொன்றை வழங்கியிருந்தார். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் எதிர்வாதம் புரிந்த வழக்குரைஞருக்கு அரசாங்கம் கட்டணங்களைச் செலுத்தியதற்கான சான்றுகளும் இவ்வாணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளன. இந்தச் சம்பவங்கள் அன்றைய அரசாங்கத்தின் முழுதும் அளாவிய உளப்பாங்கினை எடுத்துக் காட்டுகின்றன.

ஜனதா விமுக்தி பெரமுனையினதும் அதனோடு இணைந்த தேசப்பிரேமி சனதா வியாபாரய முதலியவற்றைப் போன்ற அமைப்புகளினதும் உறுப்பினர்களால் இழைக்கப்பட்ட பயங்கரவாதச் செயல்களை நாங்கள் எவ்விதத்திலும் மன்னிக்கவில்லை என்பதை ஆணித்தரமாகக் கூற விரும்புகின்றோம். பயங்கரவாதச் செயல்களில் இறங்க அவர்களைத் தூண்டிய காரணங்கள் எவையாக இருப்பினும் 1987 முதல் 1990 வரையான காலப்பகுதியில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும்பொருட்டு ஜே.வி.பி யினால் கையாளப்பட்ட வழிவகைகளை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஜே.வி.பி மேற்கொண்ட பயங்கரவாதச் செயல்கள் காரணமாக நூற்றுக்கணக்கான அரசியல்வாதிகளும் அரசியல் செயல்வீரர்களும் பொலிசு உத்தியோகத்தர்களும் சாதாரண குடிமக்களும் படுகொலை செய்யப்பட்டனர். பயங்கரவாதச் செயல்கள் அரச நிறுவனங்களின் வழமையான இயங்குகையைப் பாதித்தன. சில சந்தர்ப்பங்களில் பொதுமக்களுக்குச் சொல்லொணா இடர்களை ஏற்படுத்தும்வண்ணம் அத்தியாவசிய சேவைகள் சீர்குலைந்தன. எனவே, உண்மையில் நிலைமை வழமைக்கு புறம்பான முறையில் அமைந்திருந்தது. அது, அரசாங்கத்தை அராஜகத் தன்மைக்கு இட்டுச் சென்றது.

எவ்வாறாயினும், நிலைமை எப்படியாக இருந்தபோதிலும், பொறுப்பு வாய்ந்த அரசாங்கமொன்று எந்த நிலைமையினையும் சட்டவாட்சிக்கு உட்பட்டவாறு சமாளித்துக்கொள்ளல் வேண்டும். ஆளுகையானது ஏற்றுக்கொள்ளப்பட்டதும் சட்டமுறையில் செல்லுபடியான விதிகளுக்கும் இணங்கவே அமைதல் வேண்டும். சட்டவினைப்படுத்துகை யானது ஏற்புடைய சட்டங்களுக்கு இணங்கவே அமைதல் வேண்டும். எனவே, ஜே.வி.பி யினர் எவ்வளவு சினமூட்டுகை செய்தாலும் ஜே.வி.பி கட்சியை எதிர்கொள்ளும் நடவடிக்கையாக நேரடி நீதிக்குப் புறம்பான செயற்பாடுகளில் இறங்க அன்றைய அரசாங்கம் அதிகாரம் அளித்திருக்கக்கூடாது. ஜே.வி.பி யினால் மேற்கொள்ளப்பட்ட இடையறாத பயங்கரவாதச் செயல்களைத் தடுக்கும்பொருட்டு நீதிக்குப் புறம்பான வழிகளை உண்மையில் அரசாங்கம் பின்பற்றியிருந்தது. ஜே.வி.பி பயங்கரவாதம் அரச பயங்கரவாதத்தினால் சமாளிக்கப்பட்டது. அந்தச் செயல்முறையின்போது உண்மையான பயங்கரவாதிகள் மட்டுமே ஒழிக்கப்படவில்லை. சட்டவிரோதமான செயல் எதுவுக்குமே பொறுப்பாக இராத ஏனைய அப்பாவி இளைஞர்கள் பலரும் இம்சிக்கப்பட்டனர் அல்லது கொலைசெய்யப்பட்டனர். இக்காலகட்டத்தில் ஆளும்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் பொலிசுச் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு

கொண்டிருந்தனர். சில சந்தர்ப்பங்களின்போது அவர்கள் பொலிசாருக்குப் பணிப்புரையும் வழங்கினர். மேலே குறிப்பிட்ட காலப்பகுதியில் நடந்தவற்றுக்கு பட்டலந்த விவகாரம் ஓர் உதாரணமாகும்.

இலங்கையில் அத்தகைய அவப்பேறானதும் கண்டிக்கத்தக்கதுமான காலப்பகுதி என்றுமே நிகழாதிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அத்தியாயம் X
## விதப்புரைகள்

(1) முன்னைய அத்தியாயங்களில் விரிவாகக் கூறியவாறு, சட்டவிரோதமான தடுப்பு இடங்களையும் சித்திரவதைகூடங்களையும் நிறுவிப் பேணுவதற்கு இட்டுச்சென்ற பிரதான காரணங்களில் ஒன்று யாதெனில், 1987 முதல் 1990 வரையில் இடம்பெற்ற கிளர்ச்சியை எதிர்நோக்கும்பொருட்டு அன்றைய அரசாங்கத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் பொலிசு உத்தியோகத்தர்களும் நடந்துகொண்ட முறையாகும். முன்னர் குறிப்பிட்டதைப்போன்று, சினமூட்டுதலின் தாக்கம் எதுவாக அமைந்திருந்தாலும், பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் ஒன்றும் அதன் முகவர்ாண்மைகளும் எதிர்நடவடிக்கை எடுக்கவேண்டிய சில விதிகள் இருத்தல் அவசியமாகும். கிளர்ச்சி இடம்பெறும் ஒரு காலப்பகுதியிலேனும் சகல நடவடிக்கைகளும் சட்டவாட்சிக்கு இணங்கவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அரசியலமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள பிரசைகள் அனைவரினதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

. சமாதானத்துக்கும் பகிரங்க ஒழுங்குக்கும் பாரதூரமான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள வழமைக்குப் புறம்பான நிலைமைகளின்போது அரசியல்வாதிகளும் சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களும் நடந்துகொள்ள வேண்டிய முறைக்கு ஏற்புடைய வழிகாட்டு நெறியொன்றை முன்மொழிவு செய்யவும் பிரதான விடயங்களை விரிவாக ஆராயவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்ற பொதுமக்கள் பிரதிநிதிகளை மேதகையீர் அழைப்பதுபற்றி கருதவேண்டுமென நாங்கள் விதப்புரை செய்கின்றோம். அவசியமானால் அரசியலமைப்பு உள்ளிட்ட தற்போதைய சட்டங்களுக்குப் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டுவரவும் ஆலோசனை செய்யப்படுதல் வேண்டும். இந்தச் செயல்முறையின்போது பொதுமக்களுக்கும் அனைத்துச் சமூகக்குழுமங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கும் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படல் வேண்டுமென விதப்புரை செய்யப்படுகின்றது.

தமக்கே சிறப்பான " நடத்தைக் கோவை" யொன்றை உருவாக்கிப் பின்பற்றுவதில் பொதுமக்களது பிரதிநிதிகள் அக்கறை காட்டினால் பொருத்தமுடையதாகும். மக்கள் பிரதிநிதிகள் (பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவரைப்போன்றவர்கள்) மேலே குறிப்பிட்ட நடத்தைக் கோவையினை மீறிய குற்றத்தைப் புரிந்தவிடத்து, ஏற்புடைய அமைப்பைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்கள் குற்றம்புரிந்த உறுப்பினர்மீது குற்றப்பிரேரணையொன்றை முன்வைக்க உரித்துடையவர்கள் ஆதல் வேண்டுமென விதப்புரை செய்யப்படுகின்றது. அத்தகைய குற்றப்பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டவிடத்து சம்பந்தப்பட்ட உறுப்பினர் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு பிரதிநிதியொருவர் ஆதல் தடுக்கப்படல் வேண்டும்.

(2) முன்னைய அத்தியாயங்களில் கூறியவாறு, சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்களும் அன்றைய அரசாங்கத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் மனிதஉரிமைகளைப் பாரதூரமாக மீறிய சந்தர்ப்பங்களை நாங்கள் கண்டுள்ளோம். உயர் நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நியாயாதிக்கமும், நீதிமன்றத்தினால் சொல்லப்பட்ட நியாயாதிக்கம் சார்ந்த பொருத்தமுறு செயலாட்சியும் இருந்தபோதிலும் தண்டனைக்குப் பயமின்றியே அத்தகைய மீறல்கள் திரும்பத்திரும்பச் செய்யப்பட்டுள்ளன என்பதை நாங்கள் காண்கின்றோம். நிறைவேற்றுத்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில ஆட்கள் அடிப்படை உரிமைகளை இடையறாது மீறி வருவதற்கான ஒரு காரணம் யாதெனில் உடனடியானதும் பொருத்தமானதுமான தண்டனைகளின்மூலம் அவர்களுடைய நடத்தை கண்டிக்கப்படாதுள்ளமையாகும். குடிமக்களது அடிப்படை உரிமைகளைத் தொடர்ந்து மீறும் ஆட்கள்மீது "குடியியல் உரிமைகளைப் பறித்தெடுத்தல்" வடிவத்தில் அமைந்த பொருத்தமான

தண்டனைகளை விதிப்பதற்கு உகந்த மேலதிக நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்படல் வேண்டுமென நாங்கள் விதப்புரை செய்கின்றோம்.

(3) பட்டலந்தயில் சட்டவிரோதமான தடுப்பு இடங்களையும் சித்திரவதைக் கூடங்களையும் நிறுவி பேணியமைபற்றி நேரடியாகவும் மறைமுகமாகவும் அறிந்த ஆட்கள் சிலர் நச்சரிப்புக்கும் தமது உயிர்மீதுள்ள அபாயத்துக்கும் பயந்து பொலிசாரிடம் முறையிடுவதைத் தவிர்த்துக் கொண்டனர் என்பதை இந்த விசாரணையின்போது நாங்கள் அறிந்து கொண்டுள்ளோம். அங்ஙனம் பொலிசாரிடம் தெரிவிக்காமைக்கு இன்னொரு காரணமாக, பொறுப்புடையவர்களும் பொலிசு உத்தியோகத்தர்களாக இருந்தபடியால் நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கமாட்டார்கள் என அவர்களுக்கிருந்த நம்பிக்கையாகும். எனவே அவர்கள், நியாயமானதும் கட்சி சார்பற்றதுமான புலனாய்வொன்றை எதிர்பார்க்க முடியாத நிலையில் இருந்தனர்.

இதனைப்போன்ற சந்தர்ப்பங்களின்போது, அவசியமான புலனாய்வுகளை மேற்கொள்ளச் செய்து அவற்றை மேற்பார்வை செய்யும் தத்துவத்தினையும் குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஆராயும்பொருட்டுச் சட்டமா அதிபருக்குப் புலனாய்வுகள் சார்ந்த காண்புகளைச் சமர்ப்பிக்கும் அதிகாரத்தினையும் நீதித்துறை உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் பொருத்தமாகும் என நாங்கள் கருதுகின்றோம். புலனாய்வு சார்ந்த ஏனைய தத்துவங்களுள், சம்பந்தப்பட்ட நீதித்துறை அதிகாரிகள் சட்டவிரோதமான செயல் புரியப்படுகின்றதெனச் சந்தேகிக்கப்பட்ட ஏற்புடைய நிகழ்விடத்துக்குச் சென்று அவ்விடத்தைப் பரிசோதனை செய்யும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இதுதொடர்பில், இதனகத்து கூறப்பட்டுள்ள விதப்புரைகளைச் செயற்படுத்தும்பொருட்டு குற்றவியல் நடவடிக்கைக் கோவைச் சட்டத்துக்கு பொருத்தமான திருத்தங்களைச் செய்வதை ஆராயும்பொருட்டு மேதகையீர் குழுவொன்றை நியமித்தல் வேண்டுமென நாங்கள் விதப்புரை செய்கின்றோம்.

(4) இவ்வாணைக்குழு முன்னிலையிலான விசாரணை நடவடிக்கைகளின்போது, பொலிசு உத்தியோகத்தர்கள் பலர் ஆட்கடத்தல், படுகொலை, பிழையான மறிப்புவைப்பு, கடும் மற்றும் சிறு காயங்களை ஏற்படுத்துதல் ஆகியன உள்ளிட்ட பாரதூரமான தவறுகளைப் புரிந்துள்ளனர் என்பது அம்பலமாகியது. சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக பொருத்தமான நீதிமன்றங்களில் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடரும்நோக்கில், இவ்வாணைக்குழுவுக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகள் யாவற்றையும்பற்றி அகல்விரிவான புலனாய்வுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கச் செய்யுமாறு பொலிசுமா அதிபரை மேதகையீர் பணிக்க வேண்டுமென நாங்கள் விதப்புரை செய்கின்றோம். இதுதொடர்பில் இவ்வாணைக்குழுவின் அறிக்கையினையும் விசாரணை நடவடிக்கைகளையும் புலனாய்வுகள் சார்ந்த குறிப்புகளையும் இந்த ஆணைக்குழுவுக்கு இணைக்கப்பட்டிருந்த பொலிசு உத்தியோகத்தர்களால் செய்யப்பட்ட புலனாய்வுகளோடு தொடர்புகொண்ட விடயங்களையும் ஏனைய விடயங்களையும் பொலிசுமா அதிபருக்கு மேதகையீர் சமர்ப்பித்தல் வேண்டுமெனப் பணிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

(5) முன்னைய அத்தியாயத்தில் பொலிசு உத்தியோகத்தர்களால் இழைக்கப்பட்ட பாரதூரமான ஒழுக்காற்றுத் தவறுகளையும் பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகளின் மீறல்களையும் நாங்கள் பட்டியல்படுத்தி உள்ளோம். சம்பந்தப்பட்ட பொலிசு உத்தியோகத்தர்களுக்கு எதிராக அவசியமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதை ஆராயும்பொருட்டு இந்த ஆணைக்குழுவின் அறிக்கையினையும் விசாரணை நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று அதிகாரச் சபைகளுக்கும் பொலிசுமா அதிபருக்கும் மேதகையீர் அனுப்ப வேண்டுமென விதப்புரை செய்யப்படுகின்றது.

**ஒப்பம்: நீதியரசர் டி ஜயவிக்கிரமா** (ஆணைக்குழுவின் தவிசாளர்)

**ஒப்பம்: மாண்புமிகு என் ஈ திசாநாயக்கா** (ஆணையாளர்)

ANNEX-A

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ජනාධිපතිනී
ජනාධිපතිනි [illegible] ලක්ෂාධිපතිනායක [illegible] විසින්

1993 [illegible] කොමිෂන් සභා පනතේ 2 වන වගන්තියේ විධිවිධාන ප්‍රකාරව 1995 [illegible] දින දරන සහ 1995 ඔක්තෝබර් 4 වන දින අංක 891 [illegible] [illegible] අධිකාර පත්‍ර මඟින් ඒ අධිකාර පත්‍රයේ [illegible] පරීක්ෂා කිරීමේ පොරොන්දු [illegible] [illegible] පරීක්ෂණ කොමිෂන් සභාවක් පත් කරන ලද හෙයින්;

ශ්‍රී ලංකා [illegible] ජනරජයේ ජන [illegible] [illegible] [illegible] වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලයද ප්‍රකාරව 1995 [illegible] දින දරන සහ 1995 ඔක්තෝබර් 4 වන දින අංක 891 [illegible] [illegible] කරන ලද අධිකාර පත්‍රයන් මෙයින් [illegible]

[illegible]

[illegible]
ජනාධිපති ලේකම්

[illegible]

[illegible] 5/78 ජනා.කා. අංකය [illegible]/6/[illegible]/206/95

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ජනාධිපතිනී
අතිගරු චන්ද්‍රිකා බණ්ඩාරනායක කුමාරතුංග මැතිනිය විසිනි.



[illegible]

2 [illegible]

ආචාර[illegible]

[illegible]

[illegible]

1 ශ්‍රේෂ්ඨාධිකරණ විනිසුරු, ධර්මසිරි ජයවික්‍රම මැතිතුමා සහ
2 ශ්‍රේෂ්ඨාධිකරණ විනිසුරු, නිමල් එඩ්වඩ් දිසානායක මැතිතුමා

වන ඔබතුමන්.

(අ) 1990 පෙබරවාරි මස 20 වන දින හෝ ඊ ආසන්නයේදී පළුගස්වැව පොලිස් ස්ථානයේ දී පොලිස් පරීක්ෂක රෝහිත ප්‍රියදර්ශන අතුරුදහන්වීම ඇතුළු අපරාධානුකූල කරුණු සහ ඊ අතුරුදහන්වීම හා සම්බන්ධ හෝ නිලධාරීන් වගකිවයුතු තැනැත්තා හෝ තැනැත්තන් සහ එයට ආධාර අනුබල දුන් තැනැත්තා හා තැනැත්තන්.

(ආ) 1990 පෙබරවාරි මස 21 වන දින හෝ ඊ ආසන්නයේදී පෑලියගොඩ පොලිස් ස්ථානයේ දී පොලිස් පරීක්ෂක අජිත් ජයසිංහ අත්අඩංගුවට ගැනීම සහ රඳවා තබා ගැනීමට අදාළ අපරාධානුකූල කරුණු සහ ඊ අත්අඩංගුවට ගැනීම සහ රඳවා තබා ගැනීම සඳහා පොලිස් හෝ අනෙකුත් නිලධාරීන් වගකිවයුතු තැනැත්තා හෝ තැනැත්තන් සහ එසේ අත් අඩංගුවට ගැනීමට සහ රඳවා තබා ගැනීමට ආධාර හා අනුබල දුන් තැනැත්තන්;

(ඇ) රාජ්‍ය පොහොර නිෂ්පාදන සංස්ථාවේ බටලන්ද නිවාස යෝජනා ක්‍රමයේ පිහිටි රඳවා තබා ගැනීමේ ස්ථානයක් හෝ ස්ථාන පිහිටුවා පවත්වාගෙන යාම සහ 1988 ජනවාරි මස 1 වන දිනෙන් ආරම්භව 1990 දෙසැම්බර් මස 31 වන දිනෙන් අවසාන වූ කාලපරිච්ඡේදය තුළදී එම ස්ථානයේ හෝ ස්ථානවල එම තැනැත්තකු හෝ තැනැත්තන් රඳවා තබා ගනු ලැබුවේද සහ එසේ රඳවා තබාගත් තැනැත්තා හෝ තැනැත්තන් අමානුෂික හෝ අවමන් සහගත සැලකිල්ලට හෝ වධ හිංසාවලට ලක් කරනු ලැබුවේද යන්න සහ එම රඳවා තබා ගැනීමේ සඳහා පොලිස් හෝ අනෙකුත් නිලධාරීන් වගකිවයුතු තැනැත්තා හෝ තැනැත්තන් සහ එයට ආධාර හා අනුබල දුන් තැනැත්තන්

(ඈ) ඉහත කී කරුණුවලින් යම් කරුණක් සම්බන්ධයෙන් යම් නිලධාරියකු විසින් පරීක්ෂණයක් හෝ විමර්ශනයක් පවත්වන ලද්දේද යන්න හෝ එම තැනැත්තා හෝ තැනැත්තන් ඒ පරීක්ෂණයට හෝ විමර්ශනයට අනුකූල ලෙස ඉදිරිපත් නොකරන ලද්දේ නම් ඒ සඳහා වගකිවයුතු තැනැත්තා හෝ තැනැත්තන්

(ඉ) මේ ලිපිය නිකුත් කළ දිනයේ සිට අපරාධ විරුද්ධ කිරීම සම්බන්ධයෙන් හෝ ඉහත කී කාරණා නිසා මැදිහත්වීම් කිරීම හෝ බලපෑම් ඇති ලෙස හෝ අයුතු ලෙස භාවිතා කිරීම සම්බන්ධයෙන් යම් නිලධාරියකු හෝ වෙනත් යම් තැනැත්තෙකු වගකිවයුතුද යන්න සම්බන්ධයෙන් පරීක්ෂා කොට වාර්තා කිරීම සඳහා ද මේ විධාන පත්‍රයේ නියමයන් පරිදි පරීක්ෂා කරනු ලැබූ යම් කාරණාවලින් පැන නගින සම්බන්ධයෙන් නිර්දේශ ඉදිරිපත් කිරීම සඳහා ද නියම කොමසාරිස්වරුන් වශයෙන් මෙයින් පත් කරමි.

තවද, එකී ධර්මසිරි ජයවික්‍රම මැතිතුමා වන ඔබතුමා එකී කොමිෂන් සභාවේ සභාපතිවරයා ලෙස මම පත් කරමි.

- 3 -

තවද, ඉහත සඳහන් කාරණා සම්බන්ධයෙන් අවශ්‍ය යයි ඔබතුමන්ලාට පෙනී යන සියලු පරීක්ෂණ පැවැත්වීමට ද සියලු විමර්ශන කිරීමට ද ඒ කොමසාරිස්වරයන් වශයෙන් ඔබතුමන්ලාට මා මෙයින් බලය දී බලය පවරන අතර, ඔබතුමන්ලාගේ පරීක්ෂණ වලින් සොයා ගනු ලැබූ කරුණු පිළිබඳ ඔබතුමන්ලාගේ නිර්දේශ ඇතුළත් වාර්තා හෝ අතුරු වාර්තා, ඔබතුමන්ලාගේ අත්සන් යටතේ මෙම දින සිට මාස තුනක් ඇතුළත මා වෙත ඉදිරිපත් කරන ලෙස මම මෙයින් ඔබතුමන්ලාට නියම කරමි.

තවද ඔබතුමන්ලාගේ අභිමතය අනුව, ඔබතුමන්ලා විසින් තීරණය කරනු ලබන පරිදි ඉහත සඳහන් කාරණාවලට අදාළ යම් පරීක්ෂණයක යම් කොටසක් ප්‍රසිද්ධියේ නොපැවැත්විය යුතු යයි මම මෙයින් විධාන කරමි.

තවද, ඔබතුමන්ලාගේ පරීක්ෂණවල හා විමර්ශනවල කාර්ය සඳහා, සොයා දෙන ලෙස හෝ තොරතුරු සපයන ලෙස ඔබතුමන්ලා විසින් ඉල්ලා සිටිනු ලබන සියලුම රජයේ නිලධාරීන් හා වෙනත් තැනැත්තන් විසින් ඒ වෙනුවෙන් කිසි පරිදි දෙනු ලැබිය හැකි සහ සපයනු ලැබිය හැකි සියලු සහාය දිය යුතු බවටත්, සියලු තොරතුරු සැපයිය යුතු බවටත් මම මෙයින් සියලු රජයේ නිලධාරීන්ට හා වෙනත් තැනැත්තන්ට නියම කොට විධාන කරමි.

තවද, ඉහත කී පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 14 වන වගන්තියේ විධිවිධාන මේ කොමිෂන් සභාවට අදාළ විය යුතු යයි මම මෙයින් ප්‍රකාශ කරමි.

වර්ෂ දහනවසිය අනූපහක් වූ දෙසැම්බර් මස 15 වන දින වූ මෙදින ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ මුද්‍රාව යටතේ කොළඹ දී දෙන ලදී.

අතිගරු ජනාධිපතිතුමියගේ අණ පරිදි,

කේ. බාලපටබැඳි
ජනාධිපති ලේකම්.

ජනා. කා. ගොනු. එස්/5/ජේ/206/95.

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1996 ජුනි මස දාහතර වැනි දින තෙක් මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1996 මාර්තු මස 13 වැනි දින,
කොළඹ, ජනාධිපති ලේකම් කාර්යාලයේ දී ය.

( ඇමිත් 01 ඇමුණුම 2 )

\- 4 -

ජනා.කා.අංකය. එස්ෆ්/6/එෆ්/206/95.

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1996 සැප්තැම්බර් මස දාහතර වැනි දින තෙක් මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1996 මැයි මස 29 වැනි දින,
කොළඹ, ජනාධිපති ලේකම් කාර්යාලයේ දී ය.

ජනා.කා.අංකය. එස්ෆ්/6/එෆ්/206/95.

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1996 දෙසැම්බර් මස දාහතර වැනි දින තෙක් මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1996 සැප්තැම්බර් මස 10 වැනි දින,
කොළඹ, ජනාධිපති ලේකම් කාර්යාලයේ දී ය.

ජනා.කා.අංකය : එස්ෆ්/6/එෆ්/206/95

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1997 පෙබරවාරි දාහතර වැනි දින තෙක් මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1996 දෙසැම්බර් මස 14 වන දින,
කොළඹ 1, ජනාධිපති ලේකම් කාර්යාලයේ දී ය.

- 5 -

ජනා.කා.අංකය: එස්පී/6/එස්/206/95

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1997 මාර්තු මස දහහතර වැනි දින තෙක් මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1997 පෙබරවාරි මස 13 වන දින,
කොළඹ 1, ජනාධිපති ලේකම් කාර්යාලයේදී ය.

ජනා.කා.අංකය. එස්පී/6/එස්/206/95

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1997 මැයි මස 14 දින තෙක් මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1997 මාර්තු මස 13 වන දින,
කොළඹ 01, ජනාධිපති ලේකම් කාර්යාලයේ දී ය.

ජනා.කා.අංකය: එස්පී/6/එස්/206/95

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1997 ජූලි මස 14 දින තෙක් මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1997 මැයි මස 14 වන දින,
කොළඹ 01, ජනාධිපති ලේකම් කාර්යාලයේ දී ය.

- 06 -

ජනා.කා.අංකය. ටීආර්/6/එන්/206/95

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ අවසාන වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1997 සැප්තැම්බර් මස 14 වැනි දින තෙක්, මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1997 ජූලි 11 දින,
කොළඹ, ජනාධිපති ලේකම් කාර්යාලයේ දී ය.

ජනා.කා.අංකය. ටීආර්/6/එන්/206/95

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ අවසාන වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1997 නොවැම්බර් මස 15 වැනි දින තෙක්, මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1997 සැප්තැම්බර් මස 12 දින,
කොළඹ, ජනාධිපති ලේකම් කාර්යාලයේදී ය.

---

ජනා.කා.අංකය. ටීආර්/6/එන්/206/95.

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ අවසාන වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1997 දෙසැම්බර් මස 31 වැනි දින තෙක්, මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති.

1997 නොවැම්බර් මස 13 දින,
කොළඹ, ජනාධිපති ලේකම් කාර්යාලයේ දී ය.

ජනා. කා. අංකය: වජව/6/වෂ්/206/95

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ අවසාන වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1998 ජනවාරි මස 31 දින තෙක්, මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති

1997 දෙසැම්බර් මස 31 දින,
කොළඹ 1,
ජනාධිපති ලේකම් කාර්යාලයේදී ය.

ජනා. කා. අංකය. [illegible]

393 වන අධිකාරය වූ පරීක්ෂණ කොමිෂන් සභා පනතේ 4 වන වගන්තියෙන් මා වෙත පැවරී ඇති බලතල ක්‍රියාත්මක කරමින්, කොමිෂන් සභාවේ අවසාන වාර්තාව ඉදිරිපත් කිරීම සඳහා වූ කාලය 1998 මාර්තු මස 26 දින තෙක්, මම මෙයින් දීර්ඝ කරමි.

ජනාධිපති

1998 ජනවාරි මස [illegible] දින,
කොළඹ 01,
ජනාධිපති ලේකම් කාර්යාලයේදී ය.

ANNEX - A

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
சனாதிபதி அதிமேதகு சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க
அவர்களினால்

[illegible] செப்தெம்பர் [illegible] ஆந்தேதியாம் நாளைத் தேதியிடப்பட்டதும், [illegible] செப்தெம்பர் மாதம் 4 ஆந் திகதிய 891 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான ஆணைப்பத்திரத்தின்கண் குறிக்கப்பட்ட [illegible] விசாரணை செய்ய, தகவல்பெற, அறிக்கையிட நோக்கத் [illegible] (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் [illegible] பிரகாரம் அதன்மூலம் விசாரணை ஆணைக்குழுவொன்றாக என்னால் தாபிக்கப்பட்டதாகும்.

ஆதலால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி சந்திரிகா [illegible] குமாரதுங்க ஆகிய நான் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் [illegible] செய்து [illegible] அதிகாரங்களைப் [illegible] 1995 செப்தெம்பர் [illegible] ஆந்தேதியாம் நாளைத் தேதியிடப்பட்டதும் 1995 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 4 ஆந் திகதிய 891 ஆம் இலக்க அதிவிசேட [illegible] பிரசுரிக்கப்பட்டதுமான மேற்கூறப்பட்ட ஆணைப்பத்திரத்தை இத்தால் நீடிக்கிறேன்.

சனாதிபதியின் ஆணைப்படி,

[illegible]
சனாதிபதியின் செயலாளர்.

199[illegible] [illegible] 15 ஆந் திகதி,
கொழும்பு.

[illegible] 35/7[illegible] ச.அ.இல:[illegible]/6/[illegible]/235/95 [illegible]

[illegible] சனநாயக சோசலிசக் குடியரசு

சனாதிபதி [illegible] சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா

அவர்களால்

1. [illegible] நீதிபதி திருவாளர் தர்மசிறி ஜயவிக்கிரம.

2. [illegible] நீதிபதி திருவாளர் நிமல் எட்வர்ட் திசாநாயக்கா

[illegible]

[illegible];

[illegible] விசாரணையொன்று எனது அபிப்பிராயப்படி [illegible] [illegible] அக்கருமங்களாக உள்ள [illegible] கூறப்படும் கருமங்கள்பற்றி விசாரணைசெய்யும் நோக்கத்துக்காக [illegible] ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பது அவசிய [illegible] [illegible] தோன்றுகின்றதாலால்;

ஆகவே, இப்பொழுது சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஆகிய நான், உங்கள் விவேகம், திறமை, நேர்மை என்பவைபற்றி மிக்க நம்பிக்கையும் உறுதியும்கொண்டு, (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றிச் சொல்லப்பட்ட –

1. மேல்நீதிமன்ற நீதிபதி திருவாளர் தர்மசிறி ஜயவிக்கிரம,
2. மேல்நீதிமன்ற நீதிபதி திருவாளர் நிமல் எட்வர்ட் திசாநாயக்கா

ஆகிய தங்களைப் பின்வரும் கருமங்கள்பற்றி விசாரணைசெய்து அறிக்கையிடுவதற்கு, எனது ஆணையாளர்களாக இருக்கும்படி இத்தால் நியமிக்கின்றேன். அதாவது –

(அ) 1990 பெப்புரவரி 20 ஆந் திகதியன்று அல்லது அத்தேதியளவில் சபுகஸ்கந்த பொலிஸ்நிலைய உதவி பரிசோதகர் ரோஹித பிரியதர்சன மறைந்துபோனமை தொடர்பான சந்தர்ப்ப சூழ்நிலைகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அத்தகைய மறைவுக்குப் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும், அதற்கு ஒத்தாசையாகவும் உடந்தையாகவும் இருந்த ஆளும் அல்லது ஆட்களும்;

(ஆ) 1990 பெப்புரவரி 24 ஆந் திகதியன்று அல்லது அத்தேதியளவில் பேலியாகொடை பொலிஸ்நிலைய உதவி பரிசோதகர் அஜித் ஜயசிங்க கைதுசெய்யப்பட்டமை அத்துடன் அதனையடுத்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டமை என்பன தொடர்பிலான சந்தர்ப்ப சூழ்நிலைகளும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவ்வாறு கைதுசெய்யப்படுவதற்கும் தடுப்புக்காவலில் வைக்கப் படுவதற்கும் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும் சொல்லப் பட்ட அஜித் ஜயசிங்க கைதுசெய்யப்படுவதற்கும் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதற்கும் ஒத்தாசையாகவும் உடந்தையாகவும் [illegible]
[illegible]

(இ) அரச பசளை உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் தடுத்துவைக்கும் இடமொன்றை அல்லது அடக்கமனைத் தாபித்தலைப் பேணுதலும் 1989 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 1990 திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது அத்தகைய இடத்தில் அல்லது இடங்களில் இடம்பெற்ற சூழ்ச்சியின் விளைவாக அத்தகைய இடத்தில் அல்லது இடங்களில் எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் மனிதாபிமானமற்ற முறையில் அல்லது இழிவாக நடாத்தப்படுவதற்கு அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் தவறொன்றாக அமையும் நடாத்தைக்கு உட்படுத்தப்பட்டாரா என்பதும், நேரடியாகவோ மறைமுகமாகவோ அவற்றிற்குப் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும்;

(ஈ) மேற்கூறப்பட்ட எவையேனும் விடயங்களையிட்டு எவரேனும் அலுவலரால் ஏதேனும் விசாரணை அல்லது புலனாய்வு நடாத்தப்பட்டதா என்பதும் அத்தகைய விசாரணையில் அல்லது புலனாய்வில் எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தலையிட்டாரா அல்லது தலையிட்டார்களா என்பதும் அத்தகைய தலையீட்டுக்குப் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும்;

(உ) மேலேகூறப்பட்ட எவையேனும் விடயங்கள் தொடர்பில் எவரேனும் அலுவலர் அல்லது வேறு எவரேனும் ஆள் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றவியல் தவறைப் புரிந்தாரா அல்லது தமது செல்வாக்கின் உபயோகத்திற்கு அல்லது அதிகாரத்தின் துர்ப்பிரயோகத்திற்குப் பொறுப்பாக இருந்தாரா என்பதும்,

இந்த ஆணைப்பத்திரத்தின் நியதிகளின்கீழ் எந்த விடயங்களையிட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளதோ அந்த விடயம் சம்பந்தமாக அத்தகைய விதப்புரைகளைச் செய்வதற்கும்.

அத்துடன் மேலும், மேல்நீதிமன்ற நீதிபதி திருவாளர் தர்மசிறி ஜயவிக்கிரம ஆகிய உங்களை சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக இருப்பதற்கு நியமிக்கிறேன்.

அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களைப்பற்றி அவசியமான வகையென உங்களுக்குத் தோன்றுகிறவாறான அத்தகைய எல்லா விசாரணைகளையும் நடாத்துவதற்கும் வேறெல்லாப் புலனாய்வுகளையும் செய்வதற்கும் சொல்லப்பட்ட ஆணையாளர்களாகிய உங்களுக்கு இத்தால் அதிகாரமளித்துத் தத்துவம் வழங்குகிறேன்; அத்துடன் உங்கள் விசாரணைகளின் சான்றுகளையும் உங்கள் விதப்புரைகளையும் தருகிற அதன்மீதான உங்கள் கைப்பட்ட அறிக்கையொன்றை அல்லது இடைக்கால அறிக்கைகளை இத்தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் எனக்கு அனுப்பி வைக்குமாறு உங்களை இத்தால் தேவைப்படுத்துகிறேன்.

அத்துடன் மேற்கூறப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில் பகிரங்கமாக நடாத்தப்படல் வேண்டுமென உங்கள் தற்றுணிபின்பேரில் நீங்கள் தீர்மானிக்கக் கூடியவாறான வேறேதும் விசாரணையின் அத்தகைய பாகம் தவிர்ந்த (நடாத்தப்) படுதல் வேண்டுமென நான் இத்தால் பணிக்கிறேன்;

அத்துடன் உங்கள் விசாரணைகளினதும் புலனாய்வுகளினதும் நோக்கங்களுக்காக எந்தப் பகிரங்க அலுவலர்களிடமும் வேறெந்த ஆட்களிடமும் நீங்கள் உதவி அல்லது தகவல் கோருகின்றீர்களோ, அந்தப் பகிரங்க அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்கள் அனைவரையும் தங்கள் சார்பில் முறையாக அளிக்கப்படக்கூடியவையும் கொடுக்கப்படக்கூடியவையுமான அத்தகைய எல்லா உதவிகளையும் அளிக்குமாறும் அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுக்குமாறும் இத்தால் நான் தேவைப்படுத்திப் பணிக்கிறேன்.

-05-

அத்துடன் மேற்சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஆணைக்குழுவுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு திசெம்பர் மாதம் பதினைந்தாம் நாளாகிய இன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமரின் ஆணைப்படி,

கே. பாலபட்டபெந்தி,
சனாதிபதியின் செயலாளர்.

ச. அ. இல: எஸ்பி/6/எச்/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1996 யூன் மாதம் பதினான்காம் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி

சனாதிபதி செயலகம்,
கொழும்பு.
1996 மார்ச் மாதம் 13 ஆந் திகதி.

ச. அ. இல: எஸ்பி/6/என்/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1996 செத்தெம்பர் மாதம் பதினான்காம் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
1996 மே மாதம் 21 ஆந் திகதி.

ச. அ. இல: எஸ்பி/6/என்/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1996 டிசெம்பர் மாதம் பதினான்காம் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
1996 செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி.

- 06 -

ச.அ.இல: எஸ்பி/6/எச்/206/95

393 அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1997 பெப்புருவரி பதினைந்தாம் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி

சனாதிபதி செயலகம்,
கொழும்பு.
1996 டிசம்பர் 14 ஆம் திகதி.

ச.அ.இல: எஸ்பி/6/எச்/206/95

393 அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1997 மார்ச்சு பதினைந்தாம் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி

சனாதிபதி செயலகம்
கொழும்பு.
1997 பெப்புருவரி 13 ஆம் திகதி.

ச.உ.இல.எஸ்பி/6/எச்/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 04 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1997 மே மாதம் 14 ஆம் திகதி வரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி

சனாதிபதி செயலகம்,
கொழும்பு.
1997 மார்ச் 05 ஆம் திகதி.

ச.உ.இல. எஸ்பி/6/எச்/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 04 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1597 ஜூலை மாதம் 14 ஆம் திகதி வரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 1,
1997 மே 14 ஆம் திகதி

ச. அ. இல: எஸ்பி/6/எச்/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 04 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1997 செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 1.

1997 யூலை 11 ஆந் திகதி.

ச. அ. இல: எஸ்பி/6/எச்/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 04 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1997 நவம்பர் மாதம் 15 ஆம் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 1.

1997 செத்தெம்பர் மாதம் 12 ஆம் திகதி.

ச.அ.இல:எஸ்பி/6/எச்/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 04 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1997 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு -1
1997 நவம்பர் 13 ஆம் திகதி.

ச.அ.இல:எஸ்பி/6/எச்/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 04 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1998 சனவரி மாதம் 31 ஆம் திகதி வரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு .01
1997 டிசெம்பர் 31 ஆம் திகதி.

ச.அ.இல: எஸ்பி/6/எக/206/95

393 ஆம் அத்தியாயமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 04 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 1998 மார்ச் 26 ஆந் திகதி வரை இத்தால் நீடிக்கின்றேன்.

சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு -01.

1998 சனவரி மாதம் 29 ஆம் திகதி.

ANNEX- A

L.D.B. 5/78

PS NO. SP/6/N/206/95

BY HER EXCELLENCY

CHANDRIKA BANDARANAIKE KUMARATUNGA,

PRESIDENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF

SRI LANKA.

To:

1. Dharmasiri Jayawickreme Esqr - Judge of the High Court;

2. Nimal Edward Dissanayake Esqr - Judge of the High Court.

## GREETINGS

WHEREAS it appears to me to be necessary to establish a Commission of Inquiry for the purpose of inquiring into the matters hereinafter mentioned, being matters in respect of which an inquiry will, in my opinion, be in the public interest ;

NOW THEREFORE, I, CHANDRIKA BANDARANAIKE KUMARATUNGA, President reposing great trust and confidence in your prudence, ability and fidelity, do, in pursuance of the provisions of section 2 of the Commissions of Inquiry Act, (Cap.393) by these presents appoint you, the said

**1.High Court Judge, Dharmasiri Jayawickrame Esqr.,**
**2.High Court Judge, Nimal Edward Dissanayake Esqr.,**

to be my Commissioners to inquire and report on the following matters :

(a) the circumstances relating to the disappearance of Sub Inspector Rohitha Priyadarshana of the Sapugaskanda Police Station on or about February 20, 1990 and the person or persons directly or indirectly responsible for such disapperance and the person or persons who aided and abetted the same;

(b) the circumstances relating to the arrest and subsequent detention of Sub Inspector Ajith Jayasinghe of the Peliyagoda Police Station on or about February 24, 1990 and the person or persons directly or indirectly responsible for such arrest and detention and the persons who aided and abetted in arresting and detaining the said Ajith Jayasinghe;

(c) the establishment and maintenance of a place or places of detention at the Batalanda Housing Scheme of the State Fertilizer Manufacturing Corporation and whether, during the period commencing on the 1st of January 1988 and ending on the 31st of December 1990 any person or persons were detained at such place or places and were subject to inhuman or degrading treatment or to treatment which constitute an offence under any written law as a result of a conspiracy and the person or persons directly or indirectly responsible for the same;

(d) whether any inquiry or probe into any of the aforesaid matters had been conducted by any officer and whether any person or persons directly or indirectly interfered in such inquiry or probe and the person or persons responsible for such interference;

(e) whether any officer or any other person was responsible for the commission of any criminal offence under any written law or the use of undue influence or misuse or abuse of power in relation to any of the aforesaid matters,

and to make such recommendation with reference to any of the matters that have been inquired into under the terms of this Warrant.

AND I do hereby appoint you, Dharmasiri Jayawickreme Esqr to be the Chairman of the said Commission;

AND I do hereby authorize and empower you, the said Commissioners, to hold all such inquiries and make all other investigations, into the aforesaid matters as may appear to you to be necessary, and require you to transmit to me within three months from the date hereof, a report or interim reports thereon under your hands, setting out the findings of your inquiries, and your recommendations;

AND I do hereby direct that such part of any inquiry relating to the aforesdaid matters, as you may in your discretion determine, shall not be held in public;

AND I do hereby require and direct all Public Officers, and other persons to whom you may apply for assistance or information for the purposes of your inquiries and investigations to render all such assistance and furnish all such information as may be properly rendered and furnished in that behalf;

AND I do hereby declare that the provisions of section 14 of the aforesaid Commissions of Inquiry Act, shall apply to the Commission :

Given at Colombo, under the seal of the Democratic Socialist Republic of Sri Lanka this 15th of December One Thousand Nine Hundred and Ninety Five

By Her Excellency's Command.

K. Balapatabendi

Secretary to the President.

P.O. No. SP/5/N/206/95

In the exercise of powers vested in me by section 4 of the Commission of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the Final Report of the Commission until 14th day of June, 1996.

PRESIDENT.

Presidential Secretariat,
Colombo 01.

13 March, 1996.

P.O. No. SP/6/N/206/95

In the exercise of powers vested in me by section 4 of the Commission of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the Report of the Commission until 14th day of September, 1996.

PRESIDENT.

Presidential Secretariat,
Colombo 01.

29 May, 1996.

P.O. No. SP/6/N/206/95

In the exercise of powers vested in me by section 4 of the Commission of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the Report of the Commission until 14th day of December, 1996.

PRESIDENT.

Presidential Secretariat,
Colombo 01.

10 September, 1996.

P.O. No. SP/6/N/206/95

In the exercise of powers vested in me by section 4 of the Commission of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the Report of the Commission until 14th day of February, 1997.

PRESIDENT.

Presidential Secretariat,
Colombo 01.

14th December, 1996.

P.O. No. SP/6/N/206/95

In the exercise of powers vested in me by section 4 of the Commissions of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the report of the Commission until 14th day of March, 1997.

PRESIDENT.

Presidential Secretariat
Colombo 1
13th February, 1997.

P.O. No. SP/6/N/205/95

In the exercise of powers vested in me by section 4 of the Commissions of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the report of the Commission until 14th day of May, 1997.

PRESIDENT.

Presidential Secretariat,
Colombo 1
5th March, 1997.

P.O. No. SP/6/N/206/95

In the exercise of powers vested in me by section 4 of the Commissions of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the Report of the Commission until 14th day of July, 1997.

PRESIDENT.

Presidential Secretariat,
Colombo 01.

14th May, 1997.

P.O. No. SP/6/N/205/95

In the exercise of powers vested in me by section 4 of the Commissions of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the report of the Commission until 14th day of September, 1997.

PRESIDENT.

Presidential Secretariat,
Colombo 01.

11th July, 1997.

P.O. No. SP/6/N/206/95

In the exercise of powers vested in me by section 4 of the Commissions of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the report of the Commission until 15th day of November, 1997.

PRESIDENT.

Presidential Secretariat,
Colombo 01.

12th September, 1997.

P.O. No. SP/6/N/206/95

In the exercise of powers vested in me by section 4 of the Commissions of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the report of the Commission until 31st day of December, 1997.

PRESIDENT.

Presidential Secretariat,
Colombo 01.

13th November, 1997.

P.O. No. SP/6/N/206/95

In the exercise of powers vested in me by Section 4 of the Commissions of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the report of the Commission until 31st day of January 1998.

PRESIDENT

Presidential Secretariat
Colombo 01

31st December, 1997.

P.O. No. SP/6/N/206/95

In the exercise of powers vested in me by Section 4 of the Commissions of Inquiry Act, Chapter 393, I do hereby enlarge the time for the rendering of the report of the Commission until 26th day of March 1998.

PRESIDENT

Presidential Secretariat
Colombo 1.

29th January, 1998.

ANNEX B

දිනමිණ එම 1996 ජනවාරි 12 වැනිදා සිකුරාදා

පුද්ගලයන් අතුරුදහන්වීම හා නීතිවිරෝධී
අත් අඩංගුවට ගැනීම සහ රඳවුම ස්ථාන.
බටලන්ද නිවාස යෝජනා ක්‍රමයේ
පවත්වාගෙනයාම සම්බන්ධයෙන්
පරීක්ෂා කිරීම සඳහා අතිගරු ජනාධිපතිතුමිය
විසින් 1948 අංක 17 දරණ පරීක්ෂණ
කොමිෂන් සභා පනතේ 2 වන වගන්තිය
ප්‍රකාරව පත්කරන ලද
පරීක්ෂණ කොමිෂන් සභාව

පහත දැක්වෙන කරුණු සම්බන්ධයෙන් විශ්වාසනීයයන් තොරතුරු ලබාගැනීම [illegible] කැමැත්තෙන් සිටී -

(1) 1990 පෙබරවාරි මස 20 වන දින හෝ ඊ ආසන්නයේ දී [illegible] පොලිස් ස්ථානයේ සේවය කළ උපපොලිස් පරීක්ෂක [illegible] ප්‍රියදර්ශන අතුරුදහන්වීමට අදාළ අවස්ථානුගත කරුණු සහ එට වගකිවයුතු පුද්ගලයා හෝ පුද්ගලයන්;

(2) 1990 පෙබරවාරි මස 24 වන දින හෝ ඊ ආසන්නයේදී [illegible] පොලිස් ස්ථානයේ සේවය කළ උපපොලිස් පරීක්ෂක [illegible] අත් අඩංගුවට ගැනීම සහ නොනීතිව රඳවා [illegible] ගැනීම් එළිමද අවස්ථානුගත කරුණු සහ එට වගකිවයුතු පුද්ගලයා හෝ පුද්ගලයන්

(3) [illegible] බටලන්ද නිවාස [illegible] ක්‍රමයේ නීතිවිරෝධී [illegible] රඳවා තබා ගැනීමේ [illegible] පවත්වාගෙන ගියේ නම්, සහ 1988 ජනවාරි මස [illegible] වන දිනෙන් ආරම්භව 1990 දෙසැම්බර් මස 31 වන [illegible] ඇතුළත එම ස්ථානයේ [illegible] රඳවා තබා [illegible] නැත්නම්, [illegible] රඳවා තබාගත [illegible] හෝ එම ලබන [illegible] එම රට [illegible] පුද්ගලයා හෝ පුද්ගලයන්

(4) [illegible] අවස්ථානුගත කරුණු සම්බන්ධයෙන් [illegible] වගකිව යුතු පුද්ගලයන්. සහ [illegible] සම්බන්ධයෙන් විමර්ශනයන් [illegible] නම්. [illegible] එට අදාළ [illegible] වාර්තාව;

එට අදාළ [illegible] තොරතුරු ලබාදීමට [illegible] නම් [illegible] සැලකිල්ලට ගත යුතු [illegible] කිරීමට [illegible] නම් [illegible] යුතුය

[illegible] තොරතුරු පහත ලිපිනයට යැවිය යුතුය :-

[illegible] ලේකම්
පුද්ගලයන් අතුරුදහන්වීම හා නීතිවිරෝධී
අත්අඩංගුවට ගැනීම සහ රඳවුම් ස්ථාන
බටලන්ද නිවාස යෝජනා ක්‍රමයේ පවත්වාගෙනයාම
සම්බන්ධයෙන් පරීක්ෂා කිරීම සඳහා වූ
පරීක්ෂණ කොමිෂන් සභාව
[illegible] අංක 301.
3 වන මහල.

1

Annex B

சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்படல், படலந்த வீடமைப்புத் திட்டத்தில் சட்டவிரோதமான தடுப்புக் காவலிடங்கள் பராமரிக்கப்படுதல் என்பவற்றை விசாரணை செய்வதற்கு 1948ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசாரணைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 2ஆம் பிரிவைப் பின்பற்றி அதி உத்தமமாம் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணை

**ஆணைக்குழு**

ஆணைக்குழு பின்வருவன தொடர்பில் பொதுமக்களிடமிருந்து தகவல் பெறுவதில் ஆர்வங்கொண்டுள்ளது:

(1) 1990 பெப்ரவரி 28ஆம் திகதிய அல்லது அத்திகதியையண்டிய சபுகஸ்கந்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பரிசோதகர் ரோஹித பிரியதர்ஷனவின் காணாமற்போனமை தொடர்பிலான குற்றங்களை, அத்துடன் அதற்குப் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும்

(2) 1990 பெப்ரவரி 28ஆம் திகதிய அல்லது அத்திகதியையண்டிய பேலியகொட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பரிசோதகர் அஜித் ஜயசிங்க கைது செய்யப்பட்டமை, அத்துடன் அதனையடுத்து தடுத்துவைக்கப்பட்டமை என்பன தொடர்பிலான குற்றங்களை அத்துடன் அதற்குப் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும்.

(3) அரச பசளை உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் படலந்த வீடமைப்புத் திட்டத்தில் சட்டவிரோதமான தடுப்பு இடமொன்று தாபிக்கப்பட்டமை, பேணப்பட்டமை அத்துடன் 1988 சனவரி 1ஆம் திகதி தொடக்கம் 1990 டிசெம்பர் 31ஆம் திகதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது அத்தகைய இடத்தில் அல்லது இடங்களில் தடுத்துவைக்கப்பட்ட ஆட்கள் மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான நடத்தைக்கு அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் வலிதற்றதாக அமையும் நடத்தைக்கு உட்படுத்தப்பட்டனரா என்பதும் அத்துடன் அதற்குப் பொறுப்பான ஆளும் அல்லது ஆட்களும்.

(4) மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பாயிருந்த ஆட்களும் அத்துடன் அத்தகைய விடயங்களைவிட்டு நடத்தப்பட்ட ஏதேனும் விசாரணை அல்லது புலனாய்வு தொடர்பில் முறையற்ற தலையீடு எதுவும் இடம்பெற்றதா என்பதும் அத்துடன் அத்தகைய தலையீட்டிற்குப் பொறுப்பாயிருந்த ஆட்களும் அத்தகைய தலையீட்டின் தன்மையும்

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பிலான எல்லாத் தகவல்களும் எழுத்தில் முகவரியிடப்பட்டு அனுப்பப்படலாம் என்பதுடன் அத்தகைய தகவல் தருபவரின் பெயரும், முகவரியும் தெளிவாகக் குறிப்பிடப்படவும் வேண்டும்

தமது ஆளடையாளத்தை வெளியிட விரும்பாத ஆளெவரும் அவ்வாறு வேண்டுகோள் விடுக்கலாம்

எல்லாத் தகவல் தொடர்புகளும் பின்வருமாறு முகவரியிடப்படுதல் வேண்டும் -

[illegible] பீ. குணவர்தன
செயலாளர்,
குறித்தசில ஆட்கள் காணாமற்போனமை, ஆட்கள் சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்படல், படலந்த வீடமைப்புத் திட்டத்தில் சட்டவிரோதமான தடுப்புக்காவலிடங்கள் நடாத்தப்படுதல் என்பவற்றை விசாரணை செய்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழு

கூடம் இல. 301.
3ஆம் மாடி
மீயுயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி
கொழும்பு-12
அல்லது
மேல் நீதிமன்றம் இல. 1
கொழும்பு-12

ANNEX 5

DAILY NEWS - 13 01 1996

**COMMISSION OF INQUIRY INTO THE DISAPPEARANCE OF CERTAIN PERSONS, UNLAWFUL ARREST OF PERSONS AND THE OPERATION OF ILLEGAL DETENTION PLACES AT THE BATALANDA HOUSING SCHEME APPOINTED BY HER EXCELLENCY THE PRESIDENT IN PURSUANCE OF THE PROVISIONS OF SECTION 2 OF THE COMMISSION OF INQUIRY ACT NO. 17 OF 1948**

The Commission will be pleased to receive information from the public in respect of the following

(1) the circumstances relating to disappearance of Sub Inspector, Rohitha Priyadharshana of Sapugaskanda Police Station on or about February 20, 1990, and the person or persons responsible for the same

2) the circumstances relating to the arrest and subsequent detention of Sub Inspector Ajith Jayasinghe of the Peliyagoda Police Station on or about February 24, 1990 and the person or persons responsible for the same.

(3) the establishment and maintenance of an illegal detention place at the Batalanda Housing Scheme of the State Fertilizer Manufacturing Corporation, and whether during the period commencing on January 1, 1988 and ending on December 31, 1990, persons were detained in such place or places and were subject to inhuman or degrading treatment or to treatment which constitutes an offence under any written law, and the person or persons responsible for the same

(4) persons directly or indirectly responsible for the aforesaid matters and whether any undue interference took place with regard to any inquiry or probe held into those matters and the persons responsible for such interference and the nature of such interference

All information relating to the aforesaid matters may be addressed in writing and should clearly state the name and address of such informant.

Any person who does not wish to disclose his or her identity may so request

All communications should be addressed to

**B.T. Gunawardena**
**Secretary,**
**Presidential Commission of Inquiry into the Disappearance of Certain Persons, Unlawful arrest of Persons and the Operation of an Illegal Detention Place at the Batalanda Housing Scheme,**
**Room No. 301,**
**3rd Floor,**
**Superior Courts Complex,**
**Colombo 12**

## இணைப்பு இ

### சான்றாளார்கள் சார்பில் தோற்றிய வழக்குரைஞர்கள்

| | | |
|---|---|---|
| 1. | பி.ப. ரஞ்சித் விக்கிரமசிங்கா | திரு.நெவில் அபேரத்னா<br>சட்டத்தரணி<br>திரு.உபுல் தேசப்பிரியா<br>சட்டத்தரணி<br>திரு.சமன் வைத்தியரத்னா<br>சட்டத்தரணி |
| 2. | உ.பொ.க. டக்ளஸ் பீரிஸ் | திரு.நளின் லத்துவஹெட்டி<br>சட்டத்தரணி<br>திரு.யு.எல்.ஜி.பண்டார<br>சட்டத்தரணி |
| 3. | பி.பொலிசுமா அதிபர்(மெரில்) குணரத்னா | திரு.மொஹான் பீரிஸ்<br>சட்டத்தரணி<br>திரு.சானக ரணசிங்கா<br>சட்டத்தரணி |
| 4. | திரு.ரணில் விக்கிரமசிங்கா | திரு.திலக் மாரப்பனே<br>சனாதிபதி வழக்குரைஞர்<br>திரு.நளின் லத்துவஹெட்டி<br>சட்டத்தரணி |
| 5. | திரு.ஜோன் அமரதுங்கா | திரு.துலிந்த வீரசூரியா<br>சட்டத்தரணி |
| 6. | திரு.ஜோசப் மைக்கல் பெரேரா | திரு.துலிந்த வீரசூரியா<br>சட்டத்தரணி |
| 7. | திரு.அனில் குணவர்த்தனா | திரு.நெவில் அபேரத்னா<br>சட்டத்தரணி |

இணைப்பு ஈ

## புலனாய்வுக் குழுக்கள்
## விசேட புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர்கள்

### பிரதிப் பொலிசுமா அதிபர் எஸ் சி பத்திரண(பிரிவுத் தலைவர்)

1. பொ.ப, பி ஏ பிரேமசாந்தா
2. பொ.ப, ஜி எம் விஜேரத்னா
3. உ.ப, ஆர் எம் வி புஸ்பகுமார
4. பொ.சா, பி ஆர் குணசேகரா
5. பொ.சா, எச் டி ஜே ஜயதிலகா
6. பொ.கா, ரி குமாரப்பெருமா
7. பொ.கா, சி ஏ திசாநாயக்கா
8. பொ.கா, ஆர் ஜி ரத்நாயக்கா
9. பொ.சா.சா, எம் பீ கருணாரத்னா
10. பொ.கா.சா, டி எம் விமலரத்னா
11. ஓ.பெ.பொ.கா, ஜி பி சுனீத்தா

### புலனாய்வுப் பிரிவின் காரியாலய சிற்றூழியர்கள்

1. பீ வி சிறிபாலா
2. ஜே பி கே பெரேரா

### ஆணைக்குழுவுக்கு இணைக்கப்பட்டிருந்த குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்

### பிரதிப் பொலிசுமா அதிபர் ரி வி சுமனசேகரா (குழுத் தலைவர்)

1. பொ.க, எச் எச் எம் ஆர் பிரேமரத்னா
2. பி.ப, ஆர் எல் சந்திரசிறி
3. பொ.சா, டபிள்யு நந்தன திலக
4. பொ.சா, டி ஏ யு திசாநாயக்கா
5. பொ.கா, கே மகிந்த பெரேரா
6. பொ.கா, செனவிரத்னா
7. பொ.கா.சா, எச் ஏ சரணபாலா
8. பொ.கா.சா ஆர் பி கே ராஜபக்ஸ

இணைப்பு உ

## ஆணைக்குழுவின் பதவியினர்

| | | |
|---|---|---|
| திரு.ஜி.கே.ஜி.பெரேரா | - | தவிசாளர் |
| திரு.எஸ்.ஏ.லயனல் பெரேரா | - | பதில் உதவிச் செயலாளர் |
| திரு.கே.ஏ.டி.குமாரசிங்கா | - | எழுதுநர் |
| திருமதி.எச்.எச்.ரத்நாயக்கா | - | சுருக்கெழுத்தாளர்(ஆங்கிலம்) |
| திரு.எச்.ரி.த. வாஸ் குணவர்த்தனா | - | சுருக்கெழுத்தாளர்(ஆங்கிலம்) |
| திரு.டி.களுஆராச்சி | - | சுருக்கெழுத்தாளர்(ஆங்கிலம்) |
| திருமதி.குசும் சுமனசேகரா | - | சுருக்கெழுத்தாளர்(சிங்களம்) |
| திருமதி. ஐ.கே.எஸ் பெரேரா | - | சுருக்கெழுத்தாளர்(சிங்களம்) |
| திருமதி. எல்.எச்.ஜி த சில்வா | - | தட்டெழுத்தாளர்(சிங்களம்) |
| திரு.எம்.எல்.வால்ட்டர் | - | மொழிபெயர்ப்பாளர் |
| திரு.எஸ்.எம்.வை.கிங்ஸ்லி உதய | - | மொழிபெயர்ப்பாளர் |
| திரு.வை.ஜி.என். தயாரத்னா | - | நீதிமன்ற முரசறைவோன் |
| திரு.டி.எம்.சுனில் | - | ஒலி முறைமை இயக்குநர் |
| திரு.டி.ஜயசூரியா | - | அலுவலக உதவியாளர் |
| திரு.ஐ.பி.பத்ம சிறில் | - | அலுவலக சிற்றூழியர்(அமய) |
| திரு.கே.நியூட்டன் பெரேரா | - | சாரதி(அமய) |

ANNEX - F

# ජනාධිපතිත්‍ය විසින් පත්කරනු ලැබූ පරීක්ෂණ කොමිෂන් සභාව ඉදිරියේ සාක්ෂි දීම සඳහා වූ සිතාසිය

([illegible] 11, 13 [illegible])

1990 පෙබරවාරි මස 20 වන දින හෝ ඊට ආසන්න දිනයකදී [illegible] පොලිස් [illegible] 1950 පෙබරවාරි 3 සිට 21 වන දින හෝ ඊට ආසන්න දිනයකදී [illegible] 1988 ජනවාරි 01 වන දින සිට 1990 දෙසැම්බර් 31 වන දින දක්වා [illegible]

නම

ලිපිනය

[illegible]

| වර්ෂය | මාසය | දිනය | වේලාව | ස්ථානය |
| --- | --- | --- | --- | --- |
| | | | | |

[illegible]

කොමිෂන් සභාව අණ පරිදි.

ලේකම්.

[illegible]
කොමිෂන් සභාව,
[illegible] අංක. 02,
[illegible],
කොළඹ 12.

වර්ෂ [illegible] මස [illegible] දින

180

[illegible]:

[illegible] 11(2). 11(3). 12(1). 12(2). 12(3). 16 [illegible]

11. (2) [illegible]

(3) [illegible]

12. (1) [illegible] —

(අ) [illegible]

(ආ) [illegible]

(ඇ) [illegible]

[illegible]

(2) [illegible]

(3) [illegible] —

(අ) [illegible]

(ආ) [illegible]

16. [illegible]

**இணைப்பு எ**

## சாட்சியாளர்களின் பட்டியல்

**ஆணைக்குழுமுன் தோற்றிய ஒழுங்கின்படி பெயர்கள் நிரல்படுத்தப்பட்டுள்ளன**

1. எஸ் ஈ வெதிசிங்கா
2. டபிள்யு எம் டி எம் விஜேகோன்
3. கே.கே நந்தசேனா
4. கே பி சுபசிங்கா
5. எஸ் டி என் சிறிவர்த்தனா
6. அஜித் ஜயசிங்கா
7. ஜூட் ரொஹான் பீரிஸ்
8. எஸ் எம் அமரசேனா
9. எஸ் எம் தினேஸ்
10. ஏ என் சேனநாயக்கா
11. நெவில் பந்துல தினபூர்ண
12. ஏர்ல் சுஜீ பெரேரா
13. பற்றிக் பெரேரா
14. வாசல ஜயசேகரா
15. ஆனந்த ஜயசேகரா
16. ரி எம் பந்துல
17. எச் பிரியன்த உதித்த
18. ஆர் டி கே ரத்னசிறி
19. சுமன மாணல் தேவேந்திரா
20. சுவர்ண காந்தி பெரேரா
21. எல் எம் ஹென்றி பெரேரா
22. ஏ விமல் அத்தநாயக்கா
23. தர்மதாஸ சில்வா
24. வசந்த குமார குலதுங்கா
25. சந்திரகுப்த அமரசிங்கா
26. மத்துமகே பிரேமரத்னா
27. வி ஆர் எல் கே கருணாகலகே
28. வின்சன்ட் பெர்ணாந்து
29. ஜயந்த ரூபாநந்தா
30. ஸ்ரான்லி த சில்வா
31. மாகிரட் பெர்ணாந்து
32. நந்தன வீரரத்னா
33. எச் எச் எம் ஆர் பிரேமரத்னா
34. பியதிஸ்ஸ பெரேரா
35. உதயச்சந்திர லியனகே
36. ரஞ்ஜினி குலரத்னா
37. சுவாரிஸ் கபுகல
38. டேஸி சுமணாவதி
39. வீரமன் ஜயவர்த்தனா
40. மாயாதுன்னகே எட்வின்
41. கயான் பிரதிப் குமார

42. நிமல் சந்திரரத்ன
43. பிரான்ஸிஸ் பெரேரா
44. லியனகே சமரதாச பெரேரா
45. எச் சைமன் சிங்கோ
46. மடவல லியனகே இந்திராணி
47. டிங்கிரி பண்டா வீரசிங்கா
48. பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரா
49. ஆரச்சிகே சுமணாவதி
50. நளின் சிறிபால தெல்கொட
51. டொன் சுஜீவ தம்மிக
52. ஹேமச்சந்திர டயஸ்
53. உடுகம்பலலாயே நிமலாவதி
54. ஆர் ஏ சாந்த காமினி
55. ஜி ஆர் காமினி சரத்
56. கே எல் அசோக மாணல்
57. ரியூடர் பெரேரா மகேவிட்ட
58. ரி நிஹால் பத்மசிறி
59. லக்ஸ்மன் இந்திரஜித்
60. ஏர்னஸ்ட் பெரேரா
61. பத்மினி பிரேமலதா
62. சாந்த காமினி ரத்நாயக்கா
63. ஷெல்டன் குணசேகரா
64. திஸ்ஸ பலிபான
65. டிக்ஸன் மெண்டிஸ்
66. சுசில் ரோஹண
67. கீர்த்தி குமார அத்தபத்து
68. மானகே மெத்தானந்த குணரத்னா
69. மதுரகே ரணதுங்கா
70. லக்ஸ்மன் டயஸ்
71. ராஜா டயஸ்
72. சேபாலிகா விஜேசிங்கா
73. ரஞ்ஜித் ஜயசேகரா
74. உபாலி லக்ஹேவா
75. ஈ பி ஜி ஜயரத்னா
76. பி ஆர் ஜி ஹீன்பண்டா
77. லக்ஸ்மன் உதய குமார ரணசிங்கா
78. அனில் இந்திரஜித் குணவர்த்தனா
79. ஜோன் அமரதுங்கா
80. ரஞ்ஜித் விக்கிரமசிங்கா
81. ஜோசெப் மைக்கல் பெரேரா
82. ரணில் விக்கிரமசிங்கா

## இணைப்பு ஏ

## ஆவணங்கள் மற்றும் சமர்ப்பிப்புகள் என்பவற்றின் பட்டியல்

X1 சுனில் எட்மன்ட் வெதிசிங்காவினால் பொலிசுமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு

X 1A X 1 உடன் இணைக்கப்பட்ட ஆவணம்

X 2 26.02.1990 திகதியிட்ட "தினமின" செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒரு செய்திக் கட்டுரை

X 3 27.02.1990 திகதியிட்ட "தினமின" செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒரு செய்திக் கட்டுரை

X 4 28.02.1990 திகதியிட்ட "ஜனதா" செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒரு செய்திக் கட்டுரை

X 5 27.02.1990 திகதியிட்ட "டெய்லி நியூஸ்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்திக் கட்டுரை

X 6 அஜித் ஜயசிங்காவின் மேன்முறையீட்டுக்குப் பதிலாக பொலிசுமா அதிபரினால் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட தொடர்பு எண் EV/09/03/95 கொண்ட பதில் கடிதம்

X 7 ஜூட் பீரிஸ்சுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்தல்

X 8 ஜூட் பீரிஸ்சின் சத்தியக்கடதாசி

X 9 சுல்தான்கொட அமரசேனாவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசி

X 10 சுல்தான்கொட அமரசேனாவினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்கொணர்வு மனு

X 11 சாதாரண தகவல் புத்தகமொன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி

X 12 சுல்தான்கொட தினேஸ் பெற்றுக்கொண்ட தொலைபேசிச் செய்தி

X 13 24.02.1990 அன்று சுல்தான்கொட தினேஸ் டக்ளஸ் பீரிஸிடம் கொடுத்த வாக்குமூலத்தின் பிரதி

X 14 ரோஹித பிரியதர்ஸனாவின் புகைப்படம்

X 15 விசேட அதிரடிப்படைச் சீருடையில் எடுக்கப்பட்ட ரோஹித பிரியதர்ஸனாவின் புகைப்படம்

X 16 ரோஹித பிரியதர்ஸனாவின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மூன்று மாத நிறைவு அன்னதானச் சடங்கில் எடுக்கப்பட்ட புகைப்படம்

X 17 ரோஹித பிரியதர்ஸனாவின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மூன்று மாத நிறைவு அன்னதானச் சடங்கில் எடுக்கப்பட்ட புகைப்படம்

X 18 ரோஹித பிரியதர்ஸனாவின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மூன்று மாத நிறைவு அன்னதானச் சடங்கில் எடுக்கப்பட்ட புகைப்படம்

X 19 ரோஹித பிரியதர்ஸனாவின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மூன்று மாத நிறைவு அன்னதானச் சடங்கில் எடுக்கப்பட்ட புகைப்படம்

X 20 இல.161/93 கொண்ட கம்பஹா உயர் நீதிமன்ற வழக்கின் விசாரணை விபரங்கள்

X 21 இல.6049/93 கொண்ட கொழும்பு உயர் நீதிமன்ற வழக்கின் விசாரணை விபரங்கள்

X 22 23.02.1990 திகதியிட்ட "திவயின" பத்திரிகையின் ஒரு பகுதி

X 23 நிஹால் சேனநாயக்காவினால் டக்ளஸ் பீரிஸ்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 06.02.1995 திகதியிட்ட கடிதம்

X 24 அமைச்சரின் அறிவுறுத்தலின்பேரில் டக்ளஸ் பீரிஸ்சுக்கு ஒரு வீடு விடுவிக்கப்பட்டுள்ளது என்பதனைக் காட்டும் கடிதம்

X 25 வீடுகள் ஒதுக்கப்பட்டமை சம்பந்தப்பட்ட விபரங்கள் அடங்கிய ஓர் அட்டவணை
X 26 லக்ஸ்மன் ரணசிங்காவின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் கொண்டிருக்கும் ஒரு காகிதத்துண்டு
X 27 லக்ஸ்மன் ரணசிங்காவின் முகவரியைக் கொண்டிருக்கும் ஒரு காகித்ததுண்டு
X 28 லக்ஸ்மன் ரணசிங்காவின் தொலைபேசி எண் மற்றும் முகவரி என்பவற்றைக் கொண்டிருக்கும் ஒரு காகிதத்துண்டு
X 29 ரி பற்றிக் பெரேரா 23.03.1990 அன்று பொலிசில் கொடுத்த வாக்குமூலத்தின் நகல்
X 30 ரி பற்றிக் பெரேரா 19.04.1990 அன்று பொலிசில் கொடுத்த வாக்குமூலத்தின் நகல்
X 31 வாசல ஜயசேகரா தொடர்பாக மாஜிஸ்ட்ரேட் நீதவானால் வழங்கப்பட்ட கட்டளை
X 32 பொலிசு உத்தியோகத்தர்களால் வீடுகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக பொலிசுமா அதிபரினால் வெளியிடப்பட்ட அறிக்கை
X 33 அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒழித்துக்கட்டுநருக்கு உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸினால் அனுப்பி வைக்கப்பட்ட 02.08.1988 ஆந் திகதியிட்ட கடிதம்
X 34 திரு.ரணில் விக்கிரமசிங்காவினால் பொலிசுமா அதிபர் பிராங் சில்வாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம்
X 35 மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வாசல ஜயசேகராவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம்
X 36 புதுக்கடை மாஜிட்ரேட் நீதிமன்ற இல.B 1600 கொண்ட வழக்கின் பதிவு
X 37 ரி எம் பந்துலவின் அடையாள அட்டை
X 38 ரி எம் பந்துலவுக்கு வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழ்
X 39 ஒரு கைவிலங்கின் ஒரு பாகம்
X 40 ரி எம் பந்துலவினால் வெளியடப்பட்ட துண்டுப் பிரசுரம்
X 41 ரி எம் பந்துலவின் கடவுச் சீட்டு
X 42 பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பொலிசுமா அதிபரால் அனுப்பி வைக்கப்பட்ட சிபார்சுக் கடிதம்
X 43 அமைச்சரவைப் பத்திரம்
X 44 அமைச்சரவைத் தீர்மானம்
X 45 டக்ளஸ் பீரிஸ் சம்பந்தப்பட்ட விவரங்களை உள்ளடக்கி பொலிசுமா அதிபரினால் அனுப்பப்பட்ட கடிதம்
X 46 பட்டலந்த வீடமைப்புத் திட்டம் தொடர்பான வீடியோ நாடா
X 47 பாலியகொடை பொலிசு நிலையத்திலிருந்து வசந்த குலதுங்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்தல்
X 48 பட்டலந்த வீடமைப்புத்திட்டத்தில் உள்ள வீடுகளின் புகைப்படங்கள்
X 49 பட்டலந்த வீடமைப்புத்திட்டத்தில் உள்ள வீடுகளின் புகைப்படங்கள்
X 50 "ராவய" பத்திரிகையில் பிரசுரமாகிய செய்திக் கட்டுரை
X 51 வின்சன்ட் பெரேராவினால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம்
X 52 ஜூட் பீரிஸ்சினால் நந்தன வீரரத்னாவுக்கு கொடுக்கப்பட்ட கடிதம்
X 53 போலிக் கடவுச் சீட்டொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக டக்ளஸ் பீரிஸ்சினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம்
X 54 ரஞ்ஜினி குலரத்னாவால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம்
X 55 டக்ளஸ் பீரிஸ்சுக்கு எதிரான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை
X 56 பாலியகொடை பொலிசுத் தலைமையக பரிசோதகரினால் ரஞ்ஜனி குலரத்னாவுக்கு வழங்கப்பட்ட கடிதம்
X 57 முதுன்கொட்டுவகே சந்திரசிறியின் மரணச் சான்றிதழ்
X 58 சுவாரிஸ் ஹபுகலவினால் எச் கே ஜயசிங்காவுக்கு கொடுக்கப்பட்ட கடிதம்
X 59 சைமன் சிங்கோவின் மருத்துவச் சான்றிதழ்
X 60 பொலிசுத் தலைமையகத்தினால் சைமன் சிங்கோவுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்

X 61 1989 முதல் 1990 வரையிலான காலப்பிரிவு தொடர்பான சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் அதிகாரிகள் வருகைக் குறிப்புப் புத்தகம்
X 62 பொலிசுத் திணைக்கள ஒழுங்குவிதிகள் B11
X 63 பொலிசுச் சுற்றறிக்கை இல.737/87
X 64 பொலிசு வர்த்தமானி இல.597
X 65 பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் வீடுகள் ஒதுக்கப்பட்டமையைக் காட்டும் கடிதம்
X 66 கதுருவாஹேனகே ஜினதாசா சம்பந்தப்பட்ட B - அறிக்கை
X 67 கதுருவாஹேனகே ஜினதாசாவின் ஒப்புதல் வாக்குமூலம்
X 68 பரிசோதகர் வெதிசிங்காவின் மேன்முறையீடு
X 69 ரோஹித பிரியதர்ஸனாவுக்கு வழங்கப்பட்ட பதவியைவிட்டு விலகிச் சென்றிருப்பதனை அறிவிக்கும் கடிதம்
X 70 ரோஹித பிரியதர்ஸனா தொடர்பாக சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் தெல்கொடவினால் பிரதிப் பொலிசுமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கை
X 71 உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ் தொடர்பான சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் தெல்கொடவினால் வழங்கப்பட்ட நற்சான்றுக் கடிதம்
X 72 ஆணைக்குழுவின்முன் சாட்சியமளிக்கும்பொழுது தனக்கு உதவக்கூடிய வகையில் சி.பொ.அ. தெல்கொடவினால் தயாரிக்கப்பட்ட ஆவணம்
X 73 X72 இன் ஆங்கிலப் பிரதி
X 74 ஆணைக்குழுவுக்கு குற்றச் செயல்கள் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம்
X 75 மேலும் சில காலத்துக்கு பதிவு செய்யப்படாத வாகனங்களை உபயோகிப்பதற்கு அனுமதி கோரி பிரதிப் பொலிசுமா அதிபருக்கு சி.பொ.அ. தெல்கொடவினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம்
X 76 25.01.89 திகதியிட்ட "தினமின" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த செய்திக் கட்டுரை
X 77 09.05.89 திகதியிட்ட பொலிசுத் திணைக்களச் சற்றறிக்கை
X 78 ...பஹா உயர்நீதிமன்ற இல.61/93 ஐக் கொண்ட வழக்கின் வழக்குப் பிரதி
X 79 பிரதிப் பொலிசுமா அதிபர் குணரத்னாவால் சி.பொ.அ தெல்கொடவைப் பாராட்டி பொலிசுமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம்
X 80 உ.பொ.அ டக்ளஸ் பீரிஸ்சினால் சாந்தலால்மீது வழங்கப்பட்ட தடுத்துவைப்புக் கட்டளை
X 81 22.08.90 திகதியிட்ட "ஜனதா" பத்திரிகையில் வெளியான செய்திக் கட்டுரை
X 82 அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் வீடுகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பான ஒழுங்குவிதிகள்
X 83 20.06.89 திகதியிட்ட வர்த்தமானியின் பிரதி
X 84 வாடகைக் கொடுப்பனவு சம்பந்தப்பட்ட பொலிசுச் சுற்றறிக்கை
X 85 விஜேதாசா லியனாராச்சியின் மரணம் தொடர்பாக பொலிசுமா அதிபரால் தயாரிக்கப்பட்ட 06.09.88 திகதியிட்ட குறிப்பு
X 86 நளின் தெல்கொடவுக்கு பொலிசுமா அதிபரால் வழங்கப்பட்ட சிபார்சுக் கடிதம்
X 87 எட்மன்ட் கருணாநாயக்கா தொடர்பான பாராட்டுக் கடிதம்
X 88 உ.பொ.அ. டக்ளஸ் பீரிஸ் தொடர்பான சிபாரிசுக் கடிதம்
X 89 திஸ்ஸ பலிபானவினால் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு
X 90 திஸ்ஸ பலிபானவின் பன்சலவுக்கு அடிக்கடி வந்து செல்லும் நபர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியல்
X 91 கிராம சேவை அதிகாரியினால் வழங்கப்பட்ட சான்றிதழ்
X 92 பொலிசுத் திணைக்கள கட்டளை A17
X 93 பொலிசுச் சுற்றறிக்கை இல.839/90
X 94 வாடகைக் கொடுப்பனவு தொடர்பான பொலிசுச் சுற்றறிக்கை

X 95 நளின் தெல்கொடவின் வசிப்பிடத்தை ஊர்ஜிதம் செய்யும் கடிதம்
X 96 அரசாங்கத்தினால் தனியார் சட்ட ஆலோசனைக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருப்பதனைக் காட்டும் கடிதம்
X 97 களனிப் பொலிசுப் பிரிவில் நியாயப்படுத்தத்தக்க படுகொலைகள் சம்பந்தப்பட்ட அறிக்கை
X 98 சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் சிறு முறைப்பாடுகள் பதிவேடு
X 99 பொ.கா. சிறிவர்த்தனாவின் வாக்குமூலம்
X 100 பொலிசுத் திணைக்களச் சுற்றறிக்கை இல.6/90
X 101 11.08.90 திகதியிட்ட "ஐலண்ட்" பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்திக் கட்டுரை
X 102 சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் மேல்மாடியின் வரைபடம்
X 103 06.09.88 திகதியிட்ட பிரதம பரிசோதகர் விக்கிரமசிங்காவின் வாக்குமூலம்
X 104 ஷெல்டன் பெரேராவின் வாக்குமூலம்
X 105 உ.பொ.அ. ராஜா டயஸ் மேற்கொண்ட விசாரணையின் குறிப்புகள் அடங்கிய ஒரு நகல்
X 106 வத்தளை பிரதேசத்தில் உள்ள ஆட்களுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டதனைக் காட்டும் கடிதம்
X 107 விதான பத்திரனகே ஜினதாசாவினால் புலனாய்வுகள் பிரிவுக்கு வழங்கப்பட்ட வாக்குமூலம்
X 108 "டைம்" சஞ்சிகையின் அட்டைப் பக்கம்
X 109 05.02.96 திகதியிட்ட "திவயின" பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்திக் கட்டுரை
X 110 பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தின் வரைபடம்
X 111 ஜா-எல குருஸ்வத்தையிலிருந்து காணி விடுவிக்கப்பட்டதனைக் காட்டும் கடிதம்
X 112 சாந்தலாலினால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம்
X 113 சப்புகஸ்கந்த பொலிசு நிலையத்தின் நாசகாரத் தடுப்புப் பிரிவு-புலனாய்வு பிரிவு என்பவற்றின் பதிவுகளின் ஒரு நகல்
X 114 சிறிவர்த்தனாவின் தப்பியோட்டம் குறித்து பி. ம பிரிகேடியர் விக்கிர [illegible]வினால் எழுதப்பட்ட ஒரு குறிப்பு
X 115 காமினி ஹெட்டிஆரச்சியின் தாயாரால் கொடுக்கப்பட்ட ஒரு சத்தியக்கடதாசி
X 116 06.12.96 திகதியிட்ட "திவயின" பத்திரிகையின் ஒரு பாகம்
X 117 13.03.94 திகதியிட்ட "ராவய" பத்திரிகை
X 118 06.03.94 திகதியிட்ட "ராவய" பத்திரிகை
X 119 08.06.96 திகதியிட்ட "ராவய" பத்திரிகை
X 120 திரு.ரணில் விக்கிரமசிங்கா, கோணவல சுனிலுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம்
X 121 அஜித் ஜயசிங்காவுக்கு எதிராக வழங்கப்பட்ட விவாகரத்துக் கட்டளை
X 122 கிளியர் சமரசிங்காவின் மரணச் சான்றிதழ்
X 123 முத்துக்குமாரஸ்வாமியின் தலைமறைவு குறித்துச் செய்யப்பட்ட முறைப்பாடு
X 124 டேவிட் தியாகராஜாவின் மரணச் சான்றிதழ்
X 125 கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பெயர்ப் பட்டியல்
X 126 யு டி மொனிக்காவுக்கு 03.09.97 அன்று வத்தளை பிரதேச செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம்

**குறிப்பு-** திரு.ஜோசப் மைக்கல் பெரேராவின் நலன்களைக் கவனிப்பதற்கென ஆணைக்குழுவின்முன் தோன்றிய வழக்கறிஞர் திரு.துலிந்த வீரசூரியாவினால் X111, X115 மற்றும் X119 குறியிடப்பட்ட ஆவணங்கள், குறிப்பிட்ட சில விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்ளும் நோக்கத்துக்கென பொறுப்பேற்கப்பட்டன. அதன்பின்னர், திரு.வீரசூரியா அவற்றை எடுத்துச் சென்றதுடன், திருப்பி ஒப்படைக்கவில்லை. அதன்பின்னர், அந்த ஆவணங்களை திருப்பித்தருமாறு கோரி

பதிவுத்தபாலில் திரு.வீரசூரியாவுக்கு ஒரு அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், அவர், அவற்றைத் திருப்பி அனுப்பவில்லை. அதன்பிரகாரம், ஆணைக்குழு பிரஸ்தாப ஆவணங்களை மேன்மை தங்கிய தவிசாளர்முன் சமர்ப்பிக்க முடியாதநிலையில் இருந்து வருகின்றது.